# மெஹர் பிரபு
## (MEHER PRABHU)

### இக்கால அவதார புருஷரின் வருகை
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு
## (MEHER BABA'S LIFE HISTORY)

### குறுகிய தமிழாக்கம்
**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு இரண்டு
## (VOLUME TWO)

## 1923 - 1926

# <u>இறைவனின் அன்பளிப்பு</u>

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறை நாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் அவரே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 6000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, ஆகஸ்ட் 2020
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +91 9225631113

REV:03/22.11.2024

## இறை நாடகம்

இறை நிலையை அடைந்த ஒரு பரிபூரண மனிதனால் மட்டுமே அவதார புருஷர் மற்றும் சத்குருக்களின் வாழ்க்கையை புரிந்துகொள்ள முடியும். அறியாமை எனும் திரையால் மூடி மறைக்கப்பட்ட சாதாரண மனிதன், அவதார புருஷரின் அளவிறுதியற்ற தன்மையை ஒருபோதும் அளவிட முடியாது; மேலும் இப்பூவுலகில் அவர் மேற்கொள்ளும் நீண்டகால ஏகாந்தவாசம், உபவாசம், சகவாசம், கடினமான பயணம், இவற்றின் மூலமாக அவர் புரியும் ஆன்மீக உள்பணி மற்றும் உலகளாவிய செயல்பாடுகளை ஒருபோதும் ஆழங்காணவும் முடியாது. எழுபத்தைந்து வருடங்களுக்கும் மேலாக, இப்பூவுலகில், அவதார புருஷர் அவருடைய பாதங்களைப் பதித்து, வெளியளவில் பல்வேறு பணிகளைப் புரிந்து, இறை கீதத்தை இசைக்கச் செய்து, மாயை எனும் மஹாசமுத்திரத்தைக் கடக்க, மனிதனை ஊக்குவித்து, விரல் பிடித்து வழிநடத்தியது தான் இந்த இறை நாடகத்தின் சாராம்சம்.

அவதார காலகட்டத்தைக் குறித்து மெஹர் பாபா கூறியதாவது:

**“காலங்காலமாக, அவதார புருஷர், அவராகவே உருவாக்கிய மாய உலகைப் பராமரிக்க, மானிடரிடையே தோன்றி, மனிதகுலம், மாயையைப் பற்றிய விழிப்புணர்வை அடையச் செய்கிறார்.**

**“மாயையின் கட்டமைப்பு எப்பொழுதும் ஒன்றாகவே இருந்தாலும், அதன் வடிவங்கள் எண்ணில் அடங்காததும், என்றென்றும் மாறிக்கொண்டே இருப்பதுமாகும்.**

**“எனது அவதார வருகை, மாயையை அழிப்பதற்காக அல்ல, ஏனெனில் மாயையானது, அதன் நிலையில் முற்றிலும் ஒன்றுமில்லாதது. எனவே, மாயை ஒன்றுமில்லாதது என்ற விழிப்புணர்வை வழங்கவே, நான் உங்களிடையே வருகிறேன்.**

**“எனது எல்லையில்லா நிழல் போல் இருக்கும் இம்மாயவுலகை, நான், தானாகவே, உங்களின் மூலமாகப் பராமரிக்கிறேன்; மேலும், இந்த உண்மையை நீங்கள் உணரும் அந்த கணமே, எனது மூலமாக அதைத் துறந்து என்னில் வந்தடைவீர்கள்.”**

இவ்வாறு, அவதார புருஷரின் ஒவ்வொரு செயலும் பிரபஞ்சத்தில் அவர் நடத்தும் லீலையாகும். மெஹர் பாபாவின் இந்த வரலாற்றுத் தொகுப்பு அவருடைய ஒவ்வொரு தெய்வீக லீலையையும் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடி ஆகும்.

எனவே, பயணத்தைத் தொடங்கும் அன்பு உள்ளங்களுக்கு எங்கள். . .
அன்பின் அர்ப்பணம்.

.....

## முன்னுரை வழங்குபவர்
## க. வீரமணி, பொது மேலாளர் (ஓய்வு), டாடா மோட்டர்ஸ்

இக்கால கலியுக வரதன் மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாற்று முதல் தொகுப்பில் - அவரது இளமை பருவம், இறை உணர்வு, சீடர்களின் வட்ட அமைப்பு மற்றும் ஆரம்பகால பயிற்சி இவற்றை விரிவாகப் பார்த்தோம். இவை அனைத்திற்கும் அடித்தளமாக, ஆதாரமாகத் திகழும் மெஹர் பாபாவின் வெளிப்பாடுகள் - எந்த ஒரு முந்தைய அவதார காலகட்டத்திலும் இத்தனை தெளிவாக, தீர்க்கதரிசன முறையில் வெளிப்படுத்தாத ஆன்மீக ரகசியங்கள் - என் இதயத்தில் அதீத தாக்கத்தை ஏற்படுத்தின. உண்மையாகச் சொல்லப்போனால் திறந்த மனதுடன் இதைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் ஒவ்வொரு இதயத்திலும் இதுபோன்ற தாக்கத்தை உருவாக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இதனால்தான் இந்த வாழ்க்கை வரலாற்று தொகுப்புகளை ஓர் அபூர்வ பொக்கிஷம் என்று நான் கருதுகிறேன்.

எடுத்துக்காட்டாக, இவ்வுலகில் எப்பொழுதும் வாழும் ஐந்து சத்குருக்கள், இக்கட்டான காலகட்டத்தில், கடவுளை மனிதனாக பூமியில் கொண்டுவந்து, அவதார புருஷராக வாழவைக்கும் முறைபாடு, அவதார புருஷர் இம்மாய உலகை ஒரு சலவைத் தொழிலாளியாக இருந்து தூய்மை படுத்தி, சாதாரண மானிடனை விழிப்படைய செய்வது, இறைநிலையை அடையும் தகுதியைப் பெற்றவர்களுக்கு இறை ஞானத்தை அளித்து, அதே வேளையில் பிறருக்கு ஆன்மீக உந்துதலை அளிப்பது, இதுபோன்ற செயல்முறைகளைக் குறித்து அளித்த விளக்கங்கள், மானிடனுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

இப்போது நாம் இரண்டாவது தொகுப்பில் அடி எடுத்து வைக்கிறோம். இது 1923, ஏப்ரல் முதல் 1926, நவம்பர் வரை உள்ள நிகழ்வுகளை வெளிச்சமிட்டுக் காட்டுவது போல் உள்ளது. ஒரு சில முக்கியமான நிகழ்வுகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மெஹர் பாபா, மண்டலியுடன் மும்பையிலிருந்து வந்து அஹமதுநகர், அரன்காவ்ம் கிராமத்தில் அமைந்த, கான்ஸாஹேப் குடும்பத்திற்குச் சொந்தமான இடத்தில் குடியேறி, அதை மெஹராபாத் என்ற பெயரில் அவரது தலைமையகமாக மாற்றிய சம்பவம் - இவை அனைத்திற்கும் ஆன்மீக ரீதியில், சத்ரபதி சிவாஜி மஹாராஜ் காலத்திலேயே அடித்தளம் அமைக்கப்பட்ட சம்பவம் - மனதைக் கொள்ளை கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளது. உலகில் எதுவும் எவருக்கும் சொந்தமில்லை - அனைத்தும் இறைவனுக்கே உரியது - கான்ஸாஹேப் குடும்பம் ஒரு ஊடகம் மட்டும்தான் - அந்த வகையில் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பம் என்றால் மிகையாகாது.

இக்காலகட்டத்தில் மெஹர் பாபா, மண்டலியை கடும் உடல் உழைப்புக்கு உள்ளாக்கி, மெஹராபாத்தில் நிலங்களைச் செம்மை படுத்தி, கட்டிடங்களைச் சீர் செய்து, அனைவரும் வாழ வசதியான இடமாக மாற்றினார். பல நாட்கள், வாரங்கள், மாதங்கள் உபவாசம் மற்றும் ஏகாந்தவாசம் மேற்கொள்வது என்பது அவ்வப்போது நிகழும் ஒன்று - இவை அனைத்தும் அவருக்காக அல்ல, மானிடனின் மேம்பாட்டிற்காக! அவரோ பரிபூரணமான இறைவன்.

மெஹர் பாபாவின் வாழ்வில் ஒரு முக்கியமான அம்சம் பயணம் - நடைபயணம், பேருந்து, கப்பல் வழி பயணம் - இது அனைத்தும் ஆன்மீக உள்பணியின் நிமித்தம் - குவெட்டா, கராச்சி, கொல்கத்தா, ரிஷிகேஷ், ஹரித்வார், அஹமதாபாத், நாசிக், பரோடா, கோவா, சென்னை, ஊட்டி, பூனா, பெர்ஸியா போன்ற இடங்களுக்கு மின்னல்வேக பயணங்களை மேற்கொண்டு, இறை போதையில் இருக்கும் சாது, சன்னியாசி, யோகி, வாலி இவர்களை சந்தித்து, ஆன்மீக உந்துதலை அளிப்பது - அவரது பணி முடிந்த அடுத்த கணமே திரும்பி விடுவது - சீடர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு ஆச்சரியம் அளிக்கும் விதத்தில் இருக்கும்.

இவ்வேளையில்தான், பாபா, மெஹரா மற்றும் சில பெண் சீடர்களை மெஹராபாத்தில் வாழ அனுமதித்தார். மெஹரா, உலகின் பரிசுத்தமான ஆத்மா - ராமனுக்கு சீதை, கிருஷ்ணனுக்கு ராதா, ஜீஸஸுக்கு மேரி அதுபோல் இப்போது மெஹர் பாபாவிற்கு மெஹரா என்று பறைசாற்றினார்.

1925, மார்ச் மாதம், மெஹர் அறநிலைய மருத்துவமனை ஒன்றை நிறுவி ஜாதி, மத பேதமின்றி அனைவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. ஒன்றரை வருடத்தில் ஏறக்குறைய 7500 நோயாளிகள் இலவச சிகிச்சை பெற்றனர். அதே வருடம், ஏழாவது வகுப்பு வரை ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடம் ஒன்றை நிறுவி, பாமர சிறுவர்களுக்கு இலவசக் கல்வியும் வழங்கப்பட்டது. தொழு நோயாளிகளுக்கென ஓர் ஆசிரமமும் நிறுவப்பட்டது. அப்போது ஏறக்குறைய 500 பேர் மெஹராபாத் வளாகத்தில் வாழ்ந்து வந்தனர்.

மெஹர் பாபாவின் வாழ்வில் ஒரு முக்கியமான கட்டம் - மௌனம் - 1925 ஜூலை 10ஆம் நாள் ஆரம்பித்த மௌனத்தை அவர் தனது உடலைத் துறந்த 1969 ஜனவரி 31 வரை, ஏறக்குறைய 44 வருடங்கள் தொடர்ந்தார். மௌனம் இறைவனின் இயல்பான தன்மை - ‘**நான் கற்பிக்க வரவில்லை; விழிப்பூட்ட வந்துள்ளேன்**’ என்ற வாய்மொழி விளக்கங்களைக் கடைசியாக வழங்கினார்.

மெஹர் பாபா மௌனம் ஆரம்பித்த நாளிலிருந்து, பல்வேறு ஆன்மீக விளக்கங்கள், சொற்பொழிவுகள் மற்றும் உபதேசங்களை எழுத்துப்பலகை மூலமாக எடுத்துரைத்தார்:

“மரணம், தூக்கம் இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு என்னவெனில், மரணத்திற்குப் பின் ஒருவன் புது உடலோடு பிறவி எடுக்கிறான்; அதேவேளை தூக்கத்திற்குப் பின்னர் அதே உடல் உணர்வோடு விழிக்கிறான்.”

“தேநீர் அருந்துவதற்கு ஒரு குவளையும், தட்டும் பயன்படுகிறது. அதாவது குவளையும், தட்டும் தேநீரை அருந்துவதற்கான ஒரு பொருளாக இருக்கிறது. தேநீரை அருந்திய அடுத்த கணமே குவளை, தட்டு இவற்றை, தனியாக வைத்து விடுகிறோம். அதுபோல் இறை நிலையை அடைந்ததும் அதை அடையும் கருவியாக இருந்த இந்த உடலைத் துறந்து விட வேண்டும்.”

“உலகின் திறவுகோல் ஒன்றே ஒன்று. ஆனால் அது ஐந்து சத்குருக்களின் கைகளில் உள்ளது. அதை அவர்கள் ஐவரும் சமமாகப் பகிர்ந்து கொள்கிறார்கள். ஐந்து சத்குருக்கள் மற்றும் 51 இறை நிலையை அடைந்த ஆன்மாக்கள் திறவுகோலை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுள்ளனர். இந்த எண் 56 ஒருபோதும் மாறாது. ஒவ்வொரு சத்குருவின் வட்டத்திலும் 12 உறுப்பினர்கள் உள்ளனர். இம்முறையில் உலக விவகாரங்கள் அனைத்தும் நடந்தவண்ணம் இருக்கும்.”

“கடவுள், ஈஸ்வரன் எனும் நிலையில், பிரபஞ்சத்தின் விவகாரங்களை நடத்த, மாயை மற்றும் அதன் பண்புகளைப் பிரயோகம் செய்கிறார். அதே வேளையில் ஈஸ்வரனுக்கு மிகவும் அப்பாற்பட்ட பரமாத்மா, அனைத்து சக்திகளின் மூலப்பொருளாக அமைந்து, எங்கும் வியாபித்திருக்கும் பரிபூரண சக்தியைப் பிரயோகிக்கிறார். சத்குரு பிறரை மாயையிலிருந்து விடுவிக்க மாயையைப் பயன்படுத்துகிறார்.”

இக்காலகட்டத்தில் மெஹர் பாபா தனியாக அவரது குடிலில் அமர்ந்து இரகசியமாக ஒரு புத்தகத்தை எழுதி முடித்தார். அந்தக் கையெழுத்துப் பிரதியை ஒரு பெட்டகத்தில் வைத்து பூட்டி, எப்போதும் அவருடனே எடுத்துச் சென்றார். சீடர்களில் எவரும் பாபா எழுதிய புத்தகத்தின் ஒரு வரியைக் கூடப் படித்ததில்லை.

மேலும் பல சுவாரஸ்யமான நிகழ்வுகள். படித்து புரிந்து கொள்வதில் அளவிலா ஆனந்தம். படிப்பதால் நிச்சயமாக இழப்பு எதுவும் இல்லை.
பாபாவின் நினைவுகளுடன்,
ஜெய் பாபா.

# நிகழ்வுகளின் காலவரிசை

| | |
|---|---|
| 1923 | • ஏப்ரல், மெஹர் பாபா அரன்காவ்ம், அஹமதுநகர் வருகை<br>• மே 13, அரன்காவ்ம் கிராமத்தில் நிரந்தர குடியேற்றம் |
| 1923 | • மே 25 - ஜூன் 27, இறைப்பயணம் - கராச்சி, குவெட்டா, குஜராத் - அஹமதாபாத் வருகை. |
| 1923 | • ஜூலை 1 - 5, நடைபயணம் - அஹமதாபாத், ஜேத்தல்பூர், பரூச், சூரத், நவ்ஸாரி |
| 1924 | • பிப்ரவரி 2, சத்குரு நாராயண் மஹாராஜை மெஹர் பாபாவின் மண்டலி (குஸ்தாஜி மற்றும் பலர்) - மும்பையில் முதல் சந்திப்பு |
| 1924 | • பிப்ரவரி 22, பாரசீகம் - முதல் பயணம் |
| 1924 | • மார்ச், பாரசீக பயணத்தின் இறுதியில் மெஹர் பாபா கராச்சி - ரக்ஸால் - மகர் (சத்குரு கபீரின் சமாதி) பயணம் |
| 1924 | • மார்ச் இறுதி, மெஹர் பாபாவின் ரகசிய பயணம் - இடர்சி - மண்டலி ஒருவரும் உடன் இல்லாமல் |
| 1924 | • ஏப்ரல், ‘கமேளா யோகா’ (உடல் உழைப்பு) ஆரம்பம் |
| 1924 | • ஜூன் 9 - ஜூலை 17, மெஹர் பாபாவின் இரண்டாவது குவெட்டா பயணம் (ஸிபி - குவெட்டா - ஸக்கர் - கராச்சி - மும்பை) |
| 1924 | • ஆகஸ்ட் 3 & 4, சென்னை பயணம் - போர்டோ நோவோ (பரங்கிமலை) |
| 1924 | • ஆகஸ்ட் 5 - 8, நீலகிரி மலைப் பயணம் - ஊட்டி - மேட்டுப்பாளையம் - (21 மைல் நடைபயணம்) - குன்னூர் - சென்னை |

| | |
|---|---|
| 1924 | • ஆகஸ்ட் 11 & 12, கொல்கத்தா பேலூர் **மடம்** |
| 1924 | • ஆகஸ்ட் 14, 5000 சாதுக்களுடன் சந்திப்பு - ஹரிதுவார் - ரிஷிகேஷ் - லஸ்கர் - ஹரிதுவார் - மொராதாபாத் - போபால் - பரோடா - மவுண்ட் அபு |
| 1924 | • ஆகஸ்ட் 25, உஜ்ஜைன் பயணம் |
| 1924 | • செப்டம்பர் 10, மும்பை வருகை<br>• செப்டம்பர் 14, கோவா பயணம் |
| 1925 | • ஜனவரி, அரன்காவ்ம் – மெஹராபாத் தலைமையகம் - மெஹர் பாபாவின் அறிவிப்பு |
| 1925 | • மார்ச் 25, ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடம் (7ஆவது வகுப்புவரை), இலவச மருத்துவமனை நிறுவப்பட்டது |
| 1925 | • மே, தொழுநோயாளிகள் ஆசிரமம் நிறுவப்பட்டது. |
| 1925 | • மே 22, பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களுடன் விஸாப்பூர் பயணம் |
| 1925 | • ஜூலை 10, மௌனம் ஆரம்பம் (இந்த மௌனம் பாபா 1969 ஜனவரி உடலைத் துறப்பது வரை கடைப்பிடித்தார்) |
| 1926 | • டிசம்பர் 21 & 22, லோனவாலா மும்பை பயணம் |
| 1927 | • தொடரும்... |

# பொருளடக்கம்


அற்புதம் நிறைந்த அஹமதுநகர் & அரன்காவ்ம் .............. 3

இறைப்பயணம் - கராச்சி, குவெட்டா & குஜராத் ............. 16

பாரசீகம் - முதல் பயணம் ........................................................ 47

கமேளா யோகா - உடல் உழைப்பு ...................................... 68

மெஹர் பாபாவின் மௌனம் ..............................................132

மௌன மொழிகள் - பாகம் ஒன்று .....................................171

மௌன மொழிகள் - பாகம் இரண்டு ..................................246



அரன்காவ்ம் (மெஹராபாத்) **1923**



மெஹர் பாபா, **1923**

# அற்புதம் நிறைந்த அஹமதுநகர் & அரன்காவ்ம்

**(Hidden Wonders of Ahmednagar & Arangaon)**

பழைய நினைவுகளைப் பின் தள்ளிவிட்டு, மெஹர் பாபா, அப்போது அவருடன் இருந்த 13 சீடர்களுடன், 1923, ஏப்ரல் 19ஆம் நாள் அஹமதுநகர் (AHMEDNAGAR) புறப்பட்டார். இரயிலில் அந்நியர்கள் பாபாவை அடையாளம் கண்டு கொள்ளவில்லை; அதேவேளை மண்டலிக்கும் பாபாவின் உள்நோக்கம் புலப்படவில்லை; இருந்தும் காலம் இதை இவ்வாறு நோக்கியது:

ஓ அஹமதுநகர்! மண்டலியில் எவருக்கும் தெரியாது
கருணையின் புனித தீர்த்தம் நிரம்பி வழியும்
புண்ணிய ஸ்தலத்திற்கு வழி இது என்று!
பாலைவனமாய் வறண்டு தோற்றமளிக்கும் இங்குதான்
மானிடனின் உள் தாகத்தைத் தணிக்கும்
நீரோடை தவழ்ந்தோடுகிறது இன்று!

மெஹர் பாபாவின் உறவினர்கள், நண்பர்கள் பலர், பூனா ரயில் நிலையத்தில் பாபாவை வரவேற்று, மலர் மாலை அணிவித்து, சிற்றுண்டி, தேநீர் வழங்கி, அவர்களை அஹமதுநகருக்கு அனுப்பி வைத்தனர்.

மெஹர் பாபா, அஹமதுநகரில், குல்மாயியின் குடும்ப வீடான குஷ்ரு குவாட்டர்ஸில் (KUSHRU QUARTERS) தங்கினார்; குல்மாய், ருஸ்தம், ஆதி, பிரோஜா, டாலி மற்றும் ஒன்றுவிட்ட உறவினர் ஸரோஷ் இவர்களைத் தவிர, குடும்பத்தில் வேறு எவரும் மெஹர் பாபாவின் ஆன்மீக அந்தஸ்தை அறிந்துகொள்ள முடியாத சூழ்நிலையில் (அறிந்துகொள்வதும் ஒரு பிராப்தம்) மரியாதை இல்லாமல், கடுமையாக எதிர்த்தது மட்டுமின்றி, குல்மாயின் பக்தியைக் குறைகூறி பரிகாசம் செய்தனர். ஆனால், மெஹர் பாபா அவரது ஆன்மீக மகிமையைப் பெருமளவில் குல்மாயின் குடும்பத்தினருக்கு வெளிப்படுத்தியதால், எந்த சூழ்நிலையிலும் அசைக்க முடியாத நம்பிக்கையுடன், அவர் அரவணைப்பில் அடைக்கலமாகி, அவருடைய வார்த்தைகளுக்கு - எதுவாயினும் - கீழ்ப்படிந்து நடந்து வந்தனர்.

பல நாட்கள் மெஹர் பாபா சீடர்களுடன் அஹமதுநகர் பகுதியை, குறிப்பாக முஸ்லிம்கள் வாழ்ந்த இடங்களைப் பார்வையிட்டார். அஹமதுநகர் என்றால் 'அஹமதின் உறைவிடம்' என்று அர்த்தம்; 'அஹமத்' என்பது தீர்க்கதரிசி முஹமதின் மறுபெயர் (1400 ஆண்டுகளுக்கு முன்னர் அவதார புருஷராக உருவெடுத்தவர்). குஷ்ரு குவாட்டர்ஸில் தங்கியிருந்தபோது பாபா, ஒரே அறையில் ஏழு நாட்கள் ஏகாந்தவாசம் மேற்கொண்டார். ஆதி, குஸ்தாஜி இருவரும் மெஹர் பாபாவின் தனிப்பட்ட தேவைகளை கவனித்து வந்த அவ்வேளையில், குல்மாய் பாபாவிற்கு வேண்டிய உணவைத் தயார் செய்தார்.

பாபாவின் ஏகாந்தவாசத்தின் போது, சத்குரு உபாஸனி மஹாராஜுக்கான அறையில் இரவும் பகலும் விளக்கு ஒன்றைத் தொடர்ந்து எரிய விடுமாறு குல்மாயிடம் கூறியிருந்தார்.

ஒரு நாள், ஆதி தனது தாயாரிடம், மெஹர் பாபா, தோற்றத்தில் பலவீனமாக இருப்பதாகக் கூறியதும், அது அவருடைய உபவாசத்தால் இருக்கக்கூடும் என்று குல்மாய் நினைத்தார். சிறிது நேரத்தில் மெஹர் பாபா குல்மாயை அழைத்து: **"நான் பலவீனமாக இல்லை; அப்படி எதுவும் உணரவில்லை; எப்பொழுதும் போலவே வலிமையுடன் இருக்கிறேன்"** என்று கூறி, **"நான் ஒரு கூட்டத்தில் பங்கெடுக்கச் சென்றிருந்தேன்"** என்றார்.

குல்மாய் அதற்கு விளக்கம் கேட்டதும், பாபா, **"இறை நிலையை எய்திவர்களுடன் நிகழ்ந்த ஒரு சந்திப்பு"** என்று விளக்கிவிட்டு, பாபா ஓர் இறை கானத்தின் முதல் வரியைப் பாடினார்:

**"ஓ ஸபீர், உனது கலியார் நகரம் பெரிதும் புனிதமானது!"**

பாபா அப்போது, குல்மாயிடம் அவர் ஏகாந்தவாசத்தில் அமர்ந்த அறையை உபயோகப்படுத்துமாறு கூறினார்.

1923 ஏப்ரல் 30 அன்று, மெஹர் பாபா மண்டலியுடன் அஹமதுநகரிலிருந்து 14 மைல் தொலைவில் அமைந்த 'ஹாப்பி வேலி' (HAPPY VALLEY) எனும் இடத்திற்குச் சென்றார். புராண வரலாற்றில் பகவான் ராமின் 14 வருட வனவாசத்தின் போது, சீதை, லக்ஷ்மணனுடன் சிறிது காலம் இங்கே தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

மெஹர் பாபா, சீடர்களுடன் பயணிகள் விடுதியில் தங்கியிருந்தார். உணவு குல்மாய் வீட்டிலிருந்து கொணரப்பட்டது. பாபா அனைவருடனும் உல்லாசமாக ஓய்வெடுத்து, சீட்டு விளையாடி, பஜனை, கீர்த்தனைகள் பாடுவதை அனுமதித்தார்.

அவ்வேளையில், பாபாவின் சிறிய சகோதரன் ஜால் (JAL), மன்ஸில்-எ-மீமில் அஸ்பந்தியார் (ASPANDIAR) கடவுள் நாமத்தை உச்சரிக்கும் ஜபத்தில் ஈடுபட்டிருந்த போது நடந்த ஒரு சுவையான சம்பவத்தை பாபாவிற்கு எடுத்துரைத்தார்: "தினமும் காலையில், அவர் ஜபம் புரிவதை நான் பார்ப்பதுண்டு. கொசுக்களின் தொந்தரவு, மேலும் தன்னை அறியாமல் வரும் தூக்கம் இவற்றினால், அவர் உடல் முன்னும் பின்னும் - ஓடவிட்ட 'பெண்டுலம்' போல் அசைந்தது! பாபா தனது சிரிப்பை அடக்க முடியாமல், அவருக்குப் பெண்டுலம் (PENDULAM) என்ற புனை பெயரை வைத்தார்; நாளடைவில் அவர் சுருக்கமாக 'பெண்டு' (PENDU) என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.

ஜால் எப்பொழுதும் சுவாரசியமான கதைகளை எடுத்துரைத்து, அனைவரையும் மகிழ்விப்பது வழக்கம். பாபாவின் இன்னுமொரு சீடர் ஃபாரடூன் (FAREDOON) என்பவரைப் பற்றி கூறிய போது - அவர், மன்ஸிலின் வெளி வராந்தாவில் அமர்ந்து, அருகாமையில் வேறு எவரும் இல்லாததை கவனித்து, சத்தமாக வாயுவை வெளிவிடுவது வழக்கம் - ஜால், அதைப் பட்டாசு வெடியென நினைத்ததாகக் கூறியதும், பாபா மறுபடியும் சிரிப்பை அடக்க

முடியாமல், “**ஹே படர்யா**!” - (‘பாட்’ என்பது குஜராத்தி வார்த்தை) - என பாபா அழைத்ததும் ஃபாரடூன் பதிலளித்தார்.

அப்போது கூட்டத்தில் ஒருவர் பாபாவின் காதில், ‘பாபா, ஃபாரடூன் மிகவும் உயரமானவர், சுபாவத்திலும் மிக்க அமைதியானவர், கிறிஸ்தவ பாதிரி போன்ற தோற்றம்!’ என்று முணு முணுக்க, பாபாவும் ஃபாரடூனை அழைத்து, “**இன்று முதல் உனது பெயர் பாதிரி** (PADRI)” என்றார். இவ்வாறு, ஃபாரடூன், பாதிரி என்ற பெயரால் வாழ்நாள் முழுவதும் அழைக்கப்பட்டார்.

ஒரு நாள் பிற்பகல் மெஹர் பாபா, வீட்டு வராந்தாவில் நடந்து கொண்டிருந்த வேளையில், ஸ்லாம்ஸன் (SLAMSON), பாதிரி, மேலும் ஒருவர், அருகாமையிலிருந்த சிவன் கோயில் பாதுகாவலரோடு சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்ததை கவனித்து, சீடர்களில் ஒருவரை அனுப்பி என்ன பரிமாறிக்கொள்கிறார்கள் என்பதைக் கேட்டு வரக் கூறினார். மூவரும் திரும்பி வந்து பாபாவிடம் அவர்கள் கடவுள், மதம், ஆன்மீகம் பற்றி பேசி, பொழுதைக் கழித்துக் கொண்டிருந்ததாகக் கூறினர்.

“**மிகவும் நல்லது**!” என்று பாபா உரத்த குரலில் கூறி, “**சரி, இப்போது நீங்கள் மூவரும் உங்கள் பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொண்டு புறப்படுங்கள்! அங்குச் சென்று அவரை உங்கள் குருநாதராக ஏற்றுக்கொள்ளுங்கள்! இந்த நேரத்திலிருந்து நான் உங்கள் குருநாதர் அல்ல! நமது தொடர்பு துண்டிக்கப்படுகிறது**!” என்றார்.

பாபாவின் சீற்றத்தைக் கண்டு மூவரும் அஞ்சி நடுங்கி, மன்னிப்புக் கோரினர்.

“**மூடத்தனமாகச் செயல்படுகிறீர்கள்! உங்கள் இல்லங்கள் மற்றும் உறவுகளைப் பிரிந்து என்னுடன் வந்துள்ளீர்கள்! ஏறக்குறைய ஓராண்டுக்கு மேல் என்னுடன் வாழ்கிறீர்கள்! என்னைப் பின்பற்றுவதாக இருந்தால் நான் சொல்வதைச் செய்யுங்கள்.**

“**ஏன் அங்குச் சென்றீர்கள்? ஒருபோதும் இன்னொருவரிடம் செல்லாதீர்கள்! ஒருவேளை இப்படி வைத்துக்கொள்ளுங்கள்; அந்தக் கோயில் பாதுகாவலன் ஏதாவது விளக்கங்களை அளிக்க, அல்லது என்னுடைய அறிவுறுத்தல்களுக்கு மாறாக உபதேசம், கட்டளை ஏதேனும் வழங்க நேர்ந்தால், நீங்கள் எதைக் கடைப்பிடிப்பீர்கள்?**” என்றதும், மூவரும் அமைதியாக இருந்தனர்.

பாபா, அப்போது அவர்களுக்கு புத்திமதி வழங்கினார்: “**நீங்கள் அனைவரும் என்னை உங்கள் குருநாதராக ஏற்றுக் கொண்டுள்ளீர்கள்! இதைத் தொடர்ந்து, நான் உங்களைப் பாழாய் போக விடமாட்டேன் என்று உறுதிமொழியும் அளித்துள்ளேன்!**”

சத்குரு உபாஸனி மஹாராஜின் பிறந்த நாள், 1923 மே 3 அன்று கொண்டாடப்பட்டது. பாபாவின் அறிவுறுத்தலுக்கு இணங்க, மண்டலி 24 மணிநேர உபவாசம் கடைப்பிடித்து, ‘ஹாப்பி வேலி’ கிராமத்து மக்களுக்கு

உணவும் தயார் செய்து வழங்கினர். அன்று மாலை வரை தொடர்ந்த வெகுஜன உணவுக்குப் பிறகு, கிராமத்து மக்களுடன் மஹாராஜுக்கு ஆரத்தி நிகழ்த்தினர்.

மெஹர் பாபாவின் சீடர்களில் சிலர் ஸக்கோரிக்குச் சென்று விழாவில் கலந்துகொள்ள, மஹாராஜ், குல்மாயிடம் ஆரத்தியை நிகழ்த்தக் கூறினார்.

அடுத்த நாள், பல ஏழைகளை நீராட்டி, புத்தாடை அணிவித்து, உணவும் வழங்கப்பட்டது. மஹாராஜின் பெண் சீடர்கள், கன்னியாக்கள், அவரையும் நீராட்ட விரும்பினர்; மஹாராஜ் அமைதியாக மறுப்புத் தெரிவித்து, இவ்வாறு கூறினார்: "என்னை நீராட்ட வேண்டாம்; இன்று இந்த ஏழைகளை மட்டும் நீராட்டுங்கள்." அருகில் நின்ற ஒரு தொழு நோயாளியைக் காட்டி, "நீங்கள் என்னை நீராட்ட விரும்பினால், அதை இந்தத் தொழு நோயாளிக்குச் செய்யுங்கள்! அது, என்னை நீராட்டுவதற்கு சமமாகும்!" என்றார்.

உடனே, அனைத்து கன்யாக்களும் அந்தத் தொழு நோயாளியை இருக்கை மீது அமரச் செய்து, மஹாராஜுக்காக வைத்திருந்த நீரில் அவரை நீராட்டினர். மஹாராஜின் சகோதரியும் அவர்களுக்கு உதவ, இறுதியில் அந்தத் தொழு நோயாளியை அன்போடு அரவணைத்த போது, தன்னை அறியாமல் அழத் தொடங்கினார். அவரது உடன் பிறந்த சகோதரன் சத்குரு உபாஸனி மஹாராஜ், அந்தத் தொழு நோயாளியின் முகத்தில் தென்பட்டதைக் கண்டு கண்கலங்கி அழுதார். அந்தத் தொழு நோயாளி, குழப்பத்தில் திடுக்கிட்டு, 'அம்மா! உங்கள் கடவுள் அந்த மூங்கில் கூண்டில் இருக்கிறார்; எனக்கு அடிபணியாதீர்கள்' என்றார்; அவருக்குப் புத்தாடையும், தலையில் ஒரு தொப்பியும் அணிவித்து, பூஜை செய்தனர். அதற்குப் பிறகு, மஹாராஜ் இவ்வாறு கூறினார்: "நான் அந்தத் தொழு நோயாளியின் உடலில் இருந்தேன்; என்னைத்தான் நீங்கள் நீராட்டினீர்கள்."

மெஹர் பாபாவின் சீடர்களைக் கண்டு மஹாராஜ் பெருமகிழ்ச்சி அடைந்தார்; குல்மாயிடம் "இவர்களை நீ நேசிக்கிறாயா?" என்று கேட்டதற்கு, 'இவர்கள் மேர்வானுக்குரியவர்கள்; மேர்வான், உங்களுக்குரியவர்; ஆகையால், இவர்களை நான் எனது குழந்தைகளைப் போல நேசிக்கிறேன்' என்று பதிலளித்தார்.

மஹாராஜ், உடனே, "மிக்க நன்று! இந்த மனோபாவ அணுகுமுறையை என்றென்றும் கடைப்பிடியுங்கள். நீங்களே உண்மையான தாயார்; உலகத்திலுள்ள அனைவரையும் இவ்வண்ணமே நேசியுங்கள்" என்றார். குல்மாயின் பெரிய மகன் ருஸ்தம், தவுலத்மாயின் மகள் ஃபிரீனி இருவருக்கும் அடுத்த நான்கு நாட்களில் திருமணம் நடைபெறவிருந்ததால், அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வந்தன; நெருங்கிய உறவினர்களும் வந்த வண்ணம் இருந்தனர். ஒரு சில பார்சி மற்றும் ஈரானியர் மட்டுமே மெஹர் பாபாவின் உண்மையான இறை நிலையை ஏற்றுக்கொண்ட இவ்வேளையில், குஷ்ரு குவாட்டர்ஸில் சில நாட்களாக, பகைமை உருவெடுத்து தாண்டவமாடியது. ஸொராஸ்டிரிய இனத்தில், அப்போது, உண்மையான ஆன்மீகத்தைப் பற்றிய அறிவு மிகக் குறைவு. பார்சிகளுக்கு, இந்து, முஸ்லிம் பாரம்பரியத்தில் பிரபலமான சாது, சன்னியாசி, சித்தர் மற்றும்

யோகிகள் பற்றிய ஆன்மீக மறைபொருள் ஞானம் அறவே கிடையாது. அவர்கள், மெஹர் பாபா மற்றும் அவரது சீடர்களை, பைத்தியக்காரர்கள் அல்லது ஏமாற்றுப் பேர்வழிகள், பழகுவதற்குத் தகாத மூடர்கள் என நினைத்து 'ஆன்மீக அபத்தம்' என்று பறைசாற்றினர்.

ஏராளமான விருந்தினர்களின் வருகை, பிரச்சினைகளை மேலும் பலப்படுத்தியது. உள்ளூர் பத்திரிகைகளிலும் மெஹர் பாபாவைப் பற்றிய அவதூறான செய்திகள் மறுபடியும் வெளிவந்தன. இவ்வாறு, மெஹர் பாபா மற்றும் அவரைப் பின்பற்றுபவர்களின் மீதுள்ள கோபமும், வெறுப்பும், ஸொராஸ்டிரிய சந்தேகப் பேர்வழிகளின் பேச்சாக இருந்தது. மே 4ஆம் நாள், மெஹர் பாபாவின் காலைக்கடனில் குல்மாயின் மகன் ஆதி உதவிய வேளையில், அங்கு நடந்ததை எடுத்துக்கூறி, அதற்கு முக்கிய காரணமாக இருப்பவர், ஆதியின் தாய் மாமன் என்பதையும் எடுத்துரைத்தார். இதைக் கேட்டதும் பாபா, எதுவும் கூறாமல் அறையிலிருந்து புயல் போல வெளியேறினார். ஆதி கூறியது மட்டுமின்றி, பாபா குறிப்பிட்டபடி ஸக்கோரியிலிருந்து குல்மாய் திரும்பி வராததும் அவருடைய கோபத்திற்கு முக்கிய காரணமாக இருந்தது.

மெஹர் பாபா, குஷ்ரு குவாட்டர்ஸிலிருந்து வெளியேறியதும், சீடர்களும் அவர்களின் பணியை அப்படியே நிறுத்திவிட்டு, பாபாவைப் பின் தொடர்ந்து சென்றனர். மெஹர் பாபா அதிவேகமாக, சிடுசிடுப்புடன், தனியாக, தீவிர முகத் தோற்றத்துடன் ரயில் நிலைய சாலை சந்திப்பில் நின்றார்.

அனைவரும் பாபா ரயில் நிலையம் செல்வதாக நினைத்தனர்; ஆனால் பாபா எதிர் திசையில் நடந்து, ஏறக்குறைய ஆறு மைல் கடந்து, பாழடைந்த கட்டிடங்கள் நிறைந்த பகுதியில் அனைவரும் நுழைந்தனர். அங்கிருந்த பாதுகாவலன், அது, பழைய ஆங்கிலேய ராணுவ படைத்தளம் என்றும், இப்போது கான்ஸாஹேப் கய்குஷ்ரு ஈரானிக்குச் சொந்தமானது எனவும் தெரிவித்தார்.

ஒன்றாவது உலகப் போரின் போது, சில ராணுவ அமைப்புகள் அரன்காவ்ம் (ARANGAON) கிராமத்தில் இருந்தன. ராணுவம் அங்கிருந்து விலகிச் சென்ற பின்னர், அந்த நிலமும், பாழடைந்த கட்டிடங்களும் ஏலத்தில் விடப்பட்டதை, கான்ஸாஹேப் தன்வசப்படுத்தினார். ரயில் தண்டவாளத்திற்கு அருகிலிருந்த ஒரு பெரிய தபால் நிலையம் தவிர, இதர அனைத்தும் உடைந்து, சிதைந்து கிடந்தன. கிழக்குப் பகுதியில் அமைந்த பங்களாவை ஒத்த கட்டிடம் ஒன்று, துருப்புகளின் உணவகமாக இருந்தது.

அடுத்த நாள், தபால் நிலையத்தை சுத்தம் செய்து, பாபா மண்டலியுடன் அங்குத் தங்கத் தொடங்கினார். தொடர்ந்து, உணவகத்தையும் சீர் செய்து தம் வசமாக்கினர். அனைத்து பணிகளிலும் பாபா கைகொடுத்து உதவினார்.

1923, மே 6 அன்று காலையில், டாக்டர் கனி, ராம்ஜூ, சதாஷிவ், முன்ஷி ரஹீம், வஜிப்தர் ஆகியோர் அரன்காவ்ம் வந்ததும், ஐவரும் இந்த வறண்ட, தரிசு நிலமான, பாழடைந்த காட்டில் வாழும் வாழ்க்கை, மன்ஸில்-எ-மீம் வாழ்க்கைக்கு நேர்மாறாக இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டனர்.

கிணற்றிலிருந்து நீரை இறைத்து, அவரவர் துணிகளைத் துவைப்பதோடு, நாளெல்லாம் கடுமையான பணிகளில் ஈடுபடவேண்டிய கட்டாயம்.

மெஹர் பாபா ஐவரையும் அழைத்து, **"வாழ்க்கை, இங்கு விரும்பத்தகாதது மட்டுமின்றி, மிகவும் கடினமானதாக இருக்கும். நீங்கள் அனைவரும் கூலிகளைப்போல பணிபுரிய வேண்டும்; நிலத்தை உழுது பயிரிட நேரும்; அல்லது அஹமதுநகர் சென்று ஏதேனும் வேலைகளில் ஈடுபடலாம்; அப்படியானால் தினமும் ஆறு மைல் சைக்கிளில் பயணிக்க வேண்டியது வரும். நீங்கள், மும்பை, பூனா, லோனவாலா அல்லது வேறு எங்கேனும் வேலைக்காகச் செல்வது, உங்களுக்குச் சிறப்பாக இருக்கும். நீங்கள், என்னிடமிருந்து தூரத்தில் வேறெங்கு வாழ்ந்தாலும், என்னுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதானால், என்னுடனான உங்கள் தொடர்பு அப்படியே இருக்கும். இதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்; நான் எங்கும் இருக்கிறேன், உங்களில் எப்பொழுதும் இருக்கிறேன்"** என்று கூறினார். இருப்பினும், ராம்ஜூ அப்துல்லா பாபாவுடன் இருப்பதாகத் தனது முடிவைத் தெரிவித்தார்; சதாஷிவ், முன்ஷி, வஜிப்தர் மூவரும் தத்தமது இல்லத்திற்குத் திரும்பிச் சென்றனர்; டாக்டர் கனி, இந்த நேரத்தில் எந்த முடிவுக்கும் வரவில்லை என்று தெரிவித்தார்.

அரன்காவ்ம் என்றால் காட்டு கிராமம் என்று பொருள்; பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், இது ஓர் அடர்ந்த பகுதியாக இருந்தது. அரன்காவ்ம் கிராமத்தின் பழங்கால ஆன்மீகத் தொடர்பைப் பற்றி, பல புராணக் கதைகள் உள்ளன. 9-10ஆம் நூற்றாண்டில் இந்து சத்குரு விட்டோபா, (VITHOBA - இந்து பாரம்பரியத்தில் இது கிருஷ்ணனின் மறுபெயர்) இங்கு வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. சிறிது காலத்திற்குப் பின்னர், அவருக்காக அங்கே ஒரு கோயிலை எழுப்பி, அந்த கிராமத்தை சோட்டா பண்டரி (CHHOTA PANDHARI - பிரசித்தி வாய்ந்த பகவான் கிருஷ்ணனுக்கு, பண்டர்பூரில் அமைந்த பழங்கால கோயிலைப் போல் எழுப்பப்பட்டது) என்று அழைத்தனர்.

17ஆம் நூற்றாண்டில், 'புவாஜி புவா' (BUAJI BUA) எனும் இந்து சாது ஒருவர் அரன்காவ்மில் வாழ்ந்தபோது, பல அற்புதங்கள் நிகழ்ந்ததாகவும், அந்தக் கோயிலில் அவர் உயிரோடு சமாதி அடைந்ததாகவும் வரலாறு கூறுகிறது.

கிராமத்திற்கு வெளியில், முஹமதிய சாது ஹஸ்ரத் மௌலா கிலோரி ஷாவுக்காக (GILORI SHAH) எழுப்பப்பட்ட இன்னுமொரு புனிதமான சமாதி அமைந்துள்ளது; 1923ஆம் ஆண்டு மெஹர் பாபா அரன்காவ்ம் சென்ற போது, அவர் அப்போதும் அங்கு வாழ்ந்து வந்தார். அவர், ஆங்கிலேய மஹாராணிக்கு, தனிப்பட்ட, சிறப்பு சமையல்காரராகப் பணிபுரிந்தவர். மெஹர் பாபா, முதன்முதலில் அரன்காவ்ம் வந்தபோது, கிலோரி ஷாவின் சமாதிக்கு அருகில்தான் தனது முதல் நாளின் இரவைக் கழித்தார்.

மெஹர் பாபா, ருஸ்தம் - ஃபிரீனி இருவரின் திருமணத்தில் கலந்து கொள்வதைப் பற்றிய தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டார். மண்டலியுடன்

மே 8 அன்று அஹமதுநகர் வந்து, இம்முறை, மண்டலியை ஸரோஷ் மன்ஸிலில் (SAROSH MANZIL) தங்க வைத்து, மெஹர் பாபா, குஸ்தாஜியுடன் குஷ்ரு குவாட்டர்ஸில் அமைந்த மஹாராஜின் அறையில் தங்கியிருந்தார்.

மெஹர் பாபா, மண்டலியை குஷ்ரு குவாட்டர்ஸுக்குச் சென்று, பெஹராம்ஜியின் மேற்பார்வையில் வேண்டிய உதவிகளை செய்யுமாறு கூறியிருந்தார். அங்கிருந்த பணக்கார விருந்தினர்கள் (அவர்களில் ஐரோப்பியர், பார்சி, ஈரானியர் பலர் இருந்தனர்) மண்டலியை முறைத்துப் பார்த்த வண்ணம் இருந்தது அவர்களுக்குப் பேரவமானத்தைத் தந்தது.

ஆனால், குருநாதருடன் வாழும் வாழ்க்கையில்
கௌரவம், அவமானம் இரண்டும் ஒன்றே!
கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் எதுவெனில்
கவலையின்றி இரண்டையும் கடந்து செல்வதே!

குல்மாயின் மூத்த மகன் ருஸ்தம் (RUSTOM) தனித்தன்மையும், சிறந்த குணமும் படைத்தவர் ஆகையால், சீடர்கள் அனைவரும் பிரியமாக இருந்தனர். திருமணத்திற்காக, பல்வேறு இடங்களிலிருந்து வந்த சீடர்களும், பக்தர்களும் ஒருவரையொருவர் சந்தித்துப் பேச முடியாத அளவுக்கு அங்கு நிலவிய சூழ்நிலை மட்டுமின்றி வேலைப்பளுவும் அதிகமாக இருந்தது. மேலும், தவுலத்மாயின் உறவினர்கள் மெஹர் பாபாவின் சீடர்களைக் கண்டுகொள்ளாமல் புறக்கணித்து, இதர விருந்தினர்களின் சௌகரியங்களில் மட்டுமே கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

1923 மே 9 அன்று ஸொராஸ்டிரிய முறைப்படி ருஸ்தம், ஃபிரீனி (FREINY) இருவரின் திருமணம் குதூகலமாக நடைபெற்றது. மெஹர் பாபா, புதிய கோட்டு சட்டை அணிய, அவர் முன்னால் பூஜை, பிரார்த்தனைகள் நிகழ்த்தப்பட்டன. அனைவருக்கும் அமோகமான விருந்தளிக்கப்பட்டது. ஐரோப்பிய மேள வாத்தியங்கள் விழாவை மேலும் சிறப்பித்தது. பொதுவான திருமணச் சடங்குகளில் மெஹர் பாபா பங்கெடுக்கவில்லை; இருப்பினும், புதுமணத் தம்பதியரை ஸரோஷ் மன்ஸிலுக்கு வரவழைத்து, இருவரையும் ஆசீர்வதித்து அன்புடன் அரவணைத்தார். விழாவைத் தொடர்ந்து, கவாலி இசை நிகழ்ச்சி நடைபெற்றது; குறிப்பாக மெஹர் பாபா, நீண்ட நேரம் இசையை ரசித்தார்.

இசை நிகழ்ச்சி நிறைவடைந்ததும், மெஹர் பாபா, மண்டலியின் எதிர் காலத்தைக் குறித்து எடுத்துரைத்தார். கஸ்பா பேட் மண்டலி பூனாவிலும், காக் ஸாஹேப் மும்பையில் முன்ஷி ரஹீம், சையத் ஸாஹேப் அவர்களுடனும், எஞ்சிய 13 பேர் (குஸ்தாஜி, ஆதி, பைதூல், பெஹராம்ஜி, பெண்டு, ராம்ஜூ போன்றவர்கள்) பாபாவுடன் அரன்காவ்ம் கிராமத்திலும் தங்க வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது.

கராச்சியில் வாழும், ருஸ்தத்தின் நெருங்கிய உறவினர், பீலாமாய் (PILAMAI) திருமணத்திற்காக அஹமதுநகர் வந்திருந்தார். சத்குரு உபாஸனி

மஹாராஜ் மற்றும் மெஹர் பாபாவைப் பற்றி ஏற்கனவே குல்மாய் மூலமாக தெரியவந்து, அவர்களை அடிக்கடி சந்தித்து, நெருங்கிய தொடர்பில் இருந்தார்.

ருஸ்தம், ஃபிரீனி இருவரின் திருமணத்தில், பீலாமாய், மெஹர் பாபாவை சந்தித்து, தனது வாழ்க்கையை முழுமையாக அவருக்கு அர்ப்பணித்து, அவரோடு இருக்க விரும்புவதாகத் தெரிவித்தார்; ஆனால், பாபா அவரைத் தன் ஊருக்குத் திரும்பிச் செல்லுமாறு வற்புறுத்தினார். பெரும் தயக்கத்துடன் கராச்சிக்கு மெஹர் பாபா விஜயம் செய்வார் என்ற வாக்குறுதியைப் பெற்ற பின்னரே திரும்பிச் சென்றார்.

மெஹர் பாபாவின் ஒவ்வொரு செயலும், தானாகவே, இயற்கையாக நிகழும் சம்பவம் போலத் தோற்றமளிக்கும். வெளியளவில் பீலாமாய், மெஹர் பாபாவைத் தனது இல்லத்திற்கு அழைத்தது, அவருடைய இரகசிய திட்டங்களை மறைமுகமாக வெளிப்படுத்தியது. மெஹர் பாபாவுடன் தொடர்ந்து இருந்தவர்களுக்கு, நடக்கவிருக்கும் நிகழ்வுகளை அவர் கையாண்ட விதம், அவை இயற்கையாகத் தோற்றமளிக்கச் செய்யும் முறை, ஓரளவு புலப்படும். மேலும், அவ்வப்போது மெஹர் பாபாவின் சொல்லிலும் செயலிலும், ஆழமாகப் புதைந்திருக்கும் உண்மைகளைக் கண்டுகொண்டனர்.

குஷ்ரு குவாட்டர்ஸிலிருந்த குல்மாயின் உறவினர்களிடையே, கான்ஸாஹேபின் சொத்துக்களைப் பற்றிய விவாதம் நடந்தது. உடனடியாக நடவடிக்கை எடுக்காவிடில், அரன்காவ்ம் கிராமத்து நிலங்களை மெஹர் பாபா அபகரித்துக் கொள்வார் என்றும் சிலர் பேசிக் கொண்டனர். இத்தகைய சூடான விவாதங்களைக் கேள்விப்பட்டு, மெஹர் பாபா, மண்டலியுடன் மே 11ஆம் நாள், ஸரோஷ் மன்ஸிலை விட்டு வெளியேறினார். இம்முறை ரயில் நிலையம் செல்லும் வழியில், மண்சாலை வழியாகச் சென்று, ஒரு கல்லறை வெளியில் மண்டலியை ஒன்று திரட்டி, அங்கேயே தங்கலாம் என்று தெரிவித்தார். அதுபோன்ற சுற்றுப்புற சூழ்நிலையிலும் பெரும்பாலான சீடர்கள் பாபாவுடன் தங்குவதற்குத் தயங்கவில்லை. ஆனால், பாபா உடனடியாக அங்கிருந்து புறப்பட்டு, உள்ளூர் தர்மசாலை ஒன்றை நோக்கி நடந்தார். தங்குவதற்கு உகந்த இடம் கிடைப்பது வரை, தர்மசாலையில் இருப்பதாக முடிவு செய்தார்.

குஷ்ரு குவாட்டர்ஸிலிருந்த இறை நம்பிக்கையற்ற ஸொராஸ்டிரியர்களில் பலர், மெஹர் பாபாவிற்கு எதிராக, கசப்பான வார்த்தைகளையும், விமர்சனங்களையும் பரிமாறிக் கொண்டனர். குல்மாயின் உறவினர்கள் வெளிப்படுத்திய அவமரியாதைக்குரிய, விரோத மனப்பான்மையால், மெஹர் பாபா, குஷ்ரு குவாட்டர்ஸிலிருந்து வெளியேறியது குல்மாயைப் பெரும் கவலைக்குள்ளாக்கியது. மேலும், அவர், மெஹர் பாபாவை அழைத்து, அரன்காவ்மிலுள்ள தனது கணவரின் நிலத்தில் அவரது இருப்பிடத்தை அமைக்கக் கோரியது, பெரும் ஏமாற்றத்தைத் தந்தது.

ஷிரீன்மாயைப் போல, குல்மாயும் சில முக்கியமான பங்கை வகிக்க வேண்டியது விதி! யார் ஒருவரால் அளவிட முடியும் ஆன்மீகத் தாயின் துயரத்தின் வலி!

கய்குஷ்ரு கான்ஸாஹேப் (KAIKHUSHRU KHANSAHEB) தனது மனைவி குல்மாயின் பக்தியைக் கண்டு மனம் நெகிழ்ந்து போனார்; நிலைமையைச் சீர் செய்து, மெஹர் பாபாவை, சமாதானப்படுத்தும் நோக்கத்தில், அவர் தங்கியிருந்த தர்மசாலையை நோக்கி விரைந்தார். கான்ஸாஹேப் மன்றாடினார்: "பாபா! எனது குடும்பத்தின் சார்பாக நான் உங்களிடம் மன்னிப்புக் கோருகிறேன். என்னுடைய பிரார்த்தனையை ஏற்று, அரன்காவ்மில் நீங்கள் தங்கவேண்டும். நடந்ததை நினைத்து குல்மாய் ஆழ்ந்த துயரத்திலுள்ளார்."

மெஹர் பாபா பதிலளித்தார்: "**ஒரு துறவிக்கு இல்லம் என எதுவும் இல்லை; ஆனால் அவரிடம் எல்லாமே உள்ளது. அவர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சில குறிப்பிட்ட காரணங்களுக்காகத் தங்கியிருப்பார். அரன்காவ்மில் தங்கியிருந்து உங்கள் குடும்பத்தில் பிரச்சினைகளை உருவாக்கி, பாகங்களாகப் பிரிவதை நான் விரும்பவில்லை.**"

பாபாவின் வார்த்தைகளைக் கேட்டு, கான்ஸாஹேப், பாபாவின் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். இறுதியாக, அரன்காவ்ம் திரும்பிச் செல்வதாக, பாபா ஒப்புக்கொண்டார். இவ்வாறு, தர்மசாலையில் மூன்று நாட்கள் தங்கிய பிறகு, மெஹர் பாபா மண்டலியுடன் மே 13ஆம் நாள் மறுபடியும் அரன்காவ்ம் வந்து அஞ்சல் நிலைய கட்டிடத்தில் தங்கியிருந்தார்.

ஸூனாமாசி (SOONAMASI), மகள் கோர்ஷெத் (KHORSHED) இருவரும் மும்பையிலிருந்து ருஸ்தத்தின் திருமணத்தில் கலந்துகொள்ள வந்தவர்களிடம், '**அவர்கள் அஹமதுநகரில் தங்கியிருந்தால் அடிக்கடி அரன்காவ்ம் வர முடியும்**' என்ற விருப்பத்தை, பாபா வெளிப்படுத்தினார்.

கராச்சிக்குத் திரும்பிச் செல்லும் முன்பு, பீலாமாய், தினமும், மெஹர் பாபாவை தரிசனம் செய்து வந்த அவ்வேளையில் நடந்த ஒரு சந்திப்பில், மெஹர் பாபா அவரிடம் எடுத்துரைத்தார்: "**குல்மாய் என்னுடைய ஆன்மீகத் தாயார்; அதே வேளையில், மேலும் ஒன்றை நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் என்னுடைய ஆன்மீக சகோதரி; ஆகையால் நீங்கள் என்னுடைய தொடர்பில், அருகாமையில் இருக்க வேண்டும்.**" இவ்வாறு, மெஹர் பாபா அவரது நெருங்கிய வட்டத்துப் பெண் சீடர்களையும் உருவாக்கினார்.

மெஹரா ஜெ. ஈரானி (MEHERA J. IRANI), தனது சகோதரியின் திருமணத்தில் கலந்து கொள்ளவில்லை. திருமணத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நடந்து கொண்டிருந்த வேளையில், மெஹரா, சத்குரு உபாஸனி மஹாராஜுடன் ஸக்கோரியில் தங்கியிருந்தார். அவருடைய கண்காணிப்பில், ஸக்கோரியில் மெஹரா, இதர பெண் சீடர்களைப் போலவே, கடினமான பணிகளில் பங்கெடுத்தார். அவ்வேளையில், ஸக்கோரியில் நடந்த கட்டிடப் பணிகளில் அனைத்து பெண்மணிகளும் உதவி வந்தனர். மெஹரா ஒரு

செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவராயினும், எவ்விதமான குற்றேவல் பணிகளைச் செய்வதிலும் தயங்கியதில்லை.

சகோதரி ஃபிரீனியின் திருமண நாள் நெருங்கும் வேளையில், மெஹராவின் கால் மூட்டில் வீக்கம் ஏற்பட்டதைக் காரணம் காட்டி, மஹாராஜ், மெஹராவைத் திருமணத்தில் பங்கெடுக்க அனுமதிக்கவில்லை; அவரும் மஹாராஜின் முடிவை ஏற்றுக்கொண்டார். மெஹராவைத் திருமணத்தில் பங்கெடுக்க அனுப்பி வைக்காததன் உண்மையான காரணம் வேறு; அவரைப் பெண் கேட்டு, திருமணத்தில் ஒரு குடும்பம் வருவதை மஹாராஜ் முன்கூட்டியே அறிவார் என்பதை மெஹராவின் தாயார் தவுலத்மாய் பின்பு தெரிந்துகொண்டார்.

ஒரு சத்குரு அனைத்தும் அறிந்தவர்; நடந்தது, நடக்க இருப்பது
அனைத்தும் அவருக்குத் திறந்த புத்தகம்!
மெஹராவின் விதியை அறிந்த உபாஸனி மஹாராஜ், அவரை
அஹமதுநகருக்கு அனுப்பாதது இறைவன் சித்தம்!

அரன்காவ்மிலிருந்த பாழடைந்த கட்டிடங்களைப் பழுது பார்க்கும் பணி முழு வீச்சில் தொடங்கியது. மண்டலிக்குப் பொழுதே போதவில்லை. மெஹர் பாபாவின் கட்டளைப்படி அனைத்தையும் செய்து முடிப்பதே தலையாய கடமை. காலை சிற்றுண்டியான ரொட்டி - தேநீர் உண்ட பின்பு, நாள் முழுவதும் பணி தொடர்ந்து நடந்தது. சிலர் கிணற்றிலிருந்து நீரை இறைத்து எடுத்துச் செல்வது, சிலர் களிமண்ணைக் குழைப்பது, மற்றும் சிலர் குழைத்ததைச் சுவரில் பூசுவது போன்ற பணிகள் தொடர்ந்து நடந்தன. மதிய உணவுக்காக ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டு, சாதம், பருப்பு உணவாக வழங்கப்பட்டது. மாலை உணவில் ரொட்டி, உருளைக்கிழங்கு. இவ்வேளையில், நீண்ட நாட்களாகவே பாபா, திட ஆகாரம் எதுவும் உண்ணாமல் திரவ உணவை மட்டுமே பருகி வந்தார்.

பழுது பார்க்கும் பணி முடிந்ததும், அனைவரும் உணவறைக் கட்டிடத்தில் குடியேறினர். பாபா, ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட இடத்தை ஒதுக்கினார்; வலது புறம் அமைந்த ஒரு சிறிய அறையில் பாபா தங்கியிருந்தார்; அங்கே சத்குரு உபாஸனி மஹாராஜின் புகைப்படத்தை வைத்து, ஆராதனை செய்யப்பட்டது.

உணவறைக் கட்டிடத்தில் ஒரு முறை குஸ்தாஜி தனது தலையணைக்குக் கீழே பாம்பு ஒன்று சுருண்டு மறைந்திருந்ததைக் கண்டார்; தேள்களின் தொந்தரவும் அதிகமாக இருந்தது.

ஓரளவு அனைத்தும் சீரமைந்த நிலையில் மெஹர் பாபா இவ்வாறு கூறினார்: “**அரன்காவ்ம் அப்படி ஒரு நல்ல இடமல்ல! இங்கு இருப்பதில் நன்மை எதுவுமில்லை. வேறு ஏதேனும் தேள், பாம்பு இல்லாத இடத்தை தேர்வு செய்யுங்கள்.**” பல இடங்கள் பரிந்துரைக்கப்பட்டன; பாபா அவற்றில் விருப்பம் காட்டாத போது, பெண்டு, குவெட்டாவுக்குப் பயணம் செய்யலாம் என்பதை எடுத்துரைத்ததும், பாபா அதை ஏற்றுக் கொண்டு, கராச்சியில் வாழும் பீலாமாய் வீட்டிற்கு விஜயம் செய்வதாக, பாபா கொடுத்த வாக்குறுதியை

நினைவுகூர்ந்து, **“நாம் அரன்காவ்ம் கிராமம் மட்டுமின்றி, அஹமதுநகர், மும்பை, ஏன் முழு இந்திய தேசத்திலிருந்தும் வெளியேறி, வடக்கு நோக்கி, குவெட்டா, கராச்சி வழியாக ஈரான் தேசத்தின் பாரசீக நாட்டிற்குச் செல்ல வேண்டும்”** என்று கூறினார்.

அதற்கு முன்னதாக, மெஹர் பாபா, அரன்காவ்ம் கிராமத்தில் பயிர்களை வளர்க்கும் திட்டத்தை முன்வைத்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எருதுகள் வாங்கி, இயந்திர கருவிகள் பொருத்தி, கிணற்றிலிருந்து நீர் இறைக்க முடிவு செய்யப்பட்டது. அரன்காவ்மிலிருந்து மெஹர் பாபா வெளியேறும் செய்தியைக் கேட்டு ருஸ்தம், எருது மற்றும் கருவிகளுக்கான ஏற்பாடுகளை ரத்து செய்து விட்டார்.

அரன்காவ்மிலிருந்து புறப்படும் முன்னர், அந்த இடத்திற்கு ஒரு பொருத்தமான பெயர் வைக்கவேண்டும் என்ற பேச்சு எழவே, மெஹர் பாபா, அதற்கு ‘மெஹராபாத்’ (MEHERABAD) - அபாத் (ABAD) என்றால் வளமையான குடியிருப்பு அல்லது மலரும் இருப்பிடம் என அர்த்தம் - என்று பெயர் சூட்டினார். ஒரு பெரிய பெயர்ப்பலகையை நெர்வஸ் ரயில் தண்டவாளத்திற்கு அருகில் நிறுத்தினார்.

அரன்காவ்ம் அப்போது ஓர் அமைதியான கிராமப் பகுதி. இந்த இடத்தைப் பார்த்து அறிந்தவர்கள் எவரேனும், எதிர் காலத்தில் இது ஒரு முக்கியமான புண்ணியஸ்தலமாக மாறும் என்று எண்ணியிருக்க வாய்ப்பேல்லை. மெஹர் பாபாவுடன் முதன் முதலில் ஒன்றிணைந்து வாழும் வாய்ப்பைப் பெற்ற ஆரம்பகால சீடர்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்! மானிடனின் புனித யாத்திரையின் வரலாறு மாற்றியமைக்கப்படுகிறது. பல்லாண்டுகளுக்குப் பின்னர், உலகம் 1923ஆம் ஆண்டு புனிதமாக்கப்பட்ட புண்ணிய நல்நாட்களின் முக்கியத்துவத்தை உணரும்.

கடவுளின் கருணை வளமடையும்!
அரன்காவ்ம் அல்ல - ‘மெஹராபாத்’ - என்ற பெயரை
காலம் நினைவில் கொள்ளும்!
மெஹராபாத்திற்குப் புனித பயணம் - என்பது
மானிடனின் எதிர்காலக் குரலாக ஒலிக்கும்!


குல்மாய், **1923**



மெஹர் பாபா, குவெட்டா, **1923**



நதிக்கரையை ஒட்டி அமர்ந்திருப்போர்: ஆதி கே. ஈரானி, மாஸாஜி, பெஹராம்ஜி.
அமர்ந்திருப்போர்: நெர்வஸ், பார்சோப், பைதூல், ராம்ஜூ, ஆஸ்த்மா, குஸ்தாஜி
நிற்பவர் (ஆண்கள்): பாபு, ஸ்லாம்ஸன், பெண்டு,அடையாளம் தெரியாதவர், ஸரோஷ், பாதிரி, ஜால், ரூஸி ஈரானி.
நிற்பவர் (பெண்கள்): குல்மாய், கோர்ஷெத், ஸூனாமாசி, அவரது இரண்டு மைத்துணிகள், கோர்ஷெத் (ரூஸியின் மனைவி)

# இறைப்பயணம் - கராச்சி, குவெட்டா & குஜராத்

**(God's Journey - Karachi, Quetta & Gujarat)**

1923 மே 25ஆம் நாள், மெஹர் பாபா, மெஹராபாத்திலிருந்த அனைத்து பொருட்களையும் குஷ்ரு குவாட்டர்ஸுக்கு அனுப்பிவிட்டு, தேவையான துணிமணிகள், பெட்டி படுக்கைகளை மட்டும் எடுத்துக்கொண்டு, 14 சீடர்களுடன் ரயிலில் மூன்றாவது வகுப்புப் பெட்டியில் பயணம் செய்தார். பாபாவுடன், பீலாமாய், குல்மாய், கோர்ஷெத், ஸூனாமாசி நால்வரும் சென்றனர்.

பயணத்தின் போது, மெஹர் பாபா, பல விஷயங்களை எடுத்துக் கூறி, அனைவரின் சிந்தனைகளை அங்குமிங்கும் சிதறவிடாமல் ஒரு நிலைப்படுத்தினார். ஸாஞ்சி (SANCHI) நகரில் புத்த பகவானுக்காக எழுப்பப்பட்ட சிற்பக்கலை மிக்க ஸ்தூபிகளை, ரயில் கடந்து செல்லும் வேளையில், மெஹர் பாபா, ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், அவதார புருஷராக இந்த பூமியில் வருகை தந்த கௌதம புத்தரின் வாழ்க்கை நிகழ்வுகளையும், நிஜக் கதைகளையும் எடுத்துக் கூறினார். புத்தரைப் பற்றிய சுவாரசியமான கருத்துகளைக் கூறும் வேளையில் மெஹர் பாபா, "**கௌதமா, உடலமைப்பில் பிற அவதார புருஷர்களோடு ஒப்பிடுகையில், உன்னதமான தோற்றமுடையவராக இருந்தார்**" என்றார்.

பீலாமாய், பாபா அமர்வதற்காக மரத்தினாலான ஒரு சிறிய இருக்கையை எடுத்து வந்தார். இருப்பினும், பாபா அதில் அமராமல், பீலாமாயிடம் '**அவர் ஏன் அதில் அமரவில்லை?**' என வினவ, பீலாமாய் அடக்கத்துடன் "நீங்கள் சாதாரண இருக்கையில் அமர்ந்திருக்கும் வேளையில், நான் எப்படி அதில் அமர முடியும்? உங்களுக்கு மரியாதை தருவதே முதன்மையானது" என்று பதிலளித்தார்.

"**என்னுடைய வார்த்தைகளுக்கு மரியாதை தராமல், எனக்கு எப்படி மரியாதை தர முடியும்?**" பாபா தொடர்ந்து, "**எனது விருப்பப்படி நீங்கள் அந்த இருக்கையில் அமர்ந்தால் மட்டுமே, நீங்கள் என்னை நிஜமாக மதிக்கிறீர்கள் என்பதை நான் நம்புவேன்!**"

பீலாமாய் அதற்கு, "எனது வாழ்க்கையை உங்களுக்கு நான் அர்ப்பணம் செய்வேன், பாபா, ஆனால், அந்த இருக்கையில் என்னால் அமர முடியாது. அசௌகரியமான இருக்கையில் நீங்கள் அமர்ந்திருக்க, உங்கள் முன்னால், இதில் அமர எனக்கு சிரமமாகவும், கூச்சமாகவும் இருக்கிறது" என்று பதிலளித்தார்.

பீலாமாயைக் கண்டித்து பாபா, "**நீங்கள் எனக்கு வழங்கும் மதிப்பு, மரியாதையை விட, உங்கள் வெட்க உணர்வுகளை அதிகம் மதிக்கிறீர்கள்! இந்த சிறிய விருப்பத்திற்குக் கூட நீங்கள் இணங்காதபோது, உங்கள் வாழ்க்கையை எப்படி எனக்கு அர்ப்பணம் செய்வீர்கள்?**" பாபா தொடர்ந்து,

**“எனக்காக, உங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்வது அவ்வளவு சுலபமென்று நினைத்தீர்களா? உங்கள் ஆசைகளுக்காக ஒவ்வொரு கணமும் இறப்பதை விட, ஒரேயடியாக வாழ்க்கையைத் துறப்பது மேல்!”** என்று கூறினார்.

பீலாமாய் மன்றாடினார்: “பாபா, ஆன்மீகம் என் அறிவுக்கு எட்டாதது! ஆனால், இந்த இருக்கை விலை உயர்ந்த, வசதியான ஒன்று! நீங்கள் அதில் அமரவேண்டும் என்றுதான் நான் விரும்பினேன். உங்களுக்காகவே நான் அதைக் கொண்டு வந்தேன்.”

மெஹர் பாபா, தனது இருக்கையிலிருந்து எழுந்து, பீலாமாய் கொண்டு வந்த இருக்கையை ஜன்னல் வழியாக வெளியே வீசினார். அப்போதுதான், ஒரு குருநாதரின் விருப்பங்களுக்குக் கீழ்ப்படிவது ஒன்றுதான் முக்கியம் என்பதை பீலாமாய் உணர்ந்தார்.

பாபா எதுவும் கூறாமல் அமைதியாக இருந்தார். அப்போது, பீலாமாயின் மகன் விட்டல் அழத் தொடங்கினான். சிறுவனின் அழுகை பாபாவிற்குத் தொந்தரவாக இருந்ததால், பாபா, பீலாமாயிடம் அவன் அழுகையை நிறுத்தக் கூறினார். பால், தின்பண்டம் கொடுத்தும், அழுகையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் பீலாமாய் சிறுவனை, கழிவறை அருகில் எடுத்துச் சென்றபோது, சிறுவன் அழுகையை நிறுத்தினான். ஆனால், புரியாத புதிராக, உள்ளே வந்ததும் மறுபடியும் அழத் தொடங்கினான். இவ்வாறு, பீலாமாய் உள்ளே வரமுடியாமல் ஆக்ரா வந்தடைவது வரை வெளியிலேயே நிற்க வேண்டியதாயிற்று! மே 27ஆம் நாள் ரயில் ஆக்ரா (AGRA) வந்ததும் பாபா, அனைவருடன் அங்கே இறங்கினார்.

ஆக்ரா, பிரபலமான சுற்றுலா நகரம்; ரயில் நிலையத்தில் மக்கள் கூட்டம் அலைமோதியது. மெஹர் பாபாவுடன் சென்ற பெண்மணிகளிடம் பெரிய பெட்டி படுக்கைகள் பல இருந்தன. ‘பெட்டிகளைச் சுமக்க கூலிகளை நியமிக்கக்கூடாது’ என்பது பாபாவின் கண்டிப்பான நிபந்தனை.

ஆக்ரா, எம்பரஸ் (EMPRESS) ஹோட்டலுக்கு வந்து அறைகளுக்குச் சென்றதும், பாபா அனைத்து மண்டலியிடமும் இவ்வாறு கூறினார்: **“நீங்கள் எந்த வேலையும் செய்யத் தயாராக உள்ளீர்களா? பெஹராம்ஜியின் மேற்பார்வையில் கூலி வேலைகள், மற்றும் சுத்தம் செய்வது போன்ற சிறிய சிறிய வேலைகளில் ஈடுபடவேண்டும். அவ்வாறு செய்ய விருப்பமில்லாவிடில் இப்போதே கூறிவிடுங்கள்; இந்தப் பயணத்தின்போது உங்களுக்கு எந்தத் தொந்தரவும் இல்லாமல் பார்த்துக் கொள்வேன்.”**

மண்டலி இது போன்ற வேலைகளை வெறுத்தாலும், அனைவரும் செய்ய விரும்புவதாக ஒப்புக் கொண்டனர். அதற்குப் பிறகு, பாபா அனைவரையும் சிறப்புமிக்க தாஜ்மஹால் (TAJ MAHAL), ஆக்ரா கோட்டை (AGRA FORT) இரண்டையும் பார்வையிட அழைத்துச் சென்றார்.

அடுத்த நாள் காலையில் மதுரா (MATHURA) நகருக்குச் சென்று இந்து தர்மசாலை ஒன்றில் தங்கியிருந்தனர். அங்கும் கூலிகள் போலவே வேலை செய்ய வேண்டிய கட்டாயம்; ஏற்கனவே இருந்த சுமைகளுடன், டஜன் கணக்கில்

தர்பூசணியையும் சுமக்க வேண்டியதாயிற்று; அப்போது பாபா, பெஹராம்ஜி, குஸ்தாஜி மூவரும் ஒருவேளை தர்பூசணி ரசம் மட்டுமே அருந்தி வந்தனர்.

யமுனா நதியில், சீடர்கள் ஆடைகளைத் துவைத்து, சுத்தம் செய்து நீராடினர். மதுராவில் குரங்குகள் ஏராளம்; எவ்வளவுதான் கவனமாக இருந்தபோதிலும், குறும்புத்தனம் மிக்க குரங்கு ஒன்று மாஸாஜியின் காலுறையைக் கவ்விச் செல்ல, மண்டலி அதைத் துரத்திய விதம் பாபாவை மகிழச் செய்தது.

அன்று மதிய வேளையில், மெஹர் பாபா பல கோவில்களுக்கு விஜயம் செய்தார்; அங்கே, மண்டலியில் ஒருவர், பாபு சைக்கிள்வாலா இந்து சாஸ்திரபடி, பூஜை புனஸ்காரங்களைச் செய்தார். சில கோவில்களில், பாபா ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து, ஏழைகளுக்குக் காசுகளை வழங்கினார். மதுரா, கிருஷ்ண பகவானின் ஜன்ம பூமியாக கௌரவிக்கப் படுவதால், மெஹர் பாபா மண்டலியை, 4000 ஆண்டுகளுக்கு முன்னர் அவதரித்த கிருஷ்ணபெருமானின் கோயிலுக்கு அழைத்துச் சென்று, அனைவரையும் தலைவணங்கச் செய்தார். மாலையில், யமுனா நதியில் படகு சவாரி செய்து உல்லாசமாக இருந்தனர்.

ஒரு முறை, மெஹர் பாபா, '**இந்தப் பயணம் மகிழ்ச்சிகரமாக உள்ளதா**' என்று சாதாரணமாக ஆதியிடம் வினவ, அவர், "மகிழ்ச்சி? இவ்வளவு சோர்வடைந்திருக்கும் வேளையில் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்?" என்று எதிர் கேள்வி கேட்டார்.

பாபா கடும் சீற்றத்துடன், "**இதுதான் உண்மையான ஆனந்தம்! உனக்கு என்ன தெரியும்? காதில் விழுகிறதா?**" என்று கேட்டார்.

ஆதி உடனே அமைதியிழந்து, "இல்லை, இல்லை எனது காதில் எதுவும் விழவில்லை" என்றதும், பாபா, ஆதியின் கன்னத்தில் வேகமாக அறைந்தார்; காதிலிருந்து இரத்தம் கசிந்தது. அதற்குப் பிறகு பாபாவே காதை இதமாகத் தடவி மருத்துவம் செய்தபோது, ஆதி தனது தவறை உணர்ந்து, மன்னிப்புக் கோரினார். தொடர்ந்து பல நாட்கள் பாபா அவரது கையாலேயே மருத்துவம் செய்தார்.

மே 31 அன்று கராச்சி (KARACHI) வந்து சேர்ந்தபோது, மெஹர் பாபா மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார். ஹோர்முஸ்ஜி (HORMUSJI), பீலாமாயின் கணவர், பெய்லி (BAILY) மற்றும் பலர் பாபாவை எதிர் நோக்கிக் காத்திருந்தனர். மெஹர் பாபா, பீலாமாயின் இல்லத்தில் தங்கியிருந்த போது, பலர் தரிசனத்திற்காக வந்தனர்.

அவ்வேளையில், மெஹர் பாபாவின் தலைமுடி நீளமாகச் சுருண்டு வளர்ந்து, தங்கப்பழுப்பு நிறத்தில் இருந்தது. பீலாமாயின் இல்லத்திலிருந்த வேளையில், பாபா, குல்மாயிடம் அவரது தலைமுடியை சீர் செய்யக் கூறினார். இப்படி ஒரு பெண்மணியிடம் அவர் தலைமுடியை சீவி விடக் கூறியது இதுவே முதல்முறை. குல்மாயும் புதிய சீப்பு ஒன்றை எடுத்து, தலைமுடியைச் சீர்

செய்தது மட்டுமின்றி, அன்றிலிருந்து பாபாவின் தலைமுடியை பத்திரமாக சேகரித்தும் வைத்தார்.

பீலாமாயின் சகோதரர் ரூஸி ஜெஹாங்கிர் ஈரானி (RUSI JEHANGIR IRANI) குவெட்டாவில் மனைவி கோர்ஷெத் (KHORSHED) மற்றும் இரண்டு மகள்களுடன் வாழ்ந்து வந்தார். ருஸ்தம்-ஃபிரீனி இருவரின் திருமணத்தில் அனைவரும் மெஹர் பாபாவை சந்தித்தனர். கோர்ஷெத் தனது இரண்டு மகள்களையும் ஒரு முறை பாபாவை சந்திக்க மன்ஸில்-எ-மீமுக்கு அழைத்துச் சென்றார்.

மெஹர் பாபா, குவெட்டா வருவதற்கு ஒரு குறிப்பிட்ட உள்நோக்கம் இருந்தது; அவதார புருஷரின் அவையில், அவருடைய வட்டத்து சீடர்களாக அங்கம் வகிக்கும் விதி படைத்த இரண்டு இளம் சிறுமிகள், ரூஸி-கோர்ஷெத் அவர்களின் மகள்கள், கோஹெர் (GOHER), கேட்டி (KATTY) இருவரும் அவர்களுக்குத் தெரியாமலேயே, மெஹர் பாபாவுக்காகக் காத்திருந்தனர். அவ்வேளையில், பாபா குவெட்டா செல்வதன் காரணம் எவருக்கும் தெரியாது; அது அவரது ஆன்மீக உள்பணியின் வெளிப்பாடாக வரும்போது மட்டுமே புலப்படும். மெஹர் பாபாவுடன் பீலாமாயின் தொடர்பு, அவரது அர்ப்பணம், மேலும், ரூஸியுடன் பெண்டு பணிபுரிந்தது அனைத்தும், இணைப்புச் சங்கிலிகளாக, தமது வட்டத்து சீடர்களை உருவாக்க மெஹர் பாபா செய்த உள்பணியின் விளைவு. இவ்வாறு மெஹர் பாபாவின் வட்டம் உருவானது.

கராச்சியில் ஒரு வாரம் தங்கியிருந்த பின்பு, ஜூன் 7 அன்று மெஹர் பாபா மண்டலியுடன் குவெட்டா (QUETTA) புறப்பட்டு, அடுத்த நாள் வந்து சேர்ந்தார். பீலாமாய், பாபாவின் சௌகரியங்களில் எவ்வித குறைபாடும் வைக்கவில்லை. ரூஸி, தனது இல்லத்திற்கு அருகில் ஒரு பங்களாவை பாபாவின் தனிப்பட்ட வசதிக்காக ஏற்பாடு செய்திருந்தார். ரூஸி உணவகம் நடத்தி வந்ததால் உணவுக்குப் பிரச்சினையில்லை.

குவெட்டாவில் குளிர் அதிகமாக இருந்தும், பாபாவின் கட்டளைப்படி, மண்டலி குளிர் நீரில் நீராடவேண்டிய கட்டாயம்; அதே வேளை குவெட்டாவில் வாழும் மக்கள் வெந்நீரில் குளிப்பது கூட மிக அரிது. அந்தக் குளிரான காலநிலையிலும் பாபா உபவாசத்தை தொடர்ந்து, பால், பாதாம் ரசம் மற்றும் மாலையில் பருப்பு ரசமும் அருந்தி வந்தார்.

மெஹர் பாபா, அங்குத் தங்கியிருந்த வேளையில், ரூஸியின் குழந்தைகளோடு விளையாடுவதுண்டு; ஆனால் அவருடைய தனி கவனம் குறிப்பாக கோஹெர், கேட்டி இருவர் மீதும் இருந்தது. கோஹெர் அப்போது ஏழு வயது, கேட்டி மூன்று வயது சிறுமியர். ஒரு முறை கேட்டி தனது தந்தையிடம், “மெஹர் பாபா, மிகவும் பண்புள்ள மனிதர்; அவரை இங்கிருந்து அனுப்பி விடாதீர்கள்!” என்று கூறினாள். இன்னுமொரு முறை கேரம் விளையாடும் போது, பாபா, கேரம் காய்களில் ஒன்றைத் தெரியாதபடிப் பதுக்கி வைத்தார். கோஹெர் பாபாவைக் குறை கூறுவது போல, “பாபா, நீங்கள் ஏமாற்றுகிறீர்கள்! நேர்மையாக விளையாடுங்கள்” என்றாள். பாபா மனமார சிரித்தார்.

ரூஸி மந்திர மாயாஜால வித்தைகள் செய்வதில் ஒரு கற்றுக்குட்டி. மாலை வேளைகளில், பாபாவை மகிழ வைத்து, உற்சாகமாக இருக்கச் செய்ய, குட்டி கதைகள், கேலி, கிண்டல் மற்றும் சின்ன சின்ன மாயாஜால வித்தைகள் புரிந்தார். மேலும் ரூஸி, பாபா, மண்டலி அனைவரையும் குவெட்டாவைச் சுற்றியுள்ள பழத்தோட்டங்களுக்கு அழைத்துச் சென்று, ஜமாஸ்ப் (JAMASP) பூங்காவையும் பார்வையிட்டனர். மெஹர் பாபா, ரூஸியின் நகைச்சுவை உணர்வை பாராட்டி, அவருடனிருக்கும் நேரத்தில் மகிழ்ச்சியாக இருந்தார்.

நாட்குறிப்புகளில் பதிவு செய்ததற்கு இணங்க, மெஹர் பாபா அவருடைய முதல் 'மஸ்த் அல்லா'வை (MAST ALLAH - இறை போதையில் இருப்பவர்) குவெட்டாவில் நீண்ட நேரம் சந்தித்தார். மிகப்பெரிய, சக்திவாய்ந்த உருவம்; பேன், பொடுகுகள் நிறைந்த தலை; பாபா தங்கியிருந்த பங்களாவுக்கு எதிரே சிறிய குடில் ஒன்றில் வாழ்ந்து வந்தார். அங்கிருந்த ஒவ்வொரு நாளும் பாபா, தேநீரும் சிற்றுண்டியும் ஆதி மூலமாக அனுப்பி வைத்தார். அப்போது ஒரு நாள் பாபா அவரைத் தொடர்பு கொள்ள முடிவு செய்தார். பாபா காரிலிருந்து இறங்கியதும், அந்த மஸ்த் அல்லா, பாபாவை நோக்கி வேகமாக வந்து, அரவணைத்துக் கொண்டார். குஸ்தி சண்டை போடுவதுபோல, பாபாவைத் தூக்கி, முன்னும் பின்னும் சுழற்றினார். எது நடந்தாலும் தலையிடக்கூடாது என்று ஏற்கனவே பாபா, ஆதியிடம் கூறியிருந்தார். மெதுவாக, அந்த மஸ்த் அமைதியாகி, பாபாவை அவரது பிடியிலிருந்து விடுவித்தார். இது, ஆதிக்கு விசித்திரமான ஆனால் அச்சமும், பெருமிதமும் அளிக்கக்கூடிய காட்சியாக இருந்தது; அதேவேளை, ஆதி பார்த்ததைப் பிறருக்குத் தெரிவிக்கக்கூடாது எனவும் பாபா வாக்குறுதி வாங்கியிருந்தார்.

1923, ஜூன் 12 அன்று திடீரென, மெஹர் பாபா இவ்வாறு கூறினார்: **"பெர்ஸியாவுக்குப் புறப்படும் முன்னர், இந்தியாவில் ஆறு மாதங்கள், காஷ்மீரிலிருந்து மும்பைக்கு நடந்து செல்லும் பாதையில், ஒரு மாதம் எங்கேயேனும் தங்க நினைக்கிறேன்."** அவர் மண்டலியுடன் இந்தப் புதிய பயணத்திட்டம் மற்றும் பாதையைப் பற்றி விவாதித்தார்.

நீண்ட நேர ஆலோசனைக்குப் பிறகு, காஷ்மீரிலிருந்து மும்பை வரை நடைபயணமாகச் செல்ல முடிவெடுக்கப்பட்டது. காஷ்மீருக்கு ரயிலிலும், அதுவரை செல்லத் தேவையான உணவுக்கு வேண்டிய பணத்தை மட்டும் கைவசம் வைத்துக் கொள்ளவும், ஆனால், காஷ்மீரிலிருந்து நடந்து செல்லும் வழியில் அன்றாட உணவுக்காகப் பிறரிடம் யாசித்து, அவ்வாறு கிடைப்பதையே பகிர்ந்து உண்ணவும் தீர்மானிக்கப்பட்டது; மேலும், அவ்வேளை கைகளில் காசு எதுவும் வைத்துக் கொள்ளக்கூடாது என்றும், இவ்வாறு யாசித்து வாழும் வாழ்க்கை ஒரு மாதம் தொடரும் என்பதையும் மெஹர் பாபா வலியுறுத்தினார். அனைவரும் காலுறையும் உள்ளாடையும் அணிந்து, கழுத்திலிருந்து கால்வரை அங்கி அணிய வேண்டும் எனவும் பாபா குறிப்பிட்டார். தொப்பி அணியக்கூடாது, ஆனால் கைக்குட்டையைத் தலையில் கட்டிக்கொள்ளலாம். பாதணிகள்

மட்டுமே அணியலாம், ஷூஸ் (SHOES) போன்றவை ஆகாது. படுக்கைகளில் கம்பளி போர்வைத் தவிர வேறு எதுவும் உடனெடுத்துச் செல்லக்கூடாது. ஒவ்வொருவரும் காதி பை ஒன்றில் மேலுமொரு ஜோடி சட்டை, காலுறை மற்றும் பார்சோப், குடிநீர் எடுத்துக்கொள்ளலாம்.

ஜூன் 17ஆம் நாள், எதிர்வரும் பயணத்தைக் குறித்து மெஹர் பாபா, தீவிரமான, எச்சரிக்கும் தொனியில் எடுத்துரைத்தார்: “**நமது திட்டப்படி அனைவரும், வெளியளவிலேனும் முழுமையான துறவியாக வேண்டும், ஆகையால், ஒவ்வொருவரும் என்னுடன் வந்து யாசிப்பதற்கு முன்னர், இரண்டு முறை யோசனை செய்யுங்கள்! மக்கள் உங்களைக் கேலியும் கிண்டலும் செய்து அவமானப் படுத்தக் கூடும்; உண்மையில், பாதை முட்களால் நிரம்பியதாக இருக்கும்!**

“**எனவே, என்னுடன் பயணம் செய்வதால் வரும் இடர்பாடுகளைத் தாங்கும் அளவுக்கு உங்களுக்கு மனோபலம் உள்ளதா என்பதை நீங்கள் தான் நிர்ணயிக்க வேண்டும்; அதன் பின்னர் உங்கள் முடிவை எனக்குத் தெரியப்படுத்துங்கள். உங்களில் ஒருவரேனும் இவ்விஷயத்தில் முழுமையாகப் பங்கெடுக்க முடியாவிடில், அவரை அவ்வேளையில் தனியாகக் குறிப்பிட்ட ஓரிடத்தில் தங்க வைக்கலாம்; மேலும், என்னுடனான அவருடைய தொடர்பு எவ்வகையிலும் பாதிக்காது.**” பாபா, அனைவரும் சிந்தித்து முடிவு செய்ய இரண்டு நாட்கள் அவகாசம் வழங்கினார்.

இரண்டு நாட்கள் தீவிர ஆலோசனைக்குப் பின்னர், அனைத்து மண்டலியும் பாபாவுடன் பயணத்தில் பங்கெடுக்க ஒப்புக்கொண்டனர். ஜூன் 20 அன்று, குஸ்தாஜிக்குப் பொருத்தமான மாதிரி உடை ஒன்று தயார் செய்து, வடிவமைப்பை பாபா அங்கீகாரம் செய்த பின்னர், ஏனைய அனைவருக்கும் அவ்வாறே தயார் செய்யப்பட்டது.

அடுத்த நாள், மெஹர் பாபா, மண்டலி மற்றும் ரூஸி குடும்பத்தினருடன் குவெட்டாவிலிருந்து 14 மைல் தொலைவில் அமைந்த ஊரக் (URAK) மலைப்பாதையில் நீர்வீழ்ச்சியைப் பார்க்கச் சென்றனர். குல்மாய், ஸூனாமாசி, கோர்ஷெத், ரூஸியின் மனைவி அனைவரும் எடுத்துச் சென்ற மதிய உணவை பாபா அவரது கைகளால் அனைவருக்கும் வழங்கினார்.

அதன் பின்னர், அங்கிருந்து குவெட்டா நகருக்கு நீர் வழங்கும் மலை உச்சியிலமைந்த நீர்த்தேக்க அணையைப் பார்வையிட்டனர். மெஹர் பாபா, செங்குத்தாக இருந்த மலை முகடுகளில் தாவி ஏறியதைக் கண்டு, அனைவரும் ஆச்சரியமடைந்தனர்; அவரிடமிருந்து வெளிவந்த தெய்வீக ஒளிக்கதிர்கள் சுற்றுப்புறத்தை ஆக்கிரமித்தது, அனைவருக்கும் ஒரு கண்கொள்ளா காட்சியாக அமைந்தது. அவருடைய அற்புதமான தோற்றம், உலக மக்களுக்கு இதைவிட உன்னதமான காட்சி வேறு எதுவுமில்லை என்ற நற்செய்தியை வழங்குவது போலத் தோன்றியது.

ஜூன் 22 அன்று மெஹர் பாபா மற்றும் மண்டலியிடையே, நடைபயணத்தைப் பற்றிய ஒரு நீண்ட விவாதம் நடைபெற்றது. அனைவரும் கீழ்க்குறிப்பிடும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டனர்:

1. **மெஹர் பாபாவுடன் நடைபயணத்தில் பங்கேற்பவர்கள், அனைத்திற்கும் பொறுப்பேற்று, தன்னிச்சையாக முடிவெடுக்க வேண்டும்; இதற்கு ஆதாரமாக, அனைவரும் அரசாங்கப் பத்திரத்தில் கையொப்பமிட வேண்டும்.**
2. **மெஹர் பாபா ஏற்கனவே கூறியபடி, எவரையும், எந்நேரமும், எங்கேயேனும் அனுப்பலாம் என்பதை அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டிருந்தாலும், இப்பயணம் முடிவது வரை, எந்த சூழ்நிலையிலும், எவரும் பாபாவைவிட்டு விலகிச் செல்லக்கூடாது.**
3. **மண்டலியில் 'ஆஸ்த்மா' நடைபயணத்தில் பங்கெடுக்க வேண்டாமென பாபா பலமுறை வலியுறுத்திய பின்னரும், பாபா மற்றும் மண்டலியுடனே அவர் இருப்பதில் பிடிவாதமாக இருந்து, அவருடைய சுய விருப்பம், செலவு மற்றும் இக்கட்டான சூழ்நிலைகளுக்கு அவரே, எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், அனைத்து பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்வதாகக் கூறினார்.**
4. **மண்டலியில் ஒருவரும் எவ்விதமான உலகப்பொருள் அல்லது இறை உதவியை எதிர்பார்க்கக் கூடாது. எந்த சூழ்நிலையிலும், மண்டலியில் ஓரிரு நபர்கள் உயிரிழக்கும் நிலையிலும், பாபாவிடமிருந்து எவ்வித உதவியையும் எதிர்பார்க்கக் கூடாது.**

மூன்றாவது நிபந்தனை, நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. இறுதியாக, ஆஸ்த்மாவின் தந்தை தடையாக இருந்தாலும், அவர் உடன் செல்லலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. நான்காவது நிபந்தனையைப் பொறுத்தவரையில், இப்பயணத்தைப் பற்றி முதன்முதலாக குறிப்பிடும்போது, வெகு விரைவில் ஓரிரு சீடர்கள் மரணத்தை சந்திக்க நேரும் என்பதையும் பாபா கூறினார்.

அதற்குப் பிறகு, பாபா, மறைமுகமாக இவ்வாறு குறிப்பிட்டார்: **"நடைபயணத்தின் போது, அவர் ஒரு விதமான ஆன்மீக உயர்நிலையில் இருக்க, உபாஸனி மஹாராஜ், விவேகானந்தா, கவுஸ் அலிஷா போன்றவர்கள் அனுபவித்தது போல், உதவியற்றவராகவும், மேலும் யோகிகள், சாதுக்கள், மஹாத்மாக்கள் இவர்களின் காரணமாக உள்ளளவில் அல்லது வெளியளவில் இன்னல்களை சந்திக்கவும் நேரிடும்."**

ஜூன் 23ஆம் நாள், பயணத்திற்கான புதிய அங்கிகள் வந்து சேர்ந்தன.

எதுவாயினும், மெஹர் பாபா ஆஸ்த்மாவை, பாபாவுடன் நடைபயணத்தில் இணைவதற்காக, அவர் தந்தையின் அனுமதியைக் கோருமாறு அஹமதாபாத்திற்கு அனுப்பி வைத்தார். குஸ்தாஜி, பெஹராம்ஜி இருவரையும் 32 மணி நேரத்தில் ஒரு முறை மட்டும் உணவு உண்ணுமாறு பாபா உத்தரவிட்டார். ஓய்வெடுப்பதற்காக, பாபா, மாலையில் ரூஸி குடும்பத்தாருடன் திரைப்படம் பார்க்கச் சென்றார்.

அடுத்த நாள், மெஹர் பாபா நடைபயணத்தில் ஒரு முக்கியமான மாற்றத்தை அறிவித்தார்; காஷ்மீரிலிருந்து புறப்படுவதற்கு பதிலாக, கொல்கத்தாவிலிருந்து புறப்பட முடிவு செய்தார். இருந்தும், பாபா, மறுபடியும், புறப்படும் இடத்தை மாற்றும் எண்ணத்தில், மண்டலியிடம் விவாதத்தைத் தொடங்கினார். குஜராத், கொல்கத்தா இரண்டு இடங்களையும் எடுத்துக்கூறி மண்டலியின் அபிப்பிராயங்களைக் கேட்டார். இறுதியாக, அஹமதாபாத்திலிருந்து நடைபயணமாக மும்பை செல்லவும், வழியில் உணவுக்காக யாசிக்காமல், பொட்டுக்கடலையும், பொரியரிசியும் சாப்பிட முடிவெடுத்து, வேண்டிய அளவுக்கு வாங்கி சேர்க்கப்பட்டது.

சற்று நேரத்தில், மெஹர் பாபா இரண்டு தீப்பெட்டிகளை எடுத்து வரச்சொல்லி, அதை நூலால் கட்டி இணைத்து, ஒரு பக்கத்தைத் தமது கையிலும், மறுபக்கத்தை குல்மாயின் கையிலும் கொடுத்து, அவரை அங்கேயே நிற்கச்சொல்லி, பாபா மாடிக்குச் சென்றார். இந்தத் தொலைபேசி வழியாக, மெஹர் பாபா, குல்மாயிடம், “**வெளியளவில், நாம் இந்தத் தொலைபேசி வழியாகத் தொடர்பு கொள்ளும் தருவாயில், உள்ளளவிலும் தொடர்பை நிறுவ முடியும். நாம் அனைவரும் அஹமதாபாத்திலிருந்து புறப்பட்டு, ஒரு துறவியின் வாழ்க்கையை வாழத் தொடங்குவோம்**” என்று கூறினார்.

அடுத்ததாக, அதே தொலைபேசி வழியாக பாபா, கேட்டியிடம் உரையாடினார்: **“நான் புறப்படுகிறேன், ஆனால் நீங்கள் என்னை எப்பொழுதும் உங்கள் நினைவில் கொள்ள வேண்டும். அப்படியே செய்வீர்களா?”**

அதற்கு கேட்டி, “நான் உங்களை எந்த சூழ்நிலையிலும் எப்படி மறக்க முடியும், பாபா?” என்றார். தொலைபேசி, அப்போது இந்தியாவில் உபயோகத்தில் இல்லை. சிறு பருவத்திலிருந்தே கையாண்ட இந்த யுக்தியை இப்போது பயன்படுத்தி, ஒருவேளை, மெஹர் பாபா, தொலைபேசி தொடர்பின் காலத்தை இதன் மூலம் பிரகடனப்படுத்துகிறார். 1925ஆம் ஆண்டுக்குப் பின்னரே தொலைபேசி இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

குவெட்டாவில், ரூஸி குடும்பத்தினர் மெஹர் பாபாவை முற்றிலுமாக ஏற்றுக்கொண்டு, பக்தியுடன் அவருடைய ஆன்மீகப் பணியில் உதவி வந்தனர். கோஹெர், கேட்டி இருவரும் விட்டில் பூச்சிகளாக, தக்க தருணத்தில், மெஹர் பாபாவின் வட்டத்தின் வெளிச்சத்தை நோக்கி தானே சென்றடைய ஆயத்தமாயினர். குவெட்டா பயணத்தின்போது, மெஹர் பாபா அவரது வட்டத்துப் பிரதிநிதிகளைத் தொடர்பு கொள்வதே அவருடைய உள்பணியின் முக்கிய அம்சமாக இருந்தது.

பிரியமான இறைவன், அவர் மீது பிரியமாக இருப்பவர்களை எந்நேரமும் தேடி அலைகிறார்; தக்க தருணத்தில் அவர்களின் இதயங்கள் நாடும் தலைவிதியை நிலையாக நிர்ணயிக்கிறார்.

கோஹெர், கேட்டி இரண்டு சிறுமிகளும் அளித்த அன்பான முத்தங்களை ஏற்றுக் கொண்டு, மெஹர் பாபா, ஜூன் 25 அன்று விடைபெற்றுச் சென்றார்; ரூஸியின் கண்களில் நீர் ததும்பியது; பிரியமான இறைவனை மறுபடியும் விரைவில் வருமாறு அழைப்பது போன்ற ஓர் உணர்வு; மெஹர் பாபாவின் கண்கள் அமைதியாக அளித்த பதில்: **"எனது தோட்டத்து மலர்களை இங்கே நான் விட்டுச் செல்கிறேன், மறுபடியும் நிச்சயமாக வருவேன்."** இது ரூஸியின் குழந்தைகள் கோஹெர், கேட்டி இருவரையும் பற்றிக் குறிப்பிட்டதாகும்.

ரயிலில், மெஹர் பாபா அனைவருக்கும் உணவு வழங்கினார்; குஸ்தாஜி, பெஹராம்ஜி இருவரும் பாபாவின் உத்தரவுபடி நீர், ரொட்டி மட்டுமே உண்டனர்; மெஹர் பாபா கடந்த 32 மணி நேரத்தில் ஒரு டம்ளர் ஷர்பத் அருந்தினார்.

சிந்த், ஹைதராபாத்தில் ரயில் மாறும் வேளையில், ரயில்வே அதிகாரி ஒருவர், சந்தேகத்தின் பேரில், பாபா மற்றும் மண்டலியிடம், அனைத்து பெட்டி படுக்கைகளையும் திறந்து சோதனையிட்டு, எடைபோடக் கூறினார்; மண்டலி பயணத்தின் நோக்கத்தை எடுத்துக் கூறியும், அந்த அதிகாரி மிகவும் கண்டிப்புடன் நடந்துகொண்டார்; மெஹர் பாபா உடனே ராம்ஜூவிடம் சத்குரு உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாறு புத்தகம் ஒன்றை அவருக்கு வழங்குமாறு கூறினார்; புத்தகத்தைத் திறந்து ஷிர்டி சாய்பாபா மற்றும் உபாஸனி மஹாராஜின் புகைப்படங்களைப் பார்த்ததும், அந்த அதிகாரிக்கு என்ன நேர்ந்ததோ, பணிவாக வணங்கி அனைவரையும் அனுப்பி வைத்தார்.

ஜூன் 27 அன்று அஹமதாபாத் வந்து சேர்ந்தனர்; அங்குத் தங்குவதற்காக, ஸ்லாம்ஸன், பார்சி தர்மசாலை ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். பிரச்சினை என்னவெனில், அங்கே பார்சிகளைத் தவிர வேறு எவரையும் அனுமதிக்கவில்லை. மண்டலியில் மூவர் முஸ்லிம் இனத்தவர்கள் - பாபா இவர்களைப் பணியாளர்கள் என்று கூறி, பிரச்சினைக்கு முடிவு கண்டார்.

ஆஸ்த்மாவின் தந்தையார் அவர் பாபாவுடன் நடைபயணம் செல்வதை அனுமதிக்கவில்லை; அவரைப் பெற்றோரிடம் திரும்பிச் செல்லுமாறு பாபா அடிக்கடி வலியுறுத்தியதன் காரணமும் இதுதான். பின்னர், ஆஸ்த்மா பாபாவிடமிருந்து விலகி உலக வாழ்க்கை வாழ ஆரம்பித்தார். இதைத்தான் ஒரு முறை பாபா ஆஸ்த்மாவின் 'இறப்பு' என்று குறிப்பிட்டார்.

1923 ஜூலை 1ஆம் நாள், மெஹர் பாபா மண்டலியுடன், அஹமதாபாத்திலிருந்து நடைபயணத்தைத் தொடங்கினார். அன்று காலை நான்கு மணிக்கு, தர்மசாலையிலிருந்து புறப்பட்டு, ஆரவாரமற்ற சூழ்நிலையில் நகரைக் கடந்து சென்றனர். பாபா, அனைவரும் இறை நாமத்தை மெதுவாக உச்சரிக்குமாறு அறிவுறுத்தினார்.

‘ராம்… கிருஷ்ணா… எஸ்தான்… அஹுராமஸ்த்… யா அல்லா…’ என மெதுவாக மொழிந்தது அனைவரின் நடையோசையுடன் இணைந்து எதிரொலித்தது.

மெஹர் பாபா தன்னுடைய பெட்டி படுக்கைகளைத் தானே சுமந்துகொண்டு, அனைவரையும் வழிநடத்தி முன்னால் நடந்தார்; கம்பளி போர்வையைக் குளிருக்கு இதமாக கழுத்தோடு சுற்றி அணிந்திருந்தார்; ஒருபுறம் பையைத் தொங்கவிட்டு வெளிப்பார்வையில் அனைவரும் பிச்சைக்காரர்கள் போலத் தோற்றமளித்தனர்.

காலை எட்டு மணிக்கு, பத்து மைல் தூரம் நடந்து, மிகுந்த களைப்புடன், ஜேத்தல்பூர் (JETALPUR) கிராமத்தை வந்தடைந்தனர். களைப்புக்கு முக்கிய காரணம் அளவுக்கு அதிகமான சுமை. உணவுக்காக, பொரி மற்றும் பொட்டுக்கடலையை உண்ணும் கட்டளையைத் தளர்த்தி, பாபா, சாதமும் பருப்பும் தயார் செய்ய அனுமதி வழங்கினார்.

மெஹர் பாபா, அப்போது, ஓர் அருமையான இடத்தைத் தேர்ந்தெடுத்தார்; அங்கே மயில்கள் பறந்து நடனமாடி விளையாடும் காட்சியை அனைவரும் கண்டு களித்து ஓய்வெடுத்தனர். ஜேத்தல்பூரில் அன்று தங்கி அடுத்த நாள் கய்ரா (KAIRA) கிராமத்தை நோக்கி தொடர்ந்து செல்ல முதலில் முடிவெடுக்கப்பட்டது; ஆனால் அந்தக் கிராமத்தினர் ராம்ஜூவிடம் கய்ரா செல்லும் குறுக்கு வழியை எடுத்துக்கூற, பாபாவும் ராம்ஜூவின் பேச்சுக்கு இடங்கொடுத்து, அங்கிருந்து புறப்பட்டனர். மெஹர் பாபாவின் சீடர்கள் இன்னும் கற்றுக்குட்டிகள்; எவரேனும் பாபாவின் திட்டங்களில், ஏதேனும் காரணங்களுக்காக மாற்றம் செய்ய நேர்ந்தால், உடனே பாபா அதை ஏற்றுக்கொள்ள, எதிர்வரும் விளைவுகள் விபரீதமாக அமைவதை அவர்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

ராம்ஜூ கூறிய குறுக்கு வழியில் பயணம் தொடர்ந்தது; அதீத உஷ்ணம், மண் நிறைந்த சாலை, ஓர் அங்குலம் அளவுக்கு, கால் மண்ணில் புதைந்தது; கடினமான பாதணிகளில் நடக்க சிரமமாக இருந்தது. ஒரு மரத்தின் கீழ் ஓய்வெடுக்க அமர்ந்தனர்; உஷ்ணத்தைத் தணிக்கும் அளவுக்கு, காற்று இல்லை; அக்கம் பக்கத்தில் விசாரித்த போது, அவர்கள் பாதை தவறி வந்ததாகவும், இது பயணம் செல்ல உகந்ததல்ல என்றும் தெரியவந்தது. இத்தனை சுமைகள், அனைவரும் களைப்பில் அப்படியே ஒரு மரத்தின் கீழ் நின்றுவிட்டனர். வஜிப்தரின் கால்களில் கொப்புளங்கள்; நெர்வஸ் எரிச்சலில், இந்தப் பாதையை பரிந்துரைத்ததற்காக, ராம்ஜூவைத் திட்டினார். பாபா, அப்போது இவ்வாறு குறிப்பிட்டார்: “**உண்மை, ராம்ஜூ செய்த இந்தத் தவறு, நம் அனைவரையும் எரிச்சலடையச் செய்தது; ஆனால், அதற்காக நெர்வஸ் வம்புச் சண்டையில் ஈடுபட வேண்டிய தேவை இல்லை! இதனால்தான் அவருக்கு நெர்வஸ் என்று பெயர் வழங்கப்பட்டது!**” பாபாவின் நகைச்சுவை கலந்த பேச்சு மண்டலியிடையே இருந்த பதற்றத்தைப் போக்கியது.

மெஹர் பாபா முன்னால் நடந்து செல்ல, மண்டலியும் தொடர்ந்து சென்றனர்; ஆனால், சிறிது நேரத்தில் ராம்ஜூ, நெர்வஸ் இருவரிடையே

வாக்குவாதம் சூடுபிடித்தது; பாபா, உரத்த குரலில் இருவரையும் திட்டினார். கடந்த நான்கைந்து மாதங்களாக, பாபா உபவாசம் இருந்து தேநீர், பழரசம் மட்டுமே அருந்தி வருகிறார்; ஆனால் அவருடைய இடி போன்ற குரல் நன்றாக உண்டு, உறங்கி, உலாவும் ஒருவரின் குரல் போல் இருந்தது. அதே வேளையில், உடன் செல்லும் மண்டலி இரண்டு வேளை திட ஆகாரம் உண்ட பின்னரும், சற்று தூரம் நடந்ததும் களைப்பில் பேசவும், நடக்கவும் முடியாமல் திண்டாடினர். இப்போது, கடவுளின் நாமம் நிஜபக்தியில் இல்லாமல் களைப்பினாலான எரிச்சல் கலந்த தொனியில் உச்சரிக்கப்பட்டது.

இறுதியாக, கய்ரா நகரின் அருகிலமைந்த நதிக்கரையில் களைப்பாறினர். மண்டலி தாகத்தில் ஆற்று நீரைப் பருக முன்வந்த போது, பாபா மறுத்துவிட்டார். மேலும் ஒரு மைல் தொலைவிலிருந்த கய்ரா கிராமத்தைச் சென்றடைந்ததும், பாபா அங்கு நிற்க விரும்பாமல், நடையைத் தொடர்ந்து, வழியிலிருந்த ஓர் உணவகத்தின் வெளியில் அமர்ந்து தேநீர் பருக, மண்டலி அனைவரும் குத்துக்கால் போட்டு அமர்ந்தனர். விசித்திரமான தோற்றமளிக்கும் யாத்திரீகர்களை சுற்றி ஒரு கூட்டம் குவிந்தது; சிலர், பரிதாபமடைந்தனர், சிலர், மெஹர் பாபா மற்றும் மண்டலியை பிச்சைக்காரர்கள் என நினைத்து, அவர்களுக்கு உகந்த நல்ல இடங்களை பரிந்துரைத்தனர். பலர், கேள்வி மேல் கேள்விகள் கேட்டு, பதில் எதுவும் வழங்காததால், ஏளனம் செய்தனர். களைப்பு மற்றும் தாகத்தில் இருந்த மண்டலிக்கு சற்று ஓய்வும், பருக குளிர்ந்த நீரும்தான் தேவையே தவிர, கும்பல் மீது கவனம் செலுத்தும் மனநிலையில் அவர்களில்லை. முற்றிலும் களைத்துப் போயினர்; குறிப்பாக பலசாலிகள் அதிகமான சுமையின் பாரத்தால் பரிதாப நிலையில் இருந்தனர். வஜிப்தர் அனைவரிலும் அதி சக்திசாலி, கால்களில் வந்த கொப்புளங்களால் அவதிப்பட்டார். மாஸாஜி, பைதூல் இருவரும் ஒருபுறமாகச் சாய்ந்து பெருமூச்சுவிட்டனர். பெண்டு, ராம்ஜூ மற்றும் சிலர் உஷ்ணத்தில் கொதித்தனர்; ராம்ஜூ தாகத்தால் தவியாய் தவித்துக் கண்ணீர் வடித்தார்.

கடவுள் கருணை மிக்கவர்; ஆனால் அவரை அடையும் பாதை கடினமானது. இப்போது, சீடர்கள் குருநாதரின் இரக்கத் தன்மையை உணர்ந்து, கடவுளின் சார்பில் அவர் தலையிடுவதைக் கண்டுகொள்ளும் நேரம் வந்தது.

நடைபயணத்தின் போது மண்டலி நீர் அருந்துவதில் மெஹர் பாபா மிகவும் கண்டிப்பாக இருந்தார். உணவு உண்ணும் வேளையில் ஒன்றரை டம்ளர் தண்ணீர் மட்டுமே அருந்த வேண்டும்; அதற்குப் பிறகு, பாபா அனுமதித்தாலொழிய தண்ணீர் அருந்துவதற்குத் தடை. பாபா, ராம்ஜூவிடம் '**அவர் தனது இல்லத்திற்குத் திரும்பிச் செல்ல விரும்புகிறாரா?**' என வினவினார். ராம்ஜூ அதற்கு, அப்படி ஏதும் விருப்பம் தெரிவிக்காமல், அவரால் இந்தப் பயணத்தை நிறைவு செய்ய முடியும் என்று அவர் நம்பவில்லை என்பதை மட்டும் தெரிவித்தார். பாபா, ராம்ஜூவுக்கு ஆறுதல் கூறினார்: "**இப்படி மனம் தளர்ந்து விடாதீர்கள்! என்னை நம்புங்கள். நான் உங்களோடு இருக்கிறேன். தைரியமாக இருங்கள். நம்பிக்கையை இழக்காதீர்கள்!**"

மெஹர் பாபா, அப்போது, அனைவரையும் மதிய வேளையில் ஓய்வெடுக்க அனுமதித்தார்; வெப்பத்தின் கொடுமை தாங்காமல், ராம்ஜூ, அருகாமையில் இருந்த நதிக்கரைக்குச் சென்று, சேற்று நீரை பரபரப்புடன் தன் தலையில் அள்ளி வீசினார். பெண்டுவின் நிலைமை இன்னும் பரிதாபகரமாக இருந்தது; பேசமுடியாமல் நாவைத் தொங்கவிட்டுக் கொண்டு, பாபா முன்னால் தண்ணீர் வேண்டி நின்றார். பாபா இருவருக்கும் ஒரு டம்ளர் வீதம் தண்ணீர் கொடுத்தும் தாகம் தணியவில்லை.

அன்று மாலை வேளையில், காவல்துறை அதிகாரி ஒருவர் வந்து அனைவரின் பெயர் மற்றும் முகவரியை குறித்துக் கொண்டார். அவர் மண்டலியை எச்சரித்து, "இப்போதெல்லாம் இந்த இடத்தைச் சுற்றி, திருடர்களும், கொள்ளைக்காரர்களும் குழந்தைகளைக் கடத்திச் செல்வதால், பொதுமக்கள் மோசமான மனநிலையில் உள்ளனர். இந்த மாநிலத்திலிருந்து எவ்வளவு விரைவில் வெளியேற முடியுமோ அவ்வளவு விரைவில் சென்றுவிடுவது உங்களுக்கு நல்லது. நீங்கள் அனைவரும் கடத்தல்காரர்கள் என்று ஒரு வதந்தி ஏற்கனவே பரவி வருகிறது!" என்று கூறினார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் எண்ணத்தில், பாபா, (கிரிக்கெட் புகழ் வாய்ந்த) வஜிப்தரை காவல்துறை மேலதிகாரியிடம் உண்மையை எடுத்துக் கூறி உதவி கோருமாறு அனுப்பி வைத்தார். தாடி, மீசையுடன் வஜிப்தரின் தோற்றம், அவர் கிரிக்கெட் வீரர் என்பதும், அவர் எடுத்துக் கூறிய உண்மைகளும் காவல்துறை அதிகாரிக்கு நம்பிக்கை அளிக்கவில்லை.

உடனே, மெஹர் பாபா, அனைவரையும் அழைத்துப் பேசினார்: **"இங்கிருந்து நாம் ரயிலில் பயணம் செய்து, பரூச்** (BHARUCH) **நகரம் சென்று, அதற்குப் பிறகு, நமது பாதயாத்திரையைத் தொடரலாம். பெண்டு, மாஸாஜி, வஜிப்தர் மூவரையும் ரயிலில் மும்பைக்கு அனுப்பி வைக்கலாம்."** அனைவரும் அதற்கு ஒப்புதலளித்தனர். பாபாவும் மண்டலியும் ஒரே தூரம் பயணம் செய்திருந்தும், மண்டலி இருவேளை திட ஆகாரம் உண்ட பின்னரும், பாபா கடந்த பல மாதங்களாக உணவின்றி உபவாசமிருந்தும், பாபாவின் உடல் எந்த பாதிப்பும் இல்லாமல் தெம்புடன் காணப்பட்டது.

கருணை நிறைந்த கடவுள் அவர்களை
உண்ணவும், அருந்தவும் அனுமதித்தார்.
இருந்தும், பாதை எவ்வளவு இரக்கமற்றது
என்பதைக் காண்பித்தார்.
மாதக்கணக்கில் உண்ணாமல், கடவுளின் பாதையில்
அவர்களை வாழவைப்பது கடவுளின் கருணையே
என்பதையும் அவர் புரியவைத்தார்.

ஜூலை 3 அன்று மெஹர் பாபா மண்டலியுடன் பரூச் வந்து, ஜாம்ஷெட் தோட்டம் அருகிலிருந்த பார்சி தர்மசாலையில் தங்கினர். இங்கும் முஸ்லிம் மண்டலி ராம்ஜூ, பார்சோப் இருவரும் பாபாவின் ஊழியர்கள் என்று கூறி தங்க முடிந்தது.

அருகிலிருந்த நர்மதா நதியில் அனைவரும் நீராடி, தத்தமது துணிமணிகளைத் துவைத்து, சுத்தம் செய்தனர்.

தர்மசாலையில், உரையாடலின் போது, அங்குத் தங்கியிருந்த சில சுயநீதிமான்கள், மெஹர் பாபாவுடன் இந்து மற்றும் முஸ்லிம்களும் இருந்ததை அறியாமல், ஸொராஸ்டிரியர்களைப் பற்றி பெருமையாகவும், இந்து, முஸ்லிம்களை பற்றி அநாகரீகமான முறையிலும் வசைபாடிக் கொண்டிருந்தனர். அதில் மறைந்திருக்கும் அறிவுபூர்வமான நியாய அநியாயங்களை, மண்டலி எள்ளி நகையாடினர்.

நர்மதா நதியைக் கடக்க அனைவரும் படகில் பயணம் செய்த வேளையில், நதியில் வெள்ளோட்டம் வெகு குறைவாக இருந்ததால், படகு மணல் மேடுகளில் சிக்கி, பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி, அதற்குப் பிறகு கரை கடந்து, நடந்து மாலையில் ‘அங்க்லேஷ்வர்’ சென்றடைந்து, ரயில் நிலையத்தில் ஓய்வெடுத்தனர்; பாபா, இப்போது மண்டலியை வேண்டிய அளவு நீர் அருந்த அனுமதித்தார். ஒவ்வொரு மண்டலியும் ஒரு மணி நேரம் வீதம் இரவு காவலராகப் பணிபுரிந்தனர். அதிகாலையில் புறப்பட்டு, சூரத் (SURAT) நகரை வந்தடைந்து தர்மசாலையில் தங்கினர். எதிர்பாராமல் அங்கே நல்ல உணவு வழங்கப்பட்டது; அன்று மண்டலி மூன்று வேளை உணவு உண்டு களித்தனர்; பாபாவும் கண்டுகொள்ளவில்லை. ஜூலை 6ஆம் நாள், நவ்ஸாரிக்கு (NAVSARI) வருமாறு பாபா, ருஸ்தத்திற்குத் தகவல் அனுப்பியிருந்தார்.

சூரத்திலிருந்து சுமைகளை மறுபடியும் முதுகில் சுமந்துகொண்டு அனைவரும், அடுத்த நாள், நவ்ஸாரியை நோக்கி நடந்தனர். 24 மைல் தூரம் நடந்த பின்னரும் களைப்பாக இல்லாமல், மகிழ்ச்சியாகவும், உற்சாகத்துடனும் காணப்பட்டனர். நவ்ஸாரி சென்றடைந்தபோது, பாபாவின் உடல்நிலை சீரில்லாமல் இருந்தது.

தர்மசாலையில், முன்பின் தெரியாத பார்சி நபர் ஒருவர், மெஹர் பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டு, தரிசனத்திற்காக வந்தார்; பாபா களைப்பில் ஓய்வெடுப்பதாகக் கூறவும், அவர் பிடிவாதமாக இருந்ததை பாபாவிற்குத் தெரியப்படுத்தினர். பாபா, உடனே குஸ்தாஜியை அனுப்பி, மெஹர் பாபாவைப் போல நடிக்கச் சொன்னார். வந்தவரும், தரிசனம் செய்துவிட்டு மகிழ்ச்சியுடன் சென்றார். அசாதாரணமான இந்த சம்பவம், குஸ்தாஜி, சமீபத்தில் கண்ட கனவு அப்படியே பலித்ததை எண்ணி அகமகிழ்ந்தார். என்னே கடவுளின் திருவிளையாடல்!

அவ்வேளையில், நவ்ஸாரியில் சிலர், திருடர்கள் மற்றும் கொள்ளைக்காரர்கள் தர்மசாலையில் வந்து தங்கியிருப்பதாகவும், பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கும்படியும் வதந்தியைப் பரப்பி வந்தனர். இது, மெஹர் பாபாவும் மண்டலியும் குற்றவாளிகள் என்பதைச் சுட்டிக்காட்டியது. அஹமதுநகரிலிருந்து வந்த ருஸ்தத்தை, பாபா உடனடியாக ஸொராப்ஜி தேசாயிடம் அனுப்பி வைத்தார். ஸொராப்ஜி, குஜராத்தில் புகழ் வாய்ந்த ஓர் இலக்கிய பண்டிதர்; மெஹர் பாபா அனுப்பிவைத்த சத்குரு உபாஸனி

மஹாராஜின் வாழ்க்கைவரலாற்று புத்தகத்தைத் திருத்தம் செய்து கொண்டிருந்தார்.

ருஸ்தம் சென்றதும், பல காவல்துறை அதிகாரிகள் அங்கு வந்து மண்டலியிடம் கேள்விமேல் கேள்வி கேட்டு, பதில்களைப் பதிவு செய்தனர். காவல்துறை அதிகாரிகள் ஆணவத்தில் முரட்டுத்தனமாக நடந்து கொண்டாலும், மண்டலி அடக்கத்துடன் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளித்தனர். ஆனால் அவர்கள் அணிந்திருந்த உடை அதிகாரிகளிடையே ஐயப்பாட்டை ஏற்படுத்தியது.

அதிகாரிகளில் ஒருவர் துப்பறியும் நிபுணர், மண்டலியை மிரட்டி, வற்புறுத்தி, மரியாதையற்ற முறையில் கேள்விகள் எழுப்ப, பாபா, ராம்ஜுவிடம் கை சைகை மூலமாக அதே தொனியில் பதிலளிக்குமாறு கட்டளையிட்டார். கோபமடைந்த அதிகாரி அனைவரையும் காவலில் வைத்து விடுவதாக எச்சரித்தார்.

சற்று நேரத்தில் ருஸ்தம் திரும்பி வந்தார்; இவ்வளவு நன்றாக உடையணிந்து, ஒரு பெரிய செல்வந்தர் போன்ற தோற்றமளித்த ருஸ்தம் அதிகாரியின் கேள்விகளுக்கு பதிலளித்த விதம், அவரைத் திக்குமுக்காட வைத்தது. அப்போது, ஸொராப்ஜியும் அங்கு வந்து நடந்ததைப் பார்த்தார். அவரை உடனே, நவ்ஸாரியில் வாழும் புகழ்பெற்ற, பெருமதிப்பிற்குரிய எழுத்தாளர் என்பதை, காவல்துறை அதிகாரிகள் அடையாளம் கண்டுகொண்டனர். ஸொராப்ஜி உடனே அதிகாரத் தோரணையில் அவர்களிடம், “இவர்கள் மெஹர் பாபாவின் சீடர்கள்; மேலும், நான் இங்கு அவருடைய தரிசனத்திற்காக வந்துள்ளேன். அவர்களை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?” என்றார்.

காவல்துறை அதிகாரிக்குத் தர்மசங்கடமான நிலை; அனைவரிடமும் மன்னிப்புக் கோரினார். இத்தகைய புகழ்பெற்ற எழுத்தாளர் ஸொராப்ஜியே மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக வந்துள்ளார் என்றால், மெஹர் பாபா எவ்வளவு உயர்ந்த மனிதராக இருக்கவேண்டும் என்பதை நன்கு புரிந்துகொண்டார்.

மெஹர் பாபா, ஸொராப்ஜி தேசாயை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்தார்; விரைவில் இவர் பாபாவின் வட்ட அமைப்பில் ஒரு முக்கியமான பிரதிநிதியாக மாறுவார் என்பதை அனைவரும் உணர்ந்தனர்.

முதன்முறையாக மெஹர் பாபாவை நேரடியாக சந்தித்த மகிழ்ச்சியில் ஸொராப்ஜி ஆனந்த கண்ணீர் வடித்தார்; இந்த சந்திப்புக்காக வெகுகாலம் காத்திருந்தார் ஸொராப்ஜி; பாபாவை, தமது இல்லத்திற்கு அழைத்தார்; பாபாவும் வருவதாகக் கூறினார்.

ஜூலை 6ஆம் நாள், குஸ்தாஜி, ருஸ்தம் இருவருடன் மெஹர் பாபா, ஸொராப்ஜியின் இல்லத்திற்கு விஜயம் செய்தார். அதற்கு முந்தைய நாளன்று தர்மசாலைக்குச் செல்லும் வழியில், இந்த வீட்டைக் கடந்து சென்றபோது, ஸொராப்ஜியின் இளம் மருமகள்கள், இவர்களைக் கண்டதும், அரபு நாட்டு கடத்தல்காரர்கள் என எண்ணி பயந்து ஒதுங்கினர். பாபா அந்த இளம் பெண்களைப் பார்த்துப் புன்னகைத்தது அவர்களை மேலும் அச்சத்தில்

ஆழ்த்தியது. அவர்களில் ஓர் இளம் பெண் பபாய் (BAPAI) தனது தங்கையிடம் பயப்படவேண்டாம்; மெஹர் பாபாவின் பெயரைச் சொன்னாலே அந்த துஷ்டன் ஒன்றும் செய்யாமல் சென்று விடுவான் என்று தைரியமளித்தார்.

ஸொராப்ஜி குடும்பத்தில் ஒவ்வொருவரும் மெஹர் பாபாவின் பெயரைக் கேட்டு, அவரைப் பற்றி அறிந்து, உள்ளளவில் மிகுந்த பக்தியுடன் இருந்தனர்; ஆனால் எவரும் பாபாவை நேரடியாக சந்தித்ததில்லை என்பதால் பபாய் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. மெஹர் பாபா அவர்கள் வீட்டிற்கு வந்தபோதுதான் அந்தப் புதிய அரபு கடத்தல்காரர் என்று எண்ணியது மெஹர் பாபாதான் என்பதைப் புரிந்துகொண்டனர்.

மெஹர் பாபா, உண்மையிலே ஒரு பெயர் போன திருடன்; கடவுளை நேசிப்பவர்களின் இதயங்களைத் திருடுபவர்!

ஸொராப்ஜி தேசாய் ஓர் இரக்கமுள்ள, கனிவான மனிதர்; தனது குடும்பத்தில் மிகவும் அக்கறையுள்ளவர். விதவை சகோதரி, பய்மாய் (BAIMAI) கால் முறிவால் படுக்கையிலாகி, மறுபடியும் நடக்க வாய்ப்பில்லை என்பதைக் கண்டறிந்தும், தனது குடும்பத்தில் ஒருவராக கவனித்து வந்தார். மெஹர் பாபாவைப் பார்த்ததும் அதிசயம் ஒன்று நிகழ்ந்தது. திடீரென, பய்மாய், கண்களில் நீர் ததும்ப, பல வருடங்களில் முதல்முறையாகப் படுக்கையிலிருந்து எழுந்து தனது கால்களில் நின்றார்! அந்நாளிலிருந்து மெதுவாக நடக்கவும் தொடங்கினார்.

ஒரு கட்டத்தில், வீட்டுச் சுவரை அலங்கரித்த ஸொராஸ்டரின் சித்திரத்தைப் பார்த்து மெஹர் பாபா, "**ஸொராஸ்டர் இவ்வண்ணமே தோற்றமளித்தார். நானே உங்கள் தீர்க்கதரிசி ஸொராஸ்டர்**!" என்று பிரகடனம் செய்தார்.

மெஹர் பாபாவின் இனிமையான குரல் அவருடைய கடலாகிய கடவுள் தன்மையிலிருந்து வெளிப்பட்டது; மேலும், இறையின்பம், ஸொராப்ஜி குடும்பத்தினர் உள்ளங்களில் வெடித்தெழுந்து, அன்பின் அலைகளை உருவாக்கி அனைவரையும் அள்ளியணைத்தது போன்ற ஓர் உணர்வு. இல்லமெங்கும் பரவிய இறை ஒளியில் அனைவரும் நீராடுவது போன்ற ஒரு சலனம். ஒவ்வொருவரும் மெஹர் பாபாவின் இறை தன்மையை அனுபவபூர்வமாக உணர்ந்து, வெளியுலகை மறந்து, எங்கும் நிறைந்திருந்த அவருடைய ஆளுமையின் அம்சங்களில் பிரமித்துப் போயினர். மெஹர் பாபா ஒவ்வொரு அறையிலும் அவருடைய பாதங்களைப் பதித்து, ஸொராப்ஜியின் இல்லத்தைப் புனிதப்படுத்தினார். பாபாவைச் சூழ்ந்திருந்த ஆனந்தமான சூழ்நிலை அனைவரையும் கவர்ந்தது; அப்போது அங்கிருந்த ஓர் ஆச்சாரமான ஸொராஸ்டிரிய மத குரு, மெஹர் பாபாவின் இறை போதையில், தீவிர ஆர்வமுள்ள ஒரு பக்தனாக மாறினார்.

ஸொராப்ஜி, மெஹர் பாபாவின் இறையன்பின் சுடராகத் திகழ்ந்தார்; மேலும், அவர் இது 'ஸொராஸ்டர்' ஏற்றிய ஜோதி என்பதையும் கண்டு கொண்டார்.

மெஹர் பாபா, ஸொராப்ஜி குடும்பத்தினர் அனைவரின் இதயங்களையும் திருடிவிட்டார். அனைவரையும் சந்தித்த பின்பு தர்மசாலைக்குத் திரும்பி வந்து, தன்னுடைய திட்டங்களை மாற்றி, அனைத்து மண்டலியையும் மறுபடியும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். மும்பை வரை நடைபயணம் செல்லும் திட்டத்தைக் கைவிட்டு, நாசிக் சென்று, அங்கு மூன்று மாதங்கள் தங்கயிருப்பதாகத் தெரிவித்தார். அதன்படி, குஸ்தாஜியின் உறவினருக்குச் சொந்தமான வீட்டை உபயோகிக்க அனுமதி கோருமாறு, அவரை ருஸ்தத்துடன் அங்கு அனுப்பி வைத்தார் பாபா. அதற்குப் பின்னர், அனைவரும் நவ்ஸாரியிலிருந்து ரயில் வழியாக நாசிக் வந்து சேர்ந்தனர். ஸொராப்ஜி குடும்பத்தினர் ரயில் நிலையம் வந்து மெஹர் பாபா மற்றும் மண்டலியை வழியனுப்பி வைத்தனர்.

ஒளியிலிருந்து வந்த ஒருவர் ஒளியே ஆவார்!
விட்டில்பூச்சிகளை, 'ஒளியானவர்' விட்டு மறைந்தார்.
ஒளியை நோக்கி வந்த அவர்கள் - விட்டில்பூச்சியென
அறிந்து கொண்டதும் - ஒளி தன்வழிச் சென்றது!
ஆனால், விட்டில்பூச்சிகளுக்கு ஒளியில்லாத
நிலை எப்பேர் பட்டது?
இப்போது, வாழ்க்கை, நித்திய நிரந்தர
ஒளியைத் தேடும் பணியாகி விட்டது!

ஜூலை 7 அன்று மெஹர் பாபா மண்டலியுடன் நாசிக் வந்து, 'நோமன்பாய் (NOMANBHAI) பங்களா'வில் தங்கினார் - நல்ல காற்றோட்டம் நிறைந்த விசாலமான அறைகள். சையத் ஸாஹேப் சாதம், பருப்பு மற்றும் பசலைக்கீரை தயார் செய்து எடுத்து வந்தார்; மண்டலியின் உணவில் பாபா கண்டிப்பாக இருந்ததால், சாதம், பருப்பு மட்டுமே அனுமதிக்கப்பட்டது.

ஒரு சில காரணங்களுக்காக, பாபா நாசிக்கில் தங்க விரும்பவில்லை. மெஹராபாத்திற்கே திரும்பிச் செல்லலாம் என முடிவெடுத்து, ஜூலை 9ஆம் நாள் அங்கிருந்து புறப்பட்டு அஹமதுநகர் வந்து, கடைசி ஐந்துமைல் தூரத்திலமைந்த தங்கள் இருப்பிடத்திற்கு (மெஹராபாத், அரன்காவ்ம்) வந்து சேர்ந்தனர்.

ஜூலை 9 ஒரு மங்களகரமான நாள்; மெஹர் பாபா, கடந்த ஆறு மாதங்களாகக் கடைப்பிடித்த உபவாசம் அன்று நிறைவடைந்து மண்டலியுடன் இரவு உணவில் பங்கெடுத்தார்.

அடுத்த நாள், தபால் அலுவலக கட்டிடத்தில் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, குஷ்ரு குவாட்டர்ஸில் இருந்த அனைத்து பொருட்களும் கொண்டுவரப்பட்டன. அதற்கிடையே, மதிய உணவு தயார் செய்து, பாபா முதலில் சாதம்-பருப்பு இரண்டையும் சுவைத்த பின்பு, தனது கைகளால் அனைவருக்கும் வழங்கினார்.

மதிய வேளையில், பாபா, தினமும் செய்ய வேண்டிய நடவடிக்கைகளைத் திட்டமிட்டு, ஒவ்வொருவரின் பணியையும் எடுத்துரைத்து -

காலையில் எழும்பும் நேரத்திலிருந்து இரவில் தூங்குவது வரை - ஒரு குறிப்பிட்ட நேரம் பொழுதுபோக்கு மற்றும் ஆன்மீக விளங்கங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டது. இவ்வாறு, புதிய அட்டவணை வரையப்பட்டு அனைவரின் கவனத்திற்காக சுவற்றில் தொங்க விடப்பட்டது.

ஸூனாமாசி, மகள் கோர்ஷெத் இருவரையும் அஹமதாபாத்திலிருந்து அஹமதுநகர் சென்று, அவர் அழைப்பது வரை அங்கேயே இருக்குமாறு மெஹர் பாபா, கட்டளையிட்டிருந்தார். பாபாவின் நடைபயணத்தின் போது, ஸூனாமாசியின் கணவர் மாஸாஜி, கடுமையான நோயால் மும்பை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஸூனாமாசியை அழைத்து மூன்று முறை அவசர தொலைத்தந்தி அனுப்பிய பின்னரும், அவர் பாபாவின் கட்டளைகளை மீறக்கூடாது என்ற ஒரே காரணத்திற்காக, கணவரைப் பார்க்க மும்பைக்குச் செல்லவில்லை.

மெஹர் பாபா, மெஹராபாத் திரும்பி வந்ததும், ஸூனாமாசி, கோர்ஷெத் இருவரையும் அங்கு அழைத்தார். மாஸாஜியின் உடல்நிலையைப் பற்றிய விபரங்களை அறிந்ததும், பாபா, “**நீங்கள் ஏன் மும்பைக்குச் செல்லவில்லை?**” என்று ஸூனாமாசியிடம் கேட்டபோது, அவர், “பாபா, உங்கள் கட்டளைகளை நான் எப்படி மீறமுடியும்?” என்று கேட்டார்.

பாபா உடனே, “**மாஸாஜி உயிரைத் துறந்திருந்தால் பின்னர் என்னவாகும்?**” என்றார்.

“அப்படியானால் என்ன?” ஸூனாமாசி பதிலளித்தார், “ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வேளையில் போக வேண்டியதுதான்!”

“**உங்கள் உறவினர்கள், இவ்விதமான மனப்பான்மையைப் பற்றி என்ன நினைப்பார்கள்?**” என்று பாபா கேட்டதற்கு,

“யார் என்ன நினைக்கிறார் என்பதை நினைத்து நான் ஏன் கவலைப்பட வேண்டும்? நான் உங்கள் பாதங்களில் இருக்கும் வேளையில் உலகத்தோடு எனக்கு என்ன வேண்டும்?” ஸூனாமாசி பதிலளித்தார்.

மெஹர் பாபா புன்னகைத்துக் கொண்டே அவரிடம், “**என்னுடைய கட்டளைகளை நீங்கள் மீறியிருந்தால், மாஸாஜி உயிரிழந்திருப்பார்; ஆனால் இப்போது ஒன்றும் ஆகாது! எனது கட்டளைகளுக்கு இணங்க நடந்து கொண்டதால், நீங்கள் அவரைக் காப்பாற்றிவிட்டீர்கள்**” என்று கூறி, இருவரையும் உடனே மும்பைக்கு அனுப்பி வைத்தார்; மும்பை வந்த நேரத்திலிருந்து மாஸாஜியின் உடல்நிலை படிப்படியாகச் சீரடைந்தது.

1923, ஜூலை 11, தபால் அலுவலக கட்டிடத்தில் பழுது பார்க்கும் பணி தொடங்கியது; ஆனால் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, மெஹர் பாபா அனைத்து மண்டலியையும் அழைத்துக் கூறினார்: “**இங்கே இருந்து இத்தகைய வேலைகளில் ஈடுபடுவதை விட, நாம் மும்பைக்குச் செல்வது நல்லது. மும்பையில் ஏதேனும் வேலையில் மும்முரமாக இருப்பது அவ்வளவு**

**சிரமமல்ல. மேலும், மஹாராஜின் வரலாற்றுப் பிரதிகளை விநியோகிப்பதில் நான் வஜிப்தருக்கு வழிகாட்டி உதவமுடியும்.**

**"ஆனால், நீங்கள் இரண்டு விஷயங்களை நினைவில் கொள்ளவேண்டும். மும்பையில் நாம் தங்கியிருக்கும் இடம், மன்ஸில்-எ-மீமுக்குப் பின்னால் அமைந்த அலுவலகம், அது மிகவும் குறுகிய இடம்; நீங்கள் அனைவரும் அங்கேயே தங்கியிருக்க வேண்டிய கட்டாயம்; ஏனெனில், பெரியதோர் இடத்தை வாடகைக்கு எடுக்கும் அளவுக்கு நம்மிடம் பணமில்லை.**

**"இரண்டாவதாக, ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வேலையைத் தேடிக்கொள்ள வேண்டும்; ஆனால், அந்த வேலை ஒரு சில மாதங்களுக்கு மட்டுமே! எனது பணிகளில் நான் தனியாக ஈடுபட, நீங்கள் வெளியே சென்று வேலை செய்ய வேண்டியது அவசியம்.**

**"வேலை தேடுவதில் எந்தத் தவறுமில்லை; ஒவ்வொருவரும் அவர் விரும்பும் வேலையைச் செய்ய முடியும், ஆனால், வேலை செய்ய வேண்டியது அவசியம்; மேலும் மும்பை வந்தடைந்த சில தினங்களுக்குள் வேலையைத் தேடியாக வேண்டும். ஒருவருக்கு அவர் விரும்பிய வேலை கிடைக்காவிடில், கூலி வேலையைக் கூட செய்யலாம் - ஆனால் வேலை செய்ய வேண்டிய கட்டாயம்! இந்த நிபந்தனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், நான் மெஹராபாத்திலிருந்து உடனடியாக மும்பைக்குப் புறப்படத் தயாராக உள்ளேன்."**

இவ்விஷயத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் வேளையில், பாபா சில மண்டலியை குஷ்ரு குவாட்டர்ஸுக்கு அனுப்பி அவருடைய உடைமைகளை எடுத்து வரக் கூறினார்; அதைத் தொடர்ந்து மேலும், "**இன்று நான் கிச்சடி** (அரிசியும், பருப்பும் சேர்த்து தயார் செய்த உணவு) **சாப்பிடுவேன்; நாளை, தண்ணீர் தவிர வேறெதுவும் உட்கொள்ளப் போவதில்லை; அதற்குப் பிறகு, கா்பி மட்டுமே அருந்துவேன்**" என்றார்.

ஜூலை 12 காலையில் மண்டலியிடம் என்ன முடிவெடுத்தீர்கள் என பாபா வினவினார். தபால் அலுவலம் அருகில் அமைந்திருந்த ஒரு பாழடைந்த மண் குடிசையில், பெஹராம்ஜியின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. மெஹர் பாபாவின் நிபந்தனைகள் மற்றும் திட்டங்களைக் கலந்து ஆலோசனை செய்த பின்னர், அனைவரும் மும்பைக்குச் செல்ல முடிவெடுக்கப்பட்டது. இதை, பாபாவிற்குத் தெரிவித்ததும் அவர் மும்பைக்குச் செல்வதில் அவசரமாக இருப்பதாகக் கூறினார்.

அவரவர் பெட்டி படுக்கைகளை மாட்டு வண்டியில் ரயில் நிலையத்திற்கு அனுப்பிவிட்டு, மெஹர் பாபா மண்டலியுடன் நடந்து சென்றார்.

ஜூலை 13 அன்று மெஹர் பாபா மும்பை வந்தபோது மன்ஸில்-எ-மீமில் பழுதுபார்க்கும் வேலை நடந்துகொண்டிருந்தது; சுற்றிலும் ஒரே குப்பைக் கூளம்; பருவமழை காலம் வேறு! தங்குமிடத்தில் மழைநீர் வடிந்து ஈரமாகக் காணப்பட்டது. மேசை நாற்காலிகளைச் சீர்செய்து ஈரமில்லாத இடம் பார்த்து

மண்டலி பெட்டி படுக்கைகளை வைத்தனர். முதல்முறையாக மன்ஸில்-எ-மீமுக்கு வந்தபோது பங்களாவில் விசாலமான அறைகளில் தங்கமுடிந்தது; ஆனால் இப்போது அதே பங்களாவுக்கு பின்னால் அமைந்த சிறிய அறையில் அனைவரும் நெருக்கமாக அடைக்கப்பட்டனர்.

பைதூல், அடுத்த நாள் உணவகம் ஒன்றில் வேலையில் இணைந்தார்; அதைத் தொடர்ந்து ஒவ்வொருவரும் தத்தமது வேலையைத் தேடிக்கொண்டனர். மண்டலி காலையில் வேலைக்குச் சென்று மாலை வேளையில் திரும்பி வந்தனர்; குஸ்தாஜி, பெஹ்ராம்ஜி இருவரும் 24 மணி நேரம் பாபாவுடனிருந்து பலவிதமான பணிகளில் ஈடுபட்டனர்.

பூனா, மும்பை மற்றும் அஹமதுநகரிலிருந்து மண்டலி அவ்வப்போது வந்து சென்றனர்; ஆதியை, பாபா, குல்மாயுன் இடருக்க அனுப்பி வைக்கவே, அவர் அவ்வப்போது மும்பை வந்து சென்றார்.

ஒரு மாதத்திற்குப் பிறகு மெஹர் பாபா மண்டலியுடன், லோனவாலாவில் (LONAVLA) வாழ்ந்த ராம்ஜூ, டாக்டர் கனி இல்லங்களுக்கு விஜயம் செய்தார். ஒரு வாரம் அந்த அருமையான மலைகள் சூழ்ந்த கோடைவாசஸ்தலத்தில் ஓய்வெடுத்து, அனைவரும் மகிழ்ச்சிகரமாக இருந்தனர். பாபா, இந்நேரத்தில் பலவித ஆன்மீக சொற்பொழிவுகளை வழங்கினார்; மண்டலியுடன் சீட்டு விளையாடி, இசைக்கருவிகளில் பாடல்களைக் கேட்டு அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தனர். உயரமான கண்டாலா நீர்வீழ்ச்சிகள் (KHANDALA WATERFALLS), வால்வன் (WALVAN) மற்றும் புஷி (BUSHI) ஏரிகளைப் பார்வையிட்டனர். இதமான காலநிலை, பாபாவின் நகைச்சுவையான பேச்சுக்கள் மண்டலியை உற்சாகப்படுத்தின. ஆகஸ்ட் 21 அன்று பாபா, ராம்ஜூ, டாக்டர் கனி இல்லங்களுக்குச் சென்று அனைவரையும் ஆசீர்வதித்தார்.

1923 ஆகஸ்ட் 23 அன்று மெஹர் பாபா மண்டலியுடன் பூனா திரும்பி வந்து, அப்துல்லா ஜாஃபர் (ABDULLA JAFFER) இல்லத்தில் (இம்முறை சதாஷிவ் வீட்டில் தங்காமல்) தங்கியிருந்தார். உணவுக்கான ஏற்பாடுகளை சதாஷிவிடம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அவ்வேளையில், பாபா தேநீர் அருந்துவதோடு சிறிதளவு காய்கறியும் உட்கொண்டார். பாபாவும், மண்டலியும் சதாஷிவ் இல்லத்தில் தங்காத வருத்தத்தில் அவர் உணவு தயார் செய்ய இயலாது என்பதைத் தெரிவித்தார்.

பூனா வந்தடைந்த அந்த நாள் முகரத்தின் ஒன்பதாவது நாள் (முஹமத்தின் பேரன் அல்-ஹுசைன் என்பவரின் வீர மரணத்தை ஒட்டி அனுஷ்டிக்கப்பட்ட நினைவு நாள்); மெஹர் பாபா தஸியா (TAZIA) ஊர்வலத்தைப் பார்வையிடச் சென்றார். குறிப்பாக, அன்று தவுலத்மாய், மகள் மெஹரா, ஸூனாமாசி, கோர்ஷெத் அவர்களையும் அழைத்திருந்தார்.

அடுத்த நாள் காலையில் பாபா, சதாஷிவ், மற்றும் கஸ்பாபேட் மண்டலியை அழைத்துக் கண்டித்தார்: **“என்னுடைய தேவைகளை நீங்கள்**

**கண்டு கொள்வதில்லை அல்லது என்னை நீங்கள் மகிழ்விப்பதில்லை. நான் அப்துல்லா ஜாஃபர் இல்லத்தில் தங்க முடிவெடுத்தால் அது எனது விருப்பத்திற்கு உகந்தது என்று நீங்கள் நினைக்க வேண்டும். எனது விருப்பத்திற்கு மாறாக நான் உங்கள் வீட்டில் சந்தோஷமாக இல்லையென்றால், நீங்கள் அதை விரும்புவீர்களா?**

“**எப்பொழுதும் என்னை மகிழ்ச்சியாக இருக்கச் செய்யுங்கள்; உங்களை அல்ல! அனைத்தும் அதில்தான் உள்ளது. உயர்ந்த, உன்னதமான பாசம் என்பது, நீங்கள் என்னுடைய மகிழ்ச்சியில் கவனமாக இருப்பதுதான். என்னை மகிழச் செய்யுங்கள் - அதை மட்டுமே நான் கேட்கிறேன்.**”

அத்துடன் நிலைமை சீரடைந்து பழைய நிலைக்கு வந்தது. அன்று மாலை பாபா, அர்ஜுன் ஸுப்பேக்கரின் இல்லத்திற்கு விஜயம் செய்தார்; சதாஷிவ், அனைவருக்கும் மாலை உணவை தயார் செய்தார். பூனா, கஸ்பாபேட் மண்டலி பாபாவிடம் மன்னிப்புக் கோரி, வேண்டிய அனைத்தையும் செய்ய விரும்புவதாக உறுதி கூறினர்.

ஆகஸ்ட் 27ஆம் தேதி, மெஹர் பாபா ஒரு பெரிய குழுவுடன், பூனாவிலிருந்து ஏழு மைல் தொலைவிலமைந்த ஸாஸ்வத் (SASWAD) என்ற கிராமத்திற்கு உல்லாசப்பயணம் சென்றார். கிட்டிபுள் போன்ற பல விளையாட்டுகளை விளையாடினர்; அதன் பின்னர் அனைவரையும் அழைத்து இவ்வாறு கூறினார்: “**உங்கள் அதிர்ஷ்டத்திற்கு நன்றி கூறுங்கள்; அதனால், நான் உங்களோடு விளையாடுகிறேன். இதை நீங்கள் பின்னர் உணர்வீர்கள். ஒரு சிறப்புமிக்க, வித்தியாசமான சகவாசத்தை, தோழமையை நான் உங்களுக்கு வழங்குகிறேன்.**”

கடைசியாக மெஹர் பாபா தீவிரமான தொனியில், “**யார் ஒருவர் சத்குருவின் சகவாசத்தில் இருக்கிறாரோ அவர் அனைத்தையும் அடையப் பெறுகிறார். சத்குருவின் சகவாசத்திற்கு ஈடு இணையானது வேறு எதுவுமில்லை**” என்று கூறினார்.

பூனா திரும்பி வந்த அடுத்த நாள், மெஹர் பாபா மண்டலியுடன் ‘பட்லர் மொஹல்லா’வில் (BUTTLER MOHALLA) அமைந்த தனது குடும்ப இல்லத்திற்கு, பெற்றோர், சகோதரர்கள் மற்றும் தங்கையை சந்திக்கச் சென்றார். தந்தையின் தொழில், தாயாரின் உடல்நிலை பற்றி விசாரித்தார்; தன்னுடைய ஆன்மீக விதியை எடுத்துரைத்து, தாயாருக்கு ஆறுதல் கூறினார். ஷிரீன்மாயின் கனிவான தாய் பாசம் தெள்ளத்தெளிவாக வெளிப்பட்டது; அதே வேளையில் பாபாவின் பாசம் மிகவும் மென்மையும் மேன்மையுமானது.

இயல்பாகவே ஷிரீன்மாய் அறிவார்ந்தவராகவும், உலகியல் நடைமுறை அறிந்தவராகவும் இருந்தாலும், அவருக்குப் பிரியமான மகன் மேர்வான், அவருக்கே சொந்தம் என்பதை மூடிமறைக்காமல் தனது சொல்லிலும், செயலிலும் கௌரவத்துடன் வெளிப்படுத்தினார். தூக்கத்திலும் ஷிரீன் ஒரு மஹாராணி என்று ஒரு சமயத்தில் கூறப்பட்டது.

பெயரே அவருடைய இயல்பு தன்மையைச் சித்தரித்தது; ஷிரீன்மாயின் உள்ளார்ந்த இனிமையும், உள்ளுணர்வால் அறியும் தன்மையும் தனித்துவம் வாய்ந்தது. அவருடைய இனிமையான குணம் அல்லது ஆழ்ந்த அப்பாவித்தனம் இவற்றின் எடுத்துக்காட்டாக, கூறப்போனால் அவர் ஒருபோதும் பிறரை சபித்து அல்லது தீங்கு விளைவிக்கும் எண்ணத்தில் பேசியதில்லை. தனது மகன் இறை நிலையை அடையும் தருவாயில் அவர் அடைந்த இன்னல்களுக்கு எல்லையேயில்லை.

இறைவனுக்கு ஒரு மனித ரூபம் தருவதற்கு, உருவமில்லா இறைவன் ஓர் அழகு ராணியை தேர்ந்தெடுத்தார்! ஷிரீன்மாயின் இயல்பான பெருந்தன்மை, இனிமையான குணம், அவரை உலகிலுள்ள அனைத்து பெண்களிலும் தனி ஒருவராக எடுத்துக்காட்டி, அவதார புருஷனை ஈன்றெடுக்கும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தது.

அப்போது, தங்கை மணி, மெஹர் பாபாவிற்கு மிகவும் தனித்துவமானவர்; ஐந்து வயது சிறுமி. தங்கையை அள்ளியணைத்து, முத்தமிட்டு தனது மடியில் அமர்த்தி, 'சிறப்பு கவனம்' கொடுக்க, மண்டலி அனைவரும் மணியின் படு சுட்டித்தனமான கேள்விகளுக்கு செவிசாய்த்து மகிழ்ந்தனர்.

பெஹராம்ஜியின் மாமா ஜம்பூவும் மெஹர் பாபாவை தரிசிக்க வந்திருந்தார்; அவர் வழக்கம் போல கருப்பு தொப்பியும், நீள் கோட்டும் அணிந்திருந்தார். திடீரென, பாபா வாய்விட்டுச் சிரித்து, "**பாருங்கள், ஜம்பூ எனக்கு எவ்வளவு சேவை புரிகிறார் என்று பாருங்கள்! அமைதியாக அந்த மூலையில் அமர்ந்து எவ்வளவு பெரிய சேவை செய்கிறார் தெரியுமா?**" என்றதும், அனைவரும் குழப்பத்தில் ஜம்பூவை பார்த்தனர். பாபா அதற்கு இவ்வாறு விளக்கமளித்தார்: "**ஜம்பூ கருப்பால் நிரம்பி இருப்பதை நீங்கள் பார்க்கவில்லையா? அவர் கருப்பு உடை அணிந்திருப்பதால், அனைத்து கொசுக்களும் என்னை நோக்கி வராமல், விருந்தாளியாக அவர் உயிரைக் குடிக்கின்றன. கொசுத் தொல்லையிலிருந்து அவர் என்னைக் காப்பாற்றுகிறார். அது ஒன்றும் சிறப்பற்ற செயல் அல்ல.**" பாபாவின் வேடிக்கையான பேச்சைக் கேட்டு அனைவரும் மனமார சிரித்தனர்.

அவதார புருஷரின் சீடர்கள் அனைவரும் திருத்தூதர்கள் போல! கடவுளின் வருகைக்கு ஆதாரமாக இருப்பவர்கள்!

அவர்களைச் சிரிக்கவும், அழவும் செய்து, உணவூட்டி, உபவாசம் இருக்கச் செய்து, சுகத்தோடு துக்கங்களையும் பகிர்ந்து, மாடி வீட்டில் மட்டுமல்லாமல் கூரைக் குடிலிலும் தங்க வைத்து, நல்ல உடைகள் அணிந்து அதேவேளை, துறவிபோலாகச் செய்து, உடன் விளையாடி அதே நேரம் உடல் வருந்த உழைக்கச் செய்து, நகைச்சுவையால் சிரிக்கவும், இறை நாமத்தால் பக்தியை வெளிப்படுத்தவும் வைத்து - இதுபோன்ற வழிகளில், எம்பெருமான்

அவனுடைய இறை போதையை அவர்களுக்கு அள்ளி வழங்கினான்; அவர்களின் இதயங்களைக் கோப்பையாக்கி அதில் மதுவை ஊற்றிக் கொடுத்தான்!

மதுவை அருந்தியவர்கள் மட்டுமே அறிவர் அதன் உண்மையான அர்த்தம் என்னவென்று! உலக சுகதுக்கங்களை அலட்சியம் செய்து எம்பெருமானை எவ்விதத்திலும் அகமகிழ வைப்பதுதான் அனைத்திலும் சிறந்தது என்று!

அன்றைய தினம், மெஹர் பாபா அனைத்து உறவினர்களையும் அவர் குடும்ப இல்லத்தில் சந்தித்தார். தங்கை மணிக்கு முத்தம் கொடுத்து விடைபெறும் போது தனது தந்தையிடம் பாசத்துடன் கூறினார்: "**போபோ, மணி மிகவும் அதிர்ஷ்டசாலி மட்டுமல்லாமல் பிரத்தியேகமானவள்**." பாபா அப்போது அங்கிருந்து புறப்பட்டு அப்துல்லா ஜா:ஃபர் இல்லத்திற்குச் சென்றார்.

ஆகஸ்ட் 30ஆம் நாள், மெஹர் பாபா மும்பைக்குச் செல்ல ஆயத்தமானார்; அதற்கு முன்பு, பாபா புறநகர் பகுதியிலமைந்த கிர்கீ (KIRKEE) கிராமத்தில், செங்கல் சூளையின் நிர்வாகி முலோக் (MULOG) என்பவரை சந்திக்க மண்டலியுடன் சென்றார். அவரை சந்தித்து, தொழிற்சாலையைப் பார்வையிட்ட பின்பு பாபா வெளியளவில் மகிழ்ச்சியுடன் தென்பட்டார். இவ்வேளையில், முலோக், மெஹர் பாபாவை வரவேற்று, அவருடைய தரிசனத்தைப் பெற்றுக் கொண்டதால், பாக்கியசாலி என்று சொல்லலாம்; ஆனால், சில ஆண்டுகளுக்கு முன்னர் அவர் பாபாவின் தந்தையார் ஷெரியார் அவர்களை, கூட்டு வியாபாரத்தில் ஏமாற்றி, பணம் திருடி மெஹர் பாபாவின் மகிழ்ச்சிக்குப் பங்கம் விளைவித்தார்.

மெஹர் பாபா மண்டலியுடன் மும்பைக்குத் திரும்பி வந்தபோது மன்ஸிலில் பெரிய மக்கள் கூட்டம் ஒன்று பாபாவின் தரிசனத்திற்காகக் காத்திருந்தது; பாபாவும் அதை அன்புடன் ஏற்றுக் கொண்டார்.

மன்ஸில்-எ-மீமின் பின்புற அலுவலகம் தங்குவதற்கு உகந்ததாக இல்லாததால், வேறு இடங்களைத் தேடும் பணியில் ஈடுபட்டு, கடைசியாக ஜி.ஐ.பி. ரெயில்வே அருகிலமைந்த வீட்டில் ஒரு புறம் பாபா மண்டலியுடனும், மறுபுறம் வஜிப்தர் தனது குடும்பத்துடனும் தங்கியிருந்தனர். மண்டலிக்கு வேண்டிய உணவு வஜிப்தர் வீட்டிலேயே தயார் செய்யப்பட்டது. இவ்வாறு, வஜிப்தர் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் புறநகர் மக்கள் பலர் மெஹர் பாபாவின் நெருங்கிய தொடர்பில் வந்தனர்.

அடுத்த ஆறு மாதங்களில் சத்குரு உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாறு, குஜராத்தி மொழியில் தயாரானதும், ஆயிரக்கணக்கான பிரதிகளை மஹாராஜின் பக்தர்கள் வாங்கி, பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலவசமாக வழங்கினர். இத்துடன், மெஹர் பாபாவின் வெளியீட்டு நிறுவனம் 'ஸர்கிள் &

கம்பெனி' (CIRCLE & COMPANY) கலைக்கப்பட்டது. இவ்வேளையில் பாபா மண்டலியுடன் ஸக்கோரிக்குச் செல்லத் திட்டமிட்டார்.

1923 அக்டோபர் முதல் வாரத்திலிருந்து மெஹர் பாபா தினமும் ஒருவேளை உணவும், தேநீரும் உட்கொள்ளத் தொடங்கினார். பாபா, மன்ஸில்-எ-மீமில் இருந்தபோது, சத்குரு உபாஸனி மஹாராஜ், அவருடைய சீடர் யஷ்வந்த் ராவிடம் தனது கவலையை தெரிவித்திருந்தார்: "மேர்வான் இப்போது உண்ணும் சிறிதளவு உணவைக் கூட கைவிட்டு விடுவான்." அதற்குப் பிறகு, மஹாராஜ் கூறியது போல் எட்டு ஒன்பது மாதங்களுக்கு மெஹர் பாபா உணவு உண்ணாமல் உபவாசம் மேற்கொண்டார்.

1923, அக்டோபர் 10ஆம் நாள், மெஹர் பாபா மண்டலியுடன் ஸக்கோரிக்குச் செல்லும் நடைபயணத்திற்கு முன்னர், அவர் சில மண்டலியுடன் பெர்ஸியா பயணத்திற்குத் தேவையான ஆவணங்களைத் தயார் செய்யுமாறு நவல் தலாட்டியிடம் கூறியிருந்தார். அக்டோபர் 19ஆம் தேதி நடைபயணம் தொடங்கியது; இந்த வருடத்தில் மூன்றாவது முறையாக மேற்கொள்ளும் பயணம் இது. இவ்வேளை அனைத்து சுமைகளும் ஒரு மாட்டுவண்டியில் ஏற்றிச் செல்லப்பட்டன.

இப்பயணத்தின் போது, மெஹர் பாபா, தினமும் ஒருவேளை கையளவு சாதம், பருப்பு, தேநீர் மட்டுமே உட்கொண்டார். சுமைகளைத் தோளில் சுமக்காமல் நடந்தாலும், மண்டலி மிகவும் சிரமப்பட்டனர்; குறிப்பாக குஸ்தாஜி கால்களில் ஏற்பட்ட கொப்புளங்களால் பெரிதும் அவதிப்பட்டார். விரும்பத்தகாத சூழ்நிலையில் குஸ்தாஜி கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பாபாவுடன் விவாதத்தில் ஈடுபட்டார்.

இவ்வேளையில், திடீரென மெஹர் பாபா மௌனமாக இருந்து யாரிடமும் உரையாடாமல், பெஹராம்ஜி வழியாக அனைவருக்கும் தகவல்களைத் தெரிவித்து வந்தார். மெஹர் பாபா, அவரிடம் மட்டுமே பேசுகிறார் என்ற எண்ணத்தில் பெஹராம்ஜி மகிழ்ச்சி கலந்த பெருமிதத்துடன், பிறரின் பார்வையில் அவர் பாபாவிற்குப் பிரியமான சீடர் என்ற உணர்வை ஏற்படுத்தினார்.

அக்டோபர் 26 அன்று அதிகாலையில் இகத்புரியிலிருந்து (IGATPURI) புறப்பட்டு, ஆறு மைல் நடந்து, கோட்டி (KHOTI) கிராமம் வந்தடைந்ததும், பாபா, பெஹராம்ஜியிடம் '**அருகிலிருந்த புகழ்பெற்ற பந்தர்தாரா ஏரியைப்** (BHANDARDARA LAKE) **பார்வையிடச் செல்லலாமா அல்லது நேரடியாக ஸக்கோரிக்குப் போய்விடலாமா**' என்று அனைவரிடமும் விசாரிக்குமாறு கூறினார். அந்தக் கண்கொள்ளா காட்சியை அனைவரும் காணத் துடித்தாலும், மெஹர் பாபாவின் அமைதியும், பேசாமலிருக்கும் இனம் புரியாத தண்டனையும் அவர்களை நிலைகுலைய வைத்ததால், ருஸ்தத்தின் துணிச்சலான பரிந்துரையை ஏற்று, மண்டலி அனைவரும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மறுத்தனர்.

**'அவர் பிற மண்டலியுடன் பேசாமலிருப்பது அவர்களின் உணர்வுகளை காயப்படுத்துவதற்காக அல்ல; வெளிப்படையாக அவர்**

**பேசுவதை அவர்கள் விரும்பாததே அதற்குக் காரணம்**' என்று பாபா பெஹ்ராம்ஜியிடம் விளக்கிக் கூறினார். அதைக் கேட்ட மண்டலி, மெஹர் பாபா அனைவரையும் கேலியும் கிண்டலும் செய்து, திட்டித் தீர்ப்பது, அவர் பேசாமல் இருப்பதை விட சாலச்சிறந்தது என்ற முடிவுக்கு வந்தனர்.

மண்டலியின் முடிவை பாபா கேள்விப்பட்டதும், பெஹ்ராம்ஜியிடம் இவ்வாறு கூறினார்: **“அப்படியானால், அவர்கள் உண்மையை உணர்ந்து கொண்டால், நான் அவர்களிடம் பேசுவேன்**.” இவ்வாறு பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்தது; அனைவரும் பந்தர்தாரா ஏரியைப் பார்வையிட்ட பின்பு ஸக்கோரிக்குச் செல்ல முடிவு செய்தனர்.

அன்பின் வழியில்தான் இறை நிலையை அடைய முடியும்; இதயத்தைத் துளைத்து, இறுதியில் உடைத்துத்தான் அன்பை எழுச்சியுறச் செய்யமுடியும். இறைவன் பிரியமானவர்; பிரியமான இறைவனை குருநாதரின் உருவில் காண்கிறோம். இறை நிலையை எய்துவது, முற்றிலும் குருநாதரின் கைகளில் உள்ளது; அவர்தான் இறையன்பையும், காதல் வலி எனும் ஏக்கத்தையும் ஏற்படுத்துபவர். இக்காதல் வலி ஒன்றுதான் பிரியமான இறைவனின் கவனத்தை ஈர்க்கும். எப்படியாயினும், பிரியமான இறைவனின் அலட்சியம் எனும் அம்பு இதயத்தில் பாய்ந்து, ஆழமான ரணத்தை உருவாக்கும்; மேலும், இதயத்தில் ஆழமாக ஊடுருவி, உடைந்து, சுக்குநூறாகும் தருவாயில், இறைவன் முழு அலட்சியத்தையும் அவனுடைய காதலனிடம் வெளிப்படுத்துவான். அவ்வேளையில், காதலன் மிகுந்த மனச்சோர்வடைந்து, விரக்தியில் பிரியமான இறைவனின் கவனத்தை ஈர்த்து, காயத்தில் உப்பைத் தூவி விட வேண்டுதல் விடுப்பான் - அதுவும், இறைவன் விரும்பினால் மட்டுமே! பிரியமான இறைவனின் வில்லிலிருந்து அம்புகள் தொடர்ந்து ஏவப்படுகின்றன. இதயத்தின் காயம் குணமடைந்து வரும் வேளையில் மறுபடியும் அடுத்த அம்பு பாயும் - இப்போது வெறும் காயத்தை உண்டுபண்ணுவது மட்டுமல்லாமல் உயிரைப் போக்கும் அளவுக்கு ரணத்தை உருவாக்கும்.”

இப்பயணத்தின் போது, மெஹர் பாபா மண்டலியிடம் பேசாமல் இருந்ததன் காரணம் அவர்களின் இதயங்களை வேண்டுமென்றே காயப்படுத்தும் நோக்கத்தில்தான். அவர்களின் இதயங்கள், காயங்களை இன்னும் கண்டதில்லை - காயங்கள் படிப்படியாக, அம்புக்குப் பின் அம்பாக ஏவும்போது ஏற்படும்.

இதயத்தின் பரிதாபகரமான, தேம்பி அழும் நிலையை, அப்போது கற்பனைச் செய்ய முடியாது. அத்தகைய காயப்பட்ட இதயத்தின் கண்ணீர், உலகளவிலான விரக்தி மற்றும் வலியால் ஏற்படும் வேதனை கலந்த அனுபவத்திலிருந்து மாறானது. தீவிரமான ஏக்கத்தால் வழியும் கண்ணீரின் நெருப்பில் இதயம் எரியும் வேளையில், ரணங்கள் பிரியமான இறைவனைத் தவிர வேறு எதையும் அடைய விரும்பாது. எனவே, மெஹர் பாபா அவருடைய அம்புகளை இப்போது குறி வைக்காமல், மண்டலியுடன் மறுபடியும் பேசத் தொடங்கினார்.

பந்தர்தாரா, பதினைந்து வருடங்களாகக் கட்டப்பட்ட மிகப்பெரிய ஏரி; மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் அனைவரும் ஏரியைப் பார்வையிட்ட பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, அன்று மாலை பாரி (BARI) கிராமம் வந்து சேர்ந்தனர்.

1923 அக்டோபர் 28ஆம் தேதி, பதினைந்து மைல்கள் நடந்து, மெஹர் பாபா மண்டலியுடன் ரஜூர் (RAJUR) வந்து சேர்ந்தார். மதிய உணவைத் தொடர்ந்து சற்று ஓய்வெடுத்தப் பின்பு, பாபா இவ்வாறு கூறினார்: "**நாம், ஸக்கோரிக்கு, வரும் வியாழக்கிழமை சென்று சேரவேண்டும். நான் ஸக்கோரிக்குள் நுழையாமல், அருகாமையில் இருந்து கொள்வேன். தற்போதைய சூழ்நிலையில் நான் உபாஸனி மஹாராஜின் எல்லைக்குள் நுழைய முடியாது. எனவே நீங்கள் காலையில் ஸக்கோரிக்குச் சென்று, பொழுது சாயும் காலம் திரும்பி வந்து, நான் எங்கிருந்தாலும் என்னிடம் வந்து சேருங்கள்.**"

அடுத்த நாள் பதிமூன்று மைல்கள் நடந்து மதிய வேளையில் அக்கோலா (AKOLA) வந்து சேர்ந்தனர். அக்கோலா கிராமத்தில் ஷிர்டி சாய்பாபாவின் குரு அக்கோலா சுவாமி வாழ்ந்து வந்தார். இந்த இந்து சத்குருவுக்கு நாராயண் மஹாராஜுடனும் தொடர்பு உள்ளதாகக் கூறப்படுகிறது. நாராயண் இளம் பருவத்தில் சாதுவாக அலைந்து திரிந்தபோது இருவரும் சந்தித்ததாக வரலாறு.

ராம்ஜூ அப்துல்லா, பாபா கூறியதற்கிணங்க ஒவ்வொரு நாளும் நடக்கும் நிகழ்வுகளை ஏட்டில் தவறாமல் குறித்துக் கொள்வதைப் பழக்கமாகக் கொண்டிருந்தார். அவரும் மண்டலியில் ஒருவராக அனைத்திலும் ஈடுபடுவதால் நேரம் என்பது அரிதாக இருந்தாலும், பாபாவின் நம்பிக்கைக்குரியவராக இருந்து அனைத்து நிகழ்வுகளையும் தவறாமல் எழுதிவந்தார்.

இறுதியாக ஸக்கோரி வந்து சேர பத்து மைல்கள் இருந்தபோது, மெஹர் பாபா அனைவரிடமும் இவ்வாறு அறிவுறுத்தினார்: "**இந்த நேரத்திலிருந்து எதுவும் உண்ணாமல், மஹாராஜின் தரிசனத்தைப் பெறுவதுவரை உபவாசமிருந்து, அதற்குப் பிறகு ஸக்கோரியில் எதை வழங்கினாலும் நீங்கள் உண்ணலாம்!**"

பாபா ஸக்கோரியின் புறநகர் பகுதியான பாபலேஷ்வர் (BABLESHWAR) கிராமத்தில் ஸ்லாம்ஸனுடன் இருக்க, இதர மண்டலி அனைவரும், நவம்பர் 1 அன்று அதிகாலை நான்கு மணிக்கு ஸக்கோரியை நோக்கி நடைபயணத்தைத் தொடர்ந்தனர். சுமைகளை ஏற்றி வந்த மாட்டு வண்டியையும் உடன் எடுத்துச் சென்று, பாபாவின் விருப்பப்படி அது மஹாராஜின் சீடர் யஷ்வந்த் ராவிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. செல்லும் வழியில் மஹாராஜுக்கு அணிவிக்க வாங்கிய மலர்மாலைகளுக்கு ருஸ்தம் சற்று அதிகமாகப் பணம் தர விரும்பி, சட்டைப்பையில் தேடியும் காசு எதுவும் இல்லாததால், தன்வசம் இருந்த ஒரு பென்சில், பார்சோப் மற்றும் ஒரு பட்டு கைக்குட்டையையும் இனாமாகக் கொடுத்தார். கடைசியாக, மண்டலி அனைவரும், இரண்டு வாரங்களுக்கு முன்பு

மும்பையிலிருந்து தொடங்கிய நடைபயணத்தை முடித்து, ஸக்கோரி வந்து சேர்ந்தனர்.

மண்டலி ஸக்கோரிக்கு வந்ததும், கை கால்களை சுத்தம் செய்த பின்பு, மூங்கில் கூண்டிலில் அடைபட்டிருக்கும் சத்குரு உபாஸனி மஹாராஜின் தரிசனத்திற்காகச் சென்றனர். கடந்த பத்து மாதங்களாக மஹாராஜ் இக்கூண்டிலேயே தன்னை அடைத்து, இடம் விட்டு நகராமல் இருந்து வந்தார். மெஹர் பாபாவின் மண்டலி குடிலுக்குள் நுழைந்ததும், மஹாராஜ் உரத்த குரலில் கத்தி, திட்டியது அவர்களுக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. சீற்றத்தில் அனைவரையும் துரத்தி விரட்டி, “வெளியே செல்லுங்கள்; எனது குடிலிலிருந்து வெளியேறுங்கள்!” என்று உரத்த குரலில் கத்தினார்.

மராட்டி மொழியில் மஹாராஜ் சாப மழையைப் பொழிந்து தாக்கியபோது, மண்டலி அதற்கிணங்கி, குடிலைவிட்டு வெளியேறினர். ஏமாற்றமடைந்த மண்டலி, அவர்கள் மஹாராஜை ஒரு முறையேனும் பார்க்க வாய்ப்பு கிடைக்குமா என்று தவித்தனர்.

இதற்கு முன்னதாக, மெஹர் பாபாவின் மண்டலி ஸக்கோரிக்கு விஜயம் செய்த போதெல்லாம், உபாஸனி மஹாராஜ் அவர்களுடன் அன்புடன் பேசி, நீண்ட நேரம் ஆன்மீகத் தத்துவங்களை விளக்கி, அவர்கள் தங்குவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தந்தார். ஆனால், இப்போது இருநூறு மைல் தூரம் கால்நடையாகப் பயணம் செய்து, தரிசனத்திற்காக வந்தவர்களை அவதூறாகப் பேசித் துன்புறுத்தினார். இதைக் கண்ட, ஸக்கோரி வாழ் பக்தர்கள், மஹாராஜ், மெஹர் பாபா மற்றும் மண்டலியிடம் மிகுந்த கோபத்தில் இருப்பதாகக் கருதினர்.

சாபங்கள் அல்லது ஆசீர்வாதங்கள்!

சத்குருக்களின் வழிமுறைகளை யார்தான் ஆழம் காண்பர்?

சில நிமிடங்களுக்குப் பிறகு, சத்குரு உபாஸனி மஹாராஜ், பெஹராம்ஜி, குஸ்தாஜி, சதாஷிவ் மூவரையும் தனித்தனியாக அழைத்து, அன்புடன் பேசி, ஆசீர்வதித்து, நம்பிக்கையும் உறுதியும் அளித்தார். மஹாராஜ் கசப்பான தொனியில் அவர்களிடம், “நீங்கள் உதவாக்கரைகள், என்னை, இக்கூண்டில் சிறை வைத்துவிட்டு, ஊரெல்லாம் சுற்றித் திரிகிறீர்கள்! உங்களுக்கு வெட்கம் என்பதே கிடையாது! இருநூறு மைல் தூரம் நடந்து வந்ததால் எனக்கு என்ன நன்மை?” என்று கேட்டார். அப்போது அவர் புதிரான புரியாத தொனியில், “உங்களுடைய ‘யாரோ’ அந்த ‘எவரோ’ கூறுவதை அப்படியே கேளுங்கள்! இப்போது உடனே நீங்கள் எங்குச் செல்ல வேண்டுமோ அங்குத் திரும்பிச் செல்லுங்கள்” என்று கூறினார்.

புறப்படும் முன்பு, குஸ்தாஜி இதர மண்டலிக்கும் தரிசனம் வழங்குமாறு கேட்டுக்கொண்டார். ஆனால், மஹாராஜ் அதற்கு விருப்பம் தெரிவிக்காமல் மறுத்துவிட்டார். மூவரும் திரும்பி வந்ததும், மண்டலி யஷ்வந்த்ராவின் உதவியுடன் தூரத்திலிருந்து சத்குரு உபாஸனி மஹாராஜை தரிசித்தனர். உபாஸனி மஹாராஜ் உள்ளே அவர் குடிலிலிருந்து ‘நான் ஒரு குழி தோண்டுவதில் மும்முரமாக இருக்கிறேன்’ என்று விசித்திரமான குரலில்

கத்துவதை அனைவரும் கேட்க முடிந்தது. அதற்குப் பிறகு, துர்காபாய் அளித்தத் தேநீரை அருந்தி மண்டலி உபவாசத்தை முடித்துக் கொண்டனர்.

மெஹர் பாபாவின் மண்டலி, பாபலேஷ்வருக்கு திரும்பி வந்தபோது, பாபா, அவர்களுக்கு இரவு உணவாக ரொட்டியும், காய்கறிகளும் தயாராக வைத்திருந்தார்.

ஸக்கோரியிருந்து மண்டலி திரும்பி வந்ததும், அங்கு நடந்த அனைத்தையும் பாபாவிற்கு எடுத்துரைத்தனர். அதைக் கேட்டு மெஹர் பாபா, சத்குரு உபாஸனி மஹாராஜின் மனோநிலையும் அணுகுமுறையும் பற்றி இரண்டு மணி நேரம் விளக்கினார்.

காலத்தின் கூற்று: (கவிதை வடிவில்)

இந்த பூமி மழையால் நனைந்தது. ஆனால், உழவன் தனது பயிரின் விதைகளை விதைப்பதற்கு முன்பு, நிலத்தை உழ வேண்டியது அவசியம் - இல்லையேல் எப்படி தானியம் உற்பத்தி செய்ய முடியும்? இத்தகைய நிறைவுற்ற நிலையில், பூமியானது கருவுற்று அறுவடைக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறது; ஆனால் விதைகளை விதைப்பதற்கு முன்பு நிலம் பண்படுத்தப்பட வேண்டும்.

சீடர்களின் இதயங்கள் நிலத்தைப் போன்றது, அதில் நீர்ப்பாய்ச்சி அக்கறையுடன் பாதுகாப்பவன், இறை உழவன் - மெஹர் பாபா.

கலப்பையானது உபாஸனி மஹாராஜின் கைகளிலிருந்தது. மஹாராஜின் விரோதப் போக்கும், உடலால் சில வேளைகளில் துன்புறுத்துவதும், நிலத்தை உழுவது போலாகும்; அது சீடர்களின் இதயங்களில் ஆழமான, வலி மிக்க ரணங்களை உருவாக்கும்; அதே வேளையில் தெய்வீக உழவனுக்கே உரிய பணியானது அன்பு, கீழ்ப்படிதல் எனும் விதைகளை விதைப்பதற்கு நிலத்தைத் தயார் செய்வதாகும். மஹாராஜின் கடுஞ்சொற்கள் அமிர்தம் போன்றது - விஷமல்ல - அவை சீடர்களின் ஆழமான நம்பிக்கைக்கு இரையூட்டி, பிரியமான குருநாதரைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ள வழிவகுக்கும்.

உபாஸனி மஹாராஜ், அவரின் உலகளாவிய பணிச்சுமையை மெஹர் பாபாவின் பொறுப்பில் மாற்றினார்; அவருடைய செயல்பாட்டுத் துறை, தனிப்பட்ட அம்சங்களாக இருந்தது. மெஹர் பாபாவிடம் மஹாராஜ் ‘அவ்வளவு திருப்தியாக இல்லை’ என்ற எண்ணத்தைத் தனது சீடர்களிடையே உருவாக்க விரும்பினார்; மேலும், அவ்வாறு செய்வது, (அவருடைய வட்டத்திற்குள்) சீடர்களின் தலைவிதியைக் கைக்குள் அடக்கிய ராஜாதிபதி, அவர்களின் மஹாபிரபு அவர் ஒருவர் மட்டுமே, என்ற நம்பிக்கையை அளித்தது.

மெஹர் பாபா மற்றும் அவருடைய மண்டலியிடம், மஹாராஜ் காட்டிய கடுமையான அணுகுமுறை, மஹாராஜின் சீடர்களிடம், ‘அவருடைய ஆளுமை வேறு எவருக்கும் தரப்படவில்லை, நம்பிக்கையான பக்தர்கள் மட்டுமே அவருடைய பொக்கிஷத்தின் வாரிசு’ என்ற எண்ணத்தை உருவாக்கியது. ‘ஆன்மீக உலகின் நுட்பங்களைப் புரிந்துகொள்வது கடினம், ஆனால், இறை

போதையில் இருப்பவர்கள் இதைக் கண்டுகொள்வானேன்?' என்பது காலத்தின் தீர்ப்பு.

கடவுள் எல்லையற்றவர், மனிதனின் கற்பனைக்கு அப்பாற்பட்டவர். கரையில் இருந்துகொண்டு, கடலின் ஆழத்தை அனுமானம் செய்வது, கடலின் அனுபவத்தை அளிக்காது. ஆழ்கடலின் அனுபவத்தை அடைய, ஒருவன் துணிச்சலுடன் கரையை விட்டு நீரில் மூழ்க வேண்டும்! ஆனால், ஆழ்கடலில் மூழ்கிய பின்னர் - அதாவது, மனதிற்கு அப்பாற்பட்ட கடவுள் நிலையை அடைந்து, ஏழாவது ஆன்மீகத் தளத்தை எட்டிய ஒருவரால் மட்டுமே - உபாஸனி மஹாராஜின் அணுகுமுறையில் அடங்கிய ரகசியத்தைத் தெளிவாக அறிய முடியும்.

சீடர்கள், ஸக்கோரியிலிருந்து புறப்படும்போது, மஹாராஜ் ஒரு பள்ளம் தோண்டுவதில் மும்முரமாக இருந்ததை பாபாவிற்கு எடுத்துரைத்ததும், பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:

**இறை நிலையை அடைந்த ஆத்மாக்கள், தங்களை ஏதாவது ஒருவகையில் மும்முரமாக வைத்துக்கொள்வர். அவர்கள், உடல்களைத் துறந்து தங்கள் இருப்பிடம் செல்ல விரும்புவர் - இம்மாய உலகின் விளையாட்டை விரும்புவதில்லை. ஆகையால், அவர்கள் தங்களைக் குழந்தைத்தனமான முறையில் எப்போதும் ஈடுபடுத்திக் கொண்டிருப்பார்கள்.**

**சத்குருக்கள் அவர்களை ஓய்வின்றி மும்முரமாக வைக்கும் பொருட்டு பிறருடன் இடைவிடாமல் உரையாடல் செய்வது, புதிதாக எவரேனும் வந்தால், 'நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று கேட்பதும், அவர் 'அமெரிக்கா' என்று பதிலளித்தால், 'அமெரிக்கா எங்கிருக்கிறது? நான் அதைப் பற்றிக் கேள்விப்பட்டது இல்லையே! நீங்கள் அங்கு என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்க, 'நான் ஒரு தச்சன்' என்று பதில் தந்தால், உடனே அவர், 'எவ்வகையான மரத்தை உபயோகிக்கிறீர்கள்? என்ன விதமான கருவிகள்? அவை விலை உயர்ந்தவைகளா?' என்று கேட்ட வண்ணம் உரையாடல் தொடரும்.**

**இறை நிலையை அடைந்த ஆன்மாக்கள் மற்றும் சத்குருக்களில் சிலர், தங்கள் பௌதீக உடல்களுடனான தொடர்பைத் தக்கவைக்கும் நோக்கத்தில், இவ்வாறு தொடர்ந்து உரையாடல் செய்வது அல்லது ஒரு துணியை எடுத்துக் கிழித்து மறுபடியும் தைப்பது போன்ற ஏதேனும் வேலைகளில் தங்களை ஈடுபடுத்துவது வழக்கம். அமைதியாகச் செயலற்று இருப்பார்களேயானால் அவர்கள் பௌதீக உடல்களைத் துறக்க நேரிடும். இறைவனோடு ஒன்றியிருக்கும் அதீத ஈர்ப்பு சக்தியால், அவர்களின் இருப்பிடத்திற்குச் செல்லத் துடித்துக் கொண்டே இருப்பார்கள். ஏற்கனவே 'அங்கே' இருந்தாலும், இம்மாயவுலகில் இருப்பதை அவர்கள் விரும்புவதில்லை.**

மெஹர் பாபா அவரது சீடர்களிடம், **"உபாஸனி மஹாராஜ் உங்களிடம் வசைமாரி பொழிந்த போது நீங்கள் பயந்தீர்களா?"** என்று

கேட்டதற்கு, 'ஆமாம்' என்று பதிலளித்தனர். மின்னும் கண்களுடன் '**நீங்கள் எப்போதேனும் எனக்கு பயப்படுகிறீர்களா?**' என்று பாபா கேட்க, 'ஆமாம், சில நேரங்களில்' எனக் கூறினர்.

பாபா மீண்டும் தொடர்ந்தார், "**என்னைப் பார்த்துப் பயப்படாதீர்கள்; என்னை நேசியுங்கள்; என்னுடைய கட்டளைகளை மீற பயப்படுங்கள்! என்னைப் பார்த்து அல்ல! நான் உங்களின் குருநாதன். நான் கூறுவதையே செய்யுங்கள், அதில் கண்டிப்பாக இருங்கள் - ஒருபோதும் அலட்சியமாக இருக்காதீர்கள் - அதுவே என்னை மகிழவைக்கும்.**"

மெஹர் பாபா, பாபலேஷ்வரிலிருந்து நவம்பர் 2ஆம் நாள் காலை 6.30 மணிக்குப் புறப்படத் தயாரானார்; மண்டலி அனைத்து சுமைகளையும் சரக்கு வண்டியில் ஏற்றி, அஹமதுநகர் வந்து குஷ்ரு குவாட்டர்ஸில் தங்கியிருந்தனர். அப்போது பாபா மண்டலியிடம் இவ்வாறு கூறினார்: "**என்னுடன் தொடர்ந்து இருப்பதைப் பற்றி நன்றாக சிந்தித்து முடிவு செய்யுங்கள். இப்போது கூட உங்கள் முடிவை நீங்கள் மாற்றிக் கொள்ளலாம். என்னைப் பின்பற்ற விரும்பாவிடில், நீங்கள் உங்கள் விருப்பப்படி, சுதந்திரமாக இருக்கலாம். என்னிடமிருந்து விலகி எந்நேரமும் வெளியே செல்லலாம்.**"

அப்போது, பாபாவுடன் இருந்த மண்டலி அனைவரும், அதைப் பற்றி சிந்திக்கத் தேவை எதுவுமில்லை எனத் திட்டவட்டமாகக் கூறினர். மண்டலியில் பலர், "உங்கள் பாதங்களை உறுதியாகப் பற்றிக்கொண்ட நாங்கள், இறுதி வரை உங்களுடனே இருப்போம். உங்களுக்கும், சத்குரு உபாஸனி மஹாராஜுக்கும் இடையே நடந்த 'விளையாட்டு' எங்கள் தீர்மானத்தை மீண்டும் பலப்படுத்தியுள்ளது. நாங்கள் உங்களுக்கே உரியவர்கள்" என்று தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தனர்.



குவெட்டா, 1923



குவெட்டா, 1923



தரையில் அமர்ந்திருப்போர்: புர்ஜர் தஹிவாலா, ஆதி சீனியர், ராம்ஜூ அப்துல்லா, ரகுநாத் கர்மார்கர் - அமர்ந்திருப்போர்: பெஹராம்ஜி, ருஸ்தம், பாபா, டாக்டர் கனி, குஸ்தாஜி - நிற்போர்: பாபு சைக்கிள்வாலா, வஜிஃப்தர், ஸரோஷ், பைதூல், ஸ்லாமஸன், நெர்வஸ்



மெஹர் பாபாவின் ஆரம்பகால மண்டலி - குவெட்டா ஜூன் **1923.**
நிற்பவர்: பார்சோப், மாஸாஜி, பைதூல், ராம்ஜூ, ஆஸ்த்மா, பாதிரி.
அமர்ந்திருப்போர்: ஸ்லாம்சன், பாபுராவ், பெண்டு, நெர்வஸ்.
தரையில் அமர்ந்திருப்போர்: சகோதரர் ஜால், குஸ்தாஜி, மெஹர் பாபா, ஆதி ஈரானி, பெஹராம்ஜி

# பாரசீகம் - முதல் பயணம்

**(First Journey to Persia)**

1923 நவம்பர் 4ஆம் நாள், மெஹர் பாபா மண்டலியுடன் வந்து அஹமதுநகர் தர்மசாலையில் தங்கியிருந்தார். அன்று முழுவதும் பாபாவின் பாரசீக பயணத்தைப் பற்றிய உரையாடல் தொடர்ந்தது. பிப்ரவரி மாதம் பயணத்தைத் தொடங்க முடிவு செய்து - அதுவும் காடு, மலை, பாலைவனமாக அமைந்த பந்தர் அப்பாஸ் (BANDAR ABBAS) வழியாகவும், அதற்கு முன்பு கராச்சியில் சில நாட்கள் தங்கவும் திட்டமிட்டது.

இம்முறையும், மெஹர் பாபாவின் கட்டளைகளுக்கு இணங்க, அனைத்து மண்டலியும் காசோலை பத்திரத்தில் கையொப்பமிட வேண்டிய கட்டாயம்.

நவம்பர் 5 அன்று மண்டலி அனைவரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். பாபா, திடீரென, கராச்சிக்குச் செல்லாமல் ஹைதராபாத் (பாகிஸ்தான்) செல்ல முடிவு செய்தார்.

ஒவ்வொருவரும் அவரவர் சுமைகளுடன் ரயில் நிலையத்தை நோக்கி நடந்தனர்.

அடுத்த நாள் சூரத் வந்தடைந்ததும், பாபா, சில மண்டலியுடன் பஜாருக்குள் விரைவாக நடந்தார். வழியில் மிகவும் மோசமான நிலையில் 18 வயது இளைஞன் ஒருவன் கடுங்குளிரில் நடுங்கியபடி இருந்ததைப் பார்த்து, பாபா, ராம்ஜூவை விசாரித்து வர அனுப்பினார். வடாலாவிலிருந்து (WADALA) சூரத்திற்கு வேலை தேடி வந்தவன், உடல்நலமின்றி, கையில் காசு பணம் எதுவும் இல்லாத நிலையில் குளிரில் அவதிப்படுவதைக் கண்டு, உண்ண உணவளித்து, வேண்டிய உதவிகளைச் செய்து, பெற்றோரிடம் திருப்பி அனுப்பிவைத்தார்.

அனைத்தும் அறிந்த இறைவன், இரக்க உணர்வில் இவ்வளவு தூரம் சென்று, ஆதரவற்ற ஏழையிடம் காட்டிய அன்பைக் கண்டு அனைத்து மண்டலியும் வியந்து போயினர்.

அஹமதாபாத் ரயில் நிலையத்திலிருந்து ரயில் புறப்பட்டதும், நகைச்சுவையான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. பாபா, திடீரென மண்டலியிடம் தேநீர் தயார் செய்யுமாறு கூறினார். சொல்வது எளிது, செய்வது கடினம்; ஏனெனில், ரயில் அதிவேகத்தில் செல்லும்போது ரயில் பெட்டிகள் முன்னும் பின்னும் அலைமோதும்; இருந்தும், அடுப்பை எரியவிட்டு நான்கு மண்டலி அதன் கால்களை அசையாமல் பிடித்துக் கொண்டனர். தடுமாற்றமான சூழ்நிலையிலும் தேநீர் தயார் செய்து, பாபா, ரொட்டி, வாழைப்பழம், மிட்டாய் இவற்றுடன் மண்டலிக்குத் தேநீர் வழங்கினார்.

ஹைதராபாத்தில் தங்குவதற்கு வசதியான இடமில்லாததால், பாபா மண்டலியுடன் கராச்சி சென்று, '2445-ஸோல்ஜர்' பஜாரில் (SOLDIER BAZAAR)

அமைந்த பங்களாவை இரண்டு மாத வாடகைக்கு எடுத்தபோது, பாபா, அவ்வளவு காலம் கராச்சியில் தங்குவார் என்ற எண்ணம் உருவானது.

ஹஸ்ரத் பாபாஜான் அவ்வப்போது எவரையேனும் குறிப்பிட்டு இவ்வாறு கூறி வந்தார்: “இடுப்பில் கோவணம் கூட இல்லை; ஆனால் பெயரோ ஃபத்தே கான்.” இந்த சொற்றொடரின் பொருள் என்னவென்று மெஹர் பாபா, டாக்டர் கனியிடம் வினவ, அதற்கு அவர் வெடுக்கென, “இடுப்பில் எதுவுமே இல்லாமல் வெறுமனே இருக்கும் ஒருவன் தற்புகழ்ச்சி செய்கிறான்!” என்று பதிலளித்தார்.

“அதாவது, ஏழையாயினும் செல்வந்தர் போல நடிப்பது; மேலும் மூக்கைத் தூக்கி வைத்துக் கொண்டு, திமிர் பிடித்தவன் போல் அலைவது.”

கராச்சியில் இருந்தபோது பாபா அனைவரிடமும் (குஸ்தாஜியை தவிர) ஏதேனும் வேலையைத் தேடி அதில் ஈடுபடுமாறு கட்டளையிட்டார். மேலும், ‘**இது பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் அல்ல; ஒவ்வொருவரும் அவரவர் வேலையை உண்மையாகவும், நேர்மையுடனும் செய்யவேண்டும்**’ என்று விளக்கினார். பிற்பகலில் பாபா, சில மண்டலியுடன் கிளிஃப்டன் (CLIFFTON) கடற்கரை’க்குச் சென்று கடும் வெயிலில் பங்களாவுக்கு நடந்து வந்தார்.

அஹமதுநகரிலிருந்து புறப்படும் முன்பு, மெஹர் பாபா, நவல் தலாட்டியிடம் பாரசீக பயணத்திற்கான பாஸ்போர்ட்டு ஆவணங்களை ஏற்பாடு செய்யக் கூறியிருந்தார். அதற்காக நவல், மும்பை பாரசீக தூதரகத்தில், பாபா மற்றும் மண்டலி சார்பில் கையெழுத்திடச் சென்றபோது, அங்கிருந்த அதிகாரி, “மெஹர் பாபாவைத் தவிர, பிற அனைவரும் நேரடியாக இங்கு வந்து, எனது முன்னிலையில் கையொப்பம் இட வேண்டும். அப்போது நான் அவர்களின் பாஸ்போர்ட் ஆவணங்களை ஆமோதித்து கையெழுத்திடுவேன். மெஹர் பாபா வரவேண்டிய தேவையில்லை ஏனெனில், அவர் சில தினங்களுக்கு முன்னர் இங்கே வந்து அவருடைய பாஸ்போர்ட்டை என்னிடம் அனுப்பி வைப்பதாகக் கூறினார்; அதற்கு நான் ஒப்புதலளித்தேன்” என்றார்.

இந்த விசித்திரமான சம்பவம் 1923, நவம்பர் 17ஆம் நாள் நடந்தது; அன்று மெஹர் பாபா மண்டலியுடன் கராச்சியில் இருந்தார். வஜிப்தரின் கடிதம் மூலம் இதை அறிந்த மண்டலி பெரிதும் ஆச்சரியமடைந்தனர், ஏனெனில் கடந்த ஒன்றரை மாத காலமாக மெஹர் பாபா, மும்பைக்கு வெளியிலேயே இருந்தார்; பாரசீக தூதரகத்திற்குச் செல்லவில்லை.

இதற்கிடையில், மெஹர் பாபா, பெய்லியுடன் இணைந்து இரகசியமாக திட்டமிடுவது இதர மண்டலிக்குத் தெரியாது. நவம்பர் 22 காலையில், பாபா மண்டலியிடம், “**நாம் அனைவரும் உடனடியாகப் பூனாவுக்குப் புறப்பட வேண்டும்**” என்றார். எந்தவொரு விளக்கமும் வழங்காத நிலையில், அனைவரும் வேகமாக, பெட்டி படுக்கைகளைச் சுருட்டித் தயாராக வேண்டிய நிர்பந்தம். அனைத்து பொருட்களுடன் அன்று மதியம் கப்பலில்

(எஸ்.எஸ்.வீற்றா - SS VITA) புறப்பட்டனர். இவ்வாறு, கராச்சியில் இரண்டு மாதங்கள் எனத் திட்டமிட்டது ஏழே நாட்களில் திடீரென முடிவுக்கு வந்தது.

மெஹர் பாபா, கராச்சியில் இருந்தபோது ஏகாந்தவாசம் மேற்கொண்டதால், அவருடைய ஆன்மீக சகோதரி பீலாமாயையும் தரிசனத்திற்கு அனுமதிக்கவில்லை. அருகிலிருந்தும் பாபாவைப் பார்க்க முடியாத ஏக்கத்தில் பீலாமாய் தவியாய் தவித்தார். கராச்சியிலிருந்து புறப்படும் கடைசி நாள், மெஹர் பாபா, பீலாமாயின் இல்லத்திற்கு விஜயம் செய்து, அவரது ஏக்கத்தைத் தணித்தார்.

இவ்வாறான பிரிவின் தருணங்கள், நொறுங்கிப்போன இதயங்களின் ஏக்கத்தை மீண்டும் வலியுறச் செய்யும்! பெய்லி கப்பலின் மேல் தளத்தில் முன்பதிவு செய்திருந்தார். இரவெல்லாம் கடுமையான புயல்; மேலும் ஒவ்வொருவரும் ஒரு மணி நேரம் பாபாவின் இரவு பாதுகாவலனாக பணிபுரிந்ததால், தசைப் பிடிப்பு மற்றும் விறைப்பால் அவதியுற்றனர். கடினமான பயணத்திற்குப் பிறகு, நவம்பர் 24ஆம் தேதி மும்பை வந்தடைந்ததும், மெஹர் பாபா மண்டலியிடம், “**நான் கடுமையான ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போகிறேன்; உங்களில் ஒரு சிலர் மட்டுமே என்னுடன் இருப்பீர்கள்; என்னைப் பற்றிய எந்த செய்தியையும், நான் எங்கிருக்கிறேன் என்பதையும் நீங்கள் அறிந்துகொள்ள முடியாது. எனவே, நீங்கள் அனைவரும், நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் இவ்வேளையில் அவரவர் இல்லங்களுக்குச் செல்வது நல்லது**” எனத் தெரிவித்தார். பெஹராம்ஜிக்கு மட்டுமே பாபாவின் திட்டம் என்னவென்று தெரியும், ஆதலால் அவர் உடனடியாகப் பூனா சென்று வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

டாக்டர் கனி, புகார் கூறுவதுபோல பாபாவிடம், “பாபா, உங்களின் ‘நிலையான மாற்றங்கள்’ அச்சுறுத்தும்படியாக உள்ளன. நீங்கள் ஏன் திடமான திட்டங்களை வகுத்து, அதற்கிணங்கச் செயல்படக் கூடாது?” என்று வினவினார்.

பாபா பதிலாக, “**அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள் எனும் இந்த உண்மை, மாற்றமில்லாத எனது நிலைக்கு சாட்சியமாகும். என்னுடைய திட்டங்கள் எப்போதும் திட்டவட்டமானவை; மேலும் அதில் சிறிதளவிலான மாற்றத்திற்கும் இடமில்லை. மாற்றமாகத் தோற்றமளிக்கும் அனைத்தும் திடமான திட்டங்களின் மொத்த உருவமே! - திட்டவட்டமான திட்டங்களின் பிரிக்க முடியாத பாகமே!**” என்று விளக்கமளித்தார்.

மெஹர் பாபா, இறுதியில், எவருக்கும் எதுவும் தெரியாமல் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் நோக்கத்தில் பூனா வந்து, குஸ்தாஜி, பெஹராம்ஜி இருவருடன் ஸோலாபூர் (SOLAPUR) புறப்பட்டுச் சென்றார்.

அன்றிரவு ஸோலாபூர் ரயில் நிலையத்தில், ரயில் நிலைய அதிகாரி ஒருவர் குஸ்தாஜியிடம் கேள்வி மேல் கேள்வி எழுப்ப, கடுமையான வாக்குவாதம் நிகழ்ந்தது; அதைத் தவிர்க்கும் எண்ணத்தில் பாபா, குஸ்தாஜியை அருகிலிருந்த கழிவறைக்கு அழைத்துச் சென்றார். வெளியே வந்தபோது, அவர் முன் நின்றுகொண்டிருந்த அதிகாரியை பாபா உற்று நோக்க, அந்த அதிகாரி,

சற்றும் மரியாதை இல்லாமல் முரட்டுத்தனமாக, பாபாவிடம், "இந்தக் கழிவறை முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு பயணிகளின் உபயோகத்திற்கு மட்டும்தான்!" என்றார்.

மெஹர் பாபா மேலிருந்த அறிவிப்புப் பலகையில் எழுதியிருந்த 'ஜென்டில்மென்' (GENTLEMEN - பண்புள்ள மனிதர்கள்) என்பதைக் காட்டி அமைதியாகக் கேட்டார், **"இதில் முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு பயணிகளுக்கென எங்கே குறிப்பிடப்பட்டுள்ளது? இந்தக் கழிவறை 'ஜென்டில்மென்'களுக்காக, பெரியவரே! நானும் ஒரு 'ஜென்டில்மேன்'தான்!"** கலக்கமடைந்த அதிகாரி, உடனே, பாபா ஒரு சாதாரண மனிதனல்ல என்பதை உணர்ந்து மரியாதையுடன் இணக்கமாக நடந்துகொண்டார்.

அதற்குப் பிறகு, மெஹர் பாபா, பெஹராம்ஜியிடம் ரயில் நிலைய நடைமேடையில் படுக்கையை விரிக்கக் கூறினார்; அது குப்பைக் கூளங்களால் நிரம்பி இருந்ததால் சுத்தம் செய்ய சிரமப்பட்டார் பெஹராம்ஜி. அப்போது அங்கு வந்த ரயில் பாதுகாவலர் ஒருவரை அணுகி, வேறு ஏதேனும் வசதியான இடம் கிடைக்குமா எனக் கேட்டுவர, பாபா, பெஹராம்ஜியை அனுப்பி வைத்தார். இரக்கமுள்ள அந்தப் பாதுகாவலர், ரயில் நிலைய அதிகாரியிடம் முறையிட்டு, அன்றிரவை முதல் வகுப்புக் காத்திருப்பு அறையில் கழிப்பதற்காக இடம் கொடுத்தார். அங்கே அமருவதற்கான நீண்ட இருக்கைகள் இருந்தும் பாபா அவருடைய படுக்கையைத் தரையில் விரித்து அதில் சாய்ந்தார். இதைக் கண்ட ரயில் நிலைய அதிகாரி இவ்வியக்கத்தக்க சாதுவிடம் மறைந்திருக்கும் இறை தன்மையை உணர்ந்து வெகுவாக ஈர்க்கப்பட்டார்.

இரண்டு மணி நேர தூக்கத்திற்குப் பிறகு, மூவரும் அஹமதுநகருக்கு அருகிலமைந்த அக்கோல்னர் (AKOLNER) செல்லவிருந்தனர். கையில், இந்தப் பயணத்திற்குத் தேவையான ஒரு ஐந்து ரூபாய் நோட்டும், ஒன்பது அணா மட்டுமே இருந்தது. டிக்கெட் விற்பனையாளர் அதை பத்து ரூபாய் நோட்டு என்று தவறாக நினைத்து, ஐந்து ரூபாயை வழங்கவே, தவறாக வந்த பணத்தை உடனே திரும்பத் தருமாறு பாபா, பெஹராம்ஜியிடம் கூறினார்.

மெஹர் பாபாவின் விருப்பத்திற்கிணங்க ஏகாந்தவாசத்திற்குப் பொருத்தமான இடம் எதுவும் அமையாததால், பாபா, மெஹராபாத் திரும்பி வர திட்டமிட்டு மூவரும் 1923 டிசம்பர் 2ஆம் நாள் வந்து சேர்ந்தனர். தபால் அலுவலக கட்டிடத்தின் அருகில் ருஸ்தம் எழுப்பிய கூடாரத்தில், கடுமையான குளிராக இருந்தும், பாபா அதிலேயே தங்கியிருந்தார். அரன்காவ்ம் கிராமத்து மக்கள் எவருக்கும் பாபாவின் வருகையைப் பற்றிய செய்தி தெரியாது.

இரவில் படுக்கைகளை விரித்துத் தூங்க ஆயத்தமானதும், எதிர்பாராமல், மழைக்காலம் இல்லாதபோதும், பலத்த இடியுடன் கூடிய கனமழை பெய்தது - ஆறு மாதகால பிரிவுக்குப் பிறகு, மழை மெஹர் பாபாவை மகிழ்ச்சியுடன் மறுபடியும் வரவேற்பது போன்ற சூழ்நிலை உருவானது.

மெஹர் பாபா எங்கு, எப்போது பயணம் செய்தாலும், அது பிரபஞ்சம் அனைத்திற்கும் அவர் மேற்கொள்ளும் ஆன்மீக உள்பணியே காரணம். தேவைக்கு அதிகமாக ஒரு கணம் கூட அவர் எங்கும் இருப்பதில்லை. தங்கியிருக்கும் இடம் எவ்வளவுதான் வசதிமிக்கதாக இருந்தாலும், அவருடைய பணி முடிவடைந்த அடுத்த கணமே, ஏதேனும் காரணத்தை எடுத்துரைத்து, அங்கிருந்து புறப்பட்டு விடுவது வழக்கம். மெஹர் பாபா, மண்டலியுடன் மரத்தின் கீழ் அல்லது மாளிகை வீட்டிலும் தங்கத் தயங்குவதில்லை. ஆனால், எங்குப் பயணம் மேற்கொண்டாலும், அது அவருடைய ஆன்மீகப் பணியின் நிமித்தம் மட்டுமே! பணி முடிந்ததும் அவருடைய முதல் திட்டம் எதுவாயினும், அங்கிருந்து புறப்படவேண்டிய கட்டாயம். வெகு தொலைவில் வெளி நாடுகளுக்குப் பயணம் செய்தாலும், அவருடைய உள்பணி நிறைவடைந்த அடுத்த கணமே திரும்பி விடுவது வழக்கம். அவருடைய ஒவ்வொரு நொடிப்பொழுதும் எந்த நோக்கமுமின்றி இராது. மண்டலிக்குத் தெரியும் பாபா அவருடைய ஆன்மீகப் பணிக்காகவே பயணம் செய்கிறார் என்று! ஆனால் எவ்விதமான பணியில் ஈடுபடுகிறார் என்று அவர்களால் அவ்வேளையில் புரிந்துகொள்ள முடியாவிடிலும், உலகளவில் அப்பணியின் தாக்கமும், விளைவும் இருக்கும் என்பதை அனைவரும் அறிவர்.

மெஹர் பாபா மூச்சு விடுவதை மண்டலி பார்த்தனர் - ஆனால் அவருடைய உயிர் மூச்சு பிரபஞ்சத்தில் அடங்கும் அனைத்து உயிருள்ள மற்றும் உயிரற்றதுபோலத் தோற்றமளிக்கும் பொருட்களையும் தொடும். ஆனால் இதைக் கண்டவர் யார்? பிரபஞ்சத்தில் அவரின் பணி, முற்றிலும் தனித்துவமானது; அது மனித இனத்திற்கு மட்டுமல்ல; பிரபஞ்சத்தில் அனைத்திற்கும், அனைவருக்கும் அனுகூலமாக இருக்கும்! அவருடைய நெடுநேர உபவாசம் மற்றும் ஏகாந்தவாசம் அவருக்காக அல்ல; அவர், அவரது சுயவழியில், உள்ளூர முழு உலகையும் தொழுவது போலாகும்.

மனித இனம் கடவுளை வணங்கும். மனித உருவில் வரும் கடவுள், அனைத்தையும் - உயிருள்ள, உயிரற்றதாய் தோன்றும் அனைத்தையும் வணங்குகிறார். மெஹர் பாபாவின் ஒவ்வொரு மூச்சும் உலகுக்கு வழங்கும் வழிபாடாகும்; ஒவ்வொரு செயலும் பிரபஞ்சத்தின் அனைத்து பொருட்களுக்கும் வெளிப்படுத்தும் பக்தி ஆகும். இறை நிலையை அடைந்த ஒருவருக்கு அடைவதற்கு என வேறெதுவும் இல்லை. அவருடைய உலகளாவிய வாழ்க்கை, ஆன்மீகப் பாதையில் இருக்கும் அனைவருக்கும் அளிக்கும் தியாகத்தின் அர்ப்பணம்.

இறைவனடி சேர்ந்த மானிடன் அனைத்து இறை ஞானத்தையும் அடையப்பெற்றவர்; பிரபஞ்சத்தின் சக்திகள் அனைத்தையும் தனது காலடியில் புரள வைக்கும் ஆற்றல் மிக்கவர்.

மெஹர் பாபா, அரன்காவ்ம் கிராமத்திலிருக்கும் இரகசியம் குஸ்தாஜி, பெஹராம்ஜி, ருஸ்தம் மூவருக்கு மட்டுமே தெரியும். அனைத்து பணிகளையும் எவருக்கும் தெரியாமல் இரவோடு இரவாக செய்து வந்தனர். அதிகாலையில்,

பொழுது விடியும் முன்னரே பெஹராம்ஜி பால் வாங்கி வர கிராமத்திற்குள் நுழைந்ததும், கிராமத்தார் பாபாவைப் பற்றி கேள்வி கேட்க, பெஹராம்ஜி அவர் மட்டுமே இங்கு வந்ததாகப் பொய் சொல்ல வேண்டிய சூழ்நிலை.

ஏகாந்தவாசத்திற்காக எழுப்பிய கூடாரம் வெளியிலிருந்தால் அனைவருக்கும் தெரிந்துவிடுமென, பாபா அதைத் தபால் அலுவலக கட்டிடத்தின் உள்ளேயே எழுப்புமாறு அறிவுறுத்தினார். தரை, கற்களால் கட்டப்பட்டிருந்ததால் கூடாரத்தை எழுப்ப மிகவும் சிரமமாக இருந்தது.

ஆதி, இவ்வேளையில் ஒரு நாள் அரன்காவ்ம் வந்தார்; இவருடன் இப்போது நான்கு பேருக்கு மட்டும் பாபாவின் இரகசியத் திட்டம் தெரிய வந்தது. பாபாவின் கட்டளைக்கிணங்கி ஆதி குஷ்ரு குவாட்டர்ஸிலிருந்து குஸ்தாஜி, பெஹராம்ஜி இருவருக்கும் உணவு எடுத்து வந்தார். பாபா தேநீர் போன்ற திரவ உணவில் மட்டும் ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்தார். ஒரு வாரத்திற்குப் பிறகு, பாபா, குல்மாயையும் அரன்காவ்ம் வர அனுமதித்தார்.

1923ஆம் ஆண்டு டிசம்பர் கடைசி வாரத்தில், மெஹர் பாபா ஓரிரு நாட்களுக்காகப் பூனா சென்று, கஸ்பாபேட்டில் சதாஷிவின் இல்லத்தில் தங்கியிருந்தார். ஆனந்தமான மனநிலையில் இருந்த பாபா, பொதுமக்களுக்கு அங்கே தரிசனம் வழங்கினார். நூற்றுக்கணக்கான மக்கள் பாபாவின் ஆசிகளைப் பெற வந்திருந்தனர். இந்திய மதத்தில் நாட்டமுள்ள ஆங்கிலேயர் லூயிஸ் சார்லஸ் நெம்ஸ் (LOUIS CHARLES NELMES) என்பவரும் தரிசனத்திற்காக வந்திருந்தார்.

அவருடைய வழக்கமான பிரார்த்தனை வேளையில் நெம்ஸ் (NELMES), ஜீஸஸின் சித்திரத்தை உற்று நோக்கியபோது, அதில் மெஹர் பாபாவின் முகத்தைக் கண்டார். பூனாவில் சதாஷிவ் வீட்டில் பாபாவை முதன் முறையாக சந்தித்த வேளையில், நெம்ஸ், சில ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த, அவருடைய அனுபவத்தை நினைவு கூர்ந்தார். கண்களில் நீர் வழிய, பாபாவின் முன் தலைபணிந்து தரிசனம் செய்தார். அவர் மெஹர் பாபாவைக் கடவுளாக ஏற்றுக்கொண்டு, அவர்மீது அளப்பரிய அன்பும், நம்பிக்கையும் கொண்டவராகத் திகழ்ந்தார். தரிசன நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா, அவரைத் தனிமையில் சந்தித்து, அவரது விருப்பத்தைக் கேட்டபோது, நெம்ஸ், “நான் உங்களை ஜீஸஸ் உருவில் பார்த்தேன்! எப்பொழுதும் உங்கள் பாதங்களில் இருக்க விரும்புகிறேன்” என்றார். பாபா, அவரை சமாதானப்படுத்தி, தக்க தருணம் வரும் வரை பொறுமையாக, பூனாவில் இருக்கக் கூறினார்.

சதாஷிவின் இல்லத்திலிருந்து பாபா மண்டலியுடன் மெஹராபாத் வந்து அவருடைய உபவாசம் மற்றும் ஏகாந்தவாசத்தை தொடர்ந்தார்.

1923 டிசம்பர் 31 அன்று மெஹர் பாபா, ஏகாந்தவாசத்திலிருந்து வெளிவந்து, பெஹராம்ஜி, குஸ்தாஜி இருவருடன் மும்பைக்குச் சென்று வஜிப்தர் ஏற்பாடு செய்த பரூச்சா பங்களாவில் (BHARUCHA BUNGALOW) தங்கியிருந்தார்.

மெஹரா ஜெ. ஈரானி (MEHERA J. IRANI) ஸக்கோரியில் சத்குரு உபாஸனி மஹாராஜ் ஆசிரமத்தில் தங்கியிருந்த வேளையில், கோர்ஷெத் (KHORSHED) இணைபிரியா தோழியாக உடனிருந்தார். மும்பைக்கு வந்ததும், மெஹர் பாபா, குல்மாயை ஸக்கோரிக்கு அனுப்பி மெஹரா, கோர்ஷெத் இருவரையும் அழைத்து வருமாறு உத்தரவிட்டார். இருவரும், ஈரானி மான்ஷனில் (IRANI MANSION) கோர்ஷெத்தின் பெற்றோருடன் தங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

'இறைவனின் அருகில் இயற்கை இருக்கும்; இறை நிலையை அடைந்த ஒருவர் அனைத்து ஞானத்திற்கும் ஆதாரமாகத் திகழ்வார். பிரியமான இறைவனின் உள்ளத்தின் பிரதிபலிப்பாக, பிரபஞ்சத்தின் கண்ணாடியாகத் திகழும் மெஹரா, இறைவனின் பாசத்தால் பூத்துக்குலுங்கும் வாழ்க்கை எனும் தோட்டத்தில், மூலமுதலான பாடலைப் பாடத்தொடங்கினார்.'

மெஹராவின் தாயார் தவுலத்மாயும் (DAULATMAI) உடனிருந்தார். மெஹரா, கோர்ஷெத் இருவரும் பாபாவின் தரிசனத்திற்காகத் தினமும் பரூச்சா பங்களாவுக்கு வருவது வழக்கம். ஒரு நாள் பாபா, குஸ்தாஜியுடன் ஈரானி மான்ஷன் சென்று அங்கிருந்த பெண்மணிகளை சந்தித்தார். மெஹரா, கோர்ஷெத் இருவரிடமும் அவர்களுக்குப் பிரியமான பாடல் ஒன்றைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார். கோர்ஷெத் பகவான் கிருஷ்ணனைத் துதித்து பாடலைப் பாட, மெஹரா வெட்கத்தில் தலை குனிந்தார். அப்போது பாபா, குஸ்தாஜி பக்கம் திரும்பியதும், குஸ்தாஜி,

"ஓ கடவுளே! எனது குரலுக்கு செவி கொடுங்கள்!"

என்ற தலைப்பில் பாடினார்.

(மெஹர் பாபா, மெஹராவைப் பற்றி இவ்வாறு கூறினார்: "**மெஹரா, உலகின் அதி பரிசுத்தமான ஆத்மா; அவதார புருஷரை எப்படி நேசிக்க வேண்டுமோ அப்படி நேசித்தார். ராமனுக்கு சீதை, கிருஷ்ணனுக்கு ராதா, ஜீஸஸுக்கு மேரி, அதுபோல் இந்த அவதார காலகட்டத்தில், மெஹர் பாபாவிற்கு மெஹரா.**")

ஒரு நாள் மெஹர் பாபா, நவல் தலாட்டியுடன் (NAVAL TALATI) மும்பை சௌபாட்டி கடற்கரைக்கு (CHOWPATTY BEACH) நடக்கச் சென்றார். பாபாவின் பார்வை ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்த ஒருவர் மீது வீழ்ந்ததும், பாபா, நவல் தலாட்டியிடம் '**அவர் யார்?**' என்று கேட்டார்.

ஆச்சரியத்தில் நவல் தலாட்டி, "பாபா, எனக்கு எப்படித் தெரியும்? ஆயிரமாயிரம் மக்கள் இங்கு தினமும் வருவதுண்டு. அவர் எவராகவும் இருக்கலாம்" என்று பதிலளித்தார்.

பாபா கூறினார், "**அங்குச் சென்று, அவர் பெயரைக் கேட்டு, அவர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்து வாருங்கள்.**"

நவல் தயக்கத்துடன், "பாபா, அவரை வைத்து நாம் என்ன செய்யப் போகிறோம்? இருந்தும் நீங்கள் விரும்பினால் நான் சென்று விசாரிக்கிறேன்" என்று கூறி, இருவரும் அந்தத் தெரியாத மனிதரை அணுகினர். பாபாவின்

பார்வை அவர் கவனத்தை ஈர்த்தது. கவலையின் உருவான கண்களைத் தூக்கி, “உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று கேட்டார்.

பாபா சிரித்துக் கொண்டே, “**எங்களுக்கு எதுவும் வேண்டாம்**” என்றார்.

அப்போது அவர், “அப்படியானால் என்னை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்?” என வினவினார்.

“**ஆனந்தம், சந்தோஷம் இவைதான் உங்கள் விதியிலுள்ளன என்று சொல்லத்தான்**” என்று பாபா பதிலளித்தார்.

அதிர்ச்சியில் அந்த மனிதர், “ஆனந்தம்? நான் அந்த அளவுக்கு அதிர்ஷ்டசாலி அல்ல! சந்தோஷம், என் வாழ்க்கையின் ஓர் அங்கமுமல்ல! என்னுடைய எல்லா சந்தோஷங்களும் மறைந்து விட்டன!” என்று விரக்தியில் கூறினார்.

தீவிரமான தொனியில் பாபா விளக்கினார்: “**சந்தோஷத்தைப் பற்றிய உங்கள் தவறான எண்ணம் மறைந்து, உண்மையான ஆனந்தத்தைக் கொண்டுவரும். ஆகையால், துயர்மிகுந்த துக்கத்தில் ஏன் இருக்க வேண்டும்?**”

இதைக் கேட்டு, குழப்பத்தில் ஆச்சரியமடைந்த அவர், ‘என் மனதை அறிந்து கொள்ளும் இவர் யார்?’ என்று எண்ணி, பாபாவை உற்றுநோக்கிக் கேட்டார், “நீங்கள் யார்?”

மெஹர் பாபா புன்முறுவல் மட்டும் செய்தார், ஆனால் அது அம்மனிதரின் வாழ்வின் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. பாபாவின் பார்வை, அவரை வேதனை கலந்த ஆழ்ந்த சிந்தனையிலிருந்து விழிக்கச் செய்து, துயரத்தில் தவிக்கும் இதயத்தை விடுவித்தது. நவல், மெஹர் பாபாவைப் பற்றிக் கூறியதும், பாபா, “**என்னுடைய திரைப்படத்தில் நீங்கள் ஒரு முக்கிய அங்கம் வகிக்கப் போகிறீர்கள்**” என்றார்.

அப்போது அந்த மனிதர் இவ்வாறு வெளிப்படுத்தினார்: “எனக்கும் ஒரு திரைப்பட அரங்கம் உள்ளது..... நான் அதற்குச் சொந்தக்காரர்.....”

மெஹர் பாபா சிரித்துக்கொண்டே கூறினார், “**நான் உலக திரையரங்கைப் பற்றிக் கூறினேன். என்னிடம் வரும்போது நீங்கள் அது என்னவென்று கண்டுகொள்வீர்கள். ஆனால், உங்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அதிர்ஷ்டம் உங்களுக்காகக் காத்திருக்கிறது, மேலும் நீங்கள் எதையும் நினைத்து மனம் தளரவேண்டாம்.**” நவல், உடனே அவரிடம் பாபாவின் முகவரியைக் கொடுத்துவிட்டு, இருவரும் அங்கிருந்து புறப்பட்டனர். முகவரியைப் படித்ததும் கவலைகள் கலைந்து, நம்பிக்கையின் கதிர்கள் தென்பட்டன.

இப்படி, தனியாகக் கடற்கரையில் அமர்ந்திருக்கும் அந்த மனிதர் யார்? அவர் ஆழ்ந்த கவலையில் கலக்கமடைந்து, வேறு வழிதெரியாமல், கடலில் மூழ்கி, தற்கொலை புரியும் எண்ணத்தில் அங்கு அமர்ந்திருந்தார். ஏன்? அவருக்கு மிகவும் அழகான மனைவி, உயிருக்கும் மேலாக நேசித்தார், முற்றிலும் விசுவாசமுள்ளவராக இருந்து அவர் மனைவியின் சந்தோஷம் மற்றும் சௌகரியங்களுக்காகத் தன்னை அர்ப்பணித்தார். மனைவியின்

அனைத்து விருப்பங்களையும் பூர்த்தி செய்து வந்த பின்னரும், அவர் கணவரை இன்னொருவருக்காக விட்டுவிட்டார், வேறு எவருமல்ல அவர் கணவரின் இணைபிரியா நண்பன். இது அவரை ஏறக்குறைய பைத்தியம் போலாக்கி, தாங்க முடியாத துயரத்தைத் தந்தது. அந்த நாள்தான் அவர் உயிரைத் துறக்கும் தீர்மானத்தில் சௌபாட்டி கடற்கரைக்குச் சென்றார்.

மக்கள் தினமும் தற்கொலை செய்வதுண்டு, ஆனால், இந்த மரணத்தை எல்லாம் வல்ல இறைவன் அனுமதிக்கவில்லை. கடற்கரையில் நடக்கச் செல்வதுபோல காரணம் காட்டி, விரக்தியின் ஆழத்திலிருந்த அவர் இதயத்தைத் தூக்கி நிலைநிறுத்தினார். அவ்வேளையில், அந்த மனிதர் ஒரு புதுவாழ்வை அடையப்பெற்றாலும், இறுதியில் மெஹர் பாபாவின் ஆன்மீக உட்பணிக்கு ஓர் ஊடகமாக இருந்தார். அவர் மெஹர் பாபாவின் வட்டத்தில் இணைந்து, அவருடைய செயலாளராக சேவை புரியும் பாக்கியத்தைப் பெற்றவர், பெயர் சாஞ்சி (CHANJI).

ஃபெராம்ரோஸ் ஹொர்மஸ்ஜி தாதாசாஞ்சி (FERAMROZE H. DADACHANJI) மும்பையில், 1892, நவம்பர் 23ஆம் நாள் பிறந்தார். மும்பையில் பார்சி பள்ளிகளில் படித்து, கராச்சியில் ஒரு வருடம் கல்லூரி படிப்பை முடித்து, அதற்குப் பிறகு, பத்திரிகை துறையில் இணைந்தார். பல துறைகளில் பணிபுரிந்து, இறுதியாக மும்பை கிராண்ட் சாலையில் அமைந்த மாண்டலின் தியேட்டருக்குப் பங்குதாரர் என்ற முறையில் அதிபராக இருந்தார்.

தாதாசாஞ்சி என்றழைக்கப்பட்ட அவர், 31 வயதில் இவ்வண்ணம் மெஹர் பாபாவின் தொடர்பில் வந்து, அவரை அடிக்கடி சந்தித்து வந்தார். பாபா அவரை 'சாஞ்சி' என்ற புனைப்பெயரில் அழைத்து வந்தார். அவர் மூலமாக முழு தாதாசாஞ்சி குடும்பம் மட்டுமல்லாமல் ஏராளமான இதர பார்சி குடும்பங்களும் மெஹர் பாபாவின் அரவணைப்பில் வந்து வாழ்க்கையை அர்ப்பணித்தனர். சாஞ்சி, ஓர் இரக்கமான, மன்னிக்கும் குணம்படைத்த மனிதர். அவருடைய முன்னாள் மனைவி மற்றும் பங்குதாரராக இருந்த தோழர் இருவரிடமும் ஒருபோதும் வெறுப்புணர்வைக் காட்டாமல் மன்னித்தார்.

ஆரம்பகால சீடரான அர்தேஷிர் ஈரானி (ARDESHIR IRANI), முதல் முறையாக மெஹர் பாபாவை சந்தித்த வேளையில், "எனக்கு இறையுணர்வைத் தந்தருளுங்கள்!" என்று தைரியமாக வேண்டினார்.

மெஹர் பாபா அவரிடம் முழுத் தயார் நிலைக்கு வரும்வரை, பொறுமையாக இருக்குமாறு கூறினார். இருந்தும் பாபாவை சந்திக்கும் போதெல்லாம் தொந்தரவு செய்துவந்தார்.

இறுதியாக, அர்தேஷிரின் அப்பாவித்தனமான அணுகுமுறையைக் கண்டு எரிச்சலடைந்து, பாபா இவ்வாறு எச்சரித்தார்: **"உண்மையில் உங்களுக்கு இறையுணர்வு வேண்டுமா? சமுத்திரம் முழுவதுமாக உங்களது கோப்பையில் வந்துவிடும்! ஆனால், கோப்பை உடைந்து போனால் அதற்கு நான் பொறுப்பல்ல!"**

பாபா கூறியதன் அர்த்தம் அர்தேஷிருக்குப் புரிந்தது. இறை நிலையை அடையும் வேளையில் உடலைத் துறக்க நேரிடும் என்ற எண்ணத்தில் திகைப்படைந்தார். அன்றிலிருந்து அவர் அதைப் பற்றிய பேச்சே எடுக்கவில்லை.

மேலும் ஒரு சீடர், ராவ்ஸாஹேப் (RAOSAHEB) என்றழைக்கப்படும் கய்குஷ்ரு எஸ்ஃபந்தியார் அஃப்ஸேரி (KAIKHUSHRU ESFANDIAR AFSERI), மெஹர் பாபாவைப் பற்றி, சகல பெர்ஸியன் நண்பர்களான பெஹராம்ஜி மற்றும் அர்தேஷிர் மூலமாகத் தெரியவந்தார். 1922ஆம் வருடம் ஒரு முறை பாபாவின் தரிசனத்திற்காக மன்ஸில்-எ-மீமுக்கு வந்தவர், அப்போது, பாபா ஒருவரையும் பார்க்க அனுமதிக்காததால் திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று.

பெரிதும் ஏமாற்றமடைந்த ராவ்ஸாஹேப் இவ்வாறு நினைத்தார்: "ஒருவரின் மதிப்பை அடையாளம் கண்டுகொள்ளாத அளவிற்கு இது என்ன தர்பார்? நான் கடவுளைத் தேடி அலையும் ஒரு நேர்மையான பக்தன். ஆனால் மெஹர் பாபா எனக்கு தரிசனம் வழங்க மறுக்கிறார்." இன்னொரு முறை மெஹர் பாபாவை அணுகக்கூடாது என்று கங்கணம் கட்டி, நீண்ட காலம் அந்த வெறுப்புணர்வை தன் மனதில் அடக்கிக்கொண்டார்.

ஒரு நாள் இரவில் மெஹர் பாபா, ராவ்ஸாஹேபின் கனவில் தோன்றி, **"ஒரு சத்குருவின் அவையில் ஒருவர் 'நாய்-வாழ்க்கை' வாழவேண்டும். உங்களை வெளியில் தூக்கி எறிந்தாலும், அவர் வாசலில் திரும்பி வந்து கெஞ்சிக் கூத்தாட வேண்டும்"** எனக் கூறினார். இந்தக் கனவு அவரைப் பெரிதும் அமைதியிழக்கச் செய்தது.

1924ஆம் ஆண்டு, ராவ்ஸாஹேப், பைதூலை சந்தித்தபோது, அவரை மெஹர் பாபாவிடம் அழைத்து வந்தார். பாபா அவரிடம், **"உங்களுக்கு என்ன வேண்டும்?"** என்றார்.

"உங்கள் தர்பாரில் இருக்க விரும்புகிறேன்" ராவ்ஸாஹேப் பதிலளித்தார்.

பாபா உடனே, **"நான் உங்களை அழைக்கும் நேரம் வரும். நான் அழைக்கும் எந்த வேளையிலும் என்னிடம் வர ஆயத்தமாக இருங்கள். உங்களை நாளை வருமாறு அழைக்கலாம், இரண்டு வாரங்கள் கழித்து, அல்லது நான்கு மாதங்களுக்குப் பின்னர், எப்போது அழைத்தாலும் உடனே என்னிடம் வரத் தயாராக இருக்க வேண்டும்"** என்று கூறியது, அவரை மகிழ்ச்சியடைய செய்து, பழைய வெறுப்புணர்வை முற்றிலும் அகற்றியது.

1924 ஜனவரி மெஹர் பாபா தனிமையில் அமைதியாக இருந்தார். பெஹராம்ஜி, குஸ்தாஜி இருவர் மட்டுமே பரூச்சா பங்களாவில் உடனிருந்தனர். ஜனவரி 20ஆம் நாள் பூனா, லோனவாலா, அஹமதுநகரில் வாழும் அனைத்து மண்டலியையும் மும்பைக்கு வரவழைத்தார். கூட்டத்தில் அவர் மண்டலியிடம், **"உங்களில் யார் ஒருவர் மனமார விரும்பி, எனக்காக நீண்டகாலம் அர்ப்பணம் செய்யத் தயாராக இருக்கிறாரோ, அவர் மட்டுமே என்னுடன் வாழ முடியும்"** என்று தெளிவாக எடுத்துரைத்தார்.

டாக்டர் கனி, ராம்ஜூ இருவரையும் தனியாக அழைத்து, பாபா இவ்வாறு கூறினார், "**அடுத்த மாதம் இறுதிக்குள் நிறைவேறும் என்று நான் உங்களுக்கு அளித்த நம்பிக்கையும், வாக்குறுதியும் இப்போது நிறைவுறாமல் போகுமென எடுத்துக் கொள்ளுங்கள். கடந்த இரண்டு வருட காலம் என்னுடனிருந்தது வீண் போயிற்று, பயனளிக்கவில்லை என்று நீங்கள் நினைத்தால், மேலும் இவ்வளவு காலம் என்னை ஓர் ஆன்மீக குருநாதர் என என்மீது நீங்கள் நம்பிக்கை வைத்து, இப்போது அதை இழந்திருந்தால், அதற்காக நான் வருந்துகிறேன், உங்களிடம் மனப்பூர்வமாக மன்னிப்புக் கோருகிறேன். இந்நிலையில், நீங்கள் என்னுடன் இருக்க விரும்பினால் வரையறா காலம்வரை இருக்கலாம், அதே வேளையில் பழைய நிபந்தனைகள், மற்றும் எதிர்பார்ப்புகள் எதுவுமே இல்லாமல் போய்விடும். எதுவாயினும், உங்களை நான் ஏமாற்றி விட்டதாக நீங்கள் நினைத்தால், உங்கள் விருப்பப்படிக் கண்டனத்தை வெளிப்படுத்தலாம்.**"

மெஹர் பாபா தொடரந்து அவர்களிடம் கூறினார், "**நீங்கள் விரும்பினால், இல்லங்களில் இருந்துகொண்டு உங்கள் கடமைகளைச் செய்வதன் மூலம் என்னுடனான தொடர்பைத் தக்க வைத்துக் கொள்ளலாம். ஆனால் அது, நீங்கள் என்னுடைய ஆன்மீக அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்தால் மட்டுமே முடியும்.**" டாக்டர் கனி, ராம்ஜூ இருவருக்கும் மெஹர் பாபா மீதான அசைக்க முடியாத நம்பிக்கையில் எவ்வித கேள்விக்கும் இடமில்லை, மேலும் இரண்டு வருடகாலம் அவருடன் இருந்ததை வீண் என்றும் அவர்கள் கருதவில்லை. ஆனால், அவர்களின் தனிப்பட்ட காரணங்களுக்காக, குடும்பத்துடன் இருந்துகொண்டு பாபாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய முடிவு செய்தனர். அவர்களின் முடிவைத் தெரிவித்ததும் பாபா கூறினார், "**என்மீது உங்களுக்குத் திடமான நம்பிக்கை இருந்தால், மேலும் நானாகிய அந்த 'ஏக இறைவனிடம்' நீங்கள் நேசமும், நம்பிக்கையும் வைத்திருந்தால், இந்த வாழ்க்கையில், இதே உடலில் - என்னுடன் இருந்தாலும், இல்லாமலிருந்தாலும் அல்லது எனக்கு எதிராகச் சென்றாலும் கூட - இரவுக்குப் பின் தொடரும் பகல் போல - நீங்கள் ஆன்மீக விழிப்புணர்வை அடைவீர்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.**"

பாபா அப்போது டாக்டர் கனி, ராம்ஜூ இருவரிடமும் கேட்டார், "**நான் பாரசீகம் சென்று திரும்பி வந்ததும், ஓரிரு மாதங்களுக்கு உங்களை என்னுடனிருக்க அழைக்கலாம், வருவீர்களா? அப்போது, ஆன்மீக உள் இரகசியங்களை உங்களுக்கு விளக்குவேன். உங்களில் சிலருக்கு மட்டும் அவ்வாறு செய்வேன் என்று நான் ஏற்கனவே வாக்குறுதி அளித்துள்ளேன்.**"

இருவரும், "நாங்கள் உங்களோடு இருக்க விரும்புகிறோம், ஆனால் தேவைப்படும் வேளையில் எங்கள் இல்லங்களுக்குச் செல்ல மட்டும் அனுமதி வழங்குங்கள்" என்று முறையிட்டனர்.

பாபா அதற்கு இணக்கம் தெரிவித்தார், ஆனால் தொடர்ந்து, “**இந்நேரத்திலிருந்து, தனிப்பட்ட முறையில், உங்கள் இருவரையும் சம்பந்தப்பட்ட எதற்கும் நான் பொறுப்பல்ல**” என்று கூறினார்.

மெஹர் பாபா ஜனவரி 20 அன்று அவருடைய நீண்டகால உபவாசத்தைக் கைவிட்டு, தினமும் ஒரு முறை திட ஆகாரம் உட்கொண்டார். ஆரம்ப காலத்திலிருந்தே அவருடைய வாழ்வின் அனைத்து செயல்களிலும் மூடி மறைந்திருந்த இரகசியங்கள், உலகின் அனைத்தையும் பாதித்தன. சில நேரங்களில் மெஹர் பாபாவின் மனநிலை, அவரின் ஏகாந்தவாசம் அல்லது உபவாசத்தின் காரணமாக உலகின் சம்பவங்களோடு ஒன்றிப்போவதை, மண்டலி செய்தித்தாள்களில் வரும் செய்திகளோடு இணைத்து பார்த்தபோது தெளிவாகப் புலப்பட்டது. உதாரணமாக, மெஹர் பாபா, ஏதேனும் மோசமான மனநிலையில் இருந்தது அல்லது மண்டலியில் சிலரிடம் மிகுந்த கோபமடைந்தது இவை அனைத்தும் அப்போது உலகில் நடக்கும் சம்பவங்கள் - ரயில் விபத்து, கப்பல் கடலில் மூழ்குவது, அல்லது உலகின் ஏதேனும் பாகத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு, வறட்சி இதுபோன்ற விபத்துக்கள் அல்லது இயற்கைப் பேரழிவுகள் - செய்திகளாக உலகச்செய்திகள் மையங்களிலிருந்து வெளிவந்தன. ஒரு சம்பவத்தைக் குறிப்பாக எடுத்துச் சொன்னால், மெஹர் பாபா அவருடைய உபவாசத்தைக் கைவிட்ட அன்று, ஜனவரி 20ஆம் நாள் ரஷ்யாவின் கம்யூனிஸ்டு தலைவர் லெனின் படுகொலை செய்யப்பட்டார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, தாயார் ஷிரீன்மாய், பெரிய தாயார் டவ்லாவுடன் பூனாவிலிருந்து வந்தவர் அவரது மகன் மெலிந்து, மிகுந்த பலவீனமாக இருப்பதைக் கண்டு கண்டித்தார், “மேர்வான், நீ ஏன் உணவு உண்ணாமல் பட்டினி கிடக்கிறாய்? நீ என்ன பைத்தியமா?”

சிரித்துக்கொண்டே பாபா பதிலளித்தார், “**ஆமாம், முழு உலகமும் பைத்தியம் - நான் அல்ல! நான் அந்தப் பைத்தியத்திற்கு வைத்தியம் செய்பவன்!**”

அதற்கு ஷிரீன்மாய், “நீ, பைத்தியக்காரத்தனமாக உபவாசம் இருக்கும் போது, பைத்தியத்தைக் குணமாக்கும் நம்பிக்கை எங்கிருந்து வரும்?” என்று வினவினார்.

“**அவர்களை குணப்படுத்த நான் உபவாசம் இருக்க வேண்டும்.**”

“பைத்தியத்தை மறந்து நீ நன்றாகச் சாப்பிடு!” என்றார் ஷிரீன்மாய்.

“**அவர்களை குணப்படுத்த உங்கள் வயிற்றில் கருவாக வந்து பிறவி எடுத்தேன். எனது பணியை நான் செய்யாவிடில் இதிகாசத்தில் உங்கள் பெயருக்கு இழிவு வரும்!**” இதைக்கேட்டு ஷிரீன்மாய் அடக்க முடியாமல் சிரித்தார்.

1924ஆம் ஆண்டு ஜனவரி மாதம், மெஹர் பாபாவின் பெரிய சகோதரர் ஜாம்ஷெட் (JAMSHED), ஹஸ்ரத் பாபாஜானின் மோசமான உடல்நிலை மற்றும்

அமைதியற்ற மனநிலையைக் குறிப்பிட்டு, பாபாவிற்குக் கடிதம் எழுதியிருந்தார். பாபாஜானின் வயது அப்போது நூறைத் தாண்டி இருந்தாலும், சாதாரணமாக அவரின் உடல்நிலை பிரகாசமாகவும், துடிப்புடனும் இருக்கும். விசித்திரமான ஒன்று என்னவென்றால், மெஹர் பாபாவின் மென்மையான உடல்நிலை, பாபாஜானின் உடல்நிலையுடன் எதேச்சையாக ஒன்றியிருப்பது போலத் தோன்றும். இருவரின் உடல் அறிகுறிகளும் ஒன்றாகவே இருக்கும் என்பதை மண்டலி கண்டறிந்தனர். மேலும் பாபாஜானின் உடல்நிலை சீரடைவது வரை மெஹர் பாபாவின் உடல்நிலையிலும் முன்னேற்றம் தெரிவதில்லை.

ராஜகம்பீர தோற்றமிக்க சத்குரு நாராயண் மஹாராஜ், (அவரைப் பற்றி மெஹர் பாபாவின் சீடர்கள் கேள்விப்பட்டது தவிர பார்த்தது இல்லை) மும்பைக்கு விஜயம் செய்தார். 1924 பிப்ரவரி 2 அன்று நாராயண் மஹாராஜின் தரிசனத்திற்காக குஸ்தாஜியுடன் பல மண்டலியை பாபா அனுப்பி வைத்தார். இதுவே, முதன்முறையாக, மண்டலியில் சிலர் நாராயண் மஹாராஜை சந்தித்தது. குஸ்தாஜி, மஹாராஜின் அவையை அணுகியதும், சத்குரு நாராயண் மஹாராஜ் அவருடைய சீடர்களுடன் எழுந்து நின்று மரியாதை செலுத்தியது, மெஹர் பாபாவிற்கு அவர்கள் குஸ்தாஜியின் மூலமாக அளித்த மரியாதையாகும்.

1920ஆம் வருடம், மஹாத்மா காந்தி, இந்தியாவில் முன்னணியில் இருந்த அரசியல் தலைவர் ஆவார். 1923 நவம்பர் மாதம் மெஹர் பாபா கராச்சியில் இருந்தபோது, முதல் முறையாக மஹாத்மா காந்தியுடன் தொடர்பு ஏற்பட்டது. அவ்வேளையில் மெஹர் பாபா மண்டலியிடம் இவ்வாறு குறிப்பிட்டார்: "**காந்தி, சிறையிலிருந்து விரைவில் விடுவிக்கப்படுவார்.**" பாபா கூறியதுபோல பிப்ரவரி 5 அன்று சிறையிலிருந்து வெளிவந்தார். மெஹர் பாபா, ருஸ்தத்திற்கு கடிதம் எழுதி சத்குரு உபாஸனி மஹாராஜின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தில் ஒரு பிரதியை மஹாத்மா காந்திக்கு அனுப்பி வைத்து, மஹாராஜ் மேற்கொள்ளும் கடுமையான தவம் மற்றும் உபவாசத்தைப் பற்றியும் அவருக்கு எடுத்துரைக்குமாறு கூறினார். ருஸ்தம் அவ்வாறே செய்தார். மெஹர் பாபாவின் முதல் தொடர்பின் விளைவு, பின்னரே வெளிப்பட்டது.

1924, பிப்ரவரி 14ஆம் நாள் மெஹர் பாபா மண்டலியுடன் பாரசீக பயணம் மேற்கொள்ள இருந்ததால், பிப்ரவரி 12 அன்று (ஸொராஸ்டிரிய நாட்காட்டிப்படி) மெஹர் பாபாவின் முப்பதாவது பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கடந்த ஓராண்டு காலமாக சத்குரு உபாஸனி மஹாராஜ் அவரை மூங்கில் கூண்டில் சிறை வைத்திருந்தாலும், மெஹர் பாபாவின் பிறந்தநாள், பிப்ரவரி 12ஆம் நாளன்று (ஸொராஷ்டிரிய நாள்காட்டிப்படி) மஹாராஜ் கூண்டைவிட்டு வெளியே வந்தது அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

மஹாராஜை சிறைகொண்ட அக்கூண்டு,
இரகசியமாக இறைப்பெருங்கடலை உள்ளடக்கியது.
மேர்வானின் பிறப்பின் மரியாதையின் நிமித்தம்
அப்பெருங்கடல் அதனை விடுவித்ததை யார்தான் கண்டது?

கடந்த சில வாரங்களாக மெஹர் பாபா அவருடைய பாரசீக பயணத்தைத் திட்டமிட்டு வந்தார். ஜனவரி 29 அன்று மண்டலியில் சிலர் பாரசீக தூதரகத்திற்குச் சென்று அவரவர் பாஸ்போர்டைப் பெற்றுக்கொண்டனர்.

அதற்குப் பிறகு, மெஹர் பாபா ஈரான் செல்வதைப் பற்றி மண்டலியிடம் விளக்கும் போது, பாக்தாத் வழியாகச் செல்லாமல் பந்தர் அப்பாஸ் வழியாகச் சென்றால் செலவுகள் குறையும் என்பதை எடுத்துரைத்தார்.

உடன் செல்லும் அனைவரிடமிருந்தும் பயண சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்வதன் அடையாளமாக, பாபா பத்திரத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டார்.

பிப்ரவரி 22ஆம் நாள் காலை 9.30 மணிக்கு 'எஸ்.எஸ்.வெரேலா' (SS VERELA) கப்பல் வழியாக மும்பை துறைமுகத்திலிருந்து புறப்பட்டனர். மெஹர் பாபா அவருடைய தாய்நாட்டுக்கு மறுபடியும் பயணம் செல்வதில் பூரிப்படைந்தார். உடன் செல்லாதவர்களை அன்புடன் அரவணைத்து விடைபெற்றார். பாபாவுடன் எட்டு மண்டலி - ஆதி, பைதூல், பெஹராம்ஜி, குஸ்தாஜி, மாஸாஜி, நெர்வஸ், பாதிரி, வஜிப்தர் - பயணம் செய்தனர். இந்த இடைப்பட்ட காலத்தில் டாக்டர் கனி, ராம்ஜூ அப்துல்லா, ருஸ்தம், பார்சோப் இவர்கள் அவரவர் இல்லங்களிலிருந்து கொண்டு பாபாவின் வருகைக்காகக் காத்திருக்கவேண்டும் என பாபா கூறியிருந்தார். ஷிரீன்மாய், குல்மாய் மற்றும் இதர பெண்மணிகள், கஸ்பாபேட் மண்டலியுடன் பாபாவை வழியனுப்ப மும்பைக்கு வந்திருந்தனர். பாபா கூறியதற்கிணங்க தவுலத்மாயும், மகள் மெஹராவும் பூனாவுக்கு வந்து அவர்களின் குடும்ப இல்லத்தில் தங்கியிருந்தனர்.

கப்பலில் பயணம் செய்யும் வேளையில், குஸ்தாஜி மண்டலிக்கு உணவும், பாபாவுக்காக ஒரு காய்கறியும் தயார் செய்தார்; ஆதி, பெஹராம்ஜி இருவரும் கடல் பயணத்தால் மிகவும் சிரமப்பட்டனர்.

கப்பல் கராச்சி சென்றதும், பீலாமாய் மற்றும் அன்பர்கள் பூக்கள், உணவு பண்டங்களுடன் மெஹர் பாபாவை மிக்க மரியாதையுடன் வரவேற்றனர்.

பயணத்தின் போது, ஷியா (SHIA) மற்றும் ஸுன்னி (SUNNI) முஸ்லிம் பிரிவைச் சார்ந்த இரண்டு முஸல்மான்கள், சீற்றமடைந்து ஒருவர் இன்னொருவர் மதத்தைப் பழிகூறி சூடான விவாதத்தில் ஈடுபட்டனர். இதில் வேடிக்கை என்னவெனில் இருவரும் உறவில் மைத்துனர்கள். ஷியா வகையைச் சார்ந்த அந்த முஸல்மான், மெஹர் பாபாவால் மிகவும் ஈர்க்கப்பட்டு, வாக்குவாதத்திற்கிடையே பாபா பக்கம் திரும்பி, "நீங்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்கள், ஸார்?" என்று கேட்டார்.

பாபா புன்முறுவல் செய்துகொண்டே கூறினார், "**எனக்கு அனைத்து மதங்களும் ஒன்றுதான்**."

பாபாவுடன் சிறிது நேரம் உரையாடியதைத் தொடர்ந்து, அந்த முஸல்மான், 'குரு-சீடன்' உறவை பாபா நம்புவதாக இருந்தால், அவர் நிச்சயமாக, பாபாவை குருவாக ஏற்றுக் கொள்வதாகக் கூறினார். இத்தகைய சூடான விவாதத்திற்குப் பின்னர் இரு மைத்துனர்களும், ஏற்கனவே திட்டமிட்டபடி மெக்காவுக்கு இணைந்து பயணம் மேற்கொள்ளாமல் பாக்தாத் (BAGHDAD) நகரை வந்தடைந்ததும் பிரிந்து சென்றனர்.

கப்பல் பாரசீக வளைகுடாவில் நுழைந்ததும் கடல் அமைதியாக இருந்தது. பஹ்ரையின் (BAHRAIN) துறைமுகத்தைக் கடந்து பஷயிர் (BUSHIRE) நெருங்கியதும் பலத்த இடி மின்னலுடன் புயல் வீசியது. மண்டலி கூலிகளின் உதவியோடு கப்பலிலிருந்து சுமைகளை இறக்கி, கோவேறுக் கழுதைகள் மீது ஏற்றி, பஷயிர் நகரில் அமைந்த குலாம் ஹுஸைன் லோதி இல்லத்தில் சென்று தங்கியிருந்தனர்.

ஏறக்குறைய அனைத்து மண்டலியும் உடல்நலம் குன்றி இருந்ததால் பாபா, ஷிராஸ் நகரம் (SHIRAZ) செல்ல முடிவு செய்தார். ஷிராஸ் பூந்தோட்டங்களுக்குப் புகழ்பெற்றது மட்டுமின்றி, மெஹர் பாபாவிற்கு மிகவும் பிரியமான கவிஞர் ஷம்ஸுதீன் ஹஃபீஸ் (SHAMS-UD-DIN HAFIZ) என்பவரின் சமாதி அமைந்த இடமுமாகும். அடுத்த நாள் பாதிரி ஜுரத்தால் அவதிப்பட்டு பலவீனமான இருந்ததால் பயணம் செய்ய முடியாத நிலையில் இருந்தார்.

பாக்தாத் நகரிலிருந்து மும்பை செல்லும் கப்பல் தயாராக இருந்ததை அறிந்து, மண்டலியின் உடல்நிலையை கருத்தில்கொண்டு, பாபா, மும்பைக்கு அவரகளைத் திருப்பி அனுப்ப முடிவு செய்தார். பைதூல், பெஹராம்ஜி இருவரையும் பந்தர் அப்பாஸிலும் (BANDAR ABBAS), பாதிரியை கராச்சியிலும் (KARACHI) இறங்குமாறு அறிவுறுத்தி, பாபா இதர மண்டலியுடன் பயணத்தைத் தொடர்ந்தார்.

கப்பலில் சில நேபாள நாட்டு கூர்க்காக்கள் மெஹர் பாபாவை சந்தித்து, அவரது வெவ்வேறு அம்சங்களையும் வெளிப்பாடுகளையும் கண்டு வியப்படைந்து, மிகவும் நெருக்கமான தோழர்கள் போலப் பழகினர். பாபாவை நேபாளத்திற்கு விஜயம் செய்யுமாறு அனைவரும் அன்புடன் அழைப்பு விடுக்கவே மெஹர் பாபாவும் அழைப்பை ஏற்றுக்கொண்டு, பந்தர் அப்பாஸிலிருந்து காட்மண்ட்க்கு (KATHMANDU) ரயிலில் பயணம் செய்ய முடிவு செய்தார். 1924, மார்ச் இரண்டாவது வாரத்தில் கராச்சியிலிருந்து நேபாளுக்குப் (NEPAL) புறப்பட்டனர். ஹைதராபாத், லக்நவ் நகரங்களைக் கடந்து ரயில் நேபாள எல்லையில் அமைந்த ரக்ஸல் (RAXAUL) நகர் வந்து சேர்ந்தது.

மெஹர் பாபா, உபாஸனி மஹாராஜின் சீடர் யஷ்வந்த் ராவ் வழங்கிய கம்பளி கோட்டையும், கன்னோபா ராவ் தயார் செய்த காலணியையும் அணிந்து வந்தார். ஏதோ விளக்க முடியாத காரணங்களுக்காக மெஹர் பாபா வேறு எந்தக் கோட்டும், காலணியும் அணிய மறுத்தார்.

அப்போது காட்மண்ட் நகரில் திபெத்திய புத்தர்களின் மாநாடும், மதம் சம்பந்தப்பட்ட கண்காட்சியும் நடைபெற்று வந்ததால், மெஹர் பாபா, நேபாள தேசத்திற்குள் பயணம் செல்லும் எண்ணத்தை விட்டுவிட்டு, தனது சீடர்களுடன் கபீரின் சமாதி இருக்கும் மகர் (MAGHAR) நகருக்குச் சென்று, இரண்டு நாட்கள் அங்கே தங்கியிருந்தார். 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு புகழ்பெற்ற கவியும், சத்குருவுமான கபீர் (SADGURU KABIR) ஒரு முஹமதிய நெசவாளர் குடும்பத்தில் வளர்ந்து வந்தார். ஆனால் அவர் ஒரு பிராமண விதவையின் மகன், குழந்தையில்லா தம்பதியரின் வளர்ப்பு மகனாக வாழ்ந்து வந்ததாகக் கூறப்படுகிறது.

இந்துக்கள், முஸ்லிம்கள் இருவரும் கபீரை வணங்கி வந்தனர். கபீர் அவரது உடலைத் துறந்தபோது அவரைப் பின்பற்றிய இந்து, முஸ்லிம்கள் இருவரும் இறுதி சடங்குமுறை குறித்து விவாதம் செய்தனர் (முஸ்லிம்கள் உடலை அடக்கம் செய்ய, இந்துக்கள் தகனம் செய்வது பழக்கம்). பிரபலமான புராணக்கதைப்படி இருதரப்பினரும் கபீரின் உடலிருந்த பெட்டகத்தைச் சூழ்ந்து சண்டையிட்டு, இறுதியில் பெட்டகத்தைத் திறந்தபோது அவர் உடலிருந்த இடம் பூக்களால் நிரம்பியிருந்ததைக் கண்டனர்.

எனவே, கபீருக்கு இரண்டு சமாதிகள் அருகருகே கட்டப்பட்டு - ஒன்றை இந்துக்களும் மற்றொன்றை முஹமதியர்களும் வழிபட்டு வருகிறார்கள். அவரவர் வழிபடும் கல்லறையையே உண்மையானது என்று நம்புகிறார்கள். பாபா இரண்டு இடங்களிலும் அவரது மரியாதையைச் செலுத்தினார்.

கபீருக்காக அர்ப்பணிக்கப்பட்ட புனித கோயிலைப் பார்வையிட்ட பின்பு, மெஹர் பாபா ஏறக்குறைய ஐம்பது ஏழைகளுக்கு மண்டலி தயார் செய்த உணவை வழங்கினார். இது மண்டலி எடுத்துச்சென்ற உணவின் பளுவை வெகுவாகக் குறைத்ததில் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். பாபா எஞ்சியிருந்த அனைத்து உணவு தானியங்களையும் ஏழைகளுக்கு அள்ளி வழங்கினார்.

மெஹர் பாபா, மகர் நகரில் இருந்தபோது, ஆங்காங்கே அலைந்து திரியும் சாதுக்களிடையே ஒரு மோதல் ஏற்பட்டது. அவர் தலையிட்டு மோதலைத் தடுத்து நிறுத்தி, உலகைத் துறந்த பிறகு சாதுக்கள் வாழும் முறையைப் பற்றி அவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

அதன் பின்னர், உடனடியாக மெஹர் பாபா நான்கு மண்டலியுடன் கான்பூரிலிருந்து ரயிலில் புறப்பட்டுச் சென்றார். பயணத்தின் போது பாபா, வஜிப்தரை மும்பைக்கும், மாஸாஜியை பூனா, மற்றும் ஆதி, குஸ்தாஜி இருவரையும் அஹமதுநகருக்கும் செல்லுமாறு உத்தரவிட்டார். ஸக்கோரியிலிருந்து பத்து மைல் வட்டத்திற்குள் ஓரிடத்தைத் தேர்ந்தெடுக்குமாறும், அங்கே மண்டலியுடன் தங்கவிருப்பதாகவும் குஸ்தாஜி, ஆதி இருவருக்கும் மெஹர் பாபா அறிவுறுத்தினார். நான்கு மண்டலியும் புறப்பட்டுச் சென்ற பின்பு, பாபா ‘இடார்ஸி’ (ITARSI) ரயில் நிலையத்தில் இறங்கினார்.

மெஹர் பாபா மிகவும் களைப்பாக இருந்ததால் ரயில் நிலையத்திலேயே படுக்கையை வைத்து அதன் மீது தலையை சாய்த்தார். சற்று

தூரத்திலிருந்து பாபாவை கவனித்துக் கொண்டிருந்த டிக்கெட் கலெக்டர் ஒருவர் சந்தேகத்தில் கத்தினார், "அங்கே தூங்கிக் கொண்டிருக்கும் அவரைக் கைது செய்யுங்கள்! அவர் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்கிறார்!"

டிக்கெட் கலெக்டர் பாபாவை அணுகி மிரட்டியதும், பாபா சட்டைப் பையிலிருந்த டிக்கெட்டை எடுத்துக்காட்டிக் கூறினார், "**இதோ என்னுடைய டிக்கெட்**, **ஸார்**!" அவ்வேளையில் மெஹர் பாபாவின் முகத்தில் தென்பட்ட தெய்வீக ஒளியைக் கண்டு டிக்கெட் கலெக்டர் வியப்பில் ஆழ்ந்தார். மெஹர் பாபாவை பணிவுடன் தலைவணங்கி டிக்கெட் கலெக்டர் அவரைத் தனியாக விட்டுச்சென்றார்.

பல நாட்கள் மெஹர் பாபா இடார்ஸியில் அலைந்து திரிந்து சாதுக்கள் மற்றும் இறை போதையிலிருக்கும் மஸ்துக்களையும் தொடர்பு கொண்டார். மெஹர் பாபா அங்குத் தனியாக மேற்கொண்ட பயண விபரங்கள் எதுவும் பதிவுசெய்யப்படவில்லை. ஆனால், பாபா அவருடைய ஆன்மீக உட்பணிக்காக இடார்ஸியில் தனியாக இருந்த விஷயம் இரகசியமாகவே இருந்தது. மெஹர் பாபாவின் வாழ்வில் அவர் மண்டலி எவரும் உடனில்லாமல் தனியாக இருந்தது, இதுவே முதலும் கடைசியுமாகும்.

ஒரு வாரகாலமாகத் தனியாக இருந்த மெஹர் பாபா, 1924ஆம் ஆண்டு மார்ச் மாதக்கடைசியில் மெஹராபாத்திற்குத் திரும்பி வந்து, அனைத்து மண்டலியையும் அங்கே வரவழைத்தார். பாரசீக தேசத்திற்குப் பயணம் செய்ததில் ஏன் இவ்வளவு முயற்சிகள்? ஏன் இத்தனை மாற்றங்கள்?

அவதார புருஷனின் உள்ளளவிலான பணி, உலகளாவிய அளவில் இருக்கும். மேலும், அவருடைய குறிப்பிட்ட செயல்கள், பயணத் திட்டங்களில் ஏற்படும் மாற்றங்கள் இவற்றைப் புரிந்துகொள்ள இயலாது. அவதார புருஷனின் ஒவ்வொரு செயலும் பல்லாயிரக்கணக்கான மைல் தொலைவில், கண்களுக்கு எட்டாத விளைவுகளை உண்டாக்கும். சில நேரங்களில், மெஹர் பாபா ஒருவரிடம் பேசிக்கொண்டிருப்பதை கவனிக்கும் இன்னொருவர், பாபாவின் வார்த்தைகள் தனக்காகச் சொல்லப்படுவதாக உணர்ந்தார். பாபாவின் செயல்களில் மறைந்திருக்கும் ஆற்றலின் அளவு, கற்பனைக்கும் அப்பாற்பட்டது.

பாரசீக பயணத்தின் ஓர் அம்சம் மற்றும் அவருடைய திட்டங்களில் ஏற்படும் மாற்றங்கள் அனைத்தும், ஒருவேளை, அப்போதைய பாரசீக மக்களுக்கும், அந்த நாட்டிற்காகவும் பாபா செய்த ஆன்மீக உட்பணியைக் குறிப்பதாகும். (பாபா, அப்போது இதை மறைமுகமாக மண்டலிக்கு உணர்த்தினார்). மெஹர் பாபாவின் பாரசீக பயணம் அங்கு வாழ்ந்த மக்களின் உணர்வு நிலையின் மாற்றத்திற்கு வித்திட்டது.

மெஹர் பாபாவின் பாரசீக பயணத்திற்குப் பிறகு, மேலும் நன்மை பயக்கும் விதத்தில் அங்கே மாற்றங்கள் தோன்றின. ஒன்றரை வருடங்கள் கடந்ததும், ரேஸா கான் (REZA KHAN), ஷாவாக (KING) பதவி ஏற்றார். அவரால் சில காலம் அந்த நாடு பெரும் நன்மையடைந்தது. மேலும், பாபாவின் பயணத்தைத் தொடர்ந்து, மதக் கலவரங்களும், ஸொராஸ்டிரியர் போன்ற

சிறுபான்மையினரைத் துன்புறுத்துவதும் மறைந்து, படிப்படியாக நவீனமயத்தை நோக்கி முன்னேறியது.




குவெட்டா பயணம்

மெஹராபாத் (MEHERABAD), மன்மாட் (MANMAD),
மும்பை (MUMBAI), அஹமதாபாத் (AHMEDABAD),
கராச்சி (KARACHI), ஸக்கர் (SUKKUR), குவெட்டா (QUETTA)




அரபிக்கடல் (ARABIAN SEA)            வங்காள விரிகுடா (BAY 0F BENGAL)

அகில இந்திய பயணம்

மும்பை (MUMBAI), பூனா (POONA), ராய்சூர் (RAIPUR), மதராஸ் (MADRAS), ஊட்டி (OOTY), குன்னூர் (COONOOR), மேட்டுப்பாளையம் (METTUPALAYAM), மதராஸ், கொல்கத்தா (KOLKATA), முகல் ஸெராய் (MUGHAL SARAI), லக்னோ (LUCKNOW), ஹரிதுவார் (HARIDWAR), ரிஷிகேஷ் (RISHIKESH), மொராதாபாத் (MORADABAD), லக்னோ, ஜான்ஸி (JHANSI), போபால் (BOPAL), உஜ்ஜயின் (UJJAIN), ஓம்கரேஷ்வர் (OMKARESHWAR), ரத்லம் (RATLAM), பரோடா (BARODA), பரூச் (BAROOCH), மும்பை, பூனா, பெல்காவ்ம் (BELGAOM), கோவா (GOA), மும்பை, பூனா, அஹமதுநகர் (AHMEDNAGAR)



ஃபெராம்ரோஸ் (சாஞ்சி) தாதாசாஞ்சி



மெஹர் பாபா, **1923**

# கமேளா யோகா - உடல் உழைப்பு

**(Ghamela Yoga - Physical Labour)**

மெஹர் பாபா 1924 ஏப்ரல் மாதம் மெஹராபாத் வந்ததும், கஸ்பாபேட் மண்டலி அர்ஜுன், விஷ்ணு மற்றும் பலரை மெஹராபாத்திற்கு அழைத்தார். பாழடைந்த சில கட்டிடங்களை சீரமைக்கும் நோக்கத்தில் கட்டிட வேலைகளுக்காக உடலால் உழைக்க வேண்டும் என்று பாபா அறிவுறுத்தினார். அதிகாரபூர்வமாக, பாபா இதை 'கமேளா யோகா' (GHAMELA YOGA) என்று குறிப்பிட்டார். கமேளா - பாண்டு என்றழைக்கப்படும் வட்ட வடிவில் விரிந்த கொள்கலன் - கல், மண் போன்றவற்றை எடுத்துச்செல்ல, கொத்தனார் பயன்படுத்துவது. இவ்வாறு மண்டலி அனைவரும் கடுமையான வேலைகளில் ஈடுபட்டு வந்தனர். பாபாவுக்காக ஒரு சிறிய குடிலும் எழுப்பப்பட்டது.

மதிய உணவுக்குப் பிறகு, மண்டலி ஒன்றரை மணிநேரம் இறை நாமத்தை உச்சரிக்குமாறு கீழ்வரும் ஓரடி பிரார்த்தனையை (கடவுளின் ஏழு நாமங்கள்) பாபா எடுத்துரைத்தார்.

"**குதா**, **பரமாத்மா**, **அல்லா**, **ஆஹுரமஸ்தா**, **ராம்**, **எஸ்தான்**, **ஹூ**."

இதைத் தொடர்ந்து பாபா, குஜராத்தி மொழியில் எழுதிய ஆரத்தியையும் மண்டலி பாடினர்.

1923, மே மாதம் முதன்முதலாக மெஹர் பாபா அரன்காவ்ம் வந்தபோது, சாது கிலோரி ஷாவின் (GILORI SHAH) சமாதி, அவர் உயிருடன் இருந்தபோதே கட்டியாகிவிட்டது. ஆனால், மெஹர் பாபா, மெஹராபாத்திலிருந்து புறப்பட்டு, பயணங்களை நிறைவு செய்து, 1924 மார்ச் மாதம் திரும்பிவந்த போது, சாது கிலோரி ஷா உயிரோடு இல்லை. அவருடைய விருப்பப்படி இறுதி ஊர்வலம் மெஹராபாத்தில் நடைபெற்றது. உடலைப் புதைத்து, சடங்கு முறைகளை கடைப்பிடிப்பதில் அவரைப் பின்பற்றும் இந்து, முஸ்லிம் பக்தர்களிடையே கலகம் ஏற்பட்டவே, கூட்டத்திலிருந்த ஒருவர், சாது கிலோரி ஷா கூறியதை எடுத்துரைத்து, குழப்பத்தைத் தீர்த்து வைத்தார்.

"அனைத்தும் துறந்த ஒருவருக்கு மதமோ, மதத்தின் பிரிவுகளோ கிடையாது!"

இப்படி, அவர் விரும்பியது போல், எந்தவொரு சடங்கு முறைகளையும் கடைப்பிடிக்காமல், உடலை சமாதியில் வைத்தனர். சாது கிலோரி ஷா, ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த மரப்பெட்டியில் இவ்வாறு பொறிக்கப்பட்டிருந்தது:

"உயிரைத் துறக்கும் முன்னர் உடலைத் துறக்கும் ஒருவர் உயிர் வாழ்கிறார்."

குல்மாயின் கணவர் கான்ஸாஹேப் அனைத்து செலவுகளையும் ஏற்றுக்கொண்டார். ஒரு வருடத்திற்குப் பிறகு, பளிங்குக் கல்லால் சமாதியை மூடி, அதைச்சுற்றி விதானம் ஒன்றும் எழுப்பப்பட்டது.

1924, ஏப்ரல் மாதத்தில், மெஹர் பாபாவின் தனிப்பட்ட தேவைக்காக மெஹராபாத்தில் ஒரு தனியறை அமைக்கப்பட்டது. அதை விரைவாக முடிக்கக் கூறி பாபாவும் கைகொடுத்து உதவினார்.

பகவான் ராமின் பிறந்தநாள் ஏப்ரல் 13ஆம் நாள் கொண்டாடப்பட்டது. மெஹர் பாபாவின் அறையின் முன்னே மண்டபம் ஒன்றை எழுப்பி, அதில் பஜனை கீர்த்தனைகள் நடைபெற்றன. பங்கெடுத்த பக்தர்களுக்கு உணவாக, சாதமும், பருப்பும் வழங்கப்பட்டது.

மெஹர் பாபா, மாலை வேளையில் சிறிய உரை ஒன்றை வழங்கினார்: **“ஒரு சத்குரு என்பவர், கடவுள் மனித உருவில் இருப்பவர். அவரை அணுகும் முன்னர், ஒருவர் ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தித்து அணுக வேண்டும்; மேலும், அவருடைய சகவாசத்தில் வந்த பின்னர், அவருக்கு முற்றிலுமாகத் தன்னை அர்ப்பணம் செய்து, வாழ்நாள் முழுவதும் அவருடனே இருக்க வேண்டும்.”**

அதைத் தொடர்ந்து மெஹர் பாபா, மெஹராபாத்தைப் பற்றி இவ்வாறு எடுத்துக்கூறி உரையை முடித்தார்: **“நான் இங்குக் குடியேறியதும், இவ்விடத்தின் சுற்றுப்புற சூழ்நிலைகள், ஆன்மீகம் மற்றும் அடிப்படை பொருள் சார்ந்த அனைத்தும் உயர்வான நிலையை அடையும். என்னுடைய அவதார காலகட்டத்தில் மானிடனின் நன்மைக்காக ஓர் அடிப்படை குறிக்கோளுடன் எனது பணியைச் செய்ய உள்ளேன்; அதன் விளைவை விரைவில் நீங்கள் கண்டுகொள்வீர்கள்.”**

ஏப்ரல் 14ஆம் நாள் காலையில், குடிலிலிருந்து வேகமாக வெளியே வந்த மெஹர் பாபா, **“நேற்றிரவில் என்னால் தூங்க முடியவில்லை! ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக நான் தூங்க முடியாத நிலை”** என்று கூறி அனைத்து மண்டலியையும் அழைத்து இவ்வாறு விளக்கினார்.

**“கொண்டிராம் என்னிடம் பூனாவுக்குத் திரும்பிச் செல்லத் தேவையான பணத்தைக் கேட்டான். அவன் தாயாரின் உடல் நிலை சரியில்லாததால் நானும் பணம் கொடுத்தேன். ஆனால், இப்போது நான் ஒரு நிபந்தனையை உங்கள் முன் வைக்கிறேன்: ஒருபோதும் உங்களுக்கு நான் காசு கொடுக்கமாட்டேன், அல்லது, எந்தக் காரணத்திற்காகவும் உங்களை, பிறருக்குக் காசு கொடுக்கவும் அனுமதிக்க மாட்டேன். யார் ஒருவருடைய உறவினர் உடல்நலமில்லாமல் இருந்தால், அவர் கால்நடையாகச் செல்லமுடியும். ஆனால் அதற்கு மாறாக, பிறருடைய பணத்தில் செல்வதாக இருந்தால், அவர் என்னுடையவராக மாட்டார், என்னை விட்டுச் சென்று விட்டார் என்று எடுத்துக் கொள்ளப்படும். எனவே எவரேனும் என்னுடைய சகவாசத்திலிருந்து விலக விரும்பினால் இப்போதே கூறுங்கள், தேவையான பணத்தைக் கொடுத்து உங்களையும் விடுவிக்கிறேன்.”** பதிலாக, மண்டலி அனைவரும் பாபாவின் கட்டளைகளுக்கு இணங்கி, அவருடனே இருக்க விரும்புவதாகக் கூறியதும் மெஹர் பாபா அமைதியானார்.

ருஸ்தம், அவர் ஆன்மீக முக்கியம் எனக் கருதிய ஒரு விஷயத்தை, அனைத்து மண்டலியையும் அழைத்து எடுத்துரைத்தார்.

அப்துல்லா ஜாஃபர் தலைவராக நியமிக்கப்பட்டு, அவர் அமர இருக்கை இல்லாததால் வாளி ஒன்றைக் கொடுத்து அமர வைத்தனர். ஏனைய அனைத்து மண்டலியும் தலைவரைச் சுற்றி அமர்ந்தனர். ஹஸ்ரத் பாபாஜான், சத்குரு உபாஸனி மஹாராஜ் இருவரும் மெஹர் பாபாவை, அவர்களுக்கு இணையானவர், அவர்களின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் வாரிசு என்ற அங்கீகாரத்தை வழங்கியதால், மெஹர் பாபாவிற்கு, அவரின் மேன்மைக்குத் தகுந்தார்போல் ஒரு தனிப்பட்ட அடையாளம் தேவை என்பதை ருஸ்தம் முன்மொழிந்தார். சிலர் வித்தியாசமான உடை, தனித்துவம் வாய்ந்த தொப்பி அல்லது வேறு ஏதேனும் முறையில் உடை அணிவது என்பதை எடுத்துக் கூறினார்கள். விவாதம் தொடரவே, குறிப்பாக, சிறப்பு வாய்ந்த அடையாளம் என்பதில் பலர் மறுப்பு தெரிவித்தனர். மண்டலி முன்மொழிந்த ஆலோசனைகளில் விருப்பம் காட்டாமல் பாபா முடிவாகக் கூறினார், **“நாம் ஒரு சமுதாயம் அல்ல. மேன்மையை எடுத்துக் காட்டும் எந்த ஓர் அடையாளமும் நம் சுதந்திரத்தைப் பறித்து, மனதைக் கட்டுப்படுத்தும் பிணைப்புகளை உருவாக்கும்.”** ஆகையால் அனைத்து ஆலோசனைகளையும் கைவிட்டு விடுமாறு கூறி முடித்தார். ஆனால் தலைவருக்கும், டாக்டர் கனிக்கும் இடையே நடந்த சில தேவையற்ற குழப்பத்தால், வேடிக்கையாக, ஆனால் உணரவைக்கும் எண்ணத்தில், இருவரையும் அவரவர் காதுகளைப் பற்றிக்கொண்டு, மூன்று முறை தோப்புக்கரணம் போட வைத்தது அனைவரையும் மனம்விட்டு சிரிக்கச் செய்தது.

கூட்டத்தில் மற்றுமொரு நிகழ்ச்சி நடைபெற்றது - மெஹராபாத்திற்குக் கொண்டுவரப்பட்ட மூன்று அதிர்ஷ்டசாலி மிருகங்களுக்கு, பாபா முன்னிலையில் பெயர் சூட்டுவது! மெஹராவின் தாயார் தவுலத்மாய் ஒரு வெண்குதிரையை, பாபாவிற்கு அன்பளிப்பாக வழங்கினார்; இது மெஹரா பூனாவில் வாழ்ந்தபோது, தாயார் வழங்கியது. அடுத்ததாக அங்கு எடுத்து வந்த வெண் நிறத்தில் ஒரு நாய் மற்றும் காளை. பாபா, குதிரைக்கு ‘ஸூஃபி’, காளைக்கு ‘ஸெய்ன்ட்’ மேலும் நாய்க்கு ‘சாது’ என்ற பெயர்களை வழங்கினார்.

அன்று மாலை வேளையில் மெஹர் பாபா, ஆதியுடன் இணைந்து பஜனை பாடல்களைப் பாடினார். அதன் பின்னர், இரண்டு விதமான ‘முக்தாக்கள்’ - இறை நிலையை அடைந்த ஆன்மாக்களைப் பற்றி பாபா விளக்கினார்:

**முக்தியில்** (இறை நிலையில்) **இரண்டு வகை. ஒன்று ‘விதே முக்தி’, மற்றொன்று ‘ஜன்ம முக்தி’. ஜனக மன்னன்** (சீதையின் தந்தை) **ஒரு விதே முக்தா, அதாவது, வெளிப்புற சூழ்நிலையால் அவருக்கு எவ்வித பாதிப்புமில்லை, உடலைப் பற்றிய எந்த உணர்வுமில்லை. ஜனக மன்னன் ஒரு பாதத்தை எரியும் நெருப்பிலும், இன்னொரு பாதத்தை, குளிர்ந்த பனி நீரில் வைத்தாலும், அவர் வித்தியாசமாக எதையும் உணர்ந்ததில்லை.**

ஷிர்டி சாய்பாபாவும் ஒரு விதே முக்தாதான். சாய்பாபா அவரது வெறுங்கையால் கொதிக்கும் உணவைப் பரிமாறினார் என்று சொல்லப்படுகிறது.

ஜன்ம முக்தாவின் உட்பொருள் என்னவெனில், ராமா, கிருஷ்ணா அல்லது கிறிஸ்துவைப் போல, பிறப்பிலிருந்து முழு விடுதலை அடைந்த நிலையிலிருப்பது! விதே முக்தாவைப் பொறுத்தவரையில் அவருக்கு அனுகூலம் இல்லாத ஒன்று, பிறரின் துன்பங்களை அவர் மீது ஏற்றுக்கொள்ள முடியாதது. உதாரணமாக, உங்களுக்குக் கடுமையான தலைவலி என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அதிலிருந்து நிவாரணம் பெற, ஒரு சத்குரு, அதே தலைவலியை அனுபவித்தாக வேண்டும். ஆனால், ஒரு விதே முக்தாவுக்கு வெளியளவிலான உணர்வு இல்லாத நிலையில், ஒருவரின் தலைவலியை எப்படிப் போக்கமுடியும்? அவருக்கு வலியின் உணர்வு இல்லாத பட்சத்தில் எவரையும் எதிலிருந்தேனும் எப்படி விடுவிக்கமுடியும்? உடல் வலியை உணராதவரையில், அவர் பிறரின் துன்பங்களை எப்படித் தன்மீது எடுத்துக்கொள்ள முடியும்?

பிறருக்காகத் துன்பங்களை அனுபவிக்க முடியாத நிலையிலிருக்கும் ஒருவரை, சத்குரு என்று எப்படி அழைக்க முடியும் என ஆதி வினவினார். அதற்கு, பாபா, "**பிறரின் துன்பங்களை அவர் தன்மீது ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் ஒரு குறுகிய அளவில்தான்!**" என்று பதிலளித்தார்.

இருவரின் உரையாடல் அப்போது ஆன்மீகப் பாதையில் உயர் நிலையை அடைந்த ஆத்மாக்கள் அல்லது மஹா புருஷர்கள் பக்கம் திரும்பியது. அவர்கள், ஆன்மீக தளங்களில் பயணம் செய்து, கடவுள் நிலையை அடைந்து பரிபூரணமானவர்கள்.

**ரிஷிகளும், முனிவர்களும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, ஆன்மீகத்தை அடையாளப்படுத்தும் வகையில் கிளித்தட்டு என்ற விளையாட்டைக் கண்டுபிடித்தனர்.** (செங்குத்தாக இறுதிவரை வரும்) **இடைகோடு மாயையைக் குறிக்கும். இதர நேர்கோடுகள் காமம், கோபம், பேராசை போன்றவற்றைக் குறிப்பதாகும்.**

**ஒரு வகையைச் சார்ந்த மஹா புருஷர்கள், காமம், கோபம், பேராசை இவைகளைக் கடந்து மறுபக்கத்தைச் சென்றடைவர். அதாவது கடவுள் நிலையை அடைந்து அவரது முடிவற்ற தன்மையில் மூழ்கியிருப்பர். இவ்விதமான பரிபூரண மனிதர், தானடைந்த நிலையைப் பிறருக்கு நேரடியாக அளிக்கமுடியாத நிலையிலிருக்கிறார்.**

**மேலும் ஒரு வகையைச் சார்ந்த மஹா புருஷர்கள், அனைத்து கோடுகளையும் கடந்து, மறுபக்கத்தை அடைந்த பின்னர், அதே கோடுகள் வழியாக ஆரம்ப நிலைக்கே மறுபடியும் வந்துவிடுகிறார்கள். இவ்வாறு திரும்பி வருவது பிறருக்காக! இப்படி வரும் மஹா புருஷர்களை, சத்குரு என்றழைப்பர். அவர் கண்ணிமைக்கும் நேரத்தில் பிறரையும் தானடைந்த இலக்கை அடையச் செய்யமுடியும்.**

இவ்வாறு, **மாயையிலிருந்து விடுபட்ட ஒரு சத்குரு, பிறரை அதிலிருந்து விடுவிக்க தன்னை மறுபடியும் மாயையில் உட்படுத்துகிறார். சுவாமி விவேகானந்தர் சொன்னதுபோல, "தன்னுடைய சீடர்களின் நிலைக்கு, தன்னைக் கொண்டுவரும் ஒருவரே உண்மையான குரு." உதாரணமாக, ஒரு முத்துமணி, குப்பைக் குவியலில் மறைந்திருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அதை எடுப்பதற்கு ஒருவன் தனது கைகளை அதனுள் வைத்தாக வேண்டும். அதுபோல், ஒரு சத்குரு மாயை என்னும் குப்பையில் தன்னைத்தானே மூழ்கடித்துக் கொள்கிறார். ஆனால், ஒருபோதும் அவரை அசுத்தம் தீண்டுவதில்லை.**

ஒரு நாள் காலை வேளையில் பாதிரி, ராம்ஜூ இருவரும் வெறுமனே அரட்டையடித்துக் கொண்டிருந்தனர். பாபா அவர்களைக் கண்டித்து வேலையை நிறுத்தச் சொன்னார்.

அவ்வேளையில், இதர மண்டலியின் முன்னிலையில், பாதிரி அவரது கைகளில் இருந்த கொப்புளங்களைக் காட்டி, குறைகூறி முறையிட்டபோது, மெஹர் பாபா, "**நீங்கள் எனக்காக உங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்யத் தயாராக இருப்பதாக உறுதிமொழி வழங்குகிறீர்கள்.** ஆனால் **கொப்புளங்கள் உங்களைப் புகார் செய்ய வைக்கின்றன. இது உங்கள் வாழ்க்கைத் தியாகத்தின் ஆரம்பம் கூட அல்ல. இருந்தும், நீங்கள் அழுது புலம்புகிறீர்கள்.**

"**ஆன்மீகப் பாதையில் குறை கூறுவதே பாவம். பல்லாண்டுகள் கடந்து, இறுதியில் உடல் சிறிது சிறிதாக வெட்டுண்டு - இப்பூதவுடலைத் துறக்கும்வரை, காயங்களே மிஞ்சியிருக்கும். உங்கள் உதடுகளை மூடுங்கள்; மெதுவாக - அணு அணுவாக - உங்களின் 'நான்' எனும் அகந்தை அழிந்து போகட்டும்! இதில் தான் உங்கள் துணிச்சல் உள்ளது. கைகளில் உள்ள கொப்புளங்களைக் காண்பிப்பதில் அல்ல!**"

பாதிரியின் கைகள் கொப்புளங்களால் வீங்கியதும் அஹமதுநகர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். பாபாவும் உடன் சென்றார். பாதிரி இல்லாதபோது மெஹராபாத்தில் மேலாளர் பொறுப்பை ராம்ஜூ ஏற்றுக் கொண்டார்.

ருஸ்தம் அஹமதுநகரில் தனது குடும்பத்துடன் வாழ்ந்தாலும், பாபாவின் கட்டளைகளுக்கு இணங்க நடந்து வந்தார். மெஹராபாத்தில் நடக்கும் கட்டிட பணிகளுக்கு வேண்டிய பொருட்கள் அனைத்தையும் வாங்கி அனுப்பும் பொறுப்பை ருஸ்தம் ஏற்றுக்கொண்டார். சில நாட்களாகச் சுண்ணாம்பு மூட்டைகள் வராததால் பணிகள் பாதிக்கப்படவே, பாபா பொறுமையிழந்தார். ஏப்ரல் 17ஆம் நாள் மெஹர் பாபா நெர்வஸை அஹமதுநகருக்கு அனுப்பி, ருஸ்தத்தின் கால்களில் விழுந்து, '**மெஹர் பாபாவின் சார்பாக நான் உங்கள் கால்களில் விழுந்து வணங்குகிறேன். தயவு செய்து, சுண்ணாம்பு மூட்டைகளை அனுப்பி வையுங்கள்**' என்று கூறச் சொன்னார்.

நெர்வஸும் அப்படியே செய்ததும், ருஸ்தம் அவரிடம் ‘தயவுசெய்து மெஹர் பாபாவிற்கு என்னுடைய வணக்கங்களை இருபது முறை தெரிவித்து, நான் ஒன்றும் அலட்சியமாக இருக்கவில்லை, மூட்டைகளை அனுப்பிவைக்க மாட்டு வண்டிகளை வாடகைக்கு எடுக்கக்கூடாது என்ற பாபாவின் கட்டளையாலும், எங்களது மாட்டுவண்டி சமயத்தில் வராததாலும் நான் அனுப்ப முடியாமல் போனது என்பதை பாபாவிற்கு எடுத்துக் கூறுங்கள்’ என்று கூறினார். எதுவாயினும், ருஸ்தம் உடனே ஒரு மாட்டுவண்டியில் சுண்ணாம்பு மூட்டைகளை அனுப்பி வைத்தார்.

அதே நாள் சிறிது நேரத்திற்குப் பிறகு, தேவைக்கு அதிகமாக உணவு தயார் செய்வதாக, மெஹர் பாபா, மாஸாஜியை வெகுவாகக் கண்டித்தார். மாஸாஜி, கோபத்தில் பதிலளித்தார், “நான் இதனால் வெறுத்துப்போய் விட்டேன்! நீங்கள் அனுமதித்தால் நான் அரன்காவ்மிலிருந்து செல்லத் தயாராக இருக்கிறேன்!”

இதைக் கேட்டதும் பாபா, “**எனது வார்த்தைகள் உங்கள் விருப்பத்திற்கு இணக்கமாக இல்லாவிட்டால், நீங்கள் இங்கிருந்து செல்வதுதான் நல்லது**!” என்று கூறினார்.

மாஸாஜி பதிலாக, “உங்களுடைய கசப்பான வார்த்தைகளையோ, அல்லது நீங்கள் இகழ்ச்சியாகப் பேசுவதையோ நான் என் இதயத்தில் வைத்துக் கொள்வதில்லை. ஆனால் நான் உணவை வீணடிக்கிறேன் என்று நீங்கள் விளையாட்டாகக் கூறுகிறீர்களா, இல்லையா, என்பதை நான் எப்படித் தெரிந்துகொள்வது?” என்று முறையிட்டார்.

“**நீங்கள் அப்படிக் கூறுவதானால், என்னைப் பற்றிய எல்லாமே உங்களுக்குத் தெரியும் என்று அர்த்தம்**.” பாபா அமைதியாகி மாஸாஜியிடம், “**அப்படியானால் சரி, நீங்கள் என்னுடன் இருக்கலாம்**” என்றார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பாதிரியுடன் குல்மாய், ருஸ்தம் இருவரும் அன்று மதியவேளையில் மெஹராபாத் வந்தபோது, மண்டலி கடவுளின் ஏழு நாமங்களை உச்சரிக்கும் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர். குல்மாய், பாபாவுக்காக எடுத்துவந்த சிறப்பு உணவில் சிறிதளவை பாபா உண்டதும் எஞ்சியதை மண்டலிக்கு வழங்கினார்.

ஏப்ரல் 18ஆம் தேதி, மெஹர் பாபாவின் குடிலுக்கு முன்னால் அமைந்த கழிவறைகளின் தரைகளில் கற்களைப் பதித்து, வேலை நிறைவடையும் தருவாயில், பாபா அதைப் பார்வையிடச் சென்றார். வாடகை வண்டியில் சுண்ணாம்பு மூட்டைகளை ருஸ்தம் அனுப்பிவைத்த வருத்தத்தில் பாபா கோபமடைந்து, தபால் அலுவலக கட்டிடத்தில் புயல் வேகத்தில் நுழைந்தார். ஓய்வெடுத்துக் கொண்டிருந்த அனைவரையும் நோக்கி பாபா, “**இதுபோன்ற எதுவும் தொடர்ந்து நடந்தால், நான் மெஹராபாத்திலிருந்து விலகிச் சென்று, உங்களையும் கைவிட்டு விடுவேன்**!” என்று கூறினார். பாபாவின் கோபத்தின் காரணத்தைப் புரிந்துகொண்ட ருஸ்தம் தனது பதட்டத்தை

வெளிப்படுத்தினார். இப்படி, 'தேவைக்கு அதிகமாகப் பணம் செலவு செய்வது சரியல்ல' என்ற பாடத்தை ருஸ்தம் கற்றுக்கொண்டார்.

ராம்ஜூ வேலைப் பளுவால் மிகவும் அவதிப்பட்டார். கடுமையான காய்ச்சல்; பாபா, ராம்ஜுவின் நெற்றியில் தைலத்தைத் தடவிவிட்டார். அவ்வேளையில் அங்கு நடக்கும் பணிகளைக் கண்காணிக்கும் தலைவர் பொறுப்பை ராம்ஜுவிடமிருந்து குஸ்தாஜி ஏற்றுக்கொண்டார்.

சத்குரு அல்லது இறை நிலையை அடைந்த ஒருவருடன் வாழ்வது எவ்வளவு கடினம் என்பதை எடுத்துரைத்து, மெஹர் பாபா அனைத்து மண்டலியையும் எச்சரித்தார். மேலும், அவருடன் மெஹராபாத்தில் வாழ்வதில் உள்ள சிரமங்களையும் புரியவைத்து இவ்வாறு விளக்கமளித்தார்:

**மாயை** (இல்லாத ஒன்றை இருப்பது போலத் தோன்றவைக்கும்) **எந்தநேரமும் எல்லோரையும் தன்வசம் ஈர்க்க, அதனால் இயன்றவரை சிறப்பாக முயற்சிக்கும். மேலும், இது சத்தியத்தின் பாதையில் செல்லும் ஒருவருக்கு இடையூறாக இருக்கும். அப்படிச் செய்வதன் காரணம் என்னவெனில், கடவுள் நிலையை ஒருவன் அடையும்போது, மாயை அவனுக்கு அடிமையாகிவிடும் என்று அதற்குத் தெரியும். மாயை, கடவுள் நிலையை அடைந்த ஒருவரின் பாதங்களின் கீழே புரளும். அதன் சக்தி, அறியாமையில் மூழ்கியிருக்கும் ஒருவரை வெல்லும், ஆனால் இறைஞானி அதை அடக்கி ஆள்வார்.**

ஹனுமான், பகவான் ராமின் முக்கிய சீடர்களில் ஒருவர். ஏப்ரல் 19ஆம் நாள் இந்து மண்டலி, ஹனுமானின் பிறந்தநாளைக் கொண்டாடினர். குல்மாய், ருஸ்தம் இருவரும் ஆரத்திக்கு வேண்டிய பொருட்களுடன் அந்த நிகழ்ச்சி நிறைவடைந்த பின்பு வந்தனர். தாமதமாக வந்ததால் மெஹர் பாபா, "**நீங்கள் எதற்காக இவ்வளவு சிரமப்பட்டு இங்கே வரவேண்டும்?**" என்றதும், ருஸ்தம் வழியில் வண்டி பழுதாகி விட்டதைத் தெரிவித்தார். பாபா அதை ஏற்றுக்கொண்டு அனைவருக்கும், அவர்கள் கொணர்ந்த இனிப்பை வழங்கி, நிகழ்ச்சியை மேலும் ஒரு மணி நேரம் தொடர்ந்தார்.

இரவு உணவை முடித்து ஓரிரு மணி நேரத்திற்குப் பிறகு, மெஹர் பாபா அனைத்து மண்டலியையும் குடிலுக்கு வெளியே அழைத்து அன்றைய நடவடிக்கைகளைப் பற்றி விசாரித்தார். அப்போது பாபா, மாஸாஜியிடம் உணவு ஏதாவது எஞ்சியுள்ளதா எனக் கேட்டார். மாஸாஜி ஆமாம் என்று பதில் கூற, பாபா, இந்து மண்டலிக்கு சமையல் செய்யும் சௌத்திரியைக் கேட்டார்; அதற்கு அவர், "எப்போதாவது மீதம் வரும், வந்தால் வீணாக்குவது இல்லை, கொண்டிராமுக்கு கொடுத்து விடுவேன்" என்றார்.

இதைக் கேட்டதும் பாபா, அனைத்து பார்சி, ஈரானி மற்றும் முஸ்லிம் மண்டலியை வெகுவாகக் கண்டித்து, மாஸாஜியிடம், "**நீங்கள் உணவை**

**வீணாக்குவது ஏன்? இந்து மண்டலி ஒருபோதும் அவ்வாறு செய்வதில்லை, ஏனெனில் அவர்களுக்கு அதன் மதிப்பு நன்றாகத் தெரியும்"** என்றார்.

உணவு விஷயத்தில் இப்படியொரு பரபரப்பை ஏற்படுத்துவதில் ஆழ்ந்த முக்கியத்துவம் உள்ளது. இந்து மண்டலி அவர்களது உணவைத் தனியாகத் தயார் செய்தனர். மேலும், பழைய ஆச்சார முறைப்படி வேறு இனத்தவர் தயார் செய்யும் உணவில் இந்துக்கள் பங்கெடுப்பதில்லை. மெஹர் பாபா உருவாக்கிய இந்த மோதல், மண்டலியிடையே நிலவும் பாரபட்சம் மற்றும் தவறான அபிப்பிராயத்தை முறியடிக்கும் நோக்கத்தின் ஆரம்ப கட்டமாகும். மெஹர் பாபா இயல்பான முறையைக் கையாண்டு, வெவ்வேறு மண்டலிக்கு விதவிதமாக உணவு தயார் செய்யும் வேறுபட்ட முறையை ஒழித்துக் கட்டினார் - ஆனால் அப்படியொரு நிலை உருவாக மேலும் இரண்டு வருடங்கள் பிடித்தன.

ஏப்ரல் 20ஆம் நாள் மாலையில் குல்மாய், ருஸ்தம் இருவரும் மெஹர் பாபாவுக்காக உணவும், சத்குரு உபாஸனி மஹாராஜின் புகைப்படம் வெளிவந்த 'அக்பர்' எனும் குஜராத்தி செய்தித்தாளின் பிரதி ஒன்றையும் எடுத்து வந்தனர். அதில் வெளியான ஸொராப்ஜி தேசாயின் கட்டுரையில், மெஹர் பாபாவை சந்தித்ததாகவும், அவரே இக்காலகட்டத்தின் 'ஜகத் குரு', 'பிரபஞ்சத்தின் இறைவன்', 'அவதார புருஷன்' என்பதை முற்றிலும் நம்புவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

மெஹர் பாபாவின் சகோதரர் ஜால், பாபாவுடன் பல்வேறு பயணங்களில் கலந்து கொண்டார். இப்போது மண்டலியுடன் மெஹராபாத்தில் வாழத் தொடங்கினார்.

அன்று மதிய வேளையில் விசித்திரமான தோற்றத்தில் ஒருவர் கிணற்றருகில் வந்து, அவரது தாகத்தைத் தணித்த பின்பு, பசியெடுப்பதாகக் குறிப்பிட்டார். ஜால், ஆதி இருவரும் திகைப்புற்று அவரை, பாபாவிடம் அழைத்து வந்ததும், பாபா பெருமகிழ்ச்சியடைந்து, வந்தவர் ஒரு '**மஸ்த்**' (இறை போதையில் இருப்பவர்) என்பதை விளக்கினார். அந்த மஸ்த்திற்கு உணவளித்து இனிப்பும் வழங்கப்பட்டது. கேள்விகளுக்கு 'அவரது மொழியில் எளிதில் புரிந்துகொள்ள முடியாத முறையில்' பதிலளித்தார். அவருக்கு, பாபா புதிய சட்டையும் காலுறையும் அணிவித்து அனுப்பி வைத்தார். அவருடைய பெயர் எங்கும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், அவர்தான் மெஹராபாத்திற்கு வந்த முதல் மஸ்த் (இறை போதையில் இருப்பவர்) ஆவார்.

மேலும் ஒரு நாள், வயதான பெண்மணி ஒருவர் அவருடைய இரண்டு மகன்களுடன் மாலை வேளையில் உணவு வேண்டி வந்தார். அவர்களை, பாபாவிடம் அழைத்து வந்ததும், பாபா, சௌத்திரியிடம் சாதமும், பருப்பும் தயார் செய்து வழங்குமாறு கூறினார். பாபா பெரிய பையனிடம் அவன் வைத்திருந்த இசைக்கருவியை இசைத்துப் பாடுமாறு கூறியதும் அவன் பிரபலமான இந்து சாது கோபிசந்தின் வாழ்க்கை வரலாற்றைப் பாடலாகப்

பாடினான். பாபா அதைக்கேட்டு பெரிதும் மகிழ்ந்தார். அவர்களுக்கு உணவும், புத்தாடைகளும் அளித்து அனுப்பி வைத்தார்.

இவ்வேளையில், குஸ்தாஜி நாள் முழுவதும் அவரது வேலைகளில் மும்முரமாக இருந்தார். அனைவரைக் காட்டிலும் அவர் கருமமே கண்ணாய் இருந்ததாக நினைத்துக் கொண்டார். மதிய வேளையில் இதர மண்டலி ஓய்வெடுக்கும்போது, குஸ்தாஜி புதிதாகக் கட்டப்பட்ட சிமெண்ட் தரைக்குத் தண்ணீர் விடுவதை வழக்கமாகக் கொண்டார். இவ்விதமான வேலைப்பளுவின் காரணமாக, குஸ்தாஜி எரிச்சலான மனநிலையில் இருந்தார்.

சில நாட்களாக, குஸ்தாஜி, பார்சோப் இவர்களிடையே கசப்பான மனநிலை நிலவி வந்தது. நமாஸ் செய்யும் வேளையில் அமர்வதற்காக ஒரு புதிய பிரார்த்தனை கம்பளம் வேண்டும் என்ற பார்சோப்பின் கோரிக்கையை குஸ்தாஜி நிராகரித்து விட்டார். பார்சோப், மிகவும் கோபப்பட்டு குஸ்தாஜியின் கஞ்சத்தனத்தை நினைத்து, கையிறுக்கமான மேலாளர் என்று குறிப்பிட்டார்.

அதேநாள் மாலை வேளையில், மண்டலி அனைவரும் பங்கெடுத்த கூட்டத்தில் மெஹர் பாபா, பார்சோப்பிடம் கேட்டார், "**குஸ்தாஜி மீது உங்களுக்கிருந்த கோபம் தணிந்ததா?**" பார்சோப் வெளிப்படையாக இல்லை என்று பதிலளித்தார்.

மெஹர் பாபா உடனே அவரைத் தனியாக அழைத்து விளக்கினார்:

"**யார் உங்களை எப்படி நடத்தினாலும், நீங்கள் அமைதி காக்க வேண்டும். ஒருவர் கடுஞ்சொற்களால் உங்களை எவ்வளவுதான் தாக்கினாலும், பொறுமையுடன் அமைதியாக அதைத் தாங்கிக்கொள்ள வேண்டும். இதுவே உண்மையான துணிவும் தைரியமும் ஆகும். ஒருவன் முழு ராணுவத்தையும் அடிபணிய வைக்கலாம், ஆனால், அவனது கோபத்தைக் கட்டுப்படுத்த இயலாமல் போகிறது.**"

மெஹர் பாபா, அப்போது, ஏசு பெருமானைத் துன்புறுத்தி, சித்திரவதை செய்தபோது அவர் வெளிப்படுத்திய பணிவுத்தன்மையைப் பற்றிக் கூறி இவ்வாறு உரையைத் தொடர்ந்தார், "**சுவாமி ராமகிருஷ்ணாவைப் பொறுத்த வரையில், மூன்று விஷயங்கள் ஒருவனை இறைவனிடமிருந்து விலக்கிவைக்கும். அவை, காமம், பேராசை, கோபம். முதல் இரண்டையும் - காமம், பேராசை - வென்றுவிடலாம். ஆனால் கோபத்தைக் கட்டுப்படுத்துவது என்பது அனைத்திலும் கடினமானது. இம்மூன்று எதிரிகளையும் வென்றுவிட்டால், நீங்கள் ஒரு துறவியாக முடியும். துறவி என்பவர் யார்? காமம், பேராசை, கோபம் இம்மூன்றையும் அடக்கி ஆள்பவரே துறவி!**"

சீடர்கள், தம்மைத்தாமே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, பாபா இரண்டு ஒழுங்கு முறைகளை வலியுறுத்தினார்:

"**தினமும் காலையில், ஒவ்வொரு சீடரும் பிறரின் பாதங்களைத் தொட்டு, 'நீ என் சகோதரன்' என்று கூறவேண்டும்.**"

**"ஒரு நாளின் 24 மணி நேரத்தில் எவரேனும் கோபத்தை வெளிப்படுத்தி, கசப்பான மனநிலையில் எவரையேனும் திட்டினால், உடனடியாக எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். நான் அப்போது குற்றவாளியின் கால்களில் விழுந்து வணங்குவேன்."**

"முதல் விதியானது எனது இஸ்லாமிய மதக்கோட்பாடுகளுக்கு எதிரானது" என்று பார்சோப் மறுப்பு தெரிவித்தார்.

ஆனால், பாபா இவ்வாறு விளக்கமளித்தார், **"இவ்விதிப்படி, பாதங்களை இரு கரங்களால் தொட்டால் மட்டும் போதும், தலை வணங்கவோ அல்லது பிறரின் பாதங்களில் தலையை வைக்கவேண்டும் என்பதோ தேவையற்றது."** இருந்தாலும், பிறர் பாதங்களைத் தொடுவது இஸ்லாமிய மத கொள்கைகளுக்கு எதிரானது என்று பார்சோப் வலியுறுத்தினார். எனவே, கால்களைத் தொடுவதற்கு பதிலாக பிறரோடு கைகுலுக்கினால் போதும் என்று பாபா அறிவுறுத்தினார்.

ராம்ஜூவும் இஸ்லாமியர் என்பதால், பாபா அவரிடமும், **"இவ்விதிகளைப் பின்பற்றுவதில் உங்களுக்கும் ஏதேனும் மதரீதியான இடையூறுகள் உள்ளனவா?"** என்று கேட்டார்.

"இவ்விதிகள் மதக்கொள்கைகளுக்கு எதிரானது என்று நான் கருதவில்லை. மேலும், முதல் விதிமுறையை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், நான் இவ்விதிமுறைகள் சம்மந்தமாக எதையும் உங்களுக்கு அறிவிக்கவோ, எனது பாதங்களைத் தொடவோ அனுமதிக்க மாட்டேன்" என்று ராம்ஜு பதிலளித்தார்.

பாதிரி, நெர்வஸ் இருவரும் ஆரம்பத்திலிருந்தே இரண்டாவது விதிமுறையை மறுத்தனர். ஆனால், பாபா இது அவரது கட்டளை என்று விளக்கிய பின்னர் ஏற்றுக்கொண்டனர்.

பாபா தனிப்பட்ட முறையில் ராம்ஜுவிடம், **"பார்சோப் செய்ததைத்தான் நீங்களும் செய்தீர்கள். என்னுடைய விருப்பத்தை, கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு, எவ்விதத் தயக்கமுமின்றி செயல்படுத்துங்கள். மதக்கோட்பாடுகள் எனது விருப்பத்தையும் மிஞ்சிவிடுமா என்ன? எனது விருப்பம்தான் மதமும், மதக்கோட்பாடும். அதற்குக் கீழ்ப்படிபவன் யாரோ, அவனே, மதகோட்பாடுகளுக்குக் கீழ்ப்படிந்து, அவனுடைய மதத்தின் கருத்துக்களை நிறைவேற்றுகிறான். எதைப் பற்றியும் கவலைப்படாமல் என்னுடைய விருப்பத்தையே கருத்தில் கொள்ளுங்கள்."**

"நீங்கள் எனது பாதங்களைத் தொடுவதை நான் விரும்பவில்லை... நான் உங்களை வணங்குகிறேன்" என்று ராம்ஜு விளக்கினார்.

**"விருப்பு வெறுப்புகளைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்?"** பாபா சற்று கோபத்துடன் பதிலளித்தார், **"நான் விரும்புவதையே நீங்களும் விரும்ப வேண்டும். எனது விருப்பத்தைக் கருத்தில் கொள்ளாவிடில், எப்படி என்னை வணங்க முடியும்? நீங்கள், உங்கள் ஆசைகளுக்கு அடிமையாகும் அதேவேளையில் என்னை எப்படி வணங்க முடியும்?"**

"நீங்கள் எனது பாதங்களைத் தொடுவதைப் பார்க்க என் இதயம் வலிக்கும்!" என்று ராம்ஜு பதிலளித்தார்.

அதற்கு பாபா, "**உங்கள் பாதங்களைத் தொடாவிடில் என் இதயம் வெடித்துவிடும்**" என்று கூறினார்.

ராம்ஜு எதுவும் பேச முடியாமல் அமைதியானார். இரண்டாவது விதிமுறையைப் பின்பற்றுவதிலிருந்து விலக்களித்து, பாபா நடந்ததை மறந்து கவலைப்படாமல் இருக்குமாறு கூறினார்.

மெஹர் பாபாவுக்காக அமைக்கப்பட்ட குடிலைச் சுற்றி மல்லிகை செடிகளை வைத்து மண்டலி மிகவும் கவனமாக வளர்த்து வந்தனர். அலைந்து திரியும் ஆடு மாடுகள் அழித்துவிடும் என்ற எண்ணத்தில் செடிகளைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டது. அதற்குப் பிறகு, குடிலருகில் ஒரு கம்பத்தில் கொடி கட்டித் தொங்க விட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. ஏப்ரல் 23ஆம் நாள் நடந்த விவாதத்தில், இந்துக்கள் கொடியின் நிறம் சிவப்பாக இருக்க வேண்டும் என்றனர், ஆனால் ராம்ஜூ அதை எதிர்த்து, சிவப்பு நிறம் வேதாந்தத்தைக் குறிக்கும் எனக் கூறி, பச்சை நிறம் சிறப்பானது என்றார். அப்போது, இந்துக்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து, பச்சை நிறம் பொதுவாக முஸல்மான்களின் நிறம் என்று வாதாடினர். அதே வேளையில் பார்சிகளும், ஈரானியர்களும் இரண்டு நிறங்களையும் நிராகரித்தனர். எனவே, அனைவரிடமும் சமாதானம் நிலவ, மெஹர் பாபா இவ்வாறு தனது முடிவை நிலைநாட்டினார்: "**கொடி ஏழு நிறங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.**" நவல் அவ்வண்ணமே கொடி தயார் செய்து பாபாவின் குடிலருகில் பறக்கவிட்டார்.

கொடி அழகாக பறந்த வண்ணம் இருந்ததைப் பார்த்து மெஹர் பாபா இவ்வாறு கேட்டார்: "**ஏழுநிற கொடியை நான் ஏன் பரிந்துரைத்தேன் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏழு நிறங்களும், உணர்வு நிலையின் ஏழு தளங்களைக் குறிக்கின்றன.**"

இரண்டு நிறங்களின் இருப்பு நிலையைக் குறிப்பிட்டு பாபா, "**கொடியின் கீழ்மட்டத்தில் சிவப்பு நிறமும், மேல்மட்டத்தில் வான்நீல நிறமும் இருக்க வேண்டும். எஞ்சிய ஐந்து நிறங்களையும் வரிசைப்படுத்துவதை நீங்கள் தீர்மானிக்கலாம்**" என்றார். மேலும் பாபா விளக்கினார்:

"**உணர்வு நிலையின் ஏழு தளங்களை குறிப்பது தவிர, இந்நிறங்கள் மனப்படிவங்களையும் குறிக்கும். கொடியின் நிறங்கள், மனிதன், கீழ் நிலையிலிருந்து மேல் நிலையை அடைவதைக் காட்டும் - அதாவது சிவப்பு நிறத்தை அடையாளமாகக் கொண்ட, காமம், கோபம் எனும் மிகத்திடமான மனப்படிவங்களிலிருந்து படிப்படியாக உயர்ந்து, ஆன்மீகத்தின் உச்சநிலையான கடவுளோடு ஒன்றிணைவதை வான்நீல நிறம் குறிக்கும்.**"

ராம்ஜூ அப்துல்லா, அன்றிரவில் பாபாவிடம் "நட்சத்திரங்கள் என்பவை என்ன?" என்று வினவினார். அதற்கு மெஹர் பாபா அளித்த விளக்கம்:

**"கிரகங்களைப் போலவே நட்சத்திரங்களும் கோளங்கள். ஆனால் மனித இனம் பல கிரகங்களில் வாழ்கிறது. நட்சத்திரங்கள் பொதுவாக அறிவின் பண்பாடு, விஞ்ஞானம் மற்றும் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட அனைத்திலும் பூமியோடு ஒத்திருக்கின்றன. ஆனால் ஆன்மீகத்தைப் பொறுத்தவரையில் நாம் வாழும் பூமியானது மிகவும் மேம்பட்டு இருப்பதால், சத்குருக்கள் இங்கே பிறவி எடுக்கிறார்கள்."**

**"இதர அனைத்து நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும் வெகு தொலைவில் இருப்பதுபோலத் தோன்றினாலும், உண்மையில் அருகருகே இருக்கின்றன. இறை நிலையை அடைந்த ஒருவர், சிறு சிறு குமிழ்கள் போலத் தோற்றமளிக்கும் பல லட்சக்கணக்கான நட்சத்திரங்கள் தன்னிடமிருந்து வெளிவருவதைக் காண்கிறார். அவர், தானே எல்லாவற்றிற்கும் மூலாதாரம் - அனைத்தையும் படைப்பவரும் நானே என அறிந்து கொள்கிறார். பிரபஞ்சத்தின் திட கோள்கள் வெவ்வேறாக இருந்தாலும், ஆன்மீகத் தளங்கள் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஒன்றாகவே இருக்கும்."**

சில வருடங்களுக்குப் பிறகு, மெஹர் பாபா, பிரபஞ்சத்தில் உள்ள 18000 கிரகங்களில் மனித இனங்கள் வாழ்வதாகவும், மேலும் பல லட்சம் கிரகங்களில் பரிணாம வாழ்க்கை தொடர்வதாகவும், அத்துடன் லட்சோபலட்சம் பிரபஞ்சங்கள் அண்டவியல் பரிமாண நிலையில் இருப்பதையும் விளக்கினார். ஆனால், பூமியில் மட்டுமே ஆன்மீக உட்சுழற்சி பரிணாமம் நடைபெறுவதாகவும் - அதாவது ஆன்மீக உணர்வை உள்ளடக்கும் தடங்கள், பூமியில் மட்டுமே இருப்பதாகவும் தெளிவுபடுத்தினார். மேலும், இந்த பூமியில் ஐந்து சத்குருக்கள் மட்டுமின்றி ஆன்மீகப் பரம்பரையில் 7000 சாதுக்கள் மற்றும் ஆன்மீக உயர் நிலையை அடைந்த ஞானிகளும் இருப்பதாக விளக்கினார்.

மெஹர் பாபாவின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க இரண்டு விதிமுறைகள் அமலுக்கு வந்தன. ஏப்ரல் 24ஆம் நாள், இரண்டாவது விதிமுறைப்படி, பாதிரி அதைக் கடைப்பிடிக்கத் தவறியதால் மெஹர் பாபா, அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினார். அருகில் நின்று கொண்டிருந்த நெர்வஸ், வெளிப்படையாக அவ்விதிமுறைகளைக் கடைப்பிடித்த போதிலும், அவர் கால்களையும் பாபா தொட்டு வணங்கினார். மெஹர் பாபாவின் இந்தச் செயலை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவர் தேம்பி தேம்பி அழுது, மெஹராபாத்தைவிட்டு வெளியேறுவதாகக் கூறினார். மெஹர் பாபா எவ்வளவோ எடுத்துக்கூறியும், நெர்வஸ் தனது முடிவில் பிடிவாதமாக இருந்தார்.

இறுதியில், மெஹர் பாபா, அவரை அங்கிருந்து செல்ல அனுமதியளித்து, அவருக்குத் தேவையான ரயில் கட்டணத்தைக் கொடுக்க,

நெர்வஸ் அதை வாங்க மறுத்தார். அப்போது பாபா, "**பணம் இல்லாமல் எப்படிப் பயணம் செய்வீர்கள்**" என வினவினார்.

நெர்வஸ் தனது சட்டையிலிருந்த இரண்டு தங்க பொத்தான்களைச் சுட்டிக் காட்டினார், மறைமுகமாக அதை விற்று பணமாக்குவதாக அர்த்தம். பாபா, உடனே அப்பொத்தான்களைப் பறித்தெடுத்து, "**நீங்கள் இப்போது போகலாம்; ஆனால் இரண்டு நிபந்தனைகள். ஒன்று, நீங்கள் உணவுக்காக யாசிக்க வேண்டும். மற்றொன்று, பிறரிடமிருந்து திருடவோ அல்லது கடன் வாங்கவோ கூடாது**" என்று குறிப்பிட்டார்.

நெர்வஸ் இரண்டு நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு புறப்படுவதற்கு ஆயத்தமானபோது பாபா, "**நீங்கள் எங்குச் சென்றாலும், உங்களை நான் தொடர்ந்து வருவேன்**" என்றார். மெஹராபாத்திலிருந்து நெர்வஸ் புறப்பட்டு நடக்கத் தொடங்கியபோது பாபாவும் பின் தொடர்ந்தார். அவர் ஓட ஆரம்பித்ததும் பாபாவும் அவர் பின்னே ஓடினார். சிறிது தூரம் சென்றதும் நெர்வஸ் சிரித்துக்கொண்டே பாபாவுடன் திரும்பி வந்தார்.

நெர்வஸ் அமைதியானதும் பாபா அவரிடம் "**ஏன் இந்த நாடகம்?**" என்று கேட்டார்.

அதற்கு நெர்வஸ், நான் யாரிடமும் கோபப்படவோ அல்லது கடிந்து பேசவோ செய்யாதபோது எனது பாதங்களை நீங்கள் ஏன் தொட்டு வணங்கினீர்கள்?" என்று கேட்டார்.

பாபா இவ்வாறு பதிலளித்தார், "**உங்களிடத்தில் ஏதோ பிழை இருந்ததால்தான் நான் அவ்வாறு செய்தேன். நான் உங்கள் பாதங்களைத் தொடவில்லை என்றால் உங்களுக்கு அல்லது பிறருக்கு, உங்களிடம் இருக்கும் குறை எப்படித் தெரியும்? ஒரு குற்றமும் இல்லையென்றால், அது எனது விருப்பம் என்று நினைத்து அமைதியாக இருக்க வேண்டியதுதானே! உங்களிடம் பிழை இருந்தாலும் நீங்கள் பிழையற்றவர் என்று நினைக்கிறீர்கள். நீங்கள் அப்படியில்லை என்று நான் உங்களுக்குக் காட்ட வேண்டாமா?**"

பாபா, உடனே அனைவரையும் பார்த்து, "**நீங்கள் குற்றமற்றவர்களாகத் தோன்றினாலும், இன்னமும் குற்றம் உள்ளவர்களே! - ஆனால் உங்கள் பலவீனங்களிலிருந்து உங்களை நான் விடுவிப்பேன். எனவே நான் சொல்வதை கவனமாகக் கேட்டு, மறக்காமல் அவ்வாறே செய்யுங்கள்.**"

ஏப்ரல் 15ஆம் நாள் மெஹராவின் வெண்குதிரை ஸூ:ஃபி மெஹராபாத்திற்கு கொண்டுவரப்பட்டது. குதிரை, சுத்தமான வெண்ணிறத்தில், மிகவும் அழகாக இருந்தது. சாப்பாட்டு வளாகத்தின் அருகில் அதற்காக, குதிரைத் தொழுவம் ஒன்று அமைக்கப்பட்டது. தோற்றத்தில் உன்னதமாக இருந்தாலும், செயலில் சைத்தானைப் போல விளங்கியது! மெஹராபாத்திற்குக் கொண்டு வந்ததும், பாபா அதற்கு குங்குமமிட்டு, சற்று நேரம் அதன் மீது அமர்ந்திருந்தார். வெண்குதிரைக்கு மெஹர் பாபா அளித்த மரியாதை, அதை

நடத்திய முறை மெஹரா மீது மெஹர் பாபா வைத்திருந்த அளவிலா அன்பை உணரச் செய்தது.

துறவிபோலத் தோற்றமளித்த, அலைந்து திரியும் சாது ஒருவர் இவ்வேளையில் மெஹராபாத்திற்கு வந்திருந்தார். அவர் மெஹர் பாபாவைப் பற்றி கேள்விப்பட்டு, தரிசனத்திற்காக வந்தவர், சடை முடியுடன் காவி உடையணிந்து, உடலெல்லாம் திருநீறு அணிந்திருந்தார். மெஹர் பாபா அவரிடம், "**நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கே செல்கிறீர்கள்?**" என்று கேட்டதற்கு, அந்தத் துறவி, பெருமையாக, அவர் சென்ற இடங்களையெல்லாம் பட்டியலிட்டுக் கூறி, இப்போது மெஹராபாத் வந்துள்ளேன் என்றார்.

பாபா அவரிடம் கேட்டார், "**இப்போது என்ன?**"

"நான் உங்கள் தரிசனத்திற்காக வந்துள்ளேன்" துறவி கூறினார்.

"**பின்னர்?**"

"இங்கிருந்து 'கிர்னார்' செல்லவிருக்கிறேன்.

"**தொடர்ந்து?**"

"அங்கிருந்து அப்படியே சென்று மவுண்ட் அபு முழுவதையும் வட்டமிடுவேன்."

"**அப்புறம் என்ன செய்வீர்கள்?**"

"அப்படியே இன்னும் சென்று புனித ஸ்தலங்களைப் பார்வையிடுவேன்."

"**அதற்குப் பிறகு?**"

"அதற்குப் பிறகு என்ன, இதுவரைச் செய்தது போல் எனது பயணத்தைத் தொடர்வேன்."

"**எவ்வளவு காலம்?**" பாபா வினவினார்.

அதற்கு, சாது பதிலளித்தார், "என்னுடைய குருவை நான் அடைவது வரை. அந்தப் பிராப்தம் எனக்குக் கிடைத்ததும் நான் விடுதலையாகி விடுவேன்!"

"**அது எப்போது நடக்கும்?**"

"என்விதியில் எப்போது உள்ளதோ அப்போது."

பாபா கூறினார், "**இறுதியில் ஒவ்வொருவரும் இறை நிலையை அடைவார், ஆனால் எவருக்கும் அதைப் பற்றி எந்த அறிவும் கிடையாது. ஒவ்வொருவரும் அவரவர் வழியில் செல்கிறார்.**"

"அப்படியானால் நான் என்னதான் செய்ய வேண்டும்?" துறவி மன்றாடினார்.

"**உங்களை ஒரு குருவிடம் அர்ப்பணம் செய்ய வேண்டும்.**"

"அப்படி ஒரு குருவைக் கண்டுகொள்ள முடியவில்லையே!"

"**உங்கள் கண்கள்தான் அதற்குக் காரணம்! குருநாதர் எங்குமிருக்கிறார். அவரைத்தேடி, அடையாளம் கண்டுகொள்வது அவசியம்.**"

"நான் அவரைக் கண்டுகொள்ளத் தயாராக உள்ளேன்."

**“நான் உங்களுக்குக் கடவுளைக் காண்பிக்கிறேன், ஆனால் நான் சொல்வதைச் செய்வீர்களா?”** என பாபா வினவினார்.

அந்த சாது தயாராக இருப்பதாகக் கூறியதும், பாபா அவரை அருகிலிருந்த ஒரு மரத்தின் கீழ் அமருமாறு அனுப்பி வைத்தார். அங்குச் சென்று காத்திருக்குமாறும், அவருடைய அறிவுறுத்தல்களை சற்று நேரத்தில் அளிப்பதாகவும் பாபா கூறியனுப்பினார். உடனே அந்தத் துறவி அங்குச் சென்று அமர்ந்தார்.

மெஹர் பாபா அப்போது கமேளா யோகா பணியைப் பார்வையிடச் சென்று, தவறுகளைச் சுட்டிக் காட்டி, மண்டலியை வெகுவாகக் கண்டித்தார். அரைமணி நேரத்திற்குப் பிறகு பாபா, பாதிரியை அனுப்பி அந்த சாதுவை அழைத்து வருமாறு கூறினார், ஆனால் அவர் அங்கிருந்து போய்விட்டார்.

அதற்குப் பிறகு, தீவிரமான முறையில் மெஹர் பாபா, மண்டலிக்குக் கருத்துரை வழங்கினார்:

**“காவி நிற உடையணிந்து உலகைத் துறப்பது எளிது, ஆனால் ஒரு சத்குருவைக் கண்டுகொள்வது மிகவும் கடினம். அவர் பாதங்களில் சரணடைவது அதைவிடக் கடினம், ஆனால் அனைத்திலும் கடினமானது அவர் கட்டளைகளைக் கடைப்பிடிப்பது.**

**“உதாரணமாக அந்தத் துறவியை எடுத்துக் கொள்ளுங்கள். பல வருடங்களாக அவர் வெவ்வேறு இடங்களுக்குப் புனித பயணம் செய்து, வெயிலிலும் குளிரிலும் அலைந்து கஷ்டங்களை அனுபவிக்கிறார். எண்ணிலடங்கா புனித பயணங்களை மேற்கொண்டு, மேலும் பல வருடங்கள் இவ்வாறு பயணத்தில் ஈடுபடுவார். ஆனால், ஒரு சத்குருவிடம் சரணடையாதவரை அவர் எவ்வித பயனும் அடையப் போவதில்லை. உடல், முகம் முழுவதும் திருநீறை அணிந்துகொண்டு வெறுமனே அலைந்து திரிவார்.**

**“ஓர் உண்மையான சத்குருவின் தொடர்பில் அவர் வந்தாலும் கூட, ஒன்றையும் புரிந்து கொள்ளாமல், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவிடாமல் தவறவிடுவார். அவரை நான் மரத்தின் கீழ் அமரச் சொன்னேன்; அரை மணி நேரம் கூட அவரால் அதைச் செய்ய இயலவில்லை. கடவுள் நிலையை அடைவது என்பது ஒருவரின் திறனுக்கு அப்பாற்பட்டது; சத்குருவின் கருணை ஒன்றுதான் அதற்கு வழி. மேலும், அவருடைய கருணையைப் பெறுவது என்பது அவ்வளவு எளிதல்ல. பிறவிக்கு மேல் பிறவிகள் எடுத்து முயற்சித்தாலன்றி உரிய தகுதியை அடைய முடியாது. ஆகையால், ஒரு சத்குருவின் தொடர்பில் வாழ்பவர்கள் உண்மையிலே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.”**

கடவுள்மீது உண்மையான பிரியமுள்ளவர் யார் என்பதை பாபா விளக்கினார்:

**“பாலைவனத்தில் சுட்டெரிக்கும் வெயிலில் தாகமாக இருக்கும் ஒருவன், முத்து, வைரங்களை விட, தண்ணீருக்கு முக்கியத்துவம் அளிப்பதுபோல, கடவுளின் உண்மையான அன்பன் ஒருவன் அவருக்காக**

**ஏங்கி, தவித்து, இதர அனைத்தையும் தூசாகக் கருதுவான். ஓர் உண்மையான பிரேமி பெயர், புகழ் அல்லது செல்வத்தின் பின்னால் அலையமாட்டான். அவன், தனக்குப் பிரியமான கடவுளை மட்டுமே எண்ணி ஏங்குவான். இந்தப் பண்பை அடையாத ஒருவன், தன்னலவாதியாக இருப்பான்.”**

அன்று மாலை வேளையில், கொடூரமான முறையில் உயிர்த் தியாகம் செய்த, ஸூஃபி சாது மன்சூரைப் பற்றிய உருது மொழியில் புத்தகம் ஒன்றை, ராம்ஜூ, பாபாவிற்கு வாசித்துக் கொண்டிருந்தார். பாபா அப்போது, முற்றிலும் மாறுபட்ட விதத்தில் கூறினார்: “**நான் இந்த உலகில் இன்னும் ஐம்பத்து நான்கு வருடங்கள் வாழ்வேன், அதற்குப் பிறகு, சோகமான மரணத்தை சந்திப்பேன்! இந்தப் பாரசீகர்கள், மிகவும் இரக்கமற்ற முறையில் எனக்கொரு முடிவைக் கொண்டு வருவார்கள்.**”

மெஹர் பாபா, அவருடைய ‘முடிவு’ என்று கூறியதன் அர்த்தம் உடலைத் துறப்பது அல்ல. அவ்வேளையில் பூனா, மும்பை மற்றும் அஹமதுநகரில் வாழ்ந்த பாரசீகர்கள், ஈரானியர்கள் இவர்களின் எதிர்ப்பு, ஏறக்குறைய நான்கு வருடங்களுக்கு, மெஹர் பாபாவின் ஆன்மீக உட்பணியின் வெளிப்பாடாக விளங்கியது. மெஹர் பாபா, இந்த எதிர்ப்பை அவருடைய பணியின் ஊடகமாகப் பயன்படுத்தினார்; ஆனால், அது அவருடைய உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் அளவுக்கு வீரியம் படைத்ததாக இருந்தது. அவருடைய உயிரைப் பறிக்க, அவருக்குத் தீங்கு விளைவிக்க, திட்டங்கள் வகுக்கப்பட்டதாக ஆங்காங்கே வதந்திகள் பரவின, ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. தற்செயலாக, பாபா இவ்வாறு கூறியதற்குப் பிறகு, ஸொராஸ்டிரிய இனத்தவர்களின் எதிர்ப்பு படிப்படியாகக் குறைந்தது மட்டுமின்றி, பல பார்சிகளும், ஈரானியர்களும் மெஹர் பாபாவை ஓர் உண்மையான குருநாதர் என நம்பி, இறுதியில், அவருடைய சீடர்களாக மாறும் பாக்கியத்தையும் பெற்றனர்.

மத நம்பிக்கை மிக்க ஒருவர், பெயர் பரூச்சா, அவ்வேளையில் மெஹராபாத்தில் தங்கி வந்தார். உபவாசம் இருப்பதும், கடவுள் நாமத்தை உச்சரிப்பதையும் வழக்கமாகக் கடைப்பிடித்தார். ஏப்ரல் 25ஆம் நாள், பாபா, மண்டலி அனைவரையும் அழைத்து ஒவ்வொருவரையும் பாடுமாறு அறிவுறுத்திய போது, மண்டலியும் அவர்களுக்குத் தெரிந்ததைப் பாடினர். பரூச்சா இவ்வாறு பதிலளித்தார்: “நான் ஒருபோதும் சினிமா, நாடகம் பார்க்கச் செல்வதில்லை, மேலும் எனக்குப் பாடத்தெரியாது. தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்.”

இதைக் கேட்டு எரிச்சலடைந்த பாபா, கோபமாக, “**இங்கு என்னோடு இருப்பவர்களை இத்தனைத் தரக்குறைவாக நினைத்து, அவர்களை நாடக நடிகர்களோடு ஒப்பிடுகிறீர்களா? அவர்கள் உலகைத் துறந்தவர்கள் என்பதை எப்போதாவது எண்ணிப் பார்த்தீர்களா? என்னை**

**மகிழ்விப்பதற்காக அவர்களின் தனிப்பட்ட இன்பதுன்பங்களைத் துறந்து, நான் சொல்வதையே செய்து கொண்டிருக்கிறார்கள். இதைவிட எளிமை, துறவு உலகில் வேறு ஏதேனும் உண்டா அல்லது வேறு எதனுடனும் ஒப்பிடத்தான் முடியுமா? அவர்களைப் பற்றிய இதுபோன்ற முட்டாள்தனமான எண்ணங்கள் உங்களுக்கு ஆகாது!**" என்று கூறினார்.

தடுமாற்றமடைந்த பரூச்சா பாபாவிடம் மன்னிப்புக் கோரினார். பாடல் நிகழ்ச்சி இரவு ஒன்பது மணிவரைத் தொடர்ந்தது. குரல்நயம் இல்லாதவர்கள் கூட பாடவேண்டிய நிலையில், ராகம் தாளம் எதுவும் இல்லாமல் மண்டலி பாடியது அனைவரையும் மகிழ்வித்தது.

அன்றைய தினம், பாபா ரோஜாப்பாகும், பழரசமும் கலந்த பால் மட்டும் அருந்தி உபவாசம் மேற்கொண்டார்.

1924, ஏப்ரல் 26ஆம் நாள், மதிய வேளையில், 'கமேளா யோகா' பணி நிறைவடைந்ததும், மெஹர் பாபா, 'உணவு முறை' மற்றும் 'பாலியல்' குறித்து சிறிய உரையை நிகழ்த்தினார்:

**"மாமிசம் உண்ணுவதில் பல தீமைகள் உள்ளன. முக்கியமாக, மாமிசம் காம உணர்வை அதிகரிக்கும். கற்களுக்கு உணர்வு என்பது மிகக்குறைவு - சொல்லப்போனால் அறவேயில்லை. தாவரங்களில் உணர்வின் வெளிப்பாடு தொடங்குகிறது. ஒரு மிருகம் இன்னொரு மிருகமாக உருவெடுக்கும்போது உணர்வும் அதிகமாகும், மனிதனில் அந்த உணர்வு முழுமை அடைகிறது. உணர்வு நிலை அதிகமாகும்போது காம உணர்ச்சியும் அதிகமாகும், அதே வேளை, குறைவான உணர்வு நிலையில் காம உணர்ச்சியும் குறைவாக இருக்கும். ஆகையால், மாமிசம் உண்ணும் வேளையில் காம உணர்வு அதிகமாகும். ஆனால், சைவ உணவில் அது கூடாமல் குறையாமல் இருக்கும்."**

அடுத்த நாள் அதிகாலையில், மண்டலி அனைவரும் இரண்டு மணிநேர பிரார்த்தனையில் அமர்ந்திருந்தபோது, 'ஸூஃபி குதிரை எங்கோ ஓடிவிட்டது' என்ற மாஸாஜியின் குரல் ஒலித்தது. பாபா, மண்டலியிடம் குதிரையைத் துரத்திப் பிடிக்க உத்தரவிட்டார். ஒரு மணி நேரத்திற்கு மேலாக, நடந்தும், மிதிவண்டியிலும், மேடு பள்ளமாக இருந்த புல்வெளியில், குதிரையைத் துரத்தி, கடைசியில் பல இன்னல்களுக்குப் பின்னர் அதைப் பிடித்து வந்தனர். கூட்டத்தில் யாரோ ஒருவர், "அவனுக்கு ஸூஃபி என்றல்ல, சைத்தான் என்று பெயர் சூட்டியிருக்க வேண்டும்" என்றார்.

மதிய வேளையில், பாபாவிற்குத் தெரியாமல் ருஸ்தம் ஒரு குதிரை பயிற்சியாளரை அழைத்துவந்து, குதிரையைப் பரிசோதனை செய்யுமாறுக் கூறினார். பயிற்சியாளரும் உடனே குதிரை மீதேறி ஓட்ட ஆரம்பித்தார். இதைக் கேள்விப்பட்ட பாபா கடும் சீற்றமடைந்து, ருஸ்தத்திடம் கூறினார், **"ஸூஃபி எனக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டது, அது என்னுடையது. என்னுடைய பொருள்களில் உரிமை கொண்டாட உங்களுக்கு என்ன தைரியம்?**

**எனக்குரிய ஒன்றை தொடுவதற்கு முன்னர் என் அனுமதியைக் கோரியிருக்க வேண்டும்.**" ருஸ்தம் தவறை உணர்ந்து மன்னிப்புக் கோரினார். இவ்வாறு, பாபா அந்த வெண் குதிரையின் மீது எவ்வளவு பிரியமாக இருக்கிறார் என்பதையும் ருஸ்தம் உணர்ந்தார். இக்குதிரை, தனது மனைவியின் தங்கை மெஹராவுக்குச் சொந்தமானதாக இருந்ததால், ருஸ்தம், பயிற்சியாளருக்கு உத்தரவிட்டார்; ஆனால் தனது தவறைப் பின்னர் உணர்ந்து கொண்டார்.

1924, ஏப்ரல் 27ஆம் நாள், அஹமதுநகரில் வாழ்ந்துவந்த ஸொராஸ்டிரியன் **நஸர்வான் நவ்ரோஜி ஸட்டா** என்பவர், அப்போது அவருக்கு வயது 27, நீண்ட நடைப்பயிற்சிக்காக தன் இளைய சகோதரன் **பீலூ**வுடன் சென்ற வேளையில், மெஹராபாத் சாலையை அணுக நேர்ந்தது. சிறிது தூரத்திலிருந்து பார்க்கையில், மெஹர் பாபா, ஒரு மரத்தின் கீழ் கம்பீரமான தோற்றத்தில் அமர்ந்திருந்தார். "யார் இவர்? ஸொராஸ்டரின் அதே தோற்றம்!" என்று நஸர்வான் நினைத்துக் கொண்டே பாபாவை நோக்கி நடந்தார்; அதேவேளை பீலூ அங்கேயே நின்று கொண்டிருந்தார். மெஹர் பாபா அவரை அன்புடன் அழைத்து அருகில் அமரச் செய்தார். சிறிது நேரம் அமைதியாக இருக்கவே, நஸர்வான் மனதில் 'இவர் உண்மையிலே ஸொராஸ்டரா? இவர் அந்தத் தீர்க்கதரிசியா?' என்ற எண்ணம் இடைவிடாமல் அலைமோதியது.

மெஹர் பாபா, அப்போது, புலனாகாத தொனியில் மென்மையாகக் கூறினார், "**ஸொராஸ்டர் மறுபடியும் பிறந்து வந்துள்ளார், ஆனால் மக்கள் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை!**" இந்த வார்த்தைகள் அவரைத் திடுக்கிடச் செய்தன; ஏனெனில் நஸர்வானின் மனதில் ஓடும் எண்ணங்களை பாபா அறிந்துகொண்டார் என்பதை அவர் உணர்ந்தார். மெஹர் பாபா அப்போது கேட்டார், "**நீங்கள் என்ன செய்கிறீர்கள்?**"

நஸர்வான் நேர்மையான முறையில் இவ்வாறு பதிலளித்தார், "நான் மஹாத்மா காந்தி அவர்களின் வழியைப் பின்பற்றுபவன். மேலும், இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்கெடுக்கிறேன்."

பாபா சிரித்துக்கொண்டே, "**அரசியல், விடுதலைப் போராட்டம் பற்றிய அனைத்து எண்ணங்களையும் களைந்து, இறையுணர்வை அடைவதில் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள், அதுவே உண்மையான விடுதலை, தன்னைத்தானே ஆளும் நிலை!**" என்றார். "**தவறாமல் தொடர்ந்து இங்கே வாருங்கள், நான் கூறுவது அனைத்தும் உங்களுக்குப் புலப்படும்!**" என்று இறுதியாக மெஹர் பாபா அறிவுரை கூறி முடித்தார்.

நஸர்வான் ஒரு பெரிய, செல்வாக்குமிக்க ஸொராஸ்டிரிய குடும்பத்தைச் சார்ந்தவர். மெஹராபாத்தில் நடந்த அவருடைய முதல் சந்திப்பின் காரணமாக, **கெய்மாய் ஜெஸவாலா** குடும்பம் உட்பட, எல்லா உறவினரும் மெஹர் பாபாவின் நெருங்கிய தொடர்பில் வந்தனர். வெளியளவில் தற்செயலாகக் கிடைத்த இந்த வாய்ப்பை எண்ணி நஸர்வான் மிக்க மகிழ்ச்சியடைந்து, குதூகலமான மனநிலையில் வீடு திரும்பினார். 1921ஆம்

ஆண்டு ‘ஸரோஷ் மன்ஸில்’ திறப்பு விழாவில் நஸர்வான், மெஹர் பாபாவை முதன்முதலாக பார்த்தாலும், அவரை யார் என்று அடையாளம் கண்டுகொள்ள முடியாத நிலையில் பேசவும் வாய்ப்பில்லாமலாயிற்று. இருப்பினும் இம்முறை இரும்பை காந்தம் கவர்வதுபோல மெஹர் பாபாவால் ஈர்க்கப்பட்டார்.

அஹமதுநகரிலிருந்து நஸர்வான் மட்டுமின்றி மேலும் பலர், மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக அடிக்கடி வந்தனர். மெஹராபாத் இப்போது பலர் வந்து செல்வதால் ஆரவாரத்துடன் கோலாகலமாகக் காட்சியளித்தது. ஏப்ரல் 28ஆம் நாள், மெஹர் பாபா அங்கு வரும் மக்களுக்கு இதை அறிவித்தார்:

**“தெய்வீகம் என்பது அளவிலா பொக்கிஷம். உலகப் பொருட்களுக்காக ஒரு சத்-புருஷரை அல்லது இறை நிலையை அடைந்த ஒருவரை அணுகுவது பயனற்றது மட்டுமல்லாமல் அர்த்தமற்றதும் ஆகும்.”**

ஏப்ரல் 29ஆம் நாள், அர்தேஷிர் ஈரானி, கராச்சியில் வாழும் அவர் நண்பர் ஃபெராம் என்பவருடன், பழம், பூக்கள் நிரம்பிய கூடைகளுடன் மெஹராபாத்திற்கு வந்தார். மெஹர் பாபா, பெர்ஸியாவில் இருப்பதுபோல பூந்தோட்டம் ஒன்றை மெஹராபாத்தில் உருவாக்குவது பற்றி விவாதித்து, **“அப்படி ஒரு பூந்தோட்டம் வளர்த்தால், என்னுடைய மண்டலி அதில் பணிபுரிய வாய்ப்பாக அமையும்”** என்று அர்தேஷிரிடம் கூறினார். அதற்கு இணக்கம் தெரிவித்து, அன்றிலிருந்து மெஹராபாத்தில் மண்டலியுடன் வாழத்தொடங்கினார். மெஹர் பாபா அவருக்கு ‘விவசாய இயக்குனர்’ என்ற பதவியை அளித்து, மெஹராபாத் நிலத்தை, பழத்தோட்டத்திற்குரிய வளமான நிலமாக மாற்றும்படி ஆலோசனை கூறினார்.

பைதூல், அர்தேஷிரை மன்ஸில்-எ-மீமில் மெஹர் பாபா இருந்தபோது அறிமுகப் படுத்தி வைத்தார். அப்போது அர்தேஷிர், மெஹர் பாபாவுடன் வாழும் விருப்பத்தைத் தெரிவித்ததும், பாபா, அவரைத் தக்க வேளையில் அழைப்பதாகக் அளித்த வாக்குறுதி இப்போது நிறைவேறியது. இருந்தாலும், புதியதோர் உறுப்பினர் மண்டலியோடு இணைந்ததை அவர்கள் மனமுவந்து ஏற்றுக் கொள்ளவில்லை. அர்தேஷிர் ஓர் ஆர்வமிக்க, சுறுசுறுப்பான மனிதர், இரக்கமற்ற கண்காணிப்பாளர், ஏன் ஒரு கொடுங்கோலன் என்று கூட கூறலாம். புதிதாகப் பதவியில் அமர்ந்த இந்த விவசாய இயக்குனர் மண்டலியை முதுகெலும்பு முறியும் அளவுக்கு வேலை வாங்கினார். தரிசு நிலமான மெஹராபாத்தில் இவ்வளவு பணிபுரிந்தும் என்றாவது ஒரு நாள் பழத்தோட்டம் தழைத்தோங்கி பழங்களை சுவைக்கும் வாய்ப்புக் கிடைக்குமா என்ற சந்தேக தொனியில் அனைவரும் பேசிக்கொண்டனர்.

1924, ஏப்ரல் 30ஆம் நாள், குல்மாய், மெஹர் பாபாவை சந்திக்க வந்த வேளையில், அவர் மென்துகில் மேலங்கி ஒன்றை பாபாவிற்கு அன்பளிப்பாக வழங்கினார். அது, பாபா அன்றிலிருந்து அணியும் வழக்கமான உடையாயிற்று. அவர்களின் உரையாடலுக்கிடையே மெஹர் பாபா சில தினங்களுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்தை குல்மாய்க்கு எடுத்துரைத்தார்.

மிகவும் ஆச்சாரமான ஸொராஸ்டிரிய பிரிவைச் சார்ந்த குஷ்ரவ் கர்சேட்ஜி என்பவர், மற்றுமொரு மதவெறியருடன், என்னைப் பயமுறுத்தி கண்டனம் தெரிவிக்கும் நோக்கத்தில், அஹமதுநகரிலிருந்து இங்கே வந்தார். எவரையும் கேட்காமல் பாபா அமர்ந்திருந்த குடிலுக்குள் நேரடியாக நுழைந்தார். காலணிகளை வெளியில் விட்டுச் செல்லுமாறு பார்சோப் கூறியும், அவர் அதை பொருட்படுத்தாமல் உள்ளே நுழைந்து பாபாவிடம், "நீங்கள் எந்த யோகா பயிற்சியைச் செய்து வருகிறீர்கள்?" என்று கேட்டார்.

மெஹர் பாபா கூறினார், "**கமேளா யோகா**."

குஷ்ரவ் அப்போது கேட்டார் "நீங்கள் ஏன் நீளமான தலைமுடியுடன் நிர்வாணமாகச் சுற்றித் திரிகிறீர்கள்?"

பாபா அமைதியாக, அந்த மனிதர் அணிந்திருந்த ஆங்கிலேய தொப்பி மற்றும் சட்டையைச் சுட்டிக்காட்டி, "**நீங்கள் ஏன் அந்தத் தொப்பியை அணிந்துள்ளீர்கள்? தீர்க்கதரிசி ஸொராஸ்டர், எப்போதாவது இப்படி உடை அணிந்தாரா?**" என்று கேட்டார்.

குஷ்ரவ், அவமான உணர்வில் கோபமாகக் கத்தினார், "ஆமாம், ஸொராஸ்டர் இப்படித்தான் உடையணிந்தார்." மெஹர் பாபா அரைக்காலுறை அணிந்திருந்தாலும், குஷ்ரவ் மீண்டும் மீண்டும் அவர் உடையில்லாமல் இருப்பதாகவே குறிப்பிட்டார்! அவர் சீற்றத்துடன் கத்தினாலும், மெஹர் பாபா அமைதியாக பதிலளித்தார். சற்றும் கோபத்தை வெளிப்படுத்தாமல் பாபா மிகவும் அமைதியாக இருந்ததால் குஷ்ரவ் அவருடைய நண்பருடன் சேர்ந்து அவமரியாதையுடன், "நீங்கள் ஒரு போலி! கபடநாடகமாடி மோசடி செய்பவர்! மக்களைத் தவறான வழியில் நடத்துபவர்! அஹமதுநகரிலிருந்து வெளியேறுங்கள்!" என்று கத்தினார்.

இதை, தற்செயலாகக் கேட்டுக்கொண்டிருந்த குல்மாய் மகன் ஆதி, நிதானத்தை இழந்து அவர்களை உடனே வெளியேறக் கூறினார். பொறுமையிழந்து அவர்களைத் தாக்கச் சென்ற ஆதியை, பாபா, தடுத்து நிறுத்தி மன்னிப்புக் கோருமாறு உத்தரவிட்டார். ஆதி உடனே அவரை மன்னிக்கும்படியாக வேண்டினார். புகழ்வாய்ந்த கான்ஸாஹேபின் மகன் ஆதி, இவ்விதமாக அவமானமடையும் சூழ்நிலையில் இருப்பதைக் கண்ட குஷ்ரவ் தடுமாற்றமடைந்தார். அதற்கு மேலும் எதுவும் கூறாமல் இருவரும் வெளியேறிச் சென்றனர்.

சில நாட்களுக்குப் பிறகு, குஷ்ரவ் எதிர்பாராதவிதமாகத் தனிமையில் மெஹராபாத்திற்கு வந்து அவரது முரட்டுத்தனமான நடத்தைக்கு, பாபாவிடம் மன்னிப்புக் கோரினார். இது ஏற்கனவே மெஹர் பாபா குறிப்பிட்ட '**ஸொராஸ்டிரியர்கள் கொடூரமாக அவர் உயிரைப் பறிப்பார்கள்**' என்பதுடன் தொடர்பான ஒரு நிகழ்வு.

1924 மே மாதம் பல நாட்கள் மெஹர் பாபா, பால் கலவாத தேநீர் மட்டும் அருந்தி உபவாசம் மேற்கொண்டார். அரன்காவ்ம் அருகில் பாபா குடியிருந்தது, கிராமத்து மக்கள் மத்தியில் பேரார்வத்தைத் தூண்டியது. ஏதோ

ஒரு சாது அல்லது புனிதமான ஒருவர் அவர்களருகில் இருப்பதாக எண்ணத்தொடங்கினர்.

ஒரு நாள் கிராமத்து சிறுவர்களில் இருவர் (சீமா, சாபு காம்ப்ளே) பதுங்கிப் பதுங்கி மெஹராபாத்தில் நுழைந்தனர். பாபா அவர்களைக் கண்டுகொண்டு அருகில் வருமாறு அழைத்தார். பயத்தில் இருவரும் அழத் தொடங்கினர். பாபா இருவரையும் அன்பாகத் தடவிக்கொடுத்துக் கூறினார், **"பயப்படாதீர்கள். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?"** சீமா, அவர்கள் அரன்காவ்ம் கிராமத்தில் வாழ்வதாகக் கூறினான். பாபா, கிராமத்தில் எத்தனை சிறுவர்கள் உள்ளனர், நாளெல்லாம் என்ன செய்கிறார்கள் என்று வினவினார். அங்கே, தீண்டத்தகாத இனத்தைச் சார்ந்த 'மகர்' மற்றும் 'மாங்' குழந்தைகள் ஏராளம் உள்ளனர் என்று சீமா விளக்கி, அவர்கள் ஆடு, மாடுகளைப் புல்மேய்க்கக் கூட்டிச் செல்வார்கள் என்று கூறினான். பாபா உடனே அவர்களிடம், **"அவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் அளித்தால் என்னிடம் வருவார்களா?"** என்று கேட்டார்.

சிரித்துக்கொண்டே, சாபு கூறினாள், "ஸார், நீங்கள் இனிப்பு வழங்கினால் அனைத்து குழந்தைகளும் இங்கே வருவார்கள்!"

பாபா புன்முறுவல் செய்தபடி, **"அவர்கள் அனைவரையும் நாளைக்கு இங்கே அழைத்து வாருங்கள்"** என்று கூறி, குஸ்தாஜியிடம் இனிப்பு எடுத்துவரச் சொல்லி இருவருக்கும் வழங்கினார். கிராமத்திற்குத் திரும்பிச் சென்று, புதிதாக ஒருவர் அங்கே வந்திருப்பதைத் தெரிவித்தனர்.

அடுத்த நாள், சில சிறுவர்கள் வந்தபோது, பாபா, அவர்களிடம் மராட்டி மொழியில் இரக்கமாகப் பேசி, சுவையான இனிப்புகளை வழங்கினார். ஒரு முறை பாபா, லாலா காம்ப்ளே என்ற சிறுவனிடம், **"என்னுடன் சேர்ந்து பக்திப்பாடல்கள்** (பஜனை) **பாடுவாயா?"** என்று கேட்டதும் லாலா, "எங்களுக்கு இனிப்புகள் தருவதானால், நீங்கள் எதைச் சொன்னாலும் செய்வோம்" என்று பதிலளித்தான்.

**"முதலில் பஜனைப் பாடுங்கள், பின்னர் இனிப்புகள் தருவேன்"**, சிறுவர்கள் அதற்கு, 'சரி' என்றதும், பாபா, **"நான் ஒரு வரி பாடுவேன், நீங்கள் அதைத் திரும்பப் பாடுங்கள், சரியா?"** என்று கூறி, மராட்டியில் பாடினார்:

**ஓ பண்டரிநாதா, கைகளை இடுப்பில் வைத்துக்கொண்டு**
**நிற்பதைப் பார்க்க எவ்வளவு அற்புதமாக உள்ளாய்!**
**சித்திரம் போன்ற சிற்பச்சிலையில் எத்தனை அழகான,**
**எத்தனை ஆனந்தமான தோற்றத்தில் இருக்கிறாய்!**

மெஹர் பாபா முதல்வரியைப் பாடியதும், சிறுவர்கள் அவர்களுக்கான கீச்சுக்குரலில் பாடினர். பாபா, அவர்கள் பாடுவதைக் கேட்டு, சிரித்துக் கொண்டே உள்ளூர பெருமகிழ்ச்சி அடைந்தார். பஜனை முடிந்ததும் பாபா இனிப்புடன் பொரியும் சுண்டலும் வழங்கினார். அடுத்த நாள், பாபா மேலுமொரு பாடலைக் கற்றுத்தந்தார்:

**ஓ பாண்டுரங்கா! உனது தரிசனத்தை எப்போது தருவாய்?**

**எப்போது நான் உன்னைப் பார்ப்பேன்?**

**எப்போது நீ எனக்குக் காட்சி தந்தருள்வாய்?"**

'பண்டரிநாத்', 'பாண்டுரங்கா' இரண்டும் மஹாராஷ்டிரா, பண்டர்பூர் கிராமத்தில் அமைந்த விட்டோபா (கிருஷ்ணா) கோயிலில் நிலைகொண்டிருக்கும் கடவுளின் சிலைக்கு வைக்கப்பட்ட பெயர்கள். இது சந்திரபாகா நதிக்கரையில் அமைந்துள்ளது. பக்தர்கள் வருடத்தில் பலமுறை வரும் புனித நாட்களில் நதியில் நீராடி, பண்டரிநாதனை வணங்கி கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள்.

மெஹர் பாபா, இந்த ஏழை ஹரிஜன் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கும் வேளையில், அவர்கள் அதைப் பசிவெறியில் வேகமாக உண்டு, மீண்டும் அடையப்பெறும் நோக்கத்தில் பாபாவை நோக்கினர். பாபா அவர்கள் கைகளை மறுபடியும் நிரப்பி மகிழ்ச்சி அடையச் செய்தார்.

ஒரு முறை, மெஹர் பாபா அவர்களிடம், "**எந்த தெய்வத்தை நீங்கள் வழிபடுகிறீர்கள்?**" என்று கேட்டதற்கு, ஒவ்வொரு குழந்தையும் வேறு வேறு இந்து தெய்வங்களின் பெயரைக் கூறினர். அப்போது, பாபா கேட்டார், "**இத்தனை தேவதைகளும் உங்களை நேசிக்கின்றனவா?**"

அதற்கு அந்த சிறுவர்கள், "எங்களுக்குத் தெரியாது; ஆனால் எங்கள் பெற்றோர்கள் வழிபடுகிறார்கள், ஆகையால் நாங்களும் வணங்குகிறோம்" என்று பதிலளித்ததைக் கேட்டு, பாபா, சிறுவர்களுடன் **தத்தாத்ரேயா** (பிரம்மன், விஷ்ணு, சிவன் மூவரின் ஒன்றிணைந்த அம்சமாக திகழ்பவர்) பற்றிய பாடல் ஒன்றைப் பாடினார்.

**ஓ தத்தாத்ரேயா! மும்மூர்த்திகளான தெய்வமே!**

**ஓ பிரம்மா! ஓ விஷ்ணு! ஓ மஹேஷ்வரா!**

**மூன்று முகங்களும், ஆறு கரங்களும் கொண்ட**

**உங்களை நாங்கள் வணங்குகிறோம்!**

மெஹர் பாபா, தொடர்ந்து அந்த சிறுவர்களிடம் கேட்டார், "**ஆறு கரங்கள் கொண்ட இந்தத் தேவன் யார்?**"

சிறுவர்கள் உடனே கடவுளின் சிலைகளுக்கு, குங்குமம் மற்றும் மெல்லிய துணிகளை அணிவிப்பதாகவும், அவர்கள் கடவுளுக்கு ஆறு கரங்கள் இருப்பதைப் பார்த்ததில்லை என்றும் பதிலளித்தனர்.

"**நாளை ஆடு மாடுகளை, புல் மேய்வதற்காக அழைத்துச் செல்லும் வேளையில் இதைப் பற்றி சிந்தனை செய்து மாலையில் வரும்போது உங்கள் பதிலைக் கூறுங்கள்**" என்று பாபா கூறி அனுப்பினார்.

அடுத்த நாள் மாலையில் சிறுவர்கள் வந்து அவர்களின் சிந்தனைக்கு அது எட்டவில்லை என்றும், ஆறு கரங்களோடு கூடிய கடவுளை அவர்களுக்குத் தெரியாது எனவும் கூறினர்.

மெஹர் பாபா புன்முறுவல் செய்தபடி, "**நான் உங்களுக்கு அந்தக் கடவுளையும், மேலும் பல கடவுள்களையும் காட்டுகிறேன், ஆனால் இப்போது என்னுடன் சேர்ந்து பஜனை பாடல்களைப் பாடுங்கள், மனம் திறந்து பாடுங்கள்!**" என்று கூறி, இதைப் பாடினார்.

**அங்கே அந்தக் கடவுள் இந்தக் கடவுள் என்று பல கடவுள்கள்!**
**ஓ கடவுளே! நீதான் கடவுள்களுக்கெல்லாம் கடவுள்!**

மெஹர் பாபா, மதச்சடங்கு சம்பிரதாயங்களுக்கு எவ்வித முக்கியத்துவம் தராமலிருந்தாலும், சில நேரங்களில், அவரைக் கடவுளின் அவதாரம் என்று மனப்பூர்வமாக உள்ளூர ஏற்றுக்கொள்வதுவரை, பிறரை மதச்சடங்குகளில் பங்கெடுக்க அனுமதித்தார்.

குழந்தைகள் பாபாவைக் கேட்டனர், “நாங்கள் பஜனை பாடினால் எங்களுக்கு உணவு வழங்குவீர்களா?”

பாபா சிரித்துக்கொண்டே, “**ஆமாம், நிச்சயமாக உங்களுக்கு நான் ஏதாவது தருவேன்**” என்றார்.

இப்படி, தினமும் மாலை வேளையில் பாபா, படிப்பறிவில்லாத இந்தக் குழந்தைகளுடன் பஜனை பாடல்கள் பாடி, அவர்களிடம் அவ்வப்போது பல விஷயங்களைப் பற்றிய கேள்விகளை எழுப்பினார். அவர்களில் வாக்கட்யா எனும் அதிபுத்திசாலி, ஆனால் முடமான சிறுவன் ஒருவன், கிராமத்திலுள்ள பெரும்பாலான சிறுவர்களை ஒன்றிணைத்து அணிவகுப்பு முறையில், மேளதாளத்துடன் பாபாவிடம் நடத்திச் சென்றான். வாக்கட்யா அணிவகுப்பில் முன் நின்று இசைக்கருவியை இசைத்த வண்ணம் சிறுவர்கள் நடந்தனர்.

மே 3ஆம் நாள் அரன்காவ்ம் கிராமத்திலிருந்து முப்பது சிறுவர்கள் வாக்கட்யா தலைமையில் இசை மேளத்துடன் மெஹராபாத் வந்தனர். அர்ஜுன் ஸுப்பேக்கருக்கு, பஜனை பாடல்களைக் கற்றுத்தரும் பொறுப்பு வழங்கப்பட்டது. முன்ஷி ரஹீம் மும்பையிலிருந்து கொண்டுவந்த விதவிதமான பழங்களை சிறுவர்களுக்கு அள்ளி வழங்கினார்.

முன்ஷி ரஹீம் வந்ததும், மெஹர் பாபா அவரைத் தனியாக அழைத்துப் பேசினார். பின்னர் அனைத்து மண்டலியையும் அழைத்தார். மத அடிப்படையில், பிற மண்டலியின் பாதங்களைத் தொடும் பாபாவின் கட்டளையை பார்சோப் மீறியதை மெஹர் பாபா, முன்ஷி ரஹீமுக்கு விளக்கிக் கூறி, இவ்வாறு கேள்வி எழுப்பினார்: “**என்னுடைய கட்டளை இஸ்லாமிய கொள்கைகளுக்கு எதிரானதா? ஒருவர் இன்னொருவருக்கு மரியாதை அளிப்பதை இஸ்லாம் தடை செய்கிறதா?**”

முன்னொரு காலத்தில் இஸ்லாமிய மதக்கொள்கைகளில் தீவிரமாக இருந்த முன்ஷி ரஹீம் இவ்வாறு பதிலளித்தார்: “இஸ்லாமிய மத அடிப்படையில், இதில் எந்தத் தவறும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், மதம், உங்கள் கட்டளைகளுக்கு முன்னால் என்னதான் செய்யும்? உங்களின் கட்டளைகளே எங்கள் மதம்!”

இந்த பதிலைக் கேட்டு பார்சோப் தர்மசங்கடமான நிலையிலிருந்தார்.

மெஹர் பாபா, உடனே பேச்சின் தலைப்பை மாற்றி, அன்று வந்த கடிதம் ஒன்றை வாசிக்கச் சொன்னார். பெய்லியிடமிருந்து வந்த அந்தக் கடிதத்தில் அவருடைய நண்பர் ஒருவர், சில தினங்களுக்கு முன்பு மெஹர் பாபாவை மும்பையில் பார்த்ததாகக் குறிப்பிட்டிருந்தார். பெய்லி குறைகூறும் தொனியில்,

'நீங்கள் மும்பை வந்தபோது என்னை ஏன் அழைக்கவில்லை? உங்களுக்கு என்மீது ஏதேனும் கோபமா?' என்று கேட்டு, 'இது உங்களின் அற்புதம் நிறைந்த திருவிளையாடலாகக் கூட இருக்குமா? ஏனெனில், நீங்கள் மும்பை வந்திருந்தால் என்னைப் பார்த்திருப்பீர்கள் அல்லது ஒரு வார்த்தையாவது கூறி அனுப்பியிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்' எனக் குறிப்பிட்டிருந்தார். எதுவாயினும், பாபா அதைப் பற்றி எதுவும் பேச விரும்பவில்லை; ஏனெனில் அவ்வேளையில் மெஹர் பாபா, மெஹராபாத்தில்தான் இருந்தார், மும்பைக்குச் செல்லவே இல்லை.

அன்று மதிய வேளையில், மெஹர் பாபா, அஹமதுநகரின் ஒரு பகுதியில் அமைந்த 'ஹேப்பி வேலி' என்ற இடத்திற்கு முன்ஷி ரஹீம், சையது ஸாஹேப், ஆதி, ருஸ்தம் ஆகியோருடன் புறப்பட்டுச் சென்றார்.

மெஹர் பாபா ஹேப்பி வேலியில் மிகவும் இனிமையான மனநிலையில் இருந்தார். இறை நிலை (நிர்விகல்ப சமாதி) மற்றும் சத்குருவின் வட்ட அமைப்பில் நிலைகொண்டிருக்கும் சீடர்களைப் பற்றி விளக்கினார்:

**இறை ஞானத்தில் ஒரு மிகச்சிறிய பாகத்தை ஒரு கணமேனும் உங்களால் அனுபவிக்க நேர்ந்தால், இறைவனுக்கே உரிய பேரானந்தத்தை அடையப்பெறலாம். அப்போது, நீங்கள் அனைத்து வெளியுலக பொருட்களிலிருந்தும் ஆனந்தத்தை அனுபவிக்கலாம். அப்பொருளின் ஒவ்வொரு அம்சமும் இறையறிவைப் பற்றிய கதையைச் சொல்லும்! துன்பங்களின் மொத்த உருவமாகத் தென்படும் இவ்வுலகம் சொர்க்கத்தைப் போலப் பிரகாசிக்கும்!**

**ஆன்மீக குருநாதர் ஒருவர் தன்னைப் போல் ஒரு பொறுப்புள்ள சீடரை உருவாக்கி, தன்னிடமிருக்கும் அனைத்தையும் அவருக்கு அளிப்பதோடு, அவரைத் தன் ஒரே வாரிசாக மாற்றி, அத்தனை பொறுப்புகளையும் அவரிடம் ஒப்படைக்கிறார். அப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட அவர், மரபுவழி பெற்றதை தனது விருப்பத்திற்கேற்ப 12 வட்டத்து சீடர்களுக்குப் பகிர்ந்தளிப்பார். இந்தப் பொக்கிஷம், அதிகாரம் இரண்டையும் அவரவர் செயல்வன்மைக்குத் தகுந்தார்போல 12 சீடர்களுக்கும் (இறை நிலையை) உரிய காலத்தில் வழங்குவார்.**

**இறை நிலையின் அனுபவம் அனைவருக்கும் ஒன்றே! இருந்தாலும், ஒருவருக்கு, அவர் இறை நிலையை அடையும் முன் வழங்கப்படும் ஆற்றலும், அதிகாரமும், வட்டத்தில் அவரவர் தராதரம் மற்றும் சகிப்புத்தன்மையைப் பொறுத்தது. இதன் அர்த்தம் என்னவெனில், சத்குரு தன் உடலைத் துறக்கும்போது, அவருடைய பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் சீடர் 'பகிர்ந்தளிப்பாளராக' மாறுகிறார். இப்படிக் கூட நடக்கலாம், அதாவது, அந்தக் குருநாதர், உள்ளளவில் 'உயிரற்றவராக இருந்தாலும், தன் உடலை அப்படியே வைத்திருப்பார். சில தருணங்களில் உயிரை இழக்கும் முன்னரே, உடல் பயனற்றதாகிவிடும்.**

**'பகிர்ந்தளிப்பது' என்பது அவருடைய ஆன்மீக உள்கடமைகளை வட்டத்து சீடர்களிடம் ஒப்படைப்பதன் மூலம், குருநாதர் சுதந்திர பறவையாகி விடுகிறார். இவ்வாறு, விடுதலை அடையும் நிலையில் அவர் எல்லையில்லா ஆனந்தத்தை அனுபவிக்கிறார்; இதுவரையிலும் அவர், வட்டத்து சீடர்களுக்கு இறை நிலையை அளிக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததால், அதை அனுபவிக்க முடியாமலாயிற்று! வட்டத்து பிரதிநிதிகளின் நிலை, பொறுப்பான ஒரு குருநாதரின் நிலையிலிருந்து இவ்விதத்தில் மாறுபடும்: 'எப்போது வேண்டுமானாலும், அவர்கள் விருப்பப்படி, இறையின்பத்தை அனுபவிக்க முடிவது மட்டுமின்றி, அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணியில் கவனம் செலுத்தி நிறைவு செய்யவும் முடியும்.'**

**நிர்விகல்ப்** (நானே கடவுள் என்ற உணர்வு நிலை) **எனும் மிக உயர்ந்த நிலையை, சில நாட்கள் அல்லது சில மணி நேர அனுபவத்திற்குப் பிறகு, பொறுப்பான ஒரு குருநாதரின் நிலையிலிருந்த அவரை, இறை இன்பத்தில் மூழ்கிய வண்ணமே இருக்கவிடாமல், கீழ்நிலை தளங்களுக்குக் கொண்டுவருவதால், அவருடைய வட்டத்து சீடர்களுக்காக ஆற்றவேண்டிய கடமையைச் செய்ய இயலும். இக்கடமையைச் செய்யும் தருவாயில் அவர் பலவிதமான மனக்கஷ்டங்கள் மற்றும் சோதனைகளை சந்திக்க நேரிடும்.**

இவ்வாறு விளக்கம் அளித்த பின்பு, மெஹர் பாபா, அன்றிரவு மெஹராபாத்திற்குத் திரும்பி வந்தார்.

1924, மே 7ஆம் நாள், மெஹர் பாபா அவரது குடிலில் உபவாசத்தைத் தொடங்கினார். இது பல மாதங்கள் தொடரும் என்பதை பாபா ஏற்கனவே அறிவித்திருந்தார். ஆன்மீக உட்பணியின் பளு காரணமாக, பாபாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தாலும், உபவாசத்தைத் தொடர முடிவு செய்து, இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு, குடிலின் கதவைத் திறந்து வைப்பதாகவும், அது மண்டலி அனைவரும் பாபாவைப் பார்க்க வாய்ப்பாக அமையும் என்றும் கூறினார். பாதிரியை, குறிப்பாக, பாபாவின் இரவு - பகல் காவலனாக, அனைத்து தேவைகளையும் கண்காணிக்கும் நோக்கத்தில் தேர்ந்தெடுத்தார். ஒரு நாள் இரவில், உபவாச வேளையில் மௌனம் காக்கும்போது, அருந்துவதற்குத் தண்ணீர் வேண்டி பாபா அவரது கைகளைத் தட்டினார். ஆனால் பாதிரியோ வராந்தாவில் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்ததால் கவனிக்கவில்லை. பாபாவின் அதிருப்தி அவர் ஜன்னல் கதவில் தொங்கவிட்டிருந்தக் குறிப்பைப் படித்ததும் பாதிரிக்குப் புரிந்தது.

**அடே, பன்றியின் மகனே! மூன்று மணி நேரம் நான் தாகத்தால் தவிக்கும் வேளையில், நீ அயராது தூங்கிக் கொண்டிருந்தாய். நான் எனது கைகளைத் தட்டியும் நீ விழித்ததாக இல்லை. கும்பகர்ணனின் வியாதி உன்னையும் தாக்கிவிட்டதா?**

ஏழு நாட்கள், இரவும் பகலும், மெஹர் பாபா உபவாசத்துடன் ஏகாந்தவாசமும் மேற்கொண்டார். வலுக்குறைந்த தேநீர், தண்ணீர் மற்றும்

பாலில் வேகவைத்த ஜவ்வரிசி இவைகளை மட்டுமே அவ்வப்போது அருந்தி வந்தார்.

மே 10ஆம் நாள், விஷ்ணுவை ஒரு கருநிற தேள் கொட்டியது. அர்தேஷிர் அவருக்கு உடனடியாக சிகிச்சை அளித்தாலும், மெஹர் பாபா மண்டலி அனைவரையும் அழைத்து, தேள்கள், குறிப்பாக விஷப்பாம்புகள் அங்கிருப்பதால் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு கூறி, இரவு நேரங்களில் அனைவரும் கை விளக்கை ஏந்திச் செல்லுமாறு கட்டளையிட்டார்.

அர்தேஷிரின் மேற்பார்வையில் 'கமேளா யோகா' என்ற கடுமையான உடல் உழைப்பில் அனைத்து மண்டலியும் பூந்தோட்டம் அமைக்கும் வேலைகளில் மும்முரமாக இருந்தனர். தளங்கள் மற்றும் சுவர்கள் கட்டுவதற்கென பெரிய பெரிய கற்களை, கால்மைல் தூரத்திலிருந்து எடுத்துவர வேண்டியிருந்தது. வேலைகள் அனைத்தும் வேடிக்கைகள் நிறைந்து இல்லாமலில்லை. பார்சோப் மாட்டுவண்டியை ஓட்டிவரும் வேளையில் மாடுபோலவே சத்தமிட்டு மண்டலியை மகிழ்வித்தார்.

மே 11ஆம் நாள், ஞாயிறு காலையில், இந்து மண்டலி பாபாவின் குடிலுக்கு முன்னே பக்தி, பஜனை பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தனர். மெஹர் பாபா இடையே குறிக்கிட்டு, திடீரெனக் கேட்டார், **"இரவில் வெளியே செல்லும்போது உங்கள் கைகளில் விளக்கை எடுத்துச் செல்கிறீர்களா?"** இல்லை என்ற பதில் வந்ததும், பாபா கோபத்தில், **"என்னுடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்காத வரையில் இந்த பஜனை பாடல்களால் என்ன பலன்? இம்மாதிரியான பக்திப் பாடல்களைப் பாடுவதால் உங்களுக்கு என்ன கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? என்னுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுதான் உண்மையான பக்தி - பஜனை. எனக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே உங்கள் பஜனை அர்த்தமுள்ளதாகும்!"**

மெஹர் பாபா உடனே இதர பக்தர்கள் பக்கம் திரும்பி, இரவில் கழிவறைக்குச் செல்லும்போது கைவிளக்கை ஏந்திச் செல்கிறீர்களா என்று கேட்டதற்கு, அனைவரும் நிச்சயமாக உங்கள் வார்த்தைகளை மீறமாட்டோம் என உறுதியளித்தனர். பாதிரி மருத்துவம் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பாபா அவரிடம் இவ்வாறு குறிப்பிட்டார், **"எவரையேனும் பாம்பு கடித்தால், உடனே கடித்த இடத்தைச் சுற்றி இறுக்கமாக ஒரு கட்டு போடுங்கள். காயத்தை வெட்டித் திறந்து அதில் பொட்டாசியம் பெர்மாங்கனேட்டை நிரப்பி, உடனே பாதிக்கப்பட்டவரை அஹமதுநகர் மருத்துவமனைக்கு நான்கு மண்டலியுடன் அனுப்பி வையுங்கள். எவரையேனும் தேள் கடித்தால், அர்தேஷிர் அதற்குரிய சிகிச்சையைச் செய்வார்."**

கடந்த சில நாட்களாக, மண்டலியிடையே ஒருவரையொருவர் பற்றிய தவறான எண்ணங்கள் நிலவின. மே 12ஆம் நாள், பாபா, மண்டலியைக் குடிலின் முன்னால் அழைத்து, அவர்கள் அடிக்கடி மோதிக் கொள்வதைக் குறித்து கண்டித்தார். குறிப்பாக, ஆதி, மாஸாஜி இருவரையும் திருத்தும் எண்ணத்தில் பாபா திட்டினார். **"நீங்கள் ஒவ்வொருவரும் எனக்குத் தந்தை!"** (இது ஒரு மரபுத்தொடர், இதன் பொருள், பாபா, அவ்விருவரும் சொல்வதைக் கேட்டு அதன்படிச் செய்ய வேண்டும்) என்று கூறி முடித்தார்.

அதற்குப் பிறகு, பாபா, ஒவ்வொருவரையும் அடிபணிந்து, **"எனது குருநாதர் மீது சத்தியமாகச் சொல்கிறேன்: அவர் என்னிடம் நான் அவருக்குத் தந்தை என்று கூறி, எனது பாதங்களை வணங்கி இருந்தால் - நான் இப்போது உங்களிடம் செய்தது போல - நான் அவருடன் இருப்பதற்குத் தகுதியற்றவன் என்ற எண்ணத்தில், ஒரு கணம் கூட தாமதம் செய்யாமல், அவரை விட்டுச் சென்றிருப்பேன். ஆனால் உங்களுக்கோ என்னை விட்டுச் செல்லக் கூட தைரியம் இல்லை."** இன்னும் ஒரு சில கடுமையான விமர்சனத்திற்குப் பிறகு கூட்டம் நிறைவடைந்தது.

பாபாவின் கசப்பான விமர்சனங்களைக் கேட்டு மனம் நொந்துபோன சௌத்திரி மெஹராபாத்தை விட்டுச்செல்ல ஆயத்தமானார். சில மண்டலி அவருக்குப் புத்திமதி சொல்ல எவ்வளவோ முயற்சித்தும், சௌத்திரி தனது முடிவில் பிடிவாதமாக இருந்தார். குஸ்தாஜி இதை பாபாவிற்குத் தெரியப்படுத்தியதும், பாபா, மறுபடியும் அனைவரையும் குடிலுக்கு அழைத்தார். பாபா நேரடியாக சௌத்திரியை எதிர்கொண்டு, **"எந்த சூழ்நிலையிலும் என்னுடனிருப்பதாக நீங்கள் ஏன் வாக்குறுதி அளித்தீர்கள்? இப்போது என்னுடைய கடுமையான வார்த்தைகளால் நீங்கள் என்னைவிட்டுப் போகிறேன் என்கிறீர்கள்! எல்லா சூழ்நிலையிலும் தவறாமல் எனது பாதங்களைப் பற்றிக்கொண்டிருப்பதாகக் கூறியதன் அர்த்தம்தான் என்ன? என்னுடன், வாழ்வது எப்படி, எனது காலடிகளில் இருக்கும் தூசுபோல் இருப்பது எப்படி என்பதை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்!"** இவ்வாறு கூறினார்.

ஆனால் சௌத்திரி, பாபா கூறியதைக் கேட்காமல் பிடிவாதமாக இருந்து பூனாவுக்குத் திரும்பிச் சென்றார். சௌத்திரி அங்கிருந்துச் சென்றதும், பாபா, இதர மண்டலியிடம் கேட்டார், **"உங்களில் வேறு எவரேனும் என்னை விட்டுச்செல்ல விரும்புகிறீர்களா? அப்படியானால் இப்போதே செல்லலாம்!"** ஆனால், வேறு எவரும் செல்லத் தயாராக இல்லை.

**"உங்கள் மனங்களின் கூற்றுக்குச் செவி சாய்க்காதீர்கள்"** என்று கூறி பாபா, **"நீங்கள் ஆன்மீகப் பாதையில் முன்னேறிச் செல்ல உங்கள் ஆழ் இதயத்திலிருந்து விரும்பினால், எந்த சூழ்நிலையிலும் என் அரவணைப்பில் இருங்கள். நான் ஒரு போதும் ஒரு தவறும் இழைக்க முடியாது, ஏனெனில் நான் 'உண்மையின் மொத்த உருவம்'! உண்மையிலிருந்து உண்மையே வெளிப்படும்! ஆகையால், உங்களின்**

**அறிவாற்றலால் எனது செயல்களையும், பேச்சுக்களையும் அளவிட முயற்சிக்காதீர்கள். உங்களால் அவற்றை ஒருபோதும் ஆழங்காண முடியாது.”**

மெஹர் பாபா, எதிர்பாராமல், தொடர்ந்து, பெர்ஸியாவுக்கு மறுபடியும் பயணம் மேற்கொள்ளும் திட்டத்தை வெளிப்படுத்தினார். மெஹராபாத்தில் தொடங்கிய ஏகாந்தவாசம் நிறைவடைந்ததும், இரண்டு வாரங்களுக்கு, ஆதி, குஸ்தாஜி, மற்றும் இருவருடன் பெர்ஸியா செல்லவிருப்பதாகத் தெரிவித்தார்.

அவ்வேளையில் குல்மாய், ருஸ்தம் இருவரும் அங்கு வந்தனர். மெஹர் பாபா அவர்களிடமும் பெர்ஸியா பயணம் பற்றி எடுத்துக்கூறி, இம்முறை ருஸ்தத்தின் புதிய காரில் பயணம் செய்ய விரும்புவதாகத் தெரிவித்தார். ருஸ்தம், எதுவாயினும், காரில் இவ்வளவு நெடுந்தூரப் பயணம் செய்வதில் மகிழ்ச்சியையும், விருப்பத்தையும் காட்டாத நிலையில், பாபா தனது வருத்தத்தை வெளிப்படுத்தினார். மதிய வேளையில் மண்டலி இறைவனின் ஏழு நாமங்களை உச்சரித்துக் கொண்டிருக்கும் வேளையில், ஒருவித மாறுபட்ட மனநிலையில் இருந்த பாபா, ராம்ஜூவை அழைத்து, பாபா, ருஸ்தம் இருவருக்குமிடையே நடந்த வாக்குவாதத்தைப் பற்றிய மண்டலியின் கருத்துக்களைக் கேட்டு வருமாறு கூறினார்.

ராம்ஜூ ஒவ்வொருவரிடமும் கேட்டார்: “ருஸ்தம் அவருடைய காரை பாபாவின் பெர்ஸியா பயணத்திற்கு வழங்க மறுத்ததால், ருஸ்தத்திற்கு சொந்தமான அரன்காவ்ம் நிலத்தில் பாபா தங்கியிருப்பது முறையாகுமா?” என்பதை பாபா தெரிய விரும்புகிறார். மண்டலியில் சிலர் பாபா கூறியதை ஏற்றுக்கொண்டனர்; சிலர் மறுத்தனர். பாபாவின் முடிவு எதுவாக இருக்கும் என்பது அனைவருக்கும் ஒரு திகிலாகவே இருந்தது.

மே 14ஆம் நாள், வயதான, எலும்பும் தோலுமான தோற்றத்தில் முஸ்லிம் சாது ஒருவர் மெஹராபாத் வந்ததும், மண்டலி அவரை பாபாவிடம் அழைத்துச் சென்றனர். அவரைப் பற்றிய விபரங்களைக் கேட்டறிந்த பிறகு, நீராட வைத்து, புத்தாடை உடுத்தி, உணவு அளிக்குமாறு பாபா, குஸ்தாஜியிடம் கூறினார். உணவுக்குப் பிறகு, குஸ்தாஜி அவரை ஒரு மரநிழலில் அமருமாறு கேட்டுக்கொண்டார். அங்கு ஏற்கெனவே மூன்று ‘அலைந்து திரிபவர்கள்’ கடந்த சில நாட்களாக இருந்து வந்தனர். மூவரும் இந்துக்கள் - வயதான ஒருவர், அவர் மனைவி மேலும் ஒரு பெண்மணி, பெயர் ஜெய் - அரைப் பைத்தியம். இந்த நான்காவது முஸ்லிம் சாதுவுடன் அது ஒரு வித்தியாசமான கூட்டமாகத் தென்பட்டது.

1924 மே 15ஆம் நாள், மெஹர் பாபா அவரது ஏழுநாள் ஏகாந்தவாசத்தை நிறைவு செய்து, உபவாசத்தை நிறுத்தி சாதமும், பருப்பும் உண்டார். அடுத்த நாள், ‘ஸந்த்’ என்றழைக்கப்பட்ட வெண்ணிற காளையை மெஹராபாத்திற்கு அழைத்து வந்து, நீராட்டி ‘ஸூஃபி’ குதிரைக்குப் பக்கத்தில் கட்டி வைத்தனர்.

எப்படியோ, திடீரென, ஸந்த் வெறி பிடித்தாற் போலக் கட்டை அவிழ்த்துக் கொண்டு ஓடியதும், மண்டலி அதைத் துரத்திப் பிடிக்க வேண்டியதாயிற்று. ஸந்த்திற்கு, அருகில் வருபவரை உதைத்துத் தள்ளும் மோசமான பழக்கம் இருந்ததால் மண்டலி கவனமாக இருக்க வேண்டிய நிலை; கடைசியில் எவ்வித தீங்கும் நிகழாமல் காளையைப் பிடித்துக் கட்டினர்.

பின்னர் அதே நாள், பாபா மறுபடியும் ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போவதாக ஒரு மறைமுக குறிப்பால் சுட்டிக் காட்டினார். தரிசனத்திற்காக வரும் மக்களுக்கு வசதியாக இருக்கும் என்ற எண்ணத்தில் ஒரு மெல்லிய திரையை, குடில் கதவில் தொங்கவிடுமாறு பாதிரியிடம் கூறினார்.

அடுத்த நாள், சத்குரு உபாஸனி மஹாராஜின் முக்கிய சீடரான யஷ்வந்த் ராவ் அவருடைய நண்பர்கள் சிலருடன் மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தார். யஷ்வந்த் ராவ், ஸக்கோரிக்கும் மெஹராபாத்திற்கும் இடையே இணைப்பு சங்கிலியாக இருந்து, மஹாராஜின் செய்தியை பாபாவிற்கும், பாபாவின் செய்தியைப் மஹாராஜுக்கும் எடுத்துச் சென்றார். 1920ஆம் ஆண்டு ஆரம்பத்தில் குல்மாய், ஆதி இருவரும் அவ்வப்போது தூதுவர்களாகவும் செயல்பட்டனர்.

மதிய உணவுக்குப் பிறகு, மே 17ஆம் நாள், நெர்வஸ் இவ்வாறு தெரிவித்தார், “இன்று ஸொராஸ்டர் தனது பூத உடலை துறந்த நாள்.” பாபா, நெர்வஸிடம் ‘**இதை ஏன் முன்னதாக நினைவு படுத்தவில்லை, நாம் ஏதேனும் நிகழ்ச்சியைத் திட்டமிட்டிருக்கலாமே**’ என்று கேட்டார். பார்சி மற்றும் ஈரானியர்கள் இதை ஒட்டிய சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துவதில் ஆர்வம் காட்டினர், ஆனால் பாபா “காலம் கடந்துவிட்டது” என்றார்.

அப்போது, ஆதி கிண்டலாகக் குறிப்பிட்டார், “இது ஓர் இந்து புனித தினமாக இருந்திருந்தால் நீங்கள் உற்சாகமாகக் கொண்டாடி இருப்பீர்கள்!”

பாபா, ஆதியை முறைத்துப் பார்த்தார். இருப்பினும் அவரது முடிவை மாற்றி விழாவை சிறப்பாக நடத்தக் கூறினார். ஆனால், பாபா, ஆதியை நோக்கி, “**இந்துக்களை நான் ஊக்குவிப்பதன் முக்கிய காரணம், அவர்கள் மதப் பண்டிகைகளை மிகுந்த உற்சாகத்துடன் கடைப்பிடிப்பது பழக்கம்; மேலும், இந்துக்கள் வேறு எந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்களைக் காட்டிலும் பக்தி நிறைந்தவர்கள்**!” என்று கூறினார்.

ஸொராஸ்டரின் நினைவு நாளை சிறப்பிக்க அனைவரும் மெஹர் பாபா முன்னிலையில் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். பிரார்த்தனை வேளையில் பாபா அமைதியின் மொத்த ரூபமாகத் தென்பட்டார். இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

மாலை வேளையில், மெஹர் பாபா அவர் சிறுவயதில் பெர்ஸியன் மொழியில் பாடும் பழமையான ஸொராஸ்டிரிய பாடல்களைத் தொடர்ந்துபாட, ஆதி தம்பூரா வாசித்தார்.

ஆரம்பத்திலிருந்தே இந்து மற்றும் இதர மண்டலியிடையே மத வேறுபாடுகள் நிலவி வந்தன. இந்துக்கள் பிறர் தயார் செய்த உணவுகளைத்

தொடுவதில்லை; இருந்தும் மெஹர் பாபா இந்துக்கள் பக்கம் சாயும் விதத்தில், அவர்களின் மதச் சடங்குகளைக் கடைப்பிடிக்க ஊக்கமளித்தார். ஆன்மீகப் பண்பாட்டு முறையில், இந்து மண்டலியை இவ்வேறுபாடுகளிலிருந்து விடுவிப்பதே பாபாவின் நோக்கம். ஆனால், தெய்வீக மதுபானம் அருந்தி, அதன் போதையில் மூழ்கும்வரை அவர்களை விடுவிக்க முடியாது. மெஹர் பாபா இந்துக்களின் பண்டிகைகளில் பங்கெடுத்து, அதேவேளையில் ஸொராஸ்டிரிய மற்றும் முஸ்லிம் பண்டிகைகளை அலட்சியம் செய்து, ஆழமாக வேரூன்றிய முரண்பாடான சிந்தனைகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து அடியோடு அழிக்கும் தருவாயில் மத வேறுபாடுகள் இல்லாமலாகிவிடும். இவ்வாறு, வைதீகமான கருத்துக்கள், படிப்படியாக ஒழிக்கப்பட்டன. அனைத்து மண்டலியும் - இந்து, முஸ்லிம் அல்லது ஸொராஸ்டிரியன் எவராயினும் - தத்தமது மதத்தை குருநாதரின் அன்பெனும் மதுபானத்தில் கண்டனர்.

ஆனால், அந்த மதுபானத்தை அடையும் ஏக்கத்தை உருவாக்க, முதலில் அதற்குத் தேவையான தாகத்தை உருவாக்க வேண்டும். மனதில் வேரூன்றிய அசுத்தமான சிந்தனைகளை வெளியே கொணர்ந்து அழித்தாலொழிய, அந்தத் தாகத்தை உருவாக்க முடியாது. ஆகையால், உணவு மற்றும் பண்டிகைகள் தொடர்பான விஷயங்களில் முரண்பாடாக தோற்றமளிக்கும் அனைத்தும் ஆக்கப்பூர்வமானதே! மெஹர் பாபா, மண்டலியிடையே, வேண்டுமென்றே மோதல்களை வளரவிடுவதன் மூலம், இறையன்பை உருவாக்கி தேவையற்ற உலக ஆசைகளைத் தவிர்த்து, சத்தியத்திற்கு முன்பாக நிர்வாண நிலையை அடைய வழிவகுத்தார்.

உடலளவில் மிகப்பெரிய ஆனால் சாந்தமான மனிதர் ஒருவர், பெயர் 'சிது தௌலத் காம்ப்ளே', வயது 23, அரன்காவ்ம் கிராமத்தில் வாழ்ந்து வந்தவர், அஹமதுநகரில் ஏதேனும் வேலை தேடிக்கொண்டிருந்தார். அவருடைய கிராமத்தில் ஓர் உன்னதமான ஞானி வந்து தங்குவதைக் கேள்விப்பட்டு, தரிசனத்திற்காக 1924, மே மாதம் மெஹராபாத்திற்கு வந்தார். தபால் நிலைய கட்டிடத்தின் அருகில் மெஹர் பாபா மண்டலியுடன் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த வேளையில், வந்தவர் சாலையின் எதிரே அமர்ந்து விளையாடுவதைப் பார்த்துக்கொண்டிருக்க, பாபா அவரை அழைத்து, நட்பு முறையில் கேட்டார், **"உங்கள் பெயர் என்ன? எங்கே இருக்கிறீர்கள்? என்ன செய்கிறீர்கள்?"**

சிது பதிலளித்தார், "இப்போது நான் எதுவும் செய்யவில்லை; ஆனால் வேலை தேடிக்கொண்டிருக்கிறேன்."

**"எதுவரை படித்திருக்கிறீர்கள்?"**

"மராட்டி பள்ளிக்கூடத்தில் மூன்று வரை படித்தேன்."

**"மும்பையில் நான் வேலைக்கு ஏற்பாடு செய்தால் ஏற்றுக் கொள்வீர்களா?"**

"நிச்சயமாக ஏற்றுக் கொள்வேன்."

அப்போது, பாபா அவரிடம் மதிய உணவை சாப்பிடச் சொன்னதும், அமைதியாக மறுத்தார். பாபா, அவரை உடன் சாப்பிடுமாறு வற்புறுத்தி, ஒரு தட்டு நிரம்ப உணவை அவர் கையாலே எடுத்து சிதுவுக்கு வழங்கினார். அறியாத ஓர் அந்நியர் மீது பாபா காட்டிய அளப்பரிய கருணை அவர் இதயத்தை நெகிழச் செய்தது.

பாபா, உடனடியாக மும்பையில் ஒரு சினிமா தியேட்டரில் சிதுவுக்கு வேலைக்கான ஏற்பாடுகளைச் செய்தார். மேலும், பாபா அவரிடம் ஒரு வருடம் அவரை வந்து சந்திக்கக்கூடாது என உறுதியாகக் கூறி, மும்பையில் இருக்கும் வேளையில் அடிக்கடி திப்பு பாபாவை சந்திக்குமாறு மெஹர் பாபா அவருக்குக் கட்டளையிட்டிருந்தார். பாபா கூறியபடி, திப்பு பாபா அப்போது மும்பையின் ஆன்மீகப் பொறுப்பாளராக இருந்தார். ஒரு வருடத்திற்குப் பிறகு, பாபா, சிதுவை மெஹராபாத்திற்கு அழைத்து, அங்கே சிது, அவர் மனைவி இருவரும் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

மெஹர் பாபா, மறுபடியும் மே 18ஆம் நாள் குடிலில் தனியாக அமர்ந்து திரவ ஆகாரங்களை மட்டுமே உண்டு உபவாசம் மேற்கொண்டார். இதற்கிடையில், மே 20ஆம் நாள், சத்குரு உபாஸனி மஹாராஜின் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாட அனைவருக்கும் பாபா அறிவுறுத்தினார்.

மெஹராபாத் சம்பந்தப்பட்ட சில வேலைகளுக்காக, மெஹர் பாபா, நெர்வஸை குஷ்ரு குவாட்டர்ஸுக்கு அனுப்பி வைத்தபோது, ஆதியின் தந்தை கான்ஸாஹேப் அவரிடம் மரியாதையின்றி முரட்டுத்தனமாக நடந்து கொண்டதைக் கேள்விப்பட்டதும், சீற்றத்தில் பாபா, ஆதியை அழைத்து, **“உங்கள் தந்தையார் நடந்துகொண்ட விதம் சற்றும் விரும்பத்தகாதது. இப்படி அன்பில்லாமல், எனது மண்டலியை அவமானப்படுத்துவது என்னை அவமதிப்பதற்கு சமம்! நான் இப்போதே இங்கிருந்து வெளியேறுவதில் தீவிரமாக இருக்கிறேன்!”**

பாபா, ஆதியிடம், அவர் தந்தை ஏன் இப்படி நடந்து கொண்டார் என்பதை கேட்டு வருமாறு வலியுறுத்திக் கூறினார். மேலும் அவர் சகோதரர் ருஸ்தம், தந்தை இருவரும் அன்றிலிருந்து மெஹராபாத்திற்கு வரவேண்டாம் என்பதை எடுத்துக் கூறி, இனிமேல் ருஸ்தம் அவர் விருப்பப்படி எதையும் செய்யலாம் என்பதையும் தெரிவிக்குமாறு ஆதியை அனுப்பி வைத்தார்.

ஆதி அங்கிருந்து சென்றதும், பாபா, மண்டலியிடம் மும்பைக்குச் செல்லத் தயாராக இருக்குமாறு கூறி, குடில் வாசலில் இருந்த திரையை அகற்றுமாறும் பாதிரியிடம் கூறினார்.

ஆதி, பாபாவின் கட்டளைகளைச் செயல்படுத்தும் முன்னரே திரும்பிவந்து, ருஸ்தத்தை மெஹராபாத் சாலையில் சந்தித்ததாகவும், அவர் பாபாவுக்காக பழங்கள் எடுத்து வந்துள்ளதாகவும் தெரிவித்தார். ஆதி உடனே, ருஸ்தம், பாபாவைத் தனியாக சந்திக்கலாமா என்று கேட்டதற்கு, பாபா, சம்மதம் தெரிவித்து, நீண்ட நேரம் உரையாடல் தொடர்ந்தது. ருஸ்தம், அவர் தந்தையின் சார்பாக மன்னிப்புக் கோரி, பாபாவின் அனைத்து கட்டளைகளுக்கும்

கீழ்ப்படிவதாக வாக்குறுதி அளித்தார். அதற்குப் பிறகு, பாபா மெஹராபாத்தை விட்டுச் செல்லும் முடிவு கைவிடப்பட்டது.

ருஸ்தம் அவர் கொண்டு வந்த நாய் ஒன்றை பாபாவிடம் காண்பிக்க, அது முற்றிலும் வெண்ணிறத்தில் இல்லாததால் பாபா மறுத்துவிட்டார். 'சாது' சமீபத்தில் இறந்துவிட்டதால் அதற்கு பதிலாக ஒரு கண்காணிப்பு நாய் மெஹராபாத்திற்குத் தேவை என்று பாபா கூறியிருந்தார்.

குல்மாய், ஆதி, ருஸ்தம், ஸரோஷ் ஆகியோர் மெஹர் பாபாவின் கடுமையான விமர்சனங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் ஏனெனில், இவர்களைத் தவிர குடும்பத்தில் இதர உறவினர்கள் அனைவரும் மெஹர் பாபாவை அலட்சியப்படுத்தியது மட்டுமின்றி, அவர் ஓர் இறை நிலையை அடைந்த ஞானி என்பதை நம்ப மறுத்தனர். எதுவாயினும், மெஹர் பாபா அனைத்து உறுப்பினர்களையும் படிப்படியாக அவர் வசம் ஈர்ப்பதோடு, எவ்விதமான சொத்து சுகங்களில் அவருக்கு சிறிதளவும் அக்கறையில்லை என்பதையும் உணர வைத்தார். மெஹராபாத் பூமியில் அவர் இருப்பிடத்தை அமைத்து, உண்மையிலே தன்னை ஒரு பெரிய கடமைக்குள் உட்படுத்திக் கொண்டார் என்றாலும், மெஹர் பாபா இதன் மூலம் அவர்களுக்குச் செய்யும் விலைமதிப்பற்ற கௌரவத்திற்கு எவ்வகையிலும் ஈடுசெய்ய முடியாது என்பதுதான் உண்மை. உறவினர்களிடையே எவ்வளவுதான் விரோத மனப்பான்மை இருந்தாலும் குல்மாய், ருஸ்தம், ஆதி மூவரும் பூரண நம்பிக்கையுடன் பாபாவின் சேவையில் ஈடுபட்டு, மெஹராபாத் எனும் இறைவனின் உறைவிடத்தைச் சிறப்படையச் செய்து, பாபாவின் ஆண், பெண் மண்டலி அனைவரையும் பணிவுடன் கவனித்து வந்தனர்.

மே 19ஆம் நாள், மெஹரா ஜெ. ஈரானி அவரது தாயார் தவுலத்மாய், சகோதரி ஃபிரீனியுடன் சத்குரு உபாஸனி மஹாராஜின் பிறந்தநாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள மெஹராபாத் வந்தார். மேலும் பல பெண் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்; ஷிரீன்மாயும் மகள் மணியுடன் வருகை தந்தார். மணி பிறந்த நாளிலிருந்தே பாபாவின் அன்பான கவனத்தில் வளர்ந்து வந்தார் - மணி நிஜத்தில் மணியாக (முத்தாக) மாறிக்கொண்டிருந்தார்.

மெஹராபாத்திலிருந்த அனைத்து பெண்மணிகளும் சமையல் வேலையில் மும்முரமாக இருந்தனர்.

மெஹர் பாபா ஒரு முறை மெஹராவிடம் ஜவ்வரிசி பாயாசம் செய்யக்கூறி அனுப்பினார். மெஹராவுக்குச் செய்யும் முறை தெரியாததால் உடனிருந்த பெண்களிடம் கேட்டுத் தயார் செய்ததை, பாபா, சுவைத்து மெஹராவின் முயற்சியைப் பாராட்டினார்.

மெஹராவின் குடும்பம் மிகவும் வசதிவாய்ந்த குடும்பம், வீட்டில் அவர் இதுபோன்ற வேலைகளைச் செய்ததில்லை. இருந்தும், ஸக்கோரியில் மஹாராஜ், மெஹராவை இத்தகைய வேலைகளைச் செய்யவைத்தார்; மேலும் இப்போது மெஹர் பாபாவின் அறிவுறுத்தல்களின்படி அதே வேலைகளைத் தொடர்ந்தார். முதன்முறையாக, மெஹர் பாபாவைப் பார்த்த அந்தக் கணத்திலிருந்து மெஹரா, பாபாவின் தெய்வீக அழகில் மூழ்கிய வண்ணம் அவருடைய சேவைகளில் ஈடுபடுவதைத் தவிர, வேறு எந்த ஆசைகளுக்கும் இடம்தரவில்லை.

மே 20ஆம் நாள், சத்குரு உபாஸனி மஹாராஜின் 54ஆவது பிறந்தநாள் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மலர் தோரணங்கள் குடிலை அலங்கரித்தன. குதிரை வண்டிகளில் மக்கள் வந்த வண்ணம் இருந்தனர். பாபா வருகை தந்த அனைவரையும் தனித்தனியாக சந்தித்துப் பேசினார், குறிப்பாக ஜாம்ஷெட், பெஹராம், பாபாவின் சகோதரர்கள் நீண்டகாலமாக பாபாவை சந்திக்கவில்லை.

மாலையில் நடந்த முக்கிய விழாவில், சத்குரு உபாஸனி மஹாராஜின் புகைப்படத்தை ஓர் ஊஞ்சலில் வைத்து கிருஷ்ணபகவானின் நினைவில் ஆடவிட்டு, அதன் பின்னர், அலங்கார பல்லக்கில் வைத்து ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். திடீரென அவ்வேளையில் இடி மழையுடன் கூடிய புயல் வீசியது. இயற்கையின் ஆரவாரம் மஹாராஜை வாழ்த்துவதுபோல் ஓர் உணர்வு. மழை அடங்கியதும் பஜனை கீர்த்தனைகளுடன் விழா சிறப்பாக நிறைவடைந்தது.

அடுத்த ஐந்து நாட்கள் மெஹர் பாபா அவரது குடிலில் தனியாகவே இருந்தார்; மே 23ஆம் நாள், வெளியே வந்ததும், வாழ்வை அர்ப்பணம் செய்த அனைத்து மண்டலியையும் அழைத்து, பாபாவின் பாதங்களைப் பற்றிக்கொண்டு இருப்பது எவ்வளவு முக்கியம் என்பதை மீண்டும் அறிவுறுத்தினார். அனைவரும் அவருடைய அரவணைப்பில் எப்போதும் இருப்பதாக மறுபடியும் உறுதியளிக்கச் செய்தார்.

டாக்டர் கனி, அப்துல் தயாப் இருவரும் லோனவாலாவிலிருந்து அப்துலின் காரில் வந்தவர்கள் அதை மெஹர் பாபாவின் உபயோகத்திற்காக அங்கே விட்டுச் சென்றனர்.

குல்மாயின் பெரிய மகன் ருஸ்தம், மெஹர் பாபாவிடம் வந்து அவர்கள் குடும்பத்தில் நடக்கவிருக்கும் திருமணத்தில் கலந்துகொள்ள ஆதியை அனுப்பி வைக்கவும், அவரை சவரம் செய்து கொள்ள அனுமதிக்குமாறும் வேண்டினார். (கமேளா யோகா நடந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் அனைத்து மண்டலியும் தாடி வளர்க்க வேண்டும் என்பது பாபாவின் கட்டளை). பாபா தயக்கத்துடன் அனுமதி அளித்தாலும், அவர் அதை விரும்பவில்லை என்பதை உணர முடிந்தது. அன்றிரவு ஆதி திரும்பி வந்ததும் அவர் கட்டளையை

மீறியதற்காக, பாபா பெரிதும் கடிந்து கொண்டார். பின்னர் அவரை மன்னித்து மெஹராபாத்தில் தங்க அனுமதித்தார்.

அன்றிரவு பாதிரி, பாபாவின் சகோதரர் ஜால் இருவரும் உணவறையில் இரகசியமாக நுழைந்து, பக்தர்கள் கொண்டுவந்த மாம்பழங்களைத் திருட முயற்சித்தனர். மண்டலிக்குக் கொடுக்காமல் அரன்காவ்ம் சிறுவர்களுக்கு மட்டுமே பாபா அந்த மாம்பழங்களைத் தரலாமென்று அவர்கள் நினைத்தனர். அவ்வேளையில், குடிலிலிருந்த பாபா, மாஸாஜியை சத்தமில்லாமல் உணவறைக்குச் சென்று, அங்கு விளக்கு எரிகிறதா எனப் பார்த்துவர அனுப்பி வைத்தார். மாஸாஜி அங்குச் சென்று பார்த்தபோது பாதிரி, ஜால் இருவரும் ஏணியில் ஏறி மாம்பழங்களை எடுத்துக் கொண்டிருந்தனர். மாஸாஜி அமைதியாக அருகில் சென்று 'எனக்கும் சில மாம்பழங்கள்' என்று காதுகளில் மெல்ல முணுமுணுத்தார். மாஸாஜியைப் பார்த்ததும் இருவரும் பயந்து வேகமாக ஓடி மறைந்தனர். மாஸாஜி சிரித்துக்கொண்டே இந்த நகைச்சுவையான சம்பவத்தை பாபாவிற்குத் தெரிவித்தார்.

மறுநாள் காலையில் மெஹர் பாபா இரண்டு குற்றவாளிகளையும் அழைத்துக் கூறினார், "**நினைவிருக்கட்டும், எனது கண்கள் அனைத்தையும் நோட்டமிடும்! இங்கிருந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பால் நடக்கும் நிகழ்வுகளையும் நான் பார்க்க முடியும்! எதையும் எனது கண்களிலிருந்து மறைக்க முடியாது!**" அவர்கள் புரிந்து கொண்டதால், பாபா வேறு எதுவும் கூறவில்லை.

மெஹர் பாபா, அவருக்கே தெரிந்த பல்வேறு காரணங்களுக்காக, குல்மாயின் கணவர் கான்ஸாஹேப் மற்றும் ருஸ்தம் இருவரின் செயல்முறைகளை எடுத்துக்காட்டி, மெஹராபாத்தை அவருடைய தலைமையகமாக நிறுவுவது சரியா என்ற கேள்வியை மண்டலி முன் வைத்தார்.

இறுதியில் மெஹர் பாபா ஒரு சில மண்டலியுடன் மறுபடியும் **குவெட்டா** பயணம் மேற்கொள்ள ஆயத்தமானார்.

1924 ஜூன் 2ஆம் நாள் மெஹர் பாபா, அர்தேஷிர், டாக்டர் கனி, ராம்ஜூ, வஜிப்தர் ஆகியோருடன் ரயிலில் புறப்பட்டார். மும்பை வந்ததும், தெரியாமல் இன்னொரு ரயிலில் ராணுவ வீரர்களுக்கான பெட்டியில் தவறுதலாக ஏறினர். பாபா மண்டலியிடம் தேநீர், செய்தித்தாள் மற்றும் இரண்டாவது வகுப்பு டிக்கெட் வாங்கி வர அனுப்பிவைத்த அவ்வேளையில், ரயில்வே அதிகாரி ஒருவர் அங்கே வந்து, அந்தப் பெட்டியிலிருந்து இறங்குமாறும், அது அங்கேயே ரயிலிலிருந்து பிரிக்கப் படுவதாகவும் அறிவித்தார். இது இரண்டாவது முறையாக, எந்த மண்டலியும் உடனில்லாமல் பாபா, தனியாக இருந்த சந்தர்ப்பம். சற்றும் கவலையின்றி, அமைதியாக அனைத்து சுமைகளையும் தோளிலும், கைகளிலும் எடுத்துக்கொண்டு, பாபா இரண்டாவது வகுப்புப்

பெட்டியில் சென்று அமர்ந்தார். மண்டலி திரும்பி வந்தபோது பாபா அமர்ந்திருந்த பெட்டியே அங்கு இல்லை; அனைவரும் குழப்பத்தில் திக்குமுக்காடிப் போயினர். இறுதியில் பாபா இரண்டாவது வகுப்புப் பெட்டியில் அமர்ந்திருப்பதைக் கண்டதும், நிம்மதியடைந்து, டிக்கெட் கிடைக்காத விஷயத்தை பாபாவிற்கு எடுத்துக் கூறினர். பாபா, கவலை வேண்டாம், 'இகத்புரி'க்குச் செல்லாமல் வழியில் இறங்கிக் கொள்ளலாம் என்று அவர்களை சமாதானப் படுத்தினார். அன்று மாலை வேளையில் ரயில் 'லஹித்' வந்ததும் அங்கே இறங்கினர்.

லஹித் சென்றதும், ராம்ஜூ ரயில்வே அதிகாரியை சந்திக்கச் சென்றார். அவர் ஒரு பக்தி நிறைந்த பிராமணர், முதலில் இடங்கொடுக்கத் தயங்கியதும், ராம்ஜூ, ஷிர்டி சாய்பாபா மற்றும் மெஹர் பாபா இருவருக்குமிடையே உள்ள தொடர்பை எடுத்துக் கூறினார். உடனே அந்த அதிகாரி இணக்கம் தெரிவித்து, பாபாவை உற்றுநோக்கியதும், ஏதோ இனம்புரியாத சக்தி ஒன்று, அவரை ஆட்கொண்டது. மறுகணமே அவர்களுக்கு உணவளிக்க விருப்பம் தெரிவித்தார் அந்த ரயில் நிலைய அதிகாரி. ராம்ஜூவிடம் பாபா கொடுக்கும் பணத்தை அந்த அதிகாரி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் கூறினார். முதலில் மறுத்தவர், பின்பு பாபாவின் பிரசாதமாக ஏற்றுக்கொண்டு, ஏழைகளுக்கு உதவுவதாகக் கூறி அருமையான உணவு வகைகளை பாபா, மற்றும் மண்டலிக்காக ஏற்பாடு செய்தார். ரயில்வே அதிகாரி அளித்த உணவை பாபா பூரிப்புடன் உண்டு பெருமகிழ்ச்சியடைந்தார்.

அவ்வேளையில் ரயில் துறையில் பணிபுரியும் தொழிலாளிகளில் ஒருவர், மிகத்திறமையான பஜனைப் பாடகர், பாபாவின் அனுமதியுடன் கவிதைகளை எடுத்துச் சொல்லி அருமையான கீர்த்தனைகளை ஒரு மணி நேரம் பாடினார். அவ்வேளையில் ரயில் நிலையத்தில் பணிபுரிபவர்கள், தாழ்த்தப்பட்ட ஹரிஜன் தொழிலாளிகள் உட்பட அனைவரும் பாபாவின் அருகிலமர்ந்து நிகழ்ச்சியை ரசித்தனர்.

ஜூன் 3ஆம் நாள் மும்பை வந்து சேர்ந்து, பாபாவும், மண்டலியும் ஈரானி மேன்ஷனில் தங்கினர். ஸூனாமாசி, கோர்ஷெத் இருவரும் பாபாவின் தேவைகளை கவனித்துக் கொண்டனர். குவெட்டா பயணத்திற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளும் வேகமாகச் செய்யப்பட்டது.

மெஹர் பாபா, குறிப்பாக லஹித் சென்றதன் முக்கிய காரணம் அந்த ரயில்வே அதிகாரியை சந்திப்பதற்காகத்தான்! மிகுந்த இறைபக்தி நிறைந்தவர். அக்காலத்தில், தாழ்த்தப்பட்ட ஹரிஜன மக்களை, கொடூரமாகத் தொல்லைப்படுத்தி, பின்தங்கிய கீழ்ஜாதி மக்களாகப் பார்த்தது மட்டுமல்லாமல் மேலினத்தவர் எனக் கருதப்பட்ட பிராமணர்களின் அருகில் அமருவது என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாத நிலை. லஹித் ரயில் நிலையத்தில், கீழ்ஜாதி என்று அழைக்கப்பட்ட அனைத்து மக்களும் ஒன்று திரண்டு மெஹர் பாபா அருகில் அமர்ந்து நிகழ்ச்சியில் பங்கெடுத்தது, ஒரு கண்கொள்ளா காட்சி.

மேலும் மெஹர் பாபா அங்கிருந்த தாழ்த்தப்பட்ட மக்களிடம் காட்டிய அன்பு, ரயில் நிலைய அதிகாரியின் நெஞ்சத்தை நெகிழச் செய்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, பாபாவின் முன்னிலையில், கடவுளின் ஒருமைப்பாட்டின் ஒளிக்கதிர்கள் அந்தப் பிராமண அதிகாரியின் பக்தியுணர்வை இன்னும் ஆழமாக வேரூன்றச் செய்தது.

மெஹராபாத்திலிருந்து புறப்படும் முன்பு, மெஹர் பாபா, வெண்குதிரை ஸூஃபி, காளை **ஸந்த்** இரண்டையும், சத்குரு உபாஸனி மஹாராஜுக்கு அன்பளிப்பாக வழங்குமாறு பாதிரி, நெர்வஸ் இருவரிடமும் கூறியிருந்தார். அவ்வண்ணமே இருவரும், மெஹர் பாபா மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றதும், ஸூஃபி, **ஸ**ந்த் இரண்டையும், மிகவும் சிரமப்பட்டு ஸக்கோரிக்கு எடுத்துச் சென்றனர். இருவரின் கைகளிலும் காசு, பணம் எதுவும் இல்லாத நிலையில் மெஹராபாத்திலிருந்து எடுத்துச் சென்ற ரொட்டி, சட்னி மட்டுமே உணவாக இருந்தது. இறுதியில் சத்குரு உபா**ஸ**னி மஹாராஜ் ஸூஃபி, ஸந்த் இரண்டையும் ஏற்றுக்கொள்ள மறுத்தது மட்டுமின்றி இருவரையும் சிறப்புற்ற சாபங்களால் வெகுவாகத் திட்டினார். வேறு வழி தெரியாமல் அஹமதுநகர் திரும்பிவந்து ஸூஃபி, **ஸ**ந்த் இரண்டையும் குஷ்ரு குவாட்டர்ஸில் விட்டுச் சென்றனர்.

இருவரும் மும்பை சென்றதும், பாபா, **ஸ**ந்த், ஸூஃபி இரண்டையும் மஹாராஜுக்கு அன்பளிப்பாகத் தந்தீர்களா என்று கேட்டதும், பாதிரி புன்முறுவலுடன், மஹாராஜ், உலகிலுள்ள அனைத்து சாபங்களையும் எங்கள் மீது மழையாகப் பொழிந்தார் என்று கூறி நடந்ததை விளக்கமாக எடுத்துரைத்தார். பாபா அதைக்கேட்டு வயிறு குலுங்க சிரித்தார்.

இதைப் பார்க்கும் ஒருவருக்கு, மெஹர் பாபா, மஹாராஜ் இருவரும் அவர்களிடையே பரிமாறிக் கொள்ளும் ஆன்மீக உட்பணியின் மர்மங்களின் அம்சங்கள் மட்டுமே தென்படும்; வேறு எதுவும் புலப்படாது. நாம் இதை இப்படி யூகிக்க முடியும், மஹாராஜின் மறுப்புக்குக் காரணம், மெஹரா, அவர் மெஹர் பாபாவின் அவையில் நிரந்தர அங்கத்தினராக பொறுப்பேற்றுள்ளார். அதற்கு முன்பு, மெஹரா ஸக்கோரியில் நிரந்தரமாக தங்க இருந்ததாகவும் கூறப்பட்டது. எதுவாயினும் மெஹரா, மெஹர் பாபாவுடன் வாழவேண்டியது இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட ஒன்று!

மும்பையிலிருந்து குவெட்டா புறப்படும் முன்பு, மெஹர் பாபா, டாக்டர் கனியிடம் அவரைத் தனது இல்லத்திற்கு திரும்பிச் செல்லுமாறும், குவெட்டாவில் தங்குவதற்கான வசதிகள் ஏற்பாடு செய்த பின்னர் அனைத்து மண்டலியையும் அவருடன் அழைத்து வருமாறும் கூறினார்.

ஜூன் 6ஆம் நாள் மெஹர் பாபா, ஆதி, அர்தேஷிர், ராம்ஜூ மூவருடனும் குஜராத் மெயிலில் குவெட்டா புறப்பட்டார். ஹைதராபாத் சென்றதும் ரூஸிக்கு இவ்வாறு தொலைத்தந்தி அனுப்பப்பட்டது: "**மெஹர்**

**பாபா, மூன்று நபர்களுடன் 9ஆம் தேதி குவெட்டா வருகிறார். ஸிபி வழியாக எந்தத் தடையும் இல்லாமல் பயணத்தை தொடர வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவும். ஃபிரோஸ்ஷா தவிர வேறு எவருக்கும் தெரிவிக்க வேண்டாம். ஆடம்பரமான சடங்குமுறைகளுடன் கூடிய வரவேற்பைத் தவிர்க்கவும். இவ்விஷயம் இரகசியமாக இருக்கட்டும்.**" பாபாவின் வருகையைப் பற்றிப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டாம் என்பதன் காரணம், அவருடைய ஏகாந்தவாசத்தில் எவ்விதத் தடையும் இருக்கக்கூடாது என்பதே!

ஜூன் 9ஆம் நாள் ஸிபி வந்து சேர்ந்தனர். ஏற்கனவே ரூஸி காவல்துறை அதிகாரிகளுக்குத் தகவல் அளித்திருந்ததால், எல்லையைக் கடந்து செல்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. (வடமேற்கு எல்லையைக் கடந்து செல்லும் பயணிகளை, தகுந்த அடையாளம் மற்றும் பயண உத்தரவாதம் இல்லாத வேளையில், ஆங்கில காவல் அதிகாரிகள் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் துன்புறுத்துவது வழக்கம்). மாலை ஐந்து மணியளவில் ரூஸியின் வீட்டை சென்றடைந்ததும், அவருடைய குடும்பத்தாரின் சிறப்பான விருந்தோம்பலில் பயணக் களைப்பு அறவே தெரியவில்லை.

இதற்கு முந்தைய வருகையின்போது தங்கியிருந்த பூந்தோட்டங்கள் நிறைந்த, அருமையான வீடு இப்போது கிடைக்காததாலும், குவெட்டாவின் உறைபனி காலநிலை மண்டலிக்கு உகந்ததாக இருக்காது என்பதாலும், பாபா பிறரின் யோசனைகளைக் கேட்டு 'ஸக்கர்' நகருக்குச் செல்லத் திட்டமிட்டார். அதே வேளையில், மெஹர் பாபாவின் மண்டலியில் ஒருவர் முன்ஷி ரஹீம் வேலையின் நிமித்தம் இடம்பெயர்ந்து ஸக்கர் நகருருக்கு வரவிருந்ததாகவும் கூறப்பட்டது. அர்தேஷிர், ராம்ஜூ இருவரையும் பாபா அங்கு அனுப்பி, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு அறிவுறுத்தினார்.

மெஹர் பாபா அவசரமாக ஸக்கருக்குச் செல்வதன் காரணம் பின்னர்தான் புலப்பட்டது. பாபா, ஸக்கரில் 'பச்சல் ஷா' சமாதியில் வாழ்ந்த ஒரு மஸ்த்தை (இறைபோதையில் இருக்கும் மேல்நிலை சாது) தொடர்பு கொள்ள வேண்டியது அவருடைய முக்கிய நோக்கம். அதற்குப் பிறகு, மெஹர் பாபா, ராம்ஜூவிடம் அந்த மஸ்தை அடிக்கடி சந்திக்கவும், வசதியான ஓர் இருப்பிடத்திற்கு ஏற்பாடு செய்யவும் கூறி விடைபெற்றார்.

மெஹர் பாபா கூறியபடி, ராம்ஜூ, பச்சல் ஷா சமாதிக்கு அருகாமையில் ஒரு பங்களாவை வாடகைக்குப் பேசி ஆறு மாதங்களுக்கு ஒப்பந்தம் செய்து முடித்தார். அதற்குப் பிறகு ராம்ஜூ, பச்சல் ஷா சமாதிக்கு வந்தபோது, ஏற்கனவே மெஹர் பாபா தொடர்புகொண்ட மஸ்த் அங்கே தென்படவில்லை; அதே வேளையில், இன்னுமொரு 'மஸ்தானி' (பெண் மஸ்த்) ஹஸ்ரத் பாபாஜானின் தோற்றத்தில் அங்கே இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தார். உடனே, அந்த மஸ்தானி ராம்ஜூவை எதிர்கொண்டு "உன்னுடைய குருநாதர் யார்?" என்று வினவினார்.

"ஸ்ரீ மெஹர் பாபா" ராம்ஜூ பதிலளித்தார்.

மஸ்தானி அமைதியான குரலில் "பாத்ஷா, ஷாஹேன்ஷா!" (மன்னன்! அரசாதிபதி!) என்று உச்சரித்து, சில விசித்திரமான ஒலிகளை எழுப்பிவிட்டு அங்கிருந்து மறைந்துவிட்டார். மஸ்தானியின் மொழியைப் புரிந்துகொள்ள முடியாவிடிலும், அவர் கூறிய இரண்டு வார்த்தைகள் மட்டும் தெளிவாக ஒலித்தன. அந்நேரத்தில், திடீரென, முதலில் தேடி வந்த மஸ்த் எங்கிருந்தோ ராம்ஜூவின் அருகில் வந்தார். ராம்ஜூ ஐந்து ரூபாயை அவரிடம் கொடுத்து, மெஹர் பாபாவின் தட்சணை என்றதும், மிக்க மகிழ்ச்சியுடன் அதைப் பெற்றுக்கொண்டார்.

மண்டலி அனைவரும் அவரவர் உடைமைகளை ஸக்கர் பங்களாவில் விட்டுவிட்டு, பாபாவுடன் மறுபடியும் குவெட்டா சென்று, ரூஸி வீட்டிற்கருகில் அமைந்த ஓர் இரட்டை மாடி வீட்டை வாடகைக்கு ஏற்பாடு செய்து தங்கினர். திடீரென, நெர்வஸ் உடல்நலமின்றி அவசரமாக மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய கட்டாயம். பாபா பல முறை அங்குச் சென்று நெர்வஸை கவனித்து வந்தார்.

குவெட்டாவில் தங்கியிருந்த அவ்வேளையில், மெஹர் பாபா, ரூஸியின் இரண்டு இளம் பெண் குழந்தைகள் கோஹெர், கேட்டி இருவரையும் அவருடைய நெருங்கிய கண்காணிப்பில் வைத்திருந்து, தினமும் அவர்களுடன் விளையாடுவது வழக்கம். பல கதைகளை எடுத்துக்கூறி, மகிழ்ச்சியில் சிரிக்கச் செய்து, அவர்களை மேலும் நெருக்கத்தில் கொண்டு வந்தார். இவ்விரண்டு சிறுமிகளும் மெஹர் பாபாவின் உள்வட்ட பெண் சீடர்களாக மாறும் விதி படைத்தவர்கள். அதற்குப் பிறகு, மெஹராபாத்தில் வாழ்ந்து வந்த பெண்மணிகள் - மெஹரா, தவுலத்மாய், நாஜா, பெரிய கோர்ஷெத், குல்மாய் ஆகியோர், குஸ்தாஜி, ருஸ்தம் மற்றும் மாஸாஜியுடன் குவெட்டா வந்தனர். புதிய சூழ்நிலையில் மெஹரா மகிழ்ச்சியாகவும், சௌகரியமாகவும் இருப்பதில் மெஹர் பாபா குறிப்பாக இருந்தார்.

குவெட்டாவில் தங்கியிருந்தபோது மெஹர் பாபா அவரது கைகளால் ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் உணவு வழங்கினார். மெஹரா, வெட்கத்தில் ஒவ்வொரு முறையும் வரிசையில் கடைசியாக வருவது வழக்கம். ஒரு முறை, பாபா, வேகத்தில் தட்டை வீசி எறிந்ததும், மெஹரா பயத்தில் நடுங்கினார். ஆனால், பாபா அன்பாகக் கூறினார், **"என்னைப் பார்த்து வெட்கப்பட வேண்டாம், தினமும் உணவுக்காக வரிசையில் கடைசியாக ஏன் வருகிறீர்கள்? இனி இப்படிச் செய்யாதீர்கள்."** அவர் மெஹராவுக்கு மாதுளையும், திராட்சையும் அதிகமாகக் கொடுத்தார்.

நீளமாக வளர்ந்த பாபாவின் தலைமுடியை, குல்மாய் நேர்த்தியாக வாரி விடுவது வழக்கம். குல்மாய் எவ்வளவு அருமையாகத் தலையை வாரி விடுகிறார்கள் என்று மெஹராவுக்கு எடுத்துக் கூறினார். குல்மாய், குவெட்டாவில் இருந்தவரை இந்தப் பணியை அவர் செய்து வந்தார்; அவர் இல்லாத வேளையில் குஸ்தாஜியும் செய்வதுண்டு. பின்னர் இந்தச் சிறப்பான

கடமை மெஹராவுக்கு வழங்கப்பட்டது; அதை அவர் இறுதிவரை செய்து வந்தார்.

ஒரு நாள், ரூஸி, பாபாவுடன் அனைத்து ஆண், பெண் உறுப்பினர்களையும் அருகிலிருந்த ஒரு மலைக்கு உல்லாசப்பயணமாக அழைத்துச் சென்றார். மெஹர் பாபா, மானைப் போல வேகமாகத் தாவி, மலையில் ஏறி உச்சிக்குச் சென்றார். ஆனால் மண்டலி எவ்வளவோ முயன்றும் ஒருவரும் மலை முகட்டை எட்ட முடியவில்லை. மலை உச்சியில் நின்று கொண்டிருந்த மெஹர் பாபா, கம்பீரமானத் தோற்றத்தில், '**எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பதே வாழ்க்கையின் குறிக்கோள்**' என்பதைப் பறைசாற்றி, அவருடைய ஆனந்தமயமான ஒளிக்கதிர்களை மானிடனுக்கு வெளிப்படுத்துவது போலத் தென்பட்டார்! காலை நேர சூரிய கதிர்கள் அவர் பாதங்களைத் தழுவி முத்தமிட்டன! தென்றல் காற்று அவருடைய தங்க நிற தலைமுடியை வருடிச் சென்றது! மொத்தத்தில் அவருடைய தெய்வீக சாயலின் ஓர் அம்சத்தை மெஹர் பாபா அன்று வெளிப்படுத்தினார்.

"எத்தனை அழகானத் தோற்றம்!" காலம் பறைசாற்றியது.

சந்திர ஒளியில் மயங்கி நிற்கும் இந்திய சிவப்பு நிற கால்களைக் கொண்ட வான்கோழிகளைப் போல, மண்டலி அனைவரும் மலையடிவாரத்தில் நின்றுகொண்டு, ஆச்சரியத்தில் அவரை வழிபடுவது போன்ற ஒரு தோற்றம். மெஹர் பாபாவின் அன்பெனும் தென்றல் காற்று அனைவரின் உள்ளங்களையும் தழுவி, கண்களை ஆனந்தக்கண்ணீரால் ஈரப்படுத்தியது. தேடித் திரியும் அவருடைய பார்வை அனைவரின் இதயங்களிலும் ஊடுருவிப் பாய்ந்து, கனிவான காயத்தை உருவாக்கியது. அனைவரும் கண்களை இமைக்காமல் பார்த்த வண்ணம் நின்றனர். புகைப்படக் கருவியால் படம் பிடித்தாலும் தெய்வீக தோற்றத்தை அப்படியே படமாக்குவது அசாத்தியம்! மெஹர் பாபாவின் தெய்வீக அம்சங்கள் பிரமாதம்; மாசற்ற இதயம் ஒன்றுதான் அவரை சூழ்ந்துள்ள பளிச்சிடும் ஒளியைப் பார்க்க முடியும்.

1924, ஜூலை 16ஆம் நாள் மெஹர் பாபா, கராச்சிக்குச் செல்லத் திட்டமிட்டார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நெர்வஸின் உடல்நிலை கவலைக்கிடமாக இருந்தது. கராச்சிக்குப் புறப்படுவதற்கு முன்பு, பாபா, ஃபிரோஸ் ஷாவுடன் பார்சி கல்லறைக்குச் சென்று, நெர்வஸை அடக்கம் செய்யும் இடத்தை ஒரு கழியால் கோடிட்டுக் காட்டினார். ஃபிரோஸ் ஷாவிடம் 2500 ரூபாயைக் கொடுத்து, அதில் 500 ரூபாய், கல்லறை எழுப்பி அடையாளக்கல் வைக்கவும், எஞ்சிய பணத்தை பார்சி அறக்கட்டளைக்கு வழங்கவும் உத்தரவிட்டார். மெஹர் பாபா மண்டலியிடம், "**தைரியத்தை இழந்து விடாதீர்கள். நெர்வஸைக் காப்பாற்றும் நோக்கத்தில் கடைசி நிமிடம் வரை உங்களால் இயன்ற அனைத்தையும் செய்யுங்கள்**." ஆனால், அதற்குப் பிறகு, பாபா அவர்களிடம் நெர்வஸ் உயிர் பிழைக்க மாட்டார், வெகு விரைவில் உடலைத் துறந்து விடுவார் என்பதை எடுத்துக் கூறினார். மேலும்,

நெர்வஸின் உடல் அடக்கம் முடிந்ததும், அனைத்து மண்டலியும் தியேட்டர் சென்று ஏதாவது திரைப்படம் பார்த்து மகிழ்ச்சியாக இருங்கள் என்றும் கட்டளையிட்டார் - இது ஒருவேளை நெர்வஸ் நடிகராக வேண்டும் என்ற நிறைவேறாத கனவுகளின் மரியாதை நிமித்தமாகக் கூட இருக்கலாம்.

மெஹர் பாபா சில மண்டலியுடன் கராச்சிக்கு ரயிலில் பயணம் செய்யும் வேளையில், நெர்வஸ் காலமாகிவிட்டார் என்ற செய்தி வந்தது. நெர்வஸ் இறுதிவரைத் தன்னை அர்ப்பணிக்கும் வாக்குறுதியை நிறைவேற்றி, இளம் வயதிலேயே காலமானார். மன்ஸில்-எ-மீமில் இருந்தபோது '**வட்டத்து சீடர்களில் இரண்டு அல்லது மூன்று பேர் விரைவில் உயிரைத் துறந்து விடுவார்கள்**' என்று பாபா கூறியதை இப்போது நினைவுகூறி, அதில் முதலாவதாக நெர்வஸ் இடம்பெறுகிறார் என்பதையும் எடுத்துரைத்தார்.

ஜூலை 17ஆம் நாள் கராச்சி வந்ததும், ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட, தோட்டமும், நீரோடையும் அமைந்த பங்களாவில் சுமைகளை இறக்கிவிட்டு, மெஹர் பாபா, உடனடியாக 'மாங்கோ:ஃபிர்' எனும் இடத்திற்கு காரில் விரைந்தார். கராச்சியிலிருந்து 11 மைல் தூரத்தில், 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'ஃபிர் மாங்கோ' என்றழைக்கப்பட்ட ஸூஃபி துறவியின் சமாதி அமைந்த இடம். அங்கு, கந்தகம் கலந்த நீரோடைகள் பல இருந்தன. தொழுநோயால் தாக்கப்பட்டவர்கள் இந்தக் கனிம நீரில் நீராடினால் நோய் மறைந்துவிடும் என்ற நம்பிக்கை. வழியில் பல நீரோடைகளில் சுற்றுலா பயணிகள் நீராடி மகிழ்ந்தனர்.

மெஹர் பாபாவின் வாழ்க்கையில், அவர், பெண்மணிகளை எப்பொழுதும் ஆண்கள் வாழும் இடத்திலிருந்து தனியாக இருக்கச் செய்தார். குஸ்தாஜியைத் தவிர, அதுவும் ஏதாவது குறிப்பிட்ட பணிக்காக மட்டும், வேறு எவரையும் பெண்கள் பக்கம் அனுமதித்ததில்லை. பெண்மணிகள் 'எஸ்தான்' எனும் கடவுளின் நாமத்தை உச்சரிக்குமாறு பாபா அனைவருக்கும் கூறியிருந்தார்; மேலும் இதர அனைத்து வீட்டு வேலைகளில் ஈடுபடுவது அவர்களின் கடமை.

அடுத்தப் பயணத்தைப் பற்றிய பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் மெஹர் பாபா இறுதியில் மும்பைக்குச் செல்லப்போவதாக அறிவித்தார். அன்று மாலையில் மும்பை புறப்படுவதற்கு முன்னர், அனைத்து மண்டலியும் அருகிலிருந்த நீர்வீழ்ச்சியில் நீராடிய வேளையில், பாபா அவரது கைகளால் நீரை அனைவரின் தலைகளிலும் ஊற்றினார். அடுத்த நாள், ஜூலை 21 அன்று, வெகுவேகமாக மெஹர் பாபா ஒரு சில மண்டலியுடன் புறப்பட்டு, எஞ்சியிருந்த அனைவரிடமும், சுமைகளை எடுத்துக் கொண்டு மும்பை வந்து சேருமாறுக் கூறி விடைபெற்றார்.

மும்பையில் மெஹர் பாபா ஈரானி மான்ஷனில் தங்கியிருந்தார். ஸூனாமாசி மற்றும் குறிப்பாக கோர்ஷெத் இருவரும் பாபா ஒரு மாதத்தில்

திரும்பி வந்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தனர், ஏனெனில் பாபா, திரும்பிவர 12 வருடங்கள் ஆகுமெனக் கூறிச் சென்றார். ஜூலை மாத இறுதியில் ஆறு ஆண் மண்டலியைத் தவிர அனைவரும் அவரவர் இல்லங்களுக்குச் சென்றனர்.

ஒரு நாள், ஈரானி மான்ஷனில் மெஹரா, கோர்ஷெத் இருவரும் பால்பாகு தயார் செய்து, பாபாவிற்குக் கொடுத்தபோது, பாபா அதைத் தயார் செய்தது யார் எனக் கேட்டு, மெஹராவை வெகுவாகத் திட்டினார். மேலுமொரு சந்தர்ப்பத்தில் உருளைக்கிழங்கு பஜ்ஜி செய்வது எப்படி என்பதை பாபா, மெஹராவுக்கு விளக்கிக் கொண்டிருந்தபோது, அடுப்பில் எரியும் நெருப்பைச் சுட்டிக் காட்டி விளக்கினார்: “**இந்த அடுப்பில் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு போல் இதயத்திலும் அன்பெனும் நெருப்பு எரியவேண்டும்**.”

இவ்வேளையில் தவுலத்மாய் ஒரு பெரிய தொகையை நன்கொடையாக பாபாவிடம் கொடுத்தார். பாபா அதில் ஒரு பாகத்தை ஹஸ்ரத் பாபாஜான், சத்குரு உபாஸனி மஹாராஜ் இருவரின் பெயரில் பள்ளிக்கூடம் மற்றும் சமூக சேவைக்காக வைத்துவிட்டு, மீதத்தை பெர்ஸியாவில் வாழும் ஏழை ஸொராஸ்டிரிய இளைஞர்களின் பொறியியல் பயிற்சிக்காகவும் வழங்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும், அதில் ஒரு சிறிய பாகத்தை ஏழை மண்டலி குடும்பங்களுக்கு வழங்கக் கூறி, பெர்ஸியாவுக்கு உரிய தொகையை குஜராத்தி வார இதழ் ‘கெய்ஸர்-இ-ஹிந்த்’ உரிமையாளரிடம் கொடுக்கப்பட்டது.

ஒரு சில நாட்களில் மெஹர் பாபா, காலவரையின்றி இந்தியாவில் ஒரு நீண்ட பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டு, அதில் ஒரு பாகத்தை, பாதயாத்திரையாகப் பயணிக்கவும் முடிவு செய்தார். அவரது நோக்கங்களைக் குறித்த வியப்பான அறிக்கைகளை வெளிப்படுத்தினார்: “**5000 சாதுக்களை தரிசனம் செய்ய விரும்புகிறேன். நான் அவர்களை எங்குப் பார்த்தாலும் தரிசிப்பேன்**.”

அப்போது பாபா, தவுலத்மாய், மெஹரா இருவரிடமும் கூறினார், “**நீங்கள் குஷ்ரு குவாட்டர்ஸில் ருஸ்தம், ஃபிரீனியுடன் நான் திரும்பி வருவதுவரை தங்கி இருங்கள். அதற்குப் பிறகு, நிரந்தரமாக வாழ இடம் ஏற்பாடு செய்ததும், உங்களை நான் அழைப்பேன்**.” எனவே, இருவரும் அஹமதுநகர் சென்றனர். நாஜா, தந்தை மாஸாஜி மற்றும் பெரிய தாயார் டவ்லாவுடன் பூனாவிலிருந்த அவர்கள் இல்லத்திற்கு வந்து குடியேறினர்; சகோதரன் பெண்டு, குஜராத் பயணத்தின்போது குவெட்டாவில் இருந்தார்; பாபா, பின்னர் அவரை அழைக்கவுமில்லை.

குஸ்தாஜி, பெய்லி, பாதிரி மூவரிடமும் பயணத்திற்குத் தேவையான பொருட்களை சேகரிக்கக் கூறி, ஒரு முறை பயணம் தொடங்கிவிட்டால், வழியில் எதுவும் வாங்க இயலாது என்பதையும் பாபா எடுத்துரைத்தார். இதனால், சுமைகள் அதிகமாக இருந்தன. வேண்டாத வேலையாக, பாதிரி பயணத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். குறிப்புப் புத்தகத்தில் அன்றாடம்

நடக்கும் முக்கிய சம்பவங்களை எழுதி வைக்கும் பொறுப்பும் அவருக்கு அளிக்கப்பட்டது. 1924, ஆகஸ்ட் 1ஆம் நாள் பயணம் பூனாவை நோக்கி ஆரம்பமானது.

பூனா மண்டலி ரயில் நிலையத்தில் பாபாவை சந்தித்து வழியனுப்பி வைத்தனர். ரயிலில் கையேந்தி யாசிக்கும் இரண்டு சாதுக்களை அடையாளம் கண்டு, பூனாவிலிருந்து ரயில் புறப்பட்டதும் மெஹர் பாபா அவர்களை அணுகி உணவும், பணமும் வழங்கி கால்களைப் பணிவுடன் தொட்டு வணங்கினார்.

அங்கிருந்து நேரடியாக 'மதராஸ்' (சென்னை) செல்லத் திட்டமிட்டு ஆகஸ்ட் 3ஆம் நாள் இரவு 9 மணிக்குச் சென்னை வந்து, ரயில் நிலையம் அருகில் அமைந்த 'ஷேக் ஸித்திக்கி' சத்திரத்தில் தங்கியிருந்தனர். மறுநாள் காலையில் போர்ட்டோ நோவோ (இன்றைய பரங்கிமலை) செல்லும் எண்ணத்தில் விசாரித்தபோது, கடும் வெள்ளப்பெருக்கால் அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவித்த செய்தியை அறிந்தனர். அப்போதுதான், பயணம் தொடங்கும் முன்பு பாபா கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன: "**இப்பயணத்தின் போது, நான் பாதிக்கப்பட்டோருக்கு சேவை புரிவேன்.**"

பயணத்தின் போது வறுத்த கொண்டைக் கடலை, பாலாடைக் கட்டி, ரொட்டி போன்றவைகளைத் தின்பண்டங்களாக எடுத்துச் சென்றனர். பாபா, பாதிரியிடம் சில்லரை நாணயங்களை, தட்சணையாக வழங்க வசதியாக இருக்கும் என்ற எண்ணத்தில், கையில் வைத்துக் கொள்ளக் கூறியிருந்தார்,.

வெள்ளப்பெருக்குக் காரணமாக மிகுந்த சேதங்கள் ஏற்பட்டதால், ஒரே ஒரு ரயில் வண்டி மட்டுமே போர்ட்டோ நோவோவுக்கு, சிரமப்பட்டுப் பயணம் செய்தது. கூட்டத்தில் பயணம் செய்ய முடியாத நிலையில் பாபா மண்டலியுடன் தர்மசாலைக்குத் திரும்பி வரவேண்டிய கட்டாயம். பாபா, புரிந்துகொள்ள முடியாத புதிரான கருத்துக்களைத் திரும்பத் திரும்பக் கூறிவந்தார்: "**நான் 5000 சாதுக்களின் பாதங்களைத் தொடவேண்டும்; மேலும் இந்நிலையில் அவர்கள் என்னைத் தவறாக நினைத்து அவமானப்படுத்துவது எனது தெய்வீக அகந்தையை சிதறடித்து, பாபாவின் தனித்துவத்தை சுக்குநூறாகச் செய்யட்டும் என்பதே எனது பிரார்த்தனை!**" பாபா அப்போது பகவான் ஸ்ரீராம், சத்குரு உபாஸனி மஹாராஜ் இவர்களின் கதைகளை எடுத்துக் கூறி, இவர்கள் இந்தியாவில் இப்படி அலைந்து திரிந்த வேளையில் மிகுந்த அவதூறுக்கு ஆளாயினர் என்பதை விளக்கினார்.

எனவே, அடுத்த நாள் அங்கிருந்து புறப்பட்டு, நீலகிரி மலைக்குச் செல்லத் தீர்மானித்து, ஆகஸ்ட் 5ஆம் நாள் காலை ஆறு மணிக்கு ஊட்டிக்குப் புறப்பட்டுச் சென்றனர். அவர்களின் திட்டப்படி அடுத்த நாள், மேட்டுப்பாளையம் சந்திப்பில் வந்து (மேட்டுப்பாளையத்தை பாபா வேடிக்கையாக, 'பெட்ரோலியம்' என்று குறிப்பிட்டார்) அடுத்த ரயிலில் செல்ல வேண்டும். பாபாவும், மண்டலியும் இருக்கையில் அமர்ந்து, களைப்பில் தூங்கிவிட்டனர். ரயில் ஒவ்வோர் இடத்தையும் கடந்து சென்ற போதிலும் மேட்டுப்பாளையம் வந்தபாடில்லை. அருகிலிருந்த ஒருவரைக் கேட்டபோது, இந்த ரயில் மேட்டுப்பாளையம்

செல்லாது என்றும், அவர்கள் கண்மூடிய வேளையில் இந்தப் பெட்டி பிரிக்கப்பட்டு மாற்றிவிடப்பட்டதை அவர் தெரிவித்தார். எனவே, அடுத்த ரயில் நிலையத்தில் இறங்கி, மேட்டுப்பாளையம் செல்லும் ரயிலில் ஏறினர். பாதிரியின் கவனக்குறைவே அத்தனைக்கும் காரணம் என்று பாபா மிகவும் கடிந்து கொண்டார். (பாதிரி இந்த சம்பவத்தைப் பற்றி பின்பு விளக்கும்போது 'பாபாவின் கடுமையான வார்த்தைகள் சவுக்கால் வேகமாக அடித்தாற்போல் இருந்தது' எனக் குறிப்பிட்டார்). சூழ்நிலைகள் சாதகமாக இல்லாதது மட்டுமின்றி பாபா வயிற்றுக் கோளாறு காரணமாக மிகவும் அவதிப்பட்டார். இருந்தாலும் பயணத்தைத் தொடர்ந்தார்.

ஆகஸ்ட் 6ஆம் நாள் மதியவேளையில் மேட்டுப்பாளையத்திலிருந்து செல்லும் ஒரு சிறிய ரயிலில் பயணம் செய்தனர். மலை உச்சியை நோக்கி ரயில் மெதுவாக நகர்ந்து சென்றது. நீலகிரி மலையின் அழகிய காட்சியை அனைவரும் கண்டு ரசித்தனர்.

மாலை நான்கு மணிக்கு ஊட்டியைச் சென்றடைந்தபோது, எதிர்பாராத கடுமையான குளிரில் அனைவரும் நடுங்கினர். பெஹராம்ஜி, பாதிரி இருவரும் காய்கறியும், பருப்பும் வாங்க பஜார் சென்று எதுவுமே கிடைக்காத பட்சத்தில் ரொட்டியும், கொண்டைக்கடலை மட்டும் சாப்பிட வேண்டியதாயிற்று!

மெஹர் பாபாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால், அனைவரும் உடனடியாக குன்னூர் சென்று, அன்றிரவு அங்கே தங்கிவிட்டு, அடுத்த நாள் மேட்டுப்பாளையத்திற்கு நடந்துசெல்ல திட்டமிட்டனர். மாலை 7 மணிக்கு ஊட்டியிலிருந்து புறப்பட்டு ஒரு மணி நேரத்தில் குன்னூர் வந்தடைந்த வேளையில், ஒரே பனி மூட்டம், கும்மிருட்டு; அங்கு நின்ற ஒரு ரயில் பெட்டியில் ஏறி அனைவரும் ஓய்வெடுத்தனர். பாபா இரவெல்லாம் உடல்நலமின்றி அவதிப்பட்டார்.

இப்படி இருந்தும் பயணத்தைத் தள்ளிப் போடாமல், காலை 7 மணிக்கு 21 மைல் தூரத்திலிருந்த பாபாவின் 'பெட்ரோலியத்தை' (மேட்டுப்பாளையம்) நோக்கி நடந்தனர். பல மைல் தூரம் நடந்த பின்னர், ஒரு கிராமத்தை வந்தடைந்ததும் ரொட்டியுடன் பாலாடைக் கட்டியை உண்டு களைப்பாறினர்.

காலை உணவுக்குப் பின்பு, நடைபயணம் தொடர்ந்தது. பாபாவின் உடல்நிலை மேலும் பாதிக்கப்பட்டு, வழியில் பலமுறை நிற்க வேண்டியதாயிற்று. குன்னூரைச் சுற்றியுள்ள இடங்கள் தேயிலைத் தோட்டத்திற்கு மிகவும் புகழ்வாய்ந்தது. ஆச்சரியம் என்னவெனில், அருகாமையிலிருந்த உணவகத்தில் தேநீர் இல்லை, காஃபி மட்டுமே இருந்தது. பாபாவிற்குத் தேநீர் தேவைப்பட்டதால் மண்டலி அவருடைய அனுமதியுடன் காஃபி அருந்தினர்.

இவ்வாறு நடந்து செல்லும் வழியில் பல கிராமங்களைக் கடக்க நேர்ந்தது; மெஹர் பாபா சிறுவர்களுக்கு, சுண்டலைப் பிரசாதமாக வழங்கினார். பதினாறு மைல் தூரம் நடந்த பின்னர், எஞ்சிய ஐந்து மைல் தூரம் - கல்லாவிலிருந்து மேட்டுப்பாளையத்திற்கு ரயிலில் பயணம் செய்து, அங்கிருந்து ஆகஸ்ட் 8ஆம் நாள் காலையில் சென்னை வந்து சேர்ந்தனர்.

சென்னையிலிருந்து பாபா, பெய்லியை, தேவையற்ற சுமைகளுடன் பூனாவுக்குத் திருப்பி அனுப்பி வைத்தார். பெய்லி புறப்படும் முன்பு பாபா, **“உங்களில் ஒருவருக்குக் கூட என் மீது பாச உணர்வு கிடையாது! கடந்த நான்கு இரவுகள் நான் தூங்கவேயில்லை; ஆனால் நீங்களோ உங்கள் பெட்டி படுக்கைகள் மீது சாய்ந்து, குறட்டைவிட்டுத் தூங்கினீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் சுயநலவாதிகள்; ஒருவர் கூட என் வார்த்தைகளை - என் விருப்பத்தை - அப்படியே பின்பற்றுவதில்லை!”** என்றார்.

மெஹர் பாபா சென்னையில் இருந்தபோது, பெய்லி பூனாவுக்குத் திரும்பியதும், மேலுமொரு புதிய பயணத் திட்டம் உருவாகியது. சென்னையிலிருந்து கொல்கத்தா, பின்னர் ஹரித்வார் சென்று, மண்டலியில் ஒருவரான வஜிப்தரையும் உடனழைத்துக் கொண்டு கடைசியாக 1200 மைல் நடைபயணமாக ஸக்கோரிக்குச் செல்ல வேண்டும் என்ற திட்டத்தை பாபா முன்வைத்தார். வழியில் புனிதஸ்தலங்களான பனாரஸ் மற்றும் ஸார்நாத் சென்று 1925 ஜனவரி இறுதியில் ஸக்கோரியை வந்தடைய வேண்டும் எனத் திட்டம் வகுக்கப்பட்டது.

இதற்கிடையில், மெஹர் பாபா, **‘சாதுக்கள் என்னைத் தவறாக நினைத்து அவமானப்படுத்துவது, எனது தெய்வீக அகந்தையை சிதறடித்து, பாபாவின் தனித்துவத்தைச் சுக்குநூறாக்கிவிடும்’** என்ற விசித்திரமாகத் தோன்றும் வார்த்தைகள், உடன் சென்ற மண்டலியை இலக்காக வைத்துக் கூறியது என்பதை புரிந்து கொண்டனர். குஸ்தாஜி, பெஹராம்ஜி இருவரும் அடிக்கடி, சிறிய சிறிய விஷயங்களில் விடாப்பிடியாக இருந்து, சண்டையில் ஈடுபடுவது வழக்கம். இப்படிக் கோபமடையும் வேளையில் பாபாவின் உத்தரவுகளை அடிக்கடி அலட்சியம் செய்வது அன்றாட நிகழ்வாயிற்று. இவ்வாறு தன்னையே குறைகூறி விமர்சிப்பது, பாபா அவர்களுக்கு, பணிவு மற்றும் ‘நான்’ எனும் அகந்தையை அழிப்பது குறித்து தக்க பாடம் புகட்டுவதாகும்.

இப்போது, அடுத்த கட்ட பயணமாக, பாதிரி, குஸ்தாஜி, பெஹராம்ஜி மூவருடன் பாபா ரயில் நிலையத்திற்குச் சென்றார். அங்கேயும் வழக்கம்போலக் கூட்டம் அலைமோதியது. பாபாவை, காக்கவைக்க வேண்டாம் என்ற எண்ணத்தில், பெஹராம்ஜி இடைவகுப்பு டிக்கெட்டை எடுத்து வந்ததும், மூன்றாம் வகுப்பு டிக்கெட்டை விட விலை அதிகம் என்பதால் பாபா அவரைக் கண்டித்தார், **“ஏன் இதை வாங்கினீர்கள்? எதற்கு இந்த ஊதாரித்தனம்? உங்கள் தகப்பனார் என்ன ராஜ பரம்பரையா? இது உங்கள் தகப்பனார் பணமா? பதில் சொல்லுங்கள்!”**

பாதிரி நிலைமையை விளக்கிக் கூறி, இந்த டிக்கெட் கிடைத்ததே பெரிய விஷயம் என்றதும் பாபா, **“மூன்றாவது வகுப்பு டிக்கெட் கிடைக்கவில்லை என்றால், என்னிடம் வந்து கூறியிருக்கவேண்டும்”** என்றார்.

பாதிரி பதிலளித்தார், “அப்படிச் செய்திருந்தால் நீங்கள் நிச்சயமாக இடைவகுப்பு டிக்கெட்டை வாங்க சம்மதித்திருப்பீர்கள். சென்னையில் போர்ட்டோ நோவோ செல்லும் போது கூட நீங்கள் இரண்டாம் வகுப்புக்கு பதிலாக முதல் வகுப்பு டிக்கெட் வாங்க முயற்சிக்குமாறு கூறினீர்கள்.”

**“அப்போது நான் அப்படிச் செய்தேன் என்றால் அது எப்போதைக்கும் உரிய சட்டமாகிவிடுமா? அப்படி நினைப்பது பெரிய தவறு!”** என்று கூறி எதிர்பார்த்தது போல, பாபா, பாதிரியின் தவறை மன்னித்தார்.

இப்பயணத்தின்போது பாபா அவரை எவரும் அடையாளம் கண்டுகொள்ளாமல் இருக்க விரும்பினார். 1924, ஆகஸ்ட் 9ஆம் நாள் ரயிலில் ஏறி அமர்ந்ததும், அங்கு வந்த மூன்று பார்சிகளிடம் பெஹராம்ஜி பேசிக்கொண்டிருந்த போது, மெஹர் பாபாவுடன் பயணம் செல்வதாக உளறிவிட்டார். உடனே அவர்கள் பாபாவை சந்திக்க விருப்பம் தெரிவித்ததும், பாபா, பெஹராம்ஜியை முறைத்துப் பார்த்த வண்ணம், அங்கு வந்தவர்களை சந்தித்ததில் மகிழ்ச்சி அடைந்ததாகக் காட்டிக்கொண்டார்.

ரயிலில் அமைதியாக அமர்ந்திருந்தார் பாபா. எதிர்பாராமல் திடீரென பசி எடுப்பதாகத் தெரிவித்தார். இறுதியில் பாபா ஏதாவது சாப்பிட விரும்புவதில் மண்டலி மகிழ்ச்சியடைந்தாலும், அவர்களிடம் அப்போது வேகவைத்த பருப்பைத் தவிர வேறு எதுவுமில்லை. பாபா, அதைச் சுடவைத்து எடுத்துவரச் சொன்னதும், பாதிரி ரயில் ஓட்டுநரிடம் சென்று, மண்வெட்டியின் உதவியால் நிலக்கரி நெருப்பில் வைத்து சூடாக்கினார். பாபா மிக்க மகிழ்ச்சியுடன் அதை உண்டு பாதிரியின் சமயோசித சிந்தனையைப் பாராட்டினார்.

கொல்கத்தா, ஹௌரா ரயில் நிலையத்தை ஆகஸ்ட் 11ஆம் நாள் வந்தடைந்தனர். அங்கிருந்து ‘முஹல்’ ஹோட்டல் சென்று, அது சுத்தமாக இல்லாததால் உடனே ‘பஞ்சாபி பெங்கால்’ ஹோட்டலுக்குச் சென்றனர். மாலை வேளையில் வாடகைக் காரில் இரண்டு மணி நேரம் கொல்கத்தா நகரை சுற்றி வந்தனர்.

அடுத்த நாள் சத்குரு ராமகிருஷ்ண பரமஹம்சர் வாழ்ந்த தக்ஷிணேஷ்வர் கோயிலுக்குச் செல்ல திட்டமிட்டு, ஆகஸ்ட் 12ஆம் நாள் ‘ஹூக்ளி’ நதியில் படகில் பயணம் செய்தனர். நதிக்கரை ஓரத்தில் கண்பார்வையற்ற ஏழை ஒருவர் அழுக்கடைந்த இடத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டு, பாபா மண்டலியுடன் அந்த இடத்தை சுத்தம் செய்து, உணவளித்து அவரை ஆறுதல் படுத்தினார்.

‘பேலூர் மட்’, ராமகிருஷ்ண மிஷனின் தலைமையகமும் கோயிலும் அமைந்த இடம், ஹூக்ளி நதிக்கரையில் தக்ஷிணேஷ்வர் கிராமத்திலிருந்து சற்று தொலைவில் உள்ளது. கோயிலின் முக்கிய பாகம் மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்டு, சுற்றிலும் 12 சிறிய கோயில்களை கொண்ட அமைப்பு. மக்கள் கூட்டம் நிறைந்த கொல்கத்தாவின் புறநகர் பகுதியில் அமைந்த அமைதியான ஒரு சரணாலயம். ராமகிருஷ்ணா அவரது உலகளாவிய பணியைச் செய்து முடிக்கப் பயன்படுத்திய அந்தப் புனிதமான அறையில்

மெஹர் பாபாவும் மண்டலியும் பணிவான வணக்கத்தைத் தெரிவித்தனர். அருகிலிருந்த இன்னுமோர் அறையில் ராமகிருஷ்ணா வணங்கிய காளி சிலை மற்றும் சத்குரு பயன்படுத்திய காலணி போன்ற பொருட்கள் நினைவு சின்னமாக பீடத்தில் வைக்கப்பட்டிருந்தன. ராமகிருஷ்ணாவின் முக்கிய சீடர்களில் ஒருவரான சுவாமி விவேகானந்தர் தங்கியிருந்த அறையையும் பார்வையிட்டனர்.

திரும்பி வரும்போது மேலும் ஓர் அடக்கமாக அமைந்த கோயிலில், ராமகிருஷ்ணாவின் பெரிய புகைப்படம் ஒன்று சுவரை அலங்கரித்தது; தியானத்தில் ஒருவர் அமர்ந்திருந்ததைக் கண்டு, பாபா அவருக்கு சில உபதேசங்களை வழங்கிச் சென்றார்.

ஹோட்டலுக்குத் திரும்பி வந்து மாலை 7 மணியளவில் **ஹரித்வா**ர் நகரை நோக்கிப் பயணம் தொடங்கியது. ஹரித்வார், இமயமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது, கொல்கத்தாவிலிருந்து நெடுந்தூர பயணம். ஆகஸ்ட் 14ஆம் நாள் அங்கு வந்து சேர்ந்தனர்.

மெஹர் பாபாவின் கடுமையான வார்த்தைகள் மற்றும் கேலிகளுக்குப் ‘பலி ஆடாக’ இருந்தவர் பெய்லி. சென்னையிலிருந்து பெய்லி திரும்பிச் சென்ற பிறகு பாதிரி மீது பாபா குறியாக இருந்தார். ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் பாதிரியை இறங்கச் சொல்லி, தேநீர் அல்லது உண்ண ஏதாவது உணவு உள்ளதா என்று பார்த்து வரச் சொல்வதும், இல்லையென்றால் ரயில் நிலைய அதிகாரியிடம் சென்று அங்கு ஏன் உணவகம் இல்லை என்பதை விசாரிக்கவும், உணவகம் இருந்தாலும் ரயிலில் உணவகம் இல்லாததன் காரணம் என்ன என்பதை அறிந்து வரவும் கூறினார். அதற்கு முந்தைய ரயில் நிலையத்தில், மதிய உணவு உண்டு தேநீர் அருந்தியிருந்தாலும், அடுத்த இடம் வந்ததும் பாபா, இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலைகளை சந்திக்கச் செய்தார்.

பாதிரி ஒரு முறை அவருக்கு வந்த கோபத்தில் இப்படி எண்ணினார்: “இது என்ன நரக வாழ்க்கை! எனக்குக் கடவுளும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்! நான் இப்போதே போகிறேன்!” ஆனால் அனைத்து பணமும், பயணச்சீட்டும் அவரிடமே இருந்தன - அத்தனையும் இடுப்பில் அணிந்திருந்த தோல்பட்டையில் வைத்திருந்தார். அப்படியே விட்டுச் செல்லமுடியாது என்று தன்னை நியாயப்படுத்திக் கொண்டார். பெருமூச்சு விட்டபடியே தயக்கத்துடன் பாபாவின் அருகில் சென்றதும், பாபா மறுபடியும் அப்படியே நடந்து கொண்டார்.

வியாழக்கிழமை அன்று ஹரித்வார் வந்து சேர்ந்தனர் - அன்று இரட்டை சிறப்புமிக்க நாள், ஒன்று குருநாதருக்கு உரிய தினம், இரண்டு பௌர்ணமி முழுநிறை நாள். அருகிலிருந்த ஓர் இந்து தர்மசத்திரத்திற்குச் சென்று விசாரித்தபோது, தங்குவதற்கு அறைகள் இல்லாததால் அதன் வராந்தாவில் ஒரு பகுதியில் தங்கியிருந்தனர். பயண மூட்டைகளை அங்கு வைத்துவிட்டு அருகிலிருந்த கங்கை நதிக்குச் சென்றனர்.

அதற்குப் பிறகு காரில் ரிஷிகேஷுக்குப் பயணம் செய்தனர். ரிஷிகேஷ் என்றால் ரிஷிகளும், முனிகளும் நிறைந்த இடம். பழங்காலத்திலிருந்தே

சாதுக்கள், சன்னியாசிகள், ரிஷிகள், முனிவர்கள், மற்றும் யோகிகள் சந்திக்கும் இடம். நகரத்தைச் சுற்றிவரும்போது மெஹர் பாபா, அவர் விரும்பிய யாத்திரீகர்களை சந்தித்து, பல சாதுக்களின் பாதங்களில் தலை வணங்கினார்; அவர்களில் பலர் தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்கள். பின்னர் ஒரு தனியிடத்தில் 'நேப்பாளி பாபா' என்ற ஓர் உன்னதமான சாதுவை சந்தித்துப் பேசினார்; அவர் உள் மற்றும் வெளியளவில் உலகை முற்றிலும் துறந்தவர்.

ரிஷிகேஷிலிருந்து தொடர்ந்து 14 மைல் தொலைவில் அமைந்த 'லக்ஷ்மண் ஜூலா'வுக்குச் (ஊஞ்சல்) சென்று, ஹரித்வார் வழியாக லஷ்கர் நகரை நோக்கி நடந்து சென்றனர். வழியில் சாதமும், பருப்பும் உண்ட பின்பு பாபா, மண்டலியை ஓய்வெடுக்க அனுமதிக்காமல் பயணத்தைத் தொடர்ந்தார்.

இம்முறை நடைபயணம் மிகவும் சிரமமாக இருந்ததன் காரணம் பெட்டி படுக்கைகள், விளக்குகள், குடைகள் மற்றும் பல பொருட்களை உடன் எடுத்துச் சென்றது மட்டுமல்லாமல், மிகவும் வெப்பமான காலநிலை அசௌகரியத்தை அதிகப்படுத்தியது. மேலும் பாபாவின் உடல்நிலையும் சீரானபாடில்லை.

லஷ்கருக்கு நடந்து செல்லும் வழியில் பல சாதுக்கள் ஹரித்வாரை நோக்கி வந்துகொண்டிருந்தனர். பாபா அவர்களின் பாதங்களில் தலை வணங்கி தட்சணையும் வழங்கினார். கூட்டத்தில் ஒருவர் **'ராம், ராம்'** நாமத்தை உச்சரித்த வண்ணம் நடந்தபோது, பாபா, '**அவர் அதை மனதார விரும்பிச் செய்யவில்லை, அவருடைய சிந்தனைகள் அனைத்தும் இறைவனைக் காட்டிலும் பணத்திலும், உணவிலும் மூழ்கியுள்ளன**' என்று குறிப்பிட்டார். இருந்தும் பாபா, அந்தத் துறவியிடம் கடவுளை அடையும் பாதையில் அவர் தீவிரமாக இருப்பதானால், உலகைத் துறந்து நேர்மையான வழியில் செல்லுமாறு உபதேசித்தார். மற்றுமொரு சாது பாதத்தில் ஏற்பட்ட காயத்தால் நடக்க முடியாமல் சிரமப்படுவதைப் பார்த்து, பாதிரி அவர் பாதத்தை சுத்தம் செய்து கட்டுப்போட்டார். அனைத்து சாதுக்களுக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

அடுத்தநாள் காலையில், ஆகஸ்ட் 16ஆம் நாள், பாபா வயிற்றுக் கோளாறால் மிகவும் அவதிப்பட்டார். இரவெல்லாம் தூங்காததால் மனநிலையும் சரியில்லை. குஸ்தாஜி, பெஹ்ராம்ஜி, பாதிரி மூவரும் காலையில் ஐந்து மணிக்கு எழும்பி, புத்துணர்ச்சியுடன் புறப்படத் தயாராக இருந்தனர். பாபா எரிச்சலில் சீற்றமடைந்தார்:

**"நீங்கள் அனைவரும் சுயநலவாதிகள், என்னைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லாதவர்கள்! உங்கள் இதயங்களில் என்னைப் பற்றிய எந்த உணர்வுகளும் இல்லை! உங்களில் ஒருவருக்குக் கூட என்மீது அக்கறையில்லை! நேற்று மாலையில் நான், இதற்கு முன்னர் அஜ்மீரில் நடந்ததுபோல வயிற்றுக் கோளாறால் அவதிப்படுகிறேன் என்று கூறினேன், ஆனால் எவருமே என்னைக் கண்டுகொள்ளாமல் குறட்டைவிட்டுத் தூங்கினீர்கள். உங்கள் குறட்டையில் நான் தூங்கவும் முடியவில்லை. நான் பலமுறை கழிவறைக்குச் சென்று வந்தேன். எவரும் என்னுடன் விழித்திருக்கவோ அல்லது எனக்கு உதவவோ இல்லை.**

**உங்களின் தோழன் தனியாக அவதிப்படும்போது, நீங்கள் நன்றாகத் தூங்குங்கள் என்று ஏதாவது புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளதா?"**

இவ்வாறு கூறி முடித்து, பாபா அவரைப் பற்றிக் கூறினார்: "**நானும் சுயநலவாதிதான், அதனால்தான், இந்திய தேசத்தில் சுற்றியலைந்து, என் அகந்தையைச் சிதறடிக்கும் நோக்கத்தில் சாதுக்களைத் தேடி அலைகிறேன்!**"

இதைக் கேட்டதும் பாதிரி அவரது பொறுமையை இழந்து பாபாவின் கூற்றில் சற்றும் நியாயமில்லை என்று குறிப்பிட்டார். பாதிரியின் சீற்றம் தணிவதுவரை பாபா அமைதி காத்து, பின்பு மூவரையும் ஆறு மணியளவில் முன்னின்று வழி நடத்தினார்.

அங்கிருந்து நான்காவது எல்லைக்கல்லைக் கடந்ததும், நீண்ட தலைமுடியுடன் கூடிய நாடோடி ஒருவன், பார்வையில் முஸல்மான்போலத் தோற்றம், எங்கிருந்தோ பாபா முன்னே வந்து நின்றான். சுமூகமாக பாபாவை அணுகி வணங்கினான். பின்பு, சாதாரணமாக, பாபாவின் கைகளைக் குலுக்கிவிட்டு அவன் வழியில் சென்றான். அவன் நடந்து கொண்ட விதம் மண்டலியை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஆனால் அவன் யாரென்பது பாபாவிற்குத் தெரியாமலில்லை. அந்த இடத்தின் ஆன்மீகப் பிரதிநிதி, அங்கே, பாபாவின் ஆன்மீக உட்பணியை கவனிக்கும் ஒரு காரியகர்த்தா. கைகளைக் குலுக்கிக் கொள்வது இருவருக்குமிடையே நிகழ்ந்த ஒரு கைமாற்று. ஆனால் என்ன பகிர்ந்து கொண்டார்கள் என்பது இறைவனுக்கே வெளிச்சம்!

அந்த ஒரு சில கணநேர சந்திப்பிற்குப் பிறகு, திடீரென மழை வேகமாகக் கொட்டியது. பாபாவும் மண்டலியும் ரயில் தண்டவாளத்தின் அருகிலிருந்த ஒரு காவல்காரரின் அறையில் சென்று ஒதுங்கினர்.

காலை உணவை உண்டு, (பாபா இன்னும் எதுவும் உண்ணவில்லை) மழையின் வேகம் தணிந்ததும், அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். பல மைல் தூரம் நடந்து, தெளிவான நீரோடை ஒன்றில் தாகம் தணித்து இளைப்பாறினர். பல நாட்களாக பாபா, திட உணவு எதுவும் உண்ணவில்லை. ஆனால், வயிற்றுக் கோளாறு தொடர்ந்து சிரமத்தைத் தந்தது.

ஆடுகளை மேய்க்கும் சில சிறுவர்களைப் பார்த்த பாபா, பாதிரியை அனுப்பி, '**உண்பதற்கு அவர்களிடம் ஏதாவது உள்ளதா**' எனக் கேட்டுவருமாறு கூறினார். கூட்டத்தில் ஒரு சிறுவன், அவனிடம் சப்பாத்தியும், காரமான மிளகாய் சட்னியும் இருப்பதாகத் தெரிவித்தான். பாதிரி இதை, பாபாவிற்கு எடுத்துச் சொன்னதும், பாபா '**அந்த சிறுவனுக்கு ஒரு அணா நாணயத்தைக் கொடுத்து சட்னியை வாங்கிவர**'க் கூறினார். திகைத்துப்போய் பாதிரி, "பாபா, நீங்கள் வயிற்றுக் கடுப்பால் அவதிப் படுகிறீர்கள். நீங்கள் சட்னி சாப்பிட மாட்டீர்கள், அப்படித்தானே? இது உங்கள் நிலைமையை இன்னும் மோசமாக்கும்!" என்று கேள்வி கலந்த குரலில் கேட்டார்.

மெஹர் பாபா உடனே "**உங்களுக்கு என்ன தெரியும்? மாறாக, சட்னி வயிற்றுக் கடுப்பைப் போக்கி என்னைக் குணப்படுத்தும்**" என்று

பதிலளித்தார். தயக்கத்துடன் பாதிரி அந்த சிறுவனுக்குக் காசு கொடுத்து, சட்னியை வாங்கி வந்ததும், குஸ்தாஜியிடம் இருந்த சப்பாத்தியுடன் பாபா அதை உண்டார். பல நாட்களுக்குப் பிறகு, முதல் முறையாக, பாபா மகிழ்ச்சியாகவும், திருப்திகரமாகவும் இருந்ததை மண்டலி வியப்புடன் பார்த்தனர். அவதார புருஷனின் பாசம் மற்றும் பணியில் மறைந்திருக்கும் பரம ரகசியத்தை யாரேனும் கற்பனை செய்ய இயலுமா? தன்னுடைய ஆன்மீகப் பிரதிநிதிகளில் ஒருவரை சந்தித்து, அவர் மூலம் ஆன்மீக உள்தளத்தில் செய்யவேண்டிய பணியைச் செய்து முடித்த பின்பு, பாபா உணவு உண்டார். அந்த சாதாரண ஆடு மேய்ப்பனுக்கு மெஹர் பாபா யார் என்பதே தெரியாது! 'தன்னிடம் இருந்த எளிய உணவை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு எவ்வளவு ஆழமான அன்பைப் படைத்தவர் இந்த இறைவன்?' என்று காலம் ஆச்சரியத்தில் ஆழ்ந்தது. அதை உண்ட பின்பு, பாபா சட்னி மிகவும் சுவையாக இருந்தது என்பதை அந்த சிறுவனுக்குக் கூறி அனுப்பினார். ஆடு மேய்ப்பன் தன்னிச்சையாக அளித்த உணவை உண்டு, பாபா தனது நீண்ட நாளைய உபவாசத்தை முடித்துக் கொண்டார். இதற்கிடையில், அந்த சிறுவன், பாபாவின் பரவசமூட்டும் சிறப்பம்சங்களை உற்றுநோக்கிய வண்ணம் நின்றான்.

ஆடு மேய்ப்பன் கொடுத்த உணவை உண்ட பின்பு, மெஹர் பாபா, ஓர் இனம்புரியாத புத்துணர்ச்சியில் லஷ்கரை நோக்கி நடைபயணத்தைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 16ஆம் நாள் அங்கு வந்து சேர்ந்தார். மண்டலி அளவுக்கு அதிகமான சுமையால் மிகவும் களைப்பாக இருந்தனர். அருகாமையிலிருந்த ஓர் இந்து தர்மசாலையில் தங்குவதற்கு அறைகள் இல்லாததால், தற்காலிகமாக வராந்தாவில் சுமைகளை இறக்கி வைத்துவிட்டுக் களைப்பாறினர். அதற்குப் பிறகு ரயில் நிலையத்தை சென்றடைந்து, அதிகாரியின் அனுமதி பெற்று பயணிகள் காத்திருப்பு அறையில் தங்கினர். ஆகஸ்ட் 17ஆம் நாள் பூனாவில் வாழ்ந்த சதாஷிவிற்குத் தொலைத்தந்தி மூலமாக, **பனாரஸ்** வருமாறு செய்தி அனுப்பப்பட்டது. அன்று முழுவதும் பாபா, சாதுக்களை சந்தித்து அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். ஹரித்வார் புனித யாத்திரைக்கு **லஷ்கர்** ஒரு முக்கிய சந்திப்பாக இருந்ததால் பல சாதுக்களை சந்திக்க வாய்ப்பாக அமைந்தது.

லஷ்கரிலிருந்து நடைபயணமாக ஸக்கோரிக்குச் செல்வதைப் பற்றிய விவாதத்தின்போது, மண்டலி நடைபயணத்தில் அவ்வளவு உற்சாகம் காட்டாமல் இருந்ததால், பாபா ரயிலில் செல்ல ஒப்புக்கொண்டார்.

அன்று மதியம் இரண்டு மணியளவில் மொராதாபாத் வந்து சேர்ந்ததும், பாபா அவரது பணியைத் தொடங்கினார். பாபா, சாதுக்களின் பாதங்களைத் தொட்டு வணங்குவதால், நிச்சயமாக அவர்கள் உண்மையான சாதுக்களாக இருக்க வேண்டும். பாபா செய்ததுபோல மண்டலியும் சாதுக்களின் பாதங்களில் வணங்கியபோது, சாதுக்கள் அனைவரின் நெற்றியிலும் திருநீறு இட்டனர்; பாபாவும் அதை ஏற்றுக்கொண்டார்.

திரும்பி வரும் வேளையில் ஒரு வேப்பமரத்தின் கீழ், மிகவும் அசுத்தமான சூழ்நிலையில் ஒரு மஸ்த் இருப்பதை, பாபா கவனித்தார். கடந்த

நான்கு வருடங்களாக ஒரே இடத்தில், அனைத்து காலநிலையிலும் அந்த மஸ்த் அங்கேயே இருந்ததாகக் கூறப்பட்டது. அவர் குல்ஃபி எனும் ஒருவித ஐஸ்கிரீமை விரும்பி உண்பதாகக் கேள்விப்பட்டு, தாராளமாக வாங்கி வழங்கினார்; மட்டுமின்றி அருகிலிருந்த குல்ஃபி கடைக்காரரிடம் ஐந்து ரூபாய் அதிகம் கொடுத்து, மேலும் அவருடைய விருப்பப்படிக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அன்றிரவு ரயில் நிலையத்தில் ஓய்வெடுத்து, அடுத்த நாள் போபால் நகருக்குப் பயணம் செய்தனர். வழியில் லக்னோவில் ரயில் மாறி, ஆகஸ்ட் 20ஆம் நாள் போபால் சென்றடைந்ததும், பாபா அவருடைய பணியைத் தொடர்ந்தார்.

அஹமதுநகரிலிருந்து போபால் வந்த ஆதி, பாபாவிடம் அவருடைய பயணத்தை நிறுத்திவிட்டு மெஹராபாத்திற்குத் திரும்பி வருமாறு வேண்டினார். எந்த பதிலும் வழங்காமல் பாபா ரத்லம் நகருக்குப் புறப்பட்டுச் சென்றார்; ஆனால் ஆதியை உடன் செல்ல அனுமதித்தார்.

ஆகஸ்ட் 22ஆம் தேதி ரத்லம் சென்றதும் சில மணி நேரங்கள் ரத்லம் நகரைச் சுற்றிவந்து பல சாதுக்களை சந்தித்து, பாதங்களைத் தொட்டு வணங்கினார். அடுத்ததாக, அங்கிருந்து அன்று மாலை பரோடா சென்றடைந்து குஜராத் இந்து விடுதியில் தங்கியிருந்தபோது பாபா இவ்வாறு தெரிவித்தார்: **“நாம் அனைவரும் ‘மவுண்ட் அபு’ சென்று வந்ததும், நாம் மேற்கொண்ட இப்பயணம் நிறைவுக்கு வரும். இங்கிருந்து மெஹராபாத்திற்குத் திரும்பிச் செல்லப் போகிறோம்.”**

மெஹர் பாபா, அஹமதுநகருக்குத் திரும்பிச் செல்லும் செய்தியைக் கேட்டு, கடந்த மூன்று வாரங்களாக மேற்கொண்ட பயணத்தால், மிகவும் களைத்துப்போன மண்டலி அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். மெஹர் பாபாவின் இந்த முடிவு (காரணம் குறிப்பிடாவிட்டாலும்) ஒருவேளை, கையிலிருந்த பணம் ஏறக்குறைய தீர்ந்து விட்டதால் கூட இருக்கலாம்.

எதிர்பாராமல், காலநிலை அதிக வெப்பமாக இருந்தபோதிலும், பாபா மண்டலியுடன் பரோடா நகரைச் சுற்றி வந்தார்; மஹாராஜின் அரண்மனை, கலைக்கூட அரங்கம், மற்றும் பல இடங்களைப் பார்வையிட்டனர்.

ஆகஸ்ட் 25ஆம் நாள் பாபா, உஜ்ஜைன் வந்து ஷிப்ரா நதிக்கரையில் (SHIPRA RIVER) வாழ்ந்த பல சாதுக்களை சந்தித்து, அவர்கள் பாதங்களில் தலை வணங்கி தட்சணையாகப் பணமும் கொடுத்தார்.

சதாஷிவ் பாட்டீலிடம் ஷிப்ரா நதியில் நீராடிவிட்டு, நதிக்கரையில் அமைந்த கோயிலுக்குச் சென்று, இந்து முறைப்படி அர்ச்சனை செய்து வருமாறு பாபா கேட்டுக்கொண்டார். கோவிலருகில் அமைந்த ஒரு குடிலில் இரண்டு விசித்திரமான சாதுக்கள் வாழ்ந்து வந்தனர்; ஒருவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டு கண்களை இழந்து விரல்கள் எல்லாம் குறுகிப்போய் காணப்பட்டார்.

பாபா, அவர்களை அணுகி முதலில் பணத்தை அவர்கள் முன் வைத்து, பாதங்களில் அடிபணிந்து வணங்கச் சென்றதும், அவர் பின்வாங்கி, உரத்த

குரலில் மறுப்புத் தெரிவித்தார். பாபா இருகரம் கூப்பி வணங்கிவிட்டு அமைதியாக வெளியேறினார்.

தொழுநோயால் பாதிக்கப்பட்ட அவர், பாபாவை யார் என அடையாளம் கண்டுகொண்டார். அவர் ஆன்மீகப் பாதையில் மிகவும் உயர்நிலையை அடைந்த சாது என்பதை பாபா பின்னர் தெரிவித்தார். அங்கிருந்து புறப்படும் முன்னர், அந்த சாது அவருடைய அருமையான குரலில் பாடி, கால்களால் தாளமிட்டு, மெஹர் பாபாவை தரிசனம் செய்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

1924 ஆகஸ்ட் 27ஆம் நாள் பாபா மண்டலியுடன் ஓர் உள்ளூர் ரயிலில் பயணம் செய்யும் வேளையில், ஒரு வயதான முஸ்லிம் பெரியவர் பாபா இருந்த ரயில்பெட்டியில் ஏற முயற்சித்தபோது, பாதிரி அவரைத் தடுத்து நிறுத்தினார், ஏனெனில் பாபா அவ்வேளையில் தனியாக இருக்க விருப்பம் தெரிவித்தார். பாபாவைத் தற்செயலாகப் பார்த்த அந்தப் பெரியவர், அருகில் சென்று பார்க்க விரும்பி, இவ்வாறு கூறினார்: “புனிதமான அவரை நான் பார்க்கக் கூடாது என்று என்னை ஏன் தடுக்கிறீர்கள்? நான் அவரோடு கைகளைக் குலுக்க வேண்டும், அவ்வளவு தான்! என்னை ஏன் தள்ளி விடுகிறீர்கள்?”

அப்படிக் கேட்டுக்கொண்டே, ரயிலில் ஏறி பாபாவின் அருகில் சென்று கைகளை நீட்டினார்; பாபாவும் அவர் கைகளைப் பற்றிக்கொண்டு அமர வைத்தார். அந்தப் பெரியவர் மட்டற்ற மகிழ்ச்சியில் பாபாவுடன் பேசிக்கொண்டிருந்த வேளையில், பேச்சின் இடையில் அவர் தன்னிடமிருந்த, ஓபியம் (OPIUM) எனும் போதைப்பொருளை சப்பாத்தியில் நிரப்பி வேகமாக விழுங்கினார். பாபா, உடனே அவரிடம் ‘பவஹர்’ மலையைப் பற்றி விசாரித்ததும், பெரியவர் அந்த மலையைப் பற்றி உரத்த குரலில் ஆனால் வேடிக்கையாக, நாட்டுப்புற தொனியில் புகழ்பாடத் தொடங்கினார். அவர் உண்ட ஓபியமும் வேலைச் செய்ய ஆரம்பித்தது. மயக்கமான மனநிலையில் அவர் பவஹர் மலையைப் பற்றிப் புகழ் பாடினார்: “அது ஒரு சொர்க்கம், நான் சொல்கிறேன், இந்தப் பூமியில் அது ஒரு சொர்க்கம்!” இதைக் கேட்டு மெஹர் பாபா ‘மவுண்ட் அபு’வுக்கு பதிலாக, பவஹர் மலைக்குச் செல்ல முடிவு செய்தார்.

மெஹர் பாபா மண்டலியுடன் மாலை எட்டு மணிக்கு, திரும்பி பரோடா வந்து குஜராத் இந்து விடுதியில் தங்கிவிட்டு, மறுநாள் மாலையில் பவஹர் மலையை நோக்கி நடந்து இரவு ஒன்பது மணியளவில் மலையடிவாரத்தைச் சென்றடைந்தார். இரவில், அருகிலிருந்த தர்மசாலையில் தங்கிவிட்டு, அடுத்த நாள் காலை ஆறு மணிக்கு, செங்குத்தாக இருந்த மலை உச்சியை நோக்கி நடந்தனர். பாபா வயிற்றுக் கோளாறால் இன்னமும் அவதிப்பட்டாலும் அதிவேகத்தில் மலையைத் தாவி ஏறியது மண்டலியை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. வழியில் இரண்டு முறை தேநீர் அருந்துவதற்காக நின்ற வேளையில், பாபா, நீலகிரி மலையை நினைவு படுத்தினார் - மலை முழுவதும் தேயிலைத் தோட்டமாக நிரம்பி இருந்த போதிலும், உணவகத்தில் தேநீர் கிடைக்காததையும், நேர்மாறாக ஒன்றுமில்லாத இந்த மலையில் சுவையான தேநீர் கிடைப்பதையும் சுட்டிக்காட்டினார்.

மலை உச்சியை அடைந்து, அங்கிருந்த பிரசித்தி வாய்ந்த காளி கோயிலுக்குச் சென்று தேவியை தரிசனம் செய்தனர்.

சிறிது தொலைவில் அமைந்த 'ஸாஜன் ஷா வாலி' என்ற ஒரு முஸ்லிம் சாதுவின் சமாதியிலும் சென்று தலை வணங்கினர். பவஹர் மலை உச்சியிலிருந்து அருமையான இயற்கைக் காட்சியைக் கண்டுகளித்தனர். இரவு எட்டு மணிக்கு, பரோடா விடுதிக்குத் திரும்பி வந்தனர்.

மறுநாள் பாபா, இப்பயணத்தில் வழக்கம்போலக் கூறி வந்த புரியாத புதிரான அறிக்கையை மேலும் எடுத்துரைத்தார்: "**நான் பாபா அல்ல**!" மண்டலியை எதிர் கொண்டு, "**நீங்கள்தான் பாபா எனும் தனித்தன்மையுடன் கூடிய இறை தன்மையை எனக்கு அளித்தீர்கள்**! **இப்போது அனைத்து சாதுக்களும், சித்தர்களும் என்னைச் சிதறடிக்கத் துடிக்கிறார்கள்**!"

இவ்வாறு மெஹர் பாபா திரும்பத் திரும்ப கூறிய இவ்வார்த்தைகளைக் கேட்டு சலித்துப்போன மண்டலி, அதை நிறுத்துமாறு பாபாவிடம் முறையிட்டனர். பாபா, பதிலுக்கு, "**இவ்விஷயத்தில் நான் தீவிரமாக இருக்கிறேன், என்னிடம் எதுவுமில்லை**! **மேலும் என்னுடைய குருநாதர்கள், பாபாஜான், மஹாராஜ் அவர்களிடமும் எதுவுமில்லை**! **சொல்லப்போனால் மஹாராஜை, சத்குரு என்றழைக்க, அவர் ஒரு சாது என்று கூடக் கூற இயலாது**!" என்று எடுத்துரைத்தார்.

மண்டலியில் ஒருவர் பாபாவிடம் அவருடைய குருநாதர்களைப் பற்றி இவ்வளவு அதிர்ச்சியான அறிவிப்பை அளித்ததன் காரணத்தை வினவியபோது, பாபா இவ்வாறு விளக்கினார்: "**இறை நியதி, என்னை இப்படிக் கூற கட்டாயப் படுத்துகிறது. நீங்கள் எதைச் செய்தாலும் இறை நியதியால் அதைச் செய்யக் கடமைப்பட்டுள்ளீர்கள்**."

மெஹர் பாபாவின் இத்தகைய கருத்துக்கள், முக்கியமாக, பாதிரியை இலக்காகக் கொண்டிருந்தன; அவருக்கு அப்போது வயது 21. பாபா, திரும்பத் திரும்ப இவ்வாறான வார்த்தைகளை எடுத்துக் கூறுவதன் காரணம், அனைத்து மனங்களும் அவருக்கு ஒரு திறந்த புத்தகம், பாதிரியின் இளம் மனம் ஆரம்பத்திலிருந்தே அமைதி குலைந்து காணப்பட்டது: "இது எந்த விதமான ஆன்மீகம்? இவர்கள் எப்படிப்பட்ட சத்குருக்கள்? இவர்கள் முன்னிலையில் சாதாரண மனிதர்கள் எவ்வாறு தயக்கமின்றி செயல்பட முடியும்?"

பாபாவின் கட்டளைப்படி, பாதிரி, ஸூஃபி, ஸந்த் இரண்டையும் சத்குரு உபாஸனி மஹாராஜிடம் ஒப்படைக்க எடுத்துச் சென்றபோது, மஹாராஜ் மறுத்தது மட்டுமின்றி, பாதிரியை அவதூறாகத் திட்டி, சாபமழை பொழிந்தார். மெஹர் பாபா இவற்றை மஹாராஜுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துவரச் சொன்னதை விளக்கமாக எடுத்துரைத்தும், அவர் நடந்து கொண்ட விதம், விவரிக்க முடியாத ஒன்றாக இருந்தது.

பாதிரியின் எண்ணங்கள் அலைமோதின: 'பாபாவிற்கு இப்படி நடக்குமென்று முன்கூட்டியே தெரிந்திருந்தால், நெர்வஸ் மற்றும் என்னை மஹாராஜிடம் ஏன் அனுப்பி வைத்தார்? மஹாராஜ் இவ்வாறு சீற்றமடைய வேண்டியதன் காரணம்தான் என்ன?' இப்பயணம் தொடங்கியதிலிருந்தே

பாதிரியின் மனதில் அலைமோதும் இந்த எண்ணங்களுக்கு மெஹர் பாபா அவ்வப்போது, அவருடைய கோபக்குரலை எழுப்பாமல், அளித்த பதில்களாகும். இந்த வார்த்தைகள் அவரை நோக்கிக் கூறப்படுவதை, பாதிரி நன்கு அறிவார்; மேலும், பாபாவின் வார்த்தைகளின் அர்த்தம் என்ன என்பதை முழுமையாகப் புரிந்துகொள்ள வழி தெரியாமல், சத்குருக்களின் வார்த்தைகளில் நிறைந்திருக்கும் ஞானத்தை, சந்தேகக் கண்களால் பார்த்ததால் வெட்கத்தில் தலை குனிந்தார்.

மெஹர் பாபா "**இந்த சாதுக்கள், பாபா எனும் இறை தன்மையைச் சுக்குநூறாகச் சிதைக்கத் துடிக்கிறார்கள்**" என்று ஒவ்வொரு நாளும் காலை, மதியம், மாலை எந்நேரமும் தவறாமல் கூறிவந்தார். மனங்களைக் கட்டுப்படுத்த எவ்வளவோ முயன்றும், முடியாமல், பாபாவின் வார்த்தைகள் அவர்களிடம் வெறுப்பைத் தூண்டின. 'பாபா இந்தப் பேச்சை நிறுத்துங்கள்' என்று முறையிடும் அளவுக்கு பொறுமையை இழந்துவிட்டனர்.

சில நேரங்களில் சத்குருக்கள் மண்டலியை அவர்களின் சித்தபிரம்மையிலிருந்து வெளியே கொண்டுவரும் நோக்கத்தில் சபித்துத் திட்டுவர். மேலும் அவர்கள் மண்டலியின் மனங்களில் சந்தேகங்களை உருவாக்கும் நோக்கத்தில் அவர்களை எதிர்கொண்டு, "**உங்களுக்கு என்ன தெரியும்? நீங்கள் என்னை, கடவுள் மனித உருவில் வந்தவர் என்று மட்டுமே கூறுகிறீர்கள். நான் கடவுள் என்பதை நீங்கள் உண்மையில் நம்புகிறீர்களா? என்னிடமிருந்து என்ன ஆதாயத்தைக் கண்டீர்கள்? ஏதாவது பலன் உண்டா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று என்னிடம் கூறுங்கள்! வாயைத் திறந்துப் பேசுங்கள்**" என்று அவர்களுக்கு எரிச்சலும், கோபமும் வருவதுவரை வார்த்தைகளை அள்ளி வீசுவது வழக்கம்.

மெஹர் பாபா, திரும்பி வரும் பாதையை மறுபடியும் மாற்றி, ஸக்கோரிக்குச் செல்லாமல் மும்பையை நோக்கி பயணத்தைத் தொடர்ந்தார். ஆதி, மாஸாஜி இருவருக்கும், மும்பைக்கு வருமாறு தகவல் தரப்பட்டது. ஏறக்குறைய பத்து நாட்கள் பரோடா நகரில் தங்கிவிட்டு செப்டம்பர் 9ஆம் நாள் மும்பை வந்து சேர்ந்து ஈரானி மான்ஷனில் தங்கியிருந்தனர்.

ஓரிரு நாட்கள் கடந்தன; பாபா கோவா மற்றும் தென்னிந்தியாவில் சில இடங்களுக்குச் செல்லத் திட்டமிட்டார். பாதிரி, கடந்த பயணத்தைத் தொடர்ந்து மிகவும் களைப்பாக இருந்ததால், இம்முறை அவரை விட்டுவிடுமாறு மன்றாடினார். மேலும், அவர் பாபாவின் இடையறாத தொல்லைகளுக்கு ஆளானதால், மனச்சோர்வுடன் காணப்பட்டார். அவரை உடன் அழைத்துச் செல்ல வேண்டாம் என பாபாவைக் கேட்டுக்கொண்டார். ஆனால் பாபா நம் நாட்டு வழக்கப்படி, தொண்டையில் கை வைத்து உறுதியளித்தார், "**என்னுடன் வாருங்கள். எந்த இடையூறும் இருக்காது என்று சத்தியம் செய்கிறேன்.**" பாதிரி அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

பாதிரி மண்டலியில் மிகவும் இளமையானவர், அடிக்கடி சற்று வயதான மண்டலியின் கலகங்களுக்கு, குறிப்பாக குஸ்தாஜி, பெஹராம்ஜி

இவர்களிடையே மாட்டிக்கொண்டு தவித்தார். மேலும், பாபாவின் தவறாத துன்புறுதல்களுக்கு ஆளாகி, மன உணர்ச்சிகளால் கொந்தளித்தார். பாதிரி முன்கோபக்காரர் ஆதலால், ஏதாவது அவமதிப்பான வார்த்தைகளைக் கூறி வாழ்நாள் முழுவதும் வருந்த வேண்டிய சூழ்நிலையை சந்திக்க விரும்பவில்லை. மெஹர் பாபா எவ்வளவோ உறுதியளித்தும், பாதிரி உடன் செல்லவில்லை; பதிலாக வஜிப்தரை மேலாளராக நியமித்தார்.

செப்டம்பர் 14ஆம் நாள் பஞ்சிம் நகருக்குப் புறப்பட்டனர். ரயில் பயணத்தின்போது வஜிப்தரின் உடல்நிலை சரியில்லாமலாயிற்று. லொண்டா ரயில் நிலையம் வந்ததும், பாபா திடீரென எதிர்பாராமல் சீற்றமடைந்து வஜிப்தரை ஒரு நீளமான இருக்கையில் படுக்க வைத்து, பால் வாங்கி வரச் சொல்லி அதை அருந்தச் செய்தார். அதற்குப் பிறகு பயணத்தைத் தொடர்ந்தார். அதிசயமாக வஜிப்தரின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு ஒரிரு மணி நேரத்தில் முற்றிலுமாக குணமாகிவிட்டார்.

'மார்கோவா'வில் இறங்கி அங்கிருந்து படகில் பயணம் செய்து பஞ்சிம் வந்து ஒரு பெரிய ஹோட்டலில் தங்கினர். பஞ்சிம் மற்றும் பழமையான கோவாவில் போர்ச்சுக்கீசியர்கள் அமைத்த கிறிஸ்தவ புனித ஆலயங்களையும், இதர பிரசித்திபெற்ற இடங்களையும் பார்வையிட்டனர். முக்கியமாக 'பெஸிலிக்கா ஆஃப் ஜீஸஸ்' எனும் புனித கோயிலில் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஃபிரான்சிஸ் ஸேவியர் அவர்களின் உடல் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. பாபா இந்த விசாலமான கோயிலைச் சுற்றி வந்தார்.

மெஹர் பாபா அவருடைய ஆன்மீக உட்பணியை விரைவாக முடித்துவிட்ட காரணத்தால் மூன்றே நாட்களில் அனைவரும் அங்கிருந்து புறப்பட்டு மும்பைக்குத் திரும்பி வந்தனர்.

அடுத்த மூன்று மாதங்கள், செப்டம்பர், அக்டோபர், நவம்பர் 1924ஆம் ஆண்டு, மெஹர் பாபா பெரும்பாலும் மெஹராபாத்தில் இருந்துகொண்டு, மும்பைக்குப் பல முறை சென்று வந்தார்.

அஹமதுநகரில் வாழ்ந்து வந்த நஸர்வான் ஸட்டா என்பவரின் வீட்டிற்கு மெஹர் பாபா அடிக்கடி விஜயம் செய்தார். நஸர்வானின் கூட்டுக்குடும்பம் 'அக்பர் பிரஸ்' என்றழைக்கப்பட்ட இல்லமும், வியாபார மையமும் சேர்ந்த ஒரு வளாகத்தில் வாழ்ந்து வந்தது. அங்கு ஒரு பருத்தி ஆலையும், அச்சகமும் இருந்தன. பாபா மெஹராபாத்தில் இருந்தபோது அனைத்து அஞ்சல்களும் இந்த முகவரிக்கு வந்தன.

சில நேரங்களில் மெஹர் பாபா மதிய உணவுக்காக ஸட்டா வீட்டிற்குச் சென்று, அங்கு ஓய்வெடுப்பது வழக்கம். அவ்வேளையில் ஸட்டா மற்றும் மண்டலியுடன் பாபா பல விஷயங்களைப் பற்றி விவாதிப்பதுண்டு. நஸர்வானுக்கு நான்கு சகோதரர்களும், நான்கு சகோதரிகளும் உடன்பிறந்தவர்கள்; அர்தேஷிர் எனும் ஒரு மாற்றாந்தாயின் மகனும் உண்டு. படிப்படியாக குடும்பத்தின் அனைத்து அங்கத்தினர்களும் பாபாவின்

அரவணைப்பில் வந்தது மட்டுமல்லாமல், மெஹர் பாபாவின் ஆன்மீகத் தொடர்பில் வந்து, அவர் அவையில் முக்கிய அங்கம் வகிக்கும் விதி படைத்தவர்களாக இருந்தனர்.

மேலும், இக்காலகட்டத்தில் அஹமதுநகர் மற்றும் மும்பையிலிருந்து மெஹர் பாபாவிடம் வந்த பலர், பாபாவின் ஆன்மீகப் பணிக்குப் பேருதவியாக இருந்தார்கள்.

கங்காராம் பவார் (1923ஆம் ஆண்டு மெஹர் பாபா முதன்முதலாக அரன்காவ்ம் வந்தபோது அவருக்கு உணவளித்தவர்) அவ்வேளையில் பாபாவின் நெருங்கிய தொடர்பில் வந்தார். கங்காராம் மரத்தொழில் செய்து வந்தவர், மெஹராபாத் கட்டிடங்களில் பழுதுபார்க்கும் பணியைச் செய்துவந்தார். கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த கங்காராம், புனித நூலான பைபிளை பாபாவிற்கு மராட்டி மொழியில் அவ்வப்போது வாசிப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். அனைவரிலும் பெரியவர் ஆகையால் அவரை அஜோபா (தாத்தா) என்று அழைத்தனர்.

மாருதி பாட்டீல், அரன்காவ்ம் கிராமத்திற்குத் தலைவர், மெஹர் பாபாவின் நெருங்கிய தொடர்பில் வந்ததால் அனைத்து கிராமத்து மக்களும் அவர் பார்வையில் அடைக்கலமாயினர்.

இதற்கிடையில், வஜிப்தரின் நெருங்கிய நண்பன் மறைந்துவிட்டதால் அவர் குடும்பத்தின் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக வாக்குறுதி அளித்த வஜிப்தர், பாபாவிடமிருந்து விலகவேண்டிய சூழ்நிலை. வஜிப்தர், மண்டலியுடன் பாபாவின் அவையில் இணையும் வாய்ப்பை இழந்து பிரிந்து சென்றார். அதற்குப் பிறகு பாபாவை ஏழு வருடங்களுக்குப் பின்னரே சந்திக்க முடிந்தது.

குஷ்ரு குவாட்டர்ஸில் வாழ்ந்து வந்த மெஹரா மற்றும் தாயார் தவுலத்மாய் இருவரையும் பாபா அவ்வப்போது மெஹராபாத்திற்கு அழைத்தார். அவ்வேளையில் அரன்காவ்ம் கிராமத்தில் வாழ்ந்த ஏழை சிறுவர்களுக்குச் சட்டை தைக்கும் கடமையை பாபா, பெண் மண்டலிக்கு வழங்கியிருந்தார். ஒரு முறை அவர்கள் மெஹராபாத் வந்தபோது பாபா, மெஹராவிடம், "**நீங்கள் எத்தனை சட்டைகள் தயார் செய்தீர்கள்?**" என்று கேட்டதற்கு, ஐம்பது என்று பதிலளித்தார். "**அவ்வளவுதானா? இன்னும் அதிகமாகத் தைக்க முடியாதா? இதுவரையிலும் நீங்கள் குறைந்தது 200 சட்டைகளை முடித்திருக்க வேண்டும்!**" என்று கூறியதும், மெஹரா அந்த சவாலை ஏற்றுக் கொண்டார்.

சில நாட்களுக்குப் பிறகு மெஹர் பாபா, மெஹரா, தாயார் தவுலத்மாய், சிறிய கோர்ஷெத், டவ்லா, நாஜா, பெரிய கோர்ஷெத் ஆகிய ஆறு பெண் மண்டலியை மெஹராபாத்தில் நிரந்தரமாக வாழ அனுமதித்தார். அவர்கள் தயாரித்த சட்டைகளை அரன்காவ்ம் சிறுவர்களுக்கு அன்போடு வழங்கினார்.

ஒரு முறை பாபா மெஹராவை அழைத்து, “**இன்றிலிருந்து நீங்கள் என்னுடைய தனிப்பட்ட தேவைகளை கவனிக்கும் பணியாள்**” என்று கூறி, குஸ்தாஜியிடம், பாபாவிற்கு சொந்தமான அனைத்து தனிப்பட்ட பொருட்கள் அடங்கிய பெட்டகத்தை மெஹராவிடம் ஒப்படைக்குமாறு கூறினார். பாபாவிற்குத் தேநீர் தயார் செய்து அனுப்பி வைப்பது, உடைகளைத் துவைப்பது, அவருடைய சாப்பாட்டுத் தட்டுகளை சுத்தம் செய்வது போன்ற அன்றாட பணிகளையும் மெஹரா செய்து வந்தார்.

மெஹர் பாபா காலை வேளையில் பெண் மண்டலி வாழும் தபால்நிலைய கட்டிட வராந்தாவில் வந்து அமர்ந்து, “**ஏ நார்ஜூ! மணி ஆறு ஆகிவிட்டது, எழும்ப வேண்டிய நேரம் இது!**” என்று குரல் கொடுப்பது வழக்கம். நாஜா படுக்கையிலிருந்து வேகமாக எழும்பி வரும் வேளையில் பாபா வெளியிலமர்ந்து அவருடைய இனிமையான குரலில் பாடுவதையும் பழக்கமாகக் கொண்டார். ஒரு முறை பாபா, “**நான் எப்பொழுதும் எனது குருநாதரின் கைப்பொம்மையாக இருப்பேன்!**” என்று பாடிக்கொண்டிருந்தார்.

இப்படி ஒரு வரியைப் பாடி, ஓரிரு நடைகள் எடுத்து வைத்து - கிருஷ்ண பகவான் கோபிகளுடன் ஆடியதுபோல - நளினத்துடன் நடனமாடினார். சில நேரங்களில் துக்காராமின் பஜனைகளைப் பாடி, தனிச் சிறப்புமிக்க மகிழ்ச்சி மற்றும் பிரகாசத்துடன் தென்பட்டார். அதே வேளையில், பெண்மணிகள் கவனக்குறைவால் ஏதாவது தவறிழைத்தால் வானத்தில் இடி முழங்கும் குரலில் சீற்றத்தை வெளிப்படுத்தியது பெண் மண்டலிக்கு பெரும் அச்சத்தை விளைவித்தது.

ஒரு சந்தர்ப்பத்தில், பாபா, மெஹராவிடம் அவருக்கு ஏதேனும் ஆங்கில பாடல் தெரியுமா என வினவி, பாடுமாறு கூறினார். மெஹரா, ஜார்ஜ் கெர்ஷ்வின் இயக்கிய ‘ஸுவானீ’ என்ற பாடலைப் பாடினார். பாபா அந்த அமெரிக்கன் இசையை மெஹராவிடமிருந்து கற்றுக்கொண்டு அவருடைய குரலில் மிகவும் இனிமையாகப் பாடிவந்தார்.

1924, நவம்பர் 17ஆம் நாள் மெஹர் பாபா மாலை ஆறு மணியளவில் அவருடைய குடிலுக்குள் சென்று, அன்றிலிருந்து ஒரு வாரம் மௌனம் அனுஷ்டித்தார்; கதவைத் தாழ்ப்பாளிட்டு வெளியில் வராமல் குடிலுக்குள் இருந்த வேளையில், பாதிரி, இரவும் பகலும் வெளி வராந்தாவில் அமர்ந்து காவல் புரிந்தார். அவ்வப்போது சிறிதளவு உணவும் (உணவு உண்ணாத நாளில் நான்கு வேளை தேநீரும்) உண்டார். பாதிரி உணவை எடுத்துக்கொண்டு உள்ளே செல்லும் வேளையில், பாபாவை நேரடியாகப் பார்க்காமல் கண்கள் கீழ்நோக்கி இருக்க வேண்டும் என்ற உத்தரவைக் கடைப்பிடித்தார்.

குஸ்தாஜி, மாஸாஜி இருவரும் மெஹராபாத்தில் இருந்தாலும், மெஹர் பாபா மௌனமாக இருந்த இந்த ஒரு வாரம் பாதிரி மட்டுமே பாபாவுடன் இருந்தார். அஹமதுநகரிலிருந்து ருஸ்தம் செய்தித்தாள் மற்றும் தபால்களை

எடுத்து வந்த வேளையில், ஏதாவது குறிப்பை எழுதி பரிமாறிக் கொண்டார்களே தவிர நேரடியாக சந்திக்கவில்லை.

1924, நவம்பர் 21ஆம் நாள் பாபா, பாதிரிக்கு (குஜராத்தியில்) இவ்வாறு எழுதினார்:

**என்னுடைய உடல் பலவீனத்தாலும், கடுமையான ஆன்மீக உட்பணியில் ஈடுபடுவதாலும், நேற்றிலிருந்து மூலாதார சக்தி என்னில் விரயமாகிறது. இருந்தும் கவலைப்பட எதுவுமில்லை. ஏழாவது நாள், அதாவது எதிர்வரும் திங்கட்கிழமை என் உடல் நிலைமை என்ன என்பது தெரியும்.**

**இந்நிலைமை நீடித்தால், இந்தப் பணியைக் கைவிட வேண்டியது வரும். என் உடல் மேலும் ஒத்துழைத்தால், இந்த வாகனம்** (உலகளாவிய ஆன்மீகப் பணி) **தொடர்ந்து செல்லும். இது, எனது பழமையான குருநாதர்களின்** (ஐந்து சத்குருக்கள்) **கட்டளைப்படி நடக்கும். இது அவர்களிடமிருந்து வரும் செய்தியின் முக்கியத்துவத்தைப் பொறுத்திருக்கும்.**

**ஏகாந்தவாசத்திலிருந்து நான் வெளி வருவதானால், மஹாபலேஷ்வர் சென்று ஓய்வெடுத்து உடலைத் தேற்றிக் கொள்வேன். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை உண்பதில் சிரமமில்லை, ஆனால் உடல் பலவீனம் என்னுடைய ஆன்மீகப் பணிக்கு முட்டுக்கட்டையாக உள்ளது. எதுவாயினும் அஞ்ச வேண்டாம். இரண்டு மூன்று நாட்களுக்கு பிறகு பார்க்கலாம்.**

அடுத்த நாள் அறிவிப்புப் பலகையில் பாபா இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "**ஜுரத்தால் உடல் மேலும் பலவீனமாக உள்ளது.**"

1924 டிசம்பர் முதல் வாரத்தில், ஒருவார ஏகாந்தவாசத்திற்குப் பிறகு, பாதிரி, மாஸாஜி, குஸ்தாஜி, மெஹரா, தவுலத்மாய், நாஜா, சிறிய கோர்ஷெத் ஆகியோருடன் பாபா மும்பைக்குச் சென்று, மறுபடியும் பெர்ஸியா பயணம் மேற்கொள்ளும் முன்னர், ஒரு மாதம் 'பரூச்சா' கட்டிடத்தில் தங்கியிருந்தார்.

ரயில் புறப்படுவதற்கு முன்பு, பாபா, மெஹராவை அழைத்து அவருடைய கால்களை அழுத்தி விடுமாறு கூறினார். மெஹரா, பாபாவின் கால்களை அழுத்திவிடும் வேளையில் திடீரென பாபா இவ்வாறு தெரிவித்தார்: "**நீங்கள் எனது கால்களை தினமும் இவ்வாறு அழுத்தி விட்டால் நான் உங்களை மாற்றி விடுவேன்!**" ஆனால் பரூச்சா கட்டிடத்தில் பாபா கடுமையான ஏகாந்தவாசத்துடன் உபவாசமும் மேற்கொண்டதால் அதற்கு வாய்ப்பில்லாமல் ஆயிற்று; குஸ்தாஜி மட்டுமே பாபாவின் அருகில் அனுமதிக்கப்பட்டார்.

மெஹர் பாபா இவ்வேளையில் பெரும்பாலும், திரவ ஆகாரமே அருந்தி வந்தார். 1924 டிசம்பர் மாதத்தில் குஸ்தாஜியும் பாபாவின் கட்டளைப்படி ஒரு வாரம் நீர் மட்டும் அருந்தி உபவாசம் இருந்தார்.

மும்பையில் இருந்த வேளையில் நாஜா, மெஹராவின் உதவியுடன் உணவு தயார் செய்தார். அவ்வப்போது, குஸ்தாஜி சமையலறையில் சென்று

சத்குருக்களின் வழிமுறைகளைப் பற்றி விளக்கமளிப்பது வழக்கம். ஒரு முறை, குஸ்தாஜி சுவாரஸ்யமான கதை ஒன்றை எடுத்துரைத்தபோது, நாஜா வாய்விட்டு சத்தமாக சிரித்தார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த பாபா, கோபமாக மாஸாஜியிடம் அவர் மகள் நாஜாவை அழைத்துக் கொண்டு பூனாவுக்குத் திரும்பிச் செல்லுமாறு உத்தரவிட்டார். இருவரும் உடனடியாக ரயில் நிலையத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா, மெஹராவையும் வீட்டைவிட்டு வெளியேறவும், தவுலத்மாயை மேல்மாடிக்குச் செல்லுமாறும் கூறினார். சாதாரண பழைய புடவை அணிந்திருந்த மெஹரா, அப்போது என்ன செய்வது, எங்கே செல்வது என்று புரியாமல் தவித்தார். மேலும் ஆண்கள் எவரையும் தொடக்கூடாது என்ற பாபாவின் கண்டிப்பான உத்தரவு காரணமாக, நடைபாதையில் செல்லும் வேளையில் மும்பை நெரிசலில் தவறியாவது எவரையும் தொட்டுவிடக் கூடாது என்ற அச்சத்தில் கவனமாக நடந்து சென்றார். சிறிது நேரத்தில் பாபா, குஸ்தாஜியுடன் வேகமாக மெஹராவைத் தொடர்ந்து வந்து, மன்ஸில்-எ-மீமுக்கு அருகிலிருந்த புர்ஜர் தஹிவாலாவின் வீட்டிற்குள் நுழைந்தார். மெஹராவும் பாபாவைத் தொடர்ந்து பின்சென்றதும், பாபா, குஸ்தாஜியிடம் மெஹராவை உடனழைத்துக் கொண்டு அவர்களின் இருப்பிடத்திற்குத் திரும்பிச் செல்லுமாறு கூறினார்.

இதற்கிடையில், நாஜா, மாஸாஜி இருவரும் பூனாவுக்குச் செல்லும் ரயிலைத் தவறவிட்டதால், வேறு வழி தெரியாமல் அவர்களும் புர்ஜர் தஹிவாலா வீட்டிற்கு வந்து பாபாவை எதிர்பாராமல் சந்தித்தனர். கண்களில் நீர் ததும்ப நாஜா வீட்டில் நுழைந்தபோது, அன்புடன் அரவணைத்து பாபா, "**இது உனது தவறு அல்ல**", வேறொரு காரணத்திற்காகக் கோபமுற்றதாக விளக்கிக் கூறினார் (நாஜா, அப்போது பாபாவின் கண்களிலும் கண்ணீர் நிரம்பியிருந்ததை கவனித்தார்).

நாஜா, மாஸாஜி இருவரையும் பரூச்சா இல்லத்திற்கு அழைத்து வந்து மெஹர் பாபா விளக்கமளித்தார்: "**நான் நாஜாவிடம் ஏன் கோபப்பட்டேன் என்று உங்களுக்குத் தெரியுமா? என்னுடைய வேலைப் பளுவால், அந்நேரத்தில், வீட்டில் எவரும் இருக்கக்கூடாது என்ற மிகவும் அத்தியாவசியமான காரணத்தால்தான்! அதற்காக, நான் கோபமுற்றது போலப் பாசாங்குசெய்து, உங்களை வெளியேறுமாறு கட்டளையிட்டேன்**" என்று கூறி நாஜாவைக் கவலைப்படாமல் இருக்கச் சொன்னார்.

அடுத்த நாள், மெஹரா, நாஜா, தவுலத்மாய் மூவரிடமும் மெஹர் பாபா, இவ்வாறு கூறினார்: "**நீங்கள் ஒருபோதும் என்னைவிட்டு விலகிச் செல்லக்கூடாது - நான் உங்களை வெளியேறுமாறு கட்டாயப் படுத்தினால் கூட - எப்பொழுதும் என்னுடனே இருக்கவேண்டும்.**"

மெஹர் பாபா, அஹமதுநகருக்கும் மும்பைக்கும் இடையே, பயணம் செய்யும்போது அடிக்கடி அவர் தமது குடும்ப வீட்டிற்குச் செல்வதுண்டு. அப்போது பாபா, அவரது சகோதரன் ஆதியை, குல்மாயின் மகன் ஆதி

ஈரானியின் பெயரோடு வேறுபடுத்திக் காட்டும் நோக்கத்தில், 'ஆதி ஜூனியர்' என்று அழைத்தார்.

ஆதி ஜூனியர் மிகவும் குறும்புத்தனம் படைத்தவர்; எதையும் சாதாரணமாக எடுத்து, கவலையற்ற வாழ்க்கை வாழ்ந்து வந்தார். ஒரு நாள், பாபாவின் பெட்டியிலிருந்து ஒரு சிட்டிகை புகையிலையைத் தெரியாமல் எடுத்து வாயிலிட்டு மென்றதும், போதையில் மயக்கமானார். ஷிரீன்மாய் அதை கவனித்து பாபாவிடம் கூறவே, பாபா, ஆதியின் கன்னத்தில் வேகமாக அறைந்து, "**என்னுடைய புகையிலையை ஏன் திருடினாய்?**" என்று திட்டினார்.

ஆதி ஜூனியர் பாபாவை எதிர்த்து, "நான் ஏன் எடுக்கக் கூடாது? நீங்களும்தான் சாப்பிடுகிறீர்களே!" என்றதும், "**நான் செய்வதை நீ செய்யாதே!**" பாபா எச்சரித்தார். "**நான் மாதக்கணக்கில் உபவாசம் இருக்க முடியும், உன்னால் முடியுமா? நான் உன்னிடம் சொல்வதை மட்டும் செய்! நான் செய்வதைப்போல செய்ய முயற்சிக்காதே!**"

சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா ஒரு சிட்டிகை புகையிலையை ஆதி ஜூனியருக்குக் கொடுத்து, சாப்பிடுமாறு கூறினார். ஆதி ஜூனியர் குழப்பத்தில், "என்னால் உங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் சாப்பிட்டதற்காக எனது கன்னத்தில் அறைந்தீர்கள், ஆனால் இப்போது நீங்களே எனக்கு சாப்பிடத் தருகிறீர்கள்?" என்றார்.

பாபா, பதிலாக, "**நான் இதை உனக்குத் தருவதால் பரவாயில்லை**" என்று கூறி, குறும்பாக கண்சிமிட்டி, "**மெமோவிடம் மட்டும் சொல்லாதே!**" என்றார். ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் இம்முறை ஆதிக்கு போதையோ மயக்கமோ வரவில்லை.

ஆதி ஜூனியர் ஆன்மீகத்தில் மிகவும் நாட்டமுள்ளவர். ஆதி, அவர் தாயார் ஷிரீன்மாயுடன் சத்குரு உபாஸனி மஹாராஜை சந்திக்கச் சென்றபோது, அந்த மஹாயோகியின் அற்புதமான ஆளுமையை வியந்து பாராட்டியதுண்டு. அந்நாட்களில் 'ஸெயின்ட் வின்சன்ட்' பள்ளிக்குச் செல்லும் வேளையில் ஹஸ்ரத் பாபாஜானால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். உண்மையாகக் கூறப்போனால் அப்பருவத்தில், மெஹர் பாபாவை விட ஹஸ்ரத் பாபாஜான் மீது, ஆதிக்கு, பக்தி கலந்த மரியாதை மிக அதிகம். தாய், தந்தையர்க்குத் தெரியாமல், பள்ளியிலிருந்து திரும்பும் வேளையில், சார் பாவ்டியில் ஹஸ்ரத் பாபாஜான் அருகில் சென்று உற்றுநோக்குவது வழக்கம். சில நேரங்களில் பாபாஜான் ஆதியை அருகிலழைத்து அவரையும் தேநீர் அருந்த வைத்தார்; அதே வேளையில் அவருடைய வழக்கமான முறையில் புரியாத வண்ணம் பேசவோ, மேர்வானைப் பற்றி விசாரிக்கவோ அல்லது ஆதியிடம் எதுவும் கேட்பதோ கிடையாது.

பாபாஜானின் வார்த்தைகள், அவர் பேசும் மொழி, புதிராக இருக்கும், புரிந்துகொள்வது கடினம். இருப்பினும், ஒரு நாள் எக்காரணமுமின்றி, ஆதியின் கண்களை ஆழ்ந்து நோக்கிய வண்ணம், தெளிவான பெர்ஸியன் மொழியில்

இவ்வாறு கூறினார்: “உண்மையே பேசு, அது எவ்வளவுதான் கசப்பாக இருந்தாலும்.”

அந்த வார்த்தைகள் ஆதியைத் திடுக்குற வைத்தன. அவை இதயத்தில் ஆழமாகப் பதிந்ததால், ஒருபோதும் மறந்ததே இல்லை; ஹஸ்ரத் பாபாஜான் அதுபோலத் தெளிவாக ஆதியிடம் மறுபடியும் பேசியதில்லை.

மெஹர் பாபா, மும்பையில், பரூச்சா கட்டிடத்தில் இருந்த வேளையில், ஒரு பக்தர் பொட்டலம் நிறைய அகர்பத்தியை எடுத்து வந்து எரியவைத்து, பாபா முன்னிலையில் காண்பிப்பதை வழக்கமாகக் கொண்டார். இது பாபாவிற்கு எரிச்சலூட்டும் விதத்தில், தொந்தரவாக இருந்ததால் மண்டலி அந்தப் பழக்கத்தை நிறுத்தும்படிக் கூறினர். ஆனால் மண்டலி கூறியதைக் கண்டுகொள்ளாமல், “உங்களுக்கு மெஹர் பாபா யார் என்று தெரியாது! அவர் விரும்பினால் இந்த உலகைத் தலைகீழாக மாற்றமுடியும்!” என்று எடுத்துரைத்தார்.

இதுபோன்ற தினசரி சடங்கை நிறுத்தும் எண்ணத்தில், அவர் வருவதை அறிந்து பாபாவிற்குத் தெரியப் படுத்தியதும், பாபா படுக்கையில் சாய்ந்து தூங்குவதுபோலப் பாசாங்கு செய்தார். இந்தத் தந்திரம் சில நாட்கள் வேலை செய்தது; பின்னர், பாபா தூக்கத்திலிருந்து விழிப்பதுவரை அந்த பக்தர் காத்திருக்கத் தொடங்கினார்.

மெஹர் பாபா, அவ்வப்போது தீனா தலாட்டி, ஸூனாமாசி, சிறிய கோர்ஷெத் மூவரையும் மும்பை நகருக்கு உடனழைத்துச் செல்வதுண்டு. ஒரு முறை பாபா, அவர்களை விக்டோரியா பூங்காவுக்கு அழைத்துச் சென்று, அதைச் சுற்றிவரும் வேளையில், 1916ஆம் ஆண்டு, மேர்வான் என்றழைக்கப்பட்ட போது, அவர் இறை நிலையை அடைந்த பின்பு சாதாரண மனித உணர்வையும் திரும்பப் பெறும் தருவாயில், அவர் வழக்கமாக அமர்ந்திருந்த நீளமான மர இருக்கையை அவர்களுக்குக் காண்பித்தார். இந்த இடத்தில்தான் பார்சி இனத்தைச் சார்ந்த ஒருவர் மேர்வானின் விசித்திரமான தோற்றத்தையும், நடந்துகொள்ளும் விதத்தையும் கவனித்து, அவரது மகளை கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தவறாகப் புரிந்து, மேர்வானின் கன்னத்தில் வேகமாக அறைந்தார். பாபா இந்த சம்பவத்தை விளக்கிக் கூறியதும் அனைவரும் சிரிப்பை அடக்க முடியாமல், இப்போது எவ்வளவு நகைச்சுவையாகத் தோன்றுகிறது என்றனர்.

இக்காலகட்டத்தில்தான் 1924ஆம் வருட இறுதியில், ஃபெராம்ரோஸ் தாதாசாஞ்சி, மெஹர் பாபாவை அடிக்கடி சந்தித்து, ஒரு நெருக்கமான பிணைப்பை உருவாக்கினார். ஒரு நாள் மாலையில், பாபா, ‘சாஞ்சி’யிடம், அனைத்து பெண் மண்டலியையும் அவருக்குச் சொந்தமான ‘மான்டலின் சினிமா’வுக்கு அழைத்துச் செல்லுமாறு கூறினார். தவுலத்மாய், மெஹரா, நாஜா மூவரும் அவர்கள் அணிந்திருந்த பழைய சாதாரண புடவையில் புறப்பட

ஆயத்தமானபோது, பாபா அவர்களிடம், **"நீங்களெல்லாம் என்ன கன்னியாஸ்திரிகளாக மாறிவிட்டீர்களா? உடைகளுக்கும், ஆன்மீகத்திற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா? இல்லை, உங்கள் ஆடைகளை மாற்றுங்கள், அதற்குப் பிறகு நாம் செல்லலாம்!"** என்றார். உடனே, பெண் மண்டலி அனைவரும் அவர்களிடமிருந்த அழகான புடவைகளை உடுத்திக்கொண்டு பாபாவுடன் திரையரங்கிற்குச் சென்றனர். எதுவாயினும், பாதி சினிமா முடிந்ததும், பாபா எதிர்பாராமல் புறப்பட்டதால் பரூச்சா பங்களாவிற்குத் திரும்பி வரவேண்டியதாயிற்று.

மெஹர் பாபா, சாஞ்சியிடம் ('சாஞ்சி', பாபா, பெராம்ரோஸ் தாதாசாஞ்சிக்கு வைத்த புனைப்பெயர்) அவருடைய திரையரங்கத்தை விற்றுவிட்டு, அனைத்து உலக பொறுப்புகளையும் இதர இணைப்புகளையும் விட்டுவிட்டு, நிரந்தரமாக மண்டலியில் ஒருவராக வந்து வாழும்படிக் கட்டளையிட்டார்.

பரூச்சா கட்டிடத்தில் எறும்புகள் நிறைய இருந்தன. ஒரு முறை மெஹரா, பாபாவுக்காகத் தேநீர் தயார் செய்து அனுப்பி வைத்தார். பாபா அதில் ஓர் எறும்பு இருந்ததைப் பார்த்து சீற்றமடைந்தார்; அதற்குப் பிறகு, பாபாவிற்கு சேவை செய்யும் வேளையில் எவ்வளவு கவனமாக இருக்கவேண்டும் என்பதை விளக்கினார். இது மெஹராவுக்கு இன்னுமொரு பாடமாக அமைந்தது.

மற்றுமொரு தருணத்தில் பாபாவிற்குத் திடீரெனப் பசியெடுத்ததும், நாஜா, மெஹரா இருவரும் அவசரமாக ஏதேனும் உணவு தயார் செய்யச் சென்றனர். அந்த நாள் பாபாவின் தரிசனத்திற்காக வந்த பல பக்தர்களிடம் அவர், **"நீங்கள் உணவு உண்டீர்களா?"** என்று கேட்கவும், அங்கு வந்த ஒவ்வொருவரும் ஆமாம் என்று பதிலளிக்க, பாபா இவ்வாறு கூறினார், **"நீங்கள் உண்டீர்கள் அல்லவா, அது உங்கள் பாக்கியம்; என்னுடைய விதியைப் பாருங்கள் - நான் பசியாக இருக்கிறேன், என்னை கவனிக்க இங்கு எவருமில்லை!"** நாஜா, மெஹரா இருவரும் உணவு தயார் செய்யச் சென்ற போது, பாபா இவ்வாறு குறிப்புகளை அனுப்பினார்: **"இங்கு ஒருவர் வந்துள்ளார், அவர் உணவு உண்டதாகக் கூறுகிறார். ஆனால் இப்போது நானோ பசியால் துடிக்கிறேன், என்னை கவனிப்பார் எவருமில்லை!"** பாபா இதுபோன்ற செய்திகளை ஒவ்வொரு நிமிடமும், உணவு தயாராகும் வரை அனுப்பிக் கொண்டிருந்தார். இப்படியாக, பெண் மண்டலியும் மெஹர் பாபாவின் கூரிய அம்புகளிலிருந்து தப்பியதில்லை.

பரூச்சா பங்களாவில், மெஹர் பாபா மறுபடியும் ஒருவாரம் மௌனம் அனுஷ்டித்தார்; எவரையும் அவர் இருந்த அறையில் அனுமதிக்கவில்லை. குஸ்தாஜி வெளியில் பாதுகாவலராக இருந்து, தினமும் ஒரே ஒரு முறை பாபாவிற்கு வெதுவெதுப்பான சர்க்கரை நீரை வழங்கி வந்தார்.

இவ்வாறு, இதுவரை மெஹர் பாபா - 1923ஆம் ஆண்டு இகத்புரியில் ஒரு முறை, மெஹராபாத் குடிலில் இருமுறை, இப்போது நான்காவது முறையாக மும்பையில மௌனம் கடைப்பிடித்துள்ளார்.

1924 டிசம்பர் மாதத்தில் மெஹர் பாபா, மாஸாஜியுடன் இந்தியாவின் தென்பகுதியை நோக்கிப் பயணம் செய்து, பெல்காவ்ம் வந்து சேர்ந்தார். வெளியளவில் எவ்வித நோக்கமும் இல்லாமல் பெல்காவ்ம் நகரில் அலைந்து திரிந்து பின்பு மும்பைக்குத் திரும்பி வந்தனர். பாபாவின் பயணம் ஒருபோதும் ஆன்மீக நோக்கம் எதுவுமில்லாமல் இராது. சில நேரங்களில் ரயிலில் நூற்றுக்கணக்கான மைல்கள் பயணம் செய்து, எங்குமே வெளியில் செல்லாமல், பயணம் ஆரம்பித்த இடத்திற்கே திரும்பி வந்ததும் உண்டு. வேறு சில நேரங்களில் ஏதாவது ஓரிடத்தில் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே இருந்து, ஆன்மீகப் பணியை வெற்றிகரமாக முடித்துள்ளார். ஆன்மீக உட்தளங்களில் அவருடைய பணி முற்றிலும் தனித்துவமானது.

மெஹர் பாபா ஆன்மீக உட்தளங்களில் செய்யும் உலகளாவிய பணி, கண்ணுக்குத் தெரியாமலும், அறிவுக்கு எட்டும்படி அளவிட முடியாமலும் இருக்கும். உதாரணமாக ஓர் ஆன்மீகப் பிரதிநிதிக்கு, ஒரு நகரின் அனைத்து செயல்பாடுகளையும் கண்காணிக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது என்று எடுத்துக் கொண்டால், அந்தப் பிரதிநிதியோடு தொடர்புகொண்டு, அந்நகர மக்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தெரிவிப்பது - வெளிப்படையாக, அல்லது மறைமுகமாகச் செய்யப்பட்டாலும் - அது சத்குரு ஒருவர் ஒவ்வொரு மனிதனையும் தொடர்பு கொள்ள வேண்டிய தேவையை இல்லாமலாக்கும். எனவே, மெஹர் பாபாவின் பயணங்கள் மற்றும் அவருடைய திட்டங்களில் ஏற்படும் திடீர் மாற்றங்களில் அடங்கும் உள்நோக்கத்தை கற்பனை செய்வதே கடினம். எல்லையற்ற ஒருவரின் பணியைப் புரிந்துகொள்ள இன்னொருவர் எல்லையற்றவராக இருக்கவேண்டும்.

1925ஆம் ஆண்டு, ஜனவரி 11ஆம் நாள் பாபா, டாக்டர் கனிக்கு எழுதினார்: **“கடந்த ஒன்பது நாட்களாக நான் நீர் மட்டுமே அருந்தி வாழ்கிறேன், மேலும் நான் சிறிதளவில் பலவீனமாக இருந்தாலும் உடல் ஆரோக்கியத்துடனும், திடகாத்திரமாகவும் காணப்படுகிறேன். இறைவனுக்கு நன்றி.”**

பரூச்சா பங்களாவில் இரண்டு மாதங்கள் தங்கிவிட்டு, ஜனவரி 25ஆம் நாள் மெஹர் பாபா, அனைவருடனும் மெஹராபாத்திற்கு வந்தார். மெஹர் பாபாவின் நடவடிக்கைகளில் முற்றிலும் புதியதொரு கட்டம் ஆரம்பமாக உள்ளது.



மெஹர் பாபா, **1925**



மெஹர் பாபாவின் பிறந்தநாள் விழா –
**15** பிப்ரவரி **1925**
குல்மாய், ஷிரீன்மாய் இருவருக்கும் பின்னால்
மெஹரா (கீழ் நோக்கிய வண்ணம்),
சிறுமி மணி (வலது புறம்)

# மெஹர் பாபாவின் மௌனம்

**(Meher Baba's Silence Begins)**

1925, ஜனவரி இறுதியில் மெஹர் பாபா, மெஹராபாத்திற்குத் திரும்பி வந்ததும், சில தினங்களுக்கு அவர், குடிலில் இருக்கப் போவதாக அறிவித்து, பாதுகாவலராக, பாதிரியை நியமித்தார். டாக்டர் கனி, ராம்ஜூ இருவருக்கும் இவ்வாறு கடிதம் எழுதினார்:

**பாதிரியை உங்களிடம் அனுப்பி வைக்காததைத் தெரியப்படுத்த முடியாமைக்கு வருந்துகிறேன்; ஏனெனில், இறைவனின் சித்தம் இருந்தால், பிப்ரவரி 1ஆம் நாளிலிருந்து நான் குடிலைப் பூட்டிக்கொண்டு அதனுள்ளே இருக்கப்போகிறேன், பாதிரி பாதுகாவலராக வெளியில் அமர்ந்திருப்பார்.**

**எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கையைக் கைவிடாதீர்கள், ஆனால் உங்கள் பணிகளை இலகுவான மனதுடனும், உறுதியான உள்ளத்துடனும் செய்யுங்கள். நான் உயிரோடு வெளியில் வந்தால், உங்களை பிப்ரவரி மாதத்தில் சந்தித்து அனைத்து விஷயங்களையும் குறித்து நாம் பேசுவோம்**

**- மேர்வான்.**

அஹமதுநகருக்குத் திரும்பி வந்த பின்பு, பாபா, மெஹராபாத்தை அவருடைய தலைமையகம் என்று பலமுறை குறிப்பிட்டு, இனிமேல் அங்கே பொதுமக்களுக்கு தரிசனம் வழங்கப்போவதாகத் தெரிவித்தார். ஜாதி, மத, இன வேறுபாடின்றி அரன்காவ்ம், அஹமதுநகர் மேலும் பல இடங்களிலிருந்து மக்கள் திரள்திரளாக அடிக்கடி வந்தனர். அனைத்து மண்டலியும் திரும்பி வந்து மெஹராபாத்தில் வாழத் தொடங்கினர். பாபாவின் வருகையால் அரன்காவ்ம் சிறுவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர் - மெஹர் பாபா அவர்களுக்கு ஒரு நல்ல தோழனாக இருந்து, உண்ண சிறப்பான உணவும் அளித்தார்.

சிறுவர்களில் ஒருவன், "நாங்கள் இங்கே வரமுடியாது, ஏனெனில் எங்களுக்கு ஆட்டு மந்தைகளை மேய்க்க வேண்டும். இல்லையெனில், எங்கள் பெற்றோர் எங்களைக் கண்டித்து அறையவும் செய்வார்கள்" என்றான்.

பாபா, சிறுவர்களிடம் அவர் அழைத்ததாகவும், பெற்றோரின் சம்மதம் இருந்தால் மட்டுமே பாபாவிடம் செல்லவிருப்பதாகவும் கூறச் சொன்னார். அடுத்த நாள் முப்பது சிறுவர்கள் மெஹராபாத்திற்கு வந்ததும், பாபா அவர்களை நீராட்டி, புத்தாடைகள் அணிவித்து இனிப்பும் வழங்கினார். ஏழை கிராமத்தினர் இதைக் கேள்விப்பட்டு ஆண்கள், பெண்கள், குழந்தைகளில் பலர் பாபாவிடம் வந்து அவர்களுக்கும் புத்தாடைகள் வழங்குமாறு வேண்டினர். மெஹர் பாபா அவர்களைப் பொறுமையாக இருக்கச் சொல்லி, சில நாட்களில் கிராமத்தில் அனைவருக்கும் புத்தாடைகளும், சிறப்பு விருந்தும் அளித்தார். அதைத் தொடர்ந்து, சிறுவர்கள் கூட்டம் அதிகமானதும், அவர்களுக்காக ஒரு பள்ளிக்கூடம் தொடங்கத் திட்டமிடப்பட்டது.

1925, பிப்ரவரி மாதத்தில் தவுலத்மாய், மெஹரா, நாஜா மூவரையும் மெஹர் பாபா, சில நாட்களுக்காக, ஸக்கோரிக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் ஸக்கோரியைச் சென்றடைந்ததும், உபாஸனி மஹாராஜ், மெஹராவிடம், இப்போது எங்குத் தங்கியிருக்கிறாய் என்று கேட்டதற்கு, மெஹரா, 'மெஹர் பாபாவுடன்' என்று பதிலளித்தார்.

மஹாராஜின் முக்கிய பெண் சீடர்களில் ஒருவரான துர்காபாய் கர்மர்கர் அவர்களுக்கு, மெஹரா மீது அதிக பிரியம் ஆகையால் அவரை ஸக்கோரியில் தங்குமாறு வற்புறுத்தினார். சில நாட்களுக்குப் பிறகு பாபா, மாஸாஜியை ஒரு கடிதத்துடன் ஸக்கோரிக்கு அனுப்பி வைத்தார்; அதில் மெஹராவுக்கு, **"நீங்கள் ஸக்கோரியில் தங்க விரும்பினால் தங்கலாம். ஆனால் மெஹராபாத்திற்குத் திரும்பி வந்தால் மகிழ்ச்சியடைவேன்"** என்று குறிப்பிட்டிருந்தார்.

மூவரும் மெஹராபாத்திற்குத் திரும்பிச் செல்வதை மஹாராஜுக்குத் தெரிவித்ததும், அவர் உரத்த குரலில், "இது என்ன? இந்த சிறுவன் சாதுவாக மாறிவிட்டானா? ஆன்மீகத்தைப் பற்றி அவனுக்கு என்ன தெரியும்? அவனிடமிருந்து நீங்கள் எதை அடையப்பெற்றீர்கள்? நீங்கள் ஏதாவது பள்ளத்தில் வீழ விரும்பினால், நான் அதைத் தடுக்கமாட்டேன்! நீங்கள் பிடிவாதமாக இருந்தால் என்னை விட்டுவிட்டு அவனிடம் செல்லுங்கள்!" என்றார்.

ஆனால் அவ்வாறு கூறி முடித்ததும், மூவரையும் தனியாக ஓர் அறையில் அழைத்து, அன்போடு பேசினார்: "நீங்கள் இங்கிருந்து மேர்வானிடம் செல்லுங்கள். அவனுடனே இருங்கள். மேர்வான் எனக்குரியவன், அதுபோல நான் அவனுக்கு. அவன் பாதங்களை இறுக பற்றிக்கொள்ளுங்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு மேர்வான் யார் என்பதை இவ்வுலகம் அறிந்து கொள்ளும்." அடுத்த நாள் மூவரும் மாஸாஜியுடன் மெஹராபாத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

மெஹர் பாபாவின் 31ஆவது பிறந்தநாள் 1925, பிப்ரவரி 18ஆம் நாள் (ஸொராஸ்டிரிய நாள்காட்டிபடி) கொண்டாடப்பட்டது. தபால் அலுவலக கட்டிடத்தில் ஒரு பெரிய கூடாரம் அமைத்து, சிறப்பாக அலங்கரிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான மக்கள் பாபாவின் தரிசனத்திற்காக வந்திருந்தனர். பெற்றோர் போபோ, மெமோ இருவரும் பெஹராம், ஆதி மற்றும் தங்கை மணியுடன் வருகை தந்தனர். மும்பை, பூனா, அஹமதுநகரிலிருந்து பாபாவின் நெருங்கிய பக்தர்கள் பலர் வந்திருந்தனர். தவுலத்மாய், மெஹரா மற்றும் பலர் ஏற்கனவே தபால் அலுவலக கட்டிடத்தில் நிரந்தரமாகத் தங்கியிருந்தனர்.

ஆண் மண்டலிக்கு, தகரத்தால் அமைக்கப்பட்ட தற்காலிக கட்டிடங்கள் எழுப்பப்பட்டிருந்தன. தபால் அலுவலக கட்டிடத்தில் ஒரு சரக்கு சேமிப்பறை அமைத்து, குஸ்தாஜி அதற்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். மெஹர் பாபாவின் பிறந்தநாளை ஒரு பொது விழாவாகக் கொண்டாடி, அனைவருக்கும்

பிரம்மாண்டமான விருந்து வழங்கப்பட்டது. வருகை தந்தவர்கள் இரண்டு நாட்களில் திரும்பிச் செல்ல, மண்டலி அவர்களின் வழக்கமான கடும் பணியில் கவனம் செலுத்தினர்.

பாபாவின் பிறந்தநாள் விழாவின்போது விருந்தினர்கள் தபால் அலுவலக வராந்தாவில், ஆண்கள் ஒரு புறமும், பெண்கள் மறுபுறமும் அமர்ந்திருந்த வேளையில், நாஜா வராந்தாவைக் கடந்து, புன்முறுவல் செய்துகொண்டே அங்குச் சென்று அமர்ந்தார். நாஜாவை கவனித்துக் கொண்டிருந்த பாபா, திடீரென சீற்றமடைந்து, நாஜாவை அழைத்து வேகமாக அறைந்து திட்டினார்: **“உனக்கு வெட்கமாக இல்லையா? அனைவர் முன்னிலையிலும் ஏன் இப்படிப் பைத்தியம் போல சிரிக்கிறாய்? ஆண்கள் முன்னால் பெண்கள் இப்படி சிரிப்பதை நான் விரும்புவதில்லை. வெளியே என்ன செய்தாலும் அது அவர்கள் சமாச்சாரம்; என் முன்னிலையில் அது ஆகாது.**”

அங்கு, சிரிப்பு ஆரவாரம் செய்துகொண்டிருந்த பெண்களில் ஒரு சிலர் நடந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இது இளம் பெண்மணியான நாஜாவுக்கு நியாயமற்ற, அவமானமூட்டும் தண்டனையாகத் தோன்றினாலும், இதன் மூலம் பாபா அந்தப் பெண்களுக்கு மறக்க முடியாத பாடத்தைப் புகட்டினார்.

மெஹர் பாபா, ஆசிரமத்தில் ஆண்கள், பெண்கள் இருவரையும் தனித்தனியாகத் தங்க வைத்திருந்தார். பாபா அவரது குடிலில் சில ஆண் மண்டலியுடன் இருந்தார். தினமும் அதிகாலை வேளையில் பாபா, பெண் மண்டலி வசிக்கும் பக்கம் சென்று, வராந்தாவில் கூடை நாற்காலி அருகில் அமர்ந்து ‘ப்ரூக் பாண்ட்’ தேநீர் அருந்துவது வழக்கம்; உள்ளே செல்வது மிகவும் அரிது. பெண் மண்டலி பாபாவைச் சூழ்ந்து அமர, அவர் ஓய்வெடுத்துக் கொண்டே, அவர்களுடன் பஜனை பாடுவதும், இல்லையேல் பெண்மணிகள் ஏதாவது நகைச்சுவையான கதைகளைக் கூறுவதும் வழக்கம். குல்மாயின் இரண்டு மகள்கள் பிரோஜா, டாலி இருவரும் அவ்வப்போது மெஹராபாத்திற்கு வருவதுண்டு. நாளடைவில், டாலி, பெண் மண்டலியுடன் இணைந்து வாழ்ந்தார்.

மெஹரா மற்றும் சத்குரு உபாஸனி மஹாராஜ் இருவருக்குமிடையே நடந்த ஒரு சுவாரஸ்யமான சம்பவம். மெஹரா, மெஹர் பாபாவின் ஆசிரமத்திற்கு வருவதற்கு முன்னர், அவர் மஹாராஜின் ஆசிரமத்தில் சிறிது காலம் வாழ்ந்து வந்தார். 1922ஆம் ஆண்டில் ஒரு நாள், ஒரு பிராமண பெண்மணி ஸக்கோரிக்கு வந்து, மஹாராஜுக்கு ஒரு தங்க மோதிரத்தைப் பரிசாக அளித்தார். அவருக்கு அது தேவை இல்லாததால், அப்பெண்மணியிடம், “நான் கோணிப்பைகளை உடையாக அணிகிறேன், துணிமணிகள், இந்த அசிங்கமான கிழவனின் உடலை அலங்கரிக்காதபோது, தங்க மோதிரம் எப்படி அழகுபடுத்தும்?” என்று கேட்டார். அப்பெண்மணி பிடிவாதமாக இருந்ததால் மஹாராஜ் அதைக் கால் விரலில் அணிய அனுமதித்தார்.

மஹாராஜ் மோதிரத்தை மெஹராவிடம் கொடுத்துக் கூறினார், “இந்த மோதிரத்தை நீ அணிந்துகொள், மேலும் தவறவிடாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்.” மெஹரா அந்த மோதிரத்தை வாழ்நாள் முழுவதும் அணிந்திருந்தார்.

ஒரு நாள், 1925ஆம் ஆண்டு, மெஹர் பாபா, குஸ்தாஜியுடன் பெண் மண்டலி இருக்கும் தபால் நிலைய கட்டிடத்திற்கு வந்தார். வழக்கமான இருக்கையில் அமர்ந்து கொண்டு, பெண்களில் எவரிடம் மோதிரம் இருந்தாலும், அதை குஸ்தாஜி மூலமாக பாபாவிடம் அனுப்பிவைக்குமாறு கூறி அனுப்பினார். குஸ்தாஜி, மெஹராவை அணுகி கேட்டபோது, மஹாராஜ் அளித்த அந்த மோதிரம் விரலிலிருந்து வெளிவரவில்லை. பெரிய கோர்ஷெத்தின் கையிலிருந்தது திருமண மோதிரமாகையால் குஸ்தாஜியிடம் தர மறுத்தார். மிகவும் சிரமப்பட்டு மெஹரா அந்த மோதிரத்தை விரலிலிருந்து கழற்றி குஸ்தாஜியிடம் கொடுத்தார்.

உடனே மெஹர் பாபா, மஹாராஜ் கொடுத்த மோதிரத்தைத் திரும்ப எடுத்துவந்து, அவரிடம் இருந்த இன்னுமொரு மோதிரத்துடன், (இதய வடிவிலான அந்த மோதிரத்தில் ‘மெஹர்’ எனப் பொறிக்கப்பட்டிருந்தது) மெஹராவின் இடது கைவிரலில் அணிவித்து ‘**இரண்டையும் விரலிலிருந்து அகற்றக்கூடாது**’ எனக் கூறினார்.

பரிசுத்தமான பெண்மணியின் விதி நிர்ணயிக்கப்பட்டது!
‘மெஹர்’ எனும் பெயர் அவர் இதயத்தில்
நிரந்தரமாகப் பொறிக்கப்பட்டது!
அவர் இதயம் இணையற்ற விதத்தில்
ஆனந்தக்கண்ணீர் வடித்தது!

மெஹரா, மெஹர் பாபாவின் முக்கிய பெண் சீடராக அமைவது இறைவனின் தீர்ப்பு. தபால் அலுவலக கட்டிடத்தில், ஒரு நாள் மெஹர் பாபா ராதா-கிருஷ்ணனின் கதையை எடுத்துரைத்து இவ்வாறு கூறினார், “**கிருஷ்ணா, ராதாவிடம் கொண்டிருந்த அதே அன்பை நானும் உங்கள் மீது வைத்துள்ளேன். ராதா, கிருஷ்ணனை நேசித்ததுபோல நீங்களும் என்னை நேசிப்பீர்களாக.**” ஒரு சில நாட்களுக்குப் பின்னர், அனைத்து மண்டலியின் முன்னிலையில் பாபா இவ்வாறு தெரிவித்தார், “**மெஹரா என்னுடைய ராதா. அவருடைய அன்பு தனித்துவமானது. அவர் எனக்கு மிகவும் பிரத்தியேகமானவர்.**”

காலங்கள் கடந்தன, பாபா பலமுறை மெஹராவைப் பற்றி ‘**பிரபஞ்சத்தில் அதி பரிசுத்தமான ஆத்மா**’ எனக் கூறி, **அவரை முதன்மையாக நேசிப்பவர்** என்று குறிப்பிட்டார். பாபா கூறியதற்கிணங்க, ‘அவருடைய வட்டத்தில் மெஹராவின் சிறப்பான, தனிப்பட்ட இடம், ராமிற்கு சீதா, கிருஷ்ணனுக்கு ராதா அல்லது ஜீஸஸுக்கு மேரி மெக்டலின் இருந்தது போல் என்பது தெளிவாக்கப்பட்டது.’

பெண் மண்டலியின் பாதுகாப்பு மற்றும் தனியுரிமையைக் கருத்தில் கொண்டு, தபால் அலுவலக கட்டிடத்தைச் சுற்றி, நான்கு பக்கமும் மூங்கில் திரையால் மறைத்தது அவர்களுக்கு எல்லையாகவும் அமைந்தது. மெஹர் பாபா, குஸ்தாஜி இருவரையும் தவிர, வேறு எவரும் அங்கு அனுமதிக்கப்படவில்லை.

இக்காலகட்டத்தில், மெஹர் பாபா பொதுமக்களின் பார்வையிலிருந்து விலகி, தனியாக இருந்து, நீர் அல்லது பாலின்றி தேநீர் மட்டும் பருகிவந்தார். அவ்வேளையில், அரன்காவ்மிலிருந்து வந்த சிறுவர்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்தது. ஓரறை பள்ளிக்கூடம் ஒன்றும் துவங்கப்பட்டது. மாணவர்கள் தங்கி, படிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

மெஹர் பாபாவின் மூத்த சகோதரர் ஜாம்ஷெட் உடல்நலமில்லாமல் இருந்ததால், டவ்லா பூனாவுக்குச் செல்லவேண்டிய கட்டாயம். அவர் அனைத்து சமையல் பொறுப்பையும் ஏற்று நடத்தியதால், பாபா இதர பெண் மண்டலியிடம், **“நீங்கள், நூறுக்கும் அதிகமான நபர்களுக்கு உணவு தயார் செய்வதாக இருந்தால் மட்டுமே இங்கே இருக்கவேண்டும். இல்லையேல் நீங்களும் இங்கிருந்து சென்றுவிடலாம்”** என்று கூறினார். நாஜா, தவுலத்மாய் இருவருக்கும் சமையல் செய்து பழக்கம், ஆகையால் மெஹராவும், சிறிய கோர்ஷெத் இருவரும் நாஜாவுக்கு உதவுவதாகக் கூறி உற்சாகமளித்து, இறுதியில் நாஜா சமையல் பொறுப்பை ஏற்றுக்கொண்டது பாபாவிற்கு மகிழ்ச்சியை அளித்தது.

அரன்காவ்மிலிருந்து வந்து மெஹராபாத்தில் வாழும் குழந்தைகள் ஒரு சிலரேயானாலும் ஆண் மண்டலியின் எண்ணிக்கை படிப்படியாக வளர்ந்து வந்தது. அனைவருக்கும் உணவு தயார் செய்ய பெரிய பாத்திரங்கள் தேவைப்பட்டன. அதேவேளையில் பாபா உணவு வீணாவதைப் பெரிதும் கண்டித்து, அதற்கு நாஜாவைக் காரணம் காட்டிக் குற்றம் சாட்டினார்.

இந்தக் காலகட்டத்தில், ஓர் இளம் மராட்டிய பெண்மணி ‘வாலு பவார்’, மெஹர் பாபாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். பாபாவை சந்தித்த அந்த கணமே, அவருடைய கண்காணிப்பில் ஆன்மீகப் பாதையில் பயணம் செய்ய தீர்மானம் செய்து, அப்பெண்மணி அனைத்து சொத்து சுகங்களையும் பாபாவின் பாதங்களில் அர்ப்பணம் செய்தார். வாலு அரன்காவ்ம் கிராமத்தில் வாழ்ந்து வந்தாலும் தினமும் மெஹராபாத்திற்கு வந்து பெண் மண்டலியுடன் இருக்க அனுமதிக்கப்பட்டார். அவர் தேவையான ரொட்டி, பாக்ரியைத் தயார் செய்வதோடு, பாபாவின் தனிப்பட்ட தேவைகளை கவனிப்பதில் மெஹராவுக்கு உதவினார்.

மேலும் ஒரு வயதான, மரியாதைக்குரிய பெரியவர் ‘காக்கா ஷஹானே’ என்பவர் மெஹர் பாபாவின் நெருக்கமான தொடர்பில் வந்து, இறுதியில் மெஹராபாத்தில் வாழ அனுமதிக்கப்பட்டார். அவருடைய ஒரே மகன் மோகன் நாள்பட்ட நோயால், பல மருத்துவ சிகிச்சைகள் செய்தும் குணமாகாமல்

அவதிப்பட்டது, மெஹராபாத்தில் வந்து வாழத்தொடங்கிய நாளிலிருந்து படிப்படியாகக் குறைந்து, இறுதியில் முற்றிலும் குணமடைந்துவிட்டார்.

1925ஆம் ஆண்டு, மெஹராபாத்தில் இரண்டு சிறிய அளவிலான கோவில்கள், மூங்கில் பாய்களால் அமைக்கப்பட்டன. ஒன்று தாழ்த்தப்பட்ட சமுதாயம் எனக் கருதப்பட்ட ஹரிஜன மக்களுக்கும், மற்றொன்று உயர் ஜாதி பிராமணர்களுக்கும் என்று தனித்தனியாக இருந்தன. விஷ்வநாத் எனும் உயர் ஜாதியைச் சார்ந்தவர் அர்ச்சகராக நியமிக்கப்பட்டார். கோயில்களில் இந்து தெய்வங்களின் (கணேஷ், தத்தாத்ரேயா, ஹனுமான்) மற்றும் சத்குருக்களின் (பாபாஜான், சாய் பாபா, உபாஸனி மஹாராஜ், மெஹர் பாபா) புகைப்படங்கள் சுவற்றை அலங்கரித்தன. அரன்காவ்ம் சிறுவர்கள் ஹரிஜன் கோயிலில் வழிபட்டு வந்தனர். இந்து விசேஷ நாட்களில் இரண்டு கோயில்களையும் அலங்கரித்து, கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

1925 மார்ச் 21ஆம் நாள் பார்சி புதுவருட தினத்தை சிறப்பாகக் கொண்டாடி, முக்கியமாக '**மெஹர் அறநிலைய மருத்துவமனை**' ஒன்று தர்மசாலையில் நிறுவப்பட்டது.

மெஹர் பாபாவின் விருப்பத்திற்கிணங்க, குல்மாயின் மகன் ருஸ்தம் மற்றும் கணவர் கான்ஸாஹேப் கைகளால் மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது. எம்மதத்தைச் சார்ந்தவர்களும், ஜாதி, மத பாகுபாடின்றி இலவசமாகச் சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு, உண்ண உணவும், உடையும் இலவசமாக வழங்கப்பட்டது.

மெஹர் பாபா மருத்துவமனைக்கு டாக்டர் தேவை என 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' பத்திரிகையில் விளம்பரம் செய்து, டாக்டர் 'ஒய்.ஜி.கர்கால்' தலைமை மருத்துவராக நியமிக்கப்பட்டார். அவர் குடும்பத்துடன் மெஹராபாத்தில் தங்கியிருந்து தனது பணியைத் தொடங்கினார். சில மண்டலியை உதவியாளர்களாக நியமித்து, மருத்துவமனையை மிகவும் தூய்மையாகப் பராமரித்து, சிறப்பாக நடத்தினர். பாதிரி மருந்துகளை கவனிக்கவும், பெண்டு மேற்பார்வையாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

அந்நாளிலிருந்து மெஹர் பாபாவின் செயல்பாடுகளில் ஒரு புதிய சகாப்தம் உதயமானது. ஆரம்பத்தில் தினமும் ஏறக்குறைய 40 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு, அது விரைவில் 125ஆக உயர்ந்தது. மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை ஐந்திலிருந்து இருபதை எட்டியது. ஒன்றரை வருடங்களில், குறையாமல் 7500 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். வெளியளவில் தோன்றும் இறுதி நிலை நோய்களை வியக்கத்தக்க வகையில் குணப்படுத்தி, சிறிய சிறிய அறுவை சிகிச்சைகளும் மெஹராபாத்தில் செய்யப்பட்டன. கண் சிகிச்சைக்காக ஒரு தனி இடம் அமைத்து, பார்வை இழந்தவர்களுக்குச் சிகிச்சையளித்து இழந்த பார்வையை

மீட்கவும் செய்தனர். அனைத்து செயல்பாடுகளும் வியப்பூட்டுமளவுக்குச் சிறப்பாக நடத்தப்பட்டன.

ஆரம்பத்தில் அமைதியாகத் தோற்றமளித்த மெஹராபாத் விரைவில் பெரிய மாற்றத்தைக் கண்டது. அரன்காவ்ம் சிறுவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்து, 1925 மார்ச் 25ஆம் நாள் ‘ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடம்’ திறக்கப்பட்டு 7ஆவது வகுப்பு வரை ஆரம்பமானது. அர்ஜுன் இயக்குநராகவும், விஷ்ணு ஹரிஜன் மாணவர்களுக்கு ஆசிரியராகவும், மேலும் பல ஆசிரியர்களும் பதவி ஏற்றனர். உணவு, சுகாதாரம் இரண்டும் அர்ஜுன், விஷ்ணு பொறுப்பில் விடப்பட்டது. தொடக்கத்தில் பள்ளிக்கூடம் மூங்கில் பாய்களால் மறைத்துக் கட்டப்பட்டது; நாளடைவில் தகரத்தால் விரிவாக்கப்பட்டு உயர்நிலை பள்ளிப்படிப்பு வரை நிறுவப்பட்டது. இறுதியாக, அங்கே 200 மாணவர்கள் கல்வி பயின்றனர்; சிறுமிகளுக்குத் தங்குவதற்காகத் தனி இடமும் ஒதுக்கப்பட்டது.

ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடத்தில் மாணவர்களுக்கு உயர்தரமான கல்வியை வழங்குவதோடு நல்ல உணவு, உடை மற்றும் உடற்பயிற்சியும் அளித்து, அனைவரையும் மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்தனர். புத்தகங்கள், மற்றும் எழுதுவதற்குத் தேவையான நோட்டு புத்தகங்களும் இலவசமாக வழங்கப்பட்டன.

அக்காலகட்டத்தில் மக்களிடையே மிகுந்த பாரபட்சம் நிலவியதால், ஹரிஜன மாணவர்களுக்கென தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டன - தனியறைகளில் பாடம் கற்பித்து, உணவும் தனியாக வழங்கப்பட்டது. இவ்விதமான சமூக சூழ்நிலைகள் மற்றும் அழுத்தங்கள், ஹரிஜன மாணவர்களை ஒதுக்கி வைக்கக் காரணமாக இருந்ததை மெஹர் பாபா ஒப்புக் கொள்ளாமல் இருந்தாலும், அக்காலகட்டத்தில் அதற்கு இடம் கொடுத்தார். இவ்வித ஜாதிப்பிரிவினையை மாணவர்கள் நன்கு அறிந்து, உணர்ந்திருந்ததால் கடுமையான சமூக சூழ்நிலையின் அடிப்படையில், உணவுக்காக வெவ்வேறு வரிசையில் நின்றனர்: உயர் ஜாதி பிராமணர்கள் வரிசையில் முதலாவதாகவும், ஹரிஜன மாணவர்கள் கடைசியிலும் நிற்க வேண்டிய சூழ்நிலை. ஹரிஜன மாணவர்களிடையே கூட சமூகத்தில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் எனும் பல்வேறு பாகுபாடுகள். உதாரணமாக, துணி தைப்பவன் பையன், கசாப்பு கடைக்காரனின் மகனை விட, உயர் மட்டத்தில் உள்ளவன் என்ற எண்ணத்தில் அவ்வாறே நடந்து கொள்வது வழக்கமாக இருந்தது. ஆனால் படிப்படியாக, பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளிடையே சமத்துவம் பற்றிய விழிப்புணர்வைக் கொண்டுவந்து, மெஹர் பாபா அனைவரையும் ஒருங்கிணைத்தார்.

மெஹராபாத்தில் அனைத்து விளையாட்டுகளுக்கும் தேவையான வசதிகள் செய்யப்பட்டன. மேலும் பாபா கால்பந்து, கிரிக்கெட் விளையாட்டுகளில் பங்கெடுத்தார். விளையாட்டு, படிப்பு இவற்றில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு, பரிசும், பதக்கங்களும் வழங்கப்பட்டன.

மெஹர் பாபா பள்ளிக்கூடம், மருத்துவமனை, மருந்தகம் அனைத்தையும் நடத்தும் முறைகளைக் கண்காணித்து வந்தார். மேலும் உயர்தர

நிலையைப் பேணி காப்பதில் பாபாவின் கண்டிப்பான முறை மண்டலிக்குச் சிரமமாக இருந்தது. விஷ்ணுவிடம், அவ்வப்போது ஏதாவது குறைகளைக் கண்டுபிடித்து, மாணவர்கள் முன்னிலையில் கண்டித்தார். பெண்டுவும் அதற்கு விதிவிலக்கல்ல.

ஒவ்வொரு நாள் காலையிலும் மண்டலி, சிறுவர்களை ஒழுங்காக நீராட்டி, அவர்களுக்கு சுத்தமான உடைகளை அணிவித்துள்ளார்களா என்பதை பாபா மேற்பார்வை செய்வது வழக்கம். அவர்களில் ஹரிஜன மக்கள் மிகவும் ஏழ்மையானவர்கள். சமூக சூழ்நிலைகள் மற்றும் பழக்கவழக்கத்தால் அவர்கள் தூய்மையின்றி காணப்பட்டதால், அவர்களிடையே சுகாதாரத்தை வலியுறுத்தி, சோப்பால் சுத்தம் செய்து, நல்ல உடைகளை அணிவித்து, உணவுக்கு முன்பு கைகளைக் கழுவுவதைக் கண்காணித்து வந்தார். வாரத்தில் இரண்டு முறை ஒவ்வொரு மாணவனையும் நீராட்டி, தினமும் அவர்களின் ஆடைகளைத் துவைப்பதையும் மெஹர் பாபா வழக்கமாகக் கொண்டார். ஹரிஜன சிறுவர்கள் தலைமுடியை வெட்டி சீர்திருத்துவது அபூர்வம் என்பதால், அந்தப் பணியை குஸ்தாஜி, பெஹராம்ஜி இருவரும் செய்து வந்தனர்.

மெஹர் பாபா சிறுவர்களை நீராட்டும் வேளையில், அன்னியர் எவரேனும் தரிசனத்திற்காக வந்தால், முதலில் அவர்களை நீராட்டுவதில் கை கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்வது வழக்கம். சிலர் உடனடியாக மனமார முன் வந்து உதவினர், அதே வேளை சிலர், ஹரிஜன சிறுவர்களைத் தீண்டவே தயங்கினர். பாபா அப்போது இவ்வாறு குறிப்பிட்டார்: “**நீங்கள் கடவுளை தரிசிக்க வந்திருந்தால், இந்த ஹரிஜன சிறுவர்களே எனக்குக் கடவுள். நீங்கள் அவர்களுக்கு சேவை புரிவதானால், நான் உங்களை மெஹராபாத்திற்கு வரவேற்கிறேன், இல்லையேல் உங்களுடைய தேவதைகளை உங்கள் வீட்டில் அல்லது கோயிலில் வழிபடுங்கள். இங்கே நீங்கள் காண முடிகிற ஒரே கடவுள் இக்குழந்தைகளே!**”

மெஹர் பாபாவின் வார்த்தைகளில் புதைந்திருக்கும் மதிநுட்பத்தை நினைத்து வியப்படைந்து, தரிசனத்திற்காக வந்தவர்கள் மனதார உள்ளளவில் கைகொடுத்து உதவ விரும்பினாலும், சமுதாயத்திற்குப் பயந்து முன்வர தயங்கினார்கள். புறப்படுவதற்கு முன்பு, மீண்டும் பாபாவின் தரிசனத்திற்காக வேண்டும் வேளையில் பாபா மறுபடியும் இவ்வாறு விளக்கினார்: “**என்னைக் கடவுளாக நினைத்து என்னுடைய தரிசனத்திற்காக நீங்கள் வந்துள்ளீர்கள். ஆனால் நான் யாருக்கு சேவை செய்கிறேனோ, அவர்களுக்கு சேவை செய்ய உங்களால் இயலவில்லை. அப்படியானால் தரிசனத்திற்காக வேண்டுவதில் ஏன் இந்தப் பாசாங்குத்தனம்? உங்களுடைய கடவுள் யாராக இருந்தாலும் அவரிடம் செல்லுங்கள்! மறுபடியும் உங்களுக்கு நான் சொல்கிறேன், இங்கே இருக்கும் ஒரே கடவுள் நான் வணங்கும் இக்குழந்தைகளே!**”

தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காக, வெளியளவில் மெஹர் பாபா செய்த பணியை, பெரிய தொண்டு நிறுவனங்களின் பணியோடு ஒப்பிடமுடியாது. ஆனால், ஆன்மீகக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது,

இந்திய சமுதாயத்தில், படிப்படியாக, அவர்களும் சமநிலைக்குக் கொண்டு வரப்பட்டதை நாம் கண்கூடாகக் காண முடிந்தது. மெஹர் பாபாவின் பணி சமூக நிறுவனங்களின் பணியிலிருந்து முற்றிலும் மாறுபட்டது - ஆன்மீகம், பொருளுதவி இரண்டையும் ஒருபோதும் ஒப்பிட முடியாது. இந்திய தேசத்தில், அக்காலகட்டத்தில், தாழ்த்தப்பட்டவர்களின் அவல நிலை மிகவும் பரிதாபகரமாக இருந்தது; அதை சீர்படுத்துவது என்பது, உலகின் சாதாரண மனிதனின் செயல்பாட்டு வரம்பிற்கும் அப்பாற்பட்டது; இதில் கடவுளின் நேரடிப்பங்கு மிகவும் இன்றியமையாதது.

மெஹராபாத்தில் பலவிதமான பஜனை, கஸல், இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும், பாபா, அவ்வப்போது சாஞ்சி, நவல் இவர்களை மும்பைக்கு அனுப்பி, ஊமை திரைப்படங்களைக் கொண்டுவந்து, தபால் அலுவலக கட்டிடத்தில் திரையிடுவது வழக்கம். கிராமத்து மக்களில் பலர் இதில் பங்கெடுத்தனர். இதன் மூலம் அவர்கள் முதன்முறையாக, திரைப்படங்களுக்கு அறிமுகமானார்கள். இவ்வண்ணம் சினிமா, பொழுதுபோக்கிற்கு ஒரு நவீன வழியாக அமைந்தது மட்டுமல்லாமல், பாமர கிராமத்து மக்கள் மெஹர் பாபாவின் சகவாசத்தையும் பெற வாய்ப்பாக இருந்தது.

மெஹராபாத்தில் அனைத்து மதப் பண்டிகைகளும் கொண்டாடப்பட்டன. 1925, ஏப்ரல் 2ஆம் நாள் **பகவான் ராமின்** பிறந்தநாள் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. அடுத்த நாள், அருகாமையிலிருந்து வந்த ஏறக்குறைய 5000 மக்கள் சிறப்பு விருந்தில் பங்கெடுத்தனர். மதிய வேளையில் நடந்த குஸ்தி சண்டைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. 'ஸந்த் துக்காராம்' என்ற சத்குருவின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஓர் ஊமை படத்தையும் இரவில் கண்டுகளித்தனர்.

இவ்வாறு, பல வழிகளில் வாழ்வின் பல்வேறு துறைகளைச் சார்ந்த மக்களை மெஹர் பாபா தன்வசம் ஈர்த்து, அவரது தெய்வீக ஒளிக்கதிர்களின் கருணை மழையைப் பொழிந்தார்.

மெஹராபாத்தில் முதன்முதலாக மருத்துவமனை ஒன்றை திறந்தபோது, மெஹர் பாபா ஒரு சில குறிப்பிட்ட மருந்துகளை நோயாளிகளுக்குப் பரிந்துரைத்ததன் காரணம் என்ன என்பதை, டாக்டர் கர்கலால் புரிந்து கொள்ள முடியவில்லை. பல சூழ்நிலைகளில், மெஹர் பாபா பரிந்துரைத்த மருந்துகள் மருத்துவ ரீதியில் மிகவும் பொருத்தமற்றதாக இருந்ததால், ஆரம்பத்தில் டாக்டர் கர்கல் கோபத்தில் ஆத்திரமடைந்து 'இங்கு மெஹர் பாபா மருத்துவரா இல்லை நானா?' என்று ஆச்சரியப்பட்டார். ஆனால், உண்மையில் மெஹர் பாபா பரிந்துரைத்த மருந்துக்களால் நோயாளிகள் நெருக்கடியான உடல் நிலையிலிருந்தும் நன்கு குணமடைந்ததைக் கண்டு, டாக்டர் வியந்து போனார். டாக்டர் கர்கல், நாளடைவில், சந்தேகங்களுக்கு இடமில்லாமல் 'இந்தச் சிக்கலான நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றியது மெஹர் பாபாவின் கருணையே' என்பதைத் திடமாக நம்பினார். அதற்குப் பிறகு,

தீவிரமான வியாதிகளுக்கு மெஹர் பாபாவின் ஆலோசனைகளைக் கேட்ட பின்னரே மருந்துகள் வழங்கப்பட்டன. இத்தகைய நோய்களிலிருந்து நோயாளிகள் பூரணமாக குணமடைந்ததும், அந்த நாளை உற்சாகமாக வரவேற்று, பாபா, ஆசிகளை வழங்கியதோடு, டாக்டர் கர்கல், பாதிரி, பெண்டு மூவரையும் பாராட்டினார்.

1925, ஏப்ரல் 14ஆம் நாள் பாபா, மாணவர்களின் சீருடைக்காக, காக்கி துணி வாங்கி வர மும்பைக்குச் சென்றார். திரும்பி வந்ததும் முதன்முதலாக மருத்துவமனைக்குச் சென்று ஒவ்வொரு நோயாளி, மற்றும் தொழிலாளியையும் சந்தித்துப் பேசினார். அனைத்தையும் கவனமாகப் பார்வையிட்ட பின்பு, பள்ளிக்கூடம் சென்று மாணவர்களின் உடல்நிலை, உணவு, படிப்பைப் பற்றி விசாரித்த பின்னரே மண்டலியை சந்தித்தார். இப்படி, பாபா மெஹராபாத்தில் நடந்த ஒவ்வொரு குறிப்பிட்ட நிகழ்வுகளிலும் கவனத்தைச் செலுத்தினார். எந்தவொரு தொழிலாளியின் சோம்பேறித்தனத்தையும் அல்லது அலட்சியத்தையையும் அவர் பொறுத்துக் கொண்டதில்லை.

உள்ளூர் தையல் காரர், வாமன் தாணி என்பவரை மாணவர்களின் சீருடையைத் தைப்பதற்காகக் கூலிக்கு நியமித்து, பாபாவின் முன்னிலையில் துணியை வெட்டுமாறு கூறி, ஒழுங்காகச் செய்கிறாரா என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டார்.

மெஹர் பாபா, அவசரமாக மும்பைக்குச் சென்று திரும்பி வந்ததால் முன்ஷி ரஹீமை சந்திக்க முடியவில்லை. இதைக் கேள்விப்பட்ட முன்ஷி அமைதியிழந்து உண்ணுவதை நிறுத்திவிட்டார். ஐந்து நாட்களுக்குப் பின்னர் இந்தச் செய்தி பாபாவின் காதுகளை எட்டியதும், பாபா உடனடியாக மும்பைக்கு விரைந்தார். புறப்படும் முன்பு '**மும்பையிலிருந்து ஏதேனும் சிறப்புப் பொருள் வாங்கிவர வேண்டுமா?**' என்பதையும் கேட்டுக் கொண்டார். சீடர்கள் மீது அவர் வைத்திருந்த இத்தகைய எளிய இரக்க செயல்கள் ஆண், பெண் மண்டலியின் ஆழ் இதயங்களைத் தொட்டு, அனைவரையும் எந்த சூழ்நிலையிலும் பாபாவின் பாதங்களைப் பற்றியிருக்க உறுதுணையாக இருந்தன.

பாபா மும்பையில் முன்ஷியை சந்தித்து உணவு உண்ணுமாறு வற்புறுத்தினார். மெஹராபாத்திற்குத் திரும்பி வந்ததும், ஒரு மாணவன் உடல்நலமில்லாமல் இருப்பதை அறிந்து உடனே மருத்துவமனைக்கு விரைந்தார். மாணவனை சந்தித்து, பள்ளிக்கூடம் சென்று அங்குள்ள அனைத்தையும் பார்வையிட்ட பின்பு, விஷ்ணு, பாபாவிடம் மும்பையிலிருந்து வாங்கிவரக் கூறியிருந்த 'ஸமோஸா'வை பாபா அனைவருக்கும் பகிர்ந்தளித்தார். விஷ்ணுவின் முகமலர்ந்த புன்னகை அவருடைய நன்றியுணர்வின் சான்றாக அமைந்தது.

பல நாட்களாக ஆண் மண்டலி தமக்குள்ளே அர்ஜுன் ஸுப்பேக்கரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். பாபா, பிற அனைவரையும் விட அர்ஜுனை

அதிகமாக நேசிக்கிறார் என்ற தீர்வுக்கு வந்தனர். மெஹர் பாபா உண்ட பின்னர் இருக்கும் மீத உணவை அர்ஜுனுக்குத் தருவதை அனைவரும் அறிவர், மேலும், அவருடன் ஒரு தனிச்சிறப்புமிக்க உறவு இருப்பதாகக் கருதினர். இருப்பினும், பாபா அவ்வாறு எதுவும் அர்ஜுனைப் பற்றிக் கூறியதில்லை.

அதற்குப் பிறகு, பாபாவின் உள்ளத்தில் அர்ஜுனுக்கு எம்மாதிரியான இடம் உள்ளது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் ஒரு சூழ்நிலை உருவானது. ஒரு நாள், அர்ஜுன் பள்ளிக்கூடத்தில் மேற்பார்வை செய்து கொண்டிருந்த வேளையில், பாபா திடீரென விஷ்ணுவின் பக்கம் திரும்பி, 'கீழே இருந்த கழியால் அவரது கையில் அறையுமாறு' உத்தரவிட்டு, கையை நீட்டினார். அதிர்ச்சியடைந்த விஷ்ணு, "என்னை நீங்கள் இவ்வாறு செய்யக் கட்டளையிட்டால் நான் உயிரை விட்டுவிடுவேன்" என பதிலளித்தார்.

பாபா அதையே ருஸ்தத்திடம் கூற, அவரும், "உங்களை நான் இப்படி அறைவதை விட, மெஹராபாத்தை விட்டு விலகிச் செல்வதே மேல்" என்றார்.

அந்த வேளையில் சற்று தூரத்தில் தனது பணியில் மும்முரமாக இருந்த அர்ஜுனை அழைத்து, பாபா, மிகவும் தீவிரமான குரலில், அவர் கையில் அறையுமாறு கூறினார். அர்ஜுன் உடனடியாக, எதையும் சிந்திக்காமல், அங்கிருந்த கழியை எடுத்து பாபாவின் கையில் அறைந்தார்!

அப்போது பாபா, "**இதுதான் நேசம்; யார் எனது வார்த்தைகளை மதிக்கிறார்களோ, அவர்களே என்னை மிகவும் நேசிக்கிறார்கள்**." ருஸ்தம், விஷ்ணு இருவரையும் சுட்டிக்காட்டி, மேலும், "**நீங்கள், உங்கள் உணர்வுகளையும், தனிப்பட்ட கற்பனைகளையும் என்னுடைய வார்த்தைகளை மதிப்பதற்கும் மேலாக நேசிக்கிறீர்கள். அதனால்தான் நான் அர்ஜுனை அதிகமாக நேசிக்கிறேன். அவனும், என்னுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் முக்கியத்துவத்தை, சமீப காலத்தில்தான் புரிந்து கொண்டான்**" என்று விளக்கமளித்தார்.

மெஹர் பாபாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அரன்காவ்ம் கிராமத்தில் வாழ்ந்துவந்த சிது காம்ப்ளே, பாபா கூறியது போல் ஒரு வருட காலம் மும்பையில் பணிபுரிந்த பிறகு, மெஹராபாத்திற்குத் திரும்பி வந்தார். வந்ததும் பாபா அவரிடம் '**இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்**' என்று கேட்டதற்கு சிது, "நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதை நான் செய்வேன்" என்று பதிலளித்தார்.

பாபா இவ்வாறு கூறினார், "**நீங்கள் இங்கே எனக்கு உதவியாக இருக்க முடியும். ஆனால், நீங்கள் என்னிடம் எந்த விதமான கேள்விகளோ, உழைப்பிற்கான ஊதியமோ கேட்கக்கூடாது. உங்களது பராமரிப்பை என் விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டும். ஆனால், நீங்கள் என்னிடம் பணிபுரிவதை ஏற்றுக்கொண்ட பின்னர், உங்களுக்கு அளிக்கப்படும் பணியைச் செய்ய வேண்டும்**." இந்த நிபந்தனைகளை சிது முழுமையாக ஏற்றுக் கொண்டதும், பாபா, "**நீங்கள் ஒரு துப்புரவாளராகப் பணிபுரிந்து கழிவறைகளை சுத்தம் செய்வீர்களா?**" என்று கேட்டார். சிது பதிலளிக்கத்

தயங்கியபோது பாபா அவரிடம், "**கவலைப்படாதீர்கள்! நீங்கள் இது போன்ற பணியைச் செய்யவில்லையென்றால் நான் அதைச் செய்வேன்**" எனக் கூறினார்.

பாபா, அப்போது மருத்துவமனையை நோக்கி நடந்து செல்ல, சிது பின்தொடர்ந்தார். உள்ளே நுழைந்தபோது, நோயாளி ஒருவரின் அழுக்கடைந்த படுக்கையைக் கண்டதும், பாபா அதை சுத்தம் செய்யத் தொடங்கினார். பாபா, சிதுவின் பக்கம் திரும்பி, "**கவலைப்படாதீர்கள்! ஏதேனும் நோயாளி, அவர் படுக்கையை அசுத்தம் செய்தால், நான் அதை சுத்தம் செய்வேன். நீங்கள் கவலைப்படத் தேவையில்லை**" என்று கூறினார்.

சிது வெட்கத்தில், இதுபோன்ற வேலையை மெஹர் பாபா செய்யும்போது, தானும் அதைச் செய்யலாம் என்பதை உணர்ந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு பாபா, சிதுவை மண்டலியில் ஒரு நிரந்தர உறுப்பினராக இணைத்து, நோயாளிகளின் துணிகளை சலவை செய்து, மருத்துவமனையை மாசற்றதாக வைக்கும் பொறுப்பை அவருக்கு வழங்கினார்.

19 வயதான ஓர் இளைஞன், பெயர் 'சீதாராம் தேஷ்முக்' அஹமதுநகரின் புறநகர் பகுதியான 'பின்கர்' என்ற இடத்தில் வாழ்ந்து வந்தார். '**சகன்**' என்று பின்பு பாபாவால் அன்பாக அழைக்கப்பட்ட அவர், ஒரு பிராமண குடும்பத்தைச் சார்ந்தவர்; ஸக்கோரிக்கு அடிக்கடி விஜயம் செய்து, சத்குரு உபாஸனி மஹாராஜின் தொடர்பில் வந்தார். ஒரு முறை ஸக்கோரிக்கு வந்தபோது, மஹாராஜின் பிரதான சீடர் ஒரு பிராமணர் அல்ல பார்சி என்பதையும், அவர் அஹமதுநகருக்கு அருகிலமைந்த அரன்காவ்ம் கிராமத்தில் வாழ்ந்து வருவதையும் கேள்விப்பட்டார்! இதைக் கேட்ட சகன் அதிர்ச்சியடைந்தார், ஏனெனில் அவர் ஒரு மரபார்ந்த வைதீக பிராமணர் - வேதாந்தத்தில் மிகவும் அக்கறையுள்ளவர். ஆனால் இந்தப் பார்சி குருவை சந்திப்பதில் சிறிது காலம் தயக்கம் காட்டினார்.

அவ்வேளையில் திடீரென, சகன் குடும்பத்தை துரதிர்ஷ்டம் தாக்கியது; உலக சூழ்நிலைகள் அவரை மெஹர் பாபாவை சந்திக்கத் தூண்டின. ஒரு குதிரை வண்டியில் மெஹராபாத்திற்குப் புறப்பட்டார்; மெஹர் பாபாவின் அன்பான வரவேற்பு ஆறுதலளித்தது. பாபா '**அவருக்கு என்ன வேண்டும்**' என்று கேட்க, சகன், குடும்பத்தில் சொத்து சுகங்கள் அனைத்தையும் இழந்த சோகக் கதையை எடுத்துரைத்தார்: "என் குடும்பத்தின் நிதி நிலைமை மிகவும் சீர்குலைந்து விட்டது. அது பழையபடித் திரும்ப வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்."

மெஹர் பாபா உறுதியளித்தார், "**அனைத்தும், எனக்குத் தெரியும், படிப்படியாக பழைய நிலைமை திரும்பும்**."

அதற்குப் பிறகு, சகனின் தந்தையாரும் மெஹராபாத்திற்கு வரத் தொடங்கினார். ஒரு நாள் பாபா, சகனிடம், "**எனது பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணிபுரிவீர்களா?**" என்று கேட்டார்.

“நான் உங்களுக்கு சேவை புரிய விரும்புகிறேன், நீங்கள் எந்தப் பணியைக் கொடுத்தாலும் செய்யத் தயாராக இருக்கிறேன்” என்றார் சகன்.

அப்போது பாபா, அவரை மெஹராபாத்தில் வாழ அனுமதித்தார்; தந்தையின் அனுமதியோடு சகன் மெஹராபாத்திற்கு வந்தார். ஆனால் இந்த ஆச்சாரமான பிராமணரால், வெண்ணெயில் தயார் செய்யப்பட்ட உணவு வகைகளை உண்ட பழக்கம், மெஹராபாத்தில் அளிக்கப்பட்ட எளிய பருப்பு சாதத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பாபாவின் அனுமதி பெற்று ஓரிரு நாட்களில் வீட்டிற்குத் திரும்பிச் சென்றார். இந்த நேரத்தில், பாபா, சகனிடம் தந்தையாரை வரச்சொல்லிக் கூறியனுப்பினார். தந்தையார் மெஹராபாத்திற்கு வந்தபோது, பாபா சில ஆன்மீக விஷயங்களை அவரிடம் எடுத்துக் கூறினார்.

சகனின் தந்தையார் வீட்டிற்குத் திரும்பி வந்ததும், மெஹர் பாபாவிடம் மறுபடியும் திரும்பிச் செல்லுமாறு கண்டிப்பாகக் கூறிவிட்டார்! அதற்கு சகன், “நான் போக மாட்டேன்! அங்குள்ள உணவை நான் உண்ண முடியாது!” என்று கூறினார்.

தந்தையார் மன்றாடி, “உன்னை அங்கு அனுப்பி வைப்பேன் என்று வாக்குறுதி அளித்துள்ளேன். நீ போயாக வேண்டும்” எனக் கேட்டுக் கொண்டதும், வேறு வழியின்றி தயக்கத்துடன் சகன் மெஹராபாத்திற்கு வந்து, ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடத்தில் அர்ஜுன், விஷ்ணு இருவருக்கும் உதவியாக இருந்தார்.

சகனின் தந்தையார் பின்னர் ஒரு நாள், உபாஸனி மஹாராஜை பார்க்கச் சென்றபோது, மஹாராஜ் அவருடைய மகனைப் பற்றி விசாரித்தார். சகன் மெஹர் பாபாவுடன் அரன்காவ்மில் தங்கியிருப்பதை விளக்கினார்.

இதைக் கேட்டதும், மஹாராஜ் உரத்த குரலில், “நீங்கள் என்ன அநியாயம் செய்தீர்கள்? நீங்களோ ஒரு பிராமணர்; உங்கள் பையனை, பறையர்கள் சேர்ந்து, உண்டு வாழும் ஓர் ஈரானியிடம் அனுப்பியுள்ளீர்கள்! அங்கே சென்று அவனை உடனே இங்கு அழைத்து வாருங்கள்! நீங்கள் என்ன செய்துள்ளீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது! நீங்கள், உங்கள் மதத்தின் புனித தன்மையைத் தொலைத்து விட்டீர்கள்!” என்றார்.

சகனின் தந்தையார் அதிர்ச்சியடைந்து, மெஹராபாத்திற்குச் சென்று, மெஹர் பாபாவிடம், மஹாராஜ் அறிவித்ததை பணிவுடன் எடுத்துக்கூறி பையனை வீட்டிற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டார். பாபா இரக்கத்துடன் பதிலளித்தார், “**மஹாராஜ் கூறுவது முறையே! அவன் உங்கள் மகன், அவன் விரும்பினால் நீங்கள் அழைத்துச் செல்லலாம்!**”

ஆனால் சகன் வியக்கத்தக்க முறையில் தலையிட்டு, தந்தையிடம் கூறினார்: “நான் இங்கிருந்து வந்தபோது, நீங்கள் என்னைத் திருப்பி அனுப்பி வைத்தீர்கள். நீங்கள் உங்கள் வாக்குறுதியையும் மெஹர் பாபாவிற்குத் தந்துள்ளீர்கள், அதனால்தான் நானும் இங்கே இருக்கிறேன். நான் இப்போது திரும்பிச்செல்ல இயலாது! நான் மெஹராபாத்தை விட்டுச்செல்லப் போவதில்லை!”

நடந்ததுதான் என்ன? மெஹர் பாபா, அவருடைய தெய்வீகத் தன்மையை, சகனுக்கு வெளிப்படுத்தினார்; மேலும், மெஹராபாத்தில் வியாபித்திருந்த இறையன்பை, சகன் வெகுவாக கிரகித்தார். இறையுணர்வோடு இணையும் ஏக்கம் இப்போது சகனின் இதயத்திலிருந்து வார்த்தைகளாக வெளிவந்தது. மெஹர் பாபாவின் நேசம் மற்றும் சத்தியத்தை மேலும் மேலும் அனுபவபூர்வமாக உணரும் பேராவலால், சகனுக்கு சொத்து, சுகம், உலகப் பொருட்கள் மற்றும் உயர்தர உணவில் ஆர்வமில்லாமல் போயிற்று!

திகைப்பில் அச்சமுற்ற சகனின் தந்தையார் மறுபடியும் ஸக்கோரிக்குச் சென்று மெஹராபாத்தில் நடந்த அனைத்தையும் மஹாராஜுக்கு எடுத்துரைத்தார். மஹாராஜ் அவரை ஆறுதல் படுத்தி, "உங்கள் மகன் வரவில்லையென்றால் கவலைப்படாதீர்கள்! உங்களுக்குத் தெரியாத ஒன்றை நான் இப்போது கூறுகிறேன், நானும் பறையர்களோடு கலந்து வாழ்ந்திருக்கிறேன். அவர்களின் தீண்டுதலால் மதம் பாதிக்கப்படும் என்பது தவறு. இதை நீங்கள் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்" என்று விளக்கினார்.

ஒரு நாள், இந்து மதத்தைச் சார்ந்த 'டாக்கே:ஃபால்கர்' என்பவர் மெஹராபாத்தில் நடக்கும் சம்பவங்களைக் கண்டறிய அங்கு வந்திருந்தார். அவர் ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்த பண்டோபாவின் நண்பர். '**டாக்கே**' (என்று சுருக்கமாக அழைக்கப்பட்டார்) அவ்வேளையில், அஹமதுநகரில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். பண்டோபா இவரைப் பற்றி, பாபாவிடம் கூறியதுண்டு. இப்போது, மெஹர் பாபா டாக்கேயிடம் '**ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணிபுரிவீர்களா**?' என்று கேட்டதற்கு டாக்கே விளையாட்டுத்தனமாக, "நீங்கள் எனக்கு 300 ரூபாய் மாதச் சம்பளமும், இந்து பண்டிகை நாட்களில் விடுமுறையும் வழங்க வேண்டும். மேலும், எனக்கு ஆன்மீகப் பாதையில் முன் செல்லும் நோக்கம் எதுவும் இல்லாததால், என்னைக் கண்டிக்கவோ அறையவோ கூடாது" என்று கூறினார்.

டாக்கே ஆச்சரியமடையும் வகையில் மெஹர் பாபா, அவரது அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டார். அப்போது, டாக்கே அஹமதுநகரில் 60 ரூபாய் சம்பளம் மட்டுமே வாங்கி வந்தார். டாக்கே இரண்டு வாரத்திற்குப் பிறகு வேலையில் வந்து சேருவதாகத் தெரிவித்தார்.

மெஹர் பாபா அதற்கு சம்மதம் தெரிவித்து மேலும் வினவினார், **"எனக்கு சேவை செய்வதன் மூலம், உங்களுக்கு ஆன்மீக பயன் கிடைக்குமானால் அதில் என்ன தீங்கு இருக்கிறது?"**

அதற்கு டாக்கே, "அப்படி ஒன்றுமில்லை, நான் இங்கு அதற்காக வரவில்லை" என்று கூறி, மரியாதையின் நிமித்தம் தலைவணங்கவோ, கைகளைக் கூப்பி வணங்கவோ செய்யாமல் புறப்பட்டார். டாக்கேயின் மனதில் 'ஓர் ஈரானி எப்படி குருவாக இருக்கமுடியும்? ஈரானி ஓர் இந்துவுக்கு என்னதான் கற்றுத்தர முடியும்? ஆன்மீகத்தைப் பற்றி இவருக்கு என்ன தெரியும்? வேறு

எந்த மதமும் இந்து மதத்திற்கு ஈடு இணை ஆகாது!' என்ற எண்ணங்கள் அலைமோதின.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு டாக்கே மெஹராபாத்திற்கு வந்தார். அன்று ஞாயிற்றுக்கிழமை ஆதலால் பாபா அவருக்கு நினைவூட்டினார், "**இன்று விடுமுறை, எனவே உங்கள் வேலையை நாளைவரைத் தொடங்கவேண்டாம்**."

மெஹர் பாபாவின் செயல்முறை அவரைப் பெரிதும் கவர்ந்தது, மனதில் இவ்வாறு நினைத்துக் கொண்டார், "எங்களிடையே உள்ள ஒப்பந்தத்தை பாபா நினைவில் கொண்டுள்ளார். அதை அவர் மிகவும் மதிக்கிறார். அவரைப் பற்றிய என் எண்ணங்கள் தவறு." டாக்கே ஓர் ஆசிரியராக நியமிக்கப்பட்டாலும், மெஹர் பாபாவை அவருடைய குருவாக ஏற்றுக்கொண்ட பிறகு மண்டலியில் ஒருவராகும் பாக்கியத்தைப் பெற்றார்.

1925, ஏப்ரல் 19ஆம் நாள், முதல் முறையாக, '**வாமன்**' என்பவர் மெஹராபாத்திற்கு வந்து, பாபாவிடம் இவ்வாறு முறையிட்டார்: "உலக வாழ்க்கையில் நான் மிகவும் சோர்வடைந்து விட்டேன்; மேலும், ஆன்மீகப் பாதையில் பயணித்து, தெய்வீகத்தை அனுபவிக்க விரும்புகிறேன்." பாபா அவரை மெஹராபாத்தில் வாழ அனுமதித்து, ஏழு நாட்கள் நீர் மட்டுமே அருந்தி, பள்ளிக்கூட கட்டிடத்தில் தனியாக இருக்க உத்தரவிட்டார். அவரால் நான்கு நாட்கள் கூட தாக்குப் பிடிக்க முடியாததால், பாபா அந்த உத்தரவை மாற்றி, பள்ளிக்கூடத்தில் ஓர் ஆசிரியராக நியமித்து, அவரை 'கிஸன் மாஸ்டர்' என்று அழைத்து வந்தார்.

மெஹராபாத்தில் அன்று ஒரு சிறப்பு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. அரன்காவ்ம் கிராமத்தார் பலர் அதில் பங்கெடுக்காததால் சீற்றமடைந்த பாபா அங்கு எழுப்பப்பட்ட கோயிலைத் தகர்த்தெறிய உத்தரவிட்டார்; இறுதியில் கோயிலில் சில மரப்பலகைகள் மட்டும் மிஞ்சின.

சிறிது நேரத்திற்குப் பிறகு, மாருதி பாட்டீல், பாபாவை அரன்காவ்ம் கிராமத்திற்கு அழைத்துச் சென்று அனைவருக்கும் தரிசனம் அளிக்குமாறு வேண்டினார். பாபா வந்தபோது பல கிராமத்தார் அங்கு இல்லாததால். கடுங்கோபத்தில் பாபா எவருக்குமே அன்று தரிசனம் வழங்கவில்லை. அடுத்தநாள் கிராமத்தார் அனைவரும் வந்து தரிசனத்திற்காக வேண்டிய வேளையில் பாபா, இங்கு நடக்கும் அனைத்து பஜனை, கீர்த்தனை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தால் மட்டுமே தரிசனம் வழங்கப் போவதாக நிபந்தனையை முன்வைத்தார்.

சில நாட்கள் கடந்தன; மேலும் அதே நிலைமை தொடர்ந்ததால், ஹரிஜன மாணவர்களை, மறுபடியும் அங்கு வரவேண்டாம் எனக் கூறி, அவரவர் இல்லத்திற்குத் திரும்பிச் செல்லுமாறு உத்தரவிட்டார். சிறுவர்கள் என்ன செய்வது என்று ஒன்றும் புரியாமல் அழத் தொடங்கினர். பெற்றோர்களை வரச்சொல்லி குழந்தைகளை வீட்டிற்கு அழைத்துச் செல்லுமாறு கூறினார். பாபா

அவர்களிடம் கண்டிப்பான தொனியில் எடுத்துரைத்தார்: **“உங்களால் அவ்வப்போது இங்கு நடக்கும் நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க முடியவில்லையென்றால் உங்கள் குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள்!”**

சில பெற்றோர்கள் குழந்தைகளைத் திருப்பி அழைத்துச் சென்றனர்; அதே வேளையில் பலர் நிகழ்வுகளில் பங்கெடுப்பதாக உறுதியளித்து குழந்தைகளை விட்டுச் சென்றனர்.

மெஹர் பாபா கிராமத்தாரிடம் இவ்வாறு நடந்துகொள்ள குறிப்பாக ஒரு காரணம் இருந்தது. கல்வி அறிவற்ற இம்மக்கள் மது அருந்தி, சூதாட்டத்தில் ஈடுபட்டு, நேரத்தை விரும்பத்தகாத முறையில் செலவழித்து வந்தனர். அவர்களுக்கு, தகுந்த பாடம் புகட்டி, ஆன்மீக விஷயங்களில் நாட்டத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் அத்தகைய தீவிர நடவடிக்கைகளை மெஹர் பாபா மேற்கொண்டார். மேலும், அவருடைய அன்பை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் பல வழிகளைக் கையாண்டார்.

கல்வி அறிவற்ற, வறுமையான, களங்கமற்ற அரன்காவ்ம் கிராமத்து மக்களோடு மெஹர் பாபா, ஒவ்வொரு நாளும், அவர்களின் வாழ்வில் ஒன்றிணைந்த ஒரு நபராக இருந்து, கடவுளை அடையும் நேர்மையான பாதையில் அவர்களை வழி நடத்தினார். அவர்களின் தனிப்பட்ட கஷ்டங்கள் மற்றும் கலகங்களில் தலையிட்டு, சுமூகமான தீர்வுக்காக உதவினார். பலருக்கு வேலை வாய்ப்பு அளித்தது மட்டுமின்றி பண உதவியும் செய்தார். இதர வழிகளிலும், அவர் சத்தியத்தின் மூலாதாரமாகத் தன்னை நிலை நிறுத்தி, மக்கள் அவர்மீது அளவிலா நம்பிக்கை வைத்து, அனைத்திற்கும் அவரையே நாடி இருக்கும்படியான சூழ்நிலைகளை உருவாக்கினார்.

மெஹர் பாபாவின் கருணையில் ஒரு குறிப்பிடத்தக்க உதாரணமாக, அரன்காவ்ம் கிராமத்தில் வாழ்ந்த ஒரு விதவைப் பெண்மணி, அவரது கணவரின் நிலத்திற்கான வரிபாக்கியை அரசாங்கத்திற்குக் கட்டவேண்டிய சூழ்நிலையில், வரி வசூலிப்பவருடன் ஏற்பட்ட சங்கடமான நிலையில், மெஹர் பாபா, வரிபாக்கி ரூபாய் 50 மற்றும் அது சம்பந்தப்பட்ட இதர செலவுகளுக்கான பணம் அனைத்தையும் செலுத்தி, அப்பெண்மணிக்கு உதவினார். இந்த எதிர்பாராத இதயபூர்வமான உதவியால், அவ்விதவையின் உள்ளம் கருணையுள்ள இறைவனை நோக்கித் திரும்பியது மட்டுமல்லாமல் வாழ்நாள் முழுவதும் பாபாவை நினைத்து, நன்றிவுணர்வோடு வாழ்ந்தார்.

மேலும் ஓர் ஏழை காலணி தைப்பவரின் கதை. சில வருடங்களுக்கு முன்னர் 1922ஆம் ஆண்டு, மெஹர் பாபா, பூனா ஃபெர்குஸன் கல்லூரிக்கு அருகிலமைந்த குடிலில் வாழ்ந்து வந்த வேளையில், அஹமதுநகரில் பிறந்து வளர்ந்த ‘கன்னோபா ராவ் காடேக்கர்’ என்பவர், அவர் கைகளால் தயார் செய்த காலணிகளை, குல்மாய், பாபாவிற்கு அன்பளிப்பாக வழங்கினார். சில விளக்கப்படாத காரணங்களுக்காக, வெளித் தோற்றத்தில் சாதாரணமாகத் தென்பட்ட காலணிகளை, மெஹர் பாபா பத்திரமாகப் பாதுகாத்து அணிந்து

வந்தார். முதல் இந்திய பயணத்தின்போது இதைத் தவிர வேறு எந்தக் காலணிகளையும் பயன்படுத்த மறுத்துவிட்டார்.

இவ்வளவு பிரியம் வைக்கும் அளவுக்கு அதில் ஏதோ ஆன்மீக மர்மம் மறைந்திருப்பதை அனைவரும் உணர்ந்தனர். அதிர்ஷ்டசாலியான காலணி தொழிலாளியின் மகன் 'ராமச்சந்திரா', வயது 21, 1925 ஏப்ரல் 29ஆம் நாள் மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக வந்திருந்தார். ஃபெர்குஸன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அவரை மெஹர் பாபா அன்புடன் வரவேற்று, மெஹராபாத்தில் தங்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும் அவருடைய படிப்புக்கான செலவுகளைச் செய்வதாகவும் பாபா உறுதியளித்தார்.

நீண்ட காலமாக, ராமச்சந்திர காடேக்கர் கடுமையான வயிற்று வலியால் அவதிப்பட்டார்; எந்த மருந்தாலும் அது சீராகாத நிலையில், அவருடைய மரியாதையைத் தெரிவித்து, நோய்க்கு ஏதாவது நிவாரணம் வேண்டுமென்ற எண்ணத்தில் அவர் மெஹர் பாபாவை சந்திக்க வந்திருந்தார். பாபா அவரிடம், **"உங்களுக்கு என்ன வேண்டும்? என்னை எதற்காகப் பார்க்க வந்தீர்கள்?"** என்று கேட்டார்.

அவ்வேளையில், ராமச்சந்திரா, ஒரு தெய்வீக உந்துதலால் ஆக்கிரமிக்கப்பட்டு, அவரைத் துன்புறுத்திய நோயையும் மறந்து, தன்னிச்சையாக பதிலளித்தார், "பாபா, நான் இறை நிலையை அடைய விரும்புகிறேன்."

அதைக் கேட்டு மெஹர் பாபா புன்முறுவல் செய்து, தலையைத் தொட்டு ஆசீர்வதித்தார். அதற்குப் பிறகு, பாபா அவருடைய உடல் நிலையைப் பற்றி விசாரித்து ஒரு குறிப்பிட்ட சிகிச்சைக்குத் தேவையான ஆலோசனையை வழங்கினார்.

சில மாதங்களில் அவருடைய வயிற்றுவலி முற்றிலுமாக மறைந்து விட்டது. ராமச்சந்திரா, ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து, ராமச்சந்திர காடேக்கர் குடும்பத்துடன் மெஹராபாத்தில் வாழத் தொடங்கினார். அவருடைய தந்தையார் கன்னோபா, பாபாவின் சேவையில் தன்னை ஈடுபடுத்தி, அவருடைய பழைய காலணியை அவ்வப்போது சரி செய்து வந்தார்.

ராமச்சந்திர காடேக்கரின் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பலர் அவர் மூலமாக மெஹர் பாபாவின் தொடர்பில் வந்தது மட்டுமின்றி, மற்றும் பலர் பாபாவின் உண்மை நிலையை அறிந்து கொண்டனர். காடேக்கர், எதிர்காலத்தில் எங்குச் செல்ல நேர்ந்தாலும், மெஹர் பாபாவின் அன்பு மற்றும் சத்தியத்தின் போதனைகளை அனைவரிடமும் எடுத்துரைத்தார். இவ்வாறு, கன்னோபா காடேக்கர் அவருடைய கைகளால் செய்த அந்தப் பாத அணிகள், முழுக் குடும்பத்தையும் மெஹர் பாபாவுடன் இணைக்கும் ஒரு தொடர் சங்கிலியாக அமைந்தது.

1925, மே 10ஆம் நாள் சத்குரு உபாஸனி மஹாராஜின் 55வது பிறந்தநாள், குறிப்பாக, சிறுவர்களோடு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று

பாபா, ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடத்தில் அமர்ந்து கொண்டு அங்கு வந்த மக்கள் அனைவருக்கும் தனிப்பட்ட ஆலோசனைகளும், ஆன்மீக அறிவுரைகளும் வழங்கினார்.

மெஹர் பாபாவின் குருநாதர் மஹாராஜ் அவர்களின் பிறந்தநாள் அனைவருக்கும் ஒரு புனித நாளாக அமைந்தது. ஒவ்வொரு சிறு சிறு விஷயங்களிலும் அவர் கவனம் செலுத்தினார். ஆயிரக்கணக்கான மக்களுக்கு தரிசனம் வழங்கி, அவரை நாடி வருபவர்களிடம் நேரடியாகத் தொடர்புகொண்டார். ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு மான் போலத் தாவினார் - நடக்கும் அனைத்து நிகழ்வுகளிலும் அவருடைய நேரடிப்பார்வை இருந்தது.

மஹாராஜின் பிறந்தநாள் விழாவை நிறைவு செய்ய, ஓர் இந்து பெண் சன்னியாசி, ஸக்குபாயின் வரலாற்றைச் சித்தரிக்கும் திரைப்படம் திரையிடப்பட்டது. பாபா, இத்தகைய கதைகளைப் பெரிதும் விரும்பினார்; குழந்தைகள், பெரியவர்கள் அனைவரிடமும் அக்கதைகளைப் படித்துப் புரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். உண்மையான சன்னியாசிகளின் கதைகளை அறிய விரும்புவோர்க்கு, ஸக்குபாய் கதை சுவாரஸ்யமான ஒன்று.

'ஸக்கு' அவருக்குத் தாய் தந்தையர் வைத்த பெயர். குழந்தை பருவத்திலிருந்தே அவர் கிருஷ்ண பகவானின் பக்தை; தனது தனிப்பட்ட நேரங்களை வழிபாட்டில் செலவழித்தார். துரதிர்ஷ்டவசமாக, அவர், எந்த மத ஈடுபாடும் இல்லாத, இரக்கமற்ற ஒருவருக்கு மணமுடிக்கப்பட்டார். மாமியாரோ கடவுளுக்கு அஞ்சாத ஒரு கொடூரமான பெண்ணாக இருந்தார். அவர் ஸக்குவை மிகவும் துன்புறுத்தி, அவரது பக்தியை இகழ்ந்து பேசி, அனைத்து வீட்டு வேலைகளையும் அவரையே செய்ய வைத்தார். உண்ணவும், உறங்கவும் நேரமில்லாத அளவுக்கு அவர் மீது வேலைகள் திணிக்கப்பட்டன. ஒரு நாள், கடவுளின் உள் அனுபவத்தை அடையப்பெற்ற வேளையில், ஸக்கு வீட்டை விட்டு வெளியேறி, விட்டலை (கிருஷ்ண பகவான்) தரிசனம் செய்யும் நோக்கத்தில் பண்டர்பூருக்குப் புனித பயணம் மேற்கொண்டார். அவ்வேளையில் ஒரு பெரிய, சிறப்பான திருவிழா அங்கே நடந்து கொண்டிருந்தது. பக்தர்கள் கிருஷ்ண பகவானின் காட்சிக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர்.

இந்திய தேசத்து புராணக் கதைகளில், ஒருவருடைய அன்பு உண்மையானதாகவும், பக்தி மிகுந்து தூய்மையானதாகவும் இருந்தால், கடவுளின் சிலைகளும், சித்திரங்களும் உயிர்பெற்று வரும் என்று கூறப்படுகிறது. அவ்வேளையில், கிருஷ்ண பெருமான் ஸக்குவின் உருவில் வந்து, அனைத்து வீட்டு வேலைகளையும் செய்து கொண்டிருந்ததால், மாமியாருக்கு, ஸக்கு சென்ற விபரம் தெரியாமல் போயிற்று! பண்டர்பூர் சென்று கிராமத்திற்குத் திரும்பி வந்த சிலர், ஸக்குவை, பண்டர்பூரில் பார்த்ததாக மாமியாரிடம் கூறவே, மாமியாரால் அவர்கள் கூறியதை நம்பமுடியாமல் ஸக்குவைத் தேடி உள்ளே சென்றார், ஆனால் கிருஷ்ண பகவான் அப்போது அங்கிருந்து மறைந்து விட்டார் - வீட்டில் எவருமேயில்லை. இந்நிலையில், மாமியார், ஸக்குவைத் தேடிச் சென்றார். திருவிழா ஊர்வலத்தில் ஸக்குவைப்

பார்த்து அவர் ஆச்சரியமடைந்தார். விசாரித்தபோது, ஸக்கு பண்டர்பூரிலிருந்து அனைவருடனும் திரும்பி வருவது உண்மை என்று மக்கள் தெரிவித்தனர். அப்போதுதான் மாமியாருக்குப் புரிந்தது, ஸக்கு வீட்டில் இல்லாத வேளையில் கிருஷ்ண பெருமானே வீட்டில் அனைத்து வேலைகளையும் செய்திருக்கிறார் என்று! மாமியார் பெரிதும் வருந்தினார். அந்த நேரத்திலிருந்துதான் ஸக்குவின் பக்தி ஒரு சாதுவின் பக்திக்கு நிகரானது என்பதை அனைவரும் உணர்ந்தனர். அன்றிலிருந்து அவர் ஸக்குபாய் என்று பணிவுடன் அழைக்கப்பட்டார். மேலும் அவர் பல இந்துக்களை, கிருஷ்ண பகவானின் அரவணைப்பில் கொண்டுவந்தார்.

மெஹராபாத்தில் ஏராளமான மண்டலி உறுப்பினர்கள், நோயாளிகள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் தங்கியிருந்ததால், நாஜா தினமும் 200 பேருக்குத் தேவையான உணவைத் தயார் செய்ய வேண்டியதிருந்தது. குல்மாய் மகள் டாலி உடனிருந்ததால், நாஜாவுக்கு உதவ முடிந்தது. ஆனால், இதர பெண்மணிகள் அவரவர் பணிகளில் மும்முரமாக இருந்ததால் நாஜாவுக்கு ஒத்தாசையாயிருக்க முடியவில்லை. ஒரு முறை, மிக்க களைப்புடன் இருந்த நாஜாவின் மனதில், இவ்வித எண்ணங்கள் அலைமோதின, ‘பாபா, மெஹராவுக்கு அந்த அளவுக்கு வேலை தருவதில்லை. ஏன் எனக்கு மட்டும் கடினமான வேலையைத் தருகிறார்?’ நாஜா, தனது எண்ணங்களை வெளிப்படுத்தாத போதும், பாபா, ஒரு நாள் நாஜாவை அழைத்து விளக்கினார்:

**“மேரி, மார்த்தா சகோதரிகளின் கதையை நீங்கள் எப்போதேனும் கேள்விப்பட்டதுண்டா? இருவரும் இறை மனிதன் ஜீஸஸை ஆழமாக நேசித்தனர்.**

**“மார்த்தா, ஒரு முறை, ஜீஸஸுக்காக உணவு தயார் செய்து கொண்டிருந்த வேளையில், மேரி, ஜீஸஸ் அருகில் அமர்ந்து, அவர் பேசுவதை கவனித்துக் கொண்டிருந்தார். மார்த்தா, ஜீஸஸின் அருகில் அமரும் வாய்ப்பு கிட்டாததால், நாளெல்லாம் சமையல் செய்வதை விரும்பவில்லை. ஒரு நாள், மேரியையும் தனக்கு உதவுமாறு கூறி ஜீஸஸிடம் முறையிட்டார்.**

**அதற்கு ஜீஸஸ், ‘என் அருகிலிருந்து, மேரி எனக்குச் செய்யும் சேவை, நீங்கள் என் உணவைத் தயார் செய்யும் சேவைக்கு நிகரானது. ஒவ்வொருவரின் மனப்படிவங்களும் வேறு வேறு, எனவே அவர்களின் கடமைகளும் வெவ்வேறு. ஜீஸஸின் அருகில் அமர்ந்து மேரி செய்து கொண்டிருந்த சேவையானது, மார்த்தா அவருக்காக உணவு தயார் செய்ததை விட மிகையானது. தொடர்ந்து, நீங்கள் உங்கள் கடமையை அன்புடன் செய்யுங்கள்! பிறர் என்ன செய்கிறார்கள் என்பதை நீங்கள் நினைக்க வேண்டாம்! உங்களுடைய சேவை எவ்வளவு சிறந்தது என்று உங்களுக்குத் தெரியாது! இது உண்மையிலே உயர்ந்த சேவை என்பதை எதிர்காலத்தில் நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்!’** என்றார்.

இறுதியில் ஆறுதலடைந்த நாஜாவுக்கு, தக்க பதில் கிடைத்தது. அப்போதிலிருந்து அவர் தனது கடமையை முழு மனதோடு செய்யத் தொடங்கினார்.

ஒரு நாள், மண்டலியில் சிலர், மனச்சோர்வில் நம்பிக்கையிழந்து, பாபாவுடன் வாழ்ந்த காலங்களை எண்ணிப் பார்த்தனர். அவரோடு இத்தனை காலம் இருந்தும், ஆன்மீகத்தில் எந்தவித பலனும் கிட்டவில்லை என்ற முடிவுக்கு வந்தனர். 1925, மே 12ஆம் நாள், மண்டலியுடன் உரையாடிக் கொண்டிருந்த போது, பாபா எதிர்பாராத விதமாக இவ்வாறு விளக்கமளித்தார்:

**உங்கள் உடலை பராமரிக்க நீங்கள் உணவு உண்கிறீர்கள். மேலும், அதே உடலால் நீங்கள் விதவிதமான செயல்களைச் செய்கிறீர்கள். அந்த உணவு, வயிற்றில் திரவமாகி, இரத்தமாக மாறுகிறது. இது உங்களுக்குத் தெரியும்; ஆனால் இது எப்படி நிகழ்கிறது என்பதைப் பற்றிய எண்ணமோ அல்லது அனுபவமோ உங்களுக்கு இல்லை. அதுபோல், எனது தொடர்பில் இருப்பவர்கள் ஆன்மீகப் பாதையில் முன்னேறிச் செல்வதை நீங்கள் பார்க்கவோ அல்லது அறிந்து கொள்ளவோ முடியாது. என்னுடன் இங்கே இருக்கும் நீங்கள் ஆன்மீக முன்னேற்றத்தைப் பற்றி முற்றிலும் அறியாதவர்களாக இருக்கிறீர்கள். ஆனால், முன்னேற்றம் நிச்சயமாக உண்டு. ஒரு சத்குருவின் தொடர்பில் எவ்வளவு நெருக்கத்தில் ஒருவர் இருக்கிறாரோ, அந்த அளவுக்கு, அவர் சத்குருவின் வட்டத்தில் உறுப்பினராக இருந்தாலும், இல்லாதிருந்தாலும், அவருக்கு அதனால் நன்மை பயக்கும்.**

மே 15ஆம் நாள், மதிய உணவுக்காகத் தயார் செய்த சாதம் சற்று பதம் ஆகாமல் இருந்ததால், பாபா, டாலியைத் திட்டினார்: “**குழந்தைகள் சரியாகப் பதமாகாத இந்த சாதத்தை உண்டிருந்தால், அவர்களின் உடல்நலமும், படிப்பும் பாதிக்கப்பட்டிருக்கும். இந்தக் குழந்தைகளை நீ நேசிக்கிறாயா? இல்லை அவர்கள் உடல் நலமில்லாமலாக வேண்டும் என்று முயற்சிக்கிறாயா?**”

டாலி, உடனே சாதம் பதம் ஆகாமல் இல்லை என்று மறுப்புத் தெரிவித்தார். அப்படிக் கூறியதும் பாபா, டாலியை வேகமாக அறைந்ததோடு, தன்னையும் அதே வேகத்தில் அறைந்தார். டாலி, அவரை அறைந்ததை ஒரு பொருட்டாகக் கருதவில்லை, ஆனால், பாபா, தன்னைத்தானே அறைந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்; கண்களில் கண்ணீர் நிரம்பியது. பாபா உடனே டாலியை அணைத்து, ‘**இதைக் குறித்து எதையும் நினைவில் கொள்ள வேண்டாம்**’ என்று கூறினார்.

பாபா, ஆண் மண்டலியை அவ்வப்போது தூண்டிவிடுவது உண்டு. தினமும் அவர்களிடம் உணவு எப்படி இருக்கிறது என்று கேட்பதும், மண்டலி ஏதேனும் குறைகளை எடுத்துக் கூறுவதும் பழக்கம். மண்டலி இப்படி வெளிப்படையாகப் பேசுவதை, பாபா விரும்பினார். நாஜாவை அழைத்து,

**‘உணவில் ஏன் உப்பு அதிகம்? மண்டலி அனைவரும் இவ்வாறு குறை கூறுகிறார்களே!’** என்று கேட்பதும் வழக்கமாகி விட்டது.

நாஜா, மண்டலி தவறாகக் குறை கூறுகிறார்கள் என்று கடுமையாக பதிலளித்து, என்றும் நான் வழக்கமான ஒரே அளவில்தான் போடுகிறேன் என்றார். பெண்டு கூட சகோதரி நாஜாவை விட்டு வைக்கவில்லை. குஸ்தாஜி மட்டுமே நாஜாவுக்குப் பக்கத்துணையாக இருந்தார்.

மெஹர் பாபா வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் இத்தகைய பிரச்சினைகளை உருவாக்கி, ஒவ்வொருவர் மனதிலும் ஆழமாக மறைந்திருக்கும் உணர்வுகளை வெளிக்கொண்டு வந்தார். எந்தப் பாரபட்சமும் இல்லாமல் ஆண், பெண் மண்டலி அனைவரும் நேர்மையாக மனம் திறந்து பேசுவதை விரும்பினார். பல்வேறு வாதங்களுக்குப் பிறகு மெஹர் பாபா ஆண், பெண் மற்றும் மாணவர் அனைவருக்கும் தனித்தனி சமையல் அறையை நிறுவினார்.

1925ஆம் ஆண்டு மே மாதத்தில், பல தொழு நோயாளிகளை அழைத்து வந்து, மெஹராபாத்தில், அவர்களுக்காக தனி இடம் ஒதுக்கப்பட்டது. ‘தொழுநோயாளிகள் ஆசிரமம்’ என்று பெயர் சூட்டி, அதற்கு, பார்வதி என்றழைக்கப்பட்ட ஒரு பெண்மணியை (அவரும் ஒரு தொழு நோயாளி) மேற்பார்வையாளராக, பாபா நியமித்தார். பார்வதி, பாபாவின் நம்பகமான உதவியாளர் மட்டுமல்லாமல் இரகசிய தூதுவராகவும் இருந்தார். மெஹர் பாபாவின் கட்டளைகளை எவரேனும் பின்பற்றத் தவறினால் பார்வதி உடனே அதை பாபாவிற்கு எடுத்துக் கூறிவந்தார். தொழு நோயாளிகள் பாபாவிடம் சென்று, “பாபா, நாங்கள் உங்களுக்கு அஞ்சவில்லை, ஆனால் இந்த பார்வதி கொடூரமானவள், நாங்கள் அவளுக்குத் தான் அஞ்சுகிறோம்” என்று முறையிட்டனர்.

ஒரு முறை பாபா, பெண் மண்டலியில் ஒருவர் செய்த தவறுக்காக சீற்றமடைந்து, பார்வதியிடம் அவரைக் காலணியால் அறைய உத்தரவிட்டதும், பார்வதி அவ்வாறே செய்தார். அந்தப் பெண் மண்டலி சிறிதளவும் அமைதியை இழக்காமல், பார்வதி, பாபாவின் கட்டளையைத் தயக்கமின்றி செய்ததற்காகப் பாராட்டினார்.

மே 21ஆம் நாள் அஜோபா பைபிளிலிருந்து சில பகுதிகளை, பாபாவிற்கு வாசித்துக் கொண்டிருந்த வேளையில், பாபா இவ்வாறு கருத்து தெரிவித்தார்: **“கிறிஸ்து கூறுவது அனைத்தும் முற்றிலும் சரியே! மறுபடியும் கிறிஸ்து மக்களிடையே தோன்றுவது இப்போது நிகழும் சம்பவம். எனக்கும், கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள தொடர்பை நீங்கள் அறிவீர்கள்.**”

அடுத்த நாள் மெஹர் பாபா, பள்ளி சிறுவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் **விஸாப்பூர்** என்ற இடத்திற்கு சுற்றுலா சென்றார். பாபாவை எவரும் அடையாளம் கண்டுகொள்ளக் கூடாது, தரிசனத்தைத் தவிர்க்க வேண்டும் என்ற

எண்ணத்தில், அவரை உருமாற்றி அனைவரையும் வழிநடத்தினார். சில நேரங்களில் கருப்பு கண்ணாடி அணிந்து, மண்டலி அவரை, 'பாபா' என்று கூட அழைக்காமல் இரகசியத்தைப் பாதுகாக்கக் கோரினார்.

விஸாப்பூர் ரயில் நிலையம் சென்றதும், பாபா அனைவருக்கும் காலை சிற்றுண்டி பரிமாறினார். தொடர்ந்து, விஸாப்பூர் சிறைக் கைதிகளின் கடும் உழைப்பால் கட்டப்பட்ட மிகப்பெரிய ஏரி மற்றும் நீர்தேக்க அணையை பார்வையிடச் சென்றனர். அல்லும் பகலும் அயராது உழைத்த சிறைக் கைதிகளைக் குறித்து, பாபா இவ்வாறு கூறினார்: "**இந்த ஏழை ஜீவராசிகள், தாங்க முடியாத துன்பங்களை அனுபவிப்பதன் காரணம் என்னவென்றால், அவர்கள் இந்நாட்டின் சமூக சட்டங்களை மீறிவிட்டார்கள். அப்படியானால் கடவுள் மற்றும் இயற்கையின் சட்ட திட்டங்களை மீறுகிறவர்களின் கதி என்னவாகும்? எனவே, இறை சட்டத்தை ஒருவர் மீறாமல் பாதுகாக்க ஒரே வழி, ஒரு சத்குருவிடம் சரணடைந்து அவர் விருப்பத்திற்கிணங்க நடப்பதே ஆகும்**!" பாபாவின் இரக்கத்தன்மை இத்தகைய கடினமான குற்றவாளிகளையும் விட்டுவைக்கவில்லை.

டாக்டர் கனி, ராம்ஜூ அப்துல்லா இருவரும் இவ்வேளையில் பாபாவுடன் மெஹராபாத்தில் வாழவில்லை. மே 22ஆம் நாள் பாபா, ராம்ஜூ தொடங்கவிருந்த 'மெஹர் அரிசி மாவு ஆலை'யை அதிகாரபூர்வமாகத் திறந்துவைக்க தலைகாவ்ம் வந்தார். அன்றிரவு ரயில் நிலையத்தில் தங்கிவிட்டு, அடுத்த நாள் ராம்ஜூவின் இல்லத்திற்குச் சென்றார். இத்தனை அதிகாலையில் அங்குச் சென்றதும், காலை சிற்றுண்டி எதுவும் தயாராகாத நிலையில், ராம்ஜூ திகைத்துப் போனார். பாபா உடனே அவரிடம், "**நாங்கள் இப்போது இங்கே விருந்துண்ண வரவில்லை. நான் உங்களுடைய மாவு ஆலையில் அரைத்த மாவால் செய்த ரொட்டியை உண்ண வந்துள்ளேன்**" என்று கூறியதும் ராம்ஜூ நிம்மதியடைந்தார். அன்றைய தினத்தை அனைவரும் மகிழ்ச்சியுடன் ராம்ஜூ இல்லத்தில் கழித்தனர்; அப்தர் ரஹ்மான் கவாலி பாடல்களைப் பாடி அனைவரையும் மகிழ்வித்தார். மெஹர் பாபா மண்டலியுடன் மறுநாள் மெஹராபாத் திரும்பிச் சென்றார்.

மே மாதத்தில் ஒரு நாள் காலை வேளையில் பாபா, மாணவர்களின் உதவியோடு பள்ளிக்கூடத்தின் முன்புற பகுதியை வெட்டி, சமநிலைப்படுத்தி, உடைந்த கற்களை மேலே தூவுமாறு பெஹராம்ஜிக்கு ஒரு செய்தி அனுப்பி வைத்தார். அவ்வேளையில் பெஹராம்ஜி சவரம் செய்து கொண்டிருந்ததால், அதை முடித்ததும் அந்தப் பணியைத் தொடங்குவதாகக் கூறியனுப்பினார். பாபா அதை அலட்சியமான பதிலாக பாவித்து, கோபத்தில் அவரே மாணவர்களின் உதவியோடு அவ்வேலையைச் செய்து முடித்தார். அதற்குப் பிறகு, '**தீவிரமான தொனியில் ஒரு குருவின் கட்டளைகளை உடனடியாகச் செயல்படுத்துவது எவ்வளவு முக்கியம், அவரது வார்த்தைகளுக்கு எந்த சூழ்நிலையிலும் கீழ்ப்படியாமல் இருக்கக்கூடாது**' என்பதையும் விளக்கினார். உண்மையில் இது

பெஹராம்ஜியைக் குறிப்பிட்டு பாபா கூறியது என்பதை அனைவரும் புரிந்துகொண்டனர்.

மே 25ஆம் நாள், அஜோபா மதிய உணவுக்குத் தாமதமாக வந்தபோது பாபா அவரிடம், **“உங்களைக் கும்பிட்டு வேண்டுகிறேன், சாப்பாட்டு வேளையில் சரியான நேரத்திற்கு இங்கே வாருங்கள். உங்கள் வேலை முடியாமலிருந்தாலும் பரவாயில்லை, அனைத்து விஷயங்களிலும் கண்டிப்பாக, காலம் தாழ்த்தாமல் இருக்க வேண்டியது அவசியம்; ஒவ்வொரு விஷயத்திலும் ஒழுங்காக இருக்க வேண்டும்”** என்று கூறினார்.

மே 28ஆம் தேதி மாலை வேளையில், மெஹராபாத்தில் பலத்த புயலோடு கடுமையான மழை பெய்தது. பாபா அவ்வேளையில் பள்ளி மாணவர்களைப் பார்க்க விரும்பினார். மண்டலி, அச்சிறுவர்களை பாபாவிடம் அழைத்து வருவதாகக் கூறியதும் பாபா, ‘**அவர்களைக் குளிர்காற்று தாக்கவோ அல்லது ஒரு துளி மழைநீர் அவர்கள் மீது விழவோ கூடாது**’ என்று மண்டலியை எச்சரித்தார். குழந்தைகளைப் பாதுகாக்க, கம்பளத்தைப் போர்த்தி அழைத்து வந்தனர். பாபா மகிழ்ச்சியில் சிறுவர்களுக்கு ஒவ்வொரு குயினைன் மாத்திரையைக் கொடுத்து, அன்றிரவு அவரவர் இல்லத்திற்கு அனுப்பி வைத்தார். மண்டலியும் குளிரால் நடுங்கினர்; பாபா, சூடாகத் தேநீர் தயார் செய்யக் கூறி அனைவருக்கும் வழங்கினார். மண்டலியை, குளிர்ந்த காலநிலையிலிருந்து தொண்டை மற்றும் மார்பைப் பாதுகாக்குமாறு எச்சரித்தார்.

அவ்வேளையில் அரன்காவ்ம் ஒரு வறிய கிராமமாக இருந்தது; வேலை வாய்ப்புகள் எதுவும் இல்லாத நிலையில் கிராமத்தார் வட்டிக்குக் கடன் வாங்குவது பழக்கம். ஒரு முறை கிராமவாசி ஒருவர் வாங்கிய 20 ரூபாய் கடனைத் திருப்பித்தர முடியாமல் தலை மறைவானார். அந்த வட்டிக்கார ஹரிஜன், ஓடிப்போன கிராமத்தாரின் மனைவியைத் தாக்கிய செய்தியை, பாபா கேள்விப்பட்டு இருவரையும் அழைத்து வர உத்தரவிட்டார். பாபா வட்டிக்கார ஹரிஜனை வெகுவாகக் கண்டித்து, அந்தப் பெண்மணியைத் தாக்கியதற்காக வேகமாகக் கன்னத்தில் அறைந்தார். இறுதியில், வாங்கிய பணத்தை ஒவ்வொரு மாதமும் ஏழு ரூபாய் கட்டி மூன்று மாதங்களில் தீர்த்து விடுமாறு கூறியதை இருவரும் ஏற்றுக் கொண்டனர். அந்தப் பெண்மணியும் அவ்வாறே செய்து கடன் தொல்லையிலிருந்து விடுபட்டார்.

பள்ளிக்கூட ஆசிரியர்கள், மாணவர்களின் மெத்தனம், கவனக்குறைவு, சண்டை மற்றும் முறையற்ற நடத்தை பற்றிய அறிக்கைகளை வழக்கமாக பாபாவிடம் சமர்ப்பித்து வந்தனர். மே 29 அன்று, சில சிறுவர்கள் மத்தியில் கசப்பான வீண் மோதல்கள் நிகழ்ந்தன. அவ்வேளையில் பாபா, டாக்டர் கனியை நீதிபதியாக நியமித்து, ஒரு தீவிர விசாரணையை நடத்துவது போல், இந்த வழக்கை விசாரிக்கக் கோரினார். வாக்குமூல தொகைகளைக் கட்டி,

சாட்சிகளுக்கு அழைப்பு விடுத்து, குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்ட மாணவர்களுக்கு தண்டனையாக எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இவ்வாறு பாபா முன்னிலையில் நடந்த நீதிமன்ற நாடகம் மண்டலிக்கு மகிழ்ச்சியூட்டும் பொழுதுபோக்காக அமைந்தது. மாணவர்களும் வெகுவாக இதை ரசித்தது மட்டுமல்லாமல், இந்த வேடிக்கையான நீதிமன்ற அரங்கேற்றத்தின் மூலமாக, அவர்களுக்குத் தேவையான ஒழுக்க நடைமுறைகளும் வெளிச்சமிட்டுக் காட்டப்பட்டது.

1925 ஜூன் 1ஆம் நாள், ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூட ஆசிரியர் ஜாகிர்தார் மாஸ்டர், மெஹர் பாபா மற்றும் மண்டலியை தேநீருக்காக அவர் இல்லத்திற்கு அழைத்திருந்தார்; பாபா அங்கு வழங்கிய ஒரு சிறிய சொற்பொழிவு:

**“கடவுளைக் காணமுடியும். ஒருவர், எந்த மதத்தைச் சார்ந்தவராகவும் அல்லது எவ்வித நம்பிக்கையைப் பின்பற்றுபவராக இருந்தாலும், மாயையின் பிணைப்பிலிருந்து சத்குரு அவரை விடுவிக்கும் தருவாயில் கடவுளைக் காணமுடியும். ஒரே வேறுபாடு என்னவெனில், அதற்காக அவர் எந்த முறையைக் கையாண்டார் என்பதுதான். ஒருவர், சத்குருவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது மட்டுமின்றி, எவ்வாறு கீழ்ப்படிகிறார் என்பதும் முக்கியம். ஒரு குருநாதர் உங்களிடம் எதையும் செய்ய சொல்லலாம், செய்த பின்னர் அதற்காக உங்களைக் குறை கூறவும் செய்யலாம்! ஒருவரைக் கண்டித்து, ஏன் அதைச் செய்தீர்கள் எனக் கேட்கவும் செய்யலாம். எதுவாயினும் இதை நீங்கள் கட்டளை இட்டதால்தான் செய்தேன் என்று பதிலளிக்காமல், என்னுடைய தவறுதான் மன்னித்து விடுங்கள் என்று பணிவுடன் கூற வேண்டும்.”**

ஜூன் 2ஆம் நாள், மெஹர் பாபா அனைத்து மாணவர்களையும் அவருடைய குடிலுக்கு அழைத்துச் சென்றார். எளிய மராட்டி மொழியில், பல எடுத்துக்காட்டுகளைக் கூறி, பாபா அவர்களுக்கு வேறு வேறு ஆன்மீகத் தலைப்பில் சொற்பொழிவுகளை வழங்கினார். அப்போது, பாபா இறுதி தேர்வில் வென்ற அனைத்து மாணவர்களுக்கும் பயனுள்ள பரிசுகளையும் வழங்கினார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, மெஹர் பாபா, மண்டலிக்கு உயர்நிலை மற்றும் கீழ்நிலை ஆவிகளைப் பற்றி விளக்கமளித்தார்.

**“சில குறிப்பிட்ட கடமைகளுக்காக வரும் ஆற்றல் மிக்க, உயர்நிலை ஆவிகள், உண்மையில் கடவுளின் பிரதிநிதிகள். அவை சத்குருக்களின் உத்தரவுகளை ஏற்று, வழங்கப்படும் பணியைச் செய்து முடிக்க, பௌதீக உடலோடு பூமியில் பிரவேசிக்கும்.**

**“கீழ்நிலை ஆவிகள் என்பவை, பௌதீக உடல் இல்லாத நிலையில், எஞ்சியிருக்கும் மனப்படிவங்களை அழிக்க வழிதேடும். இறப்பிற்குப் பிறகு, செலவழிக்கப்படாத மனப்படிவங்கள் விரையமாவதுவரை முன்னேற முடியாது. அதன் விளைவாக, அவை விண்வெளி தளத்தில் அலைந்து**

**திரியும். இக்காரணத்தால், கீழ்நிலை ஆவிகள், உயிர் வாழும் மக்களின் தொல்லைகளுக்கு மூலகாரணமாக இருக்கும். ஒருவரின் விதிப்படி அவர் வாழ்நாள் 40 ஆண்டுகள் என்று வைத்துக் கொள்வோம். ஆனால், அவர் அவருடைய 30ஆவது வயதில் தற்கொலை செய்து கொள்கிறார். அதன் விளைவாக, எஞ்சியுள்ள பத்து வருட, வெளிப்படுத்தப்படாத மனப்படிவங்களின் காரணமாக, அவருடைய ஆவி கீழ்நிலை தளங்களில் வாழும். சில நேரங்களில், சில மனிதர்களுக்கு அது ஆவியாகத்** (பேயாக) **தோற்றமளிக்கும். உயிரைத் துறந்த ஒருவரின் ஆவியோடு** (தற்கொலை செய்து கொண்டவர்) **பேசுவது என்பது நகைப்புக்குரியது, ஏனெனில், அந்த ஆவியானது எப்பொழுதும் நம்முடனே, நாம் வாழும் இந்தப் பௌதீக தளத்தில்தான் இருந்து கொண்டிருக்கும். ஆன்மீகப் பாதையில் முன்னேறிச் சென்ற யோகிகள் மற்றும் முனிவர்கள் இந்த ஆவிகளோடு மட்டுமின்றி உயர்நிலை தளத்தில் இருக்கும் ஆவிகளுடனும் உரையாட முடியும். இந்த யோகிகள், இரண்டு நிலைகளிலும் வாழ்வதால், ஆவிகளோடு தொடர்புகொள்ள எவ்வித ஊடகமும் தேவையில்லை.”**

1925 ஜூன் 3ஆம் நாள், யோகிகள், சத்குருக்கள் இவர்களை ஒப்பிட்டு மெஹர் பாபா அளித்த தீர்க்கதரிசன கருத்துரைகள்:

**“இந்திய தேசத்தில் சில யோகிகள் இரும்பை பொன்னாக மாற்றும் ஆற்றல் மிக்கவர்கள்; ஆனால், அதனால் பொது பயன்பாடு ஏதுமில்லாததால் அது உபயோகமற்றது. இவ்விதமான அதி சக்தி வாய்ந்த யோகிகள் கூட, காலச்சக்கரத்தில் பல பிறவிகள் எடுத்த பின்னரே சத்குருவின் நிலையை எய்த முடியும்.**

**“சத்குரு அளவிலா சக்திகள் வாய்ந்தவர்; இருந்தும், அவற்றை உபயோகிப்பது வெகு அரிது. ஒரு சத்குரு புதிய உலகங்களைப் படைக்கிற அளவுக்கு ஆற்றல் மிக்கவர். அத்துடன் ஒப்பிடும் வேளையில், இரும்பைப் பொன்னாக மாற்றுவதில் என்ன இருக்கிறது?**

**“சத்குருக்கள் மற்றும் ஆன்மீக ஆணையாளர்கள் அனைவரும் ஒரு பயங்கரமான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மும்முரமாக இருக்கிறார்கள். உலகம், மிகப்பெரிய அளவிலான போரால் அச்சுறுத்தப் படுகிறது - இதுபோன்ற ஒரு போரை இதுவரைப் பார்த்ததோ, அறிந்ததோ இல்லை - இதில் உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் ஈடுபடும். ஆனால், இறுதியில், பெருமளவிலான இந்தப் போராட்டம் நல்ல முடிவை கொண்டுவரும்.**

**“ஒரு மேன்மை வாய்ந்த தீர்க்கதரிசி, அவருடைய தெய்வீக நற்செய்தியை உலகில் கொண்டு வருவார். அப்போது, பல்லாயிரக்கணக்கான மக்கள் அவர் பாதங்களில் சரணடைந்து, அவருடைய போதனைகளை கவனத்துடன் கற்றுக் கொள்வார்கள். அந்த நேரம் வரும்; என் வார்த்தைகளைக் குறித்துக் கொள்ளுங்கள்.”**

1920ஆம் ஆண்டிலிருந்து சில வருடங்கள், பெண்டு உதவியாளர் மற்றும் மேற்பார்வையாளராகவும், பாதிரி மருந்துகளை வழங்கியும், மெஹராபாத் மருத்துவமனையில் பணிபுரிந்து வந்தனர். இருவரும் தத்தமது பணிகளில், கருமமே கண்ணாய் இருந்தனர். பாபா, அவர்களிடம் அதிகமாக வேலை வாங்கியது மட்டுமின்றி, தினமும் ஏதாவது தவறுகளைக் கண்டுபிடித்தார். ஒரு நாள் பாபாவின் குற்றச்சாட்டுகள் இருவரையும் எரிச்சலடைய செய்தது. பாபா இருவரின் குரலுக்கும் செவிமடுத்து அறிவுரை வழங்கினார்.

**“நீங்கள் ஒரு கால்பந்தைப் போல் இருக்க வேண்டும்; அது, உதைக்கும் வேளையில் வாய்விட்டுக் கதறவோ, புகார் கூறுவதோ கிடையாது. உதைகள் வாங்குவது அதன் அதிர்ஷ்டம்; உதைகளால் கால்பந்து வேகமாக உயர்வது அதற்கு அழகு. நீங்களும் உதைகளை** (குற்றச்சாட்டுகளை) **ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு வந்து, பணிவுடன், எந்த விதத்திலும் பாதிக்கப்படாமலிருக்க முயற்சிக்க வேண்டும். என் உதைகள், உங்களை மிக உயரத்திலும், அதற்கு அப்பாலும் எடுத்துச் செல்லும். கால்பந்தை எவ்வளவு வேகமாக உதைப்போமோ, அவ்வளவு உயரத்தில் அது பறக்கும். அதுபோல, நீங்களும் இவ்வுலகை விட்டுச் சென்று உயர்நிலையை அடைவீர்கள்.”**

பாபா, அப்போது பாதிரிக்கு இவ்வாறு அறிவுறுத்தினார்:

**“பாதிக்கப்பட்டவர்களுக்கு நீங்கள் தொடர்ந்து மருந்துகளைக் கொடுங்கள்; நான் என் ஆசிகளை உங்களுக்கு வழங்குவேன்.”** அந்நாளிலிருந்து பாதிரி, பாபாவின் ஆசிகளோடு சிகிச்சையைத் தொடர்ந்து செய்துவந்தார்.

இவ்வேளையில், மெஹர் பாபா ஆண், பெண் மண்டலி அனைவருக்கும், ஜூன் 15ஆம் நாளிலிருந்து மௌனம் கடைப்பிடித்து, கையால் எழுதியும், கை சைகைகளால் தொடர்பு கொள்ளப் போவதாகவும் கூறி, மருத்துவமனை, மருந்தகம், நோயாளிகள், பள்ளிக்கூடம், மாணவர்கள், மற்றும் ஒவ்வொரு மண்டலியைப் பற்றியும் விரிவாக விசாரித்து, ஒவ்வொருவரும் அவரவர் கடமைகளைச் செய்வதில் தவறக்கூடாது என்றும் எச்சரிக்கை கலந்த குரலில் கூறினார்.

மெஹர் பாபா 1925ஆம் ஆண்டு ஜூன் 4ஆம் நாள் இவ்வாறு அறிவித்தார்:

**நான் ஒரு வருடம் மௌனம் அனுஷ்டிக்க உள்ளேன். அவ்வேளையில் நான் எவரோடும் பேசமாட்டேன். ஆனால் அனைவரும் எனது பாதங்களைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ளுங்கள்.**

**யார் இறுதிவரை என்னுடன் இருக்கிறார்களோ, அவர்கள் மிகுந்த பலனையும், வெகுமதியையும் அடையப் பெறுவார்கள்.**

இதைத் தெளிவுபடுத்தும் நோக்கத்தில் பாபா, உன்னதமான பக்தர்கள் மற்றும் சீடர்களை மேற்கோள் காட்டி, எந்த அதிபாதகமான சூழ்நிலையிலும்,

அவர்கள் ஒருபோதும் தங்கள் குருநாதர்களை விட்டு வெளியேறவோ அல்லது அவர்களைக் கைவிடவோ செய்ததில்லை என்றார்.

பாபா, அவருடைய கருத்தை விளக்கும் விதத்தில் இவ்வாறு விவரித்தார்:

**ஒரு சாது, ஒரு முறை குறிப்பிட்ட ஒரு நபருக்கு ஆன்மீகப் பயிற்சி அளிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ஆனால் பல்லாண்டுகால உழைப்பிற்குப் பின்னர், அவர் அந்த மனிதனிடம் எவ்வித மாற்றத்தையும் காணவில்லை. அடுத்து அவர் ஒரு மிருகத்திற்குப் பயிற்சி அளித்தது, அதைவிட அவநம்பிக்கையைத் தந்தது. ஆனால், அவர் அந்த மனிதனிடம் திரும்பி வராமல், ஒரு மரத்திற்குக் கற்றுத் தரத் தொடங்கினார். அந்த முயற்சியும் தோல்வியடையவே, கடைசியாக ஒரு கல்லுக்குக் கற்றுத் தர வேண்டியதாயிற்று. ஆனால், அது இமயத்தில் உயர்ந்து நிற்கும் மலையாக இருந்தாலும் அல்லது ஒருவர் விரலில் அணியும் விலை உயர்ந்த வைரமாக இருந்தாலும், கல் என்பது எப்படியாயினும் கல்தான். எவ்வளவோ முயன்றும் கல்லின் உணர்வை மாற்ற முடியாமல் தோல்வியை சந்தித்தார்.**

**கடைசிக்கட்ட முயற்சியாக, சாது கல்லை எடுத்து தன் தலைமீது அறைந்து, கபாலத்தை உடைத்து, தன்னைத் தானே மாய்த்துக் கொண்டார்!** பாபா இறுதியாக இவ்வாறு கூறினார்: “**உன்னுடைய குருநாதருடன் நீ இருக்க விரும்பினால், ஒரு கல்லைப்போல் ஆகவேண்டும். அவருடன் நீ அவ்வாறே இருக்க வேண்டும்.**”

ஜூன் 13ஆம் நாள் மெஹராபாத்தில் நடந்த ஒரு சம்பவம், பாபாவின் மௌனத்தைத் தள்ளிப்போட வைத்தது. தபால் நிலைய கட்டிடத்தில் பல பறவைகள் கூடுகட்டியதோடு, கூரைமீது கரையான்கள் நிரம்பியிருந்தன. குல்மாய் அங்கிருந்த மேசைமீது ஏறி, சுத்தம் செய்யும் வேளையில், தடுக்கி கீழே விழுந்ததால், கணுக்கால் கடுமையாகச் சுளுக்கியது. வீங்கிய காலை, பாபா அழுத்தி, மருந்திட்டு தினமும் கட்டிவிட்டார். அதற்குப் பிறகு, குல்மாயின் கால் குணமடைவதுவரை மௌனத்தைத் தள்ளிப்போடுவதாக அறிவித்தார்.

மறுபடியும் ஜூன் 18ஆம் நாள் பாபா கடைப்பிடிப்பதாக இருந்த மௌனத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்: “**சில தினங்களில் நான் எனது மௌனத்தைத் தொடங்கப் போகிறேன். நீங்கள் அனைவரும் என்ன நடந்தாலும் என்னைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ள வேண்டும்.**”

வியாழனன்று பாபாவும் மண்டலியும், அரன்காவ்ம் கிராமத்தில் வாழ்ந்த காக்கா ஷஹானே இல்லத்திற்கு விஜயம் செய்து சிறப்பான தேநீர் மற்றும் சிற்றுண்டியை ரசித்தனர். மெஹர் பாபா, தேநீர் அருந்தும் வேளையில் இவ்வாறு குறிப்பிட்டார்:

**ஒரு சத்குருவை இல்லத்திற்கு அழைப்பதற்கு முன்னால், ஒன்றிற்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். உன்னதமான சாது**

(சத்குரு) **ஒருவர் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு ஒருபோதும் தீங்கிழைக்கமாட்டார். ஆனால், உயர் நிலையில் இருக்கும் ஓர் ஆத்மாவை திருப்தியடைய செய்வது கடினம். ஒரு முறை ஒரு சாதுவை அழைத்தால் அவர் விருப்பங்களுக்கு எந்த மறுப்பும் தெரிவிக்கக்கூடாது. எனவே அவரைத் தனியாக விட்டுவிடுவதே சிறந்தது. எங்கே இருக்கிறாரோ அங்கே இருக்க விடுங்கள்.**

இந்தக் கருத்தை விளக்க, பாபா கீழ்வரும் கதையை எடுத்துரைத்தார்: **ஒரு முறை, ஒருவர், ஒரு சாதுவையும், நூற்றுக்கணக்கான விருந்தினரையும் அவர் இல்லத்திற்கு அழைத்தார். ஆனால், அந்த சாது, குறித்த நேரத்திற்கு முன்னதாகவே வந்தது மட்டுமின்றி, தன் உணவையும் உரிமையோடு கேட்டபோது அவருக்கு உணவு வழங்கப்பட்டது; ஆனால் அவர் மேலும் மேலும் கேட்க, உணவிருந்த அனைத்து பாத்திரங்களும் காலியாகிவிட்டன. விருந்து அளித்தவருக்கு, புனித மனிதர்களோடு அனுபவம் இருந்ததால், அந்த சாதுவை அழைத்தது மட்டுமின்றி, அவருக்கு மேலும் உணவு தர மறுப்பது, மிகப்பெரிய தவறு என்பதைத் தெரிந்துகொண்டார். எனவே இதர 500 விருந்தினர்களுக்காகத் தயார் செய்யப்பட்ட உணவும் அவருக்கு வழங்கப்பட்டது. இறுதியில் சாது, மனம் நிறைந்து விருந்தளித்தவரை வாழ்த்திச் சென்றார். எதுவாயினும், விருந்தளித்தவர் இவ்வாறு ஒரு சாதுவை தனது இல்லத்திற்கு அழைத்து, அவர் சாபத்திற்கு ஆளாக இருந்த நிலையை எண்ணி வருந்தினார்.**

அடுத்த நாள் மாலையில் பாபா, ஜாம்ஷெட் மற்றும் சிலரோடு பூனாவுக்கு ரயிலில் புறப்பட்டார்.

லூயிஸ் நெம்ஸ் என்றழைக்கப்பட்ட ஆங்கிலேயர், டிசம்பர் 1923ஆம் ஆண்டு மெஹர் பாபாவை பூனாவில் சந்தித்து, மெஹராபாத் ஆசிரமத்தில் அவருடன் இருக்க விரும்புவதாக வேண்டியபோது, பாபா அவரை உரிய நேரத்தில் அழைப்பதாகக் கூறினார். 1925, ஜூன் 19ஆம் நாள், பாபா பூனா மக்களுக்கு தரிசனம் வழங்கினார். அன்றும் நெம்ஸ் பாபாவை சந்தித்த வேளையில், அவர் விருப்பத்தை வலியுறுத்திக் கூறினார்; இம்முறை பாபா இணக்கம் தெரிவித்தார். பாபாவும் மண்டலியும் அன்றிரவே மெஹராபாத்திற்குத் திரும்பி வந்தனர், நெம்ஸ் அடுத்த நாள் காலையில் வந்திணைந்தார். நெம்ஸ், மெஹர் பாபா அவையில் இணைந்த முதல் கிறிஸ்தவர் ஆவார்.

நெம்ஸ் வயது 29, மும்பையில் கௌரவமான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார். தந்தை ஓர் ஆங்கிலேய காவல்துறை அதிகாரி, செவிலியராகப் பணிபுரிந்த ஆங்கிலேய பெண்மணியை மணந்தார். ஐந்து குழந்தைகள், நெம்ஸ் கடைசி குழந்தை. நெம்ஸ் அளவீட்டுக்காரராக வர்த்தகத்துறையில் பணிபுரிந்து, 'ஈலன் நொலன்' என்பவரை 1919ஆம் ஆண்டு மணம் புரிந்தார்; இரண்டு குழந்தைகளோடு மும்பை பைக்கலாவில் வாழ்ந்துவந்தார். நெம்ஸ் நல்ல குணம் படைத்தவர், ஆன்மீகத்தில் அளவிலா ஆர்வம் கொண்டிருந்தார். சிறிய பருவத்திலிருந்தே, பாபாவைப் பார்க்கவோ, அவர் பெயரைக் கேட்கவோ

செய்யும் முன்னரே, தேவாலயத்தில் பிரார்த்தனை வேளையில் ஒரு முறை மெஹர் பாபா காட்சியளித்தார்.

பிரார்த்தனை நேரத்தில், நெம்ஸ் ஜீஸஸின் சித்திரத்தை நோக்கியபோது, அதில் மெஹர் பாபாவின் முகத்தைக் கண்டார். பூனாவில், சதாஷிவ் வீட்டில் பாபாவை முதன்முறையாக சந்தித்ததைத் தோடர்ந்து, நெம்ஸ், சில ஆண்டுகளுக்கு முன்னர், அவருக்குக் கிடைத்த அனுபவத்தை நினைவு கூர்ந்தார். நெம்ஸ், மெஹராபாத் வந்து சீடர்களுடன் இயல்பாக ஒன்று கலந்து வாழ்ந்து வந்தார். பெண்டுவிற்கு, குறிப்பாக, அவர் பிரியமானவராக இருந்தார். நெம்ஸ் ஆங்கிலேய பழக்கவழக்கத்தைக் கொண்டவராக இருந்த போதிலும், மண்டலி உண்ட உணவையே உண்டு, எந்த வேலையும் செய்ய எப்போதும் தயாராக இருந்தார். மண்டலியின் ஆலோசனைக்கும் செவிசாய்க்காமல், கிணற்றுநீரை இறைத்து, கொள்கலன்களில் நிரப்பி, மூங்கிற்கோலில் கட்டி, தோளில் சுமந்து செல்லும் கடினமான பணியைச் செய்வதில் தீவிரமாக இருந்தார். அன்றைய நாட்களில், மண்டலி, இரண்டு கோணிப்பைகளைச் சேர்த்துத் தைத்து ஒவ்வொருவரும் அதையே போர்வையாகப் பயன்படுத்தினர். நெம்ஸூம் இந்தச் சிறிய அளவிலான பாதுகாப்பை ஏற்றுக்கொண்டு, அதற்கு மேலும் எதையும் விரும்பவில்லை. அவர் ஒரு துறவிக்குரிய எளிமையான வாழ்க்கையை ஆர்வத்துடன் ஏற்று, எளிதில் சைவமாக மாறி, இதர மண்டலியைப் போல சோள ரொட்டியும், பால் சேர்க்காத தேநீரும் உட்கொண்டார்.

அரன்காவ்ம் கிராமத்துத் தலைவர் மாருதி பாட்டீல், மெஹர் பாபா மற்றும் மண்டலியை மதிய உணவுக்காக, ஜூன் 21ஆம் நாள் அழைத்திருந்தார். அவர்களை வீட்டினுள்ளே அமர வைத்து, தாழ்த்தப்பட்ட கிராமத்து ஹரிஜன மக்களை வெளியில் கம்பளம் விரித்து அதில் அமரவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் பாபா வந்தபோது, வெளியிலிருந்த ஹரிஜன மக்களோடு அமர்ந்து உணவில் பங்கெடுத்து, கடுமையாக விமர்சித்தார்: **“சமுதாயத்தில் தீண்டத்தகாதவர், தாழ்த்தப்பட்டவர் யார்? யார் ஒருவருக்கு இறைவன்பால் இதயத்தில் அன்பு இல்லையோ அவரே!”**

உணவுக்குப் பின்னர், அந்த ஹரிஜன மக்கள் அங்குப் பழுதுபார்த்துக் கொண்டிருந்த தர்மசாலைக்கு விஜயம் செய்யுமாறு பாபாவை வேண்டினர். பழுது பார்க்கும் வேலைக்குத் தேவையான பணம் இல்லாததால் அரைகுறையாக இருப்பதை பாபாவிற்குத் தெரிவித்ததும், அவர் உதவுவதாகக் கூறினார். கருணையுள்ள கடவுள் அவர்களது தர்மசாலையை மட்டுமின்றி ஒவ்வொருவர் வீட்டிற்கும் விஜயம் செய்தது மகிழ்ச்சிகரமான ஆச்சரியத்தை அளித்தது.

மேலும் விசேஷ நாட்களில், மெஹர் பாபா அரன்காவ்ம் கிராமத்திற்கு நடந்து, ஏழை மக்களின் வீடுகளுக்குச் சென்றது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. சில ஹரிஜன மாணவர்களின் தாய் தந்தையர் மிகவும்

வறுமையில் இருந்ததைப் பார்த்து, ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு தானியங்களை வழங்க ஏற்பாடு செய்தார்.

ஜூன் 23ஆம் நாள், இரண்டு மாணவர்கள் மோதலில் ஈடுபட்டு, ஒருவன் கற்பலகையால் இன்னொருவனைத் தாக்க, அவனது மூக்கிலிருந்து ரத்தம் கசிந்தது. பாபா, இருவரையும் அழைத்து, அவர்கள் குறைகளை விசாரித்தார். சாட்சிகள் ஒருவன் குற்றவாளி என்பதை சுட்டிக்காட்டின. பாபா, மண்டலி மற்றும் இதர மாணவர்களிடம் என்ன தண்டனை அளிப்பது என்று கேட்டார். குற்றவாளியை ஒரு மணி நேரம் பள்ளிக்கூடத்தின் முன்னால் நிற்கச் செய்ய அல்லது பாபா அவனைக் கண்டிக்க வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது.

பாபா அந்த சிறுவனிடம் தவறு செய்தானா என்று விசாரிக்க, அவனும் ஆமாம் என்று தலையை அசைத்ததும், பாபா அவனிடம் அனைத்து மாணவர்களின் பாதங்களைத் தொடச் சொன்னார். இதுபோன்ற தவறுகளை மறுபடியும் செய்தால் பள்ளிக்கூடத்தை விட்டு விலக்கி விடுவதாகவும் எச்சரித்தார்.

அதற்கு முந்தைய நாள் இரவில் ரகுநாத் கோஸ்வாமி என்ற மாணவன் விஷக்காய்ச்சலால் அவதிப்பட்டு உயிரிழந்தான். பாபா அவ்வப்போது மருத்துவமனைக்குச் சென்று அவனை ஆறுதல் படுத்தி, பெற்றோரிடம், **"என்னுடைய ஆசிரமத்தில் ரகுநாத் உயிர் துறந்தால் அவன் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை அடைந்து விடுவான். வெளியளவில் அவன் கஷ்டங்கள் அனுபவித்தாலும், அவன் மிகவும் அமைதியாக உள்ளடக்கத்தோடு உள்ளான்"** என்று குறிப்பிட்டார். பெண்டு, டாக்டர் கர்கல் இருவரும் அவர்களால் இயன்றவரை அவனை கவனித்துக் கொண்டனர்.

ஜூன் 25ஆம் நாள் மெஹராபாத்தில் விளையாட்டுகளும், விதவிதமான போட்டிகளும் நடைபெற்றன; மேற்பார்வை மற்றும் நடுநிலையாளராக ருஸ்தம் நியமிக்கப்பட்டார். பாபா, கழுதை சவாரி போட்டியில் பங்கெடுத்து வெற்றிக்கல்லை முதலில் எட்டினார். அரன்காவ்ம் ஹரிஜன மாணவர்கள் மற்றும் மராட்டா கிராமவாசிகளுக்கிடையே நடந்த கயிறு இழுபறி போட்டி அனைவருக்கும் சுவாரஸ்யமான பொழுதுபோக்காக அமைந்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ருஸ்தம், அர்ஜுன் இருவரும் விளையாட்டு மற்றும் பள்ளிக்கூட தேர்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர். பாபாவின் 'வாகனம்', பள்ளிக்கூடத்தில் ஓர் அறையில் வைக்கப்பட்டு பூக்களால் அலங்காரம் செய்யப்பட்டது. விழாவின் ஆரம்பத்தில் விஷ்ணு ஒரு சிறிய சொற்பொழிவாற்றினார். தொடர்ந்து அப்தர் ரஹ்மான் கவாலி மற்றும் கஸல் பாடல்களைப் பாடினார். ருஸ்தம் பரிசுகளை வழங்கினார். முதன்முதலாக கழுதை சவாரியில் வெற்றிபெற்ற பாபாவிற்கு ருஸ்தம் மாலை அணிவித்துப் பரிசை வழங்கினார்.

சவாரியின்போது ஒரு வேடிக்கையான சம்பவம் நடந்தது. குஸ்தாஜி பாதி வழியில் கீழே விழுந்து விட்டார். மறுபடியும் கழுதை மீது ஏற முயற்சித்த

வேளையில் கழுதை அடம்பிடித்து குஸ்தாஜியை ஏறவிடாமல் தடுத்தது. 'பிடிவாதக் கழுதை' என்று குஸ்தாஜி சலித்துக்கொண்டு சண்டையிட்டதை அனைவரும் கண்டு ரசித்தனர்.

வெள்ளிக்கிழமை, 1925 ஜூன் 26ஆம் நாள், மெஹர் பாபா, ஜூலை 10ஆம் நாளிலிருந்து மௌனம் தொடங்கப்போவதாக அறிவித்தார். பாபா கூறியதை முன்னறிவிப்பாக ஒரு பலகையில் எழுதி மெஹராபாத்தின் வாசலில் வைத்தனர். பொது அறிவிப்பாக காகிதத்தில் அச்சடித்து, மெஹர் பாபா ஒரு வருடம் மௌனம் அனுஷ்டிக்க இருப்பதாக அனைவருக்கும் தபால்வழி செய்தி அனுப்பப்பட்டது. மேலும், ஜூலை 1ஆம் நாளிலிருந்து சில வாரங்களுக்கு தரிசனம் தரப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. மெஹராபாத்தில் வாழும் அனைத்து மண்டலிக்கும் அவர்கள் தங்குவது மற்றும் தத்தமது பணிகளைப் பற்றிய கடைசி நேர அறிவுறுத்தல்களை வழங்க பாபாவிற்கு, போதுமான சமயம் தேவைப்பட்டது.

எதிர்வரும் ஓராண்டு மௌனத்தின்போது, பாபாவிற்கு ஏதேனும் விஷயத்தில் கோபம் எழுந்தால் அவர் எப்படி அதைக் கையாளுவார் என்ற கேள்வியை ஒருவர் எழுப்பினார். சிலர், பாபா கைக்குட்டையை வாயில் கட்டிக்கொள்ளலாம் என்றும் பரிந்துரைத்தனர். ஆனால் பாபா அனைவருக்கும் உறுதியளித்தார், '**ஒரு முறை மௌனம் மேற்கொள்ளத் தொடங்கினால் அவர் தமது கட்டுப்பாட்டை இழக்காமல், அதற்குப் பின்னர் ஒரு வார்த்தைக் கூட வெளிவராது**' என்று குறிப்பிட்டார். கீழே வரும் இப்பாடல் வரிகளைப் பாடி கூட்டத்தை நிறைவு செய்தார்.

**ஷியாம் சுந்தரை (கிருஷ்ணனின் அழகை)**
**நான் அவ்வேளையில் உணர்ந்ததும்,**
**கடுகு விதை ஒன்று என் கண்களுக்கு முன்னால் மலர்ந்தது.**
**ஓ அதன் மஞ்சள் நிற பூக்கள்! நான் பார்த்ததை**
**என்னால் வர்ணிக்க முடியாது!**
**அந்த விதை மலராக மலர்ந்ததும் அது**
**எனது கண்கள் முன்னால் மலையையே அசைத்தது.**

மெஹர் பாபா அக்கவிதையின் பொருளை இவ்வாறு விளக்கினார்: **"கடுகு விதை மலர்வது இறையுணர்வைக் குறிக்கும்; அந்த விதையை ஆத்மா என்று சொல்லலாம். எனவே, அந்த விதை மலையை அசைத்தபோது, நான் இறை நிலையை அடைந்தேன்; அந்நேரத்தில் ஆத்மா என் அகந்தை எனும் மலையை அப்படியே விழுங்கியது. இறைவனின் அழகை நான் எப்படி வர்ணிப்பது? இருந்தும், நான் பார்க்க முடிகிறது - அனுபவிக்க முடிகிறது."**

1925ஆம் வருடம், 'ஜகந்நாத் கங்காராம் ஜாக்கல்' வயது 36, '**அண்ணா**' என்று அன்புடன் அழைக்கப்பட்ட அவர், மெஹர் பாபாவின் மண்டலியில் ஒருவராக இணைந்தார். ஸோலாபூர் நகரில் பிறந்து வளர்ந்தவர், அங்கே அவரது

குடும்பம் ஓர் அச்சகத்தை நிறுவி, செய்தித்தாள்கள் வினியோகம் செய்து வந்தது. அவர்களுக்கு அஹமதுநகரில் பல சொத்துக்கள் இருந்தன. அண்ணாவின் பணி, மெஹராபாத் சமுதாயத்திற்குத் தேவையான சந்தைப் பொருட்களை வாங்கி வருவதாகும். அவர் சைக்கிளில் அஹமதுநகர் பஜாருக்குச் சென்று வருவது வழக்கம். ஜூன் 28ஆம் நாள், இரவாகியும் அண்ணா பஜாரிலிருந்து திரும்பி வராததால், பதட்டமடைந்த மண்டலி பாபாவுடன் அண்ணாவைத் தேடி நடந்து சென்றனர். வழியில் மாருதி பாட்டீல் அண்ணாவின் ஒரு குறிப்புப் புத்தகத்தைக் கண்டெடுத்தார்.

அப்போது, அண்ணா மெஹராபாத்திற்குத் திரும்பி வருகையில், திருடர்கள் அவரை வழி மறித்து, அனைத்து பொருட்களையும் பறித்துச் சென்றதாக அறிந்தனர். பலத்த அடி, உதைகளுடன் அண்ணா இரவில் அவர் இல்லத்திற்குத் திரும்பிச் சென்றார். பாபா மண்டலியுடன் அங்கு விரைந்தபோது, அண்ணா தலையில் பெரிய கட்டுடன் படுக்கையில் இருந்தார். பாபா, "என்ன ஆயிற்று?" என வினவினார்.

மயக்கத்தில் அண்ணா திக்கிப் பேசினார், "பாபா, 104...104!"

பாபா இரண்டு மூன்று முறை அதையே கேட்டபோது, அண்ணா பதிலாகக் கூறிய ஒரே வார்த்தை, "பாபா!...104!" அண்ணா சொல்ல முயற்சித்தது எல்லாம் அவருக்கு 104 டிகிரி காய்ச்சல் என்றுதான். டாக்டரை வரவழைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது. உடல் சீரான பின்பு, பாபா நடந்ததை நினைவு கூர்ந்து, அண்ணா ஜுரத்தால் அவதிப்பட்ட வேளையில் கூறியதை வைத்து அவருக்கு 'அண்ணா 104' என்ற புனைப்பெயரை வைத்தார்.

ஜூலை 1ஆம் தேதிக்குப் பிறகு, தரிசனத்திற்காக எவரும் மெஹராபாத்திற்கு வரக்கூடாது என்று அறிவிப்புகள் விடுத்த பிறகும், சில பார்சி அரசியல்வாதிகள் மெஹர் பாபாவை சந்திக்க வந்திருந்தனர். இந்திய தேசத்தின் ஆன்மீக மற்றும் அரசியல் நிலவரங்களைப் பற்றி விவாதித்த பின்பு, மெஹர் பாபா 'மனம்', 'உடல்' இவற்றைப் பற்றிய சொற்பொழிவை வழங்கினார்.

1925 ஜூலை 2ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்ட மெஹர் பாபாவின் கடைசி வாய்மொழி சொற்பொழிவு:

**மனித மலம் முற்றிலும் பயனற்றது, பன்றி மட்டுமே அதை உண்ணும். அதுபோல், உயிரற்ற உடலிலிருந்து சதையை வெட்டி எடுக்கும் வேளையில் எஞ்சியிருக்கும் எலும்புகள் நாய்களுக்குத் தரப்படுகிறது. மனித மனம், சதையையும், உடம்பு, எலும்பையும் போன்றது. ஒருவர் மாமிசத்தை உண்டு ஜீரணிப்பது, அவர் அதைப் பயன்படுத்துகிறார் என்று அர்த்தம்! ஆனால், எலும்புகள் உண்ணமுடியாமல் பயனற்றதாக இருப்பதால், அவை நாய்களுக்குத் தரப்படுகின்றன; நாய்கள் அதை மென்று உண்ணுகின்றன.**

**ஒரு மனிதன் மாமிசம் போன்ற அவன் மனதை, கவனித்துக்கொள்வது அவசியம். அவன் மனதை நல்வழியில் நடத்திச் செல்ல பயிற்சியளித்து, பயன்படுத்த வேண்டும். என்றாவது ஒரு நாள்**

**மனிதன், உடலை விட்டுப் பிரிந்தாக வேண்டும்; ஏனெனில் உடலை பாதுகாப்பது என்பது முடியாத ஒன்று. இதை இவ்வாறு விளக்கலாம்: ஒருவரின் விரல் துண்டிக்கப்படுகிறது அல்லது கால் முடமாகிவிடுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர், அதை எண்ணி வருந்தவோ அல்லது அழவோ கூடாது, ஏனெனில் முழு உடலும் ஒரு நாள் தன்னைவிட்டு விலகிவிடும் என அவருக்குத் தெரியும். ஆனால் ஒரு மனிதன் அவனுடைய மனதைப் பொறுத்தவரையில், அதிகவனமாக இருக்க வேண்டும்; அதுவே மிக முக்கியமான அளவில் பயன்படக்கூடிய ஒன்று. மனதை கட்டுப்படுத்தி சரியான கோணங்களில் வழிநடத்த வேண்டும்.**

**இந்தப் பூத உடலை, எப்படியாயினும் ஒரு நாள் விட்டு விடவேண்டிய தருணத்தில், எதற்காகவாவது பயன்படுத்த வேண்டுமெனில், அதை கடவுள், குருநாதர், சகமனிதர்கள் என்ற மூன்று காரணிகளுக்கான சேவையில் ஈடுபடுத்த வேண்டும். இந்த உடல் களைப்புற்று, தேய்ந்து போகலாம் - ஒருவருக்குக் கஷ்டங்களைக் கொண்டுவரலாம் - எதுவானால் என்ன? ஒருவன், மனித உடலில் கஷ்டங்களை அனுபவிக்க விதிக்கப்பட்டவன் தானே! ஒருவரின் உடல் செயல்பாட்டுடன், துடிப்பாக இருக்கும் வரையில், அவருடைய சக்தியை நல்ல, உன்னதமான பணிகளில் ஈடுபடுத்தினால், அவர் அதை நல்ல காரணங்களுக்காகப் பயன்படுத்தி இருப்பதாகக் கூறலாம்.**

1925 ஜூலை 4ஆம் நாள், கோதுமை, கம்பு, வரகு போன்ற தானியங்களை அரைப்பதற்கான கைத்திருவைகளைத் தனியாக ஓரறையில் வைத்து, ஆண் மண்டலி ரொட்டிக்கான மாவை அரைத்துத் தயார் செய்தனர். தினமும் காலை ஏழு மணியிலிருந்து ஒன்பது மணி வரை மாவரைக்கும் பொறுப்பு அர்ஜுன், பெஹராம்ஜி, மாருதி பாட்டீல், விஷ்ணு, ருஸ்தம் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. பாபா அவ்வேலையைத் தனியாகக் காலையில் ஒரு மணி நேரம் செய்யத் தொடங்கி, பின்னர் இரண்டு மணி நேரம் செய்துவந்தார்.

ஒரு நாள் பாபா அவ்வாறு மாவு அரைத்துக் கொண்டிருந்த வேளையில், புதிய நபர் ஒருவர் பாபாவின் தரிசனத்திற்காக வந்திருந்தார். பாபா அவரிடம், **“நான் சோளமாவு அரைத்துக் கொண்டிருக்கிறேன், மேலும், உங்களுக்கு என்னுடைய தரிசனம் வேண்டுமாயின் நீங்களும் எனது பணியில் பங்கெடுக்க வேண்டும்.”** என்றார்.

வந்தவர் திகைப்புற்று, “பாபா, நான் உங்கள் தரிசனத்திற்காக வந்துள்ளேன், மாவு அரைப்பதற்காக அல்ல!” என்று பதிலளித்தார்.

பாபா புன்முறுவலுடன் கூறினார்: **“இப்படி தானியங்கள் அரைப்பவனின் தரிசனத்தைப் பெறுவதில் என்ன பயன்? யார் என்னுடைய தரிசனத்திற்காக வருகிறார்களோ அவர்களை நான் முற்றிலுமாக அரைத்து தூள் தூளாக்கி விடுகிறேன். அவ்வாறு ‘அரையாமல்’ எனது தரிசனத்தை எப்படி நீங்கள் அடைய முடியும்? நான் சொல்வதைச் செய்ய உங்களுக்கு**

**சிறிதளவும் விருப்பம் இல்லாதபோது, நான் எப்படி தரிசனம் வழங்க முடியும்?"**

மெஹர் பாபாவின் வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாமல், "பாபா, நான் உங்களைப் பார்த்து விட்டேன், இப்போது வணங்கி விடைபெறுகிறேன்" என்றார்.

"சரி, தரிசனத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று பாபா கூறியதும், வந்தவர் பாபாவின் பாதங்களை வணங்கி விடைபெற்றார். அதற்குப் பிறகு, பாபா, மண்டலிக்கு இவ்வாறு விளக்கமளித்தார்: "**எனது தரிசனத்திற்காக வந்தவர் அவருடைய ஆசைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு அடிபணிந்து செல்கிறார், எனது பாதங்களில் அல்ல! இன்று, நான் கூறியதை அவர் செய்திருந்தால் உண்மையான இறை தரிசனத்தை வழங்கியிருப்பேன்! நான் அவ்விதமான மனநிலையில் இருந்ததால், மிகுந்த பயனை அடையும் வாய்ப்பை வந்தவர் இழந்து விட்டார்.**"

ஜூலை 8ஆம் நாள், மெஹர் பாபா, அனைத்து ஆண் மண்டலியையும் அழைத்து, ஒரு மணி நேரம், அடுத்த ஒரு வருடகால மௌனத்தின்போது ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும் என்பதை திட்டவட்டமாக எடுத்துரைத்தார். ஒரு சில சீடர்கள் சாஞ்சி, நவல், பார்சோப் மூவரும் அவர்களின் வேலை விஷயமாக பாபாவிடம் கலந்தாலோசிக்க மும்பையிலிருந்து வந்தனர்.

ஜூலை 9ஆம் நாள், அனைத்து நடவடிக்கைகளிலும் இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டன. மெஹர் பாபா அவருடைய வார்த்தைகள் மூலம் அனைத்தையும் வெளிப்படுத்தினாலும், பொது வழிமுறைகளை காகிதத்தில் எழுதி ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடத்தில் அறிவிப்புப் பலகையில் வெளியிடுமாறு உத்தரவிட்டார். பெஹராம்ஜி தலைமை கண்காணிப்பாளராகவும், ருஸ்தம் அவருக்குத் துணைவராகவும் நியமிக்கப்பட்டனர். அர்ஜுனை பள்ளிக்கூட கண்காணிப்பாளராக நியமித்து மாணவர்களின் நன்னடத்தை, முன்னேற்றத்திற்கான பொறுப்பும் அவருக்கு வழங்கப்பட்டது. மெஹராபாத்திற்குத் தேவையான சரக்குகள் சேமிப்பு அறையின் பொறுப்பு குஸ்தாஜிக்கும், மருத்துவமனை மற்றும் மருந்தகத்தின் பொறுப்பு பாதிரிக்கும் தரப்பட்டது.

இந்த ஐவர் மட்டுமே அவர்களின் பணி சம்பந்தப்பட்ட விஷயங்களை, அதுவும் குறிப்பிட்ட நேரங்களில் பாபாவிற்கு எடுத்துரைக்க வேண்டும்; வேறு எவரும் பாபாவுடன் நேரடியாகப் பேசத் தடை விதிக்கப்பட்டது. பாபா அவர்களிடம் பேச விரும்பினால் சைகை அல்லது எழுத்து மூலமாக அதைத் தெரிவிக்கும் வேளையில் மட்டுமே, சம்பந்தப்பட்ட நபர் பாபாவுடன் பேசவேண்டும் என்பதைத் திட்டவட்டமாக விளக்கினார். இவ்வேளையில் பாபா நான்கு மணி நேரம் கைத்திருவைகள் மூலம் மாவரைக்கும் பணியைத் தொடர்ந்தார். அதே வேளையில் அவருடன் இவ்வேலையில் ஈடுபட்ட மண்டலி எவரும் பாபாவுடன் பேச அனுமதிக்கப்படவில்லை.

அன்று மதிய வேளையில் மெஹர் பாபா, சிறுவர்களின் பெற்றோர்களை ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூடத்தில் சந்தித்து, எதிர்வரும் ஓராண்டு கால மௌனத்தைப் பற்றி விளக்கினார். அப்போது, அச்சிறுவர்கள் அவருடன் இருப்பதன் ஆன்மீக முக்கியத்துவத்தை பாபா எடுத்துரைத்தார். பெற்றோர்கள் உடனே '**அவர்கள் குழந்தைகளை எந்த சூழ்நிலையிலும் திருப்பி அழைத்துச் செல்லமாட்டோம்**' என வாக்குறுதி அளித்தனர்.

அதற்குப் பிறகு பாபா, மண்டலி அனைவரையும் அழைத்து நெடு நேரம் உரையாடினார். அனைவரும் பாபாவின் வார்த்தைகளுக்கு கவனமாக செவிமடுத்தனர். ஏனெனில் அடுத்த ஓராண்டிற்கு இதுவே அவருடைய கடைசி வார்த்தைகளாகவும், குருநாதரின் குரலைக் கேட்கும் கடைசி வாய்ப்பாகவும் இருந்தது.

1925, ஜூலை 9ஆம் நாள் மெஹர் பாபா மண்டலியுடன் கடைசியாக நிகழ்த்திய மூன்று தலைப்புகளை உள்ளடக்கிய பேச்சும் விவாதமும்: முதலாவதாக, பாபா அனைவருக்கும் அளித்த பொதுவான அறிவுரை:

**"நீங்கள் பிறருக்காக வாழவேண்டும்; மேலும் உங்கள் உடல்களை பிறரின் நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும்!"**

அதற்குப் பிறகு பாபா, மௌனமாக இருக்கப்போவதன் காரணம், ஹஸ்ரத் பாபாஜானை சம்பந்தப்பட்டது என்று கூறி இவ்வாறு விளக்கமளித்தார்: **"நான், சில அதிகப்படியான ஆன்மீகப் பணிக்காக மௌனம் அனுஷ்டிக்க வேண்டியது அவசியம். அது கூடிய விரைவில் பாபாஜான் அவர் உடலைத் துறக்கும் தருவாயில் நிகழும்."**

இறுதியாக, அவர் சுயமாகத் தன்னை மௌனத்தில் ஆழ்த்தியது கூட, உலகின் எதிர்காலத்தோடு தொடர்புடையது என்று விளக்கினார்: **"எங்கும் மத, சமூக பகைமை, கலவரங்கள், உலகளாவிய போர்கள் மற்றும் இயற்கை பேரழிவுகள் நிகழும். இவ்வித நிகழ்வுகள், பொதுவாக உலகம் முழுவதும், பல்லாயிரக்கணக்கான மக்களை இரத்தம் சிந்தவைக்கும், குறிப்பாக இந்திய தேசத்தில். ஆனால், அதன் பின்னர் உலகில் அமைதியும், சகோதரத்துவமும் நிலவும்."**

மெஹர் பாபா அப்போது அங்கிருந்த பெண் மண்டலியில் ஒருவரான குல்மாயின் பக்கம் திரும்பி, இவ்வாறு கூறினார்: **"உலகில் மீண்டும் ஒரு போர் உருவாகும்; அது இதற்கு முந்தைய போரை விட பன்மடங்கு அழிவை உண்டாக்கி, வெகு நாட்கள் தொடரும். இரத்த ஆறுகள் கரைபுரண்டு ஓடும்! நான் எனது கைக்குட்டையை அந்த ஆற்று இரத்தத்தில் நனைத்து தலையில் சுற்றிக் கட்டுவேன்! உலகம் கடவுளை வேண்டி, கூக்குரல் எழுப்பும்வரை நான் எனது மௌனத்தைக் கலைக்கமாட்டேன்!"**

பள்ளிக்கூட ஆசிரியர் பண்டோபா, பாபாவிடம் மன்றாடினார்; இவ்வாறு, பாபா மௌனமாக இருந்தால் அவர் கூற விரும்புவதை கேட்கும் வாய்ப்பை மக்கள் இழந்து விடுவார்கள்; உலகம் அவரது போதனைகளை அறியமுடியாமல் ஆகிவிடும்! பாபா, உடனே இவ்வாறு பதிலளித்தார்:

**“நான் கற்பிக்க வரவில்லை; ஆனால் விழிப்பூட்ட வந்துள்ளேன்!”**

இதுவே அவர் கூறிய இறுதி வாக்கியம்! இதுவே மெஹர் பாபாவின் தெய்வீக பணியின் சாராம்சம்!

ஜூலை 9ஆம் நாள் மாலை வேளையில் மெஹர் பாபா, தபால் அலுவலக கட்டிடத்தில் வாழும் பெண் மண்டலியை சந்தித்து, அவரது இறுதி வாய்மொழி அறிவுறுத்தல்களை வழங்கினார்: **“இப்போது என்னுடைய கடைசி வார்த்தைகளை கவனமாகக் கேளுங்கள், ஏனெனில் நாளையிலிருந்து ஓராண்டு காலத்திற்கு நான் மௌனம் அனுஷ்டிக்கப் போகிறேன். அன்புடன் உங்கள் கடமைகளைச் செய்து, முழுமனதுடன் அவைகளை நிறைவேற்றுங்கள். பள்ளிக் குழந்தைகளை உங்கள் சொந்த குழந்தைகளாக நினைத்து அவர்களுக்கு உணவு தயார் செய்து வழங்குங்கள்.**

**“உலகத்திற்காக நான் செய்யவேண்டிய பணிகள் ஏராளம். என்னுடைய பணி முடிந்ததும் மறுபடியும் நான் பேசுவேன்.”**

பாபா பெண்மணிகளிடமிருந்து விடைபெற்று, மாஸாஜியுடன் ஆண் மண்டலியின் இருப்பிடம் சென்று, அவர்களிடம் ஒரு வருட மௌனத்தைப் பற்றி எடுத்துரைத்தார். வழக்கம்போல மெஹராபாத்தில் அனைத்திலும் கவனமாகச் செயல்படவும், உடல்நலனை நன்றாகப் பார்த்துக் கொள்ளவும் கூறினார்.

**“இரவு நேரத்தில் வெளியே செல்லும் வேளையில், எப்பொழுதும் ஒரு கைவிளக்கை எடுத்துச் செல்லுங்கள். பாம்புகளைப் பொறுத்தவரையில் எந்நேரமும் ஜாக்கிரதையாக இருங்கள்! சூரியனுக்குக் கீழே நிகழும் அனைத்து ஆபத்துக்களிலிருந்தும் நான் உங்களைக் காப்பாற்றுவேன், ஆனால் பாம்பு கடித்தால் மட்டும் என்னால் உதவ முடியாது. எனவே எச்சரிக்கையாக இருங்கள்!**

**“உங்கள் பணிகளை முறையாகச் செய்தவண்ணம் இருங்கள். அவரவர் பணியை நான் ஏற்கனவே தீர்மானித்துள்ளேன். ஒவ்வொருவரும் தொடர்ந்து அதைச் செய்யுங்கள். நான் மௌனமாக இருந்தாலும் உங்கள் பணியில் எந்த இடையூறும் இராது; மெஹராபாத்தில் அனைத்தும் சுமூகமாக நடக்கும். நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. நான் அமைதியாக இருப்பதற்கு பல சொந்த காரணங்கள் உள்ளன. நான் இதைச் செய்தாக வேண்டும்.**

**“உங்கள் பணிகளில் கவனம் செலுத்தி என்னுடைய கட்டளைகள்படி அனைத்தையும் செய்யுங்கள். வேலையிலிருந்து சற்றும் விலகிவிடாதீர்கள்; கவலையும் அடையாதீர்கள். நீங்கள் எனக்குக் கீழ்ப்படிந்தால் கடினமானது எதுவுமில்லை.”**

இரவு நேரம் 8:30, பாபா அனைவரையும் சந்தித்த பின்னர் அவருடைய குடிலுக்குச் செல்வதாகக் கூறி விடைபெற்றார். சில நிமிடங்களில் அங்கிருந்த ஏறக்குறைய 20 மண்டலியும் அவரவர் இருப்பிடத்திற்குச் சென்றனர்.

பாதிரி படுக்கைக்குச் செல்லும் முன்பு கழிவறைக்குச் செல்ல சில அடிகளை எடுத்து வைத்ததும், வழியில் மூன்றடி நீள நாகப்பாம்பைக் கண்டார். கைவிளக்கை ஏந்திச் சென்று பாம்பு என ஊர்ஜிதம் செய்து, 'பாம்பு! பாம்பு!' எனக் கத்தினார். அருகிலிருந்த மண்டலி பாம்பை அடித்துக் கொன்றனர்.

பாபா, அந்தக் கூச்சல் சத்தத்தைக் கேட்டு வெளியே வந்து வினவினார், **"அங்கே என்ன சத்தம்?"**

"பாபா, நாங்கள் ஒரு நாகப்பாம்பைக் கொன்றோம்!"

**"யார் அதைப் பார்த்தது?"**

"நான்" என்றார் பாதிரி.

**"கைவிளக்கை எடுத்துச் சென்றீர்களா?"** பாதிரி ஆமாம் என்று தலையசைத்தார். பாபா மகிழ்ச்சியடைந்தார். பாதிரி ஒரு கோலை பாபா கையில் கொடுக்க, பாபா பாம்பின் தலையை கோலால் சிதைத்தார்.

பாதிரியின் கைகால்களைக் கழுவி சுத்தம் செய்யக்கூறி பாபா எச்சரித்தார்: **"உங்கள் அனைவரையும் மறுபடியும் எச்சரிக்கிறேன். பாம்புகளைப் பார்த்து கவனமாக இருங்கள்! எப்போதும் கைவிளக்கை ஏந்திச் செல்லுங்கள். இப்போது அனைவரும் சென்று நன்றாகத் தூங்குங்கள்."**

மெஹர் பாபா, உடனே பெண் மண்டலி இருந்த பக்கம் சென்று, ஓரிரு வார்த்தைகளில் சுருக்கமாகக் கூறினார்: **"இன்று நீங்கள் என்னுடைய குரலைப் பலமுறை கேட்டீர்கள்! நீங்கள் எவ்வளவு பாக்கியசாலிகள் தெரியுமா? பாம்பைக் கொன்ற இந்த சம்பவம், கடைசியாக இன்னுமொரு முறை எனது குரலைக் கேட்கும் வாய்ப்பாக அமைந்தது."** பாபா, உடனே பெண் மண்டலியிடமிருந்து விடைபெற்று தனது குடிலுக்குள் நுழைந்தார். மாஸாஜி இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிந்தார்.

1925, ஜூலை 10ஆம் நாள், மெஹர் பாபா வழக்கம்போல, காலை ஐந்து மணிக்குத் தனது குடிலிலிருந்து வெளியே வந்து, மண்டலி இருக்கும் இடத்திற்குச் சென்றார். எதிர்பார்த்ததற்கு மாறாக பாபா, மண்டலி, ஆசிரியர்கள், குழந்தைகள் அனைவரிடமும் அவர்களது உடல்நலம், தூக்கம் மற்றும் உணவு பற்றிய வழக்கமான கேள்விகளைக் கேட்டார் - அனைத்தும் எழுத்து மூலம். இப்படி அந்நாளிலிருந்து, மௌனம் அனுசரித்தாலும், மெஹர் பாபா அனைத்து விஷயங்களிலும் மிகுந்த விழிப்போடும், கவனத்துடனும், குறிப்பாக இரண்டு மேற்பார்வையாளர்களான பெஹராம்ஜி, ருஸ்தம் அவர்களின் பொறுப்புகளிலும் கவனமாக இருந்தார்.

அன்றுமுதல் பல மாதங்களுக்கு, பாபாவுடன் அரன்காவ்ம் கிராமத்தைச் சேர்ந்த 'பால்' எனும் சிறுவன் துணையாக எப்போதும் உடனிருந்தான். பாபா

அவன் மீது ஓர் இனம்புரியாத நட்பை வைத்திருந்தார். பால் அவன் கைகளில் பென்சில், பேப்பர், சாக்குக்கட்டி மற்றும் கற்பலகையை தவறாமல் உடன் எடுத்துச் சென்றான். பாபா அவர் பேசவிரும்புவதை எழுதிக் காட்டுவது வழக்கம்.

மெஹர் பாபா இயல்பாகவே மிகுந்த வெளிநோக்கும், சரளமான வாக்குத்திறனும் படைத்தவர் ஆகையால், தன்னிச்சையாகவே பாடல்கள் பாடுவதும், கவிதைகள் படிப்பதும் அவ்வப்போது நிகழும் செயல். எனவே, மண்டலியில் பலர், பாபா ஒரு வருட காலம் மௌனம் அனுஷ்டிக்க இருப்பதில் சந்தேகத்தை வெளிப்படுத்தினர். ஆனால் நாட்கள் கடந்த நிலையில் ஒரு வார்த்தைக் கூட வெளிவராமல், முழுக் கட்டுப்பாட்டுடன் இருந்ததைக் கண்டு மண்டலி பெரிதும் ஆச்சரியத்திற்கு உள்ளாயினர். அருமையான குரலிருந்தும் மக்கள் அதை கேட்கும் வாய்ப்பளிக்காமல், பஜனை நிகழ்ச்சிகளில் பாபா பங்கெடுத்தார். அவ்வேளையில் விரல்கள் தாளமிட அவ்வப்போது கை சைகைகளைக் காட்டி அனைவரையும் ஊக்கப்படுத்தினார்.

மண்டலியின் ஏதாவது தவறுகளுக்காக கோபமுறும் வேளையில், பாபா அவரது கற்பலகையைப் பலமாக அவர்களின் கைகளில் அல்லது தொடைகளில் அறைவதுண்டு. ஒருவரும் ஏன், எதற்காக என்ற கேள்விகளை எழுப்புவதே இல்லை. ஒரு முறை அவரிடம் இருந்த மூன்று கற்பலகைகளையும் ஏதோ ஒரு மண்டலி மீது எரிச்சலில் வீசினார்! எரச்ஷா, அப்போது உதவியாளராகப் பணிபுரிந்தவர், பாபாவின் திடீர் சீற்றத்தின் முக்கிய பங்கை தன் மீது ஏற்றுக் கொண்டார்.

மெஹர் பாபா, இதற்கு முன்பு நான்கு முறை மௌனம் கடைப்பிடித்துள்ளார், ஆனால் 1925, ஜூலை 10ஆம் நாள் தொடங்கிய மௌனம், இறுதிவரை நிலைத்தது. எஞ்சிய உலக வாழ்நாட்களில் ஒரு வார்த்தைக் கூட வெளிவந்தது இல்லை.

பாபா, மௌனமாக இருந்தாலும் அருகாமையில் இருப்பவர்கள் அவர் மௌனமாக இருப்பதை ஒருபோதும் உணர்ந்ததில்லை; அது அவருடைய பணிகளுக்கு எந்தத் தடையாகவும் இருந்ததில்லை. மாறாக, பாபா மெஹராபாத்தில் தினமும் ஈடுபடும் பணிகளின் அளவு மேலும் அதிகரித்தது.

தினமும் நடக்கும் வழக்கமான வேலைகளில் சுறுசுறுப்பாகக் காணப்பட்டார். அருகாமையில் இருப்பவர்கள், பாபா அவருடைய கற்பலகையில் வெகு விரைவாகவும், உறுதியாகவும் எழுதும் அறிவுரைகள், வாழ்த்துக்கள் மற்றும் சொற்பொழிவுகளை எழுதிக்கொள்வதில் மிகவும் கவனமாக இருந்தார்கள்.

ஜூலை 13ஆம் நாள், மௌனம் ஆரம்பித்த மூன்றாவது நாள், மெஹர் பாபா ஒரு புதிய நடவடிக்கையைத் தொடங்கினார். புதிய புத்தகம் ஒன்றை எழுதப்போவதாக அறிவித்தார். அவருடைய குடிலில், தினமும் அதிகாலை ஆறு மணிக்கு அதை ஆரம்பித்து குறைந்தது இரண்டு மணி நேரம் எழுதிவிட்டு,

பின்னர் இதர பணிகளில் ஈடுபட்டார். பெரும்பாலும் ஆங்கிலத்தில் எழுதி இடையிடையே குஜராத்தி மற்றும் பெர்சியன் சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். பல மாதங்களுக்கு இப்பணி தொடர்ந்தது.

ஒரு முறை, மெஹர் பாபா மண்டலியிடம் இவ்வாறு வலியுறுத்திக் கூறினார்: “**எதிர்வரும் ஓரிரு வருடங்களுக்கு உங்களால் இயன்றவரை உழைக்க வேண்டும். உழைப்பின் பலனாக இறைவனின் அருளும் ஆசியும் உங்களுக்காகக் காத்திருக்கும்.**”

மற்றொரு நாள், பாபா அவருடைய கற்பலகையில் இதை எழுதினார்:

**எனது நாவிலிருந்து வார்த்தைகள் வெளிவராமல் தடுப்பது**
**எனது மனதிற்கு மிகவும் இம்சையான ஒன்று!**
**நான் பேச வேண்டும், பேசியாக வேண்டும்,**
**என்றாலும் ஊமையாக இருக்கிறேன் இன்று!**

ஜூலை 16ஆம் நாள் மதிய வேளையில் பாபா ஒரு கவிதைக்கு உருகொடுத்தார்:

**வாழ வீடில்லா பிச்சைக்காரன்;**
**அரண்மனை இல்லா பேரரசன்!**
**இன்று இதைக் குறித்துக்கொள்ளுங்கள்,**
**என்வசம் இல்லை இவ்விரண்டும்.**
**நீங்களே கூறுங்கள் இப்போது நான் என்ன செய்யட்டும்?**

# மௌன மொழிகள் - பாகம் ஒன்று

**(Silent Words)**

பூனாவில், குடிலில் தங்கியிருந்த வேளையில், மெஹர் பாபா மராட்டிய மன்னர் சிவாஜியைப் பற்றிக் கூறும்போது, '**சிவாஜி, பாபாவின் சிறிய அவதாரங்களில் ஒன்று**' எனக் குறிப்பிட்டார். 1925, ஜூலை 13ஆம் நாள், பாபா அதைக் குறித்து மீண்டும் எடுத்துரைத்து, கற்பலகையில் எழுதி, உண்மையென உறுதிபடக் கூறினார்: "**ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்கள், சிவாஜியை வேறுவிதமாக வெளிச்சமிட்டுக் காட்டினாலும், அவரைப் போன்ற துணிச்சல்மிக்க, நேர்மையான, புத்திசாலித்தனமுள்ள, கனிவான, களங்கமற்ற போர்வீரர் வேறு எவருமில்லை. அவர், ஆன்மீக குருவான சுவாமி ராம்தாஸின் உன்னதமான பக்தனும், உண்மையான சீடருமாக இருந்தார். அதே சிவாஜி, இப்போது, இந்த உருவத்தில் தோன்றி, விரைவில் நிகழவிருக்கும் மிகப்பெரிய ஆன்மீக எழுச்சியில் முக்கிய அங்கம் வகிக்க உள்ளார்.**"

பாபா, மேலும் இவ்வாறு குறிப்பிட்டார்: "**ஜீஸஸின் காலகட்டத்திலும் நான் இருந்தேன்; ஆனால் அது வேறு விஷயம். இது ஓர் இரகசியம், எனினும் அதில் ஒரு பாகத்தை நான் இப்படி வெளிப்படுத்தினேன்.**"

சிவாஜியைக் குறிப்பிட்டு, அர்ஜுன், பாபாவிடம் வினவினார்: "அப்போது இருந்தவர்கள் எவரேனும் இப்போது இருக்கிறார்களா?" பாபா, ஆமாம் எனத் தலையசைத்து, கற்பலகையைக் கேட்டு வாங்கி இவ்வாறு வெளிப்படுத்தினார்: "**அவருடன் பல பேர் இருந்தாலும், ஏறக்குறைய 24 பேர் அக்காலத்தில் முக்கிய அங்கம் வகித்தனர். இவர்களில் 10 பேர், இரண்டு வருடத்திற்குள், உலகின் உன்னத ஆன்மீகப் பணியின் கருவிகளாக விளங்குவார்கள். சிவாஜியால் கொல்லப்பட்ட அஃப்ஸல் கான்** (AFZAL KHAN), **பணியில் பெரும்பங்கு வகிக்கிறார். ஓர் அயல் நாட்டவரும் அப்போது முக்கிய பங்கெடுத்தார்; அவரும், சிவாஜியின் அவையில் முக்கிய உறுப்பினராக இருந்தது போல் இப்போதும் இருக்கிறார். சிவாஜி, இப்போது இறை நிலையை அடைந்துவிட்டார்; அவர் மூலமாக, விரைவில், அவருடன் இருந்தவர்களும், குறிப்பிட்ட நேரத்தில், அவருடைய திட்டங்களில் ஆற்றல்மிக்க செயல்களைச் செய்ததை உணர்ந்து கொள்வார்கள்.**"

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: "**இதைப் பற்றி சிந்திக்க வேண்டாம்; இப்படியே போகட்டும். எல்லாமே ஒரு புதிர். ஆனால் அறிய வேண்டியவர்கள் இன்னும் இரண்டு வருடங்களுக்குள் இதை அறிந்து கொள்வார்கள்.**"

அடுத்த நாள் பாபா மறுபடியும் அதே இரகசியமான கருத்துக்களை எடுத்துரைத்தார்:

"**1927இல் இந்த இரகசியங்கள் வெளிவரும் அதே வேளையில்,**

**கண்பார்வை அற்றவர்களுக்குப் பார்வையும், உயிரிழந்தவர்களுக்கு மறு உயிரும் அளிக்கப்படும்.”**

ஜூலை 22 அன்று மெஹர் பாபா ‘**தெய்வீக பார்வை**’யைக் குறித்து வழங்கிய விளக்கவுரை:

**உதாரணமாக,** 25000 **மக்கள் இங்கே இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம், அனைவரின் பார்வையும், பார்க்கும் பொருளும் ஒன்று - அதாவது ஒரு பந்து. இப்போது, கடவுளின் பார்வையை எடுத்துக் கொண்டால்,** 25000 **ஜோடி கண்களின் பார்வையையும் அவர் ஒருவரின் ஞான திருஷ்டி வழியாகப் பார்த்து விட முடியும். ஒவ்வொரு ஜோடி கண்களின் முன்னால் பல்வேறு நிற கண்ணாடிகளை வைத்து, கண்ணாடிகளின் முன்னால் ஒரு பந்தை வைக்கவும். அனைவரின் கண்களின் பார்வை ஒன்று; அனைவரும் பார்க்கும் பந்தும் ஒன்று! ஆனால், சிகப்பு நிற கண்ணாடியை அணிந்தவருக்கு, பந்து சிகப்பாகவும், மஞ்சள் நிற கண்ணாடி வழியாக மஞ்சளாகவும், வெண்ணிற கண்ணாடி வழியாக வெண்மையாகவும் தெரியும். இப்படியாக, ஒவ்வொருவரும், வேறுபட்ட நிற பந்தைப் பார்க்கிறார்கள்.**

**பார்வை ஒன்று, பந்தும் ஒன்று; ஆனால்** 25000 **மக்களுக்கும் அந்தப் பந்து வேறுபட்ட நிறங்களில் தெரிந்தது. இந்த வேறுபட்ட அனுபவம் வித்தியாசமான கண்ணாடிகளால் ஏற்பட்டது. அனைத்து நிறங்களும் வேறு வேறு மனங்களையும், வேறுபட்ட கண்ணாடிகள் வெவ்வேறு உடல்களையும் குறிக்கும். விதவிதமான நிறங்கள் மற்றும் கண்ணாடிகளை ஊடகமாகக் கொண்டு, கடவுள் ஞான திருஷ்டி வழியாகப் பந்தைப் பார்க்கிறார்.**

**இப்படி, தீர்க்கதரிசி** (கடவுள்), **நிறம்** (மனம்), **கண்ணாடிகள்** (உடல்கள்) **என ஒப்பிடலாம். கடவுள் ஒருவரே. பந்தும்** (மாயை) **ஒன்றுதான், ஆனால், கடவுள் பல்வேறு மனங்கள் மற்றும் பலவகையான வழிகள் மூலமாக இம்மாயாவை அனுபவிக்கிறார்.**

**அனைத்து எண்ணங்களும் வேறுவேறு, உணர்வுகள் வெவ்வேறு, சுக துக்கத்தின் அனுபவங்களும் வேறுபட்டவை என்று நீங்கள் அறிவீர்கள். இதற்குக் காரணம் அனைவரின் மனங்களும் மாறுபட்டவை. எண்ணங்கள், அனுபவங்கள், மனங்கள் மற்றும் உடல்கள் அனைத்தும் வேறுபட்டு இருந்தாலும், ஒன்றே உருவான இறைவன், மாயை எனும் பந்து மூலமாக, எண்ணிலடங்கா உடல் மற்றும் மனங்களின் அனுபவங்களை, வேறு வேறு வழிகளில் அடைகிறார். அந்த இறைவன் பார்ப்பது நிறத்தையோ அல்லது கண்ணாடியையோ அல்ல; அவரின் ஞானதிருஷ்டியால் நிறம்** (மனம்) **மற்றும் கண்ணாடி** (உடல்) **வழியாக அந்தப் பந்தைப்** (மாயையை) **பார்க்கிறார். இவை அனைத்தையும் அனுபவிக்கும் இறைவன் அந்த மனம் அல்ல; ஆனால் அவர் மனங்கள் மற்றும் உடல்கள் எனும் ஊடகங்கள் வழியாக மாயாவைப் பார்க்கிறார்.**

அடுத்த நாள் காக்கா ஷஹானே (KAKA SHAHANE) இல்லத்திற்கு விஜயம் செய்த வேளையில் மெஹர் பாபா தொடர்ந்து சுதந்திரத்தைப் பற்றிய கதையை விளக்கினார்:

**பிறப்பிலிருந்தே ஒரு கிளி சுதந்திரமாக, ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்தை நோக்கிப் பறந்து சென்று, அது விரும்பிய பழங்களை உண்டு, மேலும், அஹமதுநகரில் உண்ட பின்பு தூரத்திலிருக்கும் மும்பைக்குப் பறந்து சென்று, கழிவுகளை அங்கே கொட்டியது. பிறவியிலிருந்தே சுதந்திரப் பறவையாக இருந்தாலும், சுதந்திரம் என்றால் என்ன என்று தெரியாமலே இருந்தது! அது எப்போதும் 'சுதந்திரம் என்பது என்ன?' என்று கேள்வி எழுப்பி 'என்னை விடுவியுங்கள்! என்னை விடுவியுங்கள்!' என்று கதறியது.**

மெஹர் பாபா, சகோதரர் பெஹராமைச் சுட்டிக்காட்டி, விளக்கத்தை தொடர்ந்தார்.

**பெஹராமை போன்ற தத்துவஞானி ஒருவர் கிளியைப் பார்த்துக் கூறினார், 'சகோதரனே! நீ, ஏற்கனவே சுதந்திரமாகத்தான் இருக்கிறாய்.' ஆனால் அந்தப் பறவை சுதந்திரத்தைப் பற்றி எதுவும் அறியாததால், 'அனைத்தும் சரிதான்! சுதந்திரம் என்றால் என்ன என்பதை நான் உனக்குக் காட்டுகிறேன். முதலாவதாக, பணிவுடன் நீயாக என்னிடம் வந்து, எனது கண்காணிப்பில் இருக்க வேண்டும்.'**

**புத்திசாலியான பறவை, பெஹராமிடம் பறந்து வந்து கூறியது, 'இப்போது நான் உங்கள் கைகளில் உள்ளேன். எனது கழுத்தை நீங்கள் திருகி விட முடியும் அல்லது சுதந்திரத்தின் அனுபவத்தை எனக்கு வழங்க முடியும்.'**

**எப்படியாகிலும், பெஹராம் அந்தக் கிளியை ஒரு கூண்டிலடைத்தார். சில நாட்களில், அந்தக் கிளி பறக்க முடியாமல், விரும்பிய பழங்களை உண்ண இயலாமல், அதற்குப் பிரியமான மரத்தில் அமர முடியாத நிலையைக் கண்டுகொண்டது. அது கூண்டில் அடைக்கப்பட்டிருந்ததால் 'நான் சுதந்திரமாக இருந்தேன்' என்ற எண்ணம் அந்தக் கிளிக்கு வந்தது. ஏற்கனவே இருந்த சுதந்திரத்தை இழந்த அந்தக் கிளி, சிறையில் அடைபட்ட போதுதான் சுதந்திரம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொண்டது.**

**ஒவ்வொரு ஆத்மாவும் கடவுள்; சுதந்திரமானது; ஆனால், ஒருவர் ஆரம்பத்திலிருந்தே சுதந்திரமாக இருப்பதால், ஆத்மாவின் சுதந்திரத்தைப் பற்றிய எந்த அறிவும் கிடையாது. அதை அடைவதற்கு, ஒருவர் ஒரு சத்குருவின் தொடர்பில் வர இடந்தர வேண்டும். ஒருவர் அவர் கழுத்தை, சத்குருவின் கைகளில் கொடுக்கும்போது, சத்குரு அவருடைய கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் அடக்கி வைத்து ஆத்மாவின் மெய்யான சுதந்திரத்தின் அனுபவத்தை வழங்குகிறார்.**

மெஹர் பாபாவின் செயல்முறைகளில் ஒன்றை, அற்புதமான உதாரணத்துடன் கீழே காணலாம். ஒரு குருநாதர், நாம் எதைக் கைவிட வேண்டுமென விரும்புகிறாரோ, அதைச் சில நேரங்களில் செய்யுமாறு ஊக்குவிப்பதன் மூலமாகப் புரிய வைப்பதுண்டு. இவ்விதமாக, சில மத சார்பான பழக்கவழக்கங்கள் பயனற்றது என அனுபவபூர்வமாக மண்டலியை உணரச் செய்து, தாமாகவே பழைய முறைகளிலிருந்து வெளியே வர வழிவகுத்தார். மதத்தின் பெயரில், மக்கள், விடுமுறை நாட்களில் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறார்கள்; ஆனால், அதன் சாராம்சத்தை மறந்து விடுகிறார்கள். ஆரம்ப நாட்களில், மெஹராபாத்தில், வெளியளவில் மதப் பண்டிகைகள் கொண்டாடுவதைக் கைவிடும் நோக்கத்தில், பாபா, இந்து மண்டலியை அவர்களின் மதப் பண்டிகைகளை, மிகுந்த ஆடம்பரமும் உற்சாகத்துடனும் கொண்டாட ஊக்குவித்தார். இது, இயல்பாகவே முஸ்லிம் மற்றும் ஸொராஸ்டிரிய மண்டலியைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. பாபா, இப்படி ஒரு நிலைமையை உருவாக்கி, அதில், மண்டலி அவர்களாகவே ஆன்மீக உண்மைகளுக்கும், செயற்கையான வழிபாட்டு முறைகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அறிந்துகொள்ள வழி வகுத்தார்.

1925, ஜூலை 29 அன்று பாபா, அர்ஜுனிடம், கிருஷ்ண பகவானின் பிறந்தநாளை ஏழு நாட்கள் கொண்டாட ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்தினார். பார்சி மற்றும் ஈரானி மண்டலி, பாபா இந்துக்களுக்கு ஆதரவாக இருந்து அவர்களின் மத பண்டிகைகளைக் கொண்டாடுவதாகவும், அதே வேளையில், ஸொராஸ்டிரிய மதப்பண்டிகை நாட்களைத் தவிர்ப்பதாகவும் புகார் செய்ததால், ருஸ்தம், அன்று காலை, அவர்களை ஓர் இரகசிய கூட்டத்திற்காக அழைத்திருந்தார். இந்த இரகசிய சந்திப்பைப் பற்றி பாபா கேள்விப்பட்டதும், வருத்தத்துடன் அனைவரையும் தன் முன்னே வருமாறு அழைத்தார்.

**முதலாவதாக, என்னைத் தவிர்த்து ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்யும் எண்ணம் உங்களுக்கு வந்திருக்கக் கூடாது. அது என்னுடைய கட்டளை அல்ல. இரண்டாவதாக, பண்டிகையை ஒரு வாரம் கொண்டாடக் கூறியதும் எனது கட்டளை. என்னுடைய கட்டளைகளில் எவரும் கவனம் செலுத்துவதில்லை. 'பண்டிகைகளைக் கொண்டாடுவதன் முக்கியத்துவம் என்னுடைய கட்டளை என்பதால்தான், இந்து அல்லது பிற மத பண்டிகைகள் என்பதால் அல்ல' என்று ஏன் நீங்கள் சிந்திக்கவில்லை?**

**நீங்கள், 'எங்கள் பண்டிகைகளைக் கண்டுகொள்ளாமல் அவர்களின் பண்டிகைகளை ஏன் கொண்டாடுகிறீர்கள்?' என்ற வாக்குவாதத்தில் ஈடுபடும்போது, குறுகிய மனம் படைத்த, பிரிவு மனப்பாங்குள்ள உங்கள் மத்தியில் வாழ்வதை விட, ஏதாவது மலைகளில் சென்று ஓய்வெடுப்பது சிறந்தது. நீங்கள் அனைவரும் வெளியளவில் சடங்கு, சம்பிரதாயங்களை ஓரளவு விட்டுவிட்டாலும், உள்ளளவில் பற்றிக் கொண்டிருக்கிறீர்கள். என்னுடைய மண்டலியான நீங்கள் இத்தகைய சடங்கு முறைகளைப் பின்பற்ற விரும்புகிறீர்கள் என்று எனக்குத் தெரிந்திருந்தால் நான்**

உங்களை அனுமதித்திருப்பேன். உங்களின் புத்திசாலித்தனம் அதையெல்லாம் கடந்து செல்லும் என்று நான் நினைத்தேன். கடவுளே! இவர்களின் சிறுபிள்ளைத்தனமான நடத்தையை என்னென்பது?

இங்கிருக்கும் குழந்தைகளில் பெரும்பாலோர், இந்துக்களாக இருப்பதால், அவர்களுக்கு நன்மை பயக்கும் என்ற எண்ணத்தில் நான் இந்தப் பண்டிகைகளுக்கு ஏற்பாடு செய்தேன். இது அவர்களைப் பாடி, ஆடி மகிழவைக்கும் என்று நினைத்தேன். அவர்களுக்காக வெளியளவில் மத பண்டிகைகளைக் கொண்டாடவும், ஆனால் எனது மண்டலியான உங்களுக்கு இறையறிவும், உள்ளனுபவமும் வழங்கலாம் என்றும் நினைத்தேன். அதனால்தான், நான் உங்களுக்கு ஆன்மீக இரகசியங்களைப் பற்றிய சொற்பொழிவுகளும் வழங்குகிறேன். ஆனால் நான் எங்குத் தவறு செய்து விட்டேன் என்று நீங்கள் எனக்குச் சுட்டிக்காட்டியது நல்லதாகப் போயிற்று!

என்னுடைய நோக்கம், வெளியளவில் இக்குழந்தைகளை மகிழ்ச்சியடைய செய்வதும், அதே நேரம் உங்களுக்கு இறை நிலையை அளிப்பதும் ஆகும். ஆனால் நீங்கள், 'ஏன் எங்கள் பண்டிகைகளைத் தவிர்த்து அவர்களின் பண்டிகைகளை மட்டும்?' என்று முறையிடுகிறீர்கள்! அவர்கள், உங்களை எப்போதாவது, 'ஏன் நீங்கள் மட்டும் பாபாவின் ஆசிகளுக்குத் தகுதியானவர்களா? நாங்கள் இல்லையா?' என்று கேட்கிறார்களா? அவர்களுக்கு அது எலும்பாகவும், உங்களுக்கு சதையாகவும் இருந்தது. ஆனால் இப்போது, நீங்கள் எனது கண்களைத் திறந்துவிட்டீர்கள். இந்நேரத்திலிருந்து வெளியளவில் கொண்டாடும் எல்லா பண்டிகைகளையும், உங்களுக்குத் தரும் ஆன்மீக சொற்பொழிவுகளையும் நான் நிறுத்தி விடுவேன். இது உங்களுக்கு சம்மதமா? பாரபட்சம் இல்லாமல் எல்லோரும் சமநிலையில் இருக்க வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள்! அதுவும் சரிதான்! அவர்களுக்குப் பண்டிகைகளும் இல்லை; உங்களுக்கு இறை நிலையும் இல்லை! இந்த சமத்துவத்தை நீங்கள் எந்த அளவுக்கு விரும்புகிறீர்கள்?

உங்களைவிட அதிகம் அறிந்தவன் நான் என்று நீங்கள் நம்புவீர்களேயானால், எனக்குக் கற்றுத்தர முயற்சிப்பானேன்? என்னுடைய கட்டளைகளை எதிர்க்கும் எண்ணத்தில் உங்கள் அனைவரையும் அழைத்துப் பேச ருஸ்தத்திற்கு என்ன உரிமை இருக்கிறது? இதை ஒரு நிமிடம் நினைத்துப் பாருங்கள்; நாம் அனைவரும் ஒன்றாக இணைந்திருக்கும் போது, உங்களுக்கு ஒன்றை செய்ய கட்டளையிடுகிறேன், நீங்களோ உங்களுக்குள் ஒரு கட்டளையைப் பிறப்பித்து, அந்தச் செய்தியை, பெஹ்ராம்ஜி மூலமாக எனக்குத் தெரிவித்து, என்னுடைய கட்டளையை ரத்து செய்ய கோரிக்கை விடுகிறீர்கள். இது முறையாகாது. ஒன்றை எனது விருப்பத்திற்கு மாறாக, உங்கள் விருப்பப்படிச் செய்வது உலகின் வழி. ஆனால் இது உங்கள் குற்றமல்ல. ஒரு சிலரே சரணடைவார்கள்.

**நான், சிறுவர்களுக்காக வெளியளவிலான பொழுதுபோக்கும், உங்களுக்கு இறை நிலையை வழங்கவும் விரும்பினேன். கிறிஸ்துவும் இதைத்தான் செய்தார். பெரும்பாலான மக்களுக்கு, கடவுள் சொர்க்கத்தில் இருப்பதாகப் பறைசாற்றினார். கிறிஸ்து, அவர் கடவுள் என்று வெளிவட்ட சீடர்களுக்கு அறிவித்தார்; ஆனால், உள்வட்ட சீடர்களுக்கு அவர்களே கடவுள் என்பதை வெளிப்படுத்தினார்**.

ஒவ்வொரு மண்டலியும் பாபாவிடம் மன்னிப்புக் கோரினர். அவரது ஆன்மீக உட்பணியின் வழியாக பாபா, மண்டலி ஆர்வத்துடன் கடைப்பிடிக்கும் மத சடங்குகள், மற்றும் பண்டிகைகள் தொடர்பான மனப்படிவங்களிலிருந்து அவர்களை விடுவித்தார். அனைத்து மனப்படிவங்களையும் துண்டித்தாக வேண்டும் என்பதை அவர்களுக்கு நன்கு உணர வைத்தார். ஒன்றே கடவுள் எனும் தத்துவத்தைக் கடைப்பிடித்து, அவரையே வணங்கும் நோக்கத்தில் படிப்படியாக மண்டலியை விடுவித்தார். பாபாவை வணங்குவது நெருப்பில் எரிவதற்கு சமம்! அவர் அருள் மிகுந்த ஒளி! அவரைத் தொழுவது சாம்பலாக மாற வழி!

ஆகஸ்ட் 5 அன்று மெஹராபாத்தில் நடந்த ஓர் இசை நிகழ்ச்சியில் குல்மாயும் கலந்து கொண்டார். நிகழ்ச்சியினூடே பாபா, கூட்டத்தில் பெஹராம்ஜி இல்லாததை கவனித்து அவரைத் தேடிச்சென்றார். கழிப்பறை அருகில் பெஹராம்ஜி, அஜோபா இருவரும் மழைக்காக ஒதுங்கி நின்றவர்களை, பாபா அழைத்து வந்தார். அப்போது ருஸ்தத்தின் மேல்சட்டையை, பாபா மழைக்காக அணிந்திருந்தார்.

இசை நிகழ்ச்சி தொடர்ந்தது. பாபா, குல்மாயிடம், **"ருஸ்தம் கீழே விழுந்து விட்டார்"** என்று கூறிவிட்டு, பாடல்களைக் கேட்டு ரசிக்கத் தொடங்கினார். குல்மாய், இசை நிகழ்ச்சியில் கவனமாக இருந்ததால் பாபா கூறியது அவர் செவிகளில் விழவில்லை. ருஸ்தம் ஏதோ வேலையாக அஹமதுநகர் திரும்பிச் சென்றதும் அவருக்குத் தெரியாது.

அடுத்தநாள் மெஹராபாத்திற்கு வந்த ருஸ்தம், 'பாபாவின் கருணையால் அவர் உயிர் காக்கப்பட்டார்' என்பதை அனைத்து மண்டலிக்கும் அறிவித்தார். அதற்கு முந்தைய தினம், மாலை வேளையில் ருஸ்தம் சரக்கு வண்டி ஒன்றை அஹமதுநகருக்கு ஓட்டிச் செல்லும் வேளையில், கடுமையான புயல் மழையில் சிக்கித் தவித்தார். வழியிலிருந்த மேலோட்டமான ஓடையை, எளிதில் கடந்து விடலாம் என்ற நம்பிக்கையில் சென்றபோது, ஆழமான பள்ளத்தில் வண்டி மாட்டிக்கொண்டது. ஆழத்தை அறிந்துகொள்ள நீரோடையில் இறங்கிய ருஸ்தம், வேகமாக வந்த வெள்ளோட்டத்தில் சிக்கி, தப்பமுடியாமல் தவித்தார். தேவையான சக்தியைத் தருமாறு வேண்டி, மெஹர் பாபாவை நினைத்துக் குரல் கொடுத்தார். விபரங்களைக் கேட்டறிந்தபோது, அவ்வேளையில்தான் பாபா, கொட்டும் மழையில் இசை நிகழ்ச்சியிலிருந்து பெஹராம்ஜியைத் தேடி வெளியே வந்தார்.



மெஹர் பாபா,
ஹஸ்ரத் பாபாஜான்
பள்ளிக்கூடத்தின் வெளியே - **1925**



ஹஸ்ரத் தாஜுதீன் பாபா - **1925**

அப்போது, இரண்டு அரன்காவ்ம் மாணவர்களிடையே நடந்த திருமணத்தைப் பற்றிய விவாதத்தின் போது, மெஹர் பாபா ஒரு சுருக்கமான உரையை வழங்கினார்:

**ஒருவர் நல்லொழுக்க நடத்தையுடன், திருமணம் செய்து கொள்ளாமல், தூய்மையான வாழ்க்கை வாழ்ந்தால், அதுவே சாலச்சிறந்தது, ஏனெனில் திருமணம், சில நேரங்களில் ஒருவரின் ஆன்மீக வாழ்வில் இடையூறுகளை விளைவிக்கும். ஆனால், வரம்பற்ற ஒழுக்கக்கேடான வாழ்க்கை வாழ்வதைக் காட்டிலும், திருமண பந்தம் விரும்பத்தக்கது. திருமண பந்தம் என்பது வாழ்க்கைத் துணைவர்கள் இருவரும் பிற ஆண்-பெண்களிடம் விரும்பத்தகாத தொடர்பின்றி வாழவேண்டும் என்பதாகும்.**

ஒரு நாள் பாபா அவருடைய நெருங்கிய மண்டலியிடம், செப்டம்பர் 1ஆம் நாளிலிருந்து உபவாசம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்து, பெரும்பாலும் அவர் குடிலுக்கு உள்ளேயே இருந்தார். தினமும் காலை ஐந்து மணிக்கு அவருடைய புத்தகத்தைத் தொடர்ந்து எழுதி வந்தார். வழக்கமான இதர பணிகளிலும் உற்சாகமாக ஈடுபட்டார்.

1925, ஆகஸ்ட் 17 திங்கள்கிழமை அன்று, மெஹர் பாபாவின் ஐந்து சத்குருக்களில் ஒருவரான ஹஸ்ரத் தாஜுதீன் பாபா (HAZRAT TAJJUDIN BABA), நாக்பூர் நகரில் அவரது பௌதீக உடலைத் துறந்தார். 30000க்கும் மேற்பட்ட மக்கள் கூட்டம் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டது.

ஆகஸ்ட் 22ஆம் நாள், மரியாதையின் நிமித்தம் பாபா, மண்டலியை 24 மணி நேரம் உபவாசம் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தினார். மாலை ஆறு மணியளவில் மெஹர் பாபா முதலில் தாஜுதீன் பாபா, அடுத்து அவருடைய அனைத்து சத்குருக்களின் புகைப்படங்களுக்கும் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மண்டலியும் அவ்வாறே செய்தனர்; பாபா அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். "ஓ தாஜுதீன் பாபா, நீங்கள் மேர்வான் மீது கொண்ட அன்பிற்காக உங்கள் பாதங்களில் அடிபணிகிறோம்! அவர் சொர்க்கலோகத்தின் ரோஜா என்பதை நீங்கள் அறிந்து, உங்கள் மகுடத்தை மேர்வானுக்கு அணிவித்தீர்கள்."

இந்துக்கள், திபத்தியர் மற்றும் முஸ்லிம்கள் இடையே கூறப்படும் பழங்கதைக்கு இணங்க, ஜீஸஸ் இந்தியாவில் வாழ்ந்து, இந்தியாவில் உயிர் துறந்தார். மண்டலியுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், ஆகஸ்ட் 23 அன்றுபாபா இதை உறுதிப்படுத்தினார்:

**ஜீஸஸைப் பற்றிய ஓர் இரகசியம், பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு இது தெரியாது. ஜீஸஸ் சிலுவையில் அறையப்பட்டபோது, அவர் உயிரைத் துறக்கவில்லை; 'நிர்விகல்ப சமாதி'**

(NIRVIKALP SAMADHI - பௌதீக உணர்வை இழந்து 'நான் கடவுள்' என்ற உணர்வு) **என்ற நிலையை எய்தினார். மூன்றாவது நாள், அவர் பௌதீக உணர்வைத் திரும்பப் பெற்று, உருவத்தை மறைத்துக் கொண்டு, கிழக்கு நோக்கி பயணம் செய்து,** (சில சீடர்களுடன்) **இந்தியா வந்து சேர்ந்தார். இதைத்தான் 'ஜீஸஸின் உயிர்த்தெழுதல்' என்பது.**

**இந்தியா வந்தடைந்த பின்னர் அவர், பர்மாவில் ரங்கூன் நகருக்குச்** (RANGOON IN BURMA) **சென்று சில காலம் அங்குத் தங்கிருந்தார். அதைத் தொடர்ந்து, வட திசையை நோக்கி பயணம் செய்து, காஷ்மீரில் தன் இருப்பிடத்தை அமைத்தார். இப்பூவுலகில் அவருடைய பணி முடிந்ததும், தன் உடலைத் துறந்து, நிரந்தரமாக 'நிர்விகல்ப சமாதி' நிலையை அடைந்தார். அவர் உடல் காஷ்மீரில் புதைக்கப்பட்டது. அவர் கல்லறையை இன்றும் அங்குக் காணலாம். இந்தியாவில் வாழ்ந்த சித்தர்கள் இந்த உண்மைகளை ஊர்ஜிதம் செய்தார்கள். மனித இனம் ஜீஸஸின் உண்மையான வாழ்க்கையை அறிந்து கொள்ளும்.**

இக்காலகட்டத்தில் மெஹராபாத்தில் மண்டலியின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து புதிய கட்டிடங்கள் எழுப்ப வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. செப்டம்பர் 4ஆம் நாளிலிருந்து பலர் புதிய கட்டிடத்தில் தங்கியிருந்தனர். ஒவ்வொருவரும் தூங்கவும், அவர்களின் பொருட்களை வைக்க தனியிடமும், பாபாவுக்காக நடுநிலை பகுதியில் ஓரிடம் தனியாகவும் அமைக்கப்பட்டது. தபால் அலுவலக கட்டிடத்தின் வெளி வராந்தாவை நீளமாகக் கட்டி, அதைச் சரக்கு அறையாகப் பயன்படுத்தினர். மண்டலியில் ஒருவர் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். பொருட்களை வாங்க, கோரிக்கை ரசீதுகள் அச்சடித்து, ஒரு சோப்புத்துண்டு வாங்கக் கூட நடைமுறை விதிகள் அமல்படுத்தப்பட்டன.

செப்டம்பர் 20 அன்று விசாலமான தர்மசாலை ஒன்றைத் திறந்து வைத்து பல ஏழைகள், உதவியற்றவர், மற்றும் உடல்நலமற்றவர்களுக்கு அடைக்கலம் வழங்கப்பட்டது. தொழுநோயாளிகள், ஆண், பெண், அனைவருக்கும் தனியிடம் ஒதுக்கி அங்கு அமைந்த மிகப்பெரிய கட்டிடத்திற்கு 'சாய் தர்பார்' (SAI DARBAR) என்று பெயர் சூட்டப்பட்டது.

1925, செப்டம்பர் 30ஆம் நாள், ருஸ்தம்-ஃபிரீனி இருவருக்கும் பிறந்த குழந்தைக்கு பாபா, 'ஃபெராம் (ஃபாலு)' - (FERAM – FALU) என்று பெயர் சூட்டி, அனைவருக்கும் ருஸ்தம் மிகப் பெரிய விருந்தளித்தார். தொடர்ந்து நடந்த இசை நிகழ்ச்சியில், ஒரு முஸ்லிம் இறை போதையில் இருப்பவர்போல் ஆடி தரையில் விழுந்து புரண்ட வண்ணம் இருந்தார். உடல் காயங்களைக்கூடப் பொருட்படுத்தாத அளவுக்கு கடவுள் பற்றுள்ளவர் என்று எண்ணி, சில பார்வையாளர்கள் அவரால் பெரிதும் ஈர்க்கப்பட்டார்கள்.

இசை நிகழ்ச்சி முடிந்து அனைவரும் சென்ற பிறகு, பாபா அவரது உடலில் தாங்க முடியாத வலியெடுப்பதாக முறையிட்டார். பாபாவின் உடலை

இருபது சீடர்கள் பலமாக அழுத்தி விட்ட பிறகும் வலி குறைந்தபாடில்லை. பாபா, இவ்வாறு கடுமையாகக் குறிப்பிட்டார்: “**அந்த முஸல்மான் துள்ளிக் குதித்து ஆடியதன் காரணமாக நான் அவதிப்படுகிறேன்.**” கூட்டத்தில் இருந்த ஒருவர் வெகுளித்தனமாக கூறினார்: "என்ன ஒரு காதல் வேகம் அந்த மனிதனை ஆட்கொண்டது!"

பாபா உடனே, “**இது காதலல்ல, ஆனால் வெறும் போலியானது! பாசாங்குத்தனம் மிகப்பெரிய பாவம், கடவுள் ஒருபோதும் அதை மன்னிக்கமாட்டார். கபடதாரிகளுக்குப் பயந்து, கடவுள் அவர்களிடமிருந்து விலகியிருப்பார்.**”

அனைவரும் ஆச்சரியமாகக் கேட்டனர், “அப்படியானால், காதல் என்பது என்ன?”

பாபா இவ்வாறு விளக்கினார்:

“**காதல் என்பது அடுப்பில் எரியும் நெருப்பு. யாரொருவர் காதலிக்கிறாரோ, அவருக்கே தெரியாது அவர் காதலிப்பது! இயல்பாக இருங்கள், பாசாங்கு செய்யாதீர்கள் என்று நான் உங்களை எச்சரித்திருக்கிறேன். கடவுளை ஏமாற்ற முடியாது; அவருக்கு நீங்கள் யாரென்று தெரியும்! ஆகையால், நீங்கள் எதுவாக இல்லையோ அதுவாகப் பாசாங்கு செய்வதில் என்ன பயனிருக்கிறது?**”

மன்ஸில்-எ-மீமில் சலவைத்தொழில் செய்து வந்த காஷிநாத் மெஹராபாத்திற்கு வந்தார். சில ஆண்டுகளுக்கு முன்பு, கட்டளைகளை மீறியதால் அவர் தொழுநோயால் தாக்கப்படுவார் என்று பாபா எச்சரித்தார். இப்போது, அவர் நிலையைக் கண்டு மண்டலி திகைத்துப் போயினர். காஷிநாத், பாபாவிடம் மன்னிப்புக் கோரினார். பாபா அவரை மன்னித்து விட்டதாகக் கூறி சமாதானப் படுத்தினார், “**நான் உங்களை மன்னித்து விட்டேன். நான் மன்னித்ததால் இப்போது அது உங்களுக்கு ஆசீர்வாதமாக அமைகிறது. இந்தத் துன்பத்தைத் தாங்கிக் கொள்ளுங்கள், நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்!**”

காஷிநாத்தை மெஹராபாத்தில் தங்க பாபா அனுமதித்தார். பல்லாண்டுகள் அங்கேயே வாழ்ந்து உயிர் துறந்தார். மண்டலி எவரும் தேவையின்றி அவரிடம் பேச வேண்டாம் என பாபா அறிவித்திருந்தார். பாபாவும், அவரைக் கண்டுகொள்ளவில்லை. சில நேரங்களில் காஷிநாத் கரங்கூப்பி வணங்கும்போது பாபா, கைகளை அசைத்து பதிலளித்தார்.

மாறாக, மெஹர் பாபா, பகதூர் என்பவரைப் பெரிதும் நேசித்தார்; பகதூர், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர், பூனாவில் துப்புரவு தொழில் செய்து வந்தபோது, மெஹர்பாபாவின் விருப்பப்படி மனித மலத்தை வாளியில் நிரப்பி வழங்கியவர். 1922ஆம் ஆண்டு, பாபா, பூனா, ஃபெர்குஸன் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்த குடிலில் வாழ்ந்த வேளையில், பகதூர் அவராகவே கவாலிகளும், பஜனைகளும் எழுதி பாபா முன்னிலையில் பாடினார்.

மெஹராபாத்திற்கு வரும் வேளையிலும் தொடர்ந்து அவ்வாறே செய்து வந்தார். பாபா, பகதூரை அன்புடன் அருகில் அமரச்செய்து, "**புதிய பாடல்கள் ஏதேனும் எழுதியுள்ளீர்களா? எனக்காக இங்கே பாடுங்கள்!**" என்று கூறும் போது, பகதூர், அவரது சமீபத்திய இசையமைப்பில் உருவான பாடல்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் பாடுவது வழக்கம்.

மெஹர் பாபாவின் குடிலின் அருகே தினமும் இரவில் கண்காணிப்பாளர் இருப்பது வழக்கம். குலாப்ஷா (GULABSHA) என்பவர், சமீபத்தில் அங்கு வந்தவர், இப்பணியைச் செய்து வந்தார். சகனும் அவ்வப்போது உதவியாக இருந்தார். ஒரு முறை இரவில் சகன் தன்னை மறந்து தூங்கிவிட்டார். இதைக்கண்ட குலாப்ஷா, கோபமடைந்து, ஏளனமாய், "தூக்கம் வரும்போது சிறிது மிளகாய் தூளைக் கண்ணருகில் தூவிக்கொள்" என்று உபதேசம் கூறினார். சகனும் அதை அப்படியே எடுத்துக் கொண்டு, அன்றிரவில் தூங்காமல் இருக்க அவ்வாறே செய்ததும், கண்கள் எரிந்து கதறினார். சகனின் குரலைக் கேட்டு பாபா விரைவில் அங்கு வந்து அவரது கண்களை குளிர்ந்த நீரால் கழுவி விட்டார்.

ஆறு நாள் உபவாசத்திற்குப் பிறகு, மெஹர் பாபா மிகச் சிறிய அளவில் சில நேரங்களில் உணவு உட்கொண்டார்; பெரும்பாலும் எதுவுமே உண்ணுவதில்லை. ஆனால், அஜோபா அவருடைய நாட்குறிப்பில் இவ்வாறு பதிவு செய்திருந்தார்: 'பாபா எப்பொழுதும் போல புத்துணர்வோடும் சுறுசுறுப்புடனும் காணப்பட்டார்.' காலை வேளையில் தனியாக அவருடைய 'இரகசிய புத்தகத்தை' எழுதுவதிலும், மாலையில் ஹஸ்ரத் பாபாஜான் பள்ளிக்கூட வராந்தாவில் அமர்ந்து, சிறிய மேசையில் மண்ணெண்ணெய் விளக்கேற்றி அதில் முழு முனைப்புடன் ஈடுபட்டார்.

அவ்வேளையில் ஒரு நாள் பத்திரிகை பதிப்பகத்தார் ஒருவர், அவருடைய பணக்கார நண்பருடன் பாபாவின் தரிசனத்திற்காக வந்தவர், மெஹராபாத்தில் நடக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் கண்டு, வெகுவாக ஈர்க்கப்பட்ட அவருடைய நண்பர், பண உதவி செய்ய விரும்புவதாக, பாபாவிடம் எடுத்துரைத்தார். அவர் உதவியை பாபா அமைதியாக மறுத்து, அவருடைய கற்பலகையில் இவ்வாறு எழுதினார்: "**நான் ஒரு துறவி, எனவே இந்தப் பணத்தை வைத்து நான் என்ன செய்வேன்? கடவுள் மட்டுமே எங்களுக்கு போதும்!**" என்று தெளிவுபடுத்தி, பணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்து விடுமுறை நாட்களில், அர்ஜுன், பாபாவை நீராட்டும் ஒரு பழக்கத்தைக் கடைப்பிடித்தார். அதில் நூற்றுக்கும் அதிகமானோர் ஒவ்வொரு குவளை நீரை பாபாமீது ஊற்றி, நீராட்டு விழாவை சிறப்பித்தனர். அக்டோபர் 31ஆம் நாள், பௌர்ணமி தினம், அர்ஜுன் அதே நீராட்டு விழாவை நடத்தினார். பாபாவும் புன்முறுவல் செய்தபடி அனைத்தையும் தாங்கிக் கொண்டார். இறுதியில், பாபா, அர்ஜுனை எச்சரித்தார், "**இது போன்ற நீராட்டு விழாவில்**

**பங்கெடுக்க, என்னைத் திரும்பத் திரும்பக் கட்டாயப்படுத்தாதீர்கள். இதற்கு முந்தைய முறை அளித்த நீராட்டிற்குப் பிறகு, குளிர் மற்றும் இருமலால் நான் மிகவும் அவதிப்பட்டேன்.**"

குஷ்ரு குவாட்டர்ஸில் தங்கியிருந்த ருஸ்தம், ஃபிரீனி இருவரும் அவர்களின் இரண்டு குழந்தைகளுடன் மெஹராபாத்தில் வந்து குடியேறினர். நவம்பர் 8 அன்று ஞாயிற்றுக்கிழமை, பாபா, மண்டலியுடன் அவர்கள் வீட்டு கிரஹப்பிரவேசத்தில் கலந்துகொண்டார்.

பருவமழை காலமாக இருந்தாலும் அரன்காவ்ம் பகுதியில் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு நிலவியது. 1925ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தில், பக்கத்து ஊர் கிராம மக்கள், குடிப்பதற்கும், குறுவை சாகுபடிக்கும் போதுமான மழை நீர் இல்லாததால், மெஹர் பாபாவை நாடிவந்து, மழைக்காக வேண்டி நின்றனர். பாபா, அவர்களைப் பொறுமை காக்குமாறு அறிவுறுத்தினார்.

நவம்பர் 10ஆம் நாள் இரவில், அன்றைய கடுமையான பணிகளுக்குப் பிறகு, மெஹர் பாபா, கிராம மக்கள் மற்றும் மண்டலியை அவரது மேசை அறை பக்கம் வரவழைத்து விவாதித்தார். மறுபடியும் கிராமத்தார் மழைக்காக, பாபாவை வேண்டினர். சத்குரு உபாஸனி மஹாராஜின் ஆரத்திக்குப் பின்னர், அங்கே ஒரு குழி தோண்டி, துனி (DHUNI - புனித நெருப்பு) ஒன்றை வளர்க்குமாறு உத்தரவிட்டார். இரவு 11 மணிக்கு அந்த துனி கொழுந்துவிட்டு எரிந்தது. அதற்குப் பிறகு பாபா, கிராம மக்களிடம் கூறினார், "**கடவுள் உங்கள் பிரார்த்தனைக்கு செவிசாய்த்து விட்டார். இப்போது நீங்கள் உங்கள் இல்லங்களுக்குச் செல்லுங்கள்.**" துனியில் நெருப்பை எரிய வைப்பதற்கு முன்பு, வானில் கார்மேகம் எதுவுமே இல்லாமலிருந்தது. ஒரு மணி நேரத்தில் கடுமையான மழை பொழிந்தது. 15 மணி நேரம் தொடர்ந்து பெய்த மழையால் கிராம மக்கள் உற்சாகமடைந்தனர்; சாகுபடியும் பாதுகாக்கப்பட்டது.

அடுத்த நாள் மெஹர் பாபா, மண்டலியிடம் துனியைப் பற்றி ஒரு கவிதை எழுதுமாறு கூறினார். அன்று மதியம் பள்ளிக்கூடத்திற்கு விடுப்பளித்து அவரவர் கவிதையை எடுத்துரைக்க வாய்ப்பளிக்கப்பட்டது. ருஸ்தம் முதல் பரிசை வென்றார்; பாதிரிக்கு இரண்டாவது பரிசு; ஆசிரியர் பண்டோபா மூன்றாவதும், கிஸன் மாஸ்டர் நான்காவது பரிசையும் வென்றனர். கவிதைகளில் எதுகை, மோனை, அமைந்த விதம் கேட்க வேடிக்கையாக இருந்தது; ஒவ்வொருவரும் கைதேர்ந்த கவிஞர் போல பாசாங்கு செய்து அவரவர் கலைத் திறனைக் காட்டினர். புரியாத வரிகளை விளக்க வேண்டியதும் அவசியமாயிற்று. ருஸ்தம், பாதிரி இருவரின் கவிதைகளைத் தவிர இதர கவிதைகள் அனைத்தும் அவ்வளவு பொருள் அடங்கியதாக இல்லை.
பாதிரி எழுதிய 'துனி' பற்றிய கவிதையை பாபா பெரிதும் பாராட்டினார்:

ஓ சத்குரு மெஹர் பாபா, எங்களின் ஒரே துணை நீங்கள் மட்டுமே;
ஈருலகுக்கும் அதிபதியே, எங்களின் சக்தி வாய்ந்த தெய்வமே!

இந்த இருபதாம் நூற்றாண்டில், 1925ஆம் வருடத்தில்,
இவ்வுலகின் தீமைகள் அழிக்கப்படும் என அறிவித்தீர்!

பத்தாவது நாள், பதினொன்றாவது மாதம், வருடமோ 1925.
உங்களுக்குப் பிரியமானவர்களை 10.30 மணிக்கு அழைத்தீர்கள்,
சிறப்பான துனியை எரிக்க வேண்டும் என அறிவித்தீர்கள்!

அனைத்து ஏற்பாடுகளும் செய்த பின்பு குடிலுக்கு வந்தோம்,
ரிஷி, முனிகளின் தோழர்கள் நாங்கள் துனியை ஏற்றினோம்

என் மனதிலோ பற்பல எண்ணங்கள் அலைமோதின,
ஆனால், அதன் அர்த்தங்கள் சற்றும் புரியாமலே இருந்தன!

பிறப்பு இறப்பிலிருந்து எங்களை விடுவிப்பதே உங்கள் நோக்கம்,
அதே வேளையில் துயரங்களைத் தந்ததோ இயற்கையின் சீற்றம்!

சக்திமிக்க சத்குரு, வாழ்வில் வந்ததே ஆத்மாவை காக்க,
துனியின் பணியோ, எங்கள் பாவங்களை வேரோடு அழிக்க!

எங்களின் பிரியமானவர் இந்த துனியை ஏற்றியது,
எங்கள் செயல்களின் பாரத்தை அறவே குறைத்தது!

ஓ துனி! உன் உள் அர்த்தமோ மிகவும் ஆழமானது,
எவ்வளவோ முயன்றும் அது முற்றிலும் புரியாதது!

மண்டலியில் மற்றுமொருவர் ஸெயிலர் அவரது கவி வண்ணத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார்:

தாய்மார்களே! பண்புள்ள பெரியோர்களே!
நான் கூறுவதைக் கேளுங்கள் கவனமாக,
நேற்றிரவு நாம் துனியை ஏற்றினோம்,
பொழிந்ததோ மழை மிகவும் கனமாக!

ஆன்மீக யாத்ரீகர்கள் முழுமனதாக
துனியை ஏற்றுவது வழக்கம்,
இதைப் புரிய வைப்பது கடினம், எனினும்
உனது மகிமையைப் போற்றுவது எங்கள் பழக்கம்!

இப்போது உங்கள் அனுமதியுடன் விடை பெறுகிறேன்,
என்னால் எதையும் விளக்க முடியாமல் தவிக்கிறேன்!
'ஸெயிலர்' கூறுகிறார், இதுவே முதன்முதலாக அவன் வாழ்வில்,
கவிதையின் கைவண்ணத்தைக் காட்டியது, ஒன்றுமே அறியாமல்!

மெஹர் பாபா உடனே துனியைப் பற்றிக் கீழ்வரும் வரிகளை எழுதினார்:

**உனது புகழைப் பாட எனது பேனாவில் சக்தியில்லை!**
**தீச்சுடரின் முதல் ஒளியில் வந்ததோ இம்மழை!**

**உன் அன்பளிப்பு அளப்பரிய அற்புதம், அருமை!**
**தீப்பிழம்பைக் குளிர்விக்க கடவுளே தரும் மரியாதை!**

**இறுதியில் மணிநேர பெருமழை பொழிந்ததே சிறப்பு!**
**ஆயிரக்கணக்கான மக்களைக் காப்பாற்ற, நீ வந்ததே எம் களிப்பு!**

**ஏழைகளின் ஆசீர்வாதங்களை நீ ஏற்றுக் கொள்வாயா?**
**பிரார்த்தனை செய்வோர்க்கு நீ அடைக்கலம் தருவாயா?**

**நீ ஒரு வாலியின் பண்புகளைக் கொண்டுள்ளாய்!**
**ஒருவன் தன்னையே இழக்கும்போது**
**உன்னைப்போல் அவனை மாற்றுவாய்!**

**உனது தாக்கம் அற்புதமானது; உனது நாடகம் வியக்கத்தக்கது;**
**உன் இயல்பான தன்மையே அளவிலா ஆச்சரியமிக்கது!**

**உன் அன்பளிப்பு ஒன்றை வளர்க்கும் அல்லது அழிக்கும்!**
**மரத்தை வேரோடு அழிப்பாய்;**
**அதேவேளை விதையைக் கருவுறச் செய்வாய்!**
**இரண்டுமே உன் ஆசீர்வாதங்கள்.**

**உன்னை கவனத்தில் கொள்பவர்கள்**
**நூறுவகையான உணவுகளைத் தயார் செய்யலாம்!**
**ஆனால், அறியாமையில் உன்னைப்**
**புறக்கணிப்போர்க்கு நீ பேரிடராகவும் இருக்கலாம்!**

**நீ ஒரு வாலியைப் போல - பெருமையும்,**
**பிழைகளும் நிறைந்தவன்!**
**ஒருவரை நீந்தச் செய்து மற்றும் ஒருவரை மூழ்கடிப்பவன்!**
**இதுவே உன் இயல்பு.**

**அஹமதுநகர் உட்புறநகர் பகுதி அனைத்தும் நீரின்றி இருந்தது!**
**ஆனால், சரியான நேரத்தில் உழவர்களுக்கு பரிசாகத் தந்தது,**
**மிகவும் உகந்தது!**

**நீ பாபாவிடம் சரணடைந்ததும் உன் உதடுகள் மூடட்டும்!**
**சத்குருவின் பாதங்களில் சேவை செய்பவர்**
**தைரியம் நிறைந்தவர்கள் மட்டும்!**

**ஓ துனி! உனது பெருமை உன்னதமானது!**
**ரிஷி முனிகள் மட்டுமே புரிந்துகொள்ள முடிவது!**

1925, நவம்பர் 26 பாதிரியின் பிறந்தநாள்; மெஹர் பாபா அவருக்கு மாலை அணிவித்து முத்தமளித்தார்.

மெஹராபாத்தில் இப்போது ஏறக்குறைய 500 மக்கள் வாழ்ந்து வந்தனர். புதிய சமயலறை ஒன்று உருவாக்கப்பட்டது. பாபா, ஓர் அடுப்பை எரியவிட்டு சமையலறையைத் தொடங்கி வைத்தார். பாபாவின் இந்தச் செயலில் ஓர் ஆழமான முக்கியத்துவம் அடங்கியிருந்ததை அனைவரும் கண்டுகொண்டனர். பண்டோபா ஒரு பிராமணர்; பல நாட்களாக அவர், பிராமணர் அல்லாத இதர அனைவருடன் அமர்ந்து உணவு உண்ண, பாபாவின் அனுமதியைக் கோரிவந்தார். அவ்வேளையில் பாபா அனைவரையும் அவரவர் மத கோட்பாடுகளைக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தினார். அது, பண்டோபா பிறருடன் இணைந்திருப்பதற்குத் தடையாக இருந்தது. பண்டோபா, மறுபடியும் பாபாவின் அனுமதியைக் கோரினார். இம்முறை பாபா, **“உங்கள் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்”** என்றார். மண்டலியில் பண்டோபா, இந்து மத ஆச்சாரத்தைக் கைவிட்டு ‘அனைவரும் ஒன்றே’ என்ற பாபாவின் கொள்கையை மனப்பூர்வமாக ஏற்று கடைப்பிடித்த முதல் மனிதராவார்.

1925 டிசம்பர் 14 அன்று ‘கிறிஸ்துவைப் போல வரவிருக்கும் இளம் சீடர், புதிய உலக ஆசிரியர் ஜெ.கிருஷ்ணமூர்த்தி’ என்று டாக்டர் அன்னி பெஸன்ட் (ANNIE BESANT) வெளியிட்ட அறிக்கையைக் குறித்து, மெஹர் பாபா அளித்த விளக்க உரை:

**இதெல்லாம் வெறும் வெற்றுப்பேச்சு. பிரம்ம ஞானிகள் என்றழைக்கப்படும் டாக்டர் அன்னி பெஸன்ட் மற்றும் ஜெ. கிருஷ்ணமூர்த்தி இவர்களிடம் சத்தியத்தின் ஓர் அம்சம் கூடக் கிடையாது. இந்த சிறுவன் உலக ஆசிரியராக இம்மண்ணில் தோன்றுவான் என்றும் அனைத்தையும் ஆட்டிப்படைப்பவன் எங்கோ அந்த இமயத்தில் இருப்பதாகவும் பேசிக்கொள்கிறார்கள்.**

**அந்த மலைகளில் கற்களும், தூசும் தவிர வேறொன்றுமில்லை. புத்தா, கிருஷ்ணா, கிறிஸ்து, ஸொராஸ்டர் போன்ற உண்மையின் போதகர்கள், மலை உச்சிகளில் அமர்ந்தவர்களோ அல்லது காடுகளில் தொலைந்தவர்களோ அல்ல. யார் ஒருவரை முன்னேற்றப் பாதையில் கொண்டுச்செல்ல வேண்டுமோ, அவர்களோடு சுதந்திரமாக ஒன்றிணைந்து வாழ்ந்தவர்கள். நினைக்கவோ, கற்பனை செய்யவோ முடியாத அளவுக்கு**

**உயர் நிலையில் இருந்தாலும், அவர்கள், சீடர்கள் வாழும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தங்களைக் கீழ்நிலைக்குக் கொண்டு வந்தவர்கள்.**

**அதுபோல், எந்த ஒரு சிறப்பு பெயரில் தோன்றும் ஆன்மீக குருநாதருக்கும், தன் உடல் ஒன்றைத் தவிர வேறு எவ்வித 'வாகனமும்' தேவையில்லை. இவ்வாறு தன்னைத்தானே 'உலக ஆசிரியர்' என்று கூறும் அவர் ஒரே வருடத்தில் மறைந்து போனால், திருமதி. அன்னி பெஸன்ட் அதை எப்படி எடுத்துக்கொள்வார் என்று பார்க்கலாம்.**

பாபா முடிவாக இவ்வாறு கூறினார்:

**உண்மையில் சொல்லப்போனால்,** (கிருஷ்ணமூர்த்தியைப் பற்றிய) **இந்தத் தவறான செய்தி கூட அர்த்தமற்றதல்ல. மாறாக, இது என்னுடைய பலதரப்பட்ட உள்பணிகளின் விளைவாகும். மேலும், இது என்னுடைய வெளிப்பாட்டிற்கு வழிவகுக்கும்.**

அடுத்த நாள், மெஹர் பாபா இக்கருத்தைப் பற்றித் தொடர்ந்து விவாதிக்கும் போது, போலி துறவிகள் மற்றும் மஹாத்மாக்களைக் குறிப்பிட்டு, எச்சரிக்கும் தொனியில் இவ்வாறு எடுத்துரைத்தார்:

**செல்வம் மற்றும் பெண்கள் மீது கருத்தாக இருக்கும் கபடதாரிகளாக நடிக்கும் தெய்வீக பிரமுகர்கள் அல்லது ஆன்மீக குருக்களை, துண்டு துண்டாக வெட்டவேண்டும்! இதைச் செய்வதில் எந்தப் பாவமும் இல்லை. மாறாக, இவ்விதமான செயலால், பக்திமிக்க, கள்ளங்கபடமற்ற ஆத்மாக்களை அவர்களின் பிடியிலிருந்து காப்பாற்ற முடியும்.**

அவ்வேளையில் பாபா காந்தியைப் பற்றி இவ்வாறு கூறினார்:

**இறையுணர்வை அடையாத பல்லாயிரக்கணக்கான ஆத்மாக்களில் காந்தி ஓர் உன்னதமான மனிதர். பலர் அவரை 'மஹாத்மா' என்றழைத்தாலும், இறை நிலையை அடையும் இலக்கிலிருந்து அவர் வெகு தொலைவில் இருப்பதாக, சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஏற்றுக் கொள்கிறார். மேலும், இறை நிலையை அடைந்த ஒருவரிடம் முற்றிலும் சரணடைய நினைப்பதாகவும், சமீபத்தில் எழுதியிருந்தார். இறை நிலையை அடைவது என்பது மிகவும் கடினமானது.**

டிசம்பர் 17ஆம் நாள், 'குடும்ப குவாட்டர்ஸில்', வழக்கமான தேநீர் வேளையில், மெஹர் பாபா, மண்டலியை எச்சரித்தார்:

**கோபம் வரும் வேளையில் எச்சரிக்கையாக இருங்கள்! ஒரு சத்குருவின் சீற்றம் அவரோடு தொடர்பில் இருப்பவர்களுக்கும், பிறருக்கும் நன்மையை விளைவிக்கும், ஆனால் ஒரு சாதாரண மனிதன் அவனுடைய கோபத்தின் விளைவாக, தன்னைத்தானே காயப்படுத்திக் கொள்கிறான். என்னுடைய தரிசனத்திற்காக யார் ஒருவர் வந்தாலும், அவர் எந்த சமூக பிரிவைச் சார்ந்தவராக இருந்தாலும், அல்லது எவ்வித மனோநிலையைப் படைத்தவரானாலும், எல்லோரையும் ஒன்றாகக் கருதி நடத்துங்கள். யார்**

**ஒருவருடைய உணர்வையும் காயப்படுத்தாதீர்கள். எவரேனும் உங்களிடம் கோபமாகப் பேசினால், அவரிடம் பணிவோடு, அமைதியாக பதில் கூறுங்கள். உங்களுடைய பணிவு அவரிடம் எவ்விதமான விளைவையும் ஏற்படுத்தாமல், தொடர்ந்து அவர் உங்கள் வேண்டுதலுக்குக் கீழ்ப்படிய மறுக்கும்போது, அவர் கால்களில் விழவேண்டும்.**

**சுருக்கமாக, உங்களுக்குக் கோபம் வரும் காலையில், அதைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யுங்கள். உண்மையான துறவைப் பற்றி நான் உங்களுக்குக் கற்றுத்தருகிறேன். நான் சொல்வதை கவனியுங்கள்; இல்லையேல் அது உங்களையே திருப்திபடுத்துவது போலாகும்.**

சிறிது நேரத்திற்குப் பிறகு, மெஹர் பாபா, போலித்தனம் அல்லது கபடநாடகத்தைப் பற்றி விளக்கமளித்தார்:

**ஒருவர் காகம் அல்லது அன்னப்பறவையாக இருக்க வேண்டும், ஆனால் வெளிப்புறம் வெண்மையாகவும் உட்புறம் கருமையாகவும் இருக்கும் நாரையைப் போலல்ல!**

**மேலும், பிறருடைய செல்வம் மற்றும் பெண்களிடமிருந்து எப்போதும் விலகியிருங்கள். இவை இரண்டையும் தவிர என்னிடமிருந்து வேறு எதையும் எதிர்பார்க்கலாம்; இல்லையெனில், முடிவிலா சங்கிலியான பிறப்பும் இறப்பும் தொடர்ந்து உங்களை அடிமைப்படுத்தும்.**

டிசம்பர் 19 அன்று மெஹர் பாபா அவருடைய உண்மையான நிலையைப் பற்றிய ஒரு சிறிய குறிப்பை மறைமுகமாகத் தெரிவித்தார்:

**என்னுடைய உண்மையான நிலையை விவரிக்க முடியாது! நான், எனது மௌனத்தைக் கைவிடும் போது, ஒரு சிலர் தமக்குள்ளே அனுபவபூர்வமாக அதை உணர்வார்கள். அவ்வேளையில் நான் கிறிஸ்து, முஹமது, புத்தா, கிருஷ்ணா, ராம், ஸொராஸ்டர் இவர்களைப் போல வெளியளவில் தோற்றமளிப்பேன். அவர்கள் அனைவரும் என்னைப் போலவே அதே தலைமுடி, அதே முகத்தோற்றத்துடன் இருந்தனர்.**

**எனது பௌதீக உடல் எத்தகைய துன்பங்களை அனுபவிக்கும் என்பதை நீங்கள் சிறிதளவும் அறிய மாட்டீர்கள். எதுவும் உண்ணாமல், வெறும் வயிற்றில் அங்குமிங்கும் அலைந்து திரிந்து, நாள் முழுவதும் நான் சுறுசுறுப்பாக இருப்பதோடு மட்டுமின்றி, மூன்று நான்கு மணி நேரம் தொடர்ந்து புத்தகம் எழுதுவது முதுகுவலியைத் தருகிறது. எதுவாயினும், எனக்காக நான் அடைய வேண்டியது வேறு எதுவுமில்லை. எனது குறிக்கோளை நான் அடைந்துவிட்டேன்! என்னுடைய தற்போதைய துன்பங்கள், உபவாசம், ஏகாந்தவாசம் இவை அனைத்தும் பிறரின் நன்மைக்காகவே! இதை நீங்கள் அனுபவபூர்வமாகக் கண்டு கொண்டதால், உங்களில் பெரும்பாலானோருக்கு இது உண்மை எனத் தெரியும்.**

1925, டிசம்பர் 25 கிறிஸ்துமஸ் தினத்தை ஒட்டி முழு விடுமுறை அளிக்கப்பட்டது. பாபா அனைவருக்கும் இனிப்புடன் பஜ்ஜியும் தேநீரும் வழங்கினார். விளையாட்டுப் போட்டிகளும், இரவில் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

மெஹராபாத்தில் பெருகி வரும் மக்களை மேற்பார்வைச் செய்ய 'சர்க்கிள் குழு' (CIRCLE COMMITTEE) ஒன்று ருஸ்தத்தின் தலைமையில் அமைக்கப்பட்டது. மண்டலியில் பலர் வேறுவேறு பொறுப்பை ஏற்றுக் கொண்டனர்.

இவ்வேளையில், மெஹர் பாபா, அவ்வப்போது 'அக்பர் பிரஸ்'ஸில் (AKBAR PRESS) வாழ்ந்து வந்த நஸர்வான் ஸட்டா குடும்பத்தினரை சந்தித்து வந்தார். நஸர்வானின் தங்கை 'கெய்மாய்' (GAIMAI - வயது 25), நாக்பூர் நகரில் கணவரோடு வாழ்ந்து வந்தார். அஹமதுநகருக்கு அவருடைய குழந்தைகளுடன் அடிக்கடி வந்து செல்லும் அவ்வேளையில், மெஹர் பாபாவை தரிசனம் செய்யும் பேராவலில் இருந்தார்.

ஒரு முறை கெய்மாய் அவரது குழந்தைகளுடன் அஹமதுநகருக்கு வந்ததும், ஸட்டா குடும்பத்தார் அனைவரும் விக்டோரியா குதிரை வண்டியில் மெஹராபாத்திற்குச் சென்றனர். பாபா, மரத்தின் கீழமைந்த மேசை அறையிலிருந்து அனைவரும் வருவதை கவனித்தார். கெய்மாய் அவரின் முதல் பார்வையிலேயே மெஹர் பாபா, வாழ்வின் உயர் மட்டத்திலிருந்து செயல்படுவதை உணர்ந்தார். அவதார புருஷரின் உலகளாவிய மனம், அவருடைய ஒற்றை முகட்டுப் புள்ளியிலிருந்து, தெய்வீக கண்களால் முழு உலகையும் நோட்டமிடும்.

மெஹர் பாபா, அவருடைய முதல் தொடர்பிலிருந்தே ஸட்டா குடும்பத்தினரை, குறிப்பாக, கெய்மாயின் 'ஜெஸவாலா' குடும்பத்துடன் உள்ளிணைப்பை உருவாக்கக் காத்திருந்தார். அனைவரும் ஒரே குதிரை வண்டியில் பயணம் செய்தது, குதிரைக்குப் பாரமாக இருக்கலாம் என்பதை உணர்ந்து, பாபா வருந்துவார் என்ற எண்ணங்கள் கெய்மாய் மனதில் அலைபாய, அவரது ஒன்பது வயது மகன் 'எரச்' என்ற சிறுவனை விக்டோரியாவிலிருந்து கீழே குதிக்குமாறு கூறினார். எரச் குதித்தபோது, தடுக்கி விழுந்து காலில் உரசல் காயம் ஏற்பட்டது. பாபாவை நெருங்கியதும், அவர் காயத்தைப் பற்றி விசாரித்து, துனியிலிருந்த திருநீற்றை காயத்தின் மேல் தடவி, கைக்குட்டையால் கட்டிவிட்டார். எரச்சின் தலையைத் தடவி கொடுத்து, முத்தமிட்டு தனது மடியில் அமர வைத்தது எரச்சின் இதயத்தை நெகிழச் செய்தது. இதுதான் விதியின் விளையாட்டு; வாழ்நாள் முழுவதும் மெஹர் பாபாவின் நம்பகமான துணைவராக இருக்கும் பாக்கியத்தைப் பெற்றவர். அவ்வப்போது இடையிடையே மெஹர் பாபாவை சந்திக்க நேர்ந்தாலும், 1938ஆம் ஆண்டு நிரந்தரமாக அவருடன் மண்டலியாக இணைந்தார்.

ஒரு முறை, ஸட்டா சகோதரிகள் பக்கம் திரும்பி, பாபா, ரோஜாப்பூ ஒன்றை பானுவிடம் கொடுத்து பிரசாதமாக உண்ணக் கூறினார். குலாவிடம்

உங்களுக்கு எத்தனை சகோதரர்கள் என்று பாபா வினவ, அவர் ஐந்து என்று பதிலளிக்க, "**நான் உங்களின் ஆறாவது சகோதரன்**" என்று குறிப்பிட்டார்.

மெஹர்ஜி ஸட்டா ஒரு துறவியை எப்படி அடையாளம் கண்டுகொள்வது என்று கேட்டபோது பாபா, "**ஒரு துறவியை அடையாளம் காண, நீங்கள் முதலில் ஒரு புனிதமான துறவியாக இருக்கவேண்டும்**" என்று தனது கற்பலகையில் எழுதினார்.

1926, ஜனவரி 7 அன்று மெஹர் பாபா, ஆதரவற்ற மக்களுக்குச் செய்யும் சேவையைக் குறித்து மண்டலிக்குக் கூறியதாவது:

**சேவை என்பது ஏழை, தேவையுற்றோர் மற்றும் துன்பப்படும் மக்களுக்கு உதவுவது. இந்த மக்கள், சேவை செய்யும் வாய்ப்பை வழங்குவதற்காக, நாம் அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளோம். அவ்வாறு சேவையில் ஈடுபடும்போது, சுயத்தைக் குறித்த எண்ணம் சிறிதளவும் கூடாது; அப்போதுதான் அதை உண்மையான சேவை என்று கூறமுடியும். நீங்கள் யார் ஒருவருக்கு சேவை செய்கிறீர்களோ, அவர் உங்களுக்குக் கடமைப்பட்டவர் என்று நினைத்தால், அப்போது அது சேவை என்றில்லாமல் சுயநல உள்நோக்குடன் செய்யப்பட்ட செயலாகிவிடும்.**

**நம்மை எவரேனும் தரக்குறைவாக நடத்தினாலோ அல்லது அவமதிப்பாக பேசினாலோ, அது நம் துன்பத்திற்குக் காரணமாக இருக்குமானால் அல்லது எந்த விதத்திலேனும் நமக்குத் தொல்லை தருவதாக இருந்தால், நாம் அவர்மீது கோபமடையாமல், தலைவணங்க வேண்டும். ஏனெனில், அவர் நம் மனப்படிவங்களைக் களைய வழிவகுக்கிறார். இதுதான் ஜீஸஸ், 'எவரேனும் உங்கள் வலது கன்னத்தில் அறைந்தால், இடது கன்னத்தையும் காட்டுங்கள்' என்று கூறியதன் அர்த்தம்.**

மண்டலியின் தன்னலமற்ற சேவைக்கு ஓர் உதாரணமாக, காஷிநாத் எனும் ஹரிஜன சிறுவனைப் பற்றிய ஒரு சம்பவம்.

நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, மிகவும் ஆபத்தான நிலையில் அந்த சிறுவன் மெஹராபாத் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தான்.

முதல் நாள் இரவு முழுவதும், பாபா, அவனருகில் அமர்ந்திருந்தார். தேவல்காவ்ம் கிராமத்திலிருந்து அச்சிறுவனின் பெற்றோரை அழைத்து வருமாறு பாபா கூறி அனுப்பினார். இரவில் படுக்கைக்குச் செல்லும் முன்பு, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**நான் ஒரு சமுத்திரம் எனும் போது, மனித இனம் தண்ணீரில் இருக்கும் நீர்க்குமிழிகள் போல. நீர்க்குமிழிகள் உடையும்போது அவை மறுபடியும் சமுத்திரத்தோடு கலந்து மறைகின்றன.**"

மறுநாள் வந்த காஷிநாத்தின் பெற்றோர், சிறுவனின் உடல்நிலையைக் கண்டு, பெரிதும் கவலைப்பட்டனர், ஆனால் பாபா அனைத்தும் சரியாகிவிடும் என்று ஆறுதல் கூறினார். மண்டலியில் ஒருவரை, பனிக்கட்டித் துண்டுகளை எடுத்துவர அஹமதுநகருக்கு அனுப்பி வைத்தார். ஏனைய மண்டலி இரவும்

பகலும் சிறுவனின் அருகாமையில் இருந்து கவனிக்க ஏற்பாடும் செய்யப்பட்டது. பாபா, காஷிநாத்தைப் பார்க்க அடிக்கடி மருத்துவமனைக்குச் சென்று, டாக்டர் கர்கலிடம் அடுத்ததாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிக் கூறி வந்தார். சிறுவனை உயிர் பிழைக்க வைக்க எந்த வழியும் தெரியாமல் தவித்த டாக்டர், மெஹர் பாபாவின் வழிகாட்டுதலை மட்டுமே நம்பியிருந்தார். பாபாவின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கி பாதிரி, பெண்டு, டாக்டர் கர்கல் மூவரும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டதால், சிறுவனின் உடல்நிலை, படிப்படியாக முன்னேறியது. பெருமகிழ்ச்சியடைந்த பாபா, டாக்டர் கர்கலுக்கு ஒரு வெள்ளி குவளையும், பாதிரி மற்றும் பெண்டுவிற்கு கம்பளி துண்டுகளையும் பரிசாக வழங்கினார். அன்றைய தினம், மெஹராபாத்தில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

பதார்டி (PATHARDI) கிராமத்தைச் சேர்ந்த ஒரு முன்னாள் வழக்கறிஞர் சில பயிற்சிகளுக்கு தன்னை அர்ப்பணித்து, ஒரு யோகியாக மாறினார். 1926, ஜனவரி 9ஆம் நாள் மெஹராபாத்திற்கு பாபாவின் தரிசனத்திற்காக வந்தவர், ஆன்மீகத்தைப் பற்றி, பல கேள்விகளைக் கேட்க விரும்பினார்; பாபாவும் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிப்பதாக சம்மதம் தெரிவித்தார். அந்த யோகி, மண்டலி அருகிலிருந்ததால் தனியாக அமர்ந்து அவருடைய கேள்விகளை எழுத விரும்பினார். பாபாவும் அதற்கு இணக்கம் தெரிவித்து அவரிடம் ஒரு கற்பலகையைக் கொடுக்க, யோகி கேள்விகளை ஒவ்வொன்றாக எழுதத் தொடங்கினார். அதேவேளையில் பாபாவும் எதிரில் அமர்ந்து கொண்டே, இன்னொரு கற்பலகையில் எழுதினார். யோகி அவரது கேள்விகளை முடித்ததும், பாபாவிடம் கற்பலகையைக் கொடுக்க, பாபா அவர் எழுதிய கற்பலகையை யோகியிடம் கொடுத்தார். பாபாவின் கற்பலகையில் எழுதியிருந்ததைப் படித்ததும் யோகி அப்படியே வாயடைத்துப் போனார். அதில் அவருடைய அனைத்து கேள்விகளுக்கும் வரிசையாக பதில்கள் இருந்தன! பாபா அனைத்தும் அறிந்தவர் என்ற உண்மையை உணர்ந்து பெரிதும் ஆச்சரியமடைந்தார்.

அந்த யோகி அங்கிருந்து சென்றதும், பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **“இங்கு வருபவர் ஒருவரின் எண்ணங்களை அறிந்து, அவற்றிற்கு பதிலளிக்கும் ‘ஓர் இச்சை’ எனக்கு இன்றுதான் முதல் முறையாகத் தோன்றியது. உங்களுக்குத் தெரியும், இதை நான் எனது மண்டலியுடன் அடிக்கடி செய்வதுண்டு என்று!”**

குஜராத்தி மொழியில் மெஹர் பாபாவிற்கு ஓர் ஆரத்தி பாடல் வேண்டும் என்ற விருப்பத்தை மண்டலி பலமுறை தெரிவித்தனர். பாபா மண்டலியிடம் அதை எழுதுமாறு கூற, சில மண்டலி அவரவர் கைவண்ணத்தை வெளிப்படுத்தியது பாபாவிற்கு அவ்வளவு திருப்திகரமாக இல்லை.

இறுதியில் 1926, ஜனவரி 11ஆம் நாள் பாபா 'புஜாவே நார்' என்ற ஆரத்தியை குஜராத்தியில் அவரே எழுதினார்.

**இறைவனே! அறியாமையின் நெருப்பு**
**அணைக்கப்பட வேண்டும் என ஆணையிடு!**
**உன்னை நேசிப்பவர்கள் அடைய விரும்பும்**
**நம்பிக்கையின் ஒளியை அவர்களுக்குக் கொடு!**

**ஓ சத்குரு மெஹர் பாபா! நாங்கள்**
**எங்கள் சிரங்களை உமது காலடிகளில் வைக்கிறோம்.**
**ஓ மெஹர் பாபா! இறைவனின் மூலமுதலான நிலை**
**உமக்குத் தெரியும் என நாங்கள் அறிவோம்.**

**சத்தியத்தின் மொத்த உருவம் நீர்!**
**நேசிப்பவனும் நீர், நேசிக்கப்படுபவனும் நீரே!**
**எல்லையில்லா ஞானத்தின் விரைவான நீரோட்டம் நீர்!**
**ஒருமித்த சமுத்திரமும் நீரே!**

**எங்களின் அன்பரே! இறை ஞானத்தை நாடும்**
**எங்களுக்கு அதை அள்ளிக் கொடுப்பீர்!**
**பரமாத்மாவான நீர் சர்வ ஞானமும் பெற்றவர்,**
**தெய்வீக அறிவின் உருவாய் இருக்கிறீர்!**

**தெய்வீக அன்பின் கோப்பையிலிருந்து எங்களை**
**அருந்த வைத்து மெய்மறக்கச் செய்கிறீர்!**
**அனைத்தும் அறிந்தவரே! எங்கள் வாழ்வை**
**அர்ப்பணிக்கிறோம்;**
**ஒரு கோப்பை மதுவை வழங்கிடுவீர்!**

**எங்களின் படகு நடுக்கடலில் தத்தளிக்கிறது;**
**நீர் அதை திசை திருப்பினால் மட்டுமே**
**நாங்கள் கடக்க முடியும்!**
**ஓ மெஹர் பாபா! எங்களின் தலைவன்,**
**எங்களையெல்லாம் காக்கும் தெய்வம்!**

மெஹர் பாபாவின் பிறப்பிலிருந்தே சமூக எதிரிகள், குறிப்பாக பார்சி இனத்தவர் பலர் உருவாயினர். பாபாவின் இறை நிலையை நம்பாத இவர்கள், அவரது தாயார் ஷிரீன்மாயைத் துன்புறுத்துவதற்காக, தவறான வதந்திகளைப் பரப்பி வந்தனர். ஆனால், அவருடைய வலுவான குணநலன்களால், ஒருபோதும் தடுமாறவோ, எதிர்ப்புகளுக்கு அடிபணியவோ இல்லை.

மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள், மெஹர் பாபா, பூனாவின் புறநகர் பகுதியான கிர்கியில் வாழ்ந்துவந்த முலோக் என்ற இளைஞனை சந்தித்தார். இவர், போபோ (மெஹர் பாபாவின் தந்தையார்) நடத்தி வந்த நான்கு மதுபானக்கடைகளின் பங்குதாரராக இருந்தார். போபோ, ஒரு கபடமற்ற மனிதர், முலோகை முழுவதுமாக நம்பினார், அதேவேளை ஷிரீன்மாய் நல்ல ஆர்வமும், உள்ளுணர்வோடு கூடிய நுண்ணறிவும் படைத்தவர்; மேலும் எளிதாக அவரை ஏமாற்ற முடியாது.

ஒரு நாள், முலோக், போபோவை வீட்டிற்கு அழைத்து, “உங்களுக்கு வயதாகிவிட்டது, நீங்கள் ஏன் என்னை இந்த மதுபானக் கடைகளை கவனித்துக்கொள்ள அனுமதிக்கக் கூடாது? அது உங்களுக்கு உதவியாக இருக்காதா? இதை நீங்கள் ஏற்றுக் கொண்டால், முழுப் பொறுப்பையும் எனக்குத் தருவதாக, உங்கள் விருப்பத்தை எழுத்து மூலம் வழங்க வேண்டும். மேலும் நான் சில ஏக்கரில் வாங்கிய (பனை) மரங்களுக்கு உரிய ஒப்பந்தத்தில் உங்கள் கையெழுத்தும் தேவை.” என்று கூறினார். இந்நேரத்தில் போபோவும் வேலையைக் கைவிடத் தயாராக இருந்தார். முலோக் ஓர் ஒப்பந்த பத்திரத்தை வாங்கிவந்து போபோவிடம் கையெழுத்திடக் கூறினார். பத்திரம், விபரங்கள் எதுவும் எழுதப்படாமல் வெறுமையாக இருந்தது. ஆனால், முலோக், ஒரு வழக்கறிஞரின் ஆலோசனைப்படி, தேவையானவற்றை பின்னர் எழுதிக்கொள்வதாகக் கூறினார். போபோ, அவர்மீது வைத்திருந்த நம்பிக்கையின் பேரில் வெற்றுப் பத்திரத்தில் கையெழுத்திட்டார்.

முலோக் ஒரு துரோகியாக மாறி, அவருக்கு சாதகமாக எழுதி, பத்திரத்தைத் தயார் செய்தார். சிறிது காலத்திற்குப் பிறகு, போபோ கையெழுத்திட்ட பத்திரத்தைக் காண்பித்து நான்கு மதுபானக் கடைகளும் அவருக்கே சொந்தம் என உரிமை கொண்டாடினார். இவ்வழக்கு நீதிமன்றத்தில் பல வருடங்களாக இழுபறியில் இருந்தது. மெமோவும் சளைக்காமல் ஒரு வழக்கறிஞரைக் கலந்து ஆலோசித்தார். நீதிமன்றத்தில் போபோ எப்படிப் பேசவேண்டும் என்பதை வழக்கறிஞர் மெமோவுக்கு எடுத்துக்கூற, மெமோ அதை போபோ மனதில் பதியவைத்தார். வழக்கறிஞர், போபோவிடம் அந்தப் பத்திரத்திலிருக்கும் கையெழுத்துத் தன்னுடையதல்ல என்று நீதிமன்றத்தில் முறையிடக் கூறியும், போபோ பொய் கூற மறுத்து விட்டார். இவ்வாறு வழக்கு தோல்வியடைந்து, தங்களுக்கு உரிமையுள்ள வியாபாரத்தை இழந்து, இறுதியில் தங்கியிருந்த வீடும், சிறிது பணம் மட்டுமே மிஞ்சியது.

“நாம் எதையும் இழந்துவிடவில்லை, ஆனால் அவன் எதிர்கொள்ள இருக்கும் துன்பங்களையும், வரும் வாழ்வில் எப்படி அதை ஈடுகட்டப் போகிறான் என்பதையும் எண்ணிப்பார். முலோக் அவனுடைய எதிர்கால பிறவிகளில், அவன் பட்ட கடனைத் திருப்பித் தந்தாக வேண்டும்.” என்று போபோ எடுத்துக் கூறி மெமோவை ஆறுதல்படுத்த முயற்சித்தார்.

மெமோ, நக்கலாக பதிலளித்தார், “ஆனால் அதைக் காண நான் இருக்க மாட்டேன்.”

இதுவிஷயத்தில், மெமோ கடுமையாகக் கண்டனம் தெரிவிக்க, போபோவை எண்ணி ஒவ்வொருவரும் வருத்தம் தெரிவித்தாலும், போபோ எப்போதும் போல், எல்லாம் இறைவன் செயல் என்றெண்ணி அமைதியானார். பழி வாங்கும் எண்ணம் இல்லாமல், இறுதிவரை அவனிடம் அனுதாபம் காட்டினார்.

ஒரு நண்பர் மூலமாக, போபோ, கீழ்காணும் செய்தியை முலோகுக்கு அனுப்பி வைத்தார்:

"நீ செய்த செயலுக்கு, நான் உன்னை முற்றிலும் மன்னித்து விட்டேன். எப்போதேனும் நீ என்னிடம் மன்னிப்புக் கோரும் காலம் வருமாயின், நான் உயிரோடு இல்லாமல் போகலாம், ஏனெனில் நான் ஏற்கனவே வயதானவன்.

"எனவே இதை நினைவில் கொள், இன்றைய தினம் நான் உன்னை, முழுவதுமாக மன்னித்து விட்டதால், எக்காரணத்திற்காகவும் நீ என்னிடம் மன்னிப்புக் கோர வேண்டாம். இப்போது இது கடவுளுக்கும் உனக்கும் இடையே உள்ள சமாச்சாரம்."

1926, ஜனவரி 28 அன்று மெஹராபாத்தில் ஹஸ்ரத் பாபாஜானின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. மெஹர் பாபாவின் 32ஆவது பிறந்தநாளையும் சிறப்பாகக் கொண்டாட திட்டமிட்டனர்.

மண்டலியில் பெரும்பாலோர் இந்நேரத்தில் இளைஞர்களாக இருந்ததால், பாபா, ஒழுக்கமற்ற செயல்கள் மூலமாக விளையும், மிகப்பெரிய அளவிலான மனப்படிவங்களைக் குறித்து, அவர்களுக்கு இரண்டு மணி நேரம் விளக்கினார்:

"**கனவு காணும் வேளையில் இத்தகைய பிணைப்பாற்றல் மிக்க மனப்படிவங்கள் உருவாகாது**" என்று கூறினார். "**ஆனால், பகல் வேளையில் வரும் தூய்மையற்ற சிந்தனைகளின் விளைவுதான் இந்தக் கனவு**" என்றார் பாபா. இதைக் குறித்து மெஹர் பாபா, தொடர்ந்து கூறியதாவது:

**தீய சிந்தனைகளுக்கு இடம் தரக்கூடாது. அன்பு மற்றும் முழுப் பற்றுடன் பிறருக்கு சேவை செய்வதில் மனதை ஈடுபடுத்த வேண்டும். இம்முறையில் செலவிடும் மனப்படிவங்கள் நன்மை பயக்கும்; ஆனால் தூய்மையற்ற செயல்களில் ஈடுபடும்போது மனப்படிவங்களைச் செலவிட இயலாது. மழை எப்போதும் நல்லதையே செய்யும்; ஆனால் அது சரியான முறையில் பொழிய வேண்டும். மாறாக, காலம் தவறிய மழையால், செழிப்பைத் தருவதற்கு பதிலாக, பயிர்கள் அழிவாலும், மனித வாழ்வு வெள்ளத்தாலும் பாதிக்கப்படும்.**

மெஹர் பாபாவின் மண்டலியில் ஒருவர் சாஞ்சி அப்போது மும்பையில் வாழ்ந்து வந்தார். பாபாவுடன் வந்திணையும் நோக்கத்தில் அவருடைய சினிமா கொட்டகையை விற்கும் கடைசி நிமிட முயற்சியில் மும்முரமாக இருந்தார். பாபாவின் தொடர்பிலிருந்து அவர் கூறிய அனைத்தையும் செய்து வந்தார். பிப்ரவரி 9 அன்று மெஹராபாத்திற்கு வந்து,

மண்டலியுடன் ஆசிரியராகப் பணியாற்றினார். சாஞ்சியின் வழிகாட்டுதல் மூலமாக விஷ்ணு மண்டலியுடன் இணைந்து, சிவாஜி மஹாராஜைப் பற்றிய நாடகம் ஒன்றை பாபாவின் பிறந்த தினத்திற்காக ஒத்திகை செய்து வந்தார்.

மெஹர் பாபா கூறினார், ஒரு முறை அவர் சிவாஜியாக வந்து அவருடைய சீடர்களை, படைவீரர்களாக போரில் நடத்திச் சென்றார். இப்போது, அவர் இன்னுமொரு போருக்குத் தயாராகிறார் - ஆனால் 'இது அறியாமைக்கும், உலகில் மிகையாகத் தழைத்தோங்கும் மாயசக்திகளுக்கு எதிராகவும் நடத்தும் போர்' என்று காலம் பறைசாற்றியது!

பிப்ரவரி 10 அன்று ஷிரீன்மாய், மகன்கள் பெஹராம், ஆதி சிறிய மகள் மணி ஆகியோருடன், மெஹர் பாபாவின் பிறந்தநாள் விழாவில் கலந்துகொள்ள சில தினங்களுக்கு முன்னரே மெஹராபாத்திற்கு வந்தார்.

பிறந்தநாளை ஒட்டிய பல்வேறு நடவடிக்கைகள் விறுவிறுப்பாக நடைபெற்றன.

6X5X5 அடி அளவில் ஒரு சிறிய மரப்பெட்டகத்தைத் தயார் செய்து, சாய் தர்பாரில் வைக்குமாறு பாபா கூறியிருந்தார். பிப்ரவரி 17ஆம் தேதி வரை, அது தயாராகாத நிலையில் பாபா இரவெல்லாம் அஜோபாவுடன் அமர்ந்து, அதை அவருடைய பிறந்தநாளுக்கு முன்பு செய்து முடித்தார்.

சாய் தர்பார் தோரணங்கள், பூந்தொட்டிகள், மலர்கள் மற்றும் மாலைகளால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. நூற்றுக்கணக்கான மக்கள் ஓரிரு நாட்களுக்கு முன்னரே வந்தனர். பிப்ரவரி 18ஆம் நாள் அதிகாலையிலிருந்து மக்கள் கூட்டம் அலைமோதியது.

காலை எட்டு மணிக்கு பெண் மண்டலி முதலில் மெஹர் பாபாவிற்கு புனித நீராட்டைத் தொடங்க, தொடர்ந்து ஆண் மண்டலியும் அவ்வாறே செய்தனர். அனைவரும் ஒவ்வொரு குவளை நீரை பாபாவின் மீது ஊற்றினர். பலர் பாபாவின் மென்மையான மலர் போன்ற உடலைத் தொடும் வாய்ப்பையும் பெற்றனர்.

கிராமத்து மத்தளங்கள் மற்றும் புல்லாங்குழல் இசைமழை பொழிய, கட்டுப்படுத்த முடியாத கூட்டத்தால் மண்டலி, பாபாவைச் சுற்றி, கை கோர்த்துப் பாதுகாப்பு வளையம் அமைத்தனர். புனித நீராட்டுக்குப் பிறகு பாபாவை, சாய் தர்பாருக்கு அழைத்துச் சென்றதும், முதன்முதலாக மெஹர் பாபா மரப்பெட்டகத்தில் அமர்ந்தார். பாபாவின் தெய்வீக ஒளிக்கதிர்கள் எங்கும் பிரகாசித்து, அவ்விடத்தை அழகுறச் செய்து, அங்கிருந்தவர்களின் இதயங்களைக் கவர்ந்தன.

அங்கல் பிளீடர் புராண பகுதிகளை வாசித்து, பாபாவின் வாழ்வு மற்றும் பணியைப் பற்றிய அழகான சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார். செந்தூர தூள்களைக் காற்றில் தூவி, பூச்சரங்களை மலைபோல, பாபா மீது குவித்தனர். பின்னர் ஆரத்தி பாடல்களைப் பாடி, ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு, பிரம்மாண்டமான விருந்து வழங்கப்பட்டது.

அன்றிரவு பாபா மரப்பெட்டகத்தில் ஓய்வெடுத்தார். மாலை வேளையிலும் மக்கள் திரள் திரளாக வந்து சாய் தர்பாரில் இரவைக் கழித்தனர். அதிகாலையில் பாபா வெளியே வந்ததும், மக்கள் அருகாமையில் சென்று தரிசனத்திற்காக வேண்டினர். தொடர்ந்து ஆறு மணிநேரம் பாபா அனைவருக்கும் தரிசனம் வழங்கினார். 'சத் சமகம்' (நேருக்கு நேர் இறைவனை சந்திப்பது) என்ற மராட்டி புத்தகம் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டது. இதுவே மராட்டி மொழியில் மெஹர் பாபாவைப் பற்றி எழுதப்பட்ட முதல் புத்தகம்.

பாபாவின் தந்தை ஷெரியார், சகோதரர் ஜாம்ஷெட்டுடன் விழாவுக்காக வந்தவர், விழா முடிந்ததும் புறப்பட்டுச் சென்றார்.

பிப்ரவரி 19ஆம் நாளிலிருந்து பாபா, சாய் தர்பாரில் அமைந்த மரப்பெட்டகத்தில் அமர்ந்தார். அனைத்து பொது நிகழ்ச்சிகளும் அங்கே நடந்தன.

பிப்ரவரி 25 அன்று சாஞ்சி தயாரித்த 'ஷா சிவாஜி' (பேரரசன் சிவாஜி) என்ற நாடகம் மண்டலியால் அரங்கேற்றப்பட்டது; மண்டலி மிகவும் அற்புதமாக தங்கள் நடிப்புத் திறனை வெளிப்படுத்தினர். சாய் தர்பார், நாடகமேடை அனைத்தும் ஒளி வெள்ளத்தால் கோலாகலமாகத் தோற்றமளித்தது.

மெஹர் பாபாவின் பிறந்தநாள் விழாவுக்குப் பிறகு ஜாம்ஷெட், அவர் மனைவி கோர்ஷெத் இருவரையும் பாபா, லோனி கிராமத்தில் வாழ்ந்த டவ்லாவுடன் தங்க அனுமதித்தார். இருவரும் செல்லும் வழியில் ஹஸ்ரத் பாபாஜானை சந்தித்து, தரிசனம் செய்தனர். பிப்ரவரி 26 நள்ளிரவில், ஜாம்ஷெட் மாரடைப்பால் அவதிப்பட்டார். அவருடைய வளர்ப்புப் பெற்றோரை வணங்கி இவ்வாறு கூறினார், "உங்களுக்கு எதிராக நான் ஏதாவது தவறு செய்திருந்தால் என்னை மன்னித்துவிடுங்கள். பாபா கடவுள் என்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள்."

கோர்ஷெத்திடம் ஆவலாக வலியுறுத்திக் கூறினார்: "எந்த சூழ்நிலையிலும் பாபாவை விட்டு விலகாதே." படுக்கைக்குச் சென்றவர் மறுபடியும் மாரடைப்பால் தாக்கப்பட்டு, இறுதி மூச்சில் உரத்த குரலில் 'பாபா! பாபா' என்று குரல்கொடுத்து உயிர் துறந்தார். அப்போது அவருக்கு வயது 33.

போபோ (மெஹர் பாபாவின் தந்தை) ஜாம்ஷெட்டின் இறப்பைப் பற்றிய செய்தியைத் தொலைத்தந்தி மூலம் பாபாவிற்கு அனுப்பி வைத்தார். பள்ளி சிறுவர்களுடன், மதிய வேளையில் பாபா கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தபோது, அந்தச் செய்தி வந்தது. பாபா மண்டலியை உள்ளே அழைத்து, தொலைத்தந்தியை வாசிக்குமாறு கூறினார். ஜாம்ஷெட்டின் திடீர் மறைவு மண்டலிக்கு மிகப்பெரிய அதிர்ச்சியையும், வருத்தத்தையும் அளித்தது, ஆனால் பாபா, எந்த விதமான பாதிப்பையும் காட்டிக் கொள்ளாமல் இவ்வாறு எடுத்துரைத்தார், "**நான் அடிக்கடி ஜாம்ஷெட்டிடம் மெஹராபாத்தை விட்டுச் செல்லாதீர்கள் என்று கூறினேன்; ஆனால் அவர் இங்கிருந்து செல்வதில் பிடிவாதமாக இருந்தார். இப்போது நிஜமாகவே போய்விட்டார்.**"

பாபா அப்போது மண்டலியிடம், "**அவருடைய இழப்பைக் குறித்து நீங்கள் வருந்துகிறீர்களா?**" என்று கேட்டார். ஜாம்ஷெட், அடிக்கடி வந்து

செல்பவராகவும், பாபாவின் பெரிய சகோதரராகவும் இருந்ததால் மண்டலிக்கு மிகவும் நெருக்கமானவர். மண்டலியின் 'ஆமாம்' என்ற பதிலுக்கு பாபா, **"உங்கள் வருத்தங்கள் அனைத்தும் பொய்யானது; அர்த்தமற்றது; போலியானது! இது உண்மையானதல்ல! மேலும் நிஜமாகச் சொல்லப்போனால் இது சுயநலம்."** என்றார்.

மண்டலியில் ஒருவர், "ஆனால், உலகின் பார்வையில் ஒருவர் மறைந்து போனால் அனைவரும் வருந்துவது வழக்கம் தானே" என்று கூறினார்.

**"ஏன்?"** என பாபா கேட்டு, மீண்டும் தொடர்ந்தார், **"இங்குதான் தவறிழைக்கப் படுகிறது. இறப்பு, பொய்யானது!"**

மண்டலியில் மேலும் ஒருவர் பாபாவிடம், "பாபா, ஆனால் அவர் உங்கள் சகோதரர். . . அவர் உயிரைத் துறக்கவில்லையா?" என வினவினார்.

**"உண்மையில் அவர் எனது சகோதரர், ஆனால் இறக்கவில்லை. மாறாக, அமைதியாக அவர் என்னுள் உறைந்திருக்கிறார். ஆதலால், அவர் மறைந்ததை எண்ணி நான் வருந்தவில்லை."**

மற்றுமொரு மண்டலி இவ்வாறு கேட்டார், "ஆனால், உலக மக்களாகிய நாங்கள், எவ்வாறு இந்த உண்மையைத் தெரிந்து, ஏற்றுக்கொள்வது?"

**"பிறப்பு, இறப்பு இவற்றின் இரகசியத்தை அறிந்தவர்களை நம்புவதன் மூலம்"** என்று பாபா பதிலளித்தார்.

ஜாம்ஷெட்டின் மறைவால், 'இறப்பு' மற்றும் 'இறப்பதை'க் குறித்து, பாபா விரிவாக விளக்கமளித்தார்:

**இறப்பை ஏற்றுக்கொண்டு, எனது சகோதரர் ஜாம்ஷெட், இவ்வுலகை விட்டுச் சென்றார் என்பது முற்றிலும் சரிதான். ஆனால், இந்த அனைத்து குழப்பங்களும், உலக ஆரவாரங்களும் குறுகிய காலத்திற்கே! மேலும், ஒருவரின் நாடக பாத்திரம் நிறைவுற்றதும், அவர் இந்த உலகை விட்டுச் சென்றாக வேண்டும். என்னை நம்புங்கள், ஜாம்ஷெட் இறக்கவில்லை; அவர் உடல் இறந்து விட்டது. அனைவரும் நினைக்கிறார்கள் அவர் இறந்து விட்டார் என்று; ஆனால் நான் கூறுகிறேன், அவர் பிறந்து விட்டார் என்று! ஒருவரின் கடைசி காலத்தில், கவலை, துக்கம் மற்றும் அனுதாபம் காட்டுவதற்கு பதிலாக, ஒரு குழந்தை பிறந்ததும் மக்கள் வெளிப்படுத்தும் மகிழ்ச்சியை, இவ்வேளையிலும் வெளிப்படுத்த வேண்டும். மேலும் பிறப்பு, இறப்பின் இரகசியத்தை அறிந்தவர்கள் இவ்வித அறியாமைத்தனம், பாசாங்குத்தனத்திற்கு அனுதாபப் படுவார்கள்.**

**உங்களுக்கு, தெய்வீக பார்வை இருந்திருந்தால், நீங்கள் முழுவதுமாக நான் கூறுவதை நம்புவது மட்டுமின்றி, பௌதீக உடலைத் துறந்த ஆத்மா, ஒருபோதும் அழிவின்றி என்றென்றும் நிலையாக இருக்கும் என்பதையும் நீங்கள் கண்கூடாகக் காணமுடியும். மேலும், நீங்கள் நம்புவதுபோல் இறப்பு இதில் எந்த ஒரு சிறிய வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது.**

ஜாம்ஷெட் அவரது வாழ்க்கையின் முக்கியமான கட்டத்தில் இந்த உலகை விட்டுப் பிரிந்ததாக அனைவரும் கருதுகிறீர்கள். ஆனால் ஒருவர், எப்போதாவது, விரைவில் அல்லது சிறிது காலத்திற்குப் பின்னர் அவர் உடலை துறந்தாக வேண்டும்; கடவுளுக்கு மட்டுமே அந்த சரியான நேரம் எதுவென்று தெரியும். அவர் இளைஞர் என்று நீங்கள் எப்படிச் சொல்ல முடியும்? அவர் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கும் முந்தியவர், மேலும் இவ்வுலகில் மீண்டும் அவர் எத்தனை முறை பிறப்பெடுப்பார் என்பது கடவுளுக்குத்தான் சித்தம். நீங்கள் உங்கள் கண்களால் பார்த்தது ஜாம்ஷெட்டின் பௌதீக உடலை மட்டுமே! அது இல்லாத இவ்வேளை, அவருக்காக உங்களை வருத்தத்துடன் கண்கலங்கச் செய்கிறது.

உங்களின் இந்தக் கண்மூடித்தனமான அறியாமையில் நானும் பங்கெடுக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் - அதை மறந்து விடுங்கள்!

மரணம் அனைவருக்கும் பொதுவானது. இறை வாழ்வை (நிரந்தர, எல்லையற்ற வாழ்வை) நோக்கி முன்னேறிச் செல்ல, மரணம் ஒரு தேவையான படிக்கல்லாக அமைகிறது. ஆத்மாவானது, தன்னை வேறு ஒரு புதிய இருப்பிடத்திற்கு மாற்றுகிறது. இப்படி, இறப்பு என்பது மேலாடையை மாற்றுவது போலல்லாமல் வேறு எதுவுமில்லை. இந்தப் பௌதீகத் தளத்தில் வாழ்க்கையை அனுபவித்த பின்பு, ஜாம்ஷெட் அவரது உடலை மாற்றிக் கொண்டார். இது ஒரு நடிகன் வேறு வேறு நாடகங்களில், விதவிதமான பாத்திரங்களில் நடிப்பது போல், அல்லது ஒரே நாடகத்தில், திரைக்குப் பின்னால் ஆடைகளை மாற்றி மறுபடியும் மேடையில் வித்தியாசமான உடையில் தோன்றுவதுபோல் அல்லது இதைத் தூக்கத்தோடு கூட ஒப்பிடலாம்.

மரணம், தூக்கம் இந்த இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்னவெனில், மரணத்திற்குப் பின்னர் ஒருவன் புது உடலோடு விழிக்கிறான், அதேவேளை தூக்கத்திற்குப் பின்னர் அவன் அதே உடல் உணர்வோடு விழிக்கிறான். உலக எண்ணம் படைத்த மக்கள், ஒருவன் இரவில் தூங்கச் செல்லும் வேளையில், அவன் அடுத்த நாள் காலையில் விழித்தெழுவான் என்ற ஒரே நம்பிக்கையில், அதை நினைத்து ஆவேசமோ வருத்தமோ அடைவதில்லை. அதுபோல், அவன் அல்லது அவள், விரைவில் அல்லது பின்னர் ஒரு புது உடலில் உயிர் பெற்று வந்தாக வேண்டும் எனும்போது, அதே அலட்சியத்தை ஒருவன் இறப்பு எனும் தூக்கத்தைத் தூங்கும் போதும் ஏன் காட்டக்கூடாது?

சில நேரங்களில் நீங்கள் ரயிலில் பயணம் செய்கிறீர்கள், இதர பயணிகள் உலகைப் பற்றிய அக்கறை எதுவுமில்லாமல், லோனவாலா, கல்யாண் மற்றும் தாதர் போன்ற அவரவர் பயணச்சீட்டுப்படி, இடம் வந்ததும் இறங்கி விடுகிறார்கள். அதுபோல, ஜாம்ஷெட் செய்து கொண்டிருந்த பயணம், அவர் சென்று சேர வேண்டிய இடம் வந்ததும், பயணச்சீட்டின்படி ரயிலிலிருந்து இறங்கி விட்டார் (உடலைத் துறந்தார்).

அவருடைய இடம் அருகாமையில் இருந்தது. ஆனால், உங்களைப் பொறுத்தவரையில் அவர் இளம் வயதிலேயே இறந்துவிட்டார். இரவும் பகலும் ஓடிக்கொண்டே இருக்கும் ரயில்களில் பயணம் செய்யும் எண்ணிலடங்கா பயணிகள், அவரவர் பயணச்சீட்டிற்கு ஏற்றவாறு வேறு வேறு இடங்களில் இறங்கிக் கொள்கிறார்கள். எத்தனை பேருக்காக நீங்கள் அழுது கண்ணீர் சிந்த போகிறீர்கள்?

பெரும்பாலான மக்கள் மரணத்தை அலட்சியம் செய்யாமல் இருப்பதன் காரணம், அவர்களின் அன்புக்குரியவர் அல்லது நண்பரின் மரணத்திற்குப் பின்னர், இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் நுண்ணிய சூட்சும (பிராண) உடலை, அவர்களின் குறைபாடுள்ள சாதாரண கண்களால் காணமுடியாது; அதன் விளைவாக அவர்கள் ஆத்மாவின் புது வாழ்வை அறியாதவர்களாய் இருக்கிறார்கள். இப்படி, பிரிந்து போன பிரியமானவர்களின் உடல்களைப் பார்க்க முடியவில்லையே என்ற சுயநலத்தால், கண்ணீரும் கம்பலையுமாக காணப்படுகிறார்களே ஒழிய இறந்துவிட்டார் என்பதற்காக அல்ல!

ஒருவரின் மரணத்திற்குப் பின்னர், அனைத்து பக்கங்களிலும் அழுது புலம்பி ஆரவாரம் செய்வர்: "எனக்குப் பிரியமான தந்தை அல்லது தாயார் இறந்து விட்டார்... எனது வாழ்வின் ஆதாரமாய் இருந்தவர் மறைந்து போனார்... எனது கண்களின் ஒளி மங்கிவிட்டது!.... என் அன்பே நீ எங்குச் சென்றாய்?.... என்னுடைய ஆதரவு மறைந்து விட்டது....."

ஒரு மரண வீட்டில் இத்தகைய வியப்புக்குரிய வார்த்தைகளை நாம் வழக்கமாகக் கேட்பதுண்டு. ஆனால், துக்கம், வேதனை இவற்றை மிகப்பெரிய அளவில் வெளிப்படுத்தினாலும், மறைந்தவரின் நலனைக் கருத்தில் கொள்ளாமல், 'நான்', 'என்னுடையது' என்பது மட்டும் மேலோங்கி இருக்கும்.

ஒரு மனித வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே இறப்பு எனும் வாள் ஊசலாடிக் கொண்டு தான் இருக்கும். எனது பல்லாயிரக்கணக்கான சகோதரர்கள், இறப்பைப் பற்றி எவ்வித உணர்வும் இல்லாமல் தினமும் இறப்பதை நான் பார்க்கிறேன்; அது போல, ஜாம்ஷெட்டின் மரணமும் இதற்கு விதிவிலக்கல்ல. மரணம் தவிர்க்க முடியாத ஒன்று என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம் - அனைத்திற்கும் அவசியமான ஒரு முடிவு - இந்த உண்மை உலகளாவிய முறையில் அனுபவரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், இதுபோன்ற சம்பவம் நிகழும் வேளையில் மக்கள் உடனடியாகக் கதறத் தொடங்குகிறார்கள். இது பைத்தியக்காரத்தனம் அல்லது குழப்பமான மனநிலை என்று கூறலாம்.

உலகில், பிறப்பு, இறப்பு இரண்டிற்கும் உட்படும் ஜுவாத்மாவைத் (தனிப்பட்ட ஆத்மா) தவிர அனைத்தும் நிலையற்றது, எதுவும் நீடிப்பதில்லை. சத்குருக்கள் மற்றும் அவதார புருஷர்கள் கூட, அவர்கள் பணி முடியும் தருவாயில் உலகை விட்டுச் செல்கிறார்கள் எனும்போது, சாதாரண ஆத்மாக்களை என்னென்பது? இத்தகைய 'வந்து போகும்'

விளையாட்டு, வாழ்க்கையில் மாறி மாறி வரும் அனுபவங்களால் ஏற்படும் மனப்படிவங்களை சேகரிப்பதும், செலவிடுவதும் என்பதை உண்மையிலேயே புரிந்து கொள்வது மிகவும் கடினம்.

பெரும்பாலான மக்கள் கர்மவினை எனும் தத்துவத்தை நம்புவதில்லை, மேலும், பிறவிக்குப் பின்னர் ஓர் உடல் இல்லை என்பதில் உறுதியாக உள்ளனர். வேறு உடலில் மறுபிறவி எடுக்கும் எண்ணம் அவர்களை அதிர்ச்சியில் நடுங்கச் செய்யும். ஒரு முறை ஒருவர் இறந்துவிட்டால், காய்ந்த மரம் மறுபடியும் தளிர் விடாதது போல், இறந்தவர்க்கு மறுபிறவி கிடையாது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

உண்மையாகச் சொல்லப்போனால், ஜாம்ஷெட் இறக்கவில்லை. ஜாம்ஷெட் உண்மையில் இறந்திருந்தால் அது மனதிற்கு உகந்த ஆச்சரியமாக இருந்திருக்கும், ஆனால் அவர் இறக்கவில்லை. உண்மையான இறப்பாக இருந்திருந்தால், அதற்காக அனைவரும் சந்தோஷப்படலாம், ஏனெனில் அது அவருக்கு 'நிஜ வாழ்வு' ஆகும். நாம் நிஜமாக இறக்காத வரையில் (அகந்தை அழியாத வரையில்) இறை உணர்வை அடைய முடியாது. எனவே இவ்வாறு வெளிப்படுத்தும் துக்கம், வருத்தம் அனைத்தும் அர்த்தமற்றது!

நான், உங்களோடு வாழ்ந்து, விளையாடி, உயிரோடிருக்கும் ஒருவர் செய்யும் அனைத்தையும் செய்து வந்தாலும், உண்மையிலேயே இறந்துவிட்டவன்! உயிரோடு உற்சாகமாக இருப்பதுபோலத் தோன்றினாலும், நான் நிஜமாகவே இறந்துவிட்டேன். உண்மையான இறப்பை நீங்கள் ஒரு முறை சந்தித்து, இறை நிலையை அடைந்து விட்டால், உங்களுக்கு மேலுமொரு பிறப்பு, இறப்பு என்பதே கிடையாது. நான் 'இறந்து விட்டதால் உயிரோடிருக்கிறேன்'!

ஒவ்வொருவரும் 'நான் இறந்து கொண்டிருக்கிறேன்'
என்று கூறுகிறார்கள், ஆனால் எவரும் இறப்பதில்லை.
இறப்புக்கு முன் யார் இறந்துவிடுகிறாரோ,
அவருக்கு மறுபடியும் இறப்பு என்பது இல்லை.

இவை கபீரின் வார்த்தைகள்.

இறக்கும்போது, மறுபடியும் இறக்க வேண்டாத இறப்பை அடைய வேண்டும். இறப்பு என்ற வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் நீங்கள் அனைவரும் இறந்தால் நிலையாக வாழலாம். உயிர் மூச்சு நின்று விடுவதும், நாடித்துடிப்பு இல்லாமலிருப்பதும் உண்மையான இறப்பு ஆகாது. உங்கள் பௌதீக உடலை இறக்க விடுவதில் ஒரு பயனுமில்லை; உங்கள் அனைத்து ஆசைகளும், ஏக்கங்களும் இறக்கவேண்டும். அதாவது, மாயையிலிருந்து முதலில் விடுபட்டு, மனப்படிவங்கள் இல்லாத நிலையை அடைவது! அப்போதுதான் நீங்கள் உண்மையான இறப்பை அடைந்து, நிலையான வாழ்வை வாழ்வீர்கள்.

இம்மண்ணில் வாழும் ஒருவர், இறை நிலையை அடையும் வேளையில் அவர் நிஜ பிறப்பை அடைந்துவிட்டதாகக் கூறமுடியும்.

ஞானிகள், புனிதர்கள், ஸுஃபிகள், சித்தர்கள், இறைத் தொண்டர்கள் அனைவரும் எல்லா உலகப் பொருட்களையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்வதன் மூலமாக, இறுதி இலக்கை - கடவுளோடு ஐக்கியமாகும் நிலையை - அடைகிறார்கள். எனவே, அத்தகைய செயல்களைச் செய்வது, ஒருவருக்குப் பிறப்பு இறப்புகளின் தொடர்ச்சியான சுழற்சிகளிலிருந்து விடுதலைக்கு வழிவகுக்கும்.

இதையெல்லாம் நீங்கள் புரிந்து கொள்ளும் போது, கவலைப்பட்டு அழுவதில் என்ன பயன்? உயிரிழந்தவர் மீது நீங்கள் அன்புடையவராக இருந்தால், அது தன்னலமற்றதாக இருக்கவேண்டும். துக்கத்தை வெளிப்படுத்துவது இறந்தவருக்குத் தேவையற்றது. மாறாக, மனம் நிறைந்து அவர்களின் ஆத்மா சாந்தி அடையும் அளவுக்கு அன்பை வெளிப்படுத்துங்கள். அந்த ஆத்மாக்களின் உணர்வுநிலை முன்னேறிச் செல்வதை நீங்கள் விரும்பினால், தன்னலமற்ற அன்பைச் செலுத்துங்கள். அழுது, புலம்பி அவர்களைக் கவலைக்குள்ளாக்காதீர்கள்.

ஜாம்ஷெட் என் சகோதரர், ஆனால் நான் இறப்பின் அதிபதி. இந்த மறைவு ஜாம்ஷெட்டை அவருடைய குருநாதரிடம் கொண்டு சேர்த்தது. ஜாம்ஷெட் இப்போது அந்த குருநாதரின் அருகிலுள்ளார். ஆகையால், இத்தகைய பயனற்ற நடைமுறைகளை விட்டுவிட்டு, உங்கள் கடமைகளில் கருத்தாய் இருங்கள். ஜாம்ஷெட் இறந்ததால் இவ்வுலகமே இறந்துவிட்டது என்று கருதாதீர்கள்.

இறப்புக்குப்பின் பிறப்பு உண்டு என்பதைத் திடமாக நம்பும் ஒருவர், கவலையடைவோ அல்லது துக்கம் அனுஷ்டிக்கவோ மாட்டார். வயல்வெளியில் காய்ந்துபோன பயிர்களைப் பற்றிக் கவலைப் படுவதில் என்ன பயன்? இறப்புக்கு முன்னர் இறப்பதால் (மனதை நிர்மூலமாக்குவது) ஒருவர் ஈருலகையும் அடையலாம். இல்லையேல், பிறப்பு, இறப்பு என்பது ஒரு முடிவிலா சுழற்சியாகவே இருக்கும். இதிலிருந்து தப்பிக்கவே முடியாது.

இது அவரவர் பாக்கியத்தைப் பொறுத்தது. நம்முடைய இறுதி நாள் நெருங்கும் போது, நாம் என்ன செய்ய முடியும்? இது நம் கைகளில் இல்லாத போது என்ன செய்வது? நாம் அனைவரும் ஒரு நாள் சென்றாக வேண்டும். எனவே, அழுது புலம்புவதில் என்ன புத்திசாலித்தனம்? கடவுளின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவது தவிர, ஒருவர் வேறு எதுவும் செய்ய இயலாது.

முக்தி மற்றும் அழிவில்லாத வாழ்வை அடையும் எளிதான வழி என்னவென்று மண்டலியில் ஒருவர் கேட்டதற்கு பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**அழியா நிலையை அடையும் எளிதான வழி, ஓர் ஆன்மீக குருவின் சகவாசத்தில் வருவது. இறை நிலையை அடைவதற்கான ஆழ்ந்த ஏக்கம் அதைவிட சுலபமானதாக அமையும்.**

**இதர வழிகள் அனைத்தும் மிக நீண்டதும், கடினமானதுமாகும். சேவையே மிகவும் உன்னதமான மதம் என்று கூறப்படுகிறது; இன்னும்**

**ஆயிரக்கணக்கான பிறவிகள் எடுத்தாலும், விடிவுகாலம் அவ்வளவு விரைவில் வருவதில்லை. எனவே அனைத்திலும் மிக சுலபமான வழி, ஞானிகளின் சகவாசத்துடன் ஒரு சத்குருவின் தொடர்பில் இருப்பதாகும். அவர்களின் கட்டளைகளுக்கு இணங்கி செய்யும் ஒவ்வொரு சேவையும் உங்களுக்கு உள்ளளவில் விடுதலையை வழங்கும்; அதற்குப் பிறகு நீங்கள் அடைவதற்கென்று வேறு எதுவுமேயில்லை. இறை நிலையை அடைய வேண்டும் என்ற ஆழ்ந்த உணர்வுகள் தோன்றாத வரையில், இதுபோன்ற சேவைகள் கடினமாகவும், நடைமுறைப்படுத்த முடியாததாகவும் தோன்றும். இத்தகைய பலவீனங்கள் இருந்தபோதிலும், உங்களுக்கு இறைவனை அடைய வேண்டும் என்ற ஆர்வம், ஏக்கம் இருக்குமானால், இந்த மகத்தான சாத்தியமற்ற வேலை கூட சாத்தியமாகும்.**

**ஒரு பெரிய கப்பலோடு இணைக்கப்பட்ட சிறிய படகு, புயலிலும் அழுத்தத்திலும் பாதிக்கப்படாமல் வெகுதூரம் செல்லும். ஆனால் அச்சிறிய படகு தனியாகச் செல்வதானால் அதன் இலக்கை அடைய பல வருடங்களாகும்; அது மட்டுமின்றி ஆழ்கடலில் புயலால் பாதிக்கப்பட்டு மூழ்கியும் போகலாம். அதுபோல, சாதாரண மனிதர்கள், அறியாமையில், உலக விஷயங்களில் மாறுதல்களை விரும்பி, தங்களுக்கு ஏற்றவாறு செயல்படுகிறார்கள். இது, புயல் காலங்களில் எதிர்வரும் அபாயத்தில் அழிந்து போவது தெரியாமல், ஒரு சிறிய படகில் ஏழு கடல்களையும் கடக்க முற்படுவது போலாகும்.**

**உண்மையின் உருவான சத்குருக்கள் மட்டுமே உங்களை மறுபுறம் கடக்கச் செய்ய முடியும். அவர்களின் உதவி, சிறிய படகுகளை அதி வேகத்தில் அதன் இலக்கை அடையச்செய்யும் வரப்பிரசாதமாக அமையும். இக்காரணத்தினால்தான், இந்த உலகம் அழிவை நோக்கிச் செல்வதிலிருந்து தடுக்கவும், சரியான வழியில் நடத்திச் செல்லவும் சத்குருக்கள் இக்கிரகத்தில் பிறவி எடுக்கிறார்கள். அவர்கள் உங்களுக்குக் கற்பித்து, வழி நடத்துவதை நீங்கள் ஏற்றுக்கொண்டு, அவர்களோடு ஒத்துழைக்க வேண்டும்.**

இந்த சொற்பொழிவுக்குப் பிறகு, மண்டலி மன நிம்மதி அடைந்து, ஜாம்ஷெட்டின் மறைவு உண்மையான இறப்பல்ல, கவலையடைய எக்காரணமும் இல்லை என்பதை உணர்ந்தனர். இறுதியில் பாபா அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

பாபா அவருடைய நெருங்கிய சீடர்களை ஜாம்ஷெட்டின் இறுதி சடங்குகளில் கலந்துகொள்ள அனுப்பி வைத்தார்.

ஒரு சில நாட்களுக்குப் பிறகு, தாயார் ஷிரீன்மாய் மெஹராபாத்திற்கு வந்தபோது, ஜாம்ஷெட் மறைந்த அந்நாளில், பாபா அனைவருக்கும் இனிப்பு வழங்கியதைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்து, மனவருத்தத்தில் வினவினார், "மெரோக், உன்னுடைய சகோதரன் இறந்த வேளையில் இனிப்பு வழங்க என்ன தேவை? அது எவ்வளவு அவமரியாதைக்குரிய விஷயமென்று உனக்குத்

தெரியுமா? பூனாவில் சிலர் உன்னைப் பற்றி என்ன கூறுகிறார்கள் என்பதை அறிவாயா? 'உன் சகோதரன் இறக்கிறான், நீ லட்டுக்களை வழங்குகிறாய்!'"

பாபா, மெமோவை சமாதானப்படுத்தி இவ்வாறு பதிலளித்தார்: "**தாயே, நான் காண்பதுபோல நீங்களும் ஜாம்ஷெட்டைக் காண முடிந்திருந்தால், நீங்கள் லட்டுக்கள் மட்டுமின்றி இன்னும் சிறப்பான இனிப்புப் பண்டங்களை வழங்கியிருப்பீர்கள்!**"

டாக்டர் கனிக்கு எழுதிய கடிதத்திலும் பாபா இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "**ஜாம்ஷெட்டின் மறைவைப் பொறுத்தவரையில், உங்களுக்கு இது குறித்து நன்கு தெரியும். ஆயிரக்கணக்கான எனது சகோதரர்கள் அனுதினமும் இறப்பதையும், பிறப்பதையும் நாம் பார்க்கிறோம், மேலும் எனது பார்வையில் எவரும் பிறப்பதும், இறப்பதும் இல்லை. அந்த நாள் நான் மிகவும் ஆனந்தமான மனநிலையில் இருந்தேன். உண்மையான ஆனந்த நிலை.**"

ஜாம்ஷெட்டின் மறைவிற்குப் பின்னர், அவர் மனைவி கோர்ஷெத் பெண்மண்டலியுடன் மெஹராபாத்தில் வாழ்ந்து வந்தார்.

1926, மார்ச் 4ஆம் நாள் மெஹர் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**விலங்குகளுக்கு இயலுணர்வும்** (INSTINCT), **மனிதர்களுக்கு அறிவாற்றலும்** (INTELLECT) **உள்ளன, ஆனால் என்னிடம் வருபவர்களில் பலர் உத்வேகத்தால்** (INSPIRATION) **ஈர்க்கப்படுகிறார்கள். அவர்கள், என் இறையன்பின் வாசத்தை நுகர்ந்து என்னில் கவரப்படுகிறார்கள். உலகின் தொடர்பை நீங்கள் துண்டிக்கும் தருவாயில், கவலையற்ற சுதந்திர பறவையாகிறீர்கள். உலகத்தோடு நீங்கள் ஆழமான தொடர்பை வைத்துக் கொள்வதாக இருந்தால், கவலைகள் உங்களை ஆக்கிரமிக்கும். பந்தம் அல்லது பிணைப்பு என்பது தலைமுடி போன்றது; அதிகமாக வளரவிட்டால், அதைப் பலமுறை சுத்தம் செய்து, எண்ணெய் தடவி, வாரி விடவேண்டும். அதுபோல், உலக பிணைப்புகளும் எப்பொழுதும் தேவையற்ற பிரச்சினை மற்றும் கஷ்டங்களால் நிரம்பி, தொடர்ந்து மன அழுத்தங்களுக்குக் காரணமாக அமையும்.**

மார்ச் 25ஆம் நாள் மெஹர் பாபா, ஷஹானே இல்லத்திற்கு விஜயம் செய்த வேளையில் அறிவுத்திறனைக் குறித்து கீழ்வரும் விளக்கத்தை அளித்தார்:

**அறிவாற்றலை** (INTELLEGENCE), **சிந்தனை இல்லாத வேளையில் தன்னுணர்வற்று இருக்கும் ஆழ்ந்த தூக்கத்தோடு ஒப்பிடலாம். சிந்தனை மற்றும் கற்பனை, அறிவாற்றலில் மறைந்திருக்கும். அறிவாற்றல் தன்னையே எண்ணும்போது, அது இறை நிலையில் இறைவனாக இருக்கும்; கற்பனை நிலையில் இருக்கும்போது, உலகம், மனம், உடல் மற்றும் அறியாமையாக இருக்கும்.**

**உதாரணமாக, இசைத்தட்டை எடுத்துக் கொள்ளுங்கள். அதை இசைக்காத வேளையில் ஆழ்ந்த தூக்க நிலையில், தன்னுணர்வற்று**

ஆனால் அறிவுத்திறனை தன்னுள் அடக்கியதுபோல் (அதாவது, சிந்தனை இல்லாதது போல்) இருக்கும்; ஆனால், இசைத்தட்டில் ஊசியை வைத்ததும் இசைக்கத் தொடங்கும். இது அறிவாற்றலில் மறைந்திருக்கும் கற்பனையின் சிந்தனையாக உருவெடுக்கும்.

மற்றும் ஓர் எடுத்துக்காட்டாக, அமைதியாக இருக்கும் ஒரு பெருங்கடலை, அறிவாற்றலுக்கு உவமைப் படுத்தலாம். ஆனால், காற்று வீசும் வேளையில் (அறிவு தன்னை யார் என்று அறிந்துகொள்ள ஆசைப்படும்போது), அமைதியாக இருக்கும் நீரானது அதிர்வுகளை உருவாக்கி (அறிவானது சிந்திக்கத் தொடங்குகிறது), எண்ணிலடங்கா அலைகள் உருவாகி அதன் விளைவாக விளக்க முடியாத அளவில் நீர்க்குமிழிகளை உருவாக்குகின்றன. இவ்வாறு, அறிவானது சிந்திக்கத் தொடங்கும்போது, அது உருவாக்கும் அலைகள் (பிரபஞ்சங்கள்) நீர்க்குமிழிகளாக (வேறுபட்ட உலகங்களாக) உருவெடுக்கும்.

கடலானது (அறிவு) நீர்க்குமிழிகளில் (கற்பனை), வரையறுக்கப்பட்ட அமைப்பில் மட்டுமே இருக்கும். எனவே நாம் அறிவாற்றலைப் பற்றி சிந்திக்கும்போது, அதுவும் ஒரு குறிப்பிட்ட அமைப்பிலே இருக்கும். அது 'நான் இந்த உடல்' என்பதை அப்போது தெரிந்து கொள்ளும்.

மெஹர் பாபா, பின்னர் ஒரு பெரிய பானையில் சிறிதளவு தண்ணீரை எடுத்து அதில் ஒரு டம்ளரை தலைகீழாகக் கவிழ்த்துக் கூறினார்:

பானையில் இருக்கும் அதே நீர் டம்ளரில் இருந்தாலும், அதன் கொள்ளளவு வரையறுக்கப்பட்டுள்ளது. அதுபோல, கடலானது நீர்க்குமிழியிலும், அறிவானது கற்பனையிலும் வரையறுக்கப்பட்ட அளவில் இருக்கும்.

மாலை வேளையில், வெளியிலிருந்து வந்த பக்தர்களுக்கு பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:

வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள் இறை நிலையை அடைவது எனும்போது, முழு உலகமும், பெண்கள் மற்றும் சொத்து சுகங்களில் சிக்கிக் கொண்டிருக்கிறது. மனித உடல் எடுத்ததன் நோக்கம் நிறைவேறாமல் விரக்தியடைந்து, இறை நிலையை அடைவது வரையில், வாழ்வின் உண்மையான பொருள் பூரணமடையாமல் போகிறது.

அறிவானது சுத்தமாக்கப்பட்டு, புனிதமாகி, கற்பனையிலிருந்து விடுதலை அடையாத வரையில், இறை நிலையை உணர்வது என்பது சாத்தியமற்றது. சாதுக்களின் சகவாசத்தில் இருந்தால் மட்டுமே இதை அடைய முடியும். இதனால்தான் ஒரு சத்குருவின் நெருக்கமான தொடர்பு, இறை நிலையை அடைய இன்றியமையாததாக விளங்குகிறது. ஆனால், இவர்களைப் போன்ற 'உண்மை வீரர்'களைக் (சத்குருக்களைக்) கண்டுகொள்வது மிகமிக அரிது. அதே வேளையில், இவ்வுலகில் தெய்வீக வழிகாட்டி என்று பறைசாற்றும் போலித்தனமான ஏமாற்றுக்காரர்கள் மிகையாக உள்ளனர். இறை நிலையின் அனுபவம் இல்லாத ஒருவர் எப்படிப் பிறரை ஆன்மீகப் பாதையில் வழிநடத்த முடியும்?

மெஹர் பாபா அவருடைய இரகசிய புத்தகத்தை எழுதும் பணியைத் தொடர்ந்தார். அவர் எழுதுவது என்ன என்பதை வெளிப்படுத்தாவிடினும், அவ்வப்போது ஆன்மீகம் மற்றும் அசாதாரணமான, ஆச்சரியத்திற்குரிய கருத்துக்களை, தன்னிச்சையாக எடுத்துரைத்தார்.

மார்ச் 30 அவரது ஆய்வு நேர சுற்றின்போது பாபா இவ்வாறு மண்டலிக்கு வெளிப்படுத்தினார்:

**ஒருவர் ஒரு பொருளைப் பற்றி விவாதிக்கும்போது, அவர் பயன்படுத்தும் வார்த்தைகளைப் பொறுத்து, மனப்படிவங்கள் வேறுபட்ட வண்ணங்களில் பதிவாகின்றன. எடுத்துக்காட்டாக, மூன்று சகோதரர்கள் ஒரு முறை, அவர்களின் தாயாரை சாலையோரத்தில் பார்த்தபோது, ஒருவர் 'அம்மா' எனவும், அடுத்த சகோதரர் 'எனது தந்தையின் மனைவி' என்றும், மூன்றாமவர் 'எனது தந்தையோடு பௌதீக உறவில் இருக்கும் பெண்மணி' எனவும் குறிப்பிட்டனர். மூவரும் கூறியது 'அம்மா' என்ற சொல்லைத்தான், ஆனால் அவர்கள் அதை வெளிப்படுத்திய விதம் முற்றிலும் மாறானது. இவ்வாறு, வெவ்வேறு விதங்களில் மனப்படிவங்கள் மற்றும் மாறுபட்ட எதிர் வினைகள், ஒருவர் தேர்ந்தெடுக்கும் வார்த்தைகளைப் பொறுத்து அமையும்.**

படைத்தலின் தொடக்கத்தைக் குறித்து விளக்கும்போது பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"'ஒன்றுமில்லாத' நிலையிலிருந்து உருவானது 'படைத்தல்'. மேலும், 'ஒன்றுமே இல்லை' எனும்போது அது 'ஏதோ ஒன்றை'க் குறிக்கிறது. ஒருவர் 'இது எதுவுமே இல்லாதது' என்று கூறும்போது, 'இல்லாத தன்மை' ஏதோ இருப்பதாகி விடுகிறது."**

இவ்வேளையில் மெஹராபாத்தில் வாழ்ந்துவந்த குலாப்ஷா (GULABSHA), மெஹர் பாபா உண்மையிலேயே தெய்வீக உணர்வும், சக்திகளும் படைத்தவரா என்ற சந்தேகத்தில் குழப்பமடைந்தார். இதை பாபா அறிந்ததும், குலாப்ஷாவை அழைத்து, **"உங்கள் மனதில் இதுபோன்ற சந்தேகங்கள் எழும்போது நீங்கள் என்னுடன் வாழ்வது முறையாகாது"** என்று கூறி தொடர்ந்து வினவினார்,

**"குவாஜா ஸாஹேப் கிஸ்தியின் இறைத் தன்மையில் உங்களுக்கு நம்பிக்கை உள்ளதா?"**

குலாப்ஷா ஆமாம் என்று பதிலளிக்க, பாபா அவரை அஜ்மீரில் அமைந்த மசூதிக்குச் செல்லுமாறு கூறி, போதிய பணமும் கொடுத்து, இவ்வாறு அறிவித்தார்: **"நான் உண்மையில் யார் என்பதை நீங்கள் அங்குச் சென்றதும் அறிவீர்கள்."**

அஜ்மீருக்குச் சென்றதும், மெஹர் பாபாவைத் தவிர அவரால் வேறு எவரையும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாமல் தவித்தார். தனது தவறை உணர்ந்து, அவரடைந்த அதிருப்தியில் கிஸ்தியின் சமாதிக்குச் செல்லாமல், உடனே அங்கிருந்துப் புறப்பட்டு, மெஹராபாத்திற்குத் திரும்பிவந்து பாபாவிடம் கூறினார், "நீங்கள் கடவுள் என்பதைப் பூரணமாக நம்புகிறேன். எனது மனதில் சந்தேகங்களுக்கு இடமேயில்லை."

மெஹராபாத்தில் பள்ளிக்கூட சிறுவர்களின் நலனைக் கருதி அணிவகுப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இவ்வேளையில் ஆங்கிலேய படைகளில் இணைய, இம்மாணவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுவதாக வதந்திகள் பரவின. ஏப்ரல் 3ஆம் நாள், பல மாணவர்களின் பெற்றோர்கள், பீதியில் மெஹராபாத்திற்கு வந்து, தமது குழந்தைகளை அழைத்துச்செல்ல ஆயத்தமாயினர். உண்மையை எடுத்துக் கூறி விளக்கியபோது, பாபா அவர்களிடம், “**இத்தனை காலத்திற்குப் பிறகு, நீங்கள் ஏன் இப்படி நினைக்கிறீர்கள்? இங்கு நடப்பது அனைத்தும் உங்கள் குழந்தைகளின் நன்மைக்காகவே. கல்வி, உணவு, துணிமணிகள் - அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகிறது, இருந்தும் உங்களுக்கு சந்தேகமா?**” என்று வினவினார்.

அதற்குப் பிறகு பாபா, 44 தாழ்த்தப்பட்ட மஹர் குழந்தைகளை, பெற்றோருடன் அனுப்பி வைத்தார்; மராட்டா மாணவர்கள் ஏறக்குறைய 44 பேர் அங்கேயே தங்கினர். அன்று மாலையில் அனைத்து மஹர் இனத்தைச் சார்ந்த பெற்றோர்களும் திரும்பி வந்து, அவர்கள் செய்த தவறுக்காக மன்னிப்புக் கோரினர். பாபா, இரண்டு நிபந்தனைகளுடன் மன்னிப்பதாகக் கூறினார்:

**ஒன்று, மாணவர்களை பாபாவின் விருப்பத்திற்கு, சுதந்திரமாக அங்கு வாழ அனுமதிக்க வேண்டும்.**

**இரண்டு, அவர்களின் நம்பிக்கையின்மையின் காரணமாக, மூன்று நாட்கள் உபவாசம் மேற்கொள்ள வேண்டும்.**

அனைவரும் பாபா கூறியதை மனமுவந்து ஏற்றுக்கொள்ள, மாணவர்கள் மறுபடியும் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப் பட்டனர்.

பாபா, மஹர் குழந்தைகளின் சுகாதாரத்தில் மிகவும் கவனமாக இருந்தார் . மூன்று நாட்களுக்குப் பிறகு பாபா, அரன்காவ்ம் கிராமத்திற்குச் சென்று உபவாசத்தைக் கைவிடுமாறு கூறி அனைவருக்கும் திருப்திகரமாக உணவளித்தார். அடுத்த நாள் தேநீர் விருந்தளித்து, மாலையில் சிறப்பு உணவும் வழங்கினார்.

1926, ஏப்ரல் 22 அன்று மெஹர் பாபா மண்டலிக்கு ‘**நீங்களும், நானும் கடவுள்**’ என்ற தலைப்பில் கீழ்வரும் சொற்பொழிவை வழங்கினார்.

**ஆரம்பத்திலிருந்தே சுதந்திரமாகவும், ஆனால் சுதந்திரம் என்றால் என்ன என்று அறியாமலும் இருக்கும் ஒரு கிளியின் கதையை நினைவில் கொள்ளுங்கள். கிளியை கூண்டில் அடைத்ததும், அதனுள்ளே சுதந்திரத்தின் அர்த்தத்தை, அந்தக் கிளி கற்றுக்கொண்டது. கூண்டிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்பு, சுதந்திரத்தை முழுமையாக உணர்ந்து மகிழ்ச்சியடைந்தது. அதைக் கூண்டிலடைத்து, அதன் சுதந்திரத்தைப் பறித்து, சுதந்திரத்தைப் பற்றிய அறிவையும், அனுபவத்தையும் அளித்தது அதை உணர வைப்பதற்காகவே! இறுதியில், உண்மையிலே சுதந்திரம் என்றால் என்ன என்பதை அறிந்து கொண்டதோடு, தான் யார் என்பதையும் தெரிந்து கொண்டது.**

நம் உடல், கூண்டு போன்றது; ஆன்மா, கிளியைப்போல. நீங்களும் 'ஈஸ்வரன்' (இறைவன்) என்று நான் உங்களுக்குக் கூறினால், நீங்கள் அதை நம்பியிருக்க மாட்டீர்கள், ஏனெனில், கடவுளைக் குறித்த உங்களின் கேலித்தனமான கருத்துப்படி, அவர் ஏதோ வெண்தாடி வைத்த முதியவர் ஒருவர், சொர்க்கத்தில் கை நாற்காலியில் அமர்ந்து, உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதே! நீங்களும், "ஒரு சாதாரண மனிதன் எப்படிக் கடவுளாக முடியும்?" என்று தம்மையே கேட்கிறீர்கள். நீங்கள் கடவுள் என்று கற்பனை செய்வதற்கே அஞ்சுகிறீர்கள்! ஆனால் இதுவே உண்மை. ஞானத்தைப் பற்றிய உங்களின் அறியாமை - அதாவது நீங்கள் 'மானிடன்' எனும் தவறான மனப்படிவங்கள் - நீங்கள் 'கடவுள்' எனும் அனுபவத்தை அடையப்பெறத் தடையாக இருக்கிறது.

உதாரணமாக, நீங்கள் விழித்திருக்கும் வேளையில் பொருட்களைப் பார்க்க முடியும், ஆனால் அதே கண்கள் உங்களிடமிருந்தும், தூக்கத்தில் நீங்கள் பார்க்க முடிவதில்லை. தூங்கும் வேளையில் நீங்கள் பார்க்க முடியாது என்பதால் உங்களுக்குக் கண்கள் இல்லை என்றாகுமா? இல்லை! உங்களுக்குக் கண்கள் எப்போதுமே உள்ளன என்பதுதான் உண்மை - அதாவது தூங்கும் போதும், விழித்திருக்கும் வேளையிலும் - ஆனால், விழித்திருக்கும்போது பார்ப்பதற்கும், தூக்கத்தில் பார்க்காமல் இருப்பதற்கும் இடையே உள்ள வேறுபாடு, மனம் செயல்படும் நிலையின் வித்தியாசத்தைப் பொறுத்தது.

உங்களிடம் ஒருகோடி ரூபாய் இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். இருந்தாலும், நீங்கள் அனைத்தையும் உங்கள் பையில் எடுத்துச் செல்வதில்லை. அப்போது அந்தப் பணம் உங்களுக்குச் சொந்தமல்ல மற்றும் நீங்கள் காசற்றவன் என்றும் அர்த்தமாகாது. அதுபோல, நீங்கள் 'கடவுள்' என்பது உங்களுக்குத் தெரியாததால், உங்களில் ஒவ்வொருவரும் 'கடவுள்' என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன்.

உலகில், உங்கள் குடும்பத்தினரின் நல்வாழ்வுக்காக, உங்கள் கடமைகளை நேர்மையாகச் செய்யுங்கள். ஆனால், இந்த உடலின் ஐம்புலன்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, மேலும் மேலும் பணம் சம்பாதிக்கும் ஆசையை வளர்த்து, அதையே இலட்சியமாகக் கொள்ளாதீர்கள். உங்கள் குடும்பத்தின் பராமரிப்புக்குப் போதுமான அளவு சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்டு, உங்கள் உடல் வருந்த கடுமையாக உழைக்க வேண்டும். ஆனால், உடல் உணர்வுகளுக்கு அடிமையாகி, தேவைக்கு அதிகமாக சம்பாதித்து, எஞ்சிய பணத்தை சுய இன்பத்திற்காக வீணடிக்காதீர்கள். இந்த உடலை ஒரு நாள் துறந்தாக வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள், உங்களை யார் என அறிந்துகொண்டு, இறை நிலையை அடைய இந்த உடல் ஒரு கருவியாக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாபா, தேநீர் குவளை, தட்டு இரண்டையும், '**இறை உணர்வை அடைய, உடல் ஒரு கருவி**' என்று விளக்கமளிக்க உவமைப்படுத்தினார்:

**தேநீர்** (நீர் அல்லது பால்) **அருந்துவதற்கு ஒரு குவளையும், தட்டும் பயன்படுகிறது; அதாவது, குவளையும், தட்டும் தேநீரை அருந்துவதற்கான ஒரு பொருளாக விளங்குகிறது. தேநீரை அருந்திய அடுத்த கணமே, குவளை, தட்டு இரண்டையும் தனியாக வைத்து விடுகிறோம். அதுபோல், இறை நிலையை அடைந்ததும், அதை அடைய கருவியாக இருந்த இந்த உடலைத் துறந்துவிட வேண்டும். இறை நிலையை அடைந்த பின்னர் இந்த உடலால் என்ன பயன்?**

ஏப்ரல் 30ஆம் நாள், ஒரு சில இந்து பக்தர்கள் "துக்காராம்… துக்காராம்…." என்ற நாமத்தை, உரத்த குரலில் உச்சரித்துக்கொண்டே மெஹராபாத்தைக் கடந்து புனித யாத்திரையாக, பண்டர்பூர் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் கோஷமிட்ட துக்காராம் நாமத்தைக் கேட்டு பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**இந்த மக்கள், நூறு ஆண்டுகள் இப்படி பஜனை பாடி, ஆடுவதால் எந்த பலனும் இல்லை. அதற்கு ஆழ்ந்த பக்தி இன்றியமையாதது; அது இல்லாமல் இதர அனைத்தும் பயனற்றதாகும். துக்காராமின் நாமம் அவர்களின் உதடுகளிலிருந்து வருகிறதே தவிர, இதயங்களிலிருந்து அல்ல.**"

இருப்பினும், மெஹர் பாபா அங்குச் சென்ற யாத்திரிகர்களை அழைத்து உணவளிக்க அறிவுறுத்தினார். நாஜாவுக்குத் தெரியப் படுத்தாமல், ஸெயிலர் மாணவர்களுக்காகத் தயார் செய்த உணவில், ஒரு பாகத்தை அவர்களுக்குக் வழங்கியதால் மீதமிருந்த உணவு போதாமலாயிற்று. பாபா, சீற்றமடைந்து, நாஜாவின் கவனக் குறைவைச் சுட்டிக்காட்டி திட்டினார். நாஜா, ஒன்றும் புரியாமல் வழக்கமாக சமைக்கும் அளவையே தயார் செய்ததாகக் கூறினார். எப்படி அதன் அளவு குறைந்தது என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. பாபா பெரிதும் கடிந்து கொண்டார்.

அவ்வேளையில் ஸெயிலர், பாபா முன் தோன்றி, உணவை யாத்திரிகர்களுக்கு அளித்ததாகக் கூறி தன்னுடைய தவறை விளக்கினார். உடனே பாபாவின் கோபம் ஸெயிலர் பக்கம் திரும்பியது, கற்பலகையில் பாபா இவ்வாறு எழுதினார்: "**டேய் ஈரானி முட்டாள் பயலே! நீ ஏன் இதை நாஜாவுக்குச் சொல்லவில்லை?**" ஸெயிலர் அடக்கத்துடன், மறந்து விட்டதாகக் கூறி மன்னிப்புக் கோரினார். பாபா, ஸெயிலரை ஒரு தூணில் கட்டி மூன்று நாட்களுக்கு உணவு, நீர் எதுவும் தரக்கூடாது என்று மண்டலிக்குக் கட்டளையிட்டார். கடுமையான வெயில் நேரத்தில் இது தாங்க முடியாத தண்டனையாக இருந்தது. பாபாவின் கட்டளைப்படி, மண்டலி அவ்வாறே செய்தனர். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, பாபா அங்குச் சென்று ஸெயிலரை விடுவித்து இனிப்பு வழங்கி, சமாதானப் படுத்தினார். பாபா மற்றும் மண்டலிக்குத் தயார் செய்த உணவை மாணவர்களுக்குக் கொடுத்தனர்; வேண்டிய உணவு மறுபடியும் வேகவேகமாகத் தயார் செய்யப்பட்டது.

நாஜாவை, பாபா கண்டித்தது, தேவையற்றது என குஸ்தாஜி கருத்து தெரிவித்தார். குஸ்தாஜி கூறியதைக் கேட்டு பாபா இவ்வாறு விளக்கினார்: **“நான் எவரையும் தண்டிப்பதில்லை! தண்டனையாகத் தோன்றுவது நிஜத்தில் வரப்பிரசாதம். நாஜா என்னுடைய பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டார். இப்படி நடந்திராவிடில் ஸெயிலர் உண்மையைக் கூறியிருக்கமாட்டார்.”**

அடுத்த, ஏறக்குறைய ஐந்து வாரங்களுக்கு, மே 2ஆம் நாள் வரை, இரவு வேளையில் பாபா, சாய் தர்பாரில் அமைந்த மரப்பெட்டகத்தில் தங்கினார். அங்கிருந்து, மெஹராபாத் மலை உச்சியிலிருக்கும் பாழடைந்த கல்நீர் தொட்டியில் தங்க விருப்பம் தெரிவித்தார். இது ஆங்கிலேயரால் முதல் உலகப்போர் நடந்த வேளையில் கட்டப்பட்டது. பாபா அவர் அங்குத் தங்க விரும்பும் காரணத்தை மண்டலிக்கு விளக்கி, மே 3ஆம் நாள் மாணவர்கள் மற்றும் மண்டலியுடன் ஊர்வலமாக மேல்மலைக்குச் சென்றார். பஜனைகள் பாட, பாபா அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

பால் (BAL) எனும் சிறுவன், ஜால்பாய் இருவரும் இரவு கண்காணிப்பிற்காக அங்கே இருந்தனர். அந்த அமைதியும், தனிமையும் நிறைந்த சூழலில் ஏழு நாட்கள் வெளியே வராமல் அங்கேயே இருந்து, அவரது இரகசிய புத்தகத்தை பாபா தொடர்ந்து எழுதினார்.

கல்நீர் தொட்டியில் தங்கியிருந்த வேளையில், பாபா சவரம் செய்யாமல் இருந்தார். உள்ளே செல்ல வாசல் இல்லாததால் தரையிலிருந்து ஏழடி உயரத்தில் ஏணி வைத்து சிறிய ஜன்னல் வழியாக உள்ளே சென்றார்.

மே 14 அன்று மெஹர் பாபா, மண்டலிக்கு இவ்வாறு வெளிப்படுத்தினார்:

**நான் இறையுணர்வை அடைவதற்கு முன்னர், என்னை மறைத்திருந்த திரையைக் கிழித்தெறிந்து, மிகப்பெரிய அளவில் ஏற்பட்ட அதிர்ச்சியால்** (மின்சார அதிர்ச்சிபோல்) **ஒரு குறுகிய நேரத்திற்கு, நான் அனுபவித்த கடுமையான அதிர்வுகளை விவரிக்க இயலாது. இதைத் தொடர்ந்து முதலில் அடர்ந்த இருளும், இறுதியாக ஒளியும் தென்பட்டது. இந்த இறையொளியைக் கருத்தில் கொண்டு கற்பனை செய்யக் கூட முடியாது; இதன் முன்னால், சூரிய ஒளி, விசாலமான கடலாக வியாபித்து ஜொலிக்கும் ஒளியின் ஒரு சிறிய அம்சத்தின் நிழல்போலாகும். அதுபோல, நான் அனுபவித்த அடர்ந்த இருளையும் விவரிக்கமுடியாது.**

**ஒளி, இருள் இரண்டையும் இவ்வுலகம் அனுபவிக்கும், ஆனால் நான் எதைப் பற்றிக் கூறுகிறேனோ அதுவும் இதுவும் ஒன்றல்ல. ஒரு சிலரே ‘உண்மையான இருளையும் ஒளியையும்’ காண முடியும். அது போல், ஒரு சிலரே நிஜமான வலியையும், துயரையும் அனுபவிப்பார்கள்; அது இறை நிலையை அனுபவிக்கும் ஏக்கம் மற்றும் இறைவனின் பிரிவால் வரும் கடுமையான வேதனையிலிருந்து ஆரம்பமாகும்.**

**உலகில் அனுபவிக்கும் வேதனை மற்றும் மகிழ்ச்சியின்மை, பலவீனமான மனதின் வெளிப்பாடன்றி வேறொன்றுமில்லை. நிஜமாகச் சொல்லப்போனால், தெய்வீக அன்புக்குரியவரைக் காணத் துடிப்பவர் அடையும் துயரத்தைத் தவிர, உலகில் வேறு எவரும் நிஜத்தில் துன்பப் படுவதில்லை. இறைவனைக் காணத் துடிப்பவர் தண்ணீரிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட மீனைப்போலத் தத்தளிப்பார்.**

1926, மே 16 ஞாயிற்றுக்கிழமை அங்கல் பிளீடர் வழக்கம்போல பாபா, மண்டலி மற்றும் மாணவர்கள் முன்னிலையில் புராணத்தை வாசித்தார். அங்கல் சமீபத்தில் கேட்காவ்ம் சென்று சத்குரு நாராயண் மஹாராஜை சந்தித்த வேளையில், அவர் மெஹர் பாபாவின் பக்தர் என்று கூறியபோது, நாராயண் மஹாராஜ் இவ்வாறு குறிப்பிட்டார்: "நானும் அவரும் ஒன்றே! அவருக்கு சேவை செய்வதன் மூலமாக நீங்கள் எனக்கு சேவை செய்கிறீர்கள்! அவர் 'சத் புருஷ்' (இறை நிலையை அடைந்தவர்). அவர் என்னிடம் வந்துள்ளார்."

இவ்வாறு மெஹர் பாபாவின் தொடர்பில் வருபவர்கள், சத்குரு உபாஸனி மஹாராஜ், நாரயண் மஹாராஜ் மற்றும் ஹஸ்ரத் பாபாஜானை சந்திக்கும் வேளையில், மெஹர் பாபாவைப் பற்றிய இதுபோன்ற வெளிப்பாடுகள் அவர்களின் நம்பிக்கையை மேலும் ஆழமாக வேரூன்றச் செய்தது. உபாஸனி மஹாராஜ் சிலரிடம் இப்படி ஆணித்தரமாகக் கூறுவதுண்டு, "என்னிடம் என்ன இருக்கிறது? இங்கே என்னதான் மிஞ்சி உள்ளது? மெஹர் பாபாவிடம் செல்லுங்கள்!"

இந்தக் காலகட்டத்தில், மெஹர் பாபா அவரை 'அவதார புருஷர்' என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. ஆனால் அவருடைய ஐந்து சத்குருக்களில் ஹஸ்ரத் பாபாஜான், உபாஸனி மஹாராஜ் இருவரும், இந்த உண்மையை அவர்களுடைய பக்தர்களுக்கு அறிவித்தனர்.

சில வாரங்களுக்குப் பிறகு, பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:

**ஒரு சில சத்குருக்கள் மக்களுக்குத் தெரிந்தும், சிலர் தெரியாமலும் இருக்கிறார்கள். ஆனால், அவர்களின் கடமைகள் மற்றும் பணிகளில் எவ்வித வேறுபாடும் இராது. அவை வழக்கம்போல நிகழ்ந்து கொண்டிருக்கும்.**

**ஒரு சத்குரு, பொதுவாக பிரசித்தியடைவது என்பது, அவருடைய வாழ்நாளில் அமையும் சூழ்நிலையைப் பொறுத்தது. உதாரணமாக, பாபாஜான், உபாஸனி மஹாராஜ் மற்றும் என்னை எடுத்துக் கொள்ளுங்கள். எங்களில் மூவருக்கும் இடையேயுள்ள முக்கிய வேறுபாடு என்னவெனில், பாபாஜானுக்கு, புத்தகங்கள் வழியாக எவ்வித அறிமுகமும் கொடுக்கப்படவில்லை; மஹாராஜிற்கும் அவருடைய வாழ்க்கை வரலாறு வெளிவருவது வரை, பெரிய அளவில் அறிமுகம் இல்லை; அதேவேளை, மெஹராபாத்திற்கு வந்த முதல் வருடத்திலேயே நான் மக்கள் மத்தியில் பிரபலமாகிவிட்டேன்.**

ஒவ்வொரு சத்குருவுக்கும் குறைந்தபட்சம் ஒரு குருநாதர் இருப்பார். என்னைப் பொறுத்தவரை எனக்கு (முக்கியமானவர்கள்) இருவர் - ஒருவர் முஹமதியர், மற்றொருவர் இந்து.

மேலும், எனக்கு ஏன் இரண்டு குருநாதர்கள் என்பதன் காரணத்தை இப்போது சொல்கிறேன்: நான் ஓர் ஈரானிய (ஸொராஸ்டிரிய) குடும்பத்தில் பிறந்தேன். ஒரு குறிப்பிட்ட குடும்பம் மற்றும் சமுதாயத்தில் இவ்வாறு பிறவி எடுப்பது முந்தைய மனப்படிவங்களைப் பொறுத்தது. ஒரு ஸொராஸ்டிரியரின் மனப்படிவங்கள், ஓர் இந்து மற்றும் முஹமதியரின் மனப்படிவங்களுக்கு சமமாகும். (மஹாராராஜும் இதைப் பற்றிக் கூறியுள்ளார், ஆகையால் இதை ஏனென்று நாம் பார்ப்போம்.)

உதாரணமாக, இந்து வேத சாஸ்திரங்களில், அளவிலா தேவ-தேவியர் மற்றும் தெய்வீக சக்திகளைக் குறித்து குறிப்பிடப்பட்டு இருந்தாலும், இந்து மதத்தைச் சார்ந்த ஒருவர், கடவுள் ஒன்றே என்பதை நம்பும் தருவாயில், அந்தப் பிறவியில் இறை நிலையை அடையாவிடில், அவர் அடுத்த பிறவியில் ஓர் இஸ்லாமிய குடும்பத்தில் பிறவி எடுப்பார், ஏனெனில் முஹமதியர்கள் கடவுள் ஒருவரே, அவர்களின் தீர்க்கதரிசியே அக்கடவுள் என்பதை உறுதியாக நம்புகிறார்கள்.

மேலும் சொல்லப்போனால், மாமிசம் உண்ணுவதில் பிரியமுள்ள இந்து மதத்தைச் சார்ந்த ஒருவர், வேத நூல்களில் குறிப்பிட்டிருக்கும் கோட்பாடுகளை எடுத்துக்காட்டி - அதாவது மாமிசத்தைத் தடைசெய்து சைவ உணவை இந்துக்களின் மீது திணிப்பது ஏன்? - என்ற விவாதத்தில் ஈடுபட்டு, அசைவ உணவை உண்டு, இதர சமூகத்தினரோடு கலந்து கொள்ளும் தருவாயில், அவரும் அதேவிதமான மனப்படிவங்களை அடைந்து, அதன் காரணமாக, அடுத்த பிறவியில் ஓர் இஸ்லாமிய குடும்பத்தில் பிறக்க நேரிடும்.

ஒரு ஸொராஸ்டிரியரின் மனப்படிவங்கள், எப்படி ஓர் இந்து மற்றும் முஹமதியரின் மனப்படிவங்களுக்கு சமமாகும் என்பதை நாம் இப்போது பார்க்கலாம்.

ஸொராஸ்டிரியர்கள், நெருப்பு, சூரியன் இவற்றில் நம்பிக்கை வைத்து, மரியாதை செலுத்தி, பக்தியுடன் வணங்குவது போல், இந்துக்களும் நெருப்பு, சூரியன் இரண்டையும் புனிதமான மூலப்பொருள்களாக கருதுவதால் - இந்து சம்பந்தப்பட்ட மனப்படிவங்கள் உருவாகின்றன. இவ்வாறு, ஸொராஸ்டிரியர்கள் இயற்கையின் மூலகங்களான நெருப்பு, சூரியனை நம்பி, மரியாதையுடன் வணங்கினாலும் - முஹமதியர்கள் கடவுள் ஒன்றே என்று நம்புவதுபோல் - அஹுராமஸ்த், பிரபஞ்சத்தைப் படைத்த ஒரே கடவுள் என நம்புவதால், முஹமதியர் சம்பந்தமான மனப்படிவங்களும் உருவாகும். ஆகையால், ஒரு ஸொராஸ்டிரியன், இந்து மற்றும் முஹமதியரின் மனப்படிவங்கள் உள்ளவராக இருக்கிறார்.

இதன் அர்த்தம் என்னவென்றால், இக்காலகட்டத்தில், கடவுள் அவதார புருஷராக, இந்து மற்றும் முஹமதிய மனப்படிவங்களின் கலவையாகத் திகழும் ஒரு ஸொராஸ்டிரிய சமுதாயத்தில் பிறவி எடுக்கவேண்டிய அவசியம். மேலும், இவ்விரண்டு வகையான மனப்படிவங்களை 'இல்லாமல் செய்ய' ஓர் இந்து மற்றும் முஹமதிய சத்குருக்கள் தேவைப்பட்டார்கள்.

1926, மே 17 அன்று மெஹர் பாபா மேல்மலையிலிருந்து கீழே வந்து மண்டலி அனைவரையும் அழைத்து அவரது விளக்கவுரையைத் தொடர்ந்தார். மண்டலியின் வாழ்வின் அனைத்து புனித தன்மைகளையும் எடுத்துரைத்து, **'கடமைகளில் உறுதியும், விழிப்புணர்வும், மேலும் ஆசைகள் மற்றும் உணர்ச்சிகளின் மீது தனிப்பட்ட கட்டுப்பாடும் தேவை'** என்பதை விளக்கிக் கூறினார்.

பாபா தொடர்ந்து கூறியதாவது:

**என்னுடைய வட்டத்து சீடர்களுக்கு இறையுணர்வை வழங்காமல் நான் மெஹராபாத்தைவிட்டுச் செல்லப் போவதில்லை. ஆனால் அதற்கு முன்னதாக, என்னுடைய கட்டளைகளைக் கண்டுகொள்ளாமல், சோம்பல்பட்டு, இவ்விடத்தை விட்டுச்செல்ல என்னைக் கட்டாயப் படுத்தாதீர்கள். நான் உங்கள் அனைவரையும் கூப்பிய கரங்களோடு, உங்கள் கால்களில் விழுந்து, நான் மௌனத்தைக் கைவிடுவது வரை, என்னைவிட்டுப் போகாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் உங்களைக் கண்டித்தாலும் அல்லது உங்களிடம் அதிருப்தியையும் வெறுப்பையும் வெளிப்படுத்தினாலும், எந்தவொரு சூழ்நிலையிலும் உங்கள் கடமைகளைச் செய்யத் தவறாதீர்கள்.**

**காம உணர்வால் வரும் சிந்தனைகள், செயல்கள் மற்றும் மனநிலையின் தூண்டுதலால் விளையும் கோபத்தில் எச்சரிக்கையாக இருங்கள். என் அறிவுரைகளைப் பின்பற்றுங்கள்; அது உங்களின் நலனுக்காகவே! ஒரு குருநாதரின் தொடர்பு, மனித குலத்திற்குச் செய்யும் சேவை மேலும் கடவுள் நாமத்தை தொடர்ந்து உச்சரிப்பது, இவை மூன்றும் இணைந்ததுதான் மிகச்சிறந்த சாத்தியமான யோக வாழ்வும், மத நடைமுறையுமாகும். இவற்றைச் செய்தாலே அனைத்து மதக் கோட்பாடுகளையும் கடைப்பிடிப்பதற்கு சமமாகும். தர்மசாலை, மருத்துவமனையில் இருக்கும் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஊனமுற்ற மக்களுக்கு சேவை செய்யும் வேளையில், 'அவர்கள் அனைவரும் நானே' என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள். இதயபூர்வமாக நீங்கள் அவர்களுக்குச் செய்யும் சேவை, நீங்கள் எனக்குச் செய்வதற்கு சமம்.**

**ஒரு நாள் பாபா, இளைய மண்டலியை, குறிப்பாக, காம உணர்வால் ஈடுபடும் செயல்களில் கவனமாக இருக்குமாறு எச்சரித்து, மேலும், எவரையேனும் அதிகமான காம உணர்வு ஆட்கொள்ளும்**

**வேளையில் 'இப்பிறவியில் அதனால் உருவாகும் மனப்படிவங்கள், அடுத்த பிறவியில் அவரை ஒரு சேவலாகப் பிறக்கச் செய்யும். சேவல் காமத்தால் நிறைந்தது; இது உண்மை. இத்தகைய காம உணர்வானது உங்களை மனித பிறவியிலிருந்து கீழ்நிலைக்குக் கொண்டு வந்து, சேவலாகப் பிறவி எடுப்பது நிச்சயம்**' என்றார்.

பாபா, பின்னர், இவ்வாறு குறிப்பிட்டார்: "**ஹாஃபீஸ் எழுதிய 'திவான்' உலகிலேயே சிறந்த புத்தகம், அதிலுள்ள கவிதைகளால் உருவாகும் உணர்வு, இறுதியில் உத்வேகத்திற்கு வழிவகுக்கும்.**"

மெஹர் பாபா சில மண்டலியுடன் மேல்மலைக்கு இரவு 8 மணிக்குத் திரும்பி வந்தார். சில நேரங்களில் நடந்து செல்வதற்கு பதிலாக, பாபா அங்கிருந்த சிறிய மாட்டு வண்டியில் பயணம் செய்தார். பாபா அதற்கு வேடிக்கையாக 'பஞ்சாப் மெயில்' என்று பெயர் வைத்திருந்தார்.

மே 18ஆம் நாள், பாபா, விஷ்ணுவை அழைத்து மருத்துவமனையில் மருந்து விநியோகம் செய்பவரின் மகனுக்கு, தினமும் இரண்டு மணி நேரம் பாடம் கற்றுத் தருமாறு, சாஞ்சியிடம் கூறச் சொன்னார். விஷ்ணுவும் அவ்வாறே செய்து, பாபாவின் கட்டளையை நிறைவேற்றி விட்டதாக நினைத்துக் கொண்டிருந்தார். மாலையில் பாபா, விஷ்ணுவிடம், "**நான் சொன்னதைச் செய்தீர்களா?**" என வினவினார்.

நம்பிக்கை கலந்த குரலில் விஷ்ணு ஆமாம் என்றார். ஆனால், அது குறித்து விசாரித்தபோது, சாஞ்சி அந்த சிறுவனுக்கு ஒரு மணி நேரம் மட்டுமே பாடம் சொல்லித் தருவது தெரிய வந்தது. பாபா, விஷ்ணுவைக் கண்டித்து, "**என்னுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதில் நீங்கள் ஒரு பெரிய தவறிழைத்து விட்டீர்கள்**" என்றார்.

விஷ்ணு அதை மறுத்து கண்டனம் தெரிவிப்பதுபோல் இது அவருடைய தவறல்ல, சாஞ்சியின் தவறு என்றார். அதைக் கேட்டு வேதனையடைந்து, அருகில் நின்று கொண்டிருந்த கிஸானை அழைத்து, விஷ்ணுவின் தவறுக்காக அங்கிருந்த கோலால் பாபாவின் கையில் மூன்று முறை அறையுமாறு உத்தரவிட்டார். பாபாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும், கிஸான் தயங்கினாலும், பாபா அவரது கையை நீட்டியதும் கோலால் மூன்று முறை அறைந்தார்.

விஷ்ணு அவ்வேளையில் எதுவும் பேசாமல் அமைதியாக நின்றவர், திடீரென, அச்சத்தால் திகைத்துப் போனார். அங்கு நடந்ததைத் தாங்கிக் கொள்ள முடியாமல் வேகமாக வெளியேறி, பைத்தியம் போல் ஓடி அங்குமிங்கும் அலைந்து திரிந்தார். அவரது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. விஷ்ணுவை பின்தொடர்ந்து சென்று திருப்பி அழைத்துவர பாபா, அர்ஜுனை அனுப்பினார்; வெகு நேரம் கழித்து வந்த விஷ்ணுவை அவர் சமாதானப் படுத்தினார்.

மெஹராபாத்தில் பாபா, விஷ்ணுவிடம் நடந்து கொண்டது போல் இதர மண்டலியைத் தண்டிக்கவோ, அறையவோ செய்ததில்லை. விஷ்ணு ஓர் ஆசிரியராகப் பணிபுரிந்தாலும், பாபா அவரை மாணவர்கள் முன்னிலையில் கண்டித்து, அவமானப் படுத்துவதுண்டு. வேறு ஏதேனும் ஆசிரியர் ஒருவர் தவறிழைத்தால் கூட, விஷ்ணு மட்டுமே பாபாவின் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காக இருந்தார்.

மெஹராபாத் பள்ளிக்கூடத்தில் இரண்டு வகையான ஆசிரியர்கள் இருந்தனர். மெஹர் பாபாவிடம் சரணடைந்து, அவரது உள்வட்டத்திலிருக்கும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப் படுவதில்லை. அதே வேளையில், இதர ஆசிரியர்கள் ஊதியத்திற்காக உழைத்தனர். இருந்தாலும் மெஹர் பாபாவின் முன்னிலையில் அவர்கள் இருந்ததால், பாபாவை இயற்கையாகவே நேசித்து, நாளடைவில் சீடர்களாக மாறினர். ஏதாவது ஆசிரியர் வராத வேளையில் பாபா வகுப்பறைக்குச் சென்று, அவரே பாடம் கற்றுத் தந்தார்.

மே 18 அன்று மெஹர் பாபா மண்டலியுடன் உரையாடும்போது இவ்வாறு வினவினார், **"எனக்கென ஏதாவது தேவையா?"**

மண்டலியில் சிலர், "இல்லை, உங்களுக்குத் தேவை எதுவுமில்லை. அனைத்தும் உங்களுக்குள் அடங்கியுள்ளன" என்று பதிலளித்தனர். பிறருக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. பாபா இவ்வாறு விளக்கினார்:

**"எனக்குத் தேவையென்று ஒன்று இருந்தால், நான் விரும்புவது, வேண்டுவது எல்லாம் அன்பைத் தவிர வேறொன்றுமில்லை."**

மனப்படிவங்களைப் பற்றி விளக்கும் போது பாபா இவ்வாறு கூறினார்:

**ஒருவரின் உலகப்பற்றினால் உருவாகும் மனப்படிவங்கள், ஒரு சத்குருவின் தொடர்பில் வரும் வேளையில், அவரது தெய்வீக நெருப்பில் எரிந்துபோகும். அதனால்தான், ஒரு சத்குருவின் சகவாசத்தில் இருக்கும் ஒருவர் சிறந்த ஆன்மீக பலனை அடைகிறார். மேலும், சத்குருவுக்கு சேவை செய்பவர்கள் உண்மையிலே உயர்ந்த தகுதியை அடையப் பெறுகிறார்கள்.**

**முற்பிறவிகளின் நற்பலனால், நீங்கள் அடையப்பெற்ற சிறப்பான மனப்படிவங்கள் மற்றும் ஆழ்ந்த பக்தி இவைகளால் மட்டுமே ஒரு சத்குருவின் தொடர்பில் வரமுடியும். நாம் எப்படி இருந்தாலும் அதற்கு நம் மனப்படிவங்களே காரணம். நாம் மனப்படிவங்களின் பிணைப்புகளிலிருந்து முழுவதுமாக விடுபடும்போது கடவுள் நிலையை அடைகிறோம்.**

**உதாரணமாக பல முடிச்சுகள் கொண்ட ஒரு நூல் பந்தை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த நூல், பல முடிச்சுகளுடன் கட்டுண்டிருப்பதால் அது தானாகவே மாயையில் இருக்கிறது. முடிச்சுக்களை மனப்படிவங்கள் என்றும் நூலை ஆத்மா எனவும் கொள்ளலாம். ஆத்மா தன்னைக் கடவுள் என்று உணராத வரையில் அதனுடைய கவனம் முழுவதும் முடிச்சுகளிலே இருக்கிறது. அதன் முடிச்சுகளிலிருந்து விடுபட, நூலின் இரண்டு**

**முனைகளையும் பிடித்து, எதிர்திசையில் திருப்ப, அனைத்து முடிச்சுகளும் தானாகவே அவிழ்ந்து விடும். உடல், மனம் எனும் வலையை உருவாக்கிய ஆத்மா, முடிச்சுகளிலிருந்து விடுபடும் அந்த வேளையில், அது உண்மையில் தான் நூல்** (ஆத்மா) **என்றும், முடிச்சுகள்** (மனப்படிவங்கள்) **அல்ல என்பதையும் உணர்ந்து கொள்கிறது.**

**ஆரம்பத்தில் ஆன்மாவிற்கு அதன் சுதந்திரத்தைப் பற்றிய உண்மையான அறிவு இல்லை, ஆனால் இப்போது தானாகவே அறிந்துகொண்டது.**

**அந்த நூலின் இரண்டு முனைகளையும் பிடித்து எதிர்திசையில் திரும்பச் செய்து முடிச்சுக்களிலிருந்து விடுவிப்பவர் யார்? அது ஒரு சத்குருவால்தான் முடியும். ஒருவர் அவருடைய சக்தியால் முடிச்சுக்களை வலுக்கட்டாயமாக இழுத்து அவிழ்த்து, நூலை விடுவிக்க முயற்சித்தால், நூல் அறுந்துவிடும் அபாயம் ஏற்படும். கடவுள் நிலையை அடைந்த பின்பு, சாதாரண மனித உணர்வோடு திரும்பிவர அந்நூலை அப்படியே பாதுக்காக்க வேண்டியது அவசியம். இல்லையேல், முடிச்சுக்களை அவிழ்க்க முயற்சிக்கும் போது திடீரென, ஏடாகூடமாக நூல்கள் அங்குமிங்கும் பிணைந்து அறுந்து போகும் - இது இறை நிலையை அடைந்த ஒருவரின் உணர்வை இழக்கச் செய்து, மஜ்ஜூப் என்ற நிலையில் இருக்கச் செய்யும்** (உலக உணர்வு இல்லாமல் இறையுணர்வு மட்டுமே இருக்கும்).

**ஆகையால் ஒரு சத்குருவிடம் உங்களை அர்ப்பணிப்பது அனைத்திலும் சிறந்தது, அப்போது அவர் உங்களுடைய மனப்படிவங்களை அழித்து அதிலிருந்து விடுதலை வழங்கும் பொறுப்பை அவரே ஏற்றுக்கொள்வார். ஒரு முறை நீங்கள் அவரிடம் சரணடைந்து விட்டால், இறையறிவு மற்றும் இறை நிலையை நோக்கி வழி நடத்துவது அவரது கடமையாகிறது.**

மண்டலியில் ஒருவர் இவ்வாறு கேட்டார், "ஆனால், நீங்கள் ஏன் எங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய முறையில் ஏதாவது செய்யக் கூடாது?"

பாபாவின் பதில்:

**நான் எப்போதுமே, உங்களுக்கான எனது பணியைச் செய்து கொண்டிருக்கிறேன், மேலும், ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளை அடைய எளிதான வழி, உலகின் அனைத்து பந்தங்களையும் துண்டித்துவிட்டு, ஒரு சத்குருவிடம் சரணடைவதுதான். இதுதான் ஜீஸஸ் 'அனைத்தையும் விட்டுவிட்டு என்னைப் பின்பற்றுங்கள்' என்று கூறியதன் அரத்தம். ஒரு சத்குருவின் தொடர்பில் இருப்பவர்களை, உலக பிணைப்புகளிலிருந்து விடுவிக்கும் பணி எப்பொழுதும் நடந்து கொண்டிருக்கிறது. அவருடைய உள்ளார்ந்த இரகசிய பணியை வெளிப்படையாக அவர் செய்யும் பணியோடு ஒப்பிடமுடியாது.**

மெஹர் பாபா அற்புதங்களைப் பற்றி, கீழ்காணும் விளக்கங்களை அளித்தார்:

**உயிர் துறந்த ஒருவரை உயிர்த்தெழ செய்வது, ஒரு சத்குருவைப் பொறுத்தவரை, சிறு குழந்தையின் விளையாட்டுப் போன்ற எளிய செயலாகும், மேலும் இது அவருக்கு எவ்வகையிலும் முக்கியமான ஒன்றல்ல, ஏனெனில் அவர் இந்தப் பிரபஞ்சத்திற்கே பணியாற்ற வேண்டியவர். உலகின் நன்மைக்காக அவர் அதை உரிய நேரத்தில் செய்கிறார். உடல்நலம் குன்றிய குழந்தையிடம் ஒரு ரூபாய் நாணயத்தைக் காட்டி, இந்தக் 'குய்னைன்' மருந்தை சாப்பிட்டால், காசு உனக்கு என்று கூறும் வேளையில், குழந்தை, காசுக்கு ஆசைப்பட்டு, இணங்கி மருந்தை உண்ணும். ஆனால் நாணயத்தை எடுக்க குழந்தை அணுகும்போது, அது பறிக்கப்படுகிறது. குழந்தை மருந்தை உண்டு, உடலை சரிசெய்ய நாணயம் ஒரு தூண்டுதலாக அமையும் என்பதே இதற்குக் காரணம். அதுபோல், உலக மக்களை இறைவன்பால் ஈர்த்துச் செல்ல அற்புதங்கள் புரிவது அவசியமாகிறது. அவை உலகின் நன்மைக்காக மட்டுமே செய்யப்படுகின்றன.**

**ஹென்றி ஃபோர்டை இங்கு வரவழைத்து, நான் அவரிடம் என்ன செய்யச் சொல்கிறேனோ அதை அவர் செய்வாரா? ஒருபோதும் இல்லை! ஆனால் அவர் கண்களின் முன்னே, 1000 வருட பழைய பிணத்திற்கு நான் உயிர் வழங்குவதானால், அவர் இங்குத் தங்கும் வாய்ப்பைப் பெற்ற மகிழ்ச்சியில் என்னுடனிருந்து, எனது துணிமணிகளையையும் துவைப்பார்.**

**ஒரு சத்குருவின் ஆசீர்வாதம், பார்வை, வார்த்தைகள் மற்றும் தோற்றம் மிகவும் முக்கியம் எனும்போது அவருடைய தொடர்பிலும், சகவாசத்திலும் இருப்பதை என்னென்பது? அவர் அருகில் அமர்ந்து, அவரோடு பேசி, அவரின் உரைகளை கவனிக்கும் வாய்ப்பைப் பெற்ற ஒருவர், மிகவும் அதிர்ஷ்டசாலி ஆவார். இது எவ்வளவு பெரிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நீங்கள் ஒருபோதும் முழுமையாகப் புரிந்து கொள்ளமாட்டீர்கள். உலகத்தோடு பார்க்கும்போது நீங்கள் உங்களை ஒரு கடினமான சூழ்நிலையில் காண நேர்ந்தாலும், இது ஒன்றுதான் திட்டவட்டமான மற்றும் எளிதான வழி; இவ்வழியில்தான் சத்குரு விடுதலையை நோக்கி அழைத்துச் சென்று, மாயை எனும் வலையிலிருந்து உங்களை விடுவிப்பார்.**

**நீங்கள் உணவை உங்கள் வாயால் உட்கொண்டு, ஜீரணித்து, மலத்தை ஆசனவழியாக வெளியேற்றுகிறீர்கள். இது உங்களுக்குத் தெரியும். ஆனால் ஒரு கல்லுக்கு வாய், மலக்குடல் என்றால் என்ன என்று தெரியாதுதானே? நீங்கள் ஒருபோதும் ஆசனவழியாக உணவை உண்ண முயற்சிக்க மாட்டீர்கள்; அப்படி ஒரு செயலைச் செய்ய முயற்சிப்பது வெறுக்கத்தக்கது. அதுபோல், இறை நிலையை நோக்கி உங்களை அழைத்துச் செல்லும் சரியான பாதையை சத்குரு அறிவார். ஆகையால் எந்த உணவை நீங்கள் உண்ணவேண்டும், எப்போது, எங்கே என்பதை**

**அவர் அறிவார். உங்களுக்கு இந்த விஷயம் பற்றிய அறிவு சிறிதளவும் கிடையாது எனும்போது நீங்கள் கல்லை விட எந்த வகையிலும் சிறந்தவரல்ல!**

**ஒரு முறை நீங்கள் சத்குருவின் பாதங்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டால், உங்கள் பிடியிலிருந்து நழுவி விடாமல் உறுதியாகப் பற்றிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள்.**

**இறைவன், ஒரு சத்குருவின் வலது கரத்திலும், மாயை, இடது கரத்திலும் உள்ளன. இறையுணர்வு அவரது வலது பாதத்திலும்,** (மாயையில் தோன்றும்) **அற்புதங்கள் இடது பாதத்திலும் இருக்கின்றன. அவரது வலது குதிகாலால் அழுத்தும்போது 'ஓம்' எனும் உருவாக்கப் புள்ளி நேரடியாகப் பாதிக்கப்படுகிறது. ஒரு சத்குரு இறை நிலையை வழங்கும் எண்ணத்தில் அவரது வலது கரத்தை ஒருவர் தலைமீது வைக்கும் தருவாயில், அந்த மனிதர் இறை நிலையை உடனடியாக அடைகிறார்.**

ஒரு சத்குருவின் உள்ளார்ந்த பணியின் வெளிப்புற அறிகுறிகள் பற்றி பாபா மண்டலிக்கு மேலும் விளக்கியதாவது:

**ஒரு சத்குருவின் வலது கரமும் வலது பாதமும் சுறுசுறுப்பாக இயங்குவது, அவர், சம்பந்தப்பட்ட நபருக்கு ஆன்மீக ரீதியில் இறையுணர்வை அளிக்க உதவுவதைக் குறிக்கும். அதுபோல், அவரது இடது கரமும், இடது பாதமும் உலக சுகங்களையும், அற்புதங்களையும் குறிக்கும். ஒரு சத்குருவை நம்புபவருக்கு அற்புதங்கள் மாயையெனும் ஊடகம் வழியாகத் தானாக நிகழும்.**

**ஆனால் வட்டத்து சீடர்கள் இதுபோன்ற அற்புதங்களை எதிர்பார்க்கக் கூடாது ஏனெனில் சத்குருவே அவர்களுக்காகப் பணிபுரிகிறார்.**

அன்றிரவு எட்டு மணியளவில் மெஹர் பாபா, மேல் மலைக்கு நடந்து செல்லும் வேளையில், குஸ்தாஜியின் 'கோடை வீடு'களுக்கு விஜயம் செய்தார். அப்போது பாபா, ஆன்மீகத் தளங்கள் மற்றும் வானுலகங்களைப் பற்றி மண்டலிக்கு விளக்கமளித்தார்.

**ஆன்மீகத் தளங்கள், வானுலகங்கள் இரண்டும் முற்றிலும் மாறுபட்டவை. தளங்களுக்கு நிறங்களில்லை ஆனால் வானுலகங்களுக்கு கீழ்காணும் நிறங்கள் உள்ளன: முதல் வானம் நீல நிறத்திலும், இரண்டாவது மஞ்சள், மூன்றாவது சிவப்பு, நான்காவது வெண்மை, ஐந்து கறுப்பு, ஆறு பச்சை நிறத்திலும் அதையடுத்து ஏழாவது வானம் நிறமற்றதாகவும் உள்ளன. உண்மையில் ஏழாவது தளம் மற்றும் ஏழாவது வானம் இரண்டும் ஒன்றே!**

**யோகிகள், மஸ்துக்கள், வாலிகள் மற்றும் பீர்கள் வானுலகங்கள் வழியாகவும், சத்குரு அல்லது குதுப் நிலையை அடைய விதிபடைத்த ஒருவர் தளங்கள் வழியாகவும் பயணம் செய்கிறார்கள். தளங்கள்**

**இருளால் நிரம்பியிருப்பதால் அதன் வழியாக பயணம் செய்பவர்களுக்கு ஆன்மீக முன்னேற்றத்தைப் பற்றிய எவ்வித உணர்வும் இருக்காது. யாரொருவர் ஒளி நிரம்பிய வானுலகங்கள் வழியாக பயணிக்கிறார்களோ அவர்கள் தங்கள் முன்னேற்றத்தை உணர்ந்து கொள்வது மட்டுமின்றி செல்லும் பாதையில் அற்புதமான ஒளிகளையும், அளவிலா சக்திகளையும் அனுபவிக்கிறார்கள்.**

**ஆனால் தளங்கள் வானுலகங்களைக் காட்டிலும் அதிக உயரத்தில் உள்ளன. ஒரு குறிப்பிட்ட தளத்தில் இருப்பவர்கள், அவர்கள் விரும்பினால், அதற்கிணையான வானுலகில் பிரவேசிக்க முடியும். உதாரணமாக, ஐந்தாவது தளத்தில் இருக்கும் யாத்ரீகர் ஒருவர்** (ஒரு வாலி) **ஐந்தாவது வானுலகில் நுழைய முடியும். ஆனால் வானுலகங்களில் இருக்கும் யோகிகள் அல்லது மஸ்துக்கள் தளங்களில் செல்லமுடியாது.**

**எதுவாயினும் நீங்கள் இவற்றையெல்லாம் கண்டு கொள்ள வேண்டிய தேவையில்லை. மொத்தத்தில் கடவுள் அனைத்திற்கும், அனைவருக்கும் சாராம்சமாகத் திகழ்பவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

1926, மே 22 அன்று மண்டலி இதுவரைக் கண்டிராத அளவுக்கு, புழுதிப்புயல் ஒன்று அதி வேகத்தில் மெஹராபாத்தைத் தாக்கியது. ஜன்னல்கள் அதிர, சில தகர கூரைகள் புயலில் பறந்தன. பீதியடைந்த மண்டலி பாபாவை அணுகவே, அவர் இசைத்தட்டுப் பெட்டியை எடுத்துவரக் கூறினார். முதல் பாடல் ஒலிக்கத் தொடங்கியதும், அனைவரும் வியக்கத்தக்க வகையில் புயலின் சீற்றம் அடங்கியது.

மே 23ஆம் நாள் மாலையில் பாபா 14 மண்டலியுடன், ஒரு பக்தர் வீட்டு திருமணத்தில் கலந்துகொள்ள ராஹுரி கிராமத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அதற்கு முன்பு, பாபா, மண்டலி அனைவரையும் உபவாசம் மேற்கொள்ள அறிவுறுத்தி, “**ராஹுரியில் நீங்கள் அதிக அளவில் இனிப்பு சாப்பிட நேரும், எனவே, அங்குச் செல்வதற்கு முன்னர் எதுவும் உண்ணாமல் இருப்பது நல்லது**” என்றார்.

செல்லும் வழியில் ‘டேரே’ கிராமத்தை நெருங்கியதும், பாபா அவரது மனதை மாற்றி, அர்ஜுனை அனுப்பி சிறிதளவு உணவுக்காக யாசிக்குமாறு கூறி அனுப்பினார். அர்ஜுன் எவ்வளவோ முயன்றும், ஒரு சில ரொட்டிகள் மட்டுமே கிட்டின. இருந்தும், ஓர் ஏழை கிறிஸ்தவர் சாதமும், பருப்பும் எடுத்து வந்தார். பாபா ஒரு கைப்பிடி சாதத்தை உண்டு, எஞ்சியதை மண்டலிக்குக் கொடுத்தார். பின்னர் அருகாமையிலிருந்த ஒரு மார்வாடி கடைக்குச் சென்றதும் அவர் கையளவு ஊறுகாயை இனாமாகத் தந்தார். மண்டலி எஞ்சியிருந்த ரொட்டியை ஊறுகாயுடன் உண்டனர். பாபா கேலியாக மண்டலியிடம், “**அதிகம் உண்ணாதீர்கள். திருமண விருந்தை, குறிப்பாக சுவையான லட்டுகளையும் நாம் புசிக்க வேண்டும்**” என்று குறிப்பிட்டார்.

திருமண வீட்டில் பாபாவிற்கு மாலை அணிவித்து, மண்டலிக்குப் பூச்செண்டுகளும் வழங்கி வரவேற்பு அளிக்கப்பட்டது. திருமணம் முடிந்து திரும்பும் வேளையில் பாபா, டாக்கேயிடம் கிண்டலாக, **“லட்டுக்கள் எங்கே?”** என்று கேட்க, டாக்கே லட்டுக்களுடன் பெரிய விருந்து ஒன்றை அளிக்கப் போவதாகக் கூறி, ராஹூரியில் வாழ்ந்த டாக்கேயின் உறவினர் டாக்டர் சோபேயின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். டாக்டர் சோபே, பாபா மற்றும் மண்டலிக்கு அமோக வரவேற்பளித்து, சுவையான உணவும் வழங்கினார். இந்த நிகழ்வுகளிலிருந்து பாபா மண்டலியுடன் ராஹூரிக்கு வருவதன் முக்கிய காரணம், இறை பிரியரான டாக்டர் சோபேயை சந்திப்பதற்காகவே என்பதை அனைவரும் புரிந்து கொண்டனர்.

குல்மாயின் கணவர் கான்ஸாஹேப், மெஹர் பாபாவுடன் நெருக்கமான உறவை வைத்துக் கொள்ளவில்லை; அதே வேளையில் அவருடைய மனைவி மற்றும் குழந்தைகள் பாபாவின் அரவணைப்பில் இருப்பதற்கு எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. ஆனால் அவருடைய மைத்துனர், ஸரோஷ் ஈரானியின் தந்தை மூத்த கய்குஷ்ரு ஆரம்பத்தில் சுமூகமாக இருந்தாலும், பின்பு, மெஹர் பாபாவின் தொடர்பு, அவருடைய குடும்பத்திற்குச் சிரமங்களைத் தவிர வேறு எதுவும் கொண்டுவரவில்லை என்ற நம்பிக்கையில், பாபாவைக் கடுமையாக எதிர்த்தார். ஸரோஷ், பாபாவை சந்திக்கச் சென்றதைக் கேள்விப்பட்டு, தந்தை வெகுவாக சீற்றமடைந்ததால், அவர் பாபாவை சந்திக்கச் செல்லும் விஷயத்தை இரகசியமாக வைத்திருந்தார்.

இருப்பினும், ஸரோஷ் அடிக்கடி மெஹராபாத் சென்று வருவதை, அங்குப் பணிபுரியும் ஒருவர் அவர் தந்தைக்கு உளவாளியாக இருந்து அவ்வப்போது தெரிவித்து வந்தார். அப்போது, பாபா அளித்த மறைமுகமான குறிப்பை வைத்து மண்டலி, அங்கே பணிபுரியும் ஜமதார் என்பவரை அணுகி, கேட்டபோது அவர் உண்மையை ஒப்புக்கொண்டார். பாபா, ஜமதாரை இரவு காவலனாக நியமித்து அங்கேயே தங்க அனுமதித்தார். இவ்வாறு ஸரோஷின் தந்தையுடன் ஜமதார் வைத்திருந்த தொடர்பு முடிவுக்கு வந்தது. 1925ஆம் ஆண்டிலிருந்து, ஜமதார், நம்பிக்கையும், நாணயமுமான சேவகனாக 45 வருடங்கள் மெஹராபாத்தில் பணிபுரிந்தார்; அவருடைய மனைவியும் பெண்மண்டலிக்கு உதவியாக இருந்தார்.

1922ஆம் வருடம், பூனாவில் இருந்தபோது பாபா, ஸரோஷிடம் அவரை ஒரு நாள் ராஜாதிபதியாக மாற்றுவதாகத் தெரிவித்தார். மன்ஸில்-எ-மீமை விட்டு வெளியே வந்த பின்னர், அஹமதுநகரில் ஒரு மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் தொழிற்சாலையைத் தொடங்க, பாபா, ஸரோஷூக்கு ஆலோசனை கூறினார். ஸரோஷின் தொழில் வெகுவாக வளர்ச்சி பெற்றது; நல்ல செல்வாக்கு மிக்கவராக இருந்து, பின்னர் அஹமதுநகர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸரோஷ் வாழ்நாள் முழுவதும் பாபாவின் நம்பிக்கைக்குரிய சீடர்களில் ஒருவராக இருந்து சேவை புரிந்து வந்தார்.

1926, மே 27 அன்று மெஹர் பாபா, கடவுளைக் குறித்து, கீழ்வரும் விரிவான விளக்கத்தை அளித்தார்:

**எவரேனும் ஒருவர் என்னிடம் துக்காராம் அல்லது ஈஷ்வர்** (உருவமில்லா இறைவன்), **ஸொராஸ்டர் அல்லது ஆஹுரமஸ்தா, ஜீஸஸ் அல்லது 'தந்தையாகிய கடவுள்' இவர்களில் யார் உயர்ந்தவர் என்று கேட்டிருந்தால், நான் உறுதியாக, துக்காராம், ஸொராஸ்டர், மற்றும் ஜீஸஸ்தான் உயர்ந்தவர்கள் என்று பதிலளித்திருப்பேன். உண்மையில் அவர்கள் அனைவரும் 'உயர்ந்தவர்களிலும் உயர்ந்தவர்கள்' ஏனெனில், ஒரு சத்குருவாக அல்லது அவதார புருஷராக இருக்கும் வேளையில், அவர்கள் பிரபஞ்சத்திற்கு எல்லையில்லா சேவையை வழங்கி, உலகின் அளவிலா மனப்படிவங்களின் சுமையைத் தாங்கி, எண்ணிலடங்கா துன்பங்களை அனுபவிப்பதுபோல்,** (உருவமில்லா) **இறைவன் அனுபவிப்பது இல்லை; ஏனெனில் இறைவனுக்கு உலக உணர்வு கிடையாது. முழுமையான இறை மற்றும் உலக உணர்வுகளைக் கொண்ட துக்காராம், ஸொராஸ்டர் இவர்களை, சந்தேகத்திற்கு இடமில்லாமல், உலக உணர்வற்ற, உருவமில்லாத ஈஷ்வர் அல்லது ஆஹுரமஸ்தாவோடு ஒப்பிடும்போது நிச்சயமாக அவர்கள் உயர்ந்தவர்களே!**

**ஸொராஸ்டர், நிஜத்தில், கடவுள் மனித உருவில் வந்தவர். அவர், இப்பூவுலகில் அவரது பணியைச் செய்து முடிக்க, ஒரு மனிதராக, படிப்பறிவற்ற, வெறித்தனமான, முன்கோப மனப்பான்மையுள்ள மானிடர் மத்தியில் வரவேண்டியதாயிற்று. ஸொராஸ்டர், அவர்களிடம் தன்னை வணங்குமாறு கூறியிருந்தால், அவரைக் கண்டனம் செய்து, துன்புறுத்தி, கொலையும் செய்திருக்கக் கூடும். மாபெரும் மூர்க்கத்தனமான முழுப் பைத்தியம் என்றே நினைத்திருக்கவும் கூடும். ஆகையால், உருவமில்லா கடவுளை வணங்குமாறு அவர்களுக்கு போதித்தார். ஆனால் உண்மை என்னவெனில், உருவமில்லா கடவுளை வணங்குவதன் மூலம், அவர்கள் ஸொராஸ்டரையே வணங்கினர். மேலும், இதன் விளைவாக அவர்கள், உருவமில்லா கடவுள் ஆஹுரமஸ்தா, ஸொராஸ்டரை விட உயர்ந்தவர் என்ற உணர்வை அடையப்பெற்றனர்.**

**ஜீஸஸ் 'நானும் எனது தந்தையும் ஒன்றே' என்று கூறியது மட்டுமல்லாமல், காம உணர்ச்சிகள், அவநம்பிக்கைகள், கோபங்கள் ஆகியவற்றைக் கைவிடும் அனைவருக்கும் இறையுணர்வு சாத்தியம் என்பதை எடுத்துரைத்தார். மேலும், அன்புடன் இறைவனை தியானம் செய்யவேண்டும் என போதித்தார்.**

மெஹர் பாபா, பல்வேறு நிலைகளில் கல்வி பயிலும் உவமையை எடுத்துக்காட்டி சத்தியத்தை அணுகும் வெவ்வேறு வழிகளைப்பற்றி விளக்கினார்.

**தனிப்பட்ட முறையில் ஒரு சத்குருவிற்கு சேவை செய்து, முற்றிலுமாக அவரிடம் சரணடைவது, வாழ்வில் முதன்மையான மற்றும்**

உயர்வான ஒன்றாகும். தெய்வீக மேம்பாட்டிற்கு இதுபோல வேறொன்றுமில்லை! இரண்டாவதாக, கடவுளின் நாமத்தை நிலையாக தியானம் செய்வது. மூன்றாவது தன்னலமற்ற சேவை. நான்காவது இறைவனுக்குச் செய்யும் பிரார்த்தனை.

ஒரு சத்குருவிற்கு சேவை செய்து, அனைத்து விஷயங்களிலும் அவருடைய கட்டளைகளுக்கு முற்றிலும் கீழ்ப்படிவது, முதுகலை பட்டப்படிப்பைப் போன்றது.

இடைவிடாது இறைவன் நாமத்தை அன்போடு உச்சரிப்பது, இளங்கலை பட்டப்படிப்புக்கு சமம். இளங்கலை பட்டத்தை அடைந்த ஒருவருக்கு முதுகலை பட்டத்தை அடைவதற்கு அதிக காலம் தேவையில்லை.

எவ்வித சுயநல நோக்கமும் இல்லாமல், மனித குலத்திற்குத் தன்னலமற்ற சேவை புரிவது உயர்நிலைப்பள்ளி சான்றிதழைப் பெறுவது போலாகும்.

மேலும் பிரார்த்தனைகள் செய்வது, சடங்கு, சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பது - தேவையற்ற மதக்கோட்பாடுகளைப் பின்பற்றுவது - ஆரம்பக் கல்வியில் அகரமுதல எழுத்துக்களைக் கற்பதற்கு சமம்.

ஒரு குருநாதரின் தொடர்பில் இருப்பவர்கள், முழு நம்பிக்கையுடன் அவரிடம் சரணடைந்து, அவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவற்றைச் செவ்வனே செயல்படுத்த வேண்டும்; அவ்வளவுதான்! அவ்வாறு செய்வது கூடக் கடினம், ஏனெனில், மானிடர், பொதுவாக மிகவும் சிரமமான சூழ்நிலையில் உள்ளனர். உலகம் மற்றும் அதன் பொருட்களோடு உள்ள பந்தங்கள், அவர்களை ஒரு புறம் ஈர்க்க, மறுபுறம் சத்குரு அவர்களைத் தன்வசம் இழுக்கிறார். இது, இரண்டு மனைவிகளைக் கொண்ட ஒருவரின் நிலை போன்றது! இறுதியில், சத்குரு அவர்களை மாயையின் பிடியிலிருந்து விடுவித்து வெற்றி காண்பது உறுதி.

அப்படியிருந்தும், மாயையின் சக்திகள் அவ்வளவு குறைவான வல்லமை உடையதல்ல. உண்மையில், அதன் வசீகரிக்கும் தன்மை மிகப்பெரிது, அதை முறியடிப்பது மிகவும் கடினமானது. என்னுடைய விளக்கங்களும், எச்சரிக்கைகளும் எவ்வளவோ இருந்த போதிலும், அழகான பெண் ஒருத்தி திடீரென, இவ்வாசலருகில் தென்படுவதானால், நீங்கள் நிச்சயமாக அவரை முறைத்துப் பார்ப்பீர்கள். இப்போது நீங்கள் மாயையின் பிடியில் இருப்பதால், இது மன்னிக்கத்தக்கது. மாயை, உங்கள் உடல்களை ஈர்க்கும் தன்மையுடையது. ஆனால், நான் உங்களுக்குக் கூறுகிறேன், உங்களால் இயன்றவரை மாயையின் பிடியிலிருந்து விடுபட முயற்சி செய்யுங்கள்.

உதாரணமாக, பற்களில்லாத ஒருவரை எடுத்துக்கொள்ளுங்கள். அவருக்குச் சுவையான கரும்புத்துண்டைத் தருவதானால், அவர் அதை என்ன செய்வார்? கரும்பை மென்று, சாப்பிட்டு அனுபவிக்கும் ஆனந்தத்தை அடைய முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் ருசித்துப் பார்க்கும் ஆசையில்,

‘இறைவன் எனக்கும் பற்களைத் தந்திருந்தார்!’ என்று நேர்மையுடன் கூறியிருப்பார். அதுபோல, சந்தோஷத்தை அனுபவிக்க இயலாத வயதான ஒருவர், அவரது அருகாமையில் இருக்கும் அழகைக் கண்டு ‘இறைவன் எனக்கும் இளமையைத் தந்திருந்தார்!’ என்று முறையிட்டிருப்பார். இதுவும் மாயவலையில் சிக்கித் தவிப்பதற்கு சமம்.

மாயையின் பிடியிலிருந்து ஒருவரை விடுவிப்பது எப்படி? அது ஒரு சத்குருவின் அருளால்தான் முடியும். இதயபூர்வமாக ஒருவர் ஒரு சத்குருவிடம் சரணடைந்து, அவருடைய சேவையில் ஈடுபடுவதானால், ஒரு தீக்குச்சியை எரியவைப்பது போல் ஒரே கணத்தில், அந்த சத்குரு மாயையை எரித்து அழித்து விடுவார். அவர் அத்தகைய சக்திகளைப் படைத்தவர்! ஆனால், ஒருவர் அதற்குரிய தயார் நிலைக்கு வந்து, அவருடைய அருளைப் பெறும் தகுதியுடையவராக இருக்கவேண்டும்.

இல்லையெனில், நீண்ட நெடிய காலங்களுக்கு, நீங்கள், பிறப்பு இறப்பு எனும் சுழற்சியில் தொடர்ந்து பிறவிகள் எடுக்க நேரிடலாம், மேலும் மென்மையான தென்றலில் தவழ்ந்து வரும் இறை வாசனையை நீங்கள் நுகர இயலாது. சத்குரு உங்களுள் உறைந்திருக்கும் மாயை எனும் சக்தியை முழுமையாக அழிப்பது மட்டுமின்றி, பிறப்பு, இறப்பு எனும் ஓயாத சுழற்சியிலிருந்து விடுவித்து, தலையில் தட்டுவதன் மூலம், கடவுளை உடனடியாகப் பார்க்கச் செய்வார். ஒரு சத்குருவின் சக்திகளைப் பற்றி நீங்கள் என்ன அறிவீர்கள்? ஒன்றுமே அறியமாட்டீர்கள்! உங்கள் கைகள் மாயையில் கட்டுண்ட வண்ணம் உள்ளன, இக்கைகளை விடுவித்தாக வேண்டும்.

ஏற்கனவே கைகள் கட்டுண்ட ஒருவர், அவரைப் போலவே கைகள் கட்டுண்ட இன்னொருவரிடம் வருவதானால், அவரால் ஒருபோதும் விடுபட முடியாது. ஆனால், கட்டுகளிலிருந்து விடுபட்ட ஒருவரை அணுகினால், அவர் உங்களை உடனடியாக விடுவிப்பார்.

ஒரு பன்றி பெரும்பாலும் நரகத்தில் (சாக்கடையில்) வாழும். சிறந்த உணவுபண்டங்களை அதன் முன்னால் வீசினாலோ அல்லது விலைமதிப்பற்ற ஒன்றை வைத்தாலோ, அது குப்பை கூளத்தை நாடியே செல்லும். அந்தக் கழிவுகளை உண்ட பின்னரே வேறு எதிலேனும் பங்கெடுக்க யோசனைச் செய்யும். இன்னும் சொல்லப் போனால் சிறந்ததைக் கடைசியாகத் தேர்ந்தெடுக்கும். முத்துக்களை அதன் முன்னால் எறிந்தாலும் அது, ‘முதலில் இந்தக் கழிவுகளை நான் உண்ணட்டும், அதற்குப் பின்னர் இந்த முத்துக்களைப் பார்த்துக் கொள்கிறேன்’ என்று நினைக்கும். இங்கே, ‘முத்துக்கள்’ என்பது இறை நிலையை அடையும் பாதையைக் குறிக்கும். அதேவேளை, உங்கள் மனித நிலை, முத்துக்களை மறுத்து குப்பை கூளங்களை நாடும் பன்றியின் நிலை போன்றது. இறையுணர்வை அடையும் பாதை எனும் முத்துக்களை, நான் உங்களுக்குக் காட்டினாலும், நீங்கள் மாயையெனும் நரகத்தால்

கவரப்பட்டு, அதை நோக்கி ஈர்க்கப்படுகிறீர்கள். இந்த முத்துக்கள் யாருக்காக விதிக்கப் படுகின்றன? உன்னதமான அன்னப்பறவைகளுக்காக!

நீங்கள் அனைவரும் நேரடி பாதையில் முன்னேறிச் செல்கிறீர்கள்! இறையுணர்வு, அதை அடையும் தகுதி உடையவர்களுக்கு மட்டுமே தக்க நேரத்தில் வழங்கப்படும். ஒரு சத்குருவின் கருணை இருந்தால், இறையுணர்வு ஒரு குறுகிய கணத்தில் - தலையில் தட்டுவதன் மூலம் வழங்கப்படும். ஆஹா! என்ன ஒரு பேரானந்தம்! இதை நான் உங்களுக்கு எத்தனை காலம் விவரித்தாலும், அந்த ஆனந்தத்தை நீங்கள் ஒருபோதும் அறியமாட்டீர்கள். அதை அனுபவபூர்வமாக அறிந்தாலொழிய புரிந்து கொள்ள முடியாது.

மண்டலிக்கு மேலும் உதாரணங்களை எடுத்துக்காட்டி, பாபா அவருடைய கற்பலகையில் தொடர்ந்து விளக்கமளித்தார்:

நாம் அமர்ந்திருக்கும் இந்த வீட்டை இறை நிலையின் வீடாக எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே பலவகையான பெட்டிகள், பாத்திரங்கள், விளக்குகள் மேலும் பல பொருட்கள் உள்ளன. இப்போது, இப்பொருட்களை நீங்கள் பார்த்ததும் இல்லை, அவைகளைப் பற்றி உங்களுக்கு எவ்வித அறிவும் இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படியானால் அவை என்னவென்று உங்களுக்கு எப்படித் தெரியும்? இரண்டே வழிகள் உள்ளன, அவைகளைப் பற்றி விளக்கிக் கூறுவது அல்லது நேரடியாகப் பார்த்து, அனுபவபூர்வமாகத் தெரிந்து கொள்வது. வரையறுத்து விளக்கிக் கூறுவது என்பது கடினம் மட்டுமின்றி காலதாமதமாகும் ஒன்று. உங்கள் கண்களைக் கட்டி இங்கே அழைத்து வந்து, பின்பு கட்டை அவிழ்க்கும்போது நீங்கள் இங்கிருப்பதைக் கண்கூடாகப் பார்த்து, வீட்டிலிருக்கும் அனைத்தையும் அறிந்து கொள்வீர்கள்.

மேலும் ஓர் உதாரணமாக, நீங்கள், படிப்பறிவற்ற அரன்காவ்ம் கிராமத்தார் ஒருவரின் கண்களைக் கட்டி, நியூயார்க் நகருக்கு அழைத்துச் செல்வதாக வைத்துக் கொள்வோம். கண்களின் கட்டை அவிழ்க்கும் போது, அவர் கனவில் கூட கண்டிராத பொருட்கள் அங்கே இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைவார். வண்டிகள், மோட்டார் வாகனங்கள், டிராம் மற்றும் ரயில் வண்டிகளின் ஆரவாரம் நிறைந்த நியூயார்க் நகரம் அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தி, திகைக்க வைக்கும்! இவற்றையெல்லாம் அவருக்கு அரன்காவ்ம் கிராமத்தில் வைத்து, பல ஆண்டுகள் தொடர்ந்து விளக்க முயற்சித்தாலும், அது வீண்தான், ஏனெனில் அவரால் அதைப் புரிந்து கொள்ள முடியாது. ஆனால், அவராக நியூயார்க் நகரத்தைப் பார்க்கும்போது, நொடிப் பொழுதில் அதைப் பற்றி அறிந்து கொள்வார். அதுபோல, நான் என் உயிரைக் கொடுத்து அனைத்தையும் உங்களுக்கு விளக்கினாலும், நீங்கள் இப்போது இருக்கும் நிலையிலேயே இருப்பீர்கள். அதே வேளையில் அனுபவம் உங்களுக்கு அறிவைத் தரும்.

இறை நிலையை அடைவது சாத்தியம்; இருப்பினும், உங்கள் கண்கள் கட்டப்பட்டுள்ளதால், மேலும் அது என்ன என்பது உங்களுக்குத்

**தெரியாது. விலைமதிப்பற்ற சத்திய-மார்க்கத்தின் முத்துக்களை நான் உண்மையாகவே உங்களுக்கு வழங்கினாலும், நீங்கள் உங்களை நரகத்தில்தான் மூழ்கடிப்பீர்கள். எனவே, நச்சுத்தன்மைமிக்க மாயையின் பிடியிலிருந்து உங்களை விடுவித்து, இறை அனுபவத்தை அளிப்பதுதான் ஒரு சத்குருவின் முதன்மையான கடமையாகும்.**

**அனைத்தையும் விட்டுவிடுங்கள் - தியானம், ஆன்மீக சம்பிரதாயங்கள், இறை நாமத்தை உச்சரிப்பது - உங்களுக்குச் சுமையாக இருக்கும் இவை அனைத்தையும் விட்டுவிடுங்கள். இந்த நடைமுறைகள் உங்களை மேலும் குழப்பமடையச் செய்யும். இறையுணர்வை அடைந்து இறையின்பத்தில் மூழ்கி, உலகையும், அதன் நடவடிக்கைகளையும் பற்றிய உணர்வே இல்லாமலிருக்கும் மஜ்ஜூப் ஒருவரிடம் செல்வதால் என்ன பயன்?**

**ஒரு சத்குருவின் அருளில்லாமல் எதையும் அடைய முடியாது.**

**நீங்கள் ஒரு சத்குருவிடம் சரணடைந்ததும், உங்களுக்கான கடமையை அவர் செய்தாக வேண்டும். அதிலிருந்து அவர் தப்பிக்க இயலாது. அதன் பின்னர், உங்களின் எல்லையற்ற அன்பும், அசைக்க முடியாத நம்பிக்கையும்தான் உங்களுக்கான பணியைச் செய்ய அவரை ஊக்குவிக்கும். எனவே, உங்கள் குருநாதரைக் கடவுளாக ஏற்றுக்கொண்டு, முழுமையான அன்பு மற்றும் நம்பிக்கையுடன் சரணடைந்து, அவருக்கு சேவை செய்யுங்கள்! அப்போது நீங்கள் காப்பாற்றப் படுவீர்கள்! அன்பும், நம்பிக்கையுமே இப்போது உங்களுக்குத் தேவை.**

1926, மே 29 அன்று சத்குரு உபாஸனி மஹாராஜின் 56ஆவது பிறந்ததின விழா மிகுந்த பக்தியுடன் அனுசரிக்கப்பட்டது. பள்ளிக்கூடத்திற்கு மூன்று நாட்கள் விடுமுறை அளித்து, விளையாட்டு மற்றும் பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன. ஏறக்குறைய 4000 மக்களுக்கு பிறந்தநாள் நிமித்தம் சிறப்பான உணவு வழங்கப்பட்டது. மெஹர் பாபா, புனித நீராட்டுக்குப் பின்னர் அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார். அங்கல் பிளீடர் வழக்கம்போல, புராண பகுதிகளை வாசிக்க, தொடர்ந்து பஜனை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாலை வேளையில் பாபாவை, பல்லக்கில் ஊர்வலமாக மேல்மலைக்கு அழைத்துச் சென்றனர். இறுதியில் வாணவேடிக்கையுடன் நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன.

மே 30ஆம் நாள், பாபா, மண்டலி ஒருவரைக் கண்டித்த போது, அதைக்கேட்டு அவர் அமைதியிழந்து, மறுத்துப் பேசினார். இந்த சம்பவம் பாபாவை மண்டலிக்கு இவ்வாறு விளக்கத் தூண்டியது:

**நீங்கள் ஏன் அடிக்கடி கோபமுற்று அவ்வப்போது என்னுடைய கட்டளைகளை மீறுகிறீர்கள்? அதைக் குறித்து, நான் ஏதாவது கூறினால், நீங்கள் எரிச்சலடைகிறீர்கள். இவ்விதமான உங்கள் அணுகுமுறை, என் மீதான பாரத்தை அதிகரிக்கச் செய்கிறது. ஒருவர் சத்குருவின்**

**கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தாலும், இல்லையென்றாலும், முற்பிறவிகளில் அவர் சத்குருவோடு கொண்டிருந்த தொடர்பின் நெருக்கத்தைப் பொறுத்து, அவருடைய வட்டத்தில் இணையும் தகுதியை அடையப்பெறுகிறார். ஆனால், சத்குருவின் சுமையைக் குறைக்க அவருடைய உத்தரவுகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டும். உங்களுடைய தவறான மனப்பாங்கு, சத்குருவின் தொல்லைகளை மேலும் அதிகரிக்கச் செய்கிறது.**

**உங்களில் இருவர் என்னுடன் பயணம் செய்வதாக வைத்துக் கொள்வோம். ஒருவர் விருப்பமின்றி ஓர் அங்குலம் கூட நகரத் தயாராகயில்லை. மற்றொருவர் விரும்பி உடன் செல்கிறார். இருவரையும் ஒரே நேரத்தில் ஒரே இடத்திற்கு அழைத்துச்செல்ல வேண்டும். ஒருவரை எளிதாக உடனழைத்துச் செல்லும் அதே வேளையில் இன்னொருவரை அழைத்துச் செல்வது சிரமமாகிறது. சில நேரங்களில், என்னுடைய பணியின் நிமித்தம், அவ்வாறு மறுப்பவரை எனது தோளில் சுமந்து வலுக்கட்டாயமாக எடுத்துச்செல்ல வேண்டியதாகிறது.**

**முடிதிருத்துபவர் ஒருவர், உங்களுக்கு சவரம் செய்யும் வேளையில், நேர்த்தியான சவரம் தேவை என்பதால், உங்கள் தலையை அங்குமிங்கும் அசைப்பதை நீங்கள் அனுமதிக்கிறீர்கள்! அதுபோல, நீங்கள் கடவுளை அடைய, ஒரு சத்குருவிடம் உங்கள் உடல், ஆத்மா இரண்டையும் அர்ப்பணம் செய்து அவருடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் கீழ்ப்படிய வேண்டும்.**

**ஆற்று நீரானது பொது ஜனங்களின் உபயோகத்திற்காக. அவரவர் தேவைக்கேற்ப, நீரை நிரப்ப அவர்கள் கொண்டுவரும் கொள்கலன்கள் சிறியதாக அல்லது பெரியதாக இருக்கும். அதுபோல, சத்குருக்கள் அவர்களுடைய பரந்த மற்றும் வற்றாத 'எல்லையில்லா ஆனந்தம், அறிவு, இறையனுபவம்' அனைத்தையும் கருணையுடன் அள்ளி வழங்கும் கடமை உணர்வோடு இப்பூவுலகில் வருகின்றனர். அவர்களோ, இறை ஞானம் மற்றும் அளவிலா ஆசிகளின் களஞ்சியம்! தகுதி படைத்தவர்கள் சத்குருக்களிடம் வந்து, அவரவர் கொள்கலன்களில் இயன்ற வரை நிரப்பிக்கொள்ளலாம்.**

மெஹராபாத்தில் அவ்வேளையில் தங்கியிருந்த ராமச்சந்திர காடேக்கர் கல்லூரி தேர்வு (பரீட்சை) எழுதியிருந்தார். மே 31ஆம் நாள், பாபா அவரிடம் இவ்வாறு அறிவித்தார், "**உங்களுடைய தேர்வில் நீங்கள் தோல்வியடைந்து விட்டீர்கள்.**" அந்த இளைஞர் பெரிதும் மனமுடைந்து, கண்கலங்கினார். அவருக்கு ஆறுதலளிக்க பாபா, அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி, "**இது காடேக்கர் தேர்வில் தோல்வியடைந்ததைக் கொண்டாடுவதற்காக!**" என்று அறிவித்தார். சிறிது நேரத்தில் காடேக்கர், தேர்வில் வெற்றியடைந்து விட்டார் என்ற செய்தி வந்ததும், அவரது துயரங்கள் மகிழ்ச்சியளிக்கும் புன்னகையாக மாறின.

சிறுமிகள் பள்ளிக்கூடத்தில் தேநீர் வேளையில், மெஹர் பாபா, இந்திய வழக்கப்படி சாது மற்றும் துறவிகளுக்குத் தேங்காய் வழங்குவதன் அர்த்தம் குறித்து விளக்கமளித்தார்:

**தேங்காயை நான்கு பாகங்களாகப் பிரித்தால் உட்புறம் நீரும், வெளியே மூன்று பாகங்களாகவும் இருக்கும். ஒவ்வொன்றும் வித்தியாசமான ஒன்றைக் குறிக்கும். வெளிப்புறத்தில் இருக்கும் நாரானது, பௌதீக உடலைக் குறிப்பிடுகிறது. கடினமான தேங்காய் ஓடு, சூட்சும** (பிராண) **உடலைக் குறிக்கிறது. உள்ளே இருக்கும் வெண்மையான பாகம் ஆழ்மனதையும், நீர், இறையுணர்வையும் குறிக்கும்.**

**தேங்காயிலிருக்கும் நீரை எடுப்பதற்கு, படிப்படியாக நான்கு விதமான வழிமுறைகள் உள்ளன. முதலாவதாக நாரை எடுப்பது; இரண்டாவது தேங்காயை உடைப்பது; மூன்றாவது உடைத்த தேங்காயை இரண்டு பாகமாகப் பிரிப்பது; நான்காவதாக நீரை எடுப்பது. தேங்காயை உடைப்பதற்கு மக்கள் இவ்வித சாதாரண, அடுத்தடுத்தச் செயல்முறைகளைக் கையாளுவர். ஆனால், சடங்குகள் மற்றும் புனித விழாக்களில், தேங்காய் நீரை பூஜை வேளையில் தெளிக்க, முழுத் தேங்காயை சுவரிலோ அல்லது தரையிலோ ஒரே அடியில் அடித்துச் சிதறச் செய்வர்.**

**இவ்வாறு படிப்படியான நான்கு செயல்முறைகளில் ஆன்மீக முக்கியத்துவம் அடங்கியுள்ளது. தேங்காயிலிருந்து நாரை எடுக்கும் செயல், பௌதீக உடலையும், அதன் மனப்படிவங்களையும் கைவிடுவதோடு உவமைப் படுத்தப்படுகிறது. என்றாலும், பௌதீக உடலை இழக்கும் தருவாயில் சூட்சும** (பிராண) **உடல் சுறுசுறுப்பாகிறது. சூட்சும உடல் கடினமான தேங்காய் ஓடு போன்றது, பின்னர் அது சிதறடிக்கப்படுகிறது.**

**பௌதீக மற்றும் சூட்சும உடல்களை** (நார், தேங்காய் ஓடு) **அகற்றிய பின்னர், எஞ்சியிருப்பது ஆழ்மன உடல்** (வெண்மையான தேங்காய்) **மட்டுமே. இறுதியாக மனதை நிர்மூலமாக்குவதன் மூலம் கடவுளைக்** (தேங்காய் நீர்) **கண்டு கொள்ளலாம்.**

**தேங்காயின் நாரிழைகளை ஒவ்வொன்றாக அகற்றுவது, மாயையின் தனிப்பட்ட குணங்களை ஒன்றன் பின் ஒன்றாக அகற்றுவதற்கு சமம். ஆனால், அனைத்து நாரிழைகளை அகற்றிய பின்னரும்** (முழு உடலையும், அதைச் சார்ந்த திடமான மனப்படிவங்களையும் நீக்கிய பின்னரும்), **மாயை, சூட்சும** (தேங்காய் ஓடு) **மற்றும் ஆழ்மன** (வெண்மையான தேங்காய்) **உடல்களாக இருக்கும்.**

**தேங்காய் ஓட்டை நொறுக்கிய பின்னரும்** (சூட்சும உடல் அழிந்த பிறகும்), **வெண்மையான தேங்காய் எஞ்சியிருக்கும்** (ஆழ்மனம் தொடர்ந்து படைப்பினை அனுபவிக்கும்). **வெண்மையான தேங்காயை அகற்றியதும், 'நீர்' - இறையுணர்வு மட்டுமே மிஞ்சும்.**

இறையுணர்வை அடைவதற்கு ஒன்றன் பின் ஒன்றாக மூன்று உறைகளையும் - பௌதீக, சூட்சும, ஆழ்மன உடல்களை - அகற்ற வேண்டியது அவசியம், அதாவது மூன்று விதமான மனப்படிவங்களை முற்றிலுமாக நிர்மூலமாக்குவது. உட்சுழற்சியின் சாதாரண போக்கில், இம்மனப்படிவங்கள் படிப்படியாக அகற்றப்பட்டு முற்றிலுமாக முடிவடைய, நூற்றுக்கணக்கான வருடங்கள் அல்லாமல், யுகம் யுகமான காலங்கள் பிடிக்கும்.

ஒரு சத்குருவிற்கு மட்டுமே கண்ணிமைக்கும் நேரத்தில், ஒருவருக்கு இறை உணர்வை வழங்கும் சக்தி உள்ளது. அவர் மட்டுமே முழுத் தேங்காயை ஒரே நொடியில் சிதறச் செய்து ஆழ்மனதை நிர்மூலமாக்க முடியும். ஆகையால், ஒரு தேங்காயை வழங்குவது என்பது ஒருவரின் உடல் மற்றும் ஆத்மாவை இறுதியாக அர்ப்பணம் செய்வதைக் குறிக்கும். எனவே இவ்வாறு வழங்குவதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்பவர் அவர்களுடைய இதயம் மற்றும் ஆத்மாவை ஒரு சத்குருவிடம் சரணடையச் செய்ய வேண்டும்.

தொடர்ந்து மெஹர் பாபா, சத்குருவுடனான ஒருவரின் சகவாசத்தைக் குறித்து விளக்கமளித்தார்:

ரிஷி, முனிவர்கள் கூறுவது போல், இறைவுணர்வை அடைய மூன்று வெவ்வேறான வழிகள் உள்ளன. ஒரு சத்குருவின் தொடர்பின் மூலம், மிகக் குறுகியகாலத்தில், வேகமாக, எளிதான முறையில் இறையுணர்வை அடைவது முதல் வழி, அதாவது சத்குருவின் சகவாசத்தில் இருந்து, அவருக்குக் கீழ்ப்படிந்து, சேவை செய்வது. இதை, நீங்கள் இறுதியாக சென்றடைய வேண்டிய இடத்திற்கு, நேரடியாக எடுத்துச் செல்லும் ஒரு சிறப்பு விரைவு ரயிலோடு ஒப்பிடலாம்.

ஒரு சத்குரு அல்லது ஆன்மீக வழிகாட்டி இல்லாத நிலையில், கடைப்பிடிக்க வேண்டிய மாற்று வழிகளை விட எளிதான, இரண்டாவது வழி அன்பு மற்றும் முழு மனதுடன் கடவுளின் நாமத்தை உச்சரிப்பது. மேலும் இயன்ற வரையில் மனித இனத்திற்கு தன்னலமற்ற சேவை செய்வது. இதை, கிட்டத்தட்ட அனைத்து ரயில் நிலையங்களிலும் நின்று செல்லும் பயணிகள் ரயிலுடன் ஒப்பிட முடியும்.

ஒரு சத்குரு அல்லது ஆன்மீக வழிகாட்டி இல்லாத நிலையில், கடைப்பிடிக்கும் இரண்டாவது வழியைப் போலவே மூன்றாவது வழியும், ஆனால் இது மிகவும் நீண்ட, நெடிய, கடினமான வழியாகும். அதாவது மதக்கோட்பாடுகளை சார்ந்த சட்டதிட்டங்களைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பது; ஒரு மதத்தின் அனைத்து சடங்கு, சம்பிரதாயங்களையும் இயந்திரத்தனமாக அல்லாமல் முழுமனதுடன் மற்றும் உண்மையாகச் செயல்படுத்த வேண்டும் என்று அர்த்தம். இதை, மிக மெதுவாக, சத்தமிட்டு நகர்ந்து செல்லும் சரக்கு ரயிலுடன் ஒப்பிடலாம்.

அவதார புருஷர்கள் மற்றும் சத்குருக்கள், அவர்களது முக்கிய சீடர்களை விரைவு ரயிலில் அழைத்துச் சென்று, இறைவுணர்வை அளித்து,

பிறப்பு, இறப்பு எனும் முடிவிலா சுற்றுகளிலிருந்து விடுதலை வழங்குகிறார்கள். உள் வட்டத்தில் இருக்கும் சிலருக்கு மட்டுமே இந்த அரிய வாய்ப்பு உரித்தானது. பக்தி மற்றும் சேவை மார்க்கத்தைப் பின்பற்ற விரும்புவோருக்கு, குருநாதர்கள், தன்னலமற்ற சேவை மற்றும் இறை நாமத்தைத் தொடர்ந்து உச்சரிக்கும் பாதையைக் காட்டினார்கள்.

சத்குருக்கள் உலகின் பெரும்பாலானோருக்கு, சடங்கு, சம்பிரதாய வழிமுறையைக் கடைப்பிடிக்கக் கூறினர். ஆனால், அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட மத பழக்கவழக்கங்கள் மற்றும் சடங்கு முறைகளுக்கு ஆழ்ந்த அர்த்தம் உள்ளது. இந்துக்கள் தாளமிட்டு பஜனை பாடுவது, முஸ்லிம்கள் நமாஸ் (பிரார்த்தனை) வாசிப்பது இவையெல்லாம், இறை நிலையை அடைய மிகப்பெரிய தடையாக இருக்கும் மனப்படிவங்களை அகற்ற வழிவகுக்கும் முறைகளாகும்.

உதாரணமாக, ஸொராஸ்டிரியர்கள் அணியும் பூணூலை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் மூன்று முடிச்சுகள் ஸொராஸ்டிரிய மதத்தின் மூன்று அடிப்படை கொள்கைகளைக் குறிக்கின்றன: நல்ல எண்ணங்கள், நயமான வார்த்தைகள், நற்செயல்கள். இப்போது, ஒவ்வொரு நாளும் பூணூலைக் கைகளால் உதறுவதன் குறிப்பிடத்தக்க காரணம் என்ன? அது, முந்தைய நாளிலிருந்து நூலில் படிந்த தூசிகளை (மனப்படிவங்களை) அகற்றுவதை அடையாளப் படுத்துகிறது. ஆனால், அதை நேர்மையாகவும், முழு மனதோடும் செய்ய வேண்டும். இல்லையேல், அதை ஒரு வழக்கமான பழக்கமாகக் கொண்டு, ஆயிரம் முறை மந்திரத்தை இயந்திரத்தனமாக முணுமுணுப்பதால் எந்த பயனுமில்லை.

இந்துக்கள் பஜனை பாடுவதும், முஸ்லிம்கள் நமாஸ் பிரார்த்தனை செய்வதும் ஒரே பரம்பொருள் மீது முழு கவனத்தையும் செலுத்த வழிவகுக்கும். இவை, உலகின் கவலையிலிருந்து நம் மனதை திசைத் திருப்பி, ஏக இறைவனிடம் மனதை ஒருநிலைப்படுத்தும் நோக்கத்துடன், ரிஷி முனிவர்கள் வகுத்த வழிகளாகும்.

நீங்கள் துக்காராம், துக்காராம் என்று கூறிக்கொண்டே ஆயிரம் ஆண்டுகள் அங்குமிங்கும் குதிப்பதால் எவ்வித பயனுமில்லை. தேவ தேவதைகள் அல்லது சாதுக்களுக்கு இத்தகைய இறை நாமத்தை உச்சரிப்பது அல்லது தாளத்தோடு பஜனை பாடுவது தேவையற்றது. உங்களுடைய பக்தியும், அன்பும் மட்டுமே தேவையே தவிர, வெறும் இயந்திரத்தனமான முணுமுணுப்புடன் உங்கள் மனமும், இதயமும் உலக லட்சியங்களை நோக்கித் தொடர்ந்து செல்வதில் எந்த பயனும் இல்லை!

1926, ஜூன் 3ஆம் நாள், மெஹர் பாபாவை வருத்தமுறச் செய்த ஒரு சம்பவத்தால், அவர் மெஹராபாத்தை விட்டு வெளியேறப் போவதாக அச்சுறுத்தினார். அதன் பின்னர், அன்று மாலையில் அதைக் குறித்து மண்டலிக்கு விளக்கமளித்தார்.

நான் கூறுவதை கவனமாகக் கேட்டு, அதை நினைவில் கொள்ளுங்கள்: எவரேனும் உயிர் துறப்பதை நினைத்து நான் வருத்தப் படுவதில்லை, ஆனால் நீங்கள் எனக்குக் கீழ்ப்படியாவிடில், அது என்னைப் பெரிதும் வருந்தச் செய்யும். இன்று பிற்பகல் நடந்த சம்பவத்தால் நான் இந்த இடத்தை விட்டுச் செல்ல விரும்பினேன். நீங்கள் ஒருவித கலக்கத்துடன் அமைதியாக இருந்தீர்கள். உங்கள் அலட்சியத்தால் நான் செய்ததை உங்களுக்கு எடுத்துக் கூறினேன்.

எந்த ஒரு சத்குரு அல்லது அவதார புருஷரும், அவருடைய வட்டத்து சீடர்களுக்கு செய்ய வேண்டியதை முழுவதுமாகச் செய்து, தயார் நிலைக்கு கொண்டுவரும் வரையில் அவர்களின் பௌதீக உடலைத் துறப்பது சாத்தியமல்ல.

இன்று மதிய வேளையில், எனது மனநிலை சரியில்லாமல் இருந்ததற்குக் காரணம் நீங்கள்தான் என்று நான் கூறவில்லை. இதற்கு முன்பே ஒருவித கோபமான மனநிலையில் இருந்ததற்கு, வெளியளவிலான நிகழ்வுகளே காரணம் என்பதை நான் உங்களுக்குக் கூறியிருக்கிறேன்.

எடுத்துக்காட்டாக, ஒற்றைக்கண் பார்வை கொண்ட ஒருவரை மனதில் கொள்ளுங்கள். அவர் வேறு எங்கேனும் பார்க்கும் வேளையில், அது உங்களை முறைத்துப் பார்ப்பது போலத் தோன்றும். இது எனது விஷயத்திலும் அப்படித்தான். நான் என்னுடைய பணியில் மும்முரமாக இருக்கும் வேளையில், எனது வெளியளவிலான நடத்தை மிகவும் விசித்திரமானதாக இருப்பதால், நீங்கள் அதைப் புரிந்துகொள்ள மாட்டீர்கள்.

குருநாதர்களின் சக்தியைக் குறித்து நீங்கள் என்ன அறிவீர்கள்? அவர்கள் மானிடருக்குச் செய்ய வேண்டிய பணியின் நிமித்தம், அவர்களின் எல்லையில்லா உயர் நிலையிலிருந்து, கீழுலகுக்கு இறங்கி வந்து, கற்பனை செய்ய இயலாத அளவுக்குத் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

பாபா அப்போது அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்:

எந்த சூழ்நிலையிலும் ஒரு கல் அசைவதில்லை; நீங்கள் அதை உதைக்கலாம், அதன் மீது எச்சிலைத் துப்பவோ அல்லது அதை வணங்கவோ செய்யலாம், ஆனால் இவை அனைத்தும் எவ்விதமான விளைவையும் ஏற்படுத்தாது. நீங்கள் உங்கள் விருப்பு வெறுப்புகளைக் கண்டுகொள்ளாத வரை, உங்களை உதைத்து, அவமானப்படுத்தி, ஏளனம் செய்வதை அலட்சியப்படுத்துவது வரை, இறை நிலையை அடையும் நம்பிக்கையை அடையப்பெற முடியாது - உங்கள் அகந்தையை சிதறடிக்க வேண்டும். நீங்கள் தூசாக மாற வேண்டும்! ஒரு குருநாதரின் சகவாசம் மட்டுமே இதற்கு வழிவகுக்கும்.

வாசனை திரவியம் பூசிய ஒருவரை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் மக்களிடையே வந்து அமரும் வேளையில், அவரைச் சுற்றியுள்ள இடமெல்லாம் நறுமணம் வீசும். அதேபோல், ஒருவர் கரியமில வாயுவை

வெளிவிட நேர்ந்தால், மக்கள் துர்நாற்றம் தாங்க முடியாமல் மூக்குகளை மூடிக்கொள்வர். இதனால்தான் நீங்கள் சாதுக்களின் சகவாசத்தில் இருக்கவேண்டியது அவசியம்; அவர்களின் தெய்வீக சூழ்நிலை உங்களுக்கு நன்மை பயக்கும். மாறாக, நீங்கள் உலகமெனும் சாக்கடையில் மூழ்குவதானால் அது உங்கள் ஆன்மீக ஆரோக்கியத்தை மிகவும் மோசமாக பாதிக்கும்.

ஜூன் 5ஆம் நாள், மெஹர் பாபா, மண்டலிக்கு மேலும் உதாரணத்துடன் '**மாயையைக் கண்டு அஞ்சாதீர்கள்**' என்று வலியுறுத்திக் கூறினார்:

**ஒரு திரைப்படத்தை எடுத்துக் கொள்ளுங்கள், அதில் வில்லன் ஒருவன், ஏழை, அப்பாவி குழந்தை அல்லது பெண்மணியை அடக்கி, கொடுமைப்படுத்தி, அந்த ஏழையை உயிருடன் நெருப்பில் எரித்தோ அல்லது ஒரு மோட்டார் வாகனம் அல்லது ரயிலின் கீழ் நசுக்கவோ செய்யும்போது எவ்வளவு பெரிய கவலை ஏற்படுகிறது? ஒரு துணிச்சலான கதாநாயகன், சம்பவ இடத்தில் திடீரெனத் தோன்றி, துரதிருஷ்டவசமான உயிரை, தக்க நேரத்தில் காப்பாற்றும் தருணத்தில் அனைவரும் எவ்வளவு பூரிப்படைகிறீர்கள்!**

**பாதிக்கப்பட்டவர் அந்த சங்கடமான சூழ்நிலையைக் கடந்து சென்றால், ரசிகர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்; ஆனால், அதேவேளையில் வில்லன் கை மேலோங்கி நின்றால் அவர்கள் துக்கத்தில் ஆழ்ந்து விடுகிறார்கள்.**

**சுருக்கமாகச் சொன்னால் திரைப்படத்தில் எப்படி நிகழ்கிறதோ அதற்குத் தகுந்தாற்போல் உணர்ச்சி வசப்படுகிறீர்கள்! ஆனால், காட்சி முடிந்ததும் நீங்கள், 'ஓ! இது வெறும் திரைப்படம்தான்!' என்பதை உணர்ந்து, காட்சியைக் காணும் வேளையில் மனதில் பெருக்கெடுத்த உணர்வுகள் அடிப்படையற்றது என்பதையும் அறிகிறீர்கள். உங்களை ஆட்கொண்டது, வெறும் நாடகம், கற்பனை உருவாக்கம்.**

**இது போல, நமது வாழ்வையும், நாம் வாழும் பிரபஞ்சத்தையும் நினைத்துப் பாருங்கள். இவ்வுலக மேடையில் நம் பாகத்தை நாம் நடிக்கிறோம்; வாழ்க்கை நாடகம் நிறைவுறும் போதுதான் நடந்ததெல்லாம் கனவு என்பதை அறிகிறோம். இது போலியானது, பொய்மையால் உருவாக்கம் தரப்பட்ட வெறும் திரைப்படம்தான். அனைத்தும் பொய் - இல்லாத ஒன்று, பித்தலாட்டம், ஒரு நாடகம், ஒரு திரைப்படம், நிஜத்தில் கானல் நீர் போன்றது! எனவே நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கூறுகிறேன் மாயையின் ஈர்ப்பில் மாட்டிக் கொள்ளாதீர்கள். இறை நாமத்தை உச்சரித்து, இறை நிலையை அடைந்த ஒருவரைத் தேடி, அவரிடம் உங்களை அர்ப்பணம் செய்யுங்கள்; அவர்கள் மட்டுமே பாதுகாப்பாக அறிவுரை வழங்கவும், வழிகாட்டவும் முடியும்.**

ஜூன் 9ஆம் நாள், மெஹர் பாபா, '**சீடர்கள் மற்றும் பக்தர்களைப் பற்றிய**' கருத்துரை வழங்கினார்:

**பக்தர்கள் எனக்குப் பெருமளவில் இருந்தாலும், சீடர்கள் ஒரு சிலரே! பக்தர்கள் அவர்களுடைய பக்தியின் இன்பத்தை நாடுகின்றனர்; அதே வேளையில் சீடரின் ஒரே கடமை, எத்தனை கடினமாக இருந்தாலும், குருநாதரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதே! பக்தர்கள் தங்களது குருநாதரைத் தேர்ந்தெடுத்து அவரிடம் சரணடைகிறார்கள். ஒரு குருநாதர், சீடர்களை அவரே தேர்ந்தெடுக்கிறார். எனவே பலர் பக்தர்களாகும் அதே வேளையில் ஒரு சிலரே சீடர்களாக முடியும்.**

ஒவ்வொரு வியாழக்கிழமையும் மெஹர் பாபா மண்டலியுடன், அரன்காவ்ம் குடும்ப குவாட்டர்ஸில் வாழும் காக்கா ஷஹானே இல்லத்திற்கு விஜயம் செய்த வேளையில், அவர் தேநீரும், பஜ்ஜியும் சிற்றுண்டியாக வழங்குவது வழக்கம். ஒரு முறை பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **"காக்கா வழங்கிய பஜ்ஜி மிகவும் சுவையாக இருப்பதால் நாம் அதை உண்டு மகிழ்ச்சியாக இருக்கிறோம், ஆனால், உண்மையான மகிழ்ச்சி என்பது மனப்படிவங்கள் எனும் மாவால் செய்து, பக்தியெனும் எண்ணெயில் வறுத்து, நேசமெனும் நெருப்பில் தயார் செய்வதிலேயே உள்ளது."**

அன்று மதிய வேளையில் மதத்தின் நோக்கத்தைப் பற்றிய முக்கியமான தலைப்பில் விவாதம் நடைபெற்றது. பாபா இவ்வாறு விளக்கினார்: **"மதத்தின் உண்மையான அர்த்தம் கடவுளை அறிந்து, பார்த்து அவருடன் ஐக்கியமாவது. இதைத் தவிர மதத்தைக் குறித்த இதர அனைத்தும் சடங்கு, சம்பிரதாயங்களின் செயல்பாடுகள் ஆகும்."**

அஜோபா, தினமும் நடக்கும் சம்பவங்களை அவரது நாட்குறிப்பில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார், "மெஹர் பாபா, மணிக்கணக்கில் ஆன்மீக விஷயங்களைப் பற்றிய விளக்கங்கள் அளித்தது, மண்டலியை ஆர்வத்துடன் கவனமாக மெய்மறந்து கேட்கச் செய்தது.

பாபா, அப்போது, ஒவ்வொருவரையும் ஏதாவது பாடல் பாடுமாறு கூறினார்; முதலில் காக்கா ஷஹானே அவர்களை சுட்டிக் காட்டியதும், அவர் ஆச்சரியத்தில் என்ன செய்வதென தெரியாமல் பதட்டமடைந்தார். எதுவாயினும், அவர் திக்கித் திக்கிப் பாடியது அனைவரையும் மகிழ்வுறச் செய்தது.

அஹமதுநகரில் அப்போது காட்சியிடப்பட்ட சர்க்கஸ் ஒன்றில் அங்கம் வகித்த ராமமூர்த்தி என்ற குஸ்தி சண்டைக்காரர், மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக ஜூன் 10ஆம் நாள் வந்திருந்தார். அதற்குப் பிறகு பாபா, மண்டலியை, சர்க்கஸ் பார்க்கச்செல்ல அனுமதித்தார், ஆனால், ஆதி சீனியரால் வாகனத்திற்கு ஏற்பாடு செய்யமுடியாமலாயிற்று. பாபா, அப்போது குறிப்பிட்டார், **"இதுவும் நன்மைக்கே! உலக வாழ்க்கை முழுவதும் ஒரு சர்க்கஸைப் போன்றது. எவரேனும் அதன் உண்மையான உருவில் பார்க்க விரும்பினால் சர்க்கஸ் என்றழைக்கப்படும் இதைப் பார்ப்பதில் ஆர்வம் காட்டாமல், உலகையே ஒரு சர்க்கஸ் மைதானமாகக் கண்டுகொள்வார்."**

ஆனால், அன்றைய மாலைப்பொழுது மண்டலிக்கு முற்றிலும் ஏமாற்றமாக அமையக்கூடாது என்ற எண்ணத்தில், பாபா அனைவரையும் பொழுது சாய்ந்த பின்னர் அழைத்து, ஒவ்வொருவரையும் அவருக்கு மிகவும் குறைவாகத் தெரிந்த மொழியில், சொற்பொழிவு ஒன்றை வழங்க உத்தரவிட்டார். அவர்களின் தடுமாற்றத்தில் முயற்சித்த, சீரில்லாத, சிதைந்துபோன வாக்கியங்கள் அனைவரையும் களிப்புடன் பூரிப்படையச் செய்தது. மெஹர் பாபா அப்போது அங்கிருந்து புறப்பட்டு மேல்மலைக்குச் சென்றார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு பாபா, மண்டலிக்கு மேலும் விளக்கங்கள் அளித்தார்:

**நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும்; அதாவது, பௌதீக, சூட்சும மற்றும் ஆழ்மன உலகங்களின் இன்ப, துன்பங்களை ஒன்றிணைத்துப் பார்த்தால், அது எல்லையில்லா பேரானந்தக் கடலின் ஒரு துளியின் சாயலுக்குக் கூட சமமாகாது! என்ன ஒரு மேன்மையான பேரின்பம்! இறை அழகின் என்ன ஒரு வற்றாத பொக்கிஷம்!**

**கடந்த சில மாதங்களாக, ஹஸ்ரத் பாபாஜான் இவ்வாறு கூறிக்கொண்டே இருக்கிறார், 'என்னுடைய ஏழு மாதங்களும் பதிமூன்று நாட்களும் நிறைவடைந்து விட்டன!' எவ்வளவு ஆழமான அர்த்தம் அதில் அடங்கியிருக்கும்! ஒருவேளை இப்படியாக இருக்கலாம், ஒரு குழந்தை கருவுற்று, பிறக்க ஒன்பது மாதங்கள் பிடிக்கும் பட்சத்தில், பாபாஜானின் ஏதோ ஒரு முக்கியமான ஆன்மீகப் பணி நிறைவடைய ஒரு மாதமும் பதினேழு நாட்களும் எஞ்சியிருப்பதைக் குறிக்கும்.**

சமீபத்தில், நவல் தலாட்டி, ஹஸ்ரத் பாபாஜானை சந்தித்ததை மேற்கோள்காட்டி, மெஹர் பாபா தொடர்ந்து கூறினார்: **நவல், பாபாஜானை சந்தித்து, என்னிடமிருந்து வந்ததைக் கூறியதும், பாபாஜான், 'அவன் என்னுடைய கடைக்காரன்' என்று பதிலளித்தார். இது எதைக் குறிப்பிடுகிறது என்றால், பாபாஜான், அனைத்து ஆன்மீக சக்தியின் ஆதாரமாகத் திகழும் இக்காலத்தில், நான் அவருடைய ஒரே காரியகர்த்தா; அவரது 'சேமிப்புக் கிடங்கில்' இருப்பதோ சொல்லப்படாத பொக்கிஷங்கள். பாபாஜான் உடனே கீழ்வரும் ஈரடிக்கவிதையை மொழிந்தார்:**

**எனது கடை எந்தக் கட்டிடத்திலோ**
**அல்லது உலகத்திலோ இல்லை;**
**என் உலகம் எஸ்தான் அல்லது**
**மேர்வானுக்கு மட்டுமே எல்லை!**

மெஹராபாத் மருத்துவமனையின் முக்கிய மருத்துவராகப் பணிபுரிந்து வந்த டாக்டர் கர்கல் (DR. KARKAL), பாபா மற்றும் மண்டலியை, ஜூன் 12ஆம் நாள் தேநீர் விருந்துக்காக அழைத்திருந்தார்; ஆனால், உணவு பண்டங்கள் தயாராகும் முன்னரே பாபா, டாக்டர் கர்கலின் இல்லத்தைச் சென்றடைந்தார். பாபா

நீண்டநேரம் அங்கு இருப்பதை விரும்பாமல், தயாராக இருந்த அனைத்தையும் மண்டலிக்குப் பகிர்ந்தளித்தார். தேநீரையும் அவசரமாகத் தயாரித்து, அனைவருக்கும் பாபா அவருடைய கைகளால் வழங்கி, டாக்டர் கர்கலிடம் இவ்வாறு கூறினார், **“பாருங்கள் எத்தனை அதிவேகத்தில் அனைத்தும் முடிந்துவிட்டது?”**

டாக்டர் கர்கல் உடனே, “பாபா, திறவுகோல் உங்கள் கைவசம் உள்ளது” என்று பதிலளித்தார். டாக்டர் கர்கலின் பதிலைக்கேட்டு மெஹர் பாபா இவ்வாறு விளக்கமளித்தார்.

**உலகின் திறவுகோல் ஒன்றே ஒன்று, ஆனால் அது ஐந்து சத்குருக்களின் கைகளிலுள்ளது. உதாரணமாக, காப்புப் பெட்டகத்திற்கு ஒரே ஒரு திறவுகோல் மட்டுமே இருக்கும், வேறு எந்தத் திறவுகோலாலும் அதைத் திறக்க முடியாது. காப்புப் பெட்டகத்தை** (இந்த உலகை) **ஐந்து சத்குருக்கள், அவர்களின் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். ஒரு சத்குரு திறவுகோலை தனது கைவசம் வைத்திருப்பவர்; அது இல்லாமல் காப்புப் பெட்டகத்தைத் திறக்க முடியாது. இரண்டாவது சத்குரு காப்புப் பெட்டகத்தைப் பாதுகாப்பவர்; அதைத் திறக்க அவருடைய முன் ஒப்புதல் அவசியம். மூன்றாவது சத்குருவிடம் மட்டுமே திறவுகோலைப் பயன்படுத்தி, காப்புப் பெட்டகத்தைத் திறக்கும் அதிகாரமுள்ளது. காப்புப் பெட்டகத்திலிருக்கும் பொக்கிஷத்தைப் பகிர்ந்தளிக்கும் உரிமை நான்காவது சத்குருவிடம் உள்ளது. மேலும் ஐந்தாவது சத்குருவிடம் அந்த விநியோகத்தை அங்கீகரிக்கும் அதிகாரம் இருக்கும். இப்படி, உலகின் ஒரே திறவுகோலை ஐந்து சத்குருக்களும் சமமாகப் பகிர்ந்து கொள்கிறார்கள்.**

**ஐந்து சத்குருக்கள் மற்றும் 51 இறை நிலையை அடைந்த ஆன்மாக்கள்** (மஜ்ஜூப் மற்றும் ஜீவன் முக்தாக்கள்) **திறவுகோலை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இந்த 51 மஜ்ஜூப் மற்றும் ஜீவன்முக்தாக்கள் ஐந்து சத்குருக்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆவர். 51+5 = 56; இந்த எண் 56 எப்போதும் மாறாது. ஒவ்வொரு சத்குருவின் வட்டத்திலும் 12 உறுப்பினர்கள் உள்ளனர். இம்முறையில் உலக விவகாரங்கள் அனைத்தும் நடந்தவண்ணம் இருக்கும். நான் உங்களுக்குக் கூறும் இவையெல்லாம் ஆன்மீக ரகசியங்களாகும்.**

மெஹர் பாபா பத்து மண்டலியுடன் அன்று மதியம் சர்க்கஸ் பார்க்கச் சென்றார். அஹமதுநகர் சென்று, 15 நிமிடங்கள் சர்க்கஸ் நிகழ்ச்சிகளைப் பார்த்ததும், பாபா இருக்கையிலிருந்து எழுந்து, இது புறப்படும் நேரம் எனக் குறிப்பிட்டார்.

அடுத்த நாள், ஜூன் 13ஆம் தேதி, மெஹர் பாபா அதுபோல, ‘பக்த சூர்தாஸ்’ (BHAKTA SURDAS) எனும் நாடகம் பார்க்கச் சென்றார். மெஹராபாத்திலிருந்து மாணவர்கள் உட்பட ஏறக்குறைய 150 பேர் அந்தச் சிறப்புக் காட்சியைக் காணச் சென்றனர். முதல் பாகம் நிறைவடைந்ததும் பாபா இருக்கையிலிருந்து எழுந்து வெளியே வந்து, அரங்கத்து வராந்தாவில்

அங்குமிங்கும் வேக நடைபோட்டு, கைசைகைகளால் வானில் ஏதோ செய்வது போலத் தென்பட்டார். இது, நாடகம் நிறைவுறும் வரைத் தொடர்ந்து நடந்தது. மாலை 5 மணியளவில் திரள்திரளாக வந்தவர்கள் திரும்பிச் சென்றனர். பாபா, நாடகத்தின் கதையை சாஞ்சியிடம் கேட்டுத் தெரிந்துகொண்ட பின்பு, நாடகம் நல்ல கருத்து வாய்ந்தது, அதாவது, '**காமம் களைந்ததும் கடவுள் அருகில் வருகிறார்**' எனக் குறிப்பிட்டார்.

'சத்யமாங்' (SATYA MANG), அஹமதுநகர் ஜில்லாவில் வாழ்ந்த, பலரும் அறிந்த ஒரு மோசமான குற்றவாளி; ஒரு முறை, தனது கும்பலுடன் மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக வந்திருந்தார். குருநாதரின் அருள் கிடைத்தால், அவருடைய தொழில் தொடர்ந்து லாபகரமானதாக இருக்கும், மேலும் அவர் காவல்துறையால் கைது செய்யப்படமாட்டார் என்ற நம்பிக்கையில் வந்தார். அவர் வந்த வேளையில் பாபா, ஏறக்குறைய 50 மண்டலியுடன் அவரது குடிலில் உரையாடிக் கொண்டிருக்க, ஒரு கூட்டம் வந்திருந்ததை பாபாவிற்குத் தெரிவித்தனர். வந்தவர் உண்மையிலே யார் என்பது அங்கிருந்த எவருக்கும் தெரியாது. முதலில், பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கி, சத்யமாங் அவருடைய கூட்டாளிகளுடன் பாபாவின் அருகில் தரையில் அமர்ந்தார். பாபா திடீரென மிகவும் தீவிரமாகி, சில நிமிடங்களுக்கு அமைதியாக இருந்தார். பாபா அப்போது கேட்டார், "**எங்கிருந்து வருகிறீர்கள், எங்கே செல்கிறீர்கள்?**" சத்யமாங், தான் யார் என்பதை தெரியப்படுத்தாமல் பதிலளித்தார். பாபா உடனே நேரடியாக அவரை உற்றுநோக்கி கைசைகைகள் மூலம் கூறினார், "**நீ கைகளில் வளையல்கள் அணிந்திருக்க வேண்டும்!**"

பாபா கூறியதன் அர்த்தம் புரியாமல் சத்யமாங் மண்டலியிடம், பாபா என்ன கூறினார் என வினவினார். பாபா, மறுபடியும், "**நீ உனது கைகளில் வளையல்கள் அணிந்திருக்க வேண்டும்! நீ ஏன் அவற்றை அணியவில்லை?**" என்று கேட்டார்.

மண்டலியில் ஒருவர் விளக்கிக் கூறியதும், சத்யமாங் "ஏன்? நான் என்ன செய்தேன்?" என்று கேட்டார்.

"**நீ ஒரு கோழை!**" பாபா உரத்த குரலில் கூறுவதுபோல, சைகைகளால் காண்பித்தார்.

"நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?" சத்யமாங் கேட்டார்.

"**உன்னைப் போன்ற, உருவத்தில் பெரிய, வலிமைமிக்க மனிதர் ஒருவர், கல்லிலிருந்து தண்ணீரை எடுக்க முடியும்** (அவர் கடினமாக உழைத்து ஒரு நேர்மையான வாழ்வாதாரத்தை சம்பாதிக்க முடியும் என அர்த்தம்). **அதைச் செய்யாமல், மக்களிடம் திருடி, கொள்ளையடிக்கிறாய்! உன்னுடைய பெயர் பெண்கள் மற்றும் குழந்தைகள் மனங்களில் பீதியைக் கிளப்பி உன்னை நினைக்கும்போது தூங்க முடியாமல் அஞ்சி நடுங்குகிறார்கள்.**"

அதுவரை, மண்டலிக்கு அங்கு வந்திருப்பவர் யார் என்பது தெரியாது; பாபா கூறியதைக் கேட்ட பின்னரே, அவர் அவமரியாதைக்குரிய சத்தியமாங்,

அவரைக் காவல்துறையினர் தேடிக் கண்டுகொள்ள முடியாமல் இருப்பவர் என்பதை ஊர்ஜிதம் செய்தனர்.

மெஹர் பாபா தொடர்ந்து கூறினார், "**நீ சட்டவிரோதமான முறையில் சம்பாத்தித்து, உன்னைக் காப்பாற்றிக் கொள்கிறாய். உனக்கு இந்த மீசையை வளர்க்க வெட்கமாக இல்லையா? நீ ஓர் ஆண்மகன் அல்ல - நீ ஒரு பெண்!**"

சத்தியமாங் பதிலளித்தார், "என்னுடைய தொழில், பரம்பரை பரம்பரையாக என்னிடம் வந்தது. இதை நான் தொடரவில்லை என்றால், என்னையும் எனது குடும்பத்தையும் பராமரிப்பது எப்படி?"

"**மக்களைக் கொள்ளையடிப்பதைத் தவிர, வேறு எந்தத் தொழிலும் செய்ய முடியாதா? உலகத்தில் உள்ளவரெல்லாம் என்ன செய்கிறார்களாம்? நீ என்ன சொல்கிறாய், உலகில் ஒவ்வொருவரும் திருடித்தான் பிழைக்கிறார்களா?**"

இத்தகைய ஆபத்தான குற்றவாளியிடம் இவ்வாறு முறையிடுவது எவருமே கேட்டிராத ஒன்று! காவல்துறையினர் கூட சத்தியமாங், மற்றும் அவனுடைய கும்பலைக் கண்டு அஞ்சி நடுங்கினர். ஆனால், மெஹர் பாபா முன்னிலையில் இந்த 'ஓநாய் ஒரு ஆட்டுக்குட்டி போல' பணிவுடன் கேட்டது, "மஹாராஜ், எனது குடும்பத்தைப் பராமரிக்க எனக்கு வேறு ஏதேனும் வேலையிருந்தால், நான் எனது தொழிலை விட்டுவிடத் தயாராக இருக்கிறேன். எனக்கு வழிகாட்டுங்கள்."

பாபா பதிலளித்தார், "**அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய முடியும்; ஆனால், திருடுவதை மட்டும் நீ எப்படி நிறுத்துவாய்? அதன் கிருமிகள் உன் உடலிலுள்ள ஒவ்வோர் உயிர் அணுவிலும் நிரம்பியுள்ளன!**"

சத்தியமாங் இவ்வாறு பதிலளித்தார், "இல்லை, மஹாராஜ், என் குழந்தைகளுக்கு ஏதேனும் ஏற்பாடு செய்யப்பட்டால் அத்தகைய வாழ்க்கையிலிருந்து நான் எனது முகத்தைத் திருப்பிக் கொள்வேன் என்று சத்தியம் செய்கிறேன். அவ்வாறு செய்தால் நான் மீண்டும் ஒருபோதும் கொள்ளையடிக்க மாட்டேன்."

பாபா அப்போது தீவிரமாகக் கேட்டார், "**யார் முன்னிலையில் நீ இந்த வாக்குறுதியை வழங்குகிறாய் தெரியுமா? யாரிடம் நீ இந்த சத்தியத்தை செய்கிறாய் என்ற அறிவு உனக்கு உள்ளதா? கடவுளுக்கு அளித்த வாக்குறுதியை நீ மீறினால், உனது வாழ்க்கை சீரழிந்துவிடும். கடவுள் எல்லாவற்றையும் அறிவார், உனக்குப் புரிகிறதா?**

"ஆமாம், மஹாராஜ், எனக்குப் புரிகிறது. நான் முன்பு செய்ததை இனிமேல் செய்ய மாட்டேன். எனது வாக்குறுதியை ஒருபோதும் மீற மாட்டேன்." அவ்வேளையில், பாபா அவரது கையை நீட்டி சைகையால் தெரிவித்தார், "**உன்னுடைய வாக்குறுதியை எனக்கு வழங்கு!**" உடனடியாக சத்தியமாங் முன்வந்து பாபாவின் உள்ளங்கையை அவருடைய உள்ளங்கையால் தொட்டார். அப்போது பாபா எச்சரித்தார், "**நீ எனக்கு வழங்கிய வார்த்தையை மீறினால், நீ முற்றிலும் முடங்கிப் போவாய். இதை**

**நினைவில்கொள்**.” பாபா உடனே, அவனது குடும்பத்தைப் பரமாரிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, சத்தியமாங்கை வாரம் ஒரு முறை மெஹராபாத்திற்கு வருமாறு கூறினார். அந்நாளிலிருந்து அஹமதுநகர் ஜில்லாவில் கொள்ளை அச்சுறுத்தல் முற்றிலுமாக மறைந்தது மட்டுமின்றி, இந்த அதிசய நிகழ்வு, மக்களைப் பெரிதும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பாபாவின் தலையீட்டில் எல்லோரும் வியப்படைந்தனர். காவல்துறை அதிகாரிகளிடமிருந்து இதுவரை வெற்றிகரமாகத் தப்பி, தலைமறைவாக இருந்த கொடூர கொள்ளைக்காரன் சத்தியமாங், இவ்வளவு எளிதாக ஓர் ஆன்மீக குருநாதரிடம் சரணடைவது எவரும் இதுவரையிலும் கேட்டிராத ஒன்று.

சத்தியமாங், பாபாவிற்கு அளித்த வாக்குறுதியைக் காத்து, சிறிது காலம் நாணயமாக, நம்பிக்கைக்கு உரியவராக இருந்தார். ஆனால், மறுபடியும் திருடிய கைகளில் அரிப்புத் தோன்றவே, ஒரு நாள் இரவில் திருடும் நோக்கத்தில் ரகசியமாக ஒரு வீட்டில் நுழைந்து, ஆபரணங்களில் கைகளை வைத்ததும், மெஹர் பாபா அவர் முன் தோற்றமளித்தார். பயத்தில் நடுங்கிப்போன சத்தியமாங்கிற்கு, பாபா கூறியது நினைவுக்கு வந்தது, ‘**கடவுள் எங்கும் இருக்கிறார். எல்லாவற்றையும் பார்க்கிறார். எதுவுமே அவர் கண்களிலிருந்து மறைக்கப்படுவதில்லை**.’

திடீரென அங்கே இருள் நிரம்பி கண்கள் குருடானதுபோல் ஓர் உணர்வு. சத்தியமாங் வெளிறிப்போய் கண்களை மூடிக்கொண்டார். சிறிது நேரத்தில் கண்களைத் திறந்து பார்த்தபோது பாபா, அங்கிருந்து மறைந்து விட்டார். திருடிய ஆபரணங்களை அங்கே விட்டுவிட்டு மெஹராபாத்தை நோக்கி விரைந்தார். மெஹர் பாபாவைக் கண்டதும், கண்களில் நீர்வழிய, நடந்த உண்மையை ஒப்புக்கொண்டார், “மஹாராஜ், தயவுசெய்து இந்த ஒரு முறையும் என்னை மன்னித்துவிடுங்கள். நான் என்னுடைய வாக்குறுதியைக் காப்பாற்ற முடியவில்லை.” ஒன்றும் அறியாதவர் போல பாபா, “**நீ என்ன சொல்கிறாய்? என்னதான் நடந்தது?**” என்று கேட்டார். சத்தியமாங் கதறிப் புலம்பினார், “அனைத்தும் உங்களுக்குத் தெரியும். என்னை மன்னித்து விடுங்கள்” என்று கூறி பாபாவின் பாதங்களில் விழுந்தார்.

செய்த தவறுக்கு உண்மையாக வருந்தியதால் அவரை பாபா மன்னித்து எச்சரிக்கை செய்தார், “**மறுபடியும் இதைச் செய்யாதே. பரமாத்மாவிற்கு அனைத்தும் தெரியும், மேலும் அனைத்தையும் அவர் பார்க்கிறார்**.”

அதற்குப் பிறகு, சத்தியமாங் ஒரு முறை கூட இதுபோன்ற குற்றம் அல்லது திருட்டில் ஈடுபடவில்லை; மாறாக, அவருடைய உதவியால் காவல்துறை அதிகாரிகள் வேறு குற்றவாளிகளையும் கண்டுபிடிக்க முடிந்தது.

சத்திய மாங் ஒவ்வொரு வியாழக்கிழமையும் மெஹராபாத்திற்குச் சென்று, அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளில் பங்கெடுக்கும் பழக்கத்தைக் கடைப்பிடித்தார். பாபா மீது அவர் கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கை அவரை முற்றிலும் மாற்றிவிட்டது. பாபாவின் ஒரு வார்த்தையே போதும், தனதுயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருந்தார். ஒரு முறை பாபாவிற்கு சேவை செய்யும் வாய்ப்பை அளிக்குமாறு மனமுவந்து வேண்டவே பாபா,

**“வேளை வரும்போது எனக்கு சேவை செய்யும் வாய்ப்பை நிச்சயமாக வழங்குவேன்”** என்று பதிலளித்தார்.

ஜூன் 21 இஸ்லாமிய பக்ரீத் விடுமுறை தினத்தன்று, இப்ராஹிம் அவரது மகன் ஈஸாக்கை இறைவனுக்கு உயிர்பலி கொடுத்தது, நினைவு நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது. மெஹராபாத்திலும் அதைக் கடைப்பிடிக்கும் விதத்தில், பாபாவின் இரண்டு முஸ்லிம் மண்டலி கரீம், பார்சோப் இருவரையும், இருக்கையிலிருந்து எழச்செய்து, அந்நாளின் முக்கியத்துவத்தைப் பற்றி இயன்றவரை விளக்குமாறு பாபா கூறினார். அந்த நாளில் ஆடுகளை பலிதானம் செய்யும் இஸ்லாமிய வழக்கத்தைப் பற்றி பாபா குறிப்பிடும்போது, **“தீர்க்கதரிசி முஹமது, அந்நாளில் ஆடு ஒன்றைக் கொன்றதால், இஸ்லாமியர்களும் அதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். அவர்கள் ஆடுகளை அல்ல, அவர்களின் மனங்களைக் கொல்ல முயற்சிக்க வேண்டும்! பாதுகாப்பற்ற விலங்குகளைக் கொல்வதில் என்ன பயன் இருக்கிறது?”**

பாபா மேலும் கூறினார், **“நான் மண்டலியிடம் தலையில் தொப்பி அணியாமல் வெயிலில் செல்லக்கூடாது என்று கட்டளையிட்டால், நாளடைவில் அதை, மத நடைமுறையாகக் கருதி, வெயிலில் தொப்பி அணிவதை வழக்கமாகக் கடைப்பிடிப்பர்.”**

ஒரு முறை, மெஹர் பாபா அவரது நகைச்சுவை உணர்வை பிரதிபலிக்கும் விதத்தில், சத்குருக்களைக் குறித்து இவ்வாறு விளக்கமளித்தார்:

**அஜோபா மிகவும் வயதானவர். அவருக்குக் குடும்பம், குழந்தைகள் உள்ள நிலையில், அவருடைய மனப்படிவங்களை இந்த வாழ்க்கையில் செலவழித்து வருகிறார். அவர் அடுத்த பிறவியில் ஒரு பெண்ணாகப் பிறப்பதாக வைத்துக் கொள்ளுங்கள்.** (கடவுள் சித்தம்) **நான், இப்போது இந்த வயதான மனிதரைப் பார்க்கிறேன்; அதேவேளை, அடுத்த பிறவியில் அவர் எப்படி இருப்பார் என்பதையும் பார்க்க முடிகிறது - அது என்னில் சிரிப்பை வரவழைக்கிறது! அந்த நகைச்சுவையான நிகழ்ச்சியை எண்ணி நான் மகிழ்ச்சியடைவது நியாயம்தானே? நான் காணும் அனைத்தையும் ஒரு கனவாகக் காண்கிறேன்! இருந்தாலும், எல்லாவற்றையும் எண்ணி நான் கவலைப் படுகிறேன், ஏனெனில், பிற அனைவரையும் அதை ஒரு கனவாகப் பார்க்க வைப்பது எனது பணியாகும்.**

**உபாஸனி மஹாராஜ், அவருடைய முந்தைய பிறவியில் ஒரு பெண்ணாகப் பிறந்தார்; இனிமேல், அவர் ஒருபோதும்** (இறை நிலையை அடைந்ததால்) **பிறவி எடுக்கமாட்டார். மனிதப் பிறவியுடன் அதிகாரம் ஓர் அங்கமாக இருப்பதால், வழக்கமாக, மனிதனாக வாழும்போது இறை நிலையை அடைகிறான். ஆனால், ஆண் பிறவியுடன் அவனுக்கு ஒரு சிறப்பு அதிகாரமும் உள்ளது. ஒரு சத்குருவின் வட்டத்தில் 12 ஆண் உறுப்பினர்களும் 2 பெண் இணை உறுப்பினர்களும் உள்ளனர். இந்த 14**

நபர்களில் ஆன்மீகத் தாயார் மற்றும் சகோதரியாக இருக்கும் 2 பெண் இணை உறுப்பினர்களைத் தவிர, இதர 12 உறுப்பினர்களும் ஆண்களே ஆவர்.

பாபாஜான் ஓர் இறை ஞானி, இக்காலகட்டத்தில் வாழும் 5 சத்குருக்களில் ஒருவர். இறை நிலையை அடைந்த 56 நபர்களில், ஒருவர் பெண் சத்குருவாகவும், மற்றொருவர் இறை நிலையை அடைந்த நிலையிலும் (ஒரு ஜீவன்முக்தா அல்லது மஜ்ஜூப்பாக) இருப்பார். அந்தப் பெண்மணி இப்போது திபத் நாட்டில் உள்ளார். அவருடன் இருக்கும் சீடர்களின் கூட்டம் வழக்கமாக மலைகளில் வாழ்வதால் குருநாதரை சந்திப்பது மிக மிக அரிது. பூமியில் வாழும் இறை நிலையை அடைந்த ஆன்மாக்கள் எப்போதுமே 56ஆக இருக்கும், ஒருபோதும் அது மாறாது. (அவதார காலகட்டத்தில் கடவுள் மனிதனாக உருவெடுக்கும் வேளையில் மட்டுமே அது மாறும்).

1926, ஜூன் 22ஆம் நாள் பாபா இதை வெளிப்படுத்தினார்:

ஒரு சத்குரு சமுத்திரம் போன்றவர்; ஒரு வரம்பற்ற அகண்ட நீர் நிலை. மாயையால் உருவாக்கப்படும் அனைத்து ஆசைகளும் உங்கள் மனதை விட்டு விலகும்போது, கடல் நீர் எல்லையில்லா அறிவு, சக்தி, ஆனந்தம் எனும் அகண்ட நீர் நிலையைச் சென்றடையும் வழிகளைக் கண்டுகொள்ளும். ஜீவன்முக்தாக்கள், மஜ்ஜூப் மற்றும் இறை ஞானிகள், இறை நிலையின் அகண்ட நீர் நிலையைச் சென்றடையும் குழாய்களாகத் திகழ்கின்றனர். அவர்கள் சமுத்திரத்தின் நீரை, தகுதி வாய்ந்தவர்களுக்கும், அதற்கென ஆயத்தமாக இருக்கும் அனைவருக்கும் அள்ளி வழங்குகின்றனர். அகண்ட நீர் நிலையின் உவமையைத் தொடர்ந்து பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:

நீர், வாயு நிலையிலிருந்து ஆவியாகும் வேளையில் மேகங்கள் உருவாகும். மேகமாக இருக்கும் இந்த ஆவியை, ரயில் என்ஜின்கள் அல்லது நீராவி மூலம் இயக்கப்படும் வேறு ஏதேனும் வாகனத்திற்காக உபயோகிக்க முடியாது. அதற்காக, கடல், ஆறு அல்லது வேறு ஏதேனும் நீர் வளத்திலிருந்து நீரை எடுத்து, எஞ்சின் நீர் கொள்கலனை நிரப்பி, ஆவியாக மாற்றும் தருவாயில், எஞ்சினை இயக்க முடியும். ஆவி உறைந்து மேகமாக உருவானதை மஜ்ஜூப்களுடன் ஒப்பிடலாம்; அவ்வாறு உருவான ஆவியை சத்குருக்கள் அவர்களின் உலகளாவிய பணிக்காகப் பயன்படுத்துவர். மேலும், நீராக இருக்கும் உங்களை, பக்தர்களைக் (பிரியமானவர்கள்) கொதிக்க வைத்து, ஆவியாக மாற்ற வேண்டும். வேறு விதத்தில் கூறப்போனால், அதன் முக்கிய அம்சமான சாரத்தின் உருவை மாற்ற வேண்டும். அதற்கு மாறாக, பனிக்கட்டி மற்றும் வெண்பனியாக இருக்கும் உலக மக்கள் ஆன்மீகத்தில் நாட்டமில்லாமல் பனிபோல் உறைந்திருப்பர்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், இறை நிலையை அடைந்த மஜ்ஜூப்புக்களைப் பற்றி விளக்கும்போது மெஹர் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**மஜ்ஜூப்கள் தமது பரவசத்தில் உள்வாங்கப்பட்டு உலகிற்கு, பைத்தியம் போலத் தோற்றமளிக்கின்றனர். அவர்கள் ஓட்டுநர் இல்லாமல் குதித்து ஓடும் குதிரை வண்டிகளைப் போன்றவர்கள்! அந்தக் குதிரை வண்டிதான் மஜ்ஜூப்; குதிரைகள், கடைசி துளிகளாக மனதில் உறைந்திருக்கும் பௌதீக, சூட்சும, ஆழ்மனப்படிவங்கள்; மேலும் ஓட்டுநர், அறிவுத்திறனும், அகந்தையுமாக திகழ்பவர். ஒரு மஜ்ஜூப் மனப்படிவங்கள் அடங்கிய அகங்கார மனம் இல்லாதவராக இருப்பதால் அவருடைய 'வாகனம், ஓட்டுநர் இல்லாமல்' இருக்கும்.**

சில தினங்களாக, 'தியோஸொஃபிகல் ஸொஸைட்டி'யின் (THEOSOPHICAL SOCIETY) தலைவர் அன்னி பெஸன்ட் (ANNIE BESANT) மற்றும் 'புதிய உலக ஆசிரியர்' என்று அவரால் ஊக்குவிக்கப்பட்ட கிருஷ்ணமூர்த்தி (KRISHNAMURTI) இருவரையும் பற்றிய பல விவாதங்கள் எழுந்தன. பாபாவின் தரிசனத்திற்காக அங்கு வந்த, அந்த அமைப்பைச் சார்ந்த ஒரு சிலரிடம் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"எந்த நேரமும் சத்தியத்தைத் தேடிக் கண்டு கொள்ளுங்கள் - உண்மைப்பொருளாகிய சத்தியம் - சாதி, சமய வேறுபாடு, பாரபட்சம் எதுவும் இல்லாமல் எங்கிருந்தாலும் அதைக் கண்டு கொள்ளுங்கள். உங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, மாயையைத் துறந்து, சர்வவல்லவரைக் காணும் ஏக்கத்தை உருவாக்குங்கள்."**

தியோஸொஃபிஸ்ட் அமைப்பைச் சார்ந்தவர்கள் திரும்பிச் சென்ற பிறகு பாபா 'தியோஸொஃபி'யை பற்றி கருத்து தெரிவித்தார்:

**எனது பார்வை யார் மீது விழுகிறதோ அவர்களை உலகம் தலைவணங்கும் காலம் வரும்.**

**அவர்கள் இங்கு** (தரிசனத்திற்காக) **வந்ததால், அது அவர்களுக்கு நன்மை பயக்கும். ஆனால் கிருஷ்ணமூர்த்தி ஒரு 'புதிய உலக ஆசிரியரா'? இறைவனே பார்த்துக் கொள்ளட்டும்!** (கொல்கத்தாவில் வாழ்ந்த) **ராமகிருஷ்ணாவை கிருஷ்ணமூர்த்தியுடன் ஒப்பிடுங்கள். கிருஷ்ணமூர்த்தி, அனைத்து கம்பீரம், மகிமை, ஆடம்பரம் மற்றும் அதிகாரத்தில் வாழ்ந்து, பிரபுத்துவ, நாகரீகமான வட்டங்களில் இங்கிலாந்து நகரை வலம் வந்து, டென்னிஸ், கோல்ஃப் விளையாடி, மிகவும் வசதியான வாழ்க்கையை நடத்துகிறார். உண்மைப்பொருளாகிய சத்தியத்தின் சிறிதளவு அறிவும் அவருக்குக் கிடையாது - எள்ளளவு ஆர்வம் கூட இல்லை.**

**மேலே கூறியது போலவே இந்தக் கவலையற்ற, பகட்டான தியோஸொஃபிஸ்ட்களும் இருக்கிறார்கள். அவர்களின் மகத்துவம், முகவுரை எழுதுவதில் மட்டுமே - தளங்கள், சக்திகள், நிறங்கள், சமுதாயம் சமயம் போன்றவற்றைப் பற்றி ஆரவார வார்த்தைகளில் எழுதுவதும், சொற்பொழிவாற்றுவதும் - அதேவேளையில் சத்தியத்தின் ஒரு சிறிய அம்சத்தைப் பற்றிய மேலோட்டமான அறிவில், அவர்கள் நடந்து கொள்வதிலும், தங்களின் மகத்துவத்தைப் பிறரை நம்ப வைப்பதிலும்**

**கருத்தாக இருப்பார்களே தவிர, வேறு எதிலுமில்லை. சத்தியம் (இறைவன்) இதையெல்லாம் தாண்டி நிற்கும் ஒன்று!**

(பாபா, ஹஃபீஸின் ஓர் ஈரடிக்கவிதையை எடுத்துக்காட்டி விளக்கினார்)

**நீங்கள் இறை உணர்வை அடைய விரும்புவதானால், உங்கள் ஒரே வாழ்வை, எந்தத் தயக்கமுமின்றி, எந்நேரத்திலும் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும்! அப்போதுதான் நீங்கள் தகுதியுள்ளவராகக் கருதப்பட்டு, சத்தியத்தின் வாயிலைச் சென்றடைய முடியும்.**

அந்த நேரத்தில், அவர்களின் பேச்சின் தலைப்பு 'அமெரிக்கன் கிறிஸ்தவ சபை' (AMERICAN CHRISTIAN MISSION) மற்றும் 'இரட்சண்ய சேனை'யாக (SALVATION ARMY) இருந்தது - இவ்விரண்டு நிறுவனங்களும் மக்களை கிறிஸ்தவராக மதமாற்றம் செய்யும் பணியில் இயன்றவரை ஈடுபட்டு, இரட்சிப்பின் ஒரே உறுதியான பாதையாக அதை அறிவித்தனர். பாபா இவ்வாறு வினவினார், **"இதெல்லாம் எதற்கு? இதர மதங்களின் மீதுள்ள நம்பிக்கையைக் கைவிட்டு, மதம் மாறுவதைத் தூண்டுவானேன்? மதம் என்பது சத்தியத்தின் உண்மையா அல்லது அதை அடையும் வழியா?"**

பாபா அப்போது அதைப் பற்றித் தெளிவுபட எடுத்துரைத்தார்:

**கடவுளுக்கு மதத்துடன் ஆகவேண்டியது எதுவுமில்லை. இது ஒரு மதத்தின் வரையறுக்கப்பட்ட, அப்பட்டமான கட்டளைகள் மற்றும் கோட்பாடுகளுக்கு மிக மிக அப்பாற்பட்டது. மாயையை, குறிப்பாக காமம், கோபம், பேராசை இவற்றைத் துறந்து விடுங்கள். இதுவே சத்தியத்தின் வெளிப்படையான, எளிதான தேவையாகும். எவராக இருந்தாலும் இறைவனை விரும்பி அடைய முடியும். அங்கே சாதி, சமய வேறுபாடுகள் அல்லது பாரபட்சங்கள் எதுவுமில்லை.**

**இஸ்லாமிய மதத்தின் வழியாக மட்டுமே இறை நிலையை அடைய முடியும் என்று இஸ்லாமியர்கள் கூறுகிறார்கள்; மேலும், அவர்கள் ஷரியத்தின்** (இஸ்லாமிய சட்ட முறைகள்) **வேடிக்கையான வாதங்களை முன்வைத்து, விருத்தசேதனம்** (ஆண்களின் பிறப்புறுப்பின் நுனித்தோல் அகற்றுதல்) **போன்ற செயல்முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். எவ்வளவு அபத்தமானது! இஸ்லாமியர்கள் ஏன் ஆண் விருத்தசேதனத்தைக் கடைப்பிடிக்கிறார்கள் என்று உங்களில் எவரேனும் அறிவீர்களா? அவர்களின் மஹா தீர்க்கதரிசி முஹமது வலியுறுத்திய தெய்வீக கோட்பாட்டிற்கிணங்க "மனம், மாயை மற்றும் மனப்படிவங்களை வெட்டுவது,"** அதாவது, **உலக மாயையில் எப்போதும் அலைபாய்ந்து கொண்டிருக்கும் அவர்களின் மனதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது!**

**தீர்க்கதரிசி முஹமது மக்களிடம் இயன்றவரை எதிலும் பற்றில்லாமலும், மாயையின் பிடியிலிருந்து விலகியிருக்கவும் கூறினார். ஆனால் அந்தத் தெய்வீக கோட்பாட்டின் உள் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாமல், சில சிறந்த இறையியலாளர்கள் 'முன் தோலினை**

வெட்டியெடுப்பது மற்றும் அப்படி, இப்படி' எனக் கண்டுபிடித்துப் பிரசங்கம் செய்தனர். மக்களும் இதை முஹமது நபி வழங்கியதாகக் கருதி, இந்தக் கோட்பாடுகளைக் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொண்டு கடைப்பிடித்தனர். ஆனால் இது, முஹமது நபி அவர்கள் கற்பித்த, உண்மையான, அடிப்படை கோட்பாட்டிலிருந்து எவ்வளவு மாறுபட்டது!

ஒவ்வொரு மதமும் இவ்வண்ணம் தவறாகக் கடைப்பிடிப்பது உண்மையே - பார்சிகளும் அவர்கள் அணியும் கஸ்தியும் (பூணூல்), கிறிஸ்தவர்களும் அவர்களின் ஞானஸ்நானமும். அதுபோலவே, கிறிஸ்தவ தத்துவத்தைத் தழுவிய இக்கால மதகுருக்கள் கூறுவதன் அடிப்படையில், கிறிஸ்துவை நம்பி ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் மேற்கொள்வதன் மூலமே ஒருவர் இரட்சிக்கப்படுவார் என்பது. மதத்தின் புனித பெயரில் இதுபோன்ற நடைமுறைகளைக் கையாளுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

பிறரிடையே அவர்கள் மதத்தின்பால் சந்தேகத்தை உருவாக்குவது பாவம் இல்லையெனினும், நிச்சயமாக அதை மிகப்பெரிய பலவீனம் அல்லது கோழைத்தனம் என்று கூறலாம். ஒரு குறிப்பிட்ட மதத்தை நம்புபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதாலும், அவர்களின் சமய நம்பிக்கையை ஆயிர, லட்சக்கணக்கான மக்கள் பின்பற்றுகிறார்கள் என்பதை உலகத்திற்குப் பெருமையாக எடுத்துக் கூறுவதிலும் எவ்வித பயனுமில்லை. ஒரு மதத்தின் பெருமையை அதை நம்பி, பின்பற்றுபவர்களின் எண்ணிக்கையை வைத்து எடைபோடுவது முறையாகுமா?

இந்தியாவில் வாழும் லட்சக்கணக்கான ஏழை, எளிய, ஆதரவற்ற, கல்வியறிவற்ற மக்களுக்கு சிறிதளவு நல்ல உணவு, உடை மற்றும் பணம் கொடுத்து தூண்டும்போது, அவர்கள் எந்த மதத்தையும் ஏற்றுக் கொண்டு, அதைத் தழுவுவதற்குத் தயாராக இருக்கிறார்கள்! மேலும், அதைவிட ஏதேனும் சிறப்பாக இன்னுமொரு சமய நம்பிக்கையாளர் செய்வதாயின், மறுபடியும் மதம் தாவி விடுவார்கள்! இதில் என்ன பெருமை இருக்கிறது? ஒன்றுமில்லை!

தொடர்ந்து, மெஹர் பாபா அறிவுறுத்தினார்:

ஆகையால் நான் கூறுவது: உங்கள் மனதைக் கட்டுப்படுத்துங்கள்; களங்கமற்ற, தூய்மையான, நல்லொழுக்கமுள்ள வாழ்க்கையை வாழுங்கள்; கீழ்த்தரமான ஆசைகளை அகற்றுங்கள்; இறை நிலையை அடைந்த ஒருவரைப் பின்பற்றுங்கள்; அப்போது நீங்கள் காப்பாற்றப்படுவீர்கள். இந்த அர்த்தத்தில் பின்பற்றுவது என்பது உங்கள் சொந்த மதத்தை விட்டுக்கொடுப்பது ஆகாது. எனவே மனதைத் துறக்க வேண்டும்!

நீங்கள் பசும்புல்லில் தீ வைக்க முயற்சித்தால், அது எரியாது. ஆனால் வைக்கோலுக்கு ஒரே ஒரு தீக்குச்சி போதுமானது, அது உடனடியாக எரிந்து சாம்பலாகிவிடும். வைக்கோல் போர் என்பது

மனப்படிவங்களின் குவியலைக் குறிக்கும். பசும்புல்லை உலரச் செய்ய நெருப்பின் அருகில் வைக்க வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால், மனப்படிவங்களைக் களைவதற்கு, எந்நேரமும் இறைஞானம் ஒளிர்விடும் ஒரு குருநாதரின் சகவாசத்தில் இருக்கவேண்டும். அவருடைய சகவாசத்திலிருக்கும் தொடர்பால், உருவாகும் மனப்படிவங்கள் வறண்டுவிடும். இறுதியில், குருநாதர் தமது அருளொளிச் சுடரின் நெருப்பை வளரவிட்டு, ஒருவரின் அனைத்து மனப்படிவங்களையும் வேரோடு அகற்றிவிடுகிறார். ஒரு சத்குருவின் தொடர்பில் இருக்கும்போது, ஆழமாக வேரூன்றி, வேகமாக வளரும் காமம் மற்றும் கோபத்தால் உருவாகும் சிவந்த மனப்படிவங்களைப் பற்றிக் கூட நாம் கவலைப்பட வேண்டிய தேவையில்லை.

என்ன ஒரு கலியுக காலத்தில் நாம் வாழ்கிறோம்! மதவெறியில் காட்டுமிராண்டித்தனமான இரத்தக்களரி ஒருபுறம் இருக்க, கிருஷ்ணமூர்த்தி போன்ற 'திணிக்கப்பட்ட அவதாரமும்' அது சம்பந்தப்பட்ட தவறான எண்ணங்களும் மறுபுறம் இருக்கும்! மதத்தின் பெயரால் செய்யப்படும் கொடுமைகளைப் பாருங்கள். மதத்தின் பெயரில், அறியாமையால் இந்து, முஸ்லிம் இடையே, குழந்தைத்தனமான, அற்பமான காரணங்களுக்காக சமீபத்தில் டில்லியில் இழைக்கப்பட்ட கொடூரமான சம்பவங்களைப் பாருங்கள். அதே வேளையில் பல போலி தீர்க்கதரிசிகள் தோன்றி, கபடநாடகம் போடுவதும் கட்டுக்கடங்காமல் இருக்கும்.

இந்நாட்களில், மக்கள் விரும்புவது என்னவெனில், மதக்கோட்பாடுகள் அவரவர் ரசனைகளுக்கும், வாழ்வின் கருத்துகளுக்கும் பொருத்தமானதாக அமையவேண்டும்; மேலும், அதற்கேற்ப கலைநயமிக்க தலைவர்களின் பேச்சுத்திறனால் ஆயிரக்கணக்கான மக்கள் அவர்களைப் பின்பற்றும் அதே வேளையில், உண்மையான சேவகர்கள், மேலும் சத்தியத்தின் அடிப்படையிலான மதத்தை நம்புகிறவர்கள், எவ்வளவுதான் உன்னதமான கருத்துக்களை எடுத்துரைத்தாலும், மக்களை, உண்மையின் திசையை நோக்கி திரும்பச் செய்வது மிகவும் கடினம். இதுவே, நாம் வாழும் 20ஆம் நூற்றாண்டு காலம், அங்கே அனுதினம் கண்டுபிடிக்கும் விஞ்ஞான படைப்புகளும், வெறுமையான மனித நாகரீகமும் தலையெடுத்து ஆடுகின்றன.

பாபா, அரோபிந்தோ கோஷைப் பற்றிக் குறிப்பிடும் வேளையில், **"அவர் ஒரு படித்து, பட்டம்பெற்ற, பல நூல்களை நன்கு கற்றறிந்த, ஆன்மீகத் தளங்களில் பயணிக்கும் ஒரு சாது"** என்று கூறினார்.

1926 ஜூன் 28 அன்று மெஹர் பாபா, திருமணம் செய்து கொள்வதைப் பற்றிய கருத்துரையை வழங்கினார்:

**உண்மையில், ஒருவர் இறை நிலையை உணர அல்லது ஒரு சத்குருவிடம் சரணடைய அல்லது ஒரு குருநாதரின் பிரத்தியேக**

**கட்டளைப்படித் திருமணம் செய்துகொள்ள போதுமான அதிர்ஷ்டம் இல்லையேல், அப்போது** (சாதாரண முறைப்படி நடக்கும்) **திருமணம் அவருடைய ஆன்மீக வழியில் மிகப்பெரிய தடையாக அமையும், அதேவேளையில் திருமணத்திற்கு வெளியே உள்ள** (உடல்) **உறவை என்னென்பது?**

**துறவறம் மாயையைக் குறிக்கும், ஒரு சத்குருவின் உத்தரவின்றி எதையும் செய்யாமலிருப்பது. ஒரு பெண்மணியை மனைவியாக அடையப்பெற்ற ஒருவர் எப்போதுமே முழு நிறைவடைவதில்லை, என்றாலும் குருநாதர்களும், சத்குருக்களும் கூட திருமணம் செய்து கொண்டனர். ஆனால் சாதாரண மனிதனுக்குத் திருமணம் மிகப்பெரிய தடையாக அமைகிறது.**

**இருப்பினும்** (உபாஸனி மஹாராஜைப்போல திருமணத்திற்குப் பின்னர் இறை நிலையை அடையும்) **இந்த அதிர்ஷ்டம் கூட முற்பிறவியில் செய்த நற்பலன்களின் விளைவாகும். மஹாராஜ் திருமணம் செய்து கொள்ளவில்லை எனில், மறுபடியும் பிறவி எடுக்க நேர்ந்திருக்கும், ஏனெனில் ஒரு சத்குரு இறை நிலையை அடைவதற்கு முன்னர் அனைத்து மனப்படிவங்களிலிருந்தும் விடுபட்டிருக்க வேண்டும்.**

அதற்குப் பிறகு, மெஹர் பாபா வட்டத்து சீடர்களுக்குத் தவிர்க்க முடியாத இறை நிலையை வழங்குவது குறித்து விளக்கியதாவது:

**நான் விரும்பியிருந்தால் எனது வட்டத்து சீடர்களுக்கு இறை நிலையை உடனடியாக வழங்கியிருக்க முடியும். ஆனால், திடீரென அடையப்பெறும் இந்த அனுபவத்தால், உலகில் அவர்களின் கடமைகளைச் செய்ய முடிவதில்லை. அப்படியானால் யார் இவற்றைச் செய்வார்கள்? உனது கைக்கு மட்டும் இறை நிலையை அளித்து, புத்துணர்வைத் தருவதாக இருந்தால், அந்தக் கை முன்புபோலச் செயல்படுவதை நிறுத்திவிடும். கையின் வேலையை வேறு எது செய்யும்? அதனால்தான், சத்குருக்கள் எப்பொழுதும் சீடர்களை, அவர்களுக்கு உள்ளளவில் நிகழ்வது எதுவும் தெரியாமல், படிப்படியாக இறை நிலையை நோக்கி வழிநடத்துகின்றனர்.**

பாபா உரையாற்றும் வேளையில் ஒருவர், 'உலகில் எப்போதும் 56 இறை நிலையை அடைந்த ஆன்மாக்கள் இருப்பதன் காரணம் என்ன?' என வினவ, பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**56 எனும் எண் பூரணத்துவத்தைக் குறிக்கும். ஆன்மீக நடைமுறை செயல்பாடுகளை நிர்வகிக்க, இறைஞானி ஒருவரால் அனைத்து உலக விவகாரங்களையும் கையாள முடியாததால், இந்த எண், நிறைவானதாகத் தோற்றமளிக்கும். அவருக்கு உதவி தேவை, மேலும் அந்த உதவியாளர்களின் எண்ணிக்கை எப்போதும் 56 ஆகவே இருக்கும்.**

**உதாரணமாக, மதுபானக்கடை நடத்துனருக்கு பல உதவியாளர்கள் தேவை - ஒருவர் மதுவைத் தயாரிக்க, இன்னொருவர் மதுவை**

விநியோகிக்க, மற்றுமொருவர் பணம் வசூலிக்க, இப்படிப் பல பணிகள். ஆனால், கடையே இல்லையென்றால், உதவியாளர்கள் எதற்கு? அதுபோல, பிரபஞ்சமே இல்லாதபோது - இறை நிலையை அடைந்த மஜ்ஜூப்களுக்கு உலகம் மற்றும் அதன் விவகாரங்களைப் பற்றிய உணர்வு எதுவும் இல்லாத வேளையில் -- மஜ்ஜூப்களுக்கு வேலை எதுவும் இல்லை.

மண்டலியின் கேள்விக்கு இவ்வாறு பதிலளித்தார்:

பிரபஞ்சத்தை பராமரிக்கவும், அதன் விவகாரங்களை செவ்வனே செய்து முடிக்கவும் 56 இறையுணர்வை அடைந்த ஆத்மாக்கள் தேவைப்படுகிறார்கள். அந்த எண்ணிக்கை 56ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது, ஏனெனில், அதில் ஒருவர் குறைந்தாலும் அனைத்து பணிகளையும், பலவிதமான பொறுப்புகளையும் செய்ய இயலாது. ஒருவர் ஒரு கண்ணை இழந்ததாக வைத்துக் கொள்வோம். அவருடைய மற்றொரு கண்ணால் பார்க்க முடிந்தாலும், சிரமப்பட்டுதான் பார்க்க முடியும். அதனால்தான் சீராகப் பார்க்க ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு கண்கள் உள்ளன.

அதுபோலவே, இரண்டு காதுகள், ஒரு மூக்கு, இரண்டு கைகள், இரண்டு கால்கள் உள்ளன. சுருக்கமாகச் சொன்னால் இயற்கையில் அனைத்தும் - அனுபவம் மிக்க அல்லது இறையுணர்வை அடைந்த ஞானிகளால் வகுக்கப்பட்ட விதிகள், ஒழுங்கு முறைகள் - கொள்கைகளின்படியே நடைபெறுகின்றன, ஏடாகூடமாக அல்ல.

இந்த விளக்கங்கள் அனைத்தையும் நீங்கள் அறிவுபூர்வமாகப் புரிந்துகொள்ள முடியாது. இறை நிலையின் அனுபவத்தை அடைவது வரை இவ்விதமாகப் புரிந்துகொள்வது பெரும்பாலும் பயனற்றது. உங்கள் அறிவுத் திறனால் எவ்வளவுதான் முயன்றாலும், இறையுணர்வின் சலனம் உங்களைத் தீண்டும் வரை, இறுதியில் அனைத்துமே பூனைகளும், நாய்களும் சேர்ந்து எழும்பும் கூச்சல் ஒலி போலாகும்.

ஒரு சத்குருவின் இறை அறிவு மற்றும் அனுபவத்தை அறிவாற்றலால் புரிந்துகொள்ள முடியாது ஏனெனில் இவை அனைத்தும் அறிவுக்கு அப்பாற்பட்டது. ஹஃபீஸ் கூறுவது போல்:

இறைஞானத்தை அறிவுத்திறன் எனும்
முடிச்சால் அடைய முடியாது;
முடிச்சை அவிழ்க்கும்போது மட்டுமே
அதை அடைய முடியும்.



மெஹர் பாபாவின் பிறந்தநாள், **1926**



கோடு, மனைவி நாஜா, மகன் தீன்ஷா



மேசை அறை, மெஹராபாத்



மெஹர் பாபாவுடன்
நவல் தலாட்டி (இடம்)

# மௌன மொழிகள் - பாகம் இரண்டு

**(Silent Words)**

1926, ஜூன் 30ஆம் நாள், மாயையைப் பற்றி மெஹர் பாபா மண்டலிக்கு அளித்த விளக்கம்:

**கடவுள், ஈஷ்வரன் எனும் நிலையில், பிரபஞ்சத்தின் விவகாரங்களை வழிநடத்த, மாயை மற்றும் அதன் பண்புகளைப் பிரயோகம் செய்யும் அதேவேளையில், ஈஷ்வரனுக்கு மிகவும் அப்பாற்பட்ட பரமாத்மா, அனைத்து சக்திகளின் மூலப்பொருளாக அமைந்து, எங்கும் வியாபித்திருக்கும் பரிபூரண சக்தியை இறை ஞானத்தின் மூலமாகப் பயன்படுத்துகிறார். சத்குரு பிறரை மாயையிலிருந்து விடுவிக்க மாயையைப் பயன்படுத்துகிறார்.**

**உதாரணமாக, அர்ஜுனை** (மண்டலியில் ஒருவர்) **பரமாத்மாவாகவும், அவருடைய பிரம்பை கடவுளாகவும், மேலும், ஏழு நிற சரத்தை** (மாயை) **பிரம்பில் சுற்றி வைத்திருப்பதாகவும் எடுத்துக்கொள்வோம். அந்த சரமானது பிரம்பை** (கடவுளாகிய ஈஸ்வரனை) **மட்டும் தொட்டுக்கொண்டு இருக்குமே தவிர, தனிப்பட்டு நிற்கும் அர்ஜூனை** (பரமாத்மாவை) **அல்ல!**

மற்றுமொரு எடுத்துக்காட்டாக அங்கல் பிளீடரின் கீர்த்தனையிலிருந்து ஒன்றை மேற்கோள் காட்டி பாபா தொடர்ந்து கூறியதாவது:

**நீங்கள் செல்லும் பாதையில், ஒரு கயிற்றை, தவறாக பாம்பு என நினைத்ததாக வைத்துக் கொள்வோம். இந்தத் தவறானது மாயைக்கு உருகொடுக்கும். ஆனால், நீங்கள் பார்த்த அந்தக் கயிறு, சாதாரண கயிறுதான், வேறு எதுவும் அல்ல என்பதைத் தெரிந்துகொள்ளும் போது, மாயை இல்லாமலாகிவிடுமா? இல்லை, ஏனெனில் அதைத்தொடர்ந்து ஏற்படும் அச்சம் நிறைந்த கற்பனைகளான 'எப்படிப்பட்ட பாம்பு அது? எவ்வளவு நீளம்? அது கடிக்குமா?' - இவைதான் மாயை. இறுதியில், அது ஒரு கயிறுதான் என்பதை அறிந்து கொள்ளும் தருவாயில், உங்களின் தவறான யூகத்தை எண்ணி நகைக்கிறீர்கள், ஏனெனில் உங்களுடைய அச்சம் மறைந்து மாயை அகற்றப்படுகிறது. அதேபோல், ஒருவர் இறை நிலையை எய்தும்போது, உலகம் மற்றும் அதன் அனைத்து தொடர்புகளும் முற்றிலும் தவறானவை, உண்மையானவை அல்ல என்பதை அறிந்து கொள்வதால், மாயையால் உருவான இந்தத் தவறான கருத்துக்களை எண்ணி அவர் தனக்குள்ளே நகைக்கிறார்.**

**ஏதேனும் ஆசை, உணர்ச்சி, கோபம் போன்றவை உங்கள் தலைக்குள் நுழைந்தால், அதை மாயை என்று எடுத்துக் கொள்ளுங்கள்; அந்த மாயையே அனைத்து கவலைகள், இடர்பாடுகள் மற்றும் பதட்டங்களுக்கும் மூலகாரணம். அது உங்கள் மூளையில் நுழையும் அந்த கணமே தூக்கி எறிந்துவிடுங்கள்! உள்ளே ஒருபோதும் நுழையவிடாதீர்கள்!**

வெறிபிடித்த நாய் ஒன்று உங்கள் அறையில் நுழைவதானால், நீங்கள் எழுந்து நின்று அதைக் கூச்சலிட்டு விரட்டுகிறீர்கள். மாறாக, அதற்குப் பாலும், ரொட்டியும் கொடுத்தால், அது வெளியே போகாமல் அங்கேயே இருந்துவிடும்; மாயை ஒரு வெறிபிடித்த நாய் போன்றது. வெறிபிடித்த நாயை வலுக்கட்டாயமாக, முடிந்த வரையில் வேகமாக வெளியேற்றி விடுங்கள்! அப்போதுதான் மாயையின் பிடியிலிருந்து உங்களை நீங்கள் காப்பாற்றிக் கொள்ளமுடியும்!

மாயையை உருவாக்கியவர் கடவுளே என்று மக்கள் கூறுகின்றனர், ஆனால் அப்படியல்ல. உதாரணமாக, தலையிலிருக்கும் முடியை எடுத்துக் கொள்வோம். முடி என்பது மாயை; தலை என்பது கடவுள், அனைத்தையும் படைப்பவர். முடி, தலையில் வளர்வதாக இருந்தாலும், அது எப்படி, ஏன், எங்கிருந்து வருகிறது என்று தலைக்குத் தெரியாது. அப்படியிருக்கும்போது, தலை, முடியை உருவாக்குகிறது அல்லது கடவுள் மாயையை உருவாக்குகிறார் என்று எப்படிக் கூறமுடியும்? ஆனால் ஒரு வழியில் சொல்லப்போனால், மாயையின் உருவாக்கம் கடவுளையே சார்ந்துள்ளது.

மாயை, முற்றிலுமாக, இல்லாத ஒன்றின் கற்பனை வடிவம். காமம் எங்கு உள்ளதோ அங்கு மாயை இருக்கிறது. எங்குக் கோபம் உள்ளதோ அங்கும் மாயை இருக்கிறது. எங்குப் பேராசை உள்ளதோ அங்கேயும் மாயைதான் இருக்கிறது. யாரொருவர் மாயையைத் துறக்கிறாரோ அவர் அனைத்தையும் அடையப்பெறுகிறார்! மாயைக்கு அடிமையாகாதீர்கள். மாயையை வென்று உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் போது நீங்கள் கடவுளை அவருடைய முழுமையான பரிபூரணத்தில் காண்பீர்கள்.

இறை நிலையை அடைவது என்பது ஏறக்குறைய சாத்தியமற்றது. ஒருவர் அவருடைய உயிரைக் கொடுத்தேனும் இந்த நிலையை அடைய வேண்டும், நீரில் மூழ்கியோ அல்லது தற்கொலை செய்தோ அல்ல, ஆனால், மாயையைத் துறந்து, ஒருவரை அதன் வசீகரத்திலிருந்து விடுபடச் செய்வதன் மூலமாக. இந்த மாயை மிகவும் கொடுமையும் சக்தியும் மிக்கதாக இருப்பதால், உன்னதமானவர்கள் கூட அதன் கவர்ச்சிகளுக்கு அடிபணிகிறார்கள். மாயையை முழுவதுமாக விழுங்கும் வீரர்கள் மிக அரிது. உங்களது வழியை எளிதாக்க என்னுடைய பாதங்களைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ளுங்கள்; இல்லையேல் உண்மைப்பொருளின் ஒரு சிறு அம்சத்தைக் கூட நீங்கள் அடையப்பெற முடியாது; மேலும், உங்களுடைய இலக்கைச் சென்றடைய, காலங்காலமாக நீங்கள் எடுக்கும் விடாமுயற்சி, உங்களை அதன் அருகில் கூடக் கொண்டு செல்லாது.

யோகா பயிற்சிகள் செய்வதைப் பற்றி ஒருவர் குறிப்பிட்டபோது, பாபா இவ்வாறு கூறினார்:

**உங்களுக்கு யோகாவும் இல்லை, உலக இன்பமும் இல்லை. நீங்கள், உங்கள் கண்களைக் கட்டிய வண்ணம், ஒன்றுமே அறியாத முறையில் - இறுதி இலக்கை நோக்கி அழைத்துச் செல்லப் படுகிறீர்கள்.**

**ஒரு சத்குரு அவரது வட்டத்து சீடர்களின் அறிவாற்றல் மற்றும் அகந்தையைப் படிப்படியாகப் பலவீனப்படுத்தி அகற்றுவதன் மூலம் அதை நிரந்தரமாக இறுதியில் நிர்மூலமாக்குகிறார். அவர் தனது வட்டத்து உறுப்பினர்களின் மனங்களை, இருள் நிரம்பிய நிலையில் வைத்திருந்தாலும், அவ்வாறு இருப்பதையே அவர் விரும்புகிறார்; ஏனெனில், அந்த சத்குருவின் பணி அவர்கள் மனங்களின் பின்னால் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கும்.**

பாபா, அப்போது, மாயை மற்றும் மனப்படிவங்களின் இடையே உள்ள வித்தியாசத்தை எடுத்துக்காட்டினார்.

**உங்களை, கோபம், காமம், பேராசை அல்லது ஏதேனும் விரும்பத்தகாத உணர்ச்சிகள் ஆட்கொண்டிருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். இது மாயையின் வேலை. ஆனால், உங்களுக்கு வரும் பசி, தாகம், அல்லது தூக்கம் இவை அனைத்திற்கும் மனப்படிவங்களே காரணம். நீங்கள் உணவு உண்டு, நீர் அருந்தி, தூங்குவது இவையெல்லாம் நம் வாழ்வுக்கு இன்றியமையாதது என்பதால் பரவாயில்லை. ஆனால், கோபம், காமம், பேராசை இவை மனதில் நுழையும் அந்த நிமிடத்திலேயே துரத்தியடிக்க வேண்டும். "மாயையே நீ வெளியேறு! நீ எனக்குத் தேவையில்லை" என்று கூறுங்கள்!**

இவ்வாறு விளக்கமளித்துக் கொண்டிருந்த வேளையில், ஷங்கர்நாத் உள்ளே நுழைந்தார். பாபா வேடிக்கையாக, "**ஷங்கர், கங்கராக** (கல்லாக) **மாறுவாராக, அப்போது, அந்த சூனியக்காரி மாயையின் சூழ்ச்சிகளால் நீங்கள் பாதிக்கப்படாமல் இருக்கலாம்**" என்று கூறினார்.

பாபா தொடர்ந்து எடுத்துரைத்தார், "**ஒரு கல்லைப் பூக்களால் பூஜிக்கலாம் அல்லது குப்பைகளால் நிரப்பலாம், ஆனால் அது எந்நிலையிலும் பாதிக்கப்படாமல் இருக்கும். ஓர் உண்மையான யோகியை உலகின் எந்தவொரு பொருளும் தீண்டமுடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்; அவர் எல்லா சூழ்நிலைகளிலும் அக்கறையற்றவராகவும் எவ்வகையிலும் பாதிக்கப்படாமலும் இருக்கிறார்.**"

மெஹர் பாபா, மஜ்ஜூப், சத்குரு, மற்றும் சாதாரண மனிதனின் நிலையில் உள்ள வேறுபாட்டை உதாரணத்துடன் விளக்குகிறார்:

**உதாரணமாக, கடலில் ஒரு மனிதன் படகில் பயணம் செய்கிறான். தண்ணீருக்கு வெளியேயிருந்து கடல் காற்றை அனுபவிக்கிறான். ஆனால், அவனே சமுத்திரமாக மாறும் தருவாயில், படகுக்கு என்ன தேவை? சமுத்திரம் மற்றும் அதன் மகிமையை அறியாத ஒருவனுக்கு, படகைப் பயன்படுத்தி அதை இயக்குவதால் வரும் இன்பத்தை அனுபவிப்பது**

அவசியமாகிறது. ஆனால், அவன் சமுத்திர நிலையை அடைந்த பின்பு, படகைப் பற்றிக் கவலைப்படுவானேன்? இதுவே, அங்குமிங்கும் அலைமேல் அல்லல்படும் படகின் நிலைபோல் ஒரு மஜ்ஜூபின் நிலையும் - படகைக் (தன் உடலை) கண்டுகொள்ளாத நிலை.

எதுவாயினும், ஒரு சத்குரு படகில் கவனம் செலுத்தி அதைப் பிரயோகிப்பது உண்டு. அவர், நீரில் மிதக்கும் படகை அடியோடு நகர்த்தி, எங்கும் எப்போது வேண்டுமானாலும் எடுத்துச் செல்ல முடியும். அதே வேளையில், மனிதகுலம் அதன் 'இலக்கை' நோக்கி சிறிது கூட நகராமல் அங்குமிங்கும் அலைமோதும். இதுவே, ஒரு மஜ்ஜூப், சத்குரு மற்றும் சாதாரண மனிதன் இவர்களிடையே உள்ள வேறுபாடு. ஆனால், இவ்வித வேறுபாடு வெளியளவில் முக்கியமற்றதாகத் தோன்றினாலும், உண்மையில் கற்பனைக்கு அப்பாற்பட்டது.

மிகவும் உன்னதமான, நிலையான, எல்லையில்லா அறிவு, ஆனந்தம் மற்றும் சக்தி இவை அனைத்தும் கற்பனைக்கு அப்பாற்பட்டு இருந்தாலும், நீங்கள் என்னுடன் பேசி, எனக்கு செவிசாய்ப்பதை விட, நிஜத்தில் மிகவும் உறுதியான, ஈர்க்கக்கூடிய மற்றும் உண்மையானதும் ஆகும்; மேலும் என்னுடன் இப்போது இந்நேரத்தில் நீங்கள் இருக்கும் இந்த உண்மையைக் காட்டிலும் மேன்மையான உண்மையாகும். இறை நிலையை அடையும் உண்மை என்பது, நீங்கள் நிஜமென்று நம்பி வாழும் தற்போதைய வாழ்க்கையை விட ஆயிரம் மடங்கு உண்மையானதாகும். மனிதனால் இதை ஏற்றுக் கொள்வது கடினம், ஆனால் உண்மையை உணர்ந்த எங்களுக்கு இவை அனைத்தும் வெறும் கனவே. மேலும், இந்த உண்மை அவ்வளவு தெளிவாக இருந்தாலும், கடவுளோடு ஒன்றாகி அந்நிலையை ஆட்கொண்ட ஒருவர், அவருடைய இறை அனுபவங்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. மேன்மையான இறை நிலையை வார்த்தைகளால் வர்ணிப்பது என்பது மிகவும் பரிதாபகரமான வழியாகும். ஆனால், மேன்மையான இறை ஞானம், ஆனந்தம், சக்தி இவற்றைப் பிறருக்கு அள்ளி வழங்கும் ஒருவரின் சக்திகளை எண்ணிப் பாருங்கள்! இதைத் தவிர, இறை நிலையின் பண்புகளாகிய மேம்பட்ட அறிவு, ஆனந்தம், சக்தி இவற்றை நிஜத்தில் நாங்கள் பிரயோகிக்க முடியும் என்பதை எடுத்துரைக்கும்போது நீங்கள் என்னதான் நினைப்பீர்கள்? இல்லையேல், இறை அனுபவத்தைப் பிறருக்கு வழங்குவதைப் பற்றி நீங்கள் எப்படி நினைக்க முடியும்?

இறை தன்மை புத்தியின் திறனுக்கும், சக்திகளுக்கும் அப்பாற்பட்டு விளங்குவதால், உங்கள் வரையறுக்கப்பட்ட மனம் இதை எப்படி அறிந்து, புரிந்து கொள்ள முடியும்? எனவே, பரம்பொருளை நாங்கள் எப்படி விவரிக்க முடியும்? உங்கள் அறிவின் வரம்பிற்கு உட்பட்டு, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே புரிந்து கொள்ளும் தன்மை படைத்ததாக இருக்கும் தருவாயில், நாங்கள் எப்படி விளக்க முடியும்? குருநாதர், இவ்வேளையில், எல்லைக்குள் இருக்கும் உங்கள் அறிவை எல்லையற்ற நிலைக்கு

**எடுத்துச்செல்ல வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், அவர் உங்களுக்குத் தனிப்பட்ட இறை அனுபவத்தைத் தரவேண்டும், அப்போது நீங்கள் அதை உடனடியாகப் புரிந்து கொள்வீர்கள். நானே பிரபு** (எஜமான்)! **நானே அனைத்து ஞானம்-சக்தி-ஆனந்தம் ஆவேன்! நீங்கள் என்னைப் பார்த்து, உரையாடி, என்னைத் தொடவும் செய்கிறீர்கள்; ஆனால் நான் அளவிறுதியற்ற தன்மையுடன் இருக்கிறேன். எனது நிலை விவரிக்க முடியாதது.**

அதைத் தொடர்ந்து, பாபா வெவ்வேறு ஆனந்த நிலைகளைக் குறித்து சொற்பொழிவாற்றினார்:

**இறை நிலையை அடைந்த ஆத்மாவின் ஆனந்தத்தை, ஒரு மனித உடலோடு ஒப்பிடும்போது, யோகிகள் அனுபவிக்கும் இன்பம் என்பது அந்த உடலின் நிழல் போன்றது; மேலும், உலக மனிதன் அனுபவிக்கும் சுகம், குளத்தின் நீரில் பிரதிபலிக்கும் நிழலைப் பார்ப்பது போன்றது. இப்படி, சாதாரண மக்கள் உண்மையான ஆனந்தம் என்ன என்பதை கற்பனை செய்யக் கூட இயலாது!**

**மஜ்ஜூப்களுக்கு மனமும், உடலும், அதேவேளையில் அறிவாற்றலும், அகந்தையும் இல்லாததால், அவர்கள் பேரானந்தத்தை பரிபூரணமாக அனுபவிக்கின்றனர். யோகிகளுக்கு மனம் மற்றும் உடலைத் தவிர, அறிவும் அகந்தையும் இருப்பதால் பேரின்பத்தை அனுபவிக்க மாட்டார்கள்.**

**அதனால்தான், நான் கூறுகிறேன், சாதாரண மனிதனுக்கு, பேரானந்தத்தைப் பற்றி, சிறிதளவும் அறிவு இருக்காது என்று! அவர்கள் அதைக் கற்பனை செய்யவும் இயலாது!**

மெஹர் பாபா, அதற்குப் பிறகு, கபீரின் ஈரடி கவிதைகளை மொழிந்து விளக்கமளித்தார்:

> **ஒரு கடவுள் தவழ்ந்து, விளையாடி, அழகூட்டும் தசரத மன்னனின் அரண்மனை = உடல் = ஜீவாத்மா = அதாவது பரமாத்மா ஒரு தனிப்பட்ட ஆத்மாவாக விளங்குவது.**
>
> **ஒரு கடவுள் ஒவ்வொரு இதயத்தின் உயிர்த்துடிப்பாக இருப்பது = உலகளாவிய மனம் = ஈஷ்வரன் = அனைத்தையும் படைக்கும் உண்மைப்பொருளாகத் திகழும் பரமாத்மா.**
>
> **ஒரு கடவுள் முழுப் பிரபஞ்சத்திலும் வியாபித்திருப்பவர் = சிவன் = உண்மைப்பொருளின் உணர்வு நிலையான பரமாத்மா.**
>
> **ஒரு கடவுள் மூவுலகுக்கும் அப்பால் நிறைந்திருப்பவர் = ஏக இறைவனாக நிலைத்திருப்பவர் = மேன்மையிலும் மேன்மையாக, தன்னுணர்வின்றி அனைத்திற்கும் அப்பாற்பட்டு நிலைத்திருப்பவர்.**

**கடவுள் அவரை, அவர் யாரென்று அறிந்துகொள்ள, அவரே தனிப்பட்ட ஆத்மாவாக உருவெடுத்தார்; அதனால் அவர் கர்ம வினையால்**

**கட்டுண்ட நிலைக்குள்ளானார். எவருமே அவருடைய செய்வினையிலிருந்து தப்பமுடியாது. ஆனால் ஒருவரின் செயல்கள் சாதாரண மனப்படிவங்களை அகற்றி, சமப்படுத்தும் எதிர் மனப்படிவங்களாக அமைய வேண்டும்.**

**பக்தி, தானம் செய்தல், பிரார்த்தனை, பஜனை, கீர்த்தனை பாடுவது, மேலும் இறைவனின் நாமத்தை உச்சரிப்பது இவைகளால் உருவாகும் மனப்படிவங்கள், சாதாரண மனப்படிவங்களை எரித்துவிடும். ஆனால், நோன்பு, விரதம், யோக பயிற்சிகள் போன்ற அனைத்தும் மேலும் அதிகமான பிணைப்பை உருவாக்கும். உண்மையான விரதம் என்பது மனதைப் பட்டினி போடுவது, உடலை அல்ல!**

**இறை நிலையை அடைவதன் அர்த்தம் என்னவெனில், விழித்திருக்கும் நிலையிலும் ஆழ்ந்த தூக்க நிலையை அனுபவிப்பது. இந்த நேர்மாறான மனப்படிவங்களை உருவாக்க சிறந்த வழி, ஒரு சத்குருவிடம் சரணடைந்து, அவருடைய அரவணைப்பில் இருந்து, அவரது உத்தரவுகளை முழுமையாக, வார்த்தைக்கு வார்த்தை நிறைவேற்றுவதிலேயே உள்ளது.**

யோகாவைப் பற்றி விளக்கும்போது பாபா, யோகிகளின் சமாதி நிலையை எடுத்துரைத்தார்:

**யோக பயிற்சிகளால் அடையப்பெறும் சமாதி நிலை, எளிதாக ஆன்மீகப் பாதையில் பயணிக்க வழிவகுக்கும். உதாரணமாக, நீங்கள் பயணித்து** (முன்னேறி) **பின்னர்** (ஆழ்ந்த தூக்கத்தில்) **ஓய்வெடுப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். இந்த ஓய்வானது, பயணத்தை மீண்டும் தொடர தேவையான சக்தியை நல்கும். அவ்வளவுதான் வேறு எதுவுமில்லை. சுருக்கமாகச் சொன்னால், சமாதி நிலை ஒருவருக்கு ஓய்வை தந்தாலும், இது ஒன்று மட்டுமே முன்னேற்றத்திற்கு வேண்டிய தேவைப்பொருளாக அமையாது. ஒரு குருநாதரின் சகவாசத்தில் இருப்பது போன்ற சிறந்த, எளிதான மற்றும் விரைவான வழிகளும் உள்ளன.**

அடுத்த நாள், ஜூலை 11, மெஹர் பாபா, அவருக்கும் உடனிருந்த மண்டலிக்கும், அடுத்த ஏழு மாதங்களுக்கு, 1927 பிப்ரவரி மாதம் வரை, புதிய நடைமுறை பழக்கவழக்கத்தை அறிவித்தார்.

- **ஜூலை 13ஆம் நாளிலிருந்து, பாபா 24 மணி நேரத்தில் ஒரு முறை திட ஆகாரம் உண்பதை விட்டுவிடுவார்.**
- **பாபாவின் உபவாசத்தில் பங்கெடுக்கும் ஒவ்வொரு மண்டலியும் திரவ உணவை மட்டுமே உட்கொள்ள வேண்டும்.**
- **பாபா எந்த விளையாட்டுகளிலும் பங்கெடுக்க மாட்டார்.**
- **பாபா சொற்பொழிவு மற்றும் விளக்கங்கள் வழங்க மாட்டார்.**

- **மெஹராபாத்தை மேற்பார்வை இடுவதற்காக பாபா, வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை வருவார்; மேலும் ஏகாந்தவாசத்தில் பெரும்பாலும் ஒரே இடத்திலேயே இருப்பார்.**

அம்முறைப்படி, பாபா அடுத்த நாளிலிருந்து உபவாசத்தைத் தொடங்கி, துனிக்கு அருகிலமைந்த மேசை அறையில் நாள் முழுவதும் தனியாகவே அமர்ந்திருந்தார்.

ஜூலை 14ஆம் நாள் நடந்த தரிசன வேளையில், கடவுளைத் தேடி அலையும் பக்தர் ஒருவர், பாபாவிடம் தனக்கு இறை நிலையை வழங்குமாறு மன்றாடினார். பாபா அவரை மேசை அறைக்கு எதிரில் அமைந்த சிறிய குடிலில் தினமும் ஒருவேளை உணவு உண்டு, ஓராண்டு அங்கேயே தங்குமாறு உத்தரவிட, வந்தவரும் அதற்கு சம்மதம் தெரிவித்தார். பதினைந்து நிமிடங்கள் கூட கடக்கவில்லை, பாபாவின் எதிரில் அமர்ந்திருந்த பக்தரின் மனம் வெவ்வேறு எண்ணங்களால் அலைமோதியது. பாபா அவரிடம், **"என்ன சிந்தனை?"** என்றார். அதற்கு அவர், "இங்கிருப்பதற்கு பதிலாக நான் ஷிர்டி சென்று அங்கே இருக்க விரும்புகிறேன்" என்று பதிலளித்தார். பாபாவும் அதற்கு இணக்கம் தெரிவிக்க, உடனே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

ஜூலை 16ஆம் நாள் மெஹர் பாபா மண்டலியுடன் அமர்ந்திருந்த வேளையில், ருஸ்தம் வட்டத்து சீடர்களைக் குறித்துக் கேள்வி எழுப்ப, பாபா, இவ்வாறு விளக்கமளித்தார்:

**"ஒவ்வொரு குருநாதரும் அவருடைய வட்டத்து சீடர்களை, அவரைப் போலவே பரிபூரண நிலைக்குக் கொண்டுவருவது அவசியம். அவர்கள் குருநாதரோடு நீண்டகால தொடர்பிலிருந்து, கடவுள், அவதார புருஷராக மனித உருவில் உலகில் வரும் வேளையில், தானாகவே அவருடன் வந்திணைகின்றனர். இறுதியில், தக்க தருணத்தில் இறை நிலையை வழங்குகிறார். இறை ஞானம் எனும் உண்மையான பழரசத்தைப் பருகுபவர் ஒரு சிலரே! அதே வேளையில் பல கோடியில் ஒருவர் மட்டுமே குருநாதராக ஆவார்.**

"அப்படியானால் அத்தகைய அரிய வாய்ப்புக்காக ஏன் இத்தனை கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும்? இது பெரியதொரு பரிசுச் சீட்டை வெல்வது போலாகும். எந்த வாய்ப்பும் இருப்பதாகத் தெரியவில்லை!" என்று ருஸ்தம் கூறியதும் பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**"நீங்கள் என்னுடன் இருப்பதால், தாமதமானாலும் வெற்றி நிச்சயம்! நீங்கள் எதற்காக முயற்சிக்கிறீர்களோ அதை அடைவது உறுதி! இறுதியில், இறைவனைக் கண்டுகொள்வது அனைவரின் ஒரே நோக்கமும், பொறுப்பும் ஆகும்."**

ருஸ்தம் உடனே, "அனைவருக்கும் நிச்சயமாகக் கிடைப்பதானால் முயற்சி செய்வானேன்? அதுவாகத் தானே வரட்டுமே!" என்றார்.

சற்று அமைதியாக இருந்து, பாபா இவ்வாறு பதிலளித்தார்:

“உங்களின் முயற்சியும் போராட்டமும், உங்கள் இலக்கை விரைவில் நெருங்க உதவியாக இருக்கும். நீங்கள் 99 முறை தோல்வியடைந்தாலும், நூறாவது முறை மேற்கொள்ளும் முயற்சி, உங்களை, குருநாதரின் அருளைப் பெறும் நிலைக்கு கொண்டு வருமானால், உங்கள் உழைப்பு போதுமான அளவு நியாயப் படுத்தப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

“ஒரு குருநாதரைக் கண்டுகொண்ட அந்தக் கணத்திலிருந்து, அவருடைய இரகசிய பணி மற்றும் அளவிலா சக்தியால் நீங்கள் தொடர்ந்து இலக்கை நோக்கித் தள்ளப்படுகிறீர்கள்.”

கொடுமையான கொலைகள் நடப்பதைப் பற்றிய மண்டலியின் கேள்விகளுக்கு, பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:

“சத்குருக்களாகிய நாங்கள், பார்க்க பயங்கரமான காயங்கள் மற்றும் உடல் சிதைவுகள் குறித்து உணர்ச்சிவசப்படுவானேன்? நீங்கள் ஈ, எறும்பு அல்லது கொசுக்களைக் கொல்ல கவலைப் படுகிறீர்களா? கொஞ்சமும் இல்லை! கசாப்புக் கடைக்காரன் கோழியின் கழுத்தைக் கொடூரமாகத் திருகிக் கொல்லும்போது வருத்தப் படுகிறீர்களா? இல்லை. அப்படியெனும்போது, மனித கொலை - காயங்கள், இரத்தம், வலி இவைகளைக் கண்டு அஞ்சி நடுங்குவானேன்? ஈ, எறும்பு, கோழி, ஆடு இவை அனைத்திற்கும் மனிதர்களைப் போல் உயிர் உள்ளது. ஒன்றுக்காக வருந்தி இன்னொன்றுக்காக வருந்தாமல் இருப்பானேன்?

“மனிதர்களோடு ஒப்பிடும் போது, இந்த ஜீவராசிகளின் வாழ்க்கை அவ்வளவு முக்கியமல்ல என்று நீங்கள் கருதுவதுபோல, சத்குருக்களும் மனித இறப்புகளை அற்பத்தனமானது, முக்கியமற்றது என்று கருதுகிறார்கள். அவர்களுக்கு, இந்த முழு உலகமும் ஒரு சிறிய விஷயம், ஒரு புள்ளி போன்றது. அப்படியெனும்போது, ஒருவரின் மரணத்திற்காக வருந்துவானேன்? இதைத் தவிர, ஒரு சத்குருவைப் பொறுத்தவரையில், உடலைத் துறப்பது என்பது ஒருபோதும் இறப்பல்ல. ஓர் உருவைக் களைந்து மற்றுமோர் உருவில் வருவதே! உடல் ஆத்மாவை உள்ளடக்கும் ஆடையாகும். இப்படி லட்சக்கணக்கான உடல்கள் ஒரே நாளில் மறைந்து, ஒரே நேரத்தில் பிறவி எடுக்கின்றன. சத்குருக்கள், மாயையைப் பொறுத்தவரை உயிரற்றவர்கள் போலிருந்து, உண்மையில் நித்தியத்தில் வாழ்கிறார்கள். அப்படியெனும்போது அவர்களுக்கு மனித உடல்கள் மறைந்து, பல ஆடைகளை மாற்றிக்கொள்வதில் என்ன இருக்கிறது?

“இந்த மனம் அழிய வேண்டும், உடல் அல்ல! உடல் ஆயிரம் முறை இறக்கலாம்; ஆனால் ஆத்மா உயிரோடு இருக்கும். அது இறப்பதில்லை. இறை நிலையை அடையும்போது உடலும் மனமும் மறைந்தாலும், அந்த ஆத்மா எப்போதுமே உயிர் வாழும். மனதிற்காக உடல், வாழ்ந்து, பணிபுரிந்து, சிரமங்களை அனுபவிக்கும்; மேலும், ஆத்மாவுக்காக, மனம் வாழ்ந்து கொண்டிருக்கும்.

**“உதாரணமாக, உடலை உடையாகவும், மனதை உடலாகவும், ஆத்மாவை மனமாகவும் எடுத்துக் கொள்ளுங்கள். இப்போது இளமையான, சிறப்பாக உடையணிந்த கன்னிப்பெண் ஒருத்தி உங்கள் முன் வந்து நிற்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பெண்ணின் உடல் முழுவதையும் உடை மறைப்பது வரை, மனம் அதில் எவ்வித சிறப்பு கவனமும் செலுத்தாமல் தடை செய்யப்படுகிறது. ஆனால், அவருடைய உடையில் ஒரு பாகம் காற்றில் அசைந்து கால்களை மூடியிருந்த பாகம் விலகுவதானால், அது உடனே மனதை பாதித்து, பல வேண்டத்தகாத எண்ணங்கள் மனதில் அலை மோதும். இப்போது என்னதான் நடந்தது? உடை - உடல். எனவே, உடலுக்கு உடை இருப்பது போல, மனதிற்கு உடல்; அதாவது, உடலால் மனம் பாதிக்கப்படுவது போல், உடையால் உடல் பாதிக்கப்படுகிறது.”**

மெஹர் பாபா, புதிய சமையலறை ஒன்றைத் தொடங்கி வைத்தது, இந்து மண்டலியிடையே மனக்கசப்பை உருவாக்கியது. அன்றிரவு அனைவரும் ஒரே உணவை ஒன்றாக அமர்ந்து உண்ண வேண்டும் என்று பாபா வலியுறுத்தினார். ஆச்சாரமான இந்து மண்டலி மற்றும் முற்போக்கு சிந்தனை மிக்க முஸ்லிம், ஸொராஸ்டிரிய மண்டலியிடையே பலத்த வாக்குவாதம் நடைபெற்றது. அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த பாபா, தன்னுடைய எழுத்துப் பலகையைக் கையிலேந்தி இவ்வாறு விளக்கமளித்தார்:

**எனக்கு அனைத்து மதங்களும் சமம்; மேலும், மதக்கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள் மீதான மோதல்கள் அனைத்தும் பயனற்றவை. அனைத்து மத பழக்கவழக்கங்களும் அன்றாடம் மேற்கொள்ளும் நடை முறைகளாகும். ஒவ்வொருவரின் மத உணர்வுகளும் முற்றிலுமாக மதிக்கப்பட வேண்டும், எந்த சூழ்நிலையிலும் ஒருவரின் இணக்கத்திறன் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மாறாக, சமய நடைமுறைகளைக் கடுமையாகப் பின்பற்றும் ஒருவரை ஊக்குவித்து, அனைத்து வசதிகளையும் வழங்கவேண்டும்.**

ஜூலை 27ஆம் நாள், பாபா, மாய உலகைப் பொறுத்தவரையில் ஒரு சத்குருவின் ஆன்மீகக் கடமையைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்:

**ஒரு சத்குரு, அவருடைய இறை நிலையை அடைந்த பின்பு, பிரபஞ்சத்திற்கான தனது கடமையை முழுமையாக நிறைவேற்றும் ஒரே நோக்கத்தில், இந்த உலகில் மறுபடியும் வருகிறார். அவர் மாயையிலிருந்து முற்றிலும் விடுபட்டவர் என்றாலும், இவ்வாறு வருவதற்கு மாயையே காரணம். தன்னைப் போலவே பிறரையும் உருவாக்க, அவர் மாயையில் செயல்பட வேண்டியிருப்பதால், ஒருவகையில் அவர் மாயையைச் சார்ந்திருக்கிறார்.**

**எடுத்துக்காட்டாக, நீங்கள் தேநீர் அருந்தும் வேளையில் ஒரு குவளையும், சிறிய தட்டையும் உபயோகிக்கிறீர்கள். தேநீரைப் பருகி**

**முடித்ததும் அதைத் தள்ளி வைக்கிறீர்கள்; அதாவது, ஒன்றைச் செய்ய அல்லது அனுபவிக்க ஏதேனும் ஒரு முறையைக் கடைப்பிடிக்கிறீர்கள். ஒருமுறை அதைச் செய்து முடித்ததும், அந்தப் பொருட்கள் தேவையற்றதாகின்றன.**

**அதுபோல், இறை நிலையை அடைய, தவிர்க்க முடியாத ஒன்றாகக் கருதப்பட்ட இம்மனித உடல், பரிபூரண இறை நிலையை அடைந்ததும், முற்றிலும் தேவையற்றதாக இருப்பதால் அதைத் துறந்து விட வேண்டும்.**

1926, ஆகஸ்ட் 5 அன்று மெஹர் பாபா, மண்டலி மற்றும் சில பக்தர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் வேளையில் இவ்வாறு எடுத்துரைத்தார்:

**உண்மையான பக்தி என்பது 'ஒவ்வொரு நாளும் ஓராயிரம் முறை இறப்பது போன்றது!'**

**ஒரு கவிஞர் இவ்வாறு கூறினார், "ஒரு கூர்மையான அம்பால் ஏற்படும் காயத்தை வரவேற்கும் அளவுக்கு உங்களுக்கு ஏக்கம் இருக்குமானால், முதலில் இதுபோன்ற ஆபத்தான விளையாட்டில் ஈடுபடுவதற்குப் பக்குவமான இதயத்தை உருவாக்குங்கள். அப்போது அந்த இதயம் அதன் கஷ்டங்களையும், துன்பங்களையும் தாங்கும் அளவுக்குத் தைரியமாக இருக்கும்."**

**இந்த மேற்கோள் அதன் இலக்கிய ரீதியான 'இதயத்தை உருவாக்குங்கள்' என்ற அர்த்தத்தை மட்டுமின்றி, அந்தக் காயத்தால் ஏற்படும் துன்பங்களின் உள்ளுணர்வை, வேறு எவருக்கும் தெரியாமல் தாங்கிக்கொண்டு, அமைதியாக, எந்த முணுமுணுப்பும், வலியின் அறிகுறிகள் தென்படாத வண்ணம் இருப்பதையும் சுட்டிக்காட்டுகிறது.**

**ஒருவர் கொடிய காயங்களால் பாதிக்கப்பட்டு, உள்ளளவில் சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்டாலும், அதை முற்றிலும் வெளிப்படுத்தாத தன்மை வேண்டும்!**

**ஐயோ - என்ன ஒரு கதகதப்பு! என்ன நேசம், என்ன ஆசை! ஆழ் இதயம் எரியும் உணர்வுடன் ஒப்பிடும்போது, சூரியனின் பயங்கரமான வெப்பம் எதுவுமே இல்லை! இத்தகைய துன்பங்கள் அனைத்தும் எவ்விதமான உதவியும் இல்லாமல் தன் போக்கிலேயே கடவுளை அடைய விரும்பும் ஒருவர் அனுபவிப்பது. மாறாக, ஒரு சத்குருவிடம் சரணடையும் ஒருவருக்கு இதுபோன்ற சூழ்நிலையை சந்திக்க வேண்டிய தேவை எதுவுமில்லை. குருநாதர், சீடர்களின் கண்களைக் கட்டிய வண்ணம், எல்லையை நோக்கி எடுத்துச் செல்கிறார். நீங்கள், என்னில் ஒரு குருநாதரை கண்டுகொண்டது உங்கள் பாக்கியம்!**

ஆகஸ்ட் 7ஆம் நாள், மண்டலி மெஹர் பாபாவுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது அவர்களின் பேச்சு, பாபா ஜூலை மாதத்தில் தொடங்கிய

மிகவும் தனித்துவமான கை சைகைகளால் உரையாடும் முறையைக் குறித்து அமைந்தது. ஆரம்பத்தில், பாபா அவரது கை விரலால் தரையில் எழுதுவதை வழக்கமாகக் கொண்டார். பள்ளி மாணவர்களை நீராட்டும் வேளையிலும், படிப்பு, உரையாடல் மற்றும் பிறர் கூறுவதை கவனிக்கும்போதும், காற்றில் தனது கைகளை ஒரு குறிப்பிட்ட முறையில் இயக்குவது பாபாவின் சிறப்பியல்பாக அமைந்தது. அத்தகைய தருணங்களில், அவர் தனது சுற்றுப்புற சூழ்நிலைளைக் அறியாதவர் போலத் தோற்றமளித்தார். அவர் கண்ணுக்குத் தெரியாத வடிவங்களை காற்றில் பின்னிப் பிணைப்பதுபோலத் தென்படும். மேலும் மன்ஸில்-எ-மீமில் மெஹர் பாபா 'கொழுந்து விட்டு எரியும் நெருப்பாக' இருந்த வேளையில், அவ்வப்போது உடனிருந்த சீடர்கள், கீழ்ப்படிய தவறினால் அவர்களைக் கன்னங்களில் அறைவதும், அடிப்பதும் வழக்கமான காட்சியாக இருந்தது; ஆனால், பாபாவின் தற்போதைய மனநிலைகள் அவரது கடந்தகால உக்கிரத்துடன் ஒப்பிடும்போது, கணிசமான அளவில் அமைதியாகவும் நல்ல மனநிலையுடனும் இருந்தன.

அன்றிரவு துனியின் அருகில் அமர்ந்திருந்த வேளையில், சத்குரு உபாஸனி மஹாராஜ், ஹஸ்ரத் பாபாஜான் இருவரும் ஆங்காங்கே அலைந்து திரிவதைப் பற்றி மெஹர் பாபா விவாதித்தார்:

**நான் இந்தியா, பெர்ஸியா நாடுகளில் சுற்றி அலைந்த அவ்வேளையில், மஹாராஜ் ஸக்கோரியில் அமைதியாக இருந்தார். ஆனால், நான் இப்போது மெஹராபாத்தில் அமைதியாக இருக்கும் நேரத்தில், மஹாராஜ் ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்குப் பயணம் மேற்கொள்கிறார்.**

**பாபாஜான் அனுபவமிக்க சத்குருக்களுக்கெல்லாம் சத்குரு; மேலும், சமூகத்தின் பிரபுக்கள் மற்றும் உயர் பதவியிலிருக்கும் முக்கியமான பிரமுகர்களுக்கு அளிக்கும் மரியாதையைப் போல, பாபாஜானுக்கும், அவர் இடம் விட்டு இடம் அலைந்து திரிந்தபோது, மிக உயர்ந்த கௌரவங்கள் வழங்கப்பட்டன. அத்தகைய சமயங்களில், ஆன்மீகப் பாரம்பரியத்தில் முதன்மையாகத் திகழ்ந்த ஞானிகள் கூட, முன்னின்று அவரை வரவேற்றனர். உலக வழியில் நடப்பதற்கிணங்க, பாபாஜான் அவரது தலைமையகத்திலிருந்து வெளியேற இருந்த போது, ஆன்மீகக் கம்பிகள் 'அரவம்' செய்து இறைஞானிகளை அவர் முன்னிலையில் இருக்குமாறு அழைத்தன.**

ஸொராஸ்டரின் பிறந்தநாள் விழா 1926, ஆகஸ்ட் 15ஆம் நாள் அனுஷ்டிக்கப்பட்டது. மெஹர் பாபா, சில நேரங்களில் முந்தைய அவதார புருஷர்களைப் பற்றி மண்டலிக்கு விளக்கினார். ஆகஸ்ட் 16ஆம் நாள் தீர்க்கதரிசி முஹமதைப் பற்றிய சில உண்மைகளை வெளிப்படுத்தினார்:

**நாஸ்திகர்களில் சிலர் முஹமதைத் தாக்கி, அவரது பற்களை உடைத்தபோது, ஒரு சிறிய சத்தம் கூட அவரிடமிருந்து வெளிவரவில்லை. குருநாதர்களான எங்களின் வழியானது, உலகின் வழிகளிலிருந்து**

**முற்றிலும் மாறானது. எங்களை நேசிப்பவர்களை வெளிப்படையாகத் துன்புறுத்துவதும், அதேவேளை எங்களை அவதூறாக நடத்துபவர்களை நாங்கள் கண்டு கொள்ளாமலும் இருப்பதும் சகஜம். நாங்கள் எதிரிகளை வளர்த்து, எங்கள் நண்பர்களை அழிக்கிறோம்! எங்களில் ஒருவரான முஹமதின் பற்கள், கற்களால் உடைக்கப்பட்டன. அதுபோல், ஏசு நாதருக்கு என்ன நடந்தது என்பதைப் பாருங்கள் - அவர் சிலுவையில் அறையப்பட்டார். நாங்கள், எங்களை நேசிப்பவர்களின் கருவிழிகளைக் கால்களால் சிதைக்கும் அதே வேளையில், எங்களின் எதிரிகளைக் கண்டு கொள்ளாமல் இருக்கிறோம். நாங்கள் இரக்கமின்றி எங்கள் அன்பர்களைக் கொடுமைப் படுத்துகிறோம், அவர்களைக் கொலை செய்கிறோம்.**

**ஆனால் அதை நாங்கள் ஏன் செய்கிறோம் என்று கேட்க எவருக்கும் உரிமையோ தைரியமோ கிடையாது!**

**யோகா** (ஒருவர் சத்குருவின் தொடர்பில் இருக்கும்போது) **அர்த்தமற்றது, முற்றிலும் பயனற்றது. கடவுளை அடைவதற்கு நூற்றுக்கணக்கான வருடங்கள் உபவாசம் இருப்பதில் என்ன தேவை இருக்கிறது? கடவுளுக்காகப் பௌதீக உடலைத் துறந்து, இறப்பதில் என்ன பலன் இருக்கிறது? எனது ஒரே அறிவுறுத்தலை நினைவில் கொள்ளுங்கள்: பணிவுடன் தலைவணங்கி இருங்கள் - என்னுடைய விருப்பங்களுக்குக் கீழ்ப்படியுங்கள். எனது காலடிகளின் தூசுகள்போல நீங்கள் மாறவேண்டும்.**

**மறைவியலான** (மாயாஜால) **சக்திகளை விரும்பாதீர்கள்; ஆன்மீகப் பாதையில் அது தடையாக இருக்கும். உதாரணமாக, ஒரு சிலந்தியை எடுத்துக் கொள்ளுங்கள். அது அப்படியே அசையாமல் இருக்கும்வரை ஒன்றுமில்லை; ஆனால் அது ஒரு வலையைப் பின்னத் தொடங்கும் தருணத்தில், அதில் சிக்கிக்கொண்டு விடுவிக்க முடியாமல் தவிக்கும். அது எவ்வளவு அதிகமாக முயற்சிக்கிறதோ, அவ்வளவுக்குத் தனது வலையில் பின்னிப் பிணைந்து தத்தளிக்கும்.**

டாக்டர் கனி, ராம்ஜூ இருவரும் ஆகஸ்ட் 17 அன்று மெஹராபாத் வந்தனர்; 19ஆம் நாள் இரவு, சையத் ஸாஹேப், ராம்ஜூ, டாக்டர் கனி இவர்களிடையே மதம் மற்றும் கடவுளை அடையும் வழி குறித்து, பாபா அளித்த விளக்கத்தைப் பற்றிய ஒரு சூடான விவாதம் நடைபெற்றது. அவ்வேளையில் அங்கு வந்த பாபா, அவர்களின் விவாதத்தைக் கேட்க நேர்ந்தது. குரான் அல்லது இந்து வேத நூல்களில் கூறப்பட்டு இருப்பவை, பாபாவின் விளக்கங்களுக்கு நிகராக இருப்பதாக சையத் ஸாஹேப் கூறினார். ராம்ஜூ அதை மறுத்தார். இருவரில் யார் கூறுவது சரி என்பதைத் தீர்மானிக்க முடியாமல், பாபாவிடம் முறையிட்டனர். பாபா இவ்வாறு விளக்கமளித்தார்:

**என்னுடைய விளக்கங்கள் வேத நூல்களின் விளக்கங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது மட்டுமின்றி, மதக்கோட்பாடுகளின் நடைமுறைகளோடு தொடர்பு எதுவும் இல்லாதது.**

வேத வசனங்களில் எங்கும், ஏதேனும் ஒளியூட்டம் இருக்குமானால் அது இந்து சாஸ்திரங்களிலும் வேதாந்தத்திலும் மட்டுமே காணமுடியும். ஆனால் அவையும் எனது விளக்கங்களின் நிழல் மட்டுமே. முந்திய காலத்தில் மேன்மையான குருநாதர்கள் எவரும், இதுபோன்ற விளக்கங்களை வழங்கியதில்லை. அவர்கள் மிகவும் உயர்ந்த குருநாதர்கள், உன்னதமான அவதார புருஷர்கள், எத்தனையோ பேருக்கு இறை நிலையை வழங்கியவர்கள். இருந்தாலும், அவர்கள் உலகுக்கு அளித்தது அல்லது உலகில் விட்டுச் சென்றது 'ஷரியத்' எனும் சுவையான பழரசம் மட்டுமே. இறை ஞானத்தை ஒரு சில சீடர்களுக்கு மட்டுமே வெளிப்படுத்தினர். அவர்கள் மொழிந்ததும், அதைத் தொடர்ந்து வந்த சாஸ்திர நூல்களில் எழுதப்பட்டதும், சமய சம்பிரதாயங்களை வழிநடத்தும் சட்டதிட்டங்களும், அக்காலத்து சாதாரண மக்களின் மனங்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அமைந்திருந்தது. மனித குலத்தின் பெரும்பாலானோர் செய்யும் ஒரே பெரிய தவறு என்னவெனில், அவர்கள் ஷரியத்தை இறை நிலையை அடையும் வழியாகக் கருதாமல் இறுதி இலக்காக எடுத்துக் கொள்கிறார்கள்.

இறை ஞானத்தைக் குறித்து நான் வழங்கும் விளக்கங்கள், உண்மையான ஞானத்தின் நிழலாயினும், ஒரு சாதாரண மனிதனின் அறிவாற்றலால் புரிந்து கொள்வதற்கும் அப்பாற்பட்டது. இவற்றைக் குறித்து நான் வழங்கும் விளக்கம், யார் ஒருவர் ஏற்றுக் கொள்ளும் தயார் நிலையில் இருக்கிறாரோ, அவரால் மட்டும்தான் ஜீரணிக்க முடியுமே தவிர, எல்லோராலும் புரிந்து கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ அல்லது பொறுத்துக் கொள்ளவோ முடியாது.

உதாரணமாக, நான் கூறுகிறேன் நீங்கள் அனைவரும் கடவுள் என்று! அதேவேளையில், இஸ்லாம் போன்ற பிற மதங்கள், உங்களைக் கடவுளின் சேவகர்கள் என்று கூறுகின்றன. நான் கூறுகிறேன் முஹமது, பரிபூரண இறை நிலையை அடைந்த அவதார புருஷர் என்று! ஆனால் முஹமதியர்கள் அவரைத் 'தேவதூதன்' என்று அழைக்கின்றனர்.

ஸொராஸ்டர், ஏசு நாதர் இவர்களின் நிலையும் அதுவே! நான் கூறுகிறேன், பஜனை பாடி கைதட்டுவதும், பார்சிகள் 'கஸ்தி' எனும் பூணூலை அணிவதும், நமாஸ் செய்வதும் ஒருவித பயிற்சிகள் போலத்தான். கடவுளின் ஒரு பெயரை மட்டும் சொல்லுங்கள்; காமம், கோபம், பேராசை இவற்றைக் களைந்து விடுங்கள்; இதுவே இன்றியமையாதது. ஆனால் நான் கூறும் வார்த்தைகளை, ஆச்சாரமான மதத்தைச் சார்ந்தவர்கள் கேள்வியுற்றால் எனது தலையை சிதறச் செய்வார்கள்! அவர்களுக்காக நான் இரக்கப்படுகிறேன். ஏனெனில், அவர்கள் மிகவும் குறுகிய எண்ணம் கொண்டவர்கள்; ஆழமற்ற பார்வை படைத்தவர்கள் மேலும் இந்த மனநிலையிலிருந்து வெளிவர விருப்பம் காட்டவோ, முயற்சி செய்யவோ முன்வராதவர்கள்.

நான் உங்களுக்குக் கூறுகிறேன்:

**சத்தியத்தின் உண்மைகளை ஏற்றுக் கொண்டதற்காக நரகத்திற்கும், கடவுளின் கோபத்திற்கும் பயந்து, அவர்களைப் போல கோழைகளாக இருக்க வேண்டாம். எனது எல்லா விளக்கங்களுக்கும் அடித்தளமாக இருப்பது 'மனப்படிவங்கள்', வேறு எந்த மதங்களும் இதைப் பற்றி விளக்கியதில்லை. நான் அதை மிகவும் தெளிவாகவும், தர்க்கரீதியாகவும் விளக்கியுள்ளேன். வேறு எங்குமே இவை இவ்வளவு விரிவாக, சரளமாக, வெளிப்படையாக விளக்கப்படவில்லை.**

காலம் இவ்வாறு கருத்துரைத்தது:

இறை நிலையை அடைந்த ஒரு குருநாதர் உலகளாவிய மனம் உடையவராக இருக்கிறார். நாம் எழுதிய கடிதங்களை, பாபா படித்தாரா இல்லையா என்பதில் என்ன இருக்கிறது. எல்லாமே அவருக்குத் திறந்த புத்தகம். எதுவுமே அவரிடமிருந்து எப்போதும் மறைக்கப் படுவதில்லை. உலகில் ஒவ்வொரு மனிதனும், எந்த நொடியிலும் என்ன நினைக்கிறான், என்ன செய்கிறான் என்பது அவருக்குத் தெரியும்; மேலும், ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் அவன் என்ன நினைப்பான், என்ன செய்வான் என்பதையும் அவர் அறிவார். அவரது ஒவ்வொரு செயலும் எல்லையற்ற தயவின் வெளிப்பாடாகும்.

மெஹர் பாபா அவரது குடிலில் மிகவும் இனிமையான மனநிலையில் காணப்பட்டார். அவரோடு அமர்ந்திருந்தவர்களில் பாபாவின் பார்வை கோபால்சுவாமி மீது விழுந்தது. கோபால்சுவாமி 1926ஆம் ஆண்டு மெஹராபாத்தில் குடியேறிய போது, பாபாவின் அறிவுறுத்தல்களை ஓராண்டு கடைப்பிடிப்பதாக வாக்குறுதி வழங்கியிருந்தார். மெஹர் பாபாவின் வழிகாட்டுதலின் கீழ், அவர் ஒவ்வொரு நாளும் சில மணி நேரம் மௌனம் அனுஷ்டித்தார்; மேலும் சாலையினருகே ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து கடவுளின் நாமத்தை உச்சரிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது. பாபா அவரிடம் வினவினார்:

**"நீங்கள் மிகவும் விரும்புவது என்ன?"**

கோபால் "எதுவுமில்லை" என பதிலளித்தார்.

பாபா மீண்டும் வலியுறுத்திக் கூறினார், "**தயங்காமல் கேளுங்கள். எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. உங்களுடைய ஆசைகளை இப்போதே கூறுங்கள்; அனைத்தையும் நான் நிறைவேற்றுகிறேன்.**" கோபால் அமைதியாக, பாபாவையே உற்று நோக்கி, புன்முறுவல் செய்து கொண்டிருந்தார்.

"**சொல்லுங்கள், இப்போதே சொல்லுங்கள்**" பாபா சைகையால் தெரிவித்தார், "**உங்கள் மனதிலும், இதயத்திலும் இருப்பதை என்னிடம் எடுத்துச் சொல்லுங்கள்! இதுவே சரியான தருணம்! இப்போது நானாக முன்வந்து உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும் மனநிலையில் உள்ளேன்.**"

இதர மண்டலியும் கோபாலை உற்சாகப் படுத்தினர். இறுதியில் '**முக்தி**' (விடுதலை) என்ற ஒரே வார்த்தை கோபாலின் நாவிலிருந்து வெளிவந்தது.

பாபா சிரித்துக் கொண்டே "**அப்படியே ஆகட்டும், அதை நான் உங்களுக்கு வழங்கிவிட்டேன்!**" என்று கூறிவிட்டு, மண்டலிக்கு இவ்வாறு எடுத்துரைத்தார்:

"**கோபால் ஒரு நல்ல, நேர்மையான பக்தர். என் உத்தரவுகளை இறுதிவரை உறுதியாகப் பாதுகாக்கும் ஒரே பக்தர். ஆன்மீக முன்னேற்றத்திற்காக என்னை நாடிவந்த பலரில் (யோகிகள், சாதுக்கள், வழிப்போக்கர்கள்) இவர் மட்டுமே தீர்மானமாக என்னுடன் தங்கியுள்ளார்; இதர அனைவரும் ஏதோ ஒரு காரணம் காட்டி, இங்கிருந்து மறைந்து விட்டனர். இவர் மட்டுமே கேள்வி எதுவும் எழுப்பாமல் எனக்குக் கீழ்ப்படிகிறார், அவருக்கு வழங்கப்படும் உணவை விருப்பத்துடன் ஏற்றுக் கொள்கிறார்.**"

பாபா தொடர்ந்து கூறினார், "**நான் உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவேன், அதுவும் இந்தப் பிறவியில்**", மேலும் அவரைச் சோதிப்பது போல் "**ஒரு பேச்சுக்காக, உங்களுடைய அடுத்த பிறவியில் உங்களைக் கழுதையாக அல்லது முடமாக பிறக்க வைப்பதாக இருந்தால்!**" என்று கேட்டார்.

கோபால் பணிவுடன் பதிலளித்தார்: "அது உங்கள் விருப்பமாக இருந்தால் அப்படியே ஆகட்டும் பாபா."

பாபா, அப்போது ஷிவ்நாத் விபூதி (தாடியுடன் கூடிய ஒரு குள்ளமான மனிதர், மெஹராபாத்தில் பாபாவின் கட்டளைப்படி வாழ்ந்து வந்தார்) என்பவர் அரன்காவ்ம் வந்தபோது நடந்த பின்னணி நிகழ்வுகளை எடுத்துரைக்குமாறு கூறினார். விபூதி, கங்காபூர் நகரில், சாது ஒருவரின் சமாதியை தரிசனம் செய்யச் சென்றபோது, அவருடைய கனவில் ஒரு குரல் 'டவுண்ட்' நகரை நோக்கி நீ சென்றால், நீ நினைப்பது நிறைவேறும்' என்று வலியுறுத்திக் கூறவே, அடுத்த நாள் காலையில் டவுண்டை நோக்கிச் சென்று, வழியில் அரன்காவ்ம் கிராமத்தை வந்தடைந்ததும், மெஹர் பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவரை சந்திக்க நேர்ந்தது. அன்றிலிருந்து ஷிவ்நாத் விபூதி மெஹராபாத்தில் வாழ்ந்து வந்தார்.

கோபால், அவர் முதல் முதலாக மெஹராபாத் வந்த கதையை விவரித்தார். இதற்கு முன்னதாக, கோபால், ஸக்கோரியில் உபாஸனி மஹாராஜையும், கேட்காவ்மில் நாராயண் மஹாராஜையும் சந்தித்தார். ஒரு முறை அவர் டவுண்ட் நகரில் இருந்தபோது, அரன்காவ்மில் ஒரு சத்குரு வாழ்ந்து வருவதைக் கேள்விப்பட்டு, அரன்காவ்ம் கிராமத்தை நோக்கி நடந்தார். கடுமையான தாகத்தைத் தீர்த்துக்கொள்ள, வழியில் கிணற்றருகில் நீர் நிறைத்துக் கொண்டிருந்த ஒரு வயதான கிழவரிடம் சென்றார்; அவர் பல விஷயங்களைக் கூறினார். பேச்சினிடையே கோபால் ஒரு குருநாதரைத் தேடி அலைவதாகக் கூறியதும், அந்தப் பெரியவர் ஒரு கற்றாழை பழத்தை உண்ணக் கொடுத்துக் கூறினார், "சத்குருக்கள் இந்தப் பழத்தைதான் சாப்பிடுவார்கள்." கோபால் தயக்கமின்றி அந்தப் பழத்தை உண்டதும், அந்தப் பெரியவர் இவ்வாறு

குறிப்பிட்டார்: “அரன்காவ்ம் செல்லுங்கள், வேறு எங்கும் செல்லவேண்டாம். அவர் அங்குதான் இருக்கிறார். அவரிடம் செல்லுங்கள், உங்கள் ஆசைகள் நிறைவேறும். அவர் உங்களை வழிநடத்தி வேண்டியதைத் தருவார்.” கோபால் அந்தப் பெரியவர் கூறியதுபோல் அடுத்த நாள் மெஹர் பாபாவை சந்தித்தார்.

கோபாலின் கதையைக்கேட்டு பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: “**அந்த வயதான பெரியவர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? அந்த வேடத்தில் இருந்தது நானேதான்!**”

ஒரு வாரத்திற்கு முன்பு, பாபு சைக்கிள்வாலா என்பவரிடமிருந்து வந்த கடிதத்தில், மெமோவைப் (பாபாவின் தாயாரைப்) பற்றிய செய்தியைக் குறிப்பிட்டிருந்தார். மெமோ, டவ்லா, ஷெரியாரின் தங்கை பிரோஜா மூவரும் ஹஸ்ரத் பாபாஜானை தரிசனம் செய்துவிட்டுத் திரும்பி வரும் வேளையில், பாபா, ஒரு விக்டோரியா குதிரை வண்டியில் இருப்பதைக் கண்டனர். பாபா குதிரை வண்டியிலிருந்து இறங்கி, இருட்டு திசையை நோக்கி நடந்து சென்றதையும் கவனித்தனர்; மெமோ குரல் கொடுத்தும் கவனிக்காதவர் போல, பாபா அவரது வழியில் சென்று மறைந்தார். ‘மூன்று பெண்மணிகளும் பாபாவை தெளிவாக அடையாளம் கண்டுகொண்டதாக உறுதி பூண்டனர்’ என்று பாபு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். பாபா அவ்வேளையில் மெஹராபாத்தில்தான் இருந்தார். கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விபரங்களைக் கேட்டு பாபா எதுவும் கூறவில்லை. ஆனால் மண்டலிக்கு இது ஏதோ இயற்கைக்கு அப்பாற்பட்ட சம்பவம் என்று மட்டும் புரிந்தது.

மெமோவின் தாயார் கோலண்டூன் திடீரெனக் காலமானதும் மெமோவின் உடல்நிலை பாதிக்கப்பட்டது என்பதை இரண்டாவது கடிதம் மூலம் அறிந்தும், பாபா எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. பாபா, மாஸாஜியைப் பூனாவுக்கு அனுப்பி வைத்தார். ஆகஸ்ட் 23ஆம் நாள் மாஸாஜி மெஹராபாத்திற்குத் திரும்பி வந்து அங்கு நடந்ததை எடுத்துரைத்தார்.

ஓரிரவு, மெமோ மலர்மாலையுடன் ஹஸ்ரத் பாபாஜானை சந்திக்கச் சென்றார். அதை அவர் பாபாஜானுக்கு அணிவிக்க அருகில் சென்றபோது பாபாஜான், மெமோவிடம், அந்த மாலையை அவரே அணிந்து கொள்ளுமாறு கூறினார். மெமோ தயங்கியபோதும், அங்கிருந்தவர்களின் வற்புறுத்தலினால் மாலையை தனது கழுத்தில் அணிந்துவிட்டு, உடனடியாக அதைக் கழற்றி பாபாஜானிடம் கொடுத்தார். பாபாஜான், அந்த மலர்மாலையை அருகிலிருந்த மேர்வானின் புகைப்படத்திற்கு அணிவித்து, கைகளை அதில் வைத்து கண்கலங்கி அழுதார். பாபாஜான், மெமோவிடம், “**எனது மகன் இந்த முழு உலகையும் ஆட்டிப்படைப்பான். மேலும், இன்று உனக்காக ஓர் ஆச்சரியம் காத்திருக்கிறது**” என்றும் கூறினார்.

மெமோ வீட்டிற்குத் திரும்பி வந்தபோது மகள் மணியின் அழுகுரலைக் கேட்டார். உள்ளே சென்றதும், மணி ஆச்சரியத்தில், “பாருங்கள், ஒரு நூல் என் காலை சுற்றிக்கொண்டு அசைகிறது, ஆனால், காலிலிருந்து விடுபடவில்லை”

என்றதும் மெமோ, மணியின் காலில் சிறிய பாம்பு ஒன்று சுற்றியிருந்ததைக் கண்டு திகிலடைந்தார். சற்று நேரத்தில் அது வேகமாக மறைந்துவிட்டது. மெமோ, அது நூலல்ல, ஒரு பாம்பு என்று மணிக்கு விளக்கிக் கூறினார்.

மெஹர் பாபாவின் ஐந்து சத்குருக்களும் வெளிப்படையாக அவர்களின் அன்பை அவர் மீது பொழிந்தனர். இந்த நேரத்தில், பாபாஜான், கண்களில் நீர் ததும்ப, பாபாவின் புகைப்படத்திற்குத் தலை வணங்குவதாகத் தொடர்ந்து பூனாவிலிருந்து செய்திகள் வந்த வண்ணம் இருந்தன.

சத்குரு உபாஸனி மஹாராஜ் அவருடைய சீடர்களிடம், "இங்கே எதுவும் இல்லை; அரன்காவ்மில் இருக்கும் மேர்வானிடம் செல்லுங்கள்" என்று கூறியதாக ஸக்கோரியிலிருந்து செய்திகள் வந்தன. அதுபோல, நாராயண் மஹாராஜ் அவருடைய பக்தர்களை மெஹராபாத்திற்கு அனுப்பி வைத்து, மெஹர் பாபாவின் இறை தன்மையை வெளிப்படையாக அங்கீகரித்து, இந்நாட்களில் அவரைத் தொடர்ந்து நினைவில் கொண்டார்.

ஒரு முறை, நாராயண் மஹாராஜ் மெஹராபாத்திற்கு வந்தார். அவர் அடிக்கடி இந்திய தேசம் முழுவதும் யாத்திரை செய்வது வழக்கம். கேட்காவ்மிலிருந்து ஒரு நாள் அவர் வடக்கு நோக்கி பயணம் செய்யும்போது, அஹமதுநகரை கடந்து செல்லும் வேளையில், திடீரென ரயில் நின்றது. நாராயண் தன்னுடனிருந்த சீடர்களிடம் என்ன நடந்தது என வினவ, அவர்களுக்கு எதுவும் தெரியாத பட்சத்தில், அடையாள விளக்கு இல்லாமலோ, அல்லது தண்டவாளத்தில் ஏதோ தடை இருக்கலாம் எனக் கூறினர். நாராயண் மஹாராஜ் அவர்கள் சொன்னதை மறுத்து, "மெஹர் பாபாவின் ஆசிரமம் இங்கே உள்ளது; சென்று பாருங்கள்" என்றார். ஆச்சரியமடைந்த அவருடைய சீடர்கள் கதவைத் திறந்து வெளியே பார்த்தபோது, அங்கே மெஹர் பாபா ஒரு மரத்தின் கீழ் கரங்களைக் குவித்தபடி நிற்பதைக் கண்டனர். தண்டவாளத்தின் அருகில் பாபாவின் மண்டலியும் வரிசையாக கைகளைக் கூப்பிய வண்ணம் நின்று கொண்டிருந்தனர்.

மெஹர் பாபா அருகில் நின்று கொண்டிருப்பதை நாராயண் மஹாராஜுக்குத் தெரிவித்ததும், அவர் தனது இருக்கையிலிருந்து எழுந்து வந்து வாசலருகில் நின்று அமைதியாக, பாபாவை உற்று நோக்கினார்.

மண்டலி முன்வந்து மஹாராஜை வணங்கினர்; அவ்வாறே மஹாராஜின் மண்டலியில் சிலர் ரயிலிலிருந்து இறங்கி மெஹர் பாபாவை வணங்கினார்கள். சில நிமிடங்களுக்குப் பிறகு, நாராயண் மஹாராஜ் சைகையால் பாபாவிடம் "நான் போகலாமா?" என வினவினார்; பாபா கையசைத்து அவருக்கு விடையளித்தார். இந்த சம்பவம் அனைத்தும் முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டது போலத் தோன்றியது. எவ்வித தடைகள் இல்லாதபோதும் ரயில் திடீரென நின்றதன் காரணம் தெரியாமல் ரயில்வே பொறியியலாளர் மற்றும் நடத்துனர்கள் ஆச்சரியப்பட்டதை மண்டலி மஹாராஜுக்குத் தெரிவித்ததும், அவர் புன்முறுவல் செய்தார்.

நாராயணன் மஹாராஜ் அஹமதுநகர் வழியாக ரயிலில் பயணம் செய்யும்போதெல்லாம், ரயில் அரன்காவ்ம் வந்ததும் தவறாமல் அங்கு நிற்பதும், அதேவேளையில் மஹாராஜ் அவருடைய சீடர்களிடம் நாம் அரன்காவ்ம் வந்து விட்டோமா எனக் கேட்பதும் வழக்கமாக இருந்தது. அனைவரும் ஆச்சரியத்தோடு ஜன்னல் வழியாக மெஹராபாத் மலையைப் பார்ப்பதையும் வழக்கமாகக் கொண்டனர். சில கண நேரத்தில் ரயில் மறுபடியும் தொடர்ந்து செல்லும்.

மெஹர் பாபாவின் முக்கிய சீடர்களில் ஒருவர் சாஞ்சி, செப்டம்பர் 11ஆம் நாள் மும்பைக்குச் சென்று அவருடைய சகோதரர் நவ்ரோஜி தாதாசாஞ்சி குடும்பத்துடன் திரும்பி வரும் வேளையில், அவரது தட்டச்சு இயந்திரத்தையும் எடுத்து வந்தார். பாபா, மண்டலி அல்லது மாணவர்களுக்கு சொற்பொழிவு மற்றும் விளக்கங்கள் அளிக்கும் போதெல்லாம், சாஞ்சி சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்துக் கொள்வது வழக்கம். நள்ளிரவில் தூங்காமலிருந்து அதை விரிவுபடுத்தி எழுதி, அடுத்த நாள் பாபாவிடம் கொடுத்துத் திருத்தங்கள் செய்து வாங்கினார்.

1926, செப்டம்பர் 11ஆம் நாளிலிருந்து, சாஞ்சி ஒரு குறிப்புப் புத்தகத்தில் அன்றாட நிகழ்வுகளை எழுதிவந்தார். சாஞ்சியின் இந்த முயற்சியால் கணிசமான அளவில் ஆதாரத் தொகுப்புகள் உருவாயின. இது வருங்கால சந்ததியினருக்கு பாபாவின் தெய்வீக விளையாட்டின் உணர்வைப் பாதுகாக்கும் பொக்கிஷமாக அமைந்தது.

செப்டம்பர் 19ஆம் நாள் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**வாழ்வின் ஒரு சிறிய கணத்தை, சத்குருவின் சகவாசத்தில் செலவிடுவது என்பது, நூறாண்டு காலம் கைகளில் மணிமாலையுடன் கடவுள் நாமத்தை உச்சரிப்பதைக் காட்டிலும் சிறப்புமிக்கது. அல்லது விவேகானந்தா கூறியது போல், "ஒரு சத்குருவின் புகைக்குழலைப் பற்ற வைப்பது என்பது பல்லாயிரக்கணக்கான வருடங்கள் தியானம் புரிவதற்கு இணையானது."**

இவ்வேளையில், மெஹராபாத்தில் பெண் மண்டலி இன்னமும் தபால் நிலைய கட்டிடத்தில் தங்கி வந்தனர், அதை பாபா மூங்கில் சுவரால் மதில்போல மறைத்துக் கட்டியிருந்தார். பாபா அவர்களை அதனுள்ளேயே கிரிக்கெட் விளையாடக் கூறி, அவ்வப்போது பாபாவும் அதில் பங்கெடுத்தார்.

தவுலத்மாயின் இளைய சகோதரர் கர்னல் மேர்வான் ஸொராப் ஈரானி, (COLONEL MERWAN SOHRAB IRANI) ஒரு மருத்துவ நிபுணர்; ஆங்கிலேய ராணுவத்தில் மிகப்பெரிய பதவியில் இருந்தார். தவுலத்மாயின் கணவர் மறைந்த பின்பு, கர்னல் ஈரானி, தவுலத்மாய் மீது கொண்டிருந்த பேரன்பால் அவர்களை கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஆனால், தவுலத்மாய் அவரது இரண்டு மகள்களுடன், முதலில் சத்குரு உபாஸனி மஹாராஜின் தொடர்பில் வந்த பிறகு, மெஹர் பாபா வாழ்ந்து வந்த அரன்காவ்ம் எனும் பாழடைந்த

வனப்பகுதியில் வந்து வாழ்ந்ததை எண்ணி, கர்னல் ஈரானி பெரிதும் கவலைப்பட்டார். அவர், தனது சகோதரியின் பக்தியை, குருநாதர்கள் தவறான வழியில் பயன்படுத்த நேரிடும் என்று அஞ்சினார். கர்னல் ஈரானி மேலதிரியாக உயர்ந்த பதவியில் இருந்ததால், தன்னுடைய சகோதரி, குழந்தைகளுடன் பூனா வந்து அவருடன் வாழவேண்டும் என்று விரும்பினார். தவுலத்மாய் அதற்கு ஆர்வம் காட்டாததால், ஏமாற்றமடைந்த கர்னல் ஈரானி, தனது சகோதரியை, பணம் மற்றும் சொத்திற்காக பாபா ஏமாற்றி விட்டதாக முடிவு செய்தார்.

கர்னல் அவருடைய பதவியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, பாபாவின் கடுமையான எதிர்ப்பாளராக மாறி, அவருடைய பணிகளுக்குத் தடையாக இருந்தார். பார்சி நாளிதழில் பாபாவைப் பற்றிய தவறான, கற்பனை கதைகளை கர்னல் ஈரானி வெளியிட்டது, பார்சி சமுதாய மக்களிடையே பாபாவின் இறை நிலையைப் பற்றிய சந்தேகத்தை எழுப்பியது.

1926, செப்டம்பர் 20 காலை வேளையில் கர்னல் ஈரானி, டெக்கன் கல்லூரியில் கணித பேராசிரியராகப் பணிபுரிந்த தீன்ஷா கபாடியாவுடன் (DINSHAH KAPADIA) மெஹராபாத்திற்கு வந்தார். ருஸ்தம் அவர்களை வரவேற்று ஆசிரமத்தைச் சுற்றிக் காண்பித்தார். அவ்வேளையில் கர்னல் ஈரானி ருஸ்தத்தின் மனைவி ஃபிரீனியின் தாய் மாமா என்று அவருக்குத் தெரியாது. ஆனால், கர்னல் ஈரானி பல வருடங்களாக மெஹர் பாபாவைக் கண்டனம் செய்து, அவதூறான செய்திகளைப் பரப்பி வந்தார் என்பது ருஸ்தத்திற்குத் தெரியும்.

பெஹராம்ஜி அங்கு வந்தவர்களில் கர்னல் ஈரானியை அடையாளம் கண்டு, ருஸ்தத்தை எச்சரிக்கையாக இருக்கக் கோரினார்.

பேராசிரியர் கபாடியா டெக்கன் கல்லூரியில் படித்த மோகன் ஷகானே என்பவரை ஏற்கனவே அறிந்திருந்தார். ஆசிரமத்தில் மோகனைப் பார்த்ததும், கபாடியா, "உன்னைப்போல் ஒரு திறமையான இளைஞன், இதுபோன்ற மூடநம்பிக்கையும், முட்டாள்தனமும் நிறைந்த இடத்தில் நேரத்தை வீணாக்குவது நல்லதல்ல" என்று கடுமையாகக் கண்டித்தார். மோகன் உடனே மெஹர் பாபாவைக் குறித்து விபரமாக எடுத்துரைத்தும், பேராசிரியர் திருப்தியடையாமல், குறைகாணும் நோக்கத்தில், "இங்குத் தேவையான பணமெல்லாம் எங்கிருந்து வருகிறது?" எனக் கேட்டார்.

மோகன் உடனே, "எனக்கு அதைப் பற்றியெல்லாம் கவலைப்படத் தேவையில்லை. எனக்குத் தெரிந்ததெல்லாம் ஏழைகள், நோயாளிகள், ஆதரவற்றவர்கள் அனைவருக்கும் வேண்டிய சேவை இங்கே வழங்கப்படுகிறது."

கர்னல் ஈரானி உடனே இடையில் குறுக்கிட்டு, "இவையெல்லாம் ஒரு சுய விளம்பரம், தவறான ஆன்மீக மகத்துவத்தை எடுத்துக் காட்டும் ஒரு அமைப்பு" என்று கூறினார். இந்தக் கசப்பான கருத்துக்கள், விரும்பத்தகாத வாதத்தை மண்டலி, மற்றும் கர்னல் ஈரானி இடையே ஏற்படுத்தின. கர்னல் ஈரானி, கபாடியா இருவரும் ஸொராஸ்டர், புத்தா, கிறிஸ்து மூவரும் சாதாரண மனிதர்கள், அவர்களை, புராண கதைகள் பெரிய ஆன்மீக ஞானிகளாக

எடுத்துக்காட்டின என்று கூறியதும், மண்டலி அவரோடு வாதம் செய்வதை நிறுத்திவிட்டனர்.

இத்தனை சர்ச்சைகளுக்குப் பின்னரும், வந்தவர்கள் பாபாவை சந்திக்க விரும்பினர். பாபா சாதாரணமாக அதிகாலையில் அவரது குடிலிலிருந்து வருவது வழக்கம்; ஆனால் அன்று தாமதாமாக, காலை 10.30 மணிக்கு வந்தார். பாபாவின் அறையில் நுழைவதற்கு முன்னர் அவர்களின் காலணிகளைக் கழற்றிவிட்டு உள்ளே நுழையுமாறு ருஸ்தம் கூறியபோது, அது அவர்களை அவமானப்படுத்தியதாக நினைத்து, மூன்று மணிநேரம் காத்திருந்தும், பாபாவை சந்திக்காமலே ஆவேசமாக வெளியேறினர். பாபாவை நேருக்கு நேராக, இப்போது மட்டுமல்ல எப்போதுமே, சந்திக்கும் வாய்ப்பு கர்னலின் விதியில் இல்லாமலாயிற்று!

கர்னல் ஈரானியின் மூத்த சகோதரி, ஃபிரீனி (பாதிரியின் தாயார்) பாபாஜானின் இருப்பிடத்திற்கு அருகில், சார்பவ்டி என்ற இடத்தில் குடியிருந்தார். ஃபிரீனி, பாபாஜானிடம் கொண்டிருந்த பக்தி, மற்றும் அவர் தன்மகன் பாதிரியை மெஹர் பாபாவின் ஆசிரமத்திற்கு அனுப்பியதைப் பற்றியும் கர்னல் தவறாகவே கருதினார். கர்னல், மெஹராபாத்திற்கு வந்த அந்த நாள், பாதிரி மிகவும் மனம் தளர்ந்து, மெஹராபாத்தைவிட்டு வெளியேறும் மனநிலையில் இருந்தார். ஒருவேளை பாதிரி, கர்னலை சந்தித்திருந்தால் தாய் மாமாவுடன் பூனா திரும்பிச் சென்றிருப்பார்.

கர்னல் ஈரானி திரும்பிச் சென்றதும், பாபா உலக எண்ணம் படைத்த மக்களைப்பற்றிய கருத்தைத் தெரிவித்தார்:

**மது, மாது மற்றும் செல்வத்திற்குப் பின்னால் 24 மணி நேரமும் செல்பவர்கள், சத்தியத்தை விமர்சிப்பது அல்லது அதைப் பற்றிப் பேசுவது, சுத்த பாசாங்குத்தனமாகும். ஒரு கணம் கூட சத்தியத்தைப் பற்றி எண்ணிப் பார்க்காமல், எப்பொழுதும் உலக சொத்து சுகங்களுக்குப் பின்னால் அலைந்து திரியும் இத்தகைய மக்களுக்கு, உண்மைப்பொருளைப் பற்றிய கருத்து எப்படி இருக்க முடியும்?**

**மனித மனமானது அதன் எண்ணங்களை அப்படியே பின்பற்றும் தன்மையுடையது. மதம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் கூட, அவனே அனைத்திலும் சிறந்தவன் என்று எண்ண வைக்கும். பார்சிகள், அவர்களின் மதம் மட்டுமே அனைத்திலும் உயர்ந்தது, பிற அனைவரும் தீண்டத்தகாதவர்கள் என்று கருதுகிறார்கள். முஸ்லிம்களும் அதே வகையைச் சார்ந்தவர்கள்; அவர்களுக்கு இஸ்லாம் மற்றும் முஹமது மட்டுமே உண்மையானது; மேலும் இதர மக்களெல்லாம் கடவுள் நம்பிக்கையற்றவர்கள். கிறிஸ்தவர்கள் ஒன்றும் குறைந்தவர்கள் அல்ல. அவர்களுக்கு கிறிஸ்துவே மனித குலத்தின் ஒரே இரட்சகர், இதர மக்கள் அனைவரும் புறஜாதிகள்.**

**கர்னல், என்னை சந்திக்க முடியாதது மிகவும் வருந்த தக்கது, இல்லையேல் அவர் தனது வாழ்க்கையின் விரிவுரையை என்னிடமிருந்து பெற்றிருப்பார்! நான் அவருக்குப் பொருத்தமான பதிலைக்**

**கொடுத்திருப்பேன், அது அவரது மனதிலிருந்த எல்லா ஆணவங்களையும் துரத்தியிருக்கும்.**

**எதுவாயினும், அவரது விரும்பத்தகாத விமர்சனம் மற்றும் மோசமான நோக்கங்கள் இருந்த போதிலும், அவர் எனக்காக மூன்று மணி நேரம் காத்திருந்தது, அதற்குரிய பலனை வழங்காமல் போகாது. அவரது தற்செயலான புனித யாத்திரைக்காக அவருக்கு வேண்டிய வெகுமதி நிச்சயம் கிடைக்கும். அவரோடு வந்தவர்களும் அதன் பயனை அடைவார்கள். கர்னல் ஈரானி, சத்குரு உபாஸனி மஹாராஜை சந்திக்கச் சென்றபோது, அவருடைய உள்நோக்கம் சரியாக இல்லாததால், அவரை அங்கிருந்து ஒரு துளி நீரைக் கூடப் பருக மஹாராஜ் அனுமதிக்கவில்லை; மஹாராஜ் அவரை சந்திக்கவுமில்லை. கர்னல் அனைத்து சாபங்களையும் கொட்டித் தீர்த்து அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.**

**கர்னல் ஈரானி உண்மையிலே மிகுந்த ஆர்வமும், பக்தியும் நிறைந்த ஸொராஸ்டிரியன். அவர் ஸொராஸ்டிரிய மதத்தின் மேன்மையைக் குறித்துப் புத்தகம் வெளியிட்டுள்ளார், அதில் அவர் ஸொராஸ்டரின் நல்லொழுக்கங்களைப் புகழ்ந்தும், அதே வேளையில் பூசாரி வர்க்கங்கள் பரப்பிய சடங்கு, சம்பிரதாயங்களை இழிவுபடுத்தியும் கூறியுள்ளார்.**

ருஸ்தம் இவ்வாறு குறிப்பிட்டார், "கர்னல் இங்கு நடப்பதையெல்லாம் பார்த்து ஏளனமாகப் பேசினார். அவர் ஸொராஸ்டரின் வாழ்க்கை வரலாற்றை ஆழமாகக் கற்றறிந்ததாகவும், ஆனால் இங்கு மெஹராபாத்தில் நடப்பது எதுவும் அவ்வளவு சிறப்பாக இல்லை எனவும் கூறினார்."

பாபா பதிலளித்தார், "**ஸொராஸ்டர் அக்காலத்தில் நிலவிய சூழ்நிலைகளுக்கு உகந்தாற்போல் அனைத்தையும் செய்தார். இப்போது நான் இக்கால நடைமுறைகளுக்குத் தகுந்தாற்போல், எது நல்லதோ அதை உங்களிடம் செய்யச் சொல்கிறேன். நீங்கள் அதைக் கடைப்பிடிக்க விரும்பினால் சரி, இல்லையேல் என்னைவிட்டுச் சென்றுவிடுங்கள்! நீங்கள், உங்கள் உறவினர்கள், நண்பர்கள், ஏன் இந்த முழு உலகமும் என்னைப் பின்பற்றினாலும், இல்லையென்றாலும் எனக்கு என்ன? நான் என்னவாக இருக்கிறேனோ , அவ்வாறே இருக்கிறேன்!**"

பாபா முன்கூட்டியே பலமுறை கூறியதுண்டு, பார்சிகளும், ஈரானிகளும் அவர் இறப்புக்குக் காரணமாக இருப்பார்கள் என்று! ஆனால், அது அவருடைய பௌதீக உடலின் இறப்பைக் குறிப்பதல்ல. வெளியுலகில் யார் ஒருவருக்குமே இது தெரியாது என்றாலும், பாபா கூறியதன் அர்த்தம், அவருக்கும் அவருடைய பணிகளுக்கும் கடுமையான எதிர்ப்பாக இருப்பார்கள், அவரது ஆழமான ஆன்மீக நோக்கங்களுக்கு அது அவசியம் என்றுதான் எதிர்மறையாகப் பொருள்பட கூறினார்.

கர்னல் ஈரானி, மெஹர் பாபாவிற்கு எதிராக, தொடர்ந்து ஏறக்குறைய 35 வருடங்கள் மிகவும் தீய வழியில் தவறான பிரச்சாரம் செய்துவந்தார். ஆனால் இந்தப் பகைமையும், எதிர்ப்பும் பாபாவின் உட்பணிக்கு ஓர் ஊடகமாக இருந்தன,

ஏனெனில் இவருடைய அவதூறான செய்திகள் வழியாக, பலர் மெஹர் பாபாவைப் பற்றி தெரிந்து கொண்டனர். அவர் எழுதிய தகவல்கள் தவறானவை என்றாலும் இது மக்களிடையே ஆர்வத்தைத் தூண்டி, இறுதியில் பாபாவை நேரடியாக சந்திக்கச் செய்தது. மெஹர் பாபாவின் தரிசனத்திற்காகச் சென்றபோது, அவருடைய அன்பான பிரசன்னத்தின் இனிமையான அமிர்தத்தால் அவர்கள் வரவேற்கப்பட்டனர். ஏராளமான ஈரானி மற்றும் பார்சிகளிடையே பாபாவின் மீதான நம்பிக்கை, படிப்படியாக ஒளிர்ந்தது. அனைவரும், நாளடைவில், மெஹர் பாபாவின் அரவணைப்பில் வந்தனர்.

இவ்வாறு, கர்னல் ஈரானியின் எதிர்ப்பு மூலமாக, பெரிய அளவில் ஒரு பணி நிறைவேறியது; இறுதியில் அனைவரும் சாதகமான விளைவு ஏற்பட்டதைக் காணமுடிந்தது. இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, கர்னல் ஈரானி, அவருக்குத் தெரியாமலே கணிசமான சேவை செய்துள்ளார். பாபா, அவரைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்: **“இந்தக் கர்னல் என்னையே நினைத்துக்கொண்டு இருப்பதால் - எப்படி நினைக்கிறார் என்பது ஒரு பொருட்டல்ல - அவர் ஓர் அதிர்ஷ்டசாலி.”**

இதற்கிடையில், பூனாவில் ஸொராஸ்டிரிய மக்களும் மெஹர் பாபாவின் தாயாரைத் தொடர்ந்து ஏளனம் செய்து, அவதூறாகப் பேசிவந்தனர். அவருடைய நண்பர்களும், அக்கம் பக்கம் உள்ளவர்களும் சமுதாயத்திற்கு பயந்து வெளிப்படையாக ஆதரவைத் தெரிவிக்காமல் அமைதியாக இருந்தனர். மெமோ சற்றும் பயமின்றி, எதையும் கருத்தில் கொள்ளாமல், அவர் பெரிதும் விரும்பும் நாடகங்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகளைக் கண்டு ரசித்து வந்தார்.

இந்திய தேசத்தில் சாது, சன்னியாசிகள் அவரவர் வாழ்க்கையைத் துறந்து, நாடெங்கும் கடவுளைத் தேடி அலைந்து திரிந்து, யாசித்து வாழ்வதை நாம் சாதாரணமாகக் காணமுடியும். 1926, செப்டம்பர் 21ஆம் நாள் மெஹர் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**உலக வழிகளில் கோழையாக இருக்கும் ஒருவன், ஆன்மீகப் பாதையில் வீரனாக இருக்கிறான். ஒருவேளை நீங்கள் நினைக்கலாம், உலக வழியில் போவதை விட, அதைத் துறந்து ஆன்மீகப் பாதையில் பயணிப்பது எளிதானது என்று; ஆனால் அப்படியல்ல, அது மிகவும் கடினம். உயிரைக் கொடுக்க விரும்பும் ஒருவர் மட்டுமே துறவறத்தைப் பற்றி முடிவெடுக்க வேண்டும்.**

**வெளியளவில் துறவறம் என்பது அர்த்தமற்றது; அது உள்ளளவில் வேண்டும். தன்னையே துறக்க விருப்பமில்லாத ஒருவன் இறைவனிடம் அன்பு காட்டுவது என்பது இயலாத காரியம்.**

மெஹர் பாபா, மண்டலிக்கு ஒருவரின் மரணத்திற்குப் பின்னர் உள்ள நிலையைப் பற்றி விளக்கினார்:

ஒருவரின் இறப்பு என்பது அவரது மனப்படிவங்கள் விரயமாகும் வேளையில், அதாவது முற்றிலுமாகச் செலவழிக்கப்பட்டதும் நடக்கும் நிகழ்வு. ஒருவர் உயிரைத் துறந்ததும் மனப்படிவங்கள், பௌதீக உடலோடு மனதிற்குள்ள தொடர்பைத் துண்டித்துவிடும். அந்த நேரத்தில் அவர் அடையும் அத்தகைய அதிர்ச்சியில், தனது கடந்தகால வாழ்க்கையின் ஒவ்வொரு சம்பவத்தையும் மறந்து விடுகிறார். பௌதீக உடல் மறைந்தாலும் ஆழ்மன மற்றும் சூட்சும உடல்களில் மனப்படிவங்கள் நிறைந்திருக்கும்.

மரணத்தை அடுத்து, 40 - 70 மணி நேரத்திற்கு மனப்படிவங்களின் கவனம் பெரும்பாலும் உடல் வைக்கப்பட்டுள்ள இடத்தை மையமாகக் கொண்டிருக்கும். ஆனால், அதற்குப் பின்னர் உடலைத் துறந்த நபருக்கும் அந்த இடத்திற்கும் எந்தவித தொடர்பும் இராது. அடுத்த 8 அல்லது 10 நாட்களுக்குள், பௌதீக உடலைத் துறந்தவரின் ஆவியானது, எஞ்சியிருக்கும் மனப்படிவங்களுக்குத் தகுந்தாற்போல, சூட்சும நிலையை அடைந்து சொர்க்கம் அல்லது நரகத்தை அனுபவித்து அடுத்த பிறவியை எடுக்கும்.

பெரும்பாலான மக்கள், ஒருவரின் மரணத்திற்குப் பிறகு, நீண்ட நாட்களுக்கு, சடங்கு, சம்பிரதாயங்களில் ஈடுபடுகிறார்கள், ஆனால் அவையெல்லாம் தேவையற்றவை. இது பணத்தையும் சக்தியையும் மட்டுமே வீணாக்கும். 10 நாட்களுக்குப் பின்னர் எந்த விதமான சடங்குகளும் தேவையில்லை.

இருந்தாலும், மேன்மையான சடங்கு முறை என்பது, மரணமடைந்த ஒருவரின் அருகிலிருக்கும் நாய்கள் அல்லது காகங்களுக்கு உணவிடுவதே ஆகும். ஏனெனில், அவைகளுக்கு இருக்கும் சூட்சும பார்வையால் மறைந்தவரின் ஆவியைக் காணமுடியும். காகம் மற்றும் நாய்களுக்கு, சூட்சும உணர்வுகள் இல்லையென்றாலும் அவை சூட்சும, கருத்து நுட்பமான திறன்களைப் படைத்தவை என்பதால், இறந்தவர்களின் சூட்சும மனப்படிவங்களைத் தம்வசம் ஈர்க்கும் சக்தி படைத்தவையாகும்.

அந்நேரத்தில் பாபா மற்றுமொரு கருத்தைத் தெரிவித்தார் - அதாவது, இறந்தவர் உடலை அடக்கம் செய்வது அனைத்திலும் சிறந்த முறையாகும்.

செப்டம்பர் 26ஆம் நாள் மண்டலியில் பலர், எவ்வித வேறுபாடுமின்றி அனைவருக்கும் ஒரே குடிநீர் வசதிக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முடிவெடுத்தனர். ஆனால், பிராமணர்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாததால், அனைத்து பிராமண மாணவர்களும் அவரவர் இல்லத்திற்குத் திரும்பிச் செல்ல ஆயத்தமாயினர். பாபா அனைவரையும் ஒன்றாக அழைத்து ஒவ்வொருவரின் கருத்தையும் கேட்டார்.

நெடுநேர விவாதத்திற்குப் பின்பு - பொதுவான குடிநீர் வசதி அல்லது வழக்கமான தனித்தனி முறையை தொடர்வது பற்றி - வாக்கெடுப்பு

நடைபெற்றது. பொது வசதிக்கு ஆதரவாக 28 பேரும், எதிராக 28 பேரும் வாக்களித்து சமநிலையை நிலை நாட்டினர். அனைவரும் பாபாவின் ஓட்டுக்காக அவரையே நோக்கினர். பாபா, ஆச்சாரமான இந்துக்களுக்கு, ஏற்கனவே நடைமுறையில் இருப்பதைத் தொடருமாறு வாக்களித்து இவ்வாறு விளக்கமளித்தார்:

**பிற ஜாதிகளைச் சார்ந்த ஏழைகள் மற்றும் ஆதரவற்றோரின் வழியில் தடைகளை வைப்பவர்கள், மேலும் அவர்களின் அடிப்படை நம்பிக்கைக்கு எதிராகச் செல்ல கட்டாயப் படுத்துபவர்கள், குடிநீர் பற்றிய கேள்வியை மட்டும் வலியுறுத்தக் கூடாது. குடிநீர் மட்டும் ஒரு பிரச்சினை அல்ல; நாம் எல்லா வகையிலும், உணவு, உடை, மத நம்பிக்கைகள் போன்ற அனைத்திலும், உண்மையிலேயே நம்மை பாரபட்சமற்றவர்களாகக் கருத விரும்பினால், நாம் அனைவரையும் சமமாகப் பார்க்க, பாவிக்கத் தூண்டுதலாக இருக்கும். ஜாதி, மதம், பிராமணர்கள் அல்லது தீண்டத்தகாதவர்கள் என்ற வேறுபாடு எதுவுமில்லாமல் அனைவரும் ஒரே இடத்தில் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணவேண்டும். இந்தப் பிரச்சினை முற்றிலுமாக ஒரு முடிவுக்கு வரவேண்டும்.**

**வெவ்வேறு மதங்களின் வெளிப்புற அடையாளங்களைத் தவிர்க்கும் வகையில், அனைவரும் காதி, பருத்தி துணியில் உடையணிய வேண்டும். பார்சி மற்றும் இந்து இனத்தவர் கஸ்தி எனும் புனித நூல் அணிவதை விட்டு விடவேண்டும்; முஸ்லிம்கள் தாடிவளர்ப்பதைக் கைவிடவேண்டும். நீங்கள் வாழும் முறையில் முன்னேற்றத்தைக் கொண்டுவர விரும்பினால், அது எல்லா வகையிலும் முழுமையானதாக இருக்க வேண்டும். இல்லையேல், தேவையற்ற நன்மையை அடையும் நோக்கத்தில், நம்மை நம்பியிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை அப்படியே இருக்கச் செய்வது எவ்வகையிலும் நல்லதல்ல.**

**இக்காரணத்துக்காகத்தான் உங்களின் புதிய முறையைக் கையாள வேண்டாமென்று நான் கூறுகிறேன். அனைத்து மக்களிடையே ஒற்றுமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, சாதாரண மனித முயற்சிக்கு அப்பாற்பட்டது. மானிட இனத்திற்கு அப்பாற்பட்ட பெரும் சக்தியால் மட்டுமே இதைக் கொண்டுவர முடியும். அத்தகைய மாற்றத்தை மனித குலத்தின் முயற்சிகள் மூலம் ஒருபோதும் கொண்டுவர முடியாது.**

மெஹர் பாபாவின் அருமையான விளக்கங்கள், நாளடைவில், இந்துக்களின் மனங்களில் ஆழமாக வேரூன்றி, இறைவனின் ஒருமைப்பாட்டுத் தத்துவத்தின் விழிப்புணர்வு, அவர்கள் இதயங்களில் ஒளிர்விட்டது.

அதன் பின்னர் அன்று, பாபா மண்டலிக்கு ஒரு விடுகதையை அளித்து விளக்கம் கோரினார்:

**“உலக பொருட்களில் நாட்டமிக்க ஒருவன், ஒரு மிருகம், ஒரு நாஸ்திகன், ஒரு குழந்தை, மற்றும் ஒரு முட்டாள் இவர்களுக்கும் இறை நிலையை அடைந்த ஒருவருக்கும் இடையே உள்ள ஒற்றுமை என்ன?”**

எவராலும் இதன் பதிலை யூகிக்க முடியாததால் பாபா விளக்கமளித்தார்.

**“மதத்தைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் இருவர் - ஒருவர் உலகப் பொருட்களில் நாட்டமிக்கவர், மற்றொருவர் இறை நிலையை அடைந்தவர்.”**

**“பணத்தைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் இருவர் - ஒன்று மிருகம், இன்னொருவர் இறை நிலையை அடைந்தவர்.”**

**“கடவுளை வணங்காதவர் இருவர் - ஒருவர் நாஸ்திகர், மற்றொருவர் இறை நிலையை அடைந்தவர்.”**

**“காமம் இல்லாதவர்கள் இருவர் - ஒன்று குழந்தை, மற்றொருவர் இறை நிலையை அடைந்தவர்.”**

**“கோபமே வராதவர்கள் இருவர் - ஒருவர் முட்டாள், மற்றொருவர் இறை நிலையை அடைந்தவர்.”**

செப்டம்பர் 29ஆம் நாள், ஒருவர் அவரது மகன் காணாமல் போனதும், மகனைப் பற்றிய குறிப்புகளோடு மெஹர் பாபாவிடம் வந்தார். அவர் மகனைக் கண்டுபிடிக்கும் உண்மையான ஆர்வத்துடன் வந்தாலும், பாபாவை சோதிக்க விரும்பினார். அவர் பாபாவிடம், “என்னுடைய பையன் எங்கே? அவனை நான் எப்போது கண்டுகொள்வேன்?” என்று கேள்வி எழுப்பினார்.

பாபா பதிலாக, “**உங்களுடைய மகனை நாளை கண்டுபிடிக்கலாம்; அதற்காக நீங்கள் உடனே ஷோலாபூர் புறப்பட்டாக வேண்டும்**” என்றார். வந்தவர் அங்கிருந்து கிளம்பும்போது, பாபா அவரைத் திரும்ப அழைத்துக் கண்டித்தார், “**என்னை யார் என்று நினைக்கிறீர்கள்? நீங்கள் என்னை ஒரு சாது என்று நினைப்பதானால், இதுபோன்ற கேள்விகள் கேட்பதன் அவசியம் என்ன? மேலும் நீங்கள் என்னை உங்கள் அதிர்ஷ்டத்தைக் கூறுபவன் என்று நினைத்தால், எனக்குத் தரவேண்டிய கட்டணம் எங்கே?**” என்று கேட்டார்.

வந்தவர் தவறான உள்நோக்கத்துடன் வந்ததை ஒப்புக்கொண்டதும், பாபா அவரை, கேட்காவ்ம் சென்று நாராயண் மஹாராஜின் தரிசனத்தைப் பெறுமாறு கூறியனுப்பினார். போகும் வழியில் கிறிஸ்தவ சபை பள்ளிக்கூடத்தில் அந்த சிறுவனைப் பற்றி விசாரிக்கக் கூறி, ‘**அவனை வெகுவிரைவில் கண்டுகொள்வீர்கள்**’ என்று வாக்குறுதியும் அளித்தார்.

மேலும் ஒரு நபர், அவருக்கு நான்கு மகன்கள், மெஹர் பாபாவை சோதிக்கும் நோக்கத்தில் மெஹராபாத் வந்தார். வந்தவர் பாபாவிடம், “எனக்கு ஒரு குழந்தை பாக்கியத்துக்காக ஆசீர்வதியுங்கள்” என்று வேண்டினார். இறை நிலையை அடைந்த ஒரு குருநாதர் அனைத்தும் அறிந்தவர், ஆனால் எதுவும் அறியாதவர் போல, பாபா அவரிடம் ‘**அப்படியே ஆகட்டும்**’ என ஆசீர்வதித்தார். வந்தவரும் மகிழ்ச்சியடைந்தவர் போல பாசாங்கு செய்து, பாபாவை வணங்கி விடைபெற்றுச் சென்றார்.

கிராமத்திற்குத் திரும்பி வந்ததும், மெஹர் பாபா ஒரு போலி சாமியார் என்றும் அவரை எப்படி முட்டாளாக்கினார் என்பதையும் அனைவருக்கும் தெரிவித்தார். ஆனால், சில நாட்களில் அவருடைய மூன்று மகன்கள் மர்மமாக மாண்டுபோயினர். அப்போது, அவர் ஒரு குருநாதரை சோதிப்பதால் வரும் மோசமான விளைவுகளை உணர்ந்தார். ஒரு குழந்தைக்காக வேண்டிய அவருக்கு இறுதியில் ஒரு குழந்தை மட்டுமே மிஞ்சியது.

அன்றிரவு நட்சத்திரங்களுக்குக் கீழே, பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் பாபா அனைவருக்கும் வழக்கத்திற்கு மாறான ஒரு சுவையான விருந்தளித்தார். மண்டலி உணவைப் பற்றிப் பேச ஆரம்பித்ததும், உரையாடல் பனாரஸில் வாழும் பிராமண உணவுப்பிரியர்கள் பக்கம் திரும்பியது. பாபா 1919ஆம் ஆண்டு உபாஸனி மஹாராஜுடன் பனாரஸ் சென்ற விஷயத்தை நினைவு கூர்ந்தார். கோவிலில் பிராமணர்களைத் தவிர வேறு எவரையும் அனுமதிக்காததால் மஹாராஜுடன் சென்ற பாபா, வேட்டி அணிய வேண்டியதாயிற்று.

கோவிலுக்குள்ளே சென்றதும் மஹாராஜ், அங்குக் கூடியிருந்த பிராமணர்களை மேர்வானுக்கு அடிபணியுமாறு கட்டளையிட்டார், **“அவன் ஜகத்நாராயண், உலகுக்கெல்லாம் கடவுள்! அவன் பாதங்களைத் தொட்டு வணங்குங்கள்”** அனைவரும் மஹாராஜ் கூறியதைக் கேட்டு அவ்வாறே செய்தனர்.

1926, அக்டோபர் 1ஆம் நாள் பாபா, மெஹராபாத்தைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்:

**“இந்த இடம் மிகவும் இன்றியமையாத ஒன்று. ஆன்மீக வழியில் செல்பவர்களுக்கு இது மிகச் சிறந்த இடம். என்னுடைய பணிகளுக்காக நான் வெவ்வேறு இடங்களுக்குச் சென்றாலும், இங்கே திரும்பி வருவது எப்போதுமே சிறப்பானது.”**

தேநீர் வேளையில் பாபா ‘அச்சம்’ குறித்து சொற்பொழிவு வழங்கினார்:

**எதற்கும், எவருக்கும் அஞ்சாதீர்கள்; மேலும் உங்கள் மனசாட்சிக்கு இணங்கினாற்போல் எப்பொழுதும் சரியானதையே செய்யுங்கள். ஒருபோதும் கடவுளுக்கு அஞ்ச வேண்டாம், அவ்வாறு அஞ்சுவதானால், அவரை நீங்கள் எப்படி நேசிக்க முடியும்? உங்களுள் இருக்கும் பரமாத்மாவிற்கு அஞ்சாதீர்கள், ஏனெனில், பரமாத்மா ஒருபோதும் உங்களிடமிருந்து விலகி இருப்பதில்லை. நீங்களே உங்கள் பரமாத்மா (பரமேஷ்வர்), எனவே அவரைக் கண்டு அஞ்சுவதில் எந்த பயனுமில்லை.**

**ஆனால் உலகுக்கும், அதன் ஆளுமையாகத் திகழும் மாயாவிற்கும் அஞ்சுங்கள். இந்தப் பொருளுலகம் கோபம், காமம் மற்றும் பேராசையின் விளைவுகளைச் சார்ந்திருக்கும். இவற்றிற்கு அஞ்சுங்கள், முடிந்தவரை இவற்றிலிருந்து விலகி இருங்கள். வேறு எதற்கும் அஞ்சாதீர்கள்.**

**மக்கள் உண்மையிலேயே கடவுளுக்கு அஞ்சுகிறார்களா? இல்லை. அவர்களின் செயல்கள் சரியாக இல்லை எனும் தருணத்தில், கடவுள்**

**அவர்களை நரகத்தில் தள்ளிவிடுவார் என்ற அச்சுறுத்தலுக்கு அஞ்சுகிறார்கள். அதுபோலவே, இங்கிருக்கும் மாணவர்கள் அர்ஜூனுக்கா அல்லது அவன் கையிலிருக்கும் பிரம்புக்கு அஞ்சுகிறார்களா? அர்ஜுன் மாணவர்களோடு சில நேரங்களில் விளையாடுகிறார், அவர்களும் விரும்பி அவரோடு விளையாடுவதால் நிச்சயமாக பிரம்புக்குத்தான் அஞ்சுகிறார்கள், அர்ஜூனுக்கு அல்ல!**

அக்டோபர் 7ஆம் நாள் மண்டலியுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில், அவர்களில் ஒருவர் பாபாவிடம், "கடவுள் இதையெல்லாம் ஏன் படைத்தார்?" என்ற கேள்வியை எழுப்பினார்.

பாபா அளித்த விளக்கம்:

"**கடவுள் இதைப் படைக்கவில்லை. இது தானாகவே உருவானது. ஆரம்பத்தில் வேறு எதுவும் இல்லாத வேளையில், கடவுள் மட்டுமே இருந்தார். அவருள் அனுபவம், அறிவு, சக்தி, வாழ்க்கை அனைத்தும் அடங்கியிருந்தன. ஆனால் அவருக்கு, கடவுள் எனும் உணர்வு மட்டும் இல்லாமலிருந்தது. உங்களை சூழ்ந்துள்ள அனைத்து தலைவலியும், தொல்லையும் அந்த உணர்வை அடைவதற்காகவே!**"

மெஹராபாத்தில் நிலவிவரும் நாள்பட்ட தண்ணீர் பிரச்சினையைக் குறித்து, பாபா ஒன்றும் அறியாதவர் போலக் கூறினார், "**இங்கிருக்கும் முரண்பாடான நிலவரத்தைப் பாருங்கள்! வெளியிலிருந்து என்னுடைய தரிசனத்திற்காக வருபவர்களின் வேண்டுதல்கள் என் ஆசீர்வாதத்தால் நிறைவேறுகிறது. என் அருளால் அவர்களின் கிணறுகளில் நீர் நிரம்பி வழிகிறது. ஆனால் மெஹராபாத்திலுள்ள மூன்று கிணறுகளிலும் தண்ணீருக்குத் தட்டுப்பாடு.**"

பாபா, அப்போது அஜ்மீரைச் சார்ந்த சத்குரு குவாஜா ஸாஹேப் கிஸ்தி ஒரு மரத்தின்கீழ் பல வருடங்களாக அமர்ந்திருந்த கதையைக் கூறினார்: "**அந்தக் குறிப்பிட்ட மரத்தில் பழங்கள் காய்க்காமல் போனது மட்டுமின்றி, சிறிது காலத்தில் அந்த மரம் காய்ந்து போனது.**"

அவ்வேளையில் அருகிலுள்ள கிராமத்திலிருந்து மெஹராபாத் வந்த விவசாயி, பாபாவை அணுகும்போது மிகவும் மனம் தளர்ந்து காணப்பட்டார். பாபா ஏன், என்ன காரணம் என்று கேட்டதற்கு, அந்த விவசாயி, "நான் ஏழை, ஒரு சிறிய நிலத்தை வாங்கி தண்ணீர் இல்லாத காரணத்தால், அதில் பயிரிட முடியாத நிலையில் உள்ளேன். கடன் வாங்கி கிணறு வெட்டினேன், ஆனால் அதில் தண்ணீரும் வரவில்லை. இப்போது நான் மிகுந்த சிரமத்தில் இருக்கிறேன்" என்று கூறினார்.

"**உங்களுக்கு என்ன வேண்டும்?**" பாபா வினவினார்.

"நீங்கள் ஒரு சிறந்த ஞானி; நான் உங்களிடமிருந்து தண்ணீரைக் கேட்டு பெற வந்துள்ளேன். எனக்குத் தண்ணீர் கிடைத்து விட்டால் பிரச்சினைகள்

அனைத்தும் தீர்ந்துவிடும். நீங்கள் இந்த வரத்தை வழங்குவீர்கள் என்று முழுமையாக நம்புகிறேன்."

**"நீங்கள் எவ்வளவு ஆழம் தோண்டினீர்கள்?"**

"நாற்பது அடி."

**"தோண்டுவதை நிறுத்தாதீர்கள். மேலும் ஐந்து அடி ஆழத்திற்குத் தோண்டுங்கள். கடவுள் நல்லவர், அவர் உங்களுக்கு உதவுவார்."**

அந்த விவசாயி, பாபா அளித்த பதிலில் திருப்தியடைந்து திரும்பிச் சென்றார்.

மெஹர் பாபா, அப்போது, மண்டலிக்கு இவ்வாறு குறிப்பிட்டார்:

**"இன்று நான் பெரிய தவறு ஒன்றை இழைத்து விட்டேன். இதை நான் எப்படிச் செய்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. நான் அந்த விவசாயியிடம் மேலும் ஐந்தடி ஆழத்திற்குப் போகச்சொன்னேன். அதிலும் தண்ணீர் வரவில்லையென்றால் என்னவாகும்? அவர் என் மீதும், கடவுள் மீதும் வைத்திருக்கும் நம்பிக்கையை இழந்து விடுவார். இங்கே நீங்கள் ஆழமாகத் தோண்டியும் என்னுடைய கிணற்றில் தண்ணீர் வரவில்லை. அப்படியானால், அவருக்கு மட்டும் எப்படிக் கிடைக்கும்? இன்று ஒரு பெரிய தவறு நடந்துவிட்டது."**

ஒரு வாரத்திற்குப் பின்னர் அந்த விவசாயி கிராமத்திலுள்ள அனைவரோடும், மேளதாளத்துடன் பாபாவிற்கு ஆரத்தியும், பூஜையும் செய்வதற்காக வந்தார். அவர் மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். பாபா, அவருடைய மகிழ்ச்சியின் காரணத்தை வினவிய போது, இவ்வாறு பதிலளித்தார், "உங்கள் கருணையால் என்னுடைய கிணற்றில் தண்ணீர் கிடைத்தது." அவர் பாபாவிற்கு மாலை அணிவித்து, ஆரத்தி எடுத்து பூஜை செய்தார். அவர்களுக்குப் பிரசாதம் வழங்கியதும், கிராமத்தினர் அனைவரும் பாபாவின் மகிமையைப் பாடிக்கொண்டே சென்றனர். கிராமத்தார் அனைவரும் திரும்பிச் சென்ற பின்பு, பாபா மண்டலியிடம் இவ்வாறு கூறினார்:

**"என்னை நம்புங்கள். நான் உங்களுக்கு உண்மையைத்தான் கூறுகிறேன். நான் எதுவும் செய்யவில்லை. அந்த விவசாயியின் நம்பிக்கையே அவருக்குத் தண்ணீரைத் தந்தது."**

பாபா கூறியதை ருஸ்தத்தால் ஜீரணிக்க முடியவில்லை. "அப்படியானால், எங்களுக்கு என்னாவது? நாங்களும் கிணறு வெட்டுகிறோம், ஆனால் தண்ணீர் வரவில்லை."

பாபா பதிலளித்தார், **"நான் கடவுள், மேலும், நான் எனக்காக உங்களிடம் கிணறு வெட்டக் கூறினேன். நான் நம்பிக்கை வைக்க இங்கு என்னைத் தவிர வேறு எவரேனும் இருந்தாக வேண்டும், ஆனால் நான் மட்டுமே இருப்பதால் யார் மீது நான் நம்பிக்கை வைப்பேன். எனக்குத் தெரியும், நம்பிக்கை பலனளிக்கும் என்று. ஆனால், நம்பிக்கை என்று ஒன்றை வைக்க எவரேனும் இருக்கவேண்டுமே! மேலும் அவ்வாறு நம்பிக்கை வைக்க எவருமே இல்லை ஆதலால் உங்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை."**

ருஸ்தம் உடனே கூறினார், “ஆனால் நாங்கள் உங்களிடம் நம்பிக்கை வைத்துள்ளோம். ஏன் எங்களுக்கு அதுபோலத் தண்ணீர் கிடைக்கவில்லை?”

**“எனக்கு அதைப்பற்றித் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் எனக்கு நன்றாகத் தெரியும், அந்த விவசாயி அவருடைய நம்பிக்கையின் காரணமாகத் தண்ணீரைக் கண்டுகொண்டார். நான் அவருக்காக எதுவும் செய்யவில்லை.”** பாபா அதையே திரும்பத் திரும்பக் கூறியதால் ருஸ்தம் எரிச்சலடைந்தார்:

“உங்களோடு இருப்பதால் எங்களுக்கு எந்த பலனுமில்லை. எங்களுக்கு உங்கள் மீது நம்பிக்கையில்லை என்று நீங்கள் நினைப்பது தெளிவாகத் தெரிகிறது. இரவு பகலெல்லாம் நாங்கள் உங்களோடு இருந்தும், உங்கள் மீது எங்களுக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை என்று நீங்கள் நம்புகிறீர்கள் - ஒரு நாள் திடீரெனத் தோன்றிய அந்த விவசாயி, வேண்டிய தண்ணீரை அடையும் அளவுக்கு, நம்பிக்கை வைத்திருக்கிறார்!”

பாபா உள்ளூர அமைதியாக நகைத்து, விளக்கமளித்தார்: **“அந்த விவசாயி தண்ணீருக்காக வந்தார், அவருடைய நம்பிக்கை, தண்ணீர் கிடைப்பதை மட்டுமே சார்ந்திருந்தது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளமாட்டீர்கள். அவருக்குத் தண்ணீர் கிடைத்திராவிடில் அவர் கிராமத்து மக்களிடம், ‘மெஹர் பாபா என்னிடம் மேலும் ஐந்தடி ஆழம் தோண்டும்படிக் கூறினார். அவ்வாறே நான் செய்தேன், ஆனால் தண்ணீர் வரவில்லை. நான் அவரிடம் சென்றதில் எனக்கு, பணம், நேரம், சக்தி வீணானதுதான் மிச்சம். அவர் என்னை ஏமாற்றி விட்டார்’ என்று கூறியிருப்பார்.**

**“ஆனால், நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். உங்களின் நம்பிக்கை எதையும் சார்ந்தது அல்ல. உங்களுக்குத் தண்ணீர் கிடைத்தாலும் கிடைக்காவிடிலும், உங்கள் ஆசைகள் நிறைவேறினாலும் இல்லையெனினும், உங்களுக்கு என் மீதான நம்பிக்கை குன்றாமல் குறையாமல் இருக்கும். எனவே, உங்கள் நம்பிக்கை என்னை மட்டுமே சார்ந்திருக்கிறது, வேறு எதையுமல்ல! ஆகையால், நான் உங்களை முழுவதுமாக நம்பலாம். தண்ணீருக்காக வந்த அந்த விவசாயியை நான் பூரணமாக நம்ப முடியாது. நான் உங்களை முழுமையாக நம்புமளவுக்கு நீங்கள் உண்மையிலே எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்; ஆனால், நீங்கள் அவரை மாதிரி இருக்க விரும்பினால், உங்களுக்கும் தண்ணீர் கிடைக்கும். உங்களுக்குத் தண்ணீர் வேண்டுமா அல்லது நான் வேண்டுமா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.”**

மெஹர் பாபாவின் விளக்கத்தைக் கேட்டு, மண்டலி சமாதானம் அடைந்தனர். பாபா தொடர்ந்து, **“நான் நிர்வாணமாக உங்கள் முன்னால் நடனம் ஆடினாலும் என்மீது உங்களுக்கான நம்பிக்கை மாறவே மாறாது. ஏனெனில் நீங்கள் என்னைக் கடவுளாக ஏற்றுக்கொண்டு விட்டீர்கள். கிராமத்தார் என் மீது வைத்திருப்பது, ‘நம்பிக்கை எனும் வழிபாட்டு உருவத்தின்’ அடிப்படையில் உள்ளதால், கடவுள் இரக்கப்பட்டு அவரது**

**நம்பிக்கையின் வேண்டுதலைப் பூர்த்தி செய்தார். கடவுள் உங்களுக்காகவும் இரக்கப்படுகிறார் - ஆகையால் அவர் உங்களைத்** (அகந்தையை) **துண்டுதுண்டாக உடைக்கிறார். நான் உங்களை என்னோடு இங்கு வைத்திருப்பது 'நம்பிக்கை' எனும் வழிபாட்டு உருவத்தைத் திருப்தி படுத்த அல்ல; ஆனால் அதைச் சுக்குநூறாக உடைப்பதற்காகும்.**"

மெஹர் பாபா மேல் மலையிலிருந்து தினமும் மதியவேளையில் கீழே வந்து, துனியின் அருகில் அமர்ந்து அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிப்பதை அவ்வப்போது வழக்கமாகக் கொண்டார். மலையில் மேலும் கீழும் நடந்து வரும்போது, இரண்டு மூன்று முறை வழியில் நின்று, அவருடைய தனித்துவமான முறையில் - சில நேரங்களில் பூமியை வெகுவாக உற்று நோக்கி, விரலால் தரையில் ஏதாவது வடிவங்கள் அமைத்து, அல்லது வெறுமனே தூரத்தில் இருக்கும் பொருட்களை கூர்ந்து கவனித்துக் கொண்டும் இருப்பதுபோலத் தென்பட்டார்.

காலம் இவ்வாறு பறைசாற்றியது:

"பாபா ஓர் இறை சக்தி, பிரபஞ்சத்தின் மையம், பூமியின் ஆதாரம். ஆகையால் அவருடைய ஒவ்வொரு செயலும் அவரின் உள்ளளவிலான, கண்ணுக்குப் புலப்படாத, ஆன்மீகப் பணியின் பிரதிபலிப்பாகும். இப்பூவுலகின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை அவதார புருஷர் ஏற்றுக் கொள்வதால், உலகளாவிய அளவில் வரும் இடர்பாடுகளை மானிடனுக்காக அவர் மீது எடுத்துக் கொள்கிறார்."

அந்தத் துன்பங்கள் 1926, அக்டோபர் மாதம் பாபா இரவில் ஓய்வெடுக்கும் வேளையில் கண்கூடாகத் தென்பட்டன.

ஆதி ஈரானி இரவு கண்காணிப்பாளராக நான்கு மணி நேரம் பாபாவின் அருகில் இருந்துவந்த வேளையில், பாபா அவரது கால்களை அமுத்தி விடுமாறு கூறினார். ஒரு முறை ஆதி, பாபா கண்கலங்கி கண்ணீர் விடுவதை கவனித்தார். ஆதி எதுவும் கேட்காமல் அமைதியாக இருந்தார்.

ஆதி, பாபாவின் அருகிலிருந்த இன்னும் ஓர் இரவில், பாபா, ஆதியிடம் கால்களை அமுத்துவதை நிறுத்தச் சொன்னார். அப்போது திடீரென ஏதோ இனம்புரியாத வலியால் பாபா அவதிப்பட்டார்; அவரால் நிற்கவோ, அமரவோ முடியவில்லை. கல் தரையில் அப்படியே சாய்ந்து, உடலை அங்குமிங்கும் புரட்டிய வண்ணம் படுத்திருந்தார். நெற்றியிலிருந்து வேர்வை கொட்டியது; கைகால்கள் குளிர்ந்து பனிபோல் உறைந்தன. இப்படி ஏறக்குறைய இருபது நிமிட நேரம் பாபா அவதிப்பட்டதை ஆதியால் தாங்கமுடியவில்லை; என்ன செய்வது என்றும் புரியவில்லை. நெற்றி வேர்வையைத் துணியால் மெதுவாகத் துடைத்தார். சற்று நேரத்தில் பாபா அவரது தலையை ஆதியின் மடி மீது வைத்து அமைதியாகப் படுத்திருந்தார்.

பாபா, பின்னர் இவ்வாறு குறிப்பிட்டார்: "**இன்று என்னுடைய உலகளாவிய துன்பத்தின் ஓர் அம்சத்தை உங்களால் காணமுடிந்தது, ஓரளவு புரியமுடிந்தது.**"

ஒரு நாள் மாலை வேளையில் வயதான மனிதர் ஒருவர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தார். அவர் தோற்றத்தில் உடல்நலமற்றவர் போல் இருந்தார், பாபா அவரை இரக்கத்துடன் ஏற்றுக்கொண்டு அவருடைய உடல்நிலையைப் பற்றிக் கேட்டபோது, வந்தவர் அதற்கு செவி கொடுக்காமல், குருநாதரை சந்தித்த மகிழ்ச்சியில் ஆனந்தமாக இருந்தார். பாபா உடனே மருத்துவ சிகிச்சைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, அன்றிரவு 'உபாஸனி ஸெராய்' அறையில் தங்கவைத்து இரவில் மூன்று அல்லது நான்கு முறை அவரை சந்திக்கச் சென்றார்; கடைசி முறையாக பாபா வந்த போது, அவர் பாபாவை எதிர்பார்த்து காத்திருந்தது போலத் தோன்றியது. கண்களைத் திறந்து நீண்ட நேரம் பாபாவை ஆசை தீர உற்றுநோக்கிக் கொண்டிருந்தார். பாபா அவருடைய கையை நெற்றியில் வைத்து வருடிக் கொடுத்தபோது பெரியவரின் கண்களில் கண்ணீர் ததும்பியது. சில நிமிடங்களில், அவர் தனது கடைசி மூச்சை விட்டார். "**அவர் குறிப்பாக என்னையே பார்க்க வந்தார். அவருடைய பயணம் இத்துடன் முடிவடைந்தது**" என பாபா எடுத்துரைத்தார்.

மறுநாள் காலையில் பாபா, மறைந்த முதியவரின் உடலை தனது போர்வையால் மூடி, இறுதிச் சடங்குகளைச் செய்து முடித்தார். பாபா, கடைசியாக உடலை, கல்லறையில் வைக்க உதவி, அவரது கைகளால் மண்ணை அள்ளி வைத்து மலர்களையும் தூவினார்.

அன்று மதிய வேளையில், மூன்று மணியளவில், பாபா மணியோசை எழுப்பி, மண்டலியை குடிலுக்குள் அழைத்து, "**இன்று ஒவ்வொருவரும் ஏதாவது நீங்கள் விரும்பும் ஒன்றை என்னிடம் கேட்க வேண்டும். உங்களில் அதிகம் பேர் என்ன விரும்புகிறீர்களோ அதை நான் செய்வேன்**" என்று கூறி, அனைவருக்கும் துண்டு காகிதமும், பென்சிலும் தரப்பட்டது. அதற்குப் பிறகு பாபாவின் முன்னிலையில் ஒவ்வொரு துண்டையும் பிரித்து வாசித்தனர்.

மோகன் எழுதியதாவது, "பாபா, அவருடைய மௌனத்தை இன்று கைவிடவேண்டும்."

ஸெயிலர், "பாபா இன்று உணவு உண்ண வேண்டும்" என வேண்டினார்.

பெஹராம்ஜி, 'பாபா, மண்டலியின் அனைத்து பாவங்களையும் மன்னிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

சாஞ்சி இவ்வாறு எழுதினார், "பாபா ஒரு சொற்பொழிவாற்ற வேண்டும்."

ராம்ஜூ விரும்பினார், "பாபா, ஒவ்வொருவருக்கும் ஒரு கப் தேநீர், ஒரு பொட்டலம் வெற்றிலை, பாக்கு மேலும் ஒரு சிகரெட் தர வேண்டும்."

டாக்டர் கனி இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "பாபா, பால் கலந்த தேநீரும், தாராளமாக அறுசுவை உணவும் உடனே வழங்க வேண்டும்."

இந்த வேண்டுதல்களோடு மேலும் பலர் அவரவர் விருப்பங்களைத் தெரிவித்திருந்தனர்.

சிலர் பணம், வேலை வேண்டுமெனக் கூறியிருந்தனர். ஆனால், பெரும்பாலான மண்டலி நல்ல உணவு வேண்டுமெனக் குறிப்பிட்டதால், பாபா

அவரது கற்பலகையில் இவ்வாறு எழுதினார்: **"நான் கடைசியாக இன்று உணவு உண்பேன்; நாளை அக்டோபர் 20ஆம் தேதியிலிருந்து நூறு நாட்கள் நான் எதுவும் உண்ணாமல் உபவாசம் கடைப்பிடிக்கப் போகிறேன்**. பாபா, மண்டலி விரும்பிய உணவை அவர்களே தயார் செய்யுமாறு கூறி, அவர்களுடன் உணவில் பங்கெடுத்தார்.

மெஹர் பாபாவின் விருப்பப்படி, உபவாசம் இருக்கும் நூறு நாட்களில் மெஹராபாத்தில் மேலும் கீழும் செல்வதைத் தவிர்க்கும் நோக்கத்தில், கீழ் மெஹராபாத்தில் மரத்தின் கீழ், ஒரு சிறிய மேசை அறையில் தனது இருக்கையை அமைத்துக் கொண்டார். இக்காலகட்டத்தில்தான் பாபா அவரது 'இரகசிய புத்தகத்தை' எழுதி முடித்தார்.

மெஹர் பாபா சில நேரங்களில் மெஹராபாத்தில் அமைக்கப்பட்ட பள்ளிக்கூடம், மருத்துவமனை போன்ற நிறுவனங்களை கலைத்துவிடப் போவதாக அறிவித்தார்.

ருஸ்தம் குறிப்பாக, பாபாவின் இந்த அறிவிப்பால் சற்று அமைதி குலைந்து, பாபாவைத் தனியாக சந்தித்துக் கேள்வி எழுப்பினார், "நீங்கள் அளித்த நம்பிக்கையின் பேரில், இங்கு வந்து உங்களுடன் நேர்மையாக இருப்பவர்களின் நிலை என்னாவது? நீங்கள் மௌனத்தைக் கைவிட்டு, மறுபடியும் பேசுவது வரை, அவர்கள் உங்களோடு இருந்தால் விடிவுகாலம் வரும் என்ற நம்பிக்கையை நீங்கள் அளித்தது என்னவாகும்?"

பாபா அதற்கு ஒரு நீண்ட விளக்கத்தை கற்பலகையில் எடுத்துரைத்தார்:

**அனைத்து குழந்தைகளும் கல்வியின் நன்மையை அடையப்பெற்றுள்ளனர்; மேலும் குறிப்பாகக் கூறுவதானால், அவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற ஆன்மீக முன்னேற்றம், இவ்வுலகில் வேறு எங்கிருந்தாலும் கிடைத்திருக்காது. எனது பெயரைக் கேட்டு அவர்கள் இங்கு வந்தனர் என்பதை ஏற்றுக்கொண்டாலும், காலவரையற்ற வரை அவர்களுக்குக் கல்வி வழங்கி, அவர்களை என்னுடன் வைத்திருக்க வேண்டும் என்பது கட்டாயமா? நான் விரும்பும் வரை அவர்களை என்னுடன் வைத்திருக்கலாம் அல்லவா?**

**நான் என்னுடைய உள் மற்றும் வெளியளவிலான பணிகள் அனைத்தையும், அவர்களுக்காக விட்டு விடவேண்டும் என்று சொல்கிறீர்களா? என்னுடைய பணிகள் அவர்கள் என்னுடன் வாழ்வதைப் பொறுத்தா இருக்கிறது?**

**நான் எங்கு, எப்போது வேண்டுமானாலும் இருந்துகொண்டு, பிறர் மனங்களை அறிந்து, வழிநடத்த முடியுமானால், இங்கேயிருந்து செய்வதுபோல வேறு எங்காவது தொலைதூர இடத்தில் இருந்துகொண்டு அதைச் செய்ய முடியாதா?**

**அவர்கள் இங்கே இருந்து, பாடம் கற்று அனைத்து விஷயங்களையும், சட்டதிட்டங்களையும் கடைப்பிடித்தது, உலகில் அவர்கள் எங்குச் சென்றாலும் உதவியாக இருக்கும் என்பது நிச்சயம்.**

**ஆன்மீகப் பொக்கிஷம் - அது ஒரு சிறிய விஷயமல்ல - தவிர, அவர்கள் உணவு, உடை, பிரசாதம் மேலும் எனது கைகளால் அவர்களை நீராட்டியது! நல்வாழ்வை அவர்களுக்கு வழங்குவேன் என ஆரம்பத்தில் நானளித்த நம்பிக்கை ஒரு புறமிருக்க, அவர்கள் என்னுடைய வார்த்தைகள், கட்டளைகள் அனைத்தையும் பலமுறை மீறிய போதும், அவர்களை மன்னித்து என்னருகிலேயே வைத்து என்னுடைய சகவாசத்தை வழங்கியதெல்லாம் ஒரு சிறிய விஷயமல்ல.**

**இப்போது, நான் யார் ஒருவருக்கு வாக்குறுதி அளித்தேனோ அவர்களைப் பற்றி:**

**அவர்கள் பெரும் நன்மையை - உலகப்பொருட்கள், ஆன்மீகம் இரண்டையும் - அடையப்பெறுவார்கள். ஆனால் அவர்களாகவே எனது கட்டளைகளை மீறி, என்னை விட்டுச் சென்றிருந்தால் என்னவாகும்? உதாரணமாக, எத்தனை மாணவர்கள் வாக்குறுதி அளித்த பின்னரும், ஏதோவொரு காரணம் காட்டி, அவர்களின் வார்த்தைகளை மீறி, விட்டுச் சென்ற பின்னர் எத்தனை பேர் இப்போது இங்கே உள்ளனர்? மூன்று அல்லது நான்கு பேர் மட்டுமே. நோயாளிகளுக்கு நம்பிக்கை அளித்தும் இவ்விடத்தை விட்டுச் சென்றவர்களில் எத்தனை பேர் உயிர் தப்பினர்? ஒருவர் மட்டுமே! மேலும் அதை நான் எனது மௌனத்தை விடும்போது பார்த்துக் கொள்வேன்.**

**இதைத்தவிர, இங்குள்ள நிறுவனங்களாகிய பள்ளிக்கூடம், மருந்தகம், மருத்துவமனை மற்றும் தர்மசாலை இவைகளை வைத்து நான் என்ன செய்வது? முதலாவதாக, இந்த அமைப்புகள், நான் விரும்பும் நபர்களின் செல்வத்தைச் செலவிட்டு, அதே வேளையில் அவர்களுக்கு மிகையான ஆன்மீக உந்துதலை வழங்கும் ஊடகமாக அமைப்பது; இரண்டாவதாக, நான் தேர்ந்தெடுத்து, குறிப்பிட்ட பணிகளைச் செய்ய வைத்து, அவர்களை சேவையில் ஈடுபட ஒரு வாய்ப்பை அமைத்துக் கொடுப்பது. இப்போது, இந்த நோக்கங்கள் அனைத்தும் பூர்த்தியானதால், இவற்றைத் தொடர வேண்டிய தேவையில்லையென நான் நினைத்தேன்.**

**உலக சொத்து சுகங்கள், என்னைப் பொறுத்தவரையில் ஒன்றுமே இல்லாத நிலையில், மேலும் அதன் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க இயன்ற வரையில் நான் முயலும் வேளையில், அவைகளை வைத்து நான் என்ன செய்வேன்?**

அதற்கு ருஸ்தம், "நீங்கள் கூறுவதெல்லாம் உண்மைதான்; ஆனால் உலக மக்கள் உங்களையும், உங்கள் செயல்களையும் குறித்து என்ன கூறுவார்கள் - குறிப்பாக உங்களை நம்பி இங்கு வாழும் ஆதரவற்ற ஏழைகளின் நிலைமை என்னவாகும்?" என்று கேட்டார்.

பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**உலகம் பலவிதமாகப் பேசும். இந்த அமைப்புகளை மூடி, ஆதரவற்ற ஏழை எளிய மக்களை உதவியற்ற நிலைக்குத் தள்ளுவது நல்லதல்ல எனக் குறை கூறலாம். இவ்வளவு பெரிய அளவில் ஆரம்பித்து, இத்தனை**

வேகத்தில் அவற்றைக் கலைப்பதன் உள்நோக்கத்தை உலக மக்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள். ஆனால், சத்குருக்களான எங்களுக்கு இது மிக முக்கியமானது என்றாலும், இவ்விதமாக 'ஆரம்பித்து, கலைப்பது' ஒரு விளையாட்டு போன்றது. இந்த நிறுவனங்கள் எனக்குத் தேவையற்றது என்பதை நீங்கள் அறிவீர்கள்; என்னுடைய வட்டத்து சீடர்களுக்கு ஓர் ஆன்மீக உந்துதலை வழங்குவதே எனது முக்கிய நோக்கம். அது பூர்த்தியடைந்த இவ்வேளையில் அனைத்தும் ஒரு முடிவுக்கு வரும்.

எடுத்துக்காட்டாக, மணி எப்படி உருவாக்கப் படுகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? முதலில், ஒரு வார்ப்பு (அச்சு) தயாரித்து அதில் திரவ நிலையில் இருக்கும் பித்தளை ஆக்ஸைட் ஊற்றப் படுகிறது. ஆக்ஸைட் திரவம் குளிர்ந்து திட நிலையை அடைந்ததும், களிமண் வார்ப்பை உடைத்து மணி வெளியே எடுக்கப்படும். களிமண்ணால் உருவாக்கப் பட்ட வார்ப்பின் ஒரே நோக்கம் மணிக்கு அதற்கான வடிவம் கொடுப்பது மட்டுமே. மணி உருவானதும் வார்ப்பிற்கு எந்த வேலையும் இல்லாமலாகிறது.

அதுபோல, மெஹராபாத்தில் எழுப்பிய தொண்டு நிறுவனங்கள் அனைத்தும், என்னுடைய ஆன்மீகப் பணியைச் செய்து, குறிப்பிட்ட சிலருக்கு ஆன்மீக ரீதியில் உந்துதலை வழங்கும் ஊடகமாகப் பயன் படுத்தப்பட்டன.

ஒரு சத்குருவின் உண்மையும் முக்கியமுமான கடமை, அவரைச் சார்ந்தவர்களின் மனப்படிவங்களை அகற்றுவதாகும்.

அந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, சத்குருவின் பக்தர்களாக இருக்க விருப்பமுள்ளவர்கள், அவர்களுடைய ஆத்மா, இதயம் அனைத்தையும் சத்குருவின் பாதங்களில் அர்ப்பணிக்க வேண்டும். அதுபோன்ற பக்தர்கள் எந்தத் தடையுமின்றி, உடனடியாக எரிந்து சாம்பலாகும் காய்ந்த மரம் போல் இருப்பார்கள். மாறாக, ஈரமாக இருந்தால் விரைவாக எரிவதற்கு பதிலாக, ஒரு புகைமூட்டத்தை உருவாக்கி பெருந்தொல்லையைத் தருவார்கள். அத்தகைய பக்தர்கள் குருநாதருக்குக் கீழ்ப்படிந்து, இணக்கமாக நடந்து, சேவை செய்யக் கூடிய பக்குவமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

பாபா அவரது விளக்கத்தை இவ்வாறு நிறைவு செய்தார்:

உலகம் அது சொல்வதைச் சொல்லட்டும்! சத்குருக்கள் உலக மக்கள் அனைவரின் நலனுக்காகச் செய்யும் ஆன்மீகப் பணிகளைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? ஏதேனும் மிகப் பெரிய அற்புதங்கள் நிகழ்ந்த மறு கணமே, முழு உலகமும் பைத்தியத்தில் ஆரவாரம் செய்யும். அவ்வேளையில் இந்தத் தொண்டு நிறுவனங்களைத் தொடர்வது அல்லது கலைப்பதன் மூலமாக, எனது பணிகளை எடைபோடுவது பற்றிய எண்ணம் முக்கியமற்றதாகி விடும். மக்கள் அற்புதங்களையும், அந்த சக்திகளால் அவர்களுக்கு வரும் மாற்றங்களையும் எதிர் நோக்கும் காலம் வரும்.

**சுருக்கமாகச் சொன்னால் அவதார புருஷரின் தலையாய கடமை அவரது வட்டத்து சீடர்களைப் பக்குவமடையச் செய்து, தயார் நிலைக்குக் கொண்டு வந்து, இறுதியில் இறையுணர்வை வழங்குவதாகும். இந்தப் பணியை நான் தள்ளிப்போட இயலாது; எனது உள்வட்ட சீடர்களைப் பூரண தயார் நிலைக்குக் கொண்டு வருவது இன்றியமையாதது. இரண்டாவதாக, வட்டத்திற்கு வெளியே இருக்கும் உறுப்பினர்களுக்கு ஓர் ஆன்மீக உந்துதலை வழங்க வேண்டும். மேலும், மூன்றாவதாக என் உதவிக்குத் தகுதியானவர் என்பதை நிரூபிக்கும் பிற நபர்களுக்கு, நான் உலகப்பொருட்கள் சம்பந்தப்பட்ட நன்மைகளை வழங்க வேண்டும்.**

பாபாவின் விளக்கங்களைக் கேட்டு ருஸ்தம் மிகுந்த திருப்தியும், நிம்மதியும் அடைந்தார். பாபா முதலில் அவருடைய திட்டத்தை அறிவித்ததும் அங்குத் தங்கி வந்த பலர், தங்க இடமின்றி உதவியற்றவர்களாகி விடுவார்கள் என்று அஞ்சியதாக, ருஸ்தம், சாஞ்சியிடம் மனம் திறந்து முறையிட்டார். மேலும் பாபாவின் விளக்கங்கள் அனைவரையும் வாயடைக்கச் செய்தது.

1926, அக்டோபர் 26ஆம் நாள் மெஹர் பாபா, மண்டலிக்கு, நான்கு புதிர்களை முன்வைத்து, விடையைக் கண்டுபிடிக்க இரண்டு நாட்கள் அவகாசம் கொடுத்தார், மேலும் சரியான விடை அளிப்பவர்க்கு ஜிலேபியும், பாலும் பரிசாக அறிவிக்கப்பட்டது:

**சொல்வது ஒன்று செய்வது இன்னொன்று, அவர் யார்?**

**மூன்று போனால் ஒன்று வரும், அது என்ன?**

**நால்வர் இறந்தால் ஒருவர் அஞ்சுவார், அவர் யார்?**

**இரண்டு தவறானது, ஒன்று நிஜமானது, அது என்ன?**

பாபா இரண்டு நாட்களுக்குப் பின்னர், அனைவரையும் அழைத்து கேட்டபோது, திருப்தியளிக்கும் வகையில் எவரும் பதிலளிக்காததால், பாபா விளக்கமளித்தார்:

**'சொல்வது ஒன்று செய்வது இன்னொன்று'** - கபடவேடதாரி.

**'மூன்று போனால் ஒன்று வரும்' - இதன் அர்த்தம்**, **காமம்**, **பேராசை**, **கோபம் இம்மூன்றும் அழியும்போது கடவுள் வருகிறார்.**

**'நால்வர் இறந்தால் ஒருவர் அஞ்சுவார்' - 'காமம், பேராசை, கோபம், நம்பிக்கை' இவை நான்கும் இறக்கும்போது மாயை அஞ்சும்.**

**'இரண்டு தவறானது, ஒன்று நிஜமானது' - அதாவது, இரட்டைத்தன்மை தவறானதாக உணரும்போது ஒருமை (இறைவனுடன் ஐக்கியம்) நிஜமாகும்.**

டாக்கே:பால்கருக்கு, அதிகம் சாத்தியமான 100 மதிப்பெண்களில் பத்து மதிப்பெண்களும், ருஸ்தத்திற்கு நான்கும் வழங்கினார். அதற்குப் பிறகு பாபா அவர்களிடம் ஒரு கணித புதிருக்கு விடையளிக்குமாறு கூறினார்.

"16 - 100 = 0."

ஒருவராலும் பதிலை யூகிக்க முடியாததால், பாபா விளக்கினார். **ஹிந்தி மொழியில் 'ஸோ' என்றால் 100 என்றும் 'ஸோலா' என்றால் 16**

**என்றும் அர்த்தம். இந்த 'ஸோலா'விலிருந்து 'ஸோ'வை எடுத்துவிட்டால் மிஞ்சுவது 'லா'. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் 'லா' என்றால் ஒன்றுமில்லை 'பூஜ்யம்' என்று அர்த்தம்.**

சில வாரங்களுக்குப் பின்பு, நவம்பர் 10ஆம் நாள் பாபா, ஆண் மண்டலியிடம், இந்த ஆன்மீகப் புதிரை எடுத்துரைத்து பதிலைக் கேட்டார்.

'5 - 7 = 12' இது எப்படி?

பாபாவின் விளக்கம்:

**இயற்கையின் ஐந்து முக்கிய கூறுகளான காற்று, நெருப்பு, பூமி, நீர், வானம் இவற்றால் உருவாக்கப்பட்ட மனித உடல் ஏழு தளங்கள் வழியாகக் கடந்து செல்கிறது. இதுவே '5 - 7' என்பதன் அர்த்தம். இவ்வாறு நிறைவுறும் தருவாயில் ஒருவர் சத்குருவின் நிலையை எய்துகிறார்; மேலும் அந்த சத்குரு 12 பாகங்களாகப் பிரிக்கப்படுகிறார்; அது அவருடைய வட்டத்து சீடர்களைக் குறிக்கும்.**

**இதுவே "5 - 7 = 12" என்பதன் அர்த்தம்.**

மெஹர் பாபாவின் தரிசனம் சில நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும், பக்தர்கள் தொடர்ந்து திரளாக மெஹராபாத்திற்கு வந்து கொண்டிருந்தனர். நவம்பர் 9ஆம் நாள் வந்த சில பக்தர்களுக்கு, பாபா தரிசனமளித்தார். இதை கவனித்த பண்டோபா, காக்கா ஷஹானேயின் காதுகளில் முணுமுணுத்ததைப் பார்த்து, பாபா, '**என்ன கிசுகிசுக்கிறீர்கள்?**' என்று கேட்டார். பண்டோபா பதிலுக்கு, "வெளியிலிருந்து வருபவர்களுக்கு உங்கள் பாதங்களைத் தொட அனுமதி வழங்கும் அதே வேளையில் எங்களுக்கு மட்டும் ஏன் மறுக்கிறீர்கள்" என்று கேள்வி எழுப்பினார்.

பாபா உடனே, "**நீங்கள் எனது பாதங்களைத் தொட விரும்புகிறீர்களா? அப்படியானால் ஒரு நாணயத்தைத் சுழற்றிப் போடுவோம்; தலை வந்தால் உங்களுக்கு வெற்றி, பூ வந்தால் தோல்வி**" என்றார்.

பண்டோபா தயங்கிய போது, மண்டலி அவரை உற்சாகப் படுத்தி, இந்த வாய்ப்பைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டனர். நாணயத்தைச் சுழற்றியபோது தலை வந்ததும் அனைத்து மண்டலியும், 'பாபாவிற்கு ஜெய்' என்று கூறிக் கொண்டு, பாபாவின் அனுமதிக்குக் கூட காத்திராமல் அவரின் பாதங்களில் தலைவணங்கி முத்தமிட்டனர்.

அந்த நாள், ஒரு விவசாயி பாபாவிடம் பருவ மழை பொய்த்ததைப் பற்றிக் குறை கூறினார். அவர் பாபாவிடம் மழை வேண்டி பிரார்த்தனை செய்தபோது, பாபா இவ்வாறு கூறினார்: "**கவலைப் படாதீர்கள். பெரும் மழை பொழியும். தேவைப்படுவது என்னவென்றால் ஒன்றே ஒன்று, ஒரு திறவுகோலை மட்டும் திருகும்போது நீங்கள் விரும்பியபடி நடக்கும்.**" இதை பாபா கற்பலகையில் எழுதி முடித்த அந்தக் கணமே பெரிய அளவில் மழை கொட்ட ஆரம்பித்தது.

நவம்பர் 10ஆம் நாள் மெஹர் பாபா, மும்பைக்குச் சென்று பிப்ரவரி மாதம் வரை அங்கே தங்குவதாகவும், மெஹராபாத்தை ருஸ்தத்தின் கண்காணிப்பில் விட்டுச் செல்வதாகவும் அறிவித்தார். அவருடன் செல்பவர்களின் பெயர்களும் குறிக்கப்பட்டது.

அன்று மாலையில், பாபா நிதியுதவி பற்றிய நடைமுறை விஷயங்களை மோகன், டாக்கே இவர்களுடன் விவாதித்தார். பாபா விளக்கிக் கொண்டிருந்த வேளையில், உலக தத்துவத்தை முன்வைத்து, சுவாரஸ்யமாக வாதாடுவதில் ஆர்வமுள்ள மோகன், 'தன்னை மட்டுமே நம்பி, நிதி விஷயங்களில் தனக்குத்தானே உதவியாக இருப்பதைக் குறித்து'க் கேள்வி எழுப்பினார். பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**இவ்வுலகில், அனைவரும் ஒன்று அல்லது மற்றொன்றுக்காக ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கிறார்கள்; மிகையாகக் கூறினால் நாம் சுவாசிப்பதற்கு இயற்கையின் குறிப்பிட்ட சக்திகளைச் சார்ந்திருக்கிறோம். ஆன்மீக முன்னேற்றத்திற்குச் சிறந்ததும், முக்கியமானதுமாக நீங்கள் கருதக் கூடியவை, எங்களைப்** (சத்குருக்களைப்) **பொறுத்தவரையில், உங்களுக்குத் தீங்கு விளைவிப்பவை. அவை உங்கள் ஆன்மீகப் பாதையில் தடையாக இருந்து, பின்னடைவை விளைவிக்கலாமே தவிர முன்னேற்றத்தைத் தராது. இக்காரணத்தினால்தான் நாங்கள் உங்களை, பணம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் தலையிட அனுமதிக்காமல், அதேவேளை நாங்களும்** (குருநாதர்களும்) **அதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறோம். இந்த சூழ்நிலைகளில் எதையும், எவரையும் சார்ந்திராமல் இருக்கும் கடவுளைச் சார்ந்திருப்பது சாலச் சிறந்ததாகும்.**

துனி ஆரம்பித்த ஒரு வருட நிறைவை நினைவு கூர்ந்து, மாலை ஏழு மணிக்கு, துனியில் நெருப்பு வளர்க்கப்பட்டது. பாபா எழுதிய குஜராத்தி ஆரத்தியைப் பாடி முடித்ததும், முதல் முறையாகத் துனியை ஏற்றியபோது பெய்த மழைபோல் இன்றும் சிறப்பாக மழை பொழிந்தது.

1926, நவம்பர் 11ஆம் நாள், பாபா, ஆண் மண்டலியிடம் அவரைப் பின்பற்றுவதற்கான தீர்மானத்தில் மனதை உறுதியாக வைத்திருக்குமாறு வலியுறுத்தினார். "**உங்கள் மனம் ஒரு பாறைபோல் உறுதியாக இருக்க வேண்டும்**" என்று கூறி மேலும் விளக்கினார்:

**அர்த்தமற்ற, அற்பத்தனமான கேள்விகளை உங்கள் மனதில் அடக்கி வைத்து அதைத் தளரவிடாதீர்கள். இவ்வாறு எண்ணங்களை மனதில் தொடர்ந்து அலைபாய விடுவது, தேவையற்ற கவலையையும் மனபாரத்தையும் விளைவிக்கும். பொருளாதார ரீதியான சிந்தனைகள் அல்லது கவலைகள், உங்கள் மனதின் அமைதியை சீர்குலைத்துவிடும். மக்கள் எதைக் கூற விரும்புகிறார்களோ அதைக் கூறட்டும். தொடர்ந்து வீசும் பெரும் புயலிலும் எவ்வித பாதிப்புமின்றி தன் இடத்திலிருந்து ஓர் அங்குலம் கூட அசையாமலிருக்கும் பாறையைப் போல் இருங்கள்.**

மரத்திலிருக்கும் இலையானது சிறு காற்றிலும் அங்குமிங்கும் அசைந்து இறுதியில் கீழே விழுவதுபோல் இருக்காதீர்கள்.

சில நேரங்களில் ஒரு சிறிய பூச்சி உங்களுக்குத் தொல்லை தருவதாக வைத்துக்கொள்வோம்; அப்போது அதை விரட்ட நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் கைகளை அங்குமிங்கும் அசைத்து அதை விரட்டுவீர்கள். அதுபோலவே உலக மக்களின் வீண் வார்த்தைகள் உங்கள் காதுகளில் விழுந்தாலும் கண்டு கொள்ளாமல் அலட்சியமாக இருங்கள்.

நிலையான, நித்திய உண்மையை மட்டும் சார்ந்திருங்கள். இந்த உண்மைப்பொருளைத் தவிர இப்பூவுலகில் அல்லது வேறு எங்கும் ஒன்றுமே இல்லை என்பதை நான் பார்த்து, உணர்ந்து அனுபவிப்பதால், அதை நான் உங்களுக்குத் திட்டவட்டமாகக் கூறுகிறேன். கடந்த காலம் என்று ஒன்று இருந்ததில்லை, நிகழ் காலம் இப்போது இல்லை, எதிர் காலம் என்பதும் இருக்காது. ஒரு செயலற்ற வீண் கனவைத் தவிர வேறு எதுவுமில்லை. தாய், தந்தை, குழந்தைகள், சொத்து, சுகங்கள் என நினைப்பது அனைத்துமே வீண் கனவுகள். ஏனெனில் இப்படி ஒன்று இல்லவே இல்லை. எல்லா உலகமும், எல்லா பிரபஞ்சமும், அது இது என நீ 'வாழ்வதாக நினைக்கும்' அனைத்தும் வெறும் கனவே. மாயை எனும் கனவில், கண்டுகளித்து அனுபவித்த இந்தக் காட்சிகள் அனைத்தும் தவறானது, உண்மையல்ல என்பதை விழிப்படையும் வேளையில் தெரிந்து கொள்வீர்கள்.

எனவே, அனைவரின் ஒரே இலக்காக இருக்கும் உண்மைப்பொருளை நோக்கி - இந்த முழு உலகமும் உங்களை இகழ்ச்சியாகப் பார்த்தாலும் - அச்சமின்றிச் செல்லுங்கள். இந்த உண்மைப்பொருளை - பரமாத்மாவை எங்கேயும் தேட வேண்டாம், ஏனெனில் அது உங்கள் அருகில், உங்கள் உடலை விட மிகவும் அருகாமையில் உள்ளது. அது உங்களுடன், உங்களுக்குள்ளேயே உள்ளது. அது உங்கள் சுவாசக்காற்றை விடவும் அருகில் இருப்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்கக் கூட இயலாது. அப்படியானால் அவரை எங்கேனும் வெளியில் தேடுவானேன்? உங்களுக்குள்ளேயே அவரைத் தேடுங்கள்!

நான்கு சைத்தான்கள் மட்டும் - 'நான்' எனும் அகந்தை, காமம், கோபம், பேராசை - உங்கள் பாதையில் தடையாக இல்லாவிடில் நீங்கள் பரமாத்மாவை எளிதில் காணமுடியும். இவற்றில் மிகவும் மோசமானது 'அகந்தை'. உங்கள் ஆரம்பகால குழந்தைப் பருவத்திலிருந்து இறுதிகட்ட முதுமை வரை, இந்த அகந்தை ஆன்மீகப் பாதையில் மிகப்பெரிய தடையாக இருக்கிறது.

அதற்கு அடுத்த சைத்தானாக இருப்பது காமம், குறிப்பாக, உலகின் மிகப்பெரிய, மோசமான தீமைகளில் ஒன்றான மற்றும் சத்தியத்தின் பாதையில் பெருந்தடையாக இருப்பது காம உணர்வு. அனைவரும் அதன் வசீகரம் மற்றும் பிடியில் சிக்காமல் விழிப்புடன் இருக்க வேண்டும். அது

**அத்தனை சக்திமிக்கதாக இருப்பதால், சிந்திக்கக் கூட இடம் கொடுக்காமல் செயல்படுத்தத் தூண்டும். இதைப் பற்றிய ஒரு சிறிய சிந்தனை கூட ஆன்மீகப் பாதையில் உங்களைத் தகுதியற்றவனாக ஆக்கிவிடும். சாதாரண உலக மக்களைப் பொறுத்தவரையில், அதுபோன்ற சிந்தனை வரும் வேளையில் - இது அனைவரையும் உண்மையிலே தாக்கும் ஓர் உணர்வு - அதைச் செயல் படுத்தாமல் இருப்பதே சிறந்தது. அதை நினைக்காமலிருக்க முயற்சிப்பது அதிலும் சாலச் சிறந்தது.**

**இந்த நான்கு சைத்தான்களையும் கடந்து செல்வது மிக மிகக் கடினமானாது, இருப்பினும் உங்கள் நம்பிக்கையை இழக்காமல் தொடர்ந்து போராடுங்கள். பரமாத்மா உங்கள் அருகில், உங்களோடு, உங்களுள் சத்தியத்தை அடைய உங்கள் நேர்மையான முயற்சிக்கு உறுதுணையாக எப்போதும் இருப்பார்.**

ஓர் உறுதியான உதாரணத்தோடு விளக்கிக் காட்ட, பாபா மண்டலியில் ஒருவரை அழைத்து, அவர் முன்னால் நிற்கும்படிக் கூறி, அவர் கண்களை நான்கு துணித் துண்டுகளால் கட்டி, முழுமையாக மறைக்கச் செய்து பாபா கூறினார்:

**உங்கள் கண்களைத் துணித் துண்டுகள் மறைத்திருப்பதால் இப்போது நீங்கள் என்னைப் பார்க்க இயலாது. பார்ப்பதற்காக உங்களுக்குக் கண்கள் இருப்பதும், உங்கள் எதிரில் நான் அமர்ந்திருப்பதும், இரண்டும் உண்மையே. இருந்தும் உங்களால் பார்க்க முடியவில்லை. உங்களுக்குப் பார்க்க வழியிருந்தும், பார்க்கும் பொருளிருந்தும் உங்களால் பார்க்க முடியாதது ஏன்? காரணம், இந்த நான்கு துணித் துண்டுகளும் உங்கள் கண்களை மறைக்கின்றன. இந்த நான்கு துண்டுகளையும் அகற்றிய அடுத்த கணமே நீங்கள் என்னைப் பார்க்க இயலும்.**

**அதுபோல், உங்களின் உட்கண்களால் பரமாத்மாவை, உண்மைப்பொருளைப் பார்க்கலாம். மாயையின் மகத்தான நான்கு மூலப்பொருட்கள் அல்லது இயல்பு தன்மைகள், உங்கள் அருகில், உங்களோடு, உங்களுள் இருக்கும் உண்மைப்பொருளை மறைப்பதால் உங்களால் அதைப் பார்க்க முடியவில்லை. கண்களை மூடியிருக்கும் சைத்தான்களை அகற்றியதும் பரமாத்மாவைக் காணலாம். ஆனால் நீங்கள் அதை எப்படி அகற்ற முடியும்? மாயை எனும் திரையை விலக்கி, உங்களின் உண்மை நிலையை உணர வைப்பது ஒரு சத்குருவின் பணியாகும்.**

அந்த நாள், பாபா மும்பைக்குச் செல்வதை உறுதிப்படுத்தி, உடன் செல்பவர்கள் மற்றும் மெஹராபாத்தில் தங்கியிருப்பவர்களின் பட்டியலை வெளியிட்டார்.

மாலையில் பாபா மண்டலியை சந்தித்துப் பேசும் வேளையில், தாயார் ஷிரீன், குல்மாய், ஸூனாமாசி மூவரும் உடனிருந்தனர். மும்பைக்குச் செல்லும் காரணத்தை பாபா இவ்வாறு விளக்கினார்: **“ஒரே மாதிரியான பணியில் நெடு**

நாட்களாக ஈடுபட்டு சோர்வடைந்துவிட்டேன், குறிப்பாக ஒரே இடத்தில் இருந்துகொண்டு, மௌனம் கடைப்பிடிப்பதால் களைப்பாக உணர்கிறேன். மூன்று அல்லது நான்கு நாட்கள் மெஹராபாத் மலையில் இருந்துவிட்டு, பிறகு மும்பைக்குச் செல்வதைப் பற்றி முடிவு செய்வேன்." பாபா, ஸூனாமாசியிடம், '**தாதரில் தங்குவதற்கு வசதியான இடம் கிடைத்தால் மகிழ்ச்சியடைவேன்**; **இல்லையேல் அவர் சாந்தாகுரூஸில் தங்கவேண்டுமென்று**' கூறினார். பாபா, தாயாரிடம் தன்னோடு மும்பை வருமாறும், தங்கை மணிஜாவின் படிப்பைப் பற்றிய எவ்வித சிந்தனையும் வேண்டாம் எனவும் அறிவுறுத்தினார். தாயார் ஷிரீன், பாபா மும்பையில் தங்குமிடம் எங்கு என்பது முடிவானதும், தன்னுடைய முடிவை தெரிவிப்பதாகக் கூறினார். மும்பையில் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும் அவருடைய குடும்பத்தினரை சந்திப்பதற்காகவும் சாஞ்சியை பாபா அனுப்பி வைத்தார்.

அடுத்த நாள் பாபா மெஹராபாத் மலையை விட்டுக் கீழே வரவில்லை; இரண்டு நாட்களுக்குப் பிறகு காலை 11 மணிக்குக் கீழே வந்தபோது பெஹராம்ஜி, பொமன்ஜி இருவரும் பலத்த வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்ததை கவனித்தார். பாபா அதைக்கண்டு அமைதியின்றி காணப்பட்டாலும், இருவரையும் சமாதானப் படுத்தினார். வேதனையடைந்த பாபா இவ்வாறு அறிவித்தார்: "**இன்றிலிருந்து ஸாக்கியா** (தாழ்த்தப்பட்ட இனைத்தைச் சார்ந்த ஒரு சிறுவன்) **உங்கள் அனைவருக்கும் உணவு பரிமாறுவான். நீங்கள் ஜாதி, குலம் பற்றிய எந்த எண்ணங்களையும் மனதில் வைத்துக் கொள்ளாமல் அனைவரும் உணவை உண்ணவேண்டும்**.

"**இதை விரும்பாதவர்கள் மெஹராபாத்தை விட்டுச் செல்லலாம்**!" இப்படி, பாபா பெஹராம்ஜி, பொமன்ஜி இருவரிடமும் கோபப்படுவது போலப் பாசாங்கு செய்து, மண்டலிக்கு இடையிலான ஜாதி, மத வேறுபாடுகளை ஒழிக்கும் இறுதிக்கட்ட பணியைச் செய்து முடித்தார்.

பாபாவின் இந்தக் கட்டளை இந்து மண்டலியை அதிர்ச்சியில் ஆழ்த்தியதால், அன்று மதியம் அவர்கள் ஒன்றாகக் கூடி, பாபாவின் புதிய அறிவுறுத்தல்களைப் பற்றி விமர்சனம் செய்தனர். இந்து மண்டலி, இந்த முடிவால் மகிழ்ச்சியடையாத போதும், பாபாவின் கட்டளையை உள்ளளவில் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார்கள். கிஸன் மாஸ்டர் மட்டும் வெளிப்படையாக அதை எதிர்த்தாலும், இரவில் உணவு உண்ணும் வேளையில் பாபாவின் விருப்பப்படி நடந்து கொண்டார்.

இறுதியாக இந்து மண்டலிக்கு விழிப்புணர்வு வந்தது மட்டுமின்றி, உண்மையைப் புரிந்து கொண்டு பாபாவின் கட்டளைகளை - விளையாட்டுகளில் பங்கெடுப்பது, தரையை சுத்தம் செய்வது, திரைப்படங்கள் பார்ப்பது, கழிவறைகளை சுத்தம் செய்வது, பாபா கூறுவதைச் செவ்வனே செய்து முடிப்பது - இவை அனைத்தும் உயர்ந்த மத சடங்கு, சம்பிரதாயங்களை விட சாலச் சிறந்தது என்ற முடிவுக்கு வந்தனர். பாபாவின் கட்டளைகளுக்கு இணங்கி

ஈடுபடும் செயல்களைத் தவிர, நடைபெறும் இதர நிகழ்வுகளுக்குக் காரணம் அவரவர் மனப்படிவங்கள் என்பதையும் உணர்ந்து கொண்டனர்.

பாபாவின் இந்தச் செயலின் விளைவு, மெஹராபாத்தில் மண்டலி மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களிடையே, பெரிய மனமாற்றத்தை ஏற்படுத்தியது மட்டுமின்றி, இந்திய தேசம் முழுவதிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவாக, போராட்டங்களை உருவாக்கியது.

பாபா அப்போது அங்கிருந்த சிலருக்கு கீழ்க்காணும் புனைபெயர்களால் அழைத்தார்:

**போரிபந்தர்** (மும்பை சுற்றுவட்டத்தில் அமைந்த ஓர் இடம்), **பந்தர்** (குரங்கு),

**சிலிண்டர்** (எஞ்சினில் ஒரு பாகம்)

**தலிந்தர்** (ஒன்றுக்கும் ஆகாதவன்)

**கிரைண்டர்**, **பிளெண்டர்**, **ஒண்டர்**, **ஸிக்கந்தர்** (மஹா அலெக்ஸாண்டர்) இன்னும் பல.

பாபா தனக்குத்தானே **ஸமந்தர்** (சமுத்திரம்) என்ற பெயரையும் வைத்துக் கொண்டார்.

நவம்பர் 17ஆம் நாள், மெஹர் பாபா மதிய வேளையில் மேல் மலையிலிருந்து இறங்கி வந்து, மேசையறையில் அன்று முழுவதும் அமர்ந்திருந்தார். அன்றிரவு, பண்டோபா 'உலகில் முக்கியமானது அல்லது பயனுள்ளது எதுவுமில்லை' என்று மண்டலியுடன் உரையாடும்போது கூறியதை கவனித்து, பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்:

**இது முற்றிலும் உண்மை. உலக விவகாரங்களுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. இறை நிலையை அடைந்த ஒருவர் இதை, ஒரு கனவாகக் கூட கருத முடியாது. அறிவார்ந்த மாபெரும் சிறப்புமிக்க கவிஞரான ஷேக்ஸ்பியருக்கும் நிஜமான வாழ்வு மற்றும் நிலையான பேரானந்தத்தின் நிழலைப் பற்றிய சிறிதளவு அறிவும் கிடையாது.**

**ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதே கடவுளின் அசலான நிலை. இறை நிலையை அடைவது என்பது ஆழ்ந்த தூக்கத்திலும் முழுமையான விழிப்புணர்வுடன் இருப்பது. உண்மையிலே இந்த நிலையை விவரிக்க முடியாது. ஹஃபீஸ் இதை மிகச் சிறப்பாகக் கூறுகிறார்:**

**"இந்த உலகம் ஒன்றுமில்லாத ஒன்றில் ஒன்றாக இருப்பது!"**

மெஹர் பாபா, நவம்பர் 20ஆம் நாள் மண்டலியுடன் மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார்; வழியில் லோனவாலா மலைப் பள்ளத்தாக்கில் ராம்ஜூ மற்றும் டாக்டர் கனி ஏற்பாடு செய்திருந்த பங்களாவில் தங்கியிருந்தனர்.

சாஞ்சி, மாஸாஜி, அஃப்ஸேரி மூவரும் மூட்டை முடிச்சுகளுடன் அன்று மாலை அங்கு வந்து சேர்ந்ததும் முதல் கேள்வியாக, பாபா அவர்களிடம் '**வழியில் ஏதேனும் உண்டீர்களா?**' என்று கேட்டார்.

சாஞ்சி, மாஸாஜி இருவரும் உண்டதாக ஒப்புக்கொள்ள, அஃப்ஸேரி, தயக்கத்துடன் தப்பிக்கும் விதத்தில் பேசத் தொடங்கினார். உடனே பாபா அவரின் சட்டையைப் பிடித்துக் கடுமையாக உலுக்கினார். மாஸாஜி, சாஞ்சி இருவரையும் நோக்கி பாபா, **"என்னுடைய அனுமதி இல்லாமல் மெஹராபாத்திற்கு வெளியில் எதுவும் உண்ணக்கூடாது என்பது எனது நிலையான கட்டளை. அதை ஏன் நீங்கள் பொருட்படுத்தவில்லை?"** என வினவினார்.

மாஸாஜி அவர்களுக்கு ஆதரவாக, பாபாவின் உத்தரவு மெஹராபாத்தில் இருக்கும் வரை மட்டுமே, அங்கிருந்து வெளியே வந்துவிட்டால் அதைக் கடைப்பிடிக்க வேண்டாம் என்ற எண்ணத்தில் பாபாவின் உத்தரவை மீறவில்லை என எடுத்துரைத்தார். மாஸாஜி கூறியதைக் கேட்டு பாபா சீற்றமடைந்து, அவரை மறுபடியும் தாக்கியபோது, மாஸாஜியின் சட்டை கிழிந்தது. மாஸாஜியை அப்படியே தூக்கி பத்து மீட்டர் தொலைவில் வீசினார். அருகில் நின்ற மண்டலி அனைவரும் இவ்வளவு பெரிய மனிதரான மாஸாஜியை, பாபா அவரது மெல்லிய உடலால் தூக்கி எறிந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

சாஞ்சியும் பாபாவின் சீற்றத்திற்கு ஆளாகி, அவரது கைகளால் பலமாக இரண்டு அறைகளைப் பெற்றுக்கொண்டார். பாபா, உடனே மூவரையும் அங்கிருந்து வெளியேறுமாறு கூறிய அடுத்த கணமே, பாபா நல்ல மனநிலையில் இருப்பவர் போலத் தோற்றமளித்து, அவர்களைத் திருப்பி அழைத்து, **"இன்றாவது நீங்கள் என்னுடைய பலத்தை அறிந்து கொண்டீர்களா?"** என்று கேட்டதும், மூவரும் அடக்க முடியாமல் வாய்விட்டுச் சிரித்தனர். அப்போது பாபா அன்புடன் விசாரித்தார், **"உங்களில் எவரேனும் காயமடைந்தீர்களா?"** எவரும் காயப்படவில்லை, ஆனால் சாஞ்சி, பாபாவின் சீற்றத்தால் அஞ்சி நடுங்கி அவரது காலுறை முழுவதையும் ஈரம் செய்துவிட்டார்.

மெஹர் பாபா அவரது இரகசிய புத்தகத்தை எழுதி முடித்த பின்பு, மெஹராபாத்தை விட்டு வெளியே செல்லும் போதெல்லாம், கையெழுத்து பிரதியை ஒரு பெட்டகத்தில் வைத்துப் பூட்டி உடனெடுத்துச் செல்வது வழக்கம். ஒரு முறை அதைப் பாதுகாக்கும் பொறுப்பு அஃப்ஸேரிக்கு வழங்கப்பட்டது. அஃப்ஸேரி தூங்கும்போதும் அதைத் தன்னருகே பத்திரமாகப் பாதுகாத்து வந்தார். பெட்டகத்தின் திறவுகோலை பாபா அவருடனே வைத்திருந்தார். மண்டலியில் எவருமே பாபா எழுதிய புத்தகத்தின் ஒரு வரியைக் கூட படித்ததில்லை. நவம்பர் 26ஆம் நாள், பாபா மண்டலியுடன் லோனவாலாவில் தங்கியிருந்தபோது, அவர் அந்தப் புத்தகத்தில் எழுதியிருந்ததைக் குறித்து கருத்துக் தெரிவித்தார்:

**என்னுடைய இந்த விளக்கங்களை நீங்கள் மிகவும் சுவாரஸ்யமாகக் காண்கிறீர்கள், ஆனால் மெஹராபாத்தில் நான் எழுதிய புத்தகத்துடன் ஒப்பிடும்போது அவை ஒன்றும் இல்லை. அதன் 300**

**பக்கங்கள் பல்வேறு கருத்துக்களின் குறுகிய வடிவத்தில் மட்டுமே உள்ளன, மேலும் அவை முழுமையாக விளக்கி எழுதப்படும் போது, அந்தக் கருத்துகள் பல பெரிய தொகுப்புகளைக் கொண்டிருக்கும். இதுவரை எந்த ஒரு துறவியோ அல்லது தீர்க்கதரிசியோ வெளிப்படுத்தாத ரகசியங்கள் நிறைந்தது.**

1926 நவம்பர் 28ஆம் நாள் வல்வன் பங்களா உடைமையாளரின் மகனும் அவனது மூன்று நண்பர்களும் பெண் மண்டலி தங்கியிருந்த வடக்கு திசையை நோக்கி நுழைய முயற்சித்தனர். மண்டலியில் ஒருவர் அவர்களைத் தடுத்து நிறுத்தி விளக்க முயன்றபோது, அவர்கள் அதற்கு செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. மண்டலியில் பலர் அவர்களை சூழ்ந்துகொண்டு, உள்ளே அனுமதிக்காமல் தடுத்தனர். வந்தவர்கள் மண்டலியை கோழைகள் என அவதூறாகப் பேசியபோதும், பாபாவின் கட்டளைகளால் அவர்களைத் தாக்க முடியாத சூழ்நிலை. கடுமையான வாக்குவாதத்திற்குப் பின்னர் அந்தப் போக்கிரிகள் திரும்பிச் சென்றனர்.

அவரது அறையிலிருந்து நடந்த அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த பாபா, அந்த இளைஞர்கள் அங்கிருந்து சென்றதும், மண்டலியை விளையாட அழைத்தார். அப்போதிருந்த பதட்ட நிலையில் மண்டலியில் பெரும்பாலானோர் கோபத்தை அடக்க முடியாமல் இருந்தார்கள். சிறிது நேர விளையாட்டுக்குப் பிறகு, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார், **“நீங்கள் அனைவரும் எப்பொழுதும் என்னுடனே இருந்தும், எனது சொற்பொழிவுகளைக் கேட்டும், உங்கள் நிதானத்தை இழந்து கோபப்படுவீர்களானால், சாதாரண உலக மக்களின் இதுபோன்ற நடத்தையை எப்படிக் குறைகூற முடியும்? அவர்கள் ஒன்றும் அறியாதவர்கள். சகோதரர்களே, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அவர்களுக்கே தெரியாதபோது, அவர்களின் மோசமான அடாவடித்தனத்தை மன்னித்து விடுங்கள். அவர்கள் அப்படி முரட்டுத்தனமாக நடந்து கொண்டாலும், என்னுடைய எல்லைக்குள் வந்ததால் அதற்கான பலனை அடையப்பெறுவார்கள்.”**

மண்டலியின் கோபம் தணியாத போதும், பாபாவின் ஆதரவான வார்த்தைகள், எதிர்பார்த்த தாக்கத்தை ஏற்படுத்தி உண்மையைப் புரிந்து கொள்ள வழிவகுத்தன.

மெஹர் பாபா, அன்று, பல விளக்கங்களை வழங்கினார். உல்லாசப்பயணமாக, பாபா வெளியே, கர்லாவுக்கு அருகிலமைந்த லோஹேகாவ்ம், விஸாபூர் கோட்டைகளுக்குச் சென்றபோது, அந்த இடம் **‘சிவாஜியின் விளையாட்டு மைதானம்’** என்று குறிப்பிட்டு, வட்டத்து சீடர்களைப் பற்றிய சில உண்மைகளை வெளிப்படுத்தினார்.

**ஓர் ஆண் அல்லது பெண் இறக்கும்போது அடுத்த பிறவியில் வேறொரு மனித பிறவியை எடுக்கிறார். இந்த வடிவம் முந்தைய**

வடிவத்தைக் காட்டிலும் மாறுபட்டதாக இருக்கும். ஆயிரக்கணக்கான பிறவிகளில் ஓர் ஆத்மாவின் எந்த இரண்டு உருவங்களும் ஒன்று போல் இராது. ஆனால் இதிலும் ஒரு விதிவிலக்கு உள்ளது. ஒருவர் ஒரு சத்குருவின் வட்டத்தில் நுழையும் போது, எந்த உருவில் இருந்தாரோ அதே உருவில் இறை நிலையை எய்தும்போதும் இருப்பார்.

ஒரு குருநாதரின் வட்டத்தில் நுழைந்த அடுத்த 100 அல்லது 200 ஆண்டுகளில் ஒருவர் இறை நிலையை எய்துவார். வட்டத்தில் நுழைந்த பின்னர் எஞ்சியிருக்கும் மனப்படிவங்களைச் செலவழிப்பது ‘பிராப்தம்’ என்றழைக்கப்படும்; ஒருவர் ஒன்றிலிருந்து நான்கு அல்லது ஐந்து பிறவிகளை எடுக்கலாம். ஆனால், இறை நிலையை எய்தும் தருணத்தில், ஒருவர் வட்டத்தில் நுழையும்போது இருந்த அதே ஆண் அல்லது பெண் உருவில் இருப்பார்.

என்னுடைய வட்டத்து சீடர்களுக்கான விதையை 400 வருடங்களுக்கு முன்னால் சிவாஜியின் காலத்திலே விதைத்தாகி விட்டது. சிவாஜியின் குருநாதர் சுவாமி ராம்தாஸ், அக்காலகட்டத்தில் வாழ்ந்த ஐந்து சத்குருக்களில் ஒருவர், அவரே என்னுடைய சீடர்களின் விதையை விதைத்தவர். அது போலவே, நான் இப்போது விதைக்கும் விதைகள் 400-500 வருடங்களில் தளிர்விடும்.

விதைகள் விதைக்கப்படும் வேளையிலும், குருநாதர்கள் மற்றும் அவருடைய சீடர்கள் இவ்வுலகில் பிறக்கும் நேரத்திலும் அவர்களின் வெளித்தோற்றமும், ஆண் அல்லது பெண் பாலினமும் ஒன்றாகவே இருக்கும். உதாரணமாக, தற்போதைய வட்டத்திற்கான விதை விதைக்கப்பட்ட போது சிவாஜியாக நான் வெளிப்பட்டது, இப்போது எனக்கு அதே போன்ற நிலையைத் தந்துள்ளது. என்னுடைய அம்சங்கள் மற்றும் உருவாக்கத்தில் இன்று நான் சிவாஜியைப் போல் ஒத்திருக்கிறேன்.

பெஹராம்ஜி, அப்போது, சிவாஜியால் கொல்லப்பட்ட பகைவரின் இராணுவ தளபதி அப்ஸல்கானின் நகலாவார். அதேபோல், எனது வட்டத்தின் தற்போதைய உறுப்பினர்கள் அனைவரும் சிவாஜியின் கடந்த காலத்தில் இருந்ததைப் போலவே இருக்கிறார்கள்.

இதைத் தொடர்ந்து நடந்த இசை நிகழ்ச்சியின் நடுவே பாபா ஒரு நீண்ட சொற்பொழிவை வழங்கினார்.

கடவுளை நம்பி, கடவுள் இருக்கிறார் எனக் கூறுவது போலித்தனம் அல்ல, ஆனால், இறை நிலையை அடையாமல் ‘நான் கடவுள்’ என்று பறைசாற்றுவது முழுமையான பாசாங்குத்தனமாகும். எல்லா நம்பிக்கையும் புத்தியை அடிப்படையாகக் கொண்டது, அறிவார்ந்த நம்பிக்கை இல்லாமல் சாதாரணமாக நம்புவது என்பது இயலாத காரியம். அறிவுத்திறனுக்கு அப்பாற்பட்ட ஒன்றை வரையறுக்கப்பட்ட அறிவாற்றலால் புரிந்துகொள்ள முடியாது.

அதாவது மனித மனம் எட்டமுடியாத இடம் என்பதை புரிந்துகொள்ள அல்லது அறிவுபூர்வமாக அதைப் பற்றி அறிந்துகொள்ள முயல்வதற்கு முன்னால், அது முற்றிலும் உறுதியாக இருக்கும் ஒன்று என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். அதாவது, சொல்லப்போனால், அது சூத்திரத்தின் அடிப்படை தகவல்கள் போன்றது; எல்லையற்ற, ஆழங்காண முடியாத பரம்பொருளை அணுகும் முதற்படியாகும். உதாரணமாக, கடவுள் யார், எங்கு இருக்கிறார், அல்லது உண்மையிலே கடவுள் இருக்கிறாரா, இல்லையா என்பது நமக்குத் தெரியாது. எதுவாயினும், கடவுளை அறிவுபூர்வமாகப் புரிந்துகொள்ள அல்லது வேத நூல்கள், சான்றோர்கள் கூறுவதுபோல, கடவுளையும் அவரது கடமைகளையும் புரிந்துகொள்ள அல்லது அதைப்பற்றிய கருத்து, உண்மையின் ஓர் அம்சத்தைத் தெரிந்துகொள்ள, முதலில் அதை ஒரு பொருட்டாக எடுத்து, அவர் இருக்கிறார், பரம்பொருளின் மூலமான கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டியது மிக முக்கியம். அதை ஆரம்பமாகக் கொண்டு அவர்மீது நம்பிக்கை வைத்து, அவரைத் தேடுங்கள்.

பெரும்பாலான உலக மக்கள், உண்மையில் கடவுள் இருப்பதை நம்புவதில்லை. கடவுள், நல்லவர்களுக்கும் தகுதியுள்ளவர்களுக்கும் வெகுமதி அளித்து தீயவரைத் தண்டிக்கும், அறியப்படாத, வலிமைமிக்க ஒரு மனிதர் என எண்ணி அவருக்கு அஞ்சுகிறார்கள். மேலும், கடவுள்தான் இந்த நரக தண்டனையை வழங்குபவர் என நம்பி, கடவுளைக் காட்டிலும் நரகத்திற்கு அஞ்சுகிறார்கள்; ஏனெனில், அவர்கள் கடவுளையும், கடவுள் இருப்பதையும் உண்மையென நம்பி, அவருக்கு அஞ்சுவதாக இருந்திருந்தால் அவர்களுடைய நடத்தை இன்று இருப்பதுபோல - நேர்மையற்ற, சுயநல, வஞ்சக மற்றும் பொல்லாத - குணம் நிறைந்ததாக இருக்காது. அவர்கள் உண்மையிலேயே கடவுளுக்குப் பயப்படுவதாக இருந்தால், அவருக்குப் பிடிக்காத எதையும் செய்ய வேண்டாம் என்று எப்போதும் எச்சரிக்கையாக இருப்பார்கள். அவர்கள் கடவுளையும், இவ்வுலகில் அவர் இருக்கிறார் என்பதையும் மனப்பூர்வமாக நம்புவதாக இருந்தால், உடனடியாக அவரைத் தேடி, கண்டுகொள்வது வரை ஓய மாட்டார்கள். ஏனெனில் கடவுள் மீது அன்பு வரும்போது அச்சம் மறைந்துவிடும். அந்த அன்பு அதன் உச்சத்தை அடையும்போது, அவர் தானே கடவுள் என்பதைக் கண்டுகொள்கிறார்.

நாஸ்திகனாக, கடவுள் இருக்கிறார் எனும் நம்பிக்கையே இல்லாத ஒருவர் ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைக்க இயலாது.

உலகில் அனைத்து மக்களும் நாஸ்திகத்தைப் பின்பற்றுவதாக இருந்தால், சத்தியத்தின் பாதையில் எவ்வித முன்னேற்றமும் இருக்காது. ஆனால், உள்ளளவில் நம்பிக்கையற்றவராக இருந்து, வெளியில் கடவுளை நம்புகிறவராகத் தோற்றமளிப்பது மிகவும் கீழ்த்தரமான கபடநாடகம். இறை நிலையை அடைந்த ஒருவரால் அளிக்கப்படும் அறிவுபூர்வமான,

**எந்தப் பாசாங்குத்தனமும் இல்லாத நம்பிக்கை, அவரை அப்படியே இறைவழியில் எடுத்துச் செல்லும்.**

பாபா அவரது வாழ்நாள் முழுவதும், தனிப்பட்ட விஷயங்கள் அனைத்தையும் சுத்தமாகவும், சீராகவும் வைத்திருப்பதில் தீவிரமாக இருந்தார். நவம்பர் 30ஆம் நாள், அவ்வளவு சுத்தமாக இல்லாத ஒரு கெட்டிலிலிருந்து அவருக்குத் தேநீர் வழங்கப்பட்டது. பாபா அதைக் கண்டு மிகவும் சீற்றமடைந்தார். அவர் அந்தத் தேநீரை வீசி எறியக் கூறி, மண்டலியை வெகுவாகக் கண்டித்தார்.

**அனைத்து விஷயங்களிலும் தூய்மையைப் பற்றி நீங்கள் எப்போதும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும், குறிப்பாக உணவு மற்றும் அருந்தும் நீர். என்னைப் பொறுத்தவரை, தூய்மையும் அசுத்தமும் ஒன்றே, எந்த வேறுபாடும் இல்லை, ஆனால், ஏதாவது ஒன்றை பூரணமாக அனுசரிக்க வேண்டும். நான் சுத்தமாக இருக்கவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், எனது உணவு, தண்ணீர் மற்றும் துணிமணிகளை நன்கு சுத்தமாக வைத்திருப்பதில் நீங்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும். மாறாக, நான் அசுத்தமாகத் தோன்ற ஆரம்பித்தால், நான் மிகவும் அசுத்தமாக இருப்பேன், அப்போது மக்கள் என்னை அணுகுவதற்கு முன் பலமுறை யோசிப்பார்கள். முற்றிலும் சுகாதாரமற்ற சூழலில், நான் மிகவும் அருவருப்பான முறையில் வாழமுடியும், அவ்வாறு நீங்கள் ஒருபோதும் இருக்க இயலாது.**

அர்ஜுன் ஸுப்பேக்கர் லோனவாலாவில் தங்கியிருந்த வேளையில் மிகவும் மோசமான உடல்நிலையில் டாக்டர் பிவல்கர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பாபா அடிக்கடி அங்குச் சென்று அர்ஜுனை சந்தித்தார், அவருக்கு சிகிச்சையளிப்பதில் இயன்ற அனைத்தையும் செய்யுமாறு டாக்டர் பிவல்கரை வலியுறுத்தினார். மெஹர் பாபா மீது வைத்திருந்த ஆழ்ந்த அன்பை அறிந்த டாக்டர் முழுமனதுடன் அர்ஜுனை கவனிக்க ஆரம்பித்தார்.

பாபா அவ்வப்போது அர்ஜுனை சந்திக்கச் சென்று அவரது அன்பை வெளிப்படுத்தினார்; மேலும், டிசம்பர் 4,5ஆம் தேதிகளில் தரிசனத்திற்காக, பெருமளவில் கூட்டமிருந்தும் பாபா அதை நடுவில் நிறுத்தி, டாக்டருக்கு விரிவான அறிவுறுத்தல்களை வழங்கும் நோக்கத்தில் மருத்துவமனைக்குச் சென்று வந்தார்.

பத்து நாட்கள் லோனவாலாவில் தங்கியிருந்த பின்னர், 1926 டிசம்பர் 5ஆம் நாள், பாபா மண்டலியுடன் மும்பைக்குப் புறப்பட்டுச் செல்ல இருந்தார். ஸாந்தாகுரூஸில் ஒரு பங்களாவை, 1925ஆம் ஆண்டு மெஹராபாத்தில் பாபாவை சந்தித்த ராம்தாஸ் எனும் பக்தர் ஒருவர் ஏற்பாடு செய்திருந்தார். புறப்படும் முன்பு டாக்டர் கனி, டாக்டர் பிவல்கர் இருவரிடமும் அர்ஜுனின் நலனைக் குறித்து அறிவுறுத்திச் சென்றார்.

அடுத்த நாள் பாபா மும்பையில் மண்டலி கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை முன்வைத்தார்.

மண்டலி அனைவரும் காலை 6 மணிக்கு விழித்து இரவு 10 மணிக்குக் படுக்கைக்குச் செல்ல வேண்டும். காலை உணவாக தேநீர், ரொட்டி; மதிய வேளையில் சாதம், பருப்பு; மாலையில் மறுபடியும் தேநீர்; மேலும் இரவு உணவாக, காய்கறி, ரொட்டி என அட்டவணையில் குறிக்கப்பட்டிருந்தது.

சில நாட்களுக்குப் பிறகு பாபா மண்டலியிடம் அவர்களுக்காக ஏதேனும் வேலைகளைத் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். பாபா கூறியதாவது: **“வழக்கமான வேலை அல்லது செயல்களில் ஈடுபடாமல் இருப்பது உங்கள் ஆரோக்கியத்தைக் கெடுத்துவிடும்**, **அத்துடன் எதிர்காலத்தில் வேலையின் மீது அக்கறையின்மையை உருவாக்கும்**, **இது எனக்கு ஒரு தடையாக இருக்கும்**.” முதலில், மண்டலி ஏதேனும் சிறு தொழிற்சாலைகள் அல்லது உணவகங்களில் வேலை செய்வது பற்றி கலந்துரையாடினர். ஆனால் குலாப்ஷா, அஃப்ஸேரி இருவரும், அவர்கள் வீட்டிற்கு அருகாமையிலுள்ள தீப்பெட்டி தொழிற்சாலையிலிருந்து குறைந்த அளவில் தேவையான பொருட்களை எடுத்து வந்து, தீப்பெட்டி செய்யும் பணியைப் பரிந்துரைத்தனர். பாபா அதற்கு சம்மதம் தெரிவித்து, அந்த வேலை கிடைக்காத பட்சத்தில் மண்டலியில் குறைந்தது 12 நபராவது வேறு ஏதாவது வேலையைத் தேடிக்கொள்ள வேண்டும், அல்லது கூலி வேலையேனும் செய்ய வேண்டும் என்று கூறினார்.

மெமோ, ஆதி ஜூனியர், மணிஜா மூவரும் பாபாவைக் காண மும்பைக்கு வந்தனர். பாபா அவருடைய 12 வயது தம்பி மற்றும் 8 வயது தங்கையுடன் விளையாடி, அவர்களது இனிமையான உரையாடல்களை ரசிப்பது வழக்கம்.

மும்பையில் இருந்தபோது பாபா மண்டலியுடன் எதிர் கால திட்டத்தைப் பற்றி வெளிப்படையாகத் தெரிவித்தார். பெர்ஸியா, பனாரஸ், அஜ்மீர், நாசிக் மற்றும் தலைகாவ்ம் போன்ற இடங்களில் எங்குச் செல்லலாம் என்ற கேள்விக்கு அனைவரும் லோனவாலா அருகிலமைந்த தலைகாவ்ம் செல்ல விருப்பம் தெரிவித்து, தேவையான ஏற்பாடுகளைச் செய்ய ராம்ஜூக்கு பாபா கடிதம் எழுதக் கூறினார்.

பூனாவிலிருந்து வழக்கத்திற்கு மாறாக - ஹஸ்ரத் பாபாஜானை தரிசனம் செய்வதற்காக, தினமும் திரள் திரளாக மக்கள் வந்து அவரை சூழ்ந்திருப்பதாகவும், இந்தப் பழங்கால பெண்மணி மிகவும் சுறுசுறுப்பாக பக்தர்களை வரவேற்று ஆசிர்வதிப்பதாகவும் - செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. மேலும், விக்டோரியா குதிரை வண்டியில் பாபாஜான் பூனா நகரைச் சுற்றி அடிக்கடி ஊர்வலம் வந்து மக்களை ஆசீர்வதிப்பதாகவும் தகவல்கள் வந்தன.

இதைக் கேட்டதும் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **“இது பாபாஜான் வெகுவிரைவில் அவரது உடலைத் துறக்க இருப்பதன் அறிகுறி**;

**இவ்வேளையில் நான் அவர்கள் பணிபுரிந்த வட்டத்து எல்லைக்குள் இருக்கவேண்டிது அவசியம். 1918ஆம் ஆண்டு ஷிர்டி சாய்பாபா அவரது உடலைத் துறக்கும் வேளையில், உபாஸனி மஹாராஜ் கொல்கத்தாவில் அவர் செய்து கொண்டிருந்த பணியை விட்டுவிட்டு, ஸக்கோரிக்குத் திரும்பி வந்தார்**" என்பதை மெஹர் பாபா மண்டலிக்குத் தெரிவித்தார்.

டிசம்பர் 20, 21 ஆகிய தேதிகளில் இரவு பகல் பாராமல் மக்கள் 'ராம்தாஸ் பங்களா'விற்கு திரண்டு வந்து மெஹர் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக் கொண்டனர்.

பாபா, அர்ஜுனின் சகோதரன் பாலா, விஷ்ணு இருவரையும் லோனவாலாவில் அர்ஜூனுடன் இருந்து கவனித்துக்கொள்ள அனுப்பி வைத்தார். டாக்டர் கனி அங்குள்ள நிலைமையை அவ்வப்போது பாபாவிற்குக் கடிதம் மூலம் அறிவித்து வந்தார்; அர்ஜுனின் இரத்த அழுத்தம் அதிகமாகி உடலின் ஒரு பக்கம் செயலிழந்துவிட்டது. டாக்டர் பிவல்கர், அர்ஜுனின் நிலை மிகவும் மோசமாக இருந்ததால் சிறப்பு மருத்துவரான டாக்டர் நான்ஜியை அழைத்தார். எதுவாயினும் அர்ஜுன் உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லாமல், மயக்க நிலையிலேயே இருந்தார்.

1926 டிசம்பர் 22ஆம் நாள் காலை 5 மணிக்கு அர்ஜுன் அவரது உயிரைத் துறந்தார். கஸ்பாபேட்டில் சிறிய பெட்டிக்கடை ஒன்றை நடத்திவந்த எளிமையான அர்ஜுன், உயிருக்கும் மேலான, பிரியமான வாடிக்கையாளர் மேர்வானிடம் வாழ்வை அர்ப்பணித்து, வாழ்நாள் முழுவதும் மெஹர் பாபாவின் சேவையில் இருந்து, தனது 31ஆவது வயதில் உயிரைத் துறந்தார்.

டாக்டர் கனி, அர்ஜுனின் மறைவைப் பற்றித் தெரிவித்ததும், பாபா மண்டலிக்கு இவ்வாறு குறிப்பிட்டார்: "**என்னைப் பொறுத்தவரையில், அவர் இப்போது உயிர் துறந்தது நல்லது. கடந்த மூன்று நாட்களாக அவரது கடைசி மூச்சுவரை, என்னுடைய உண்மையான சொரூபத்தைப் பார்த்தது மட்டுமின்றி, அவர் இப்போது என்னுடனே இருக்கிறார். ஒரு மிகப்பெரிய ஆன்மீக உந்துதலையும் அடைந்துள்ளார்.**" பாபா, டாக்டர் கனிக்கு, தொலைத்தந்தி வழியாக இறுதி சடங்குக்கு வேண்டிய விபரங்களைத் தெரிவித்தார். அதன்படி, டாக்டர் கனி, அர்ஜுனின் உடலை பூனாவில் அடக்கம் செய்தார்.

அர்ஜுன் மறைந்த அந்த நாள் டாக்டர் பிவல்கர் மும்பையில் பாபாவை சந்தித்து அர்ஜுனின் கடைசி நேர சம்பவங்களை விளக்கமாக எடுத்துரைக்க வந்திருந்தார். டாக்டர் பிவல்கர் வந்ததும், அவருடைய பேச்சை ஆரம்பிக்கும் முன்னரே பாபா, "**டாக்டர் நான்ஜியின் கட்டணம் எவ்வளவு?**" என வினவினார். பாபாவின் எதிர்பாராத இந்தக் கேள்வி டாக்டர் பிவல்கரை அதிர்ச்சியடையச் செய்தது. பாபா ஏன், என்னவாயிற்று எனக் கேட்டதற்கு டாக்டர், "பாபா நீங்கள் குருநாதர், உங்களுக்கு அனைத்தும் தெரியும்! உங்களிடமிருந்து எதையும் மறைக்க முடியாது. இந்த விஷயத்தில் எனக்கு முழுமையான நம்பிக்கை உள்ளது. உண்மை என்னவென்றால், நான்

லோனவாலாவிலிருந்து புறப்படுவதற்கு சற்று முன்பு, டாக்டர் நான்ஜி அவரது கட்டணத்தை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்; மேலும் நான் இங்கு உங்கள் முன்னால் காலடி எடுத்து வைக்கும் முன்பே இதைப் பற்றி நீங்கள் கேட்டுவிட்டீர்கள். அர்ஜுனின் கடைசி நிமிட விபரங்களைச் சொல்ல வந்த நான், இதை எப்படி உங்களிடம் கூறுவது என்று தயங்கிக் கொண்டிருந்தேன்" எனக் கூறினார். அதன் பின்னர், அர்ஜுனைப் பற்றிய அனைத்தையும் டாக்டர் பிவல்கர் எடுத்துரைத்தார். டாக்டர், அர்ஜுனை கவனித்த விதத்தை எண்ணி பாபா மிக்க மகிழ்ச்சி அடைந்தார். டாக்டர் நான்ஜிக்குத் தரவேண்டிய பணத்தை, பாபா பண அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தார்.

பாபாவின் விருப்பத்திற்கிணங்க, தலைகாவ்மில் ராம்ஜூவால் பொருத்தமான வீடு ஏற்பாடு செய்ய முடியாததால், ருஸ்தத்தின் யோசனைப்படி அனைவரும் மெஹராபாத்திற்குத் திரும்பி வந்தனர்.

மெஹராபாத் வந்தடைந்த ஓரிரு நாட்களில் அங்குத் தலைமை மருத்துவராக இருந்த டாக்டர் கர்கல் அவர்களும் காலமான செய்தி பாபாவின் காதுகளை எட்டியது.

மெஹராபாத்திலிருந்து புறப்பட்ட ஒரே மாதத்தில் பாபாவின் இரண்டு நெருங்கிய சீடர்கள் அர்ஜுன், டாக்டர் கர்கல் இருவரும் காலமானார்கள்.

உலகை விழிப்படையச் செய்யும் மெஹர் பாபாவின் அமைதியான, ஆக்கபூர்வமான பணி விதையிலிருந்து தளிர்விட்டு மரமாகி, எதிர் காலத்தில் பெரும் பலனை அளிப்பதற்காகக் காத்திருக்கிறது.



டிசம்பர் 4, 1926 - லோனவாலா

தரையில் அமர்ந்திருப்பவர்கள்: டாக்டர் கனி, ராம்ஜூ அப்துல்லா

புவாஸாஹேப், ருஸ்தம், சாஞ்சி, குலாப்ஷா, பாபா,

ஜால்பாய், குஸ்தாஜி, பாவ் சீமா காம்ப்ளே




மெஹராபாத்தை சூழ்ந்துள்ள இடங்கள்

**இந்தியா** (INDIA) **அரபிக் கடல்** (ARABIAN SEA) **மெஹராபாத்** (MEHERABAD)

**பூனா** (POONA) **லோனவாலா** (LONAVALA) **ராஹுரி** (RAHURI) **நாசிக்** (NASIK)



# சேவகத்தில் லாவகம்

-அவதார் மெஹர் பாபா